T.N.L.C. Debates

Official Report

1984

Vol: 203 No. 1 to

D
11,32'N84
J84·203·1–4
43883

தமிழ்நாடு

சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 14, 1984—தொகுதி 203-எண்

Tuesday, 14th February, 1984—Volume 203 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்

செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 14, 1984.


| | பக்கங்கள் |
|---|---|
| ழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i—vi |
| ழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vii |
| ாகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | ix—xii |
| இரங்கற் குறிப்பு— | |
| சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பஷீர் அகமது சையீத் அவர்களின் மறைவு குறித்து .. .. | 1— 2 |
| இரங்கல் தீர்மானம்— | |
| சோவியத் ஒன்றியக் குடியரசுத் தலைவர் திரு.யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவு குறித்து. | 2—27 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HON. THIRU K. A. KRISHNASAMY, Minister in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU S. D. SOMASUNDARAM, Minister in charge of Revenue, Commercial Taxes and Census.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor Permits.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister in charge of Education including Technical Education and Official Language.

8. THE HON. DR. K. KALIMUTHU, Minister in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HON. THIRU C. PONNAIYAN, Minister in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. THE HON. THIRU P. KOLANDAIVELU, Minister in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HON. THIRU S. RAGHAVANANDAM, Minister in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HON. DR. H. V. HANDE, Minister in charge of Health.

13. THE HON. THIRU S. MUTHUSAMY, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister in charge of Co-operation, Textiles and Handlooms.

15. THE HON. THIRU S. N. RAJENDRAN, Minister in charge of Prohibition excluding grant of liquor permits, Passports, P.W.D. and Establishment matters relating to Public Works Department.

16. THE HON. THIRU M. VIJAYASARATHI, Minister in charge of Adi-Dravidar Welfare, Stationery and Printing, Goverament Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister in charge of Nutritious Meals.

18. THE HON. THIRU S. R. RADHA, Minister in charge of Environmental Pollution Control, Housing and Slum Clearance Board.

19. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister in charge of Backward Classes.

20. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister in charge of Khadi.

22. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. THE HON. THIRU R. ARUNACHALAM, Minister in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

24. THE HON. THIRU K. KALAIMANI, Minister in charge of Fisheries.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப்பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: —

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, மற்றும் ஆட் மொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : -

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, மற்றும் வேளாண்-பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள் மற்றும் சுரங்கமும், கனிவளமும்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:

தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் : —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: —

கைத்தறி, நெசவாலைகள் மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (பொதுப் பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), கடவுச்சீட்டு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சகத்துறை, அரசு அச்சகம், செய்திக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுப்புறச் சூழல் தடுப்பு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் : —

சுற்றுப்புறச் சூழல் தடுப்புத் துறை, வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் : —

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்டதுறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வஃப்.

23 மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : –

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்: –

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :
டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :
@ திரு. ஜி. சுவாமிநாதன்

* மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. சி. இராமலிங்கம்
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. க. அருணாசலம்

செயலாளர் :
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர் :
திரு. த.ப. டில்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர் :
திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர் :
திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

---

* 15—2—1984 அன்று மேலவையில் அறிவிக்கப்பட்டது.

@ 16—2—1984 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2 | அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3 | ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4 | ஆனந்தம், திரு. வி.வி.வி. | ஷை |
| 5 | இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்.) | ஷை |
| 6 | இராதா, திரு. எஸ். ஆர். (சுற்றுப்புறச் சூழல் தடுப்பு அமைச்சர்.) | ஷை |
| 7 | இராமமூர்த்தி, திரு. க. | ஷை |
| 8 | இராமலிங்கம், திரு. சி. | ஷை |
| 9 | கண்ணப்பன், திரு. காடு வெட்டி. | ஷை |
| 10 | கலைமணி, திரு. க. (மீனளத்துறை அமைச்சர்) | ஷை |
| 11 | கோலப்பா, திரு. சி.ஆர். | நியமனம் |
| 12 | சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி - கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13 | சந்தோஷம், திரு.த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 | சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 | சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16 | சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்.) | நியமனம் |
| 17 | சித்தாபதி, திரு. ஆர்.டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | | தொகுதி |
|---|---|---|
| (1) | | (2) |
| 55 | வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | வெற்றிடம் | ஷை |
| 57 | வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | வெற்றிடம் | ஷை |
| 59 | வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | வெற்றிடம் | ஷை |
| 61 | வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | வெற்றிடம் | ஷை |
| 63 | வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

## அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத் தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1984 பிப்ரவரி 14.

மாசி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 11-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 1. இரங்கற் குறிப்பு

**சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பஷிர் அகமது சையீத் அவர்களின் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, சட்ட மன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. பஷிர் அகமது சையீத் அவர்கள் சென்னையில் 7—2—1984 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1926 முதல் 1937 வரை உறுப்பினராகவும், மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1937 முதல் 1946 வரை உறுப்பினராகவும் இருந்தார்.

இவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும், சென்னை மாநகராட்சிக் குழுவில் உறுப்பினராகவும் இருந்து திறம்பட பணியாற்றினார். தென்னிந்திய கல்விக் குழுமத்தைத் தோற்றுவித்து, பல கல்லூரிகளை நிறுவி, கல்வித் துறையில் அரும்பாடுபட்டவர். சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் பேரவைகளில் பல வருடங்கள் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகத்தில் உறுப்பினராகப் பல ஆண்டுகளும், மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் இருந்தார்.

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

### சோவியத் ஒன்றியக் குடியரசுத் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் 9-2-1984 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்கள் அது குறித்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்.

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைந்தது குறித்து இந்த மன்றத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நான் இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

“1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல், சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவராக இருந்துவந்த திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் மறைந்ததை குறித்து இம்மேலவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆண்ட்ரபோவ் சிறந்த அரசியல் வல்லுநர், அணு ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அவர் உலகத்தாரால் என்றென்றும் போற்றப்படுவார். அவர் இந்திய-சோவியத்



உறவுகளை வலுப்படுத்த, தக்க நடவடிக்கைகளை எடுத்து, இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கினார். அன்னாரின் மறைவு குறித்து இவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கும், சோவியத் அரசுக்கும், சோவியத் மக்களுக்கும், ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும், இம்மேலவை தெரிவித்துக் கொள்கிறது.”

மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரங்கல் தீர்மானத்தின் தொடர்பாக, நாங்கள் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் நம்முடைய அரசின் சார்பிலும் சில கருத்துக்களை இதோடு இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவைப் பொறுத்த வரையில், உலகத்தில் சமாதானத்தை விரும்புகிற ஒரு மிகப் பெரிய நாட்டின் அதிபர்/தலைவர் மறைந்துவிட்டார் என்கிற வகையில் மாத்திரம் இந்திய மக்கள் துயரம் கொள்ளவில்லை. இந்தியாவின் 70 கோடி மக்களுக்கும் உற்ற துணையாக, தோழராக, நண்பராக இருந்த ஒரு மாபெரும் தலைவர்—ஒரு நாட்டின் தலைவர்—மறைந்துவிட்டார் என்கிற துயரத்தோடு நாம் இந்த இரங்கல் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற முன்வந்திருக்கிறோம்.

உலகத்தில் வளர்ந்து வருகிற நாடுகள் என்ற தலைப்பின் கீழே இந்தியா போன்ற மிகப் பெரிய நாடுகள், தம்முடைய வறுமையைப் போக்கவும், தம்முடைய வளர்ச்சிக்காகவும் போராடிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் தமக்கு உறுதுணையாக இருக்கிற நாடுகளில், நட்பாக இருக்கிற நாடுகளில், தலைசிறந்த நாடாக சோவியத் நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவோடு நட்புறவு கொண்டிருக்கிற சோவியத் நாடு, சமீப காலத்தில் தம்முடைய பொருளாதாரத் துறையிலும், அதன் அடிப்படையாக விளங்குகிற வியாபாரத் துறையிலும், மற்றும் நாம் ஆயுதங்களை எதிர் நோக்குகிற நேரத்திலும் நம்முடைய பாதுகாப்புக்காக வருகிற நட்புறவு நாடாகவும் அது விளங்கி வருகிறது.

## சோவியத் ஒன்றியக் குடியரசுத் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவு குறித்து

[திரு. இராம. வீரப்பன்] [1984 பிப்ரவரி 14

திரு. ஆண்ட்ரபோவ் அவர்களுக்கு முன்னாலே இருந்த, மிகச் சிறந்த பணியாற்றி மறைந்த திரு. பிரெஷ்னெவ் அவர்கள், இந்தியாவுக்கும் சோவியத் நாட்டுக்கும் இருக்கிற உறவை மிகப் பெருமளவில் நெருக்கமாகக் கொண்டு வந்தார். அவ்வாறு அந்த உறுதிமிக்க நட்புறவை நம்முடைய மறைந்த திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் நிலைநிறுத்தி வைத்தார்கள். சோவியத் நாட்டிலே பொறுப்பேற்று மறைந்த தலைவர்களில் மிகக் குறுகிய காலத்தில் பணியாற்றி, மறைந்தவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள். ஆனால் அவ்வளவு குறுகிய காலத்திலும், உலகத்தில் தனக்கென்று ஒரு இடத்தை உலக அரசியல் அரங்கில் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார். உலகத்தில் விடுதலைபெற்று வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகளின் இதயங்களில் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது, அதிலே அவர்கள் பெற்றிருக்கிற மிகச் சிறந்த மனிதாபிமானத்திற்குச் சான்றாகும். இன்றைக்கு உலகத்தைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிற அணு ஆயுத மிரட்டல் போரைத் தடுத்து நிறுத்தவும், அந்த ஆயுதப் போராட்ட மிரட்டலைக் குறைக்கவும் மறைந்த திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகச் சிறந்த முயற்சிகளாகும். அந்த முயற்சிகள் தான், இந்தியா போன்ற வளர்ந்து கொண்டிருக்கிற மற்றும் வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கிற நாடுகளுக்கு நம்பிக்கை அளித்தது. இல்லையானால் பொருளாதாரத்திலும் மற்ற பல துறைகளிலும் அதிகமாக வளர்ந்து, வளர்ச்சியின் எல்லையில் நின்றுகொண்டிருக்கிற காரணத்தால், உலகத்தையே மிரட்டுகிற சக்தியாக, ஆதிக்க சக்தியாக விளங்குகிற நாடுகளால், வளர்ந்து வருகிற நம்மைப் போன்ற நாடுகளின் மக்கள் எந்த நேரத்தில் அழிவுக்கு ஆளாக்கப்படுவோமோ, தாக்குதலுக்கு ஆளாக்கப்படுவோமோ, நம்முடைய வளர்ச்சியெல்லாம் அழிக்கப்படுகிற சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுமோ என்று அச்சப்படுகிற நேரத்தில், நமக்கெல்லாம் தோன்றாத் துணையாக, சில நேரங்களில் வெளிப்படையாகவே தோன்றும் துணையாகவே சோவியத் நாடு நமக்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் அதன் தலைவர்கள் எடுத்த முடிவுகள் நம்முடைய வளர்ச்சிக்குப் பாதுகாப்பாக



1984 பிப்ரவரி 14] [திரு. இராம. வீரப்பன்]

(முற்பகல் 11-10)

இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட மிகச் சிறந்த தலைவராக, உலக சமாதானத்திற்காகப் பாடுபட்ட மிகப் பெருந்தலைவராக மறைந்த திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் விளங்கினார்கள். இன்றைக்கு உலகத்தில் மிகப் பெரிய ஆயுத சக்தியை சோவியத் நாடு பெற்றிருக்கிறது என்றால், அந்த ஆயுத சக்தி மற்றவர்கள் மீது பிரயோகிப்பதற்காக அல்ல. மற்றவர்களை அடிமைப்படுத்த அல்ல. மாறாக, மிகச் சிறந்த சமாதானப் பிரியர்களாக அவர்கள் உலகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், உலகத்திலேயே போர் அபாயத்தாலும், போரிலே சிக்கிய காரணத்தாலும், கோடிக்கணக்கான மக்களை இழந்து, பொருளாதாரச் சிக்கலுக்கு ஆட்பட்டு வளர்ந்து கொண்டிருந்த சூழ்நிலையில் ஒரு நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டுபோன அந்தப் போரின் காரணமாக ஏற்பட்ட சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்த நாடு சோவியத் நாடு. அதனாலேதான் கொடூரத்தை நேரிலே தெரிந்து அனுபவித்தவர்கள் என்ற காரணத்தால் தான் தங்களுக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமையான அனுபவம் உலகத்தில் எந்த நாட்டு மக்களுக்கும் ஏற்படக்கூடாது என்பதிலே அவர்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். உறுதியாக இருக்கிறார்கள். அதனாலே தான் ஆயுதங்களை வைத்துக்கொண்டு மிரட்டுகிற ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக சோவியத் நாடும், குறிப்பாக மறைந்த சோவியத் அதிபர் ஆண்ட்ரபோவ் அவர்களும் சமாதானக் காவலர்களாகப் பாடுபட்டார்கள். நட்புறவுக்காகப் பாடுபட்டார்கள். உலகத்திலே வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட நாடுகள் நட்புறவாக இருக்கலாம் என்ற அரசியல் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு, வேறுபாடுகள் கொண்ட நாடுகளிடையே போர் மூளக்கூடாது என்ற தத்துவத்தை உலகத்திற்கு சோவியத் நாடு வழங்கிக் கொண்டு வந்திருக்கிறது. வழங்கிக் கொண்டு வருகிறது. உழைக்கும் வர்க்கத்திற்கு, பாடுபடுகிற வர்க்கத்திற்கு, வளர்ந்து வருகிற நாடுகளுக்கு, அவர்கள் தங்களுடைய அமைதியைக் காப்பதற்காக தோழமை உணர்வோடு தன்னுடைய சக்தியை வழங்கி, நல்லுணர்வை வழங்கி வருகிறது. அதற்குத் துணையாக இருந்த

[திரு. இராம. வீரப்பன்] [1984 பிப்ரவரி 14

வழிகாட்டியாளர் மறைந்த திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள். அவர் பதினைந்து மாதங்கள்தான் பொறுப்பிலே இருந்தார் என்றாலும், தேக நலமுற்று பொறுப்பை நிறைவேற்ற முடியாமல் இருந்தார் என்றாலும், அந்தக் காலத்திலே அவர் மிகச் சிறந்த நம்பிக்கையை உலக மக்களுக்கு வழங்கியிருக்கிறார். அமைதி பாதுகாக்கப்படும் என்ற உறுதியை வழங்கியிருக்கிறார். அப்படி சமாதானத்திற்காகப் பாடுபட்ட ஒரு நாட்டின் தலைவரை, அந்த உலகறிந்த ஒரு மாபெரும் தலைவரை இழந்துவிட்ட அவையத்திலே நாம் இன்றைக்குப் பங்கு பெறுகிறோமே தவிர, ஒரு நாட்டினுடைய தலைவர் மறைந்துவிட்டார், இன்னொரு நாடு அதற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்ற அந்தக் கடமையுணர்வுக்காக மாத்திரம் நாம் இன்றைக்கு இந்தக் கருத்தைத் தெரிவிக்கவில்லை.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திரு. ஆண்ட்ரபோவ் மறைந்த செய்தியைக் கேட்டவுடனே, "இந்திய நாட்டினுடைய எழுபது கோடி மக்களின் சார்பிலே நேரிலே சென்று தன்னுடைய நாட்டு மக்களின் இறுதி வணக்கத்தைச் செலுத்தப் போகிறேன்" என்ற செய்தியை அறிவித்தபோது, இந்த நாட்டு மக்கள் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களிடத்தில் எத்தகைய மரியாதை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. அதே நேரத்தில் இந்தியா கூட்டுசேரா நாடுகளினுடைய தலைமையை ஏற்று மிகப்பெரிய பொறுப்பைப் பெற்றுக் கொண்டு வருவதைக் கண்டு காழ்ப்புணர்வு கொள்ளாமல், அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு நம்முடைய நட்புறவை வலியுறுத்தக்கூடிய வகையில் சோவியத் நாட்டின் முன்னாள் அதிபர் திரு. பிரெஷ்னேவ் அவர்களும், மறைந்த அதிபர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களும், இந்தியாவிற்கு கூட்டுசேரா நாடுகளிடத்திலே ஏற்பட்ட தலைமையை அங்கீகரித்தார்கள் என்பதைப் பார்க்கும்போது, உலகத்திலே சமாதானத்திற்காக சோவியத் நாடும் மறைந்த அதிபர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களும் எந்த அளவிற்கு முழு மனதோடு தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்கள் என்பது தெரிகிறது. ஆகவே அவருடைய இழப்பு இந்தியாவிற்கு எத்தகைய பேரிழப்பு என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடிகிறது.



1984 பிப்ரவரி 14] (திரு. இராம. வீரப்பன்)

இவ்வளவு பெரிய துக்கத்திற்கிடையிலே நமக்கு ஒரு அமைதி தோன்றுவதற்கு, ஒரு நம்பிக்கை தோன்றுவதற்கு இப்போது புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. செர்னன்கோ மிகப் பெரிய உணர்வுகளைத் தெரிவித்திருக்கிறார். அதிபர் ஆண்ட்ரபோவ் அவர்கள் எந்த இலட்சியத்தின் அடிப்படையிலே உலக அமைதியைக் கண்டார்களோ, எப்படி இந்தியா போன்ற நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தாரோ அதே உணர்வுகளை திரு. செர்னன்கோவும் வலியுறுத்தியிருப்பது நமக்கெல்லாம் உள்ளத்திலே மிகச் சிறந்த நம்பிக்கையை அளிக்கிறது.

"We do not want military superiority. We do not intend to dictate our will to other people. But we will not permit the military balance to be broken."

இந்தச் சொற்கள் சாதாரண சொற்கள் அல்ல. இன்றைக்கும் தங்களுடைய வளர்ச்சிக்காகப் போராடிக் கொண்டிருக்கிற நாடுகளுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை ஊட்டுகின்ற அருமையான வாக்கியங்கள். இந்த உணர்வின் அடிப்படையில், நமக்கு உறுதுணையாக இருந்த சோவியத் நாட்டின் மாபெரும் தலைவர், நம்முடைய உற்ற நண்பர், தோழர் மறைந்துவிட்டார் என்பது தாளாத, சகிக்க முடியாத இழப்பாகும் என்ற உணர்வில் நம்முடைய இரங்கலை அந்த நாட்டிற்கும், மறைந்தவருடைய குடும்பத்தினருக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஆளுகின்ற கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, தமிழக அரசின் சார்பிலே, தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே தெரிவித்து இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். வணக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற செய்தியை, தீர்மான இரங்கல் தீர்மானத்தில், இந்த அவையின் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் என்னை இணைத்துக்கொள்கிறேன். உலக அரங்கிலே தலைசிறந்த வல்லரசு நாடுகளில் ஒன்றாக விளங்குகிற சோவியத் நாட்டின் தலைமையை குறுகிய காலமே ஏற்றிருந்தாலும், உலக நாடுகள் மத்தியிலே ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் சோவியத் நாட்டின் கொள்கை கருத்துக்களை, மனத் தெளிவோடு தெரிவித்து நாட்டுக்குத் துணை நல்கி

[திரு. க. இராமமூர்த்தி] [1984 பிப்ரவரி 14

...கப் பெரிய குடியரசுத் தலைவரை நாம் இழந்திருக்கிறோம், சோவியத் நாடு இழந்திருக்கிறது. உலக அரங்கிலே இந்தியாவினுடைய நிரந்தர நண்பனாக சோவியத் நாடு விளங்குவதோடு மற்ற நாடுகளின் பொருளாதார ஆதிக்கம், மற்ற ஆதிக்கங்கள் எல்லாம் ஏற்படுகிற போதெல்லாம் "இந்தியாவிற்கு உற்ற நண்பனாக, துணையாக நான் இருக்கிறேன்" என்று சொல்லி இந்தியா கேட்டாலும், கேட்காவிட்டாலும் மிகுந்த மன உறுதியோடு உதவுகின்ற ஒரு நாட்டினுடைய தலைவரை இந்த நாட்டு மக்கள் இழந்திருக்கிறார்கள். மிகச் சாதாரண ஒரு தொழிலாளியினுடைய மகனாகப் பிறந்த அவர் கப்பல் தொழிலாளியாக உழைத்து அந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். சோவியத் நாட்டினுடைய பாரம்பரிய சோஷலிசத் தத்துவக் கொள்கைக்கு, இலட்சியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் மறைந்துவிட்டார் என்றாலும், அதனுடைய பின்னணியில் இந்த இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள தோழமை, நட்புறவு ஆகியவற்றை நம்மாலே நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. மற்ற நாடுகளுக்கும் சோவியத் நாட்டிற்கும் இடையே எந்த உறவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் நம்முடைய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற உறவு நம்முடைய விடுதலை இயக்கக் காலத்திலேயிருந்து நெருங்கிய தொடர்பாக இருந்து வந்திருக்கிறது.

நம்முடைய சமுதாய அமைப்புகள் வேறுபட்டிருந்தாலும் கூட, இந்திய நாட்டினுடைய விடுதலை இயக்க வளர்ச்சியை மிகுந்த தோழமை உணர்வோடு சோவியத் மக்கள் அன்றைக்கே கவனித்து வந்தார்கள் என்பதோடு, சோவியத் நாட்டிலே ஏற்பட்ட மிகப் பெரிய அரசியல் மாற்றங்களையெல்லாம் இந்தியாவின் விடுதலை இயக்கப் பொறுப்புக்களை ஏற்ற தலைவர்கள் வரவேற்று அந்த நாட்டு மக்களுடைய சுகதுக்கங்கள், உணர்ச்சி, அவர்கள் புரட்சியின் வெற்றி ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள் என்பதற்கு மிக அரிய உதாரணமாக விளங்குவது, தேசியக் கவி பாரதியார் அவர்கள் கூறியது தான். சோவியத் நாட்டினுடைய புரட்சியை பாரதியார் அவர்கள் "யுகப் புரட்சி" என்று வர்ணித்ததோடு அதையே இந்திய விடுதலை இயக்கத்திற்கு முன்னுதாரணமாக எடுத்துக்காட்டினார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.



1984 பிப்ரவரி 14] [திரு. க. இராமமூர்த்தி]

(முற்பகல் 11.20)

அதோடு மட்டுமல்ல, சமுதாய மாற்றத்தைப் பொறுத்த அளவிலேயும் அரசியல் ரீதியாகவும் பார்த்தால்கூட, சோவியத் நாட்டிலுள்ள மாற்றங்கள், அந்த நாட்டிலே ஏற்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றமும், கலாச்சார மாற்றமும், இந்தியாவிலே முக்கியமாக தமிழகத்திலே பிரதிபலித்துக் கொண்டிருப்பதை நம்மாலே காண முடிகிறது. சமுதாயப் புரட்சிக்கு சோவியத் நாட்டை எடுத்துக்காட்டாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தந்தை பெரியார் அவர்கள்கூட சோவியத் நாட்டிற்குச் சென்று வந்தார்கள். அதற்குப் பின்னர் பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்கள் மேலும் வேகத்தைப் பெற்றதைப் பார்க்கின்றோம். பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்கள் அயல்நாட்டுப் பயணங்களை அதிகமாக மேற்கொண்டதில்லை. அவர் அதிலே அதிகமாக ஆர்வம் காட்டியதில்லை. ஆனால் சோவியத் நாட்டிற்குச் சென்றுவர வேண்டுமென்று அவர் ஆர்வத்தோடு இருந்தார். அவர் சோவியத் நாட்டிற்குச் சென்று வந்த பிறகு, அவருடைய எண்ண ஓட்டத்திலே ஏற்பட்ட மாற்றத்தை நம்மாலே காண முடிந்தது. அந்த அளவுக்கு பெரும் நன்மைகளை உருவாக்கிய அந்த நாட்டினுடைய தலைவர் அவர்களுடைய மறைவிற்காக நாம் நம்முடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக சமீபத்திலே ஸ்ரீலங்காவிலே நடைபெற்ற இனப் படுகொலையின்போது தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களின்போது, உலக நாடுகளிலே மிகத் தெளிவாக அந்தத் தவறைச் சுட்டிக் காட்டிய நாடுகளிலே இந்த சோவியத் நாடும் ஒன்றாகும். அப்படி சுட்டிகாட்டியவராக இன்றைக்கு மறைந்துவிட்ட சோவியத் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களும் விளங்கினார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்கின்றோம். இந்த அளவுக்கு நம்முடைய சமுதாய அமைப்புகளிலே பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருக்கின்ற, அரசியல் அமைப்புகளிலே பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருக்கின்ற, இந்தியாவினுடைய எதிர்கால வளர்ச்சியிலே மிகுந்த ஆர்வம் காட்டுகின்ற நாடாக இருக்கின்ற, இந்தியா ஒரு வலிமையான, ஒரு நல்ல ஆட்சி பெற்று வலிவு பொருந்திய நாடாக விளங்கவேண்டுமென்ற உணர்வோடு இருக்கின்ற சோவியத் நாட்டினுடைய, உலக அரங்கிலே மிகப் பெரிய நாடாக விளங்குகின்ற அந்தப் பெரிய நாட்டினுடைய தலைவர் அவர்கள் மறைந்துவிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுடைய சார்பிலே அவர்களின் பேரிழப்பிலே நாமும் இணைத்துக்கொள்கிறோம். அவர்களுடைய உணர்வுகளை நாமும் பகிர்ந்து கொள்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம். இந்த

[திரு. க. இராமமூர்த்தி] [1984 பிப்ரவரி 14

நேரத்திலே இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவைத் தெரிவித்து, இந்த அவை யினுடைய கருத்துக்களையும் ஏற்று, எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும் இணைத்துக்கொள்கிறோம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைத்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

சோவியத் குடியரசு நாட்டினுடைய தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் மறைவு குறித்து இங்கே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தில் நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திரு. ஆண்ட்ரபோவ் அவர்களின் செல்வாக்கு வெளிநாடுகளில் சரியான அளவுக்குத் தான் இருந்து வந்தது. உள்நாட்டு அரசியலில் அவர்கள் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்தார்கள். இங்கே எடுத்துச் சொன்னதுபோல, அவர்கள் ஒரு சாதாரண கப்பல் தொழிலாளியாக வாழ்வைத் தொடங்கி, அந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராகவே விளங்கியிருக்கிறார்கள். அந்த குடியரசுத் தலைவராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு 15 மாதங்கள்தான் பணியாற்றினாலும், அந்த 15 மாத காலத்திற்குள்ளாக அவர்கள் ஆற்றிய பணி மிகச் சிறப்பாக இருந்தது என்று பாராட்டியிருக்கிறார்கள். உலகத் திலேயே முதலாவது சோஷலிச நாடாக ரஷ்யாவைக் குறிப்பிட்டு, பத்திரிகைச் செய்திகூட வந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். The first Socialist Country என்று ரஷ்யாவைக குறிப்பிட்டுவிட்டு, The biggest Socialist Country என்று இந்தியாவைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தியாவுக்கும் ரஷ்யாவிற்கும் இருக்கின்ற தொடர்பு, இரண்டு பெரிய நாடுகள் என்ற அடிப்படையிலே மாத்திரமல்ல, சோசலிசக் கொள்கையை வலியுறுத்துகின்ற வகையிலே இந்த இரண்டு நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக நான் கருதுகிறேன். அவருடைய 15 மாதப் பணியினைக் குறித்து ஒரு சிறிய கருத்தினைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

"within 15 months, Mr. Andropov got the majority of as much as 1|5th of the Soviet Cabinet, 20 per cent of Regional Communist Party Secretaries and 1|3 second and third Regional Party Officials replacing for reasons of age, inefficiency, corruption or replacing obstacles.".

நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு,



1984 பிப்ரவரி 14] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்ற எந்த சக்தியாக இருந்தாலும், அதைத் தடுத்து, அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி யிருக்கின்ற காட்சியைப் பார்த்திருக்கிறோம். அன்னாருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற இந்த நேரத்தில் ரஷ்யாவில் நிலவுகின்ற நிலைமை களை நாம் பார்க்க வேண்டும். மிகப் பெரிய தலைவர், உலக வல்லரசுகளை ஈர்க்கின்ற தலைவர் மறைந்திருக்கின்றார்கள். அவர் மறைந்து இன்றைக்கு மூன்று நாட்கள் ஆகின்றன. நம் நாட்டில் அப்படி அரசியல் தலைவர் மறைந்துவிட்டால் பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள் எல்லாவற்றுக்கும் விடுமுறை என்று வைத்திருக்கிறோம். ஆனால் அந்த நாட்டில் விடுமுறை கிடையாது. அரசு அலுவலர்கள் வேலைக்குப் போகின்றார்கள். தொழிற் சாலைகளில் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இறுதிச் சடங்குக் காகக்கூட ஒரு 5 நிமிடம் வேலைகளை நிறுத்திவைக்கலாம் என்றுதான் சொல்லப்படுகிறது. அவருடைய மறைவுக்காக அனுதாபம் தெரிவிக்கும் வகையில், வேலை சற்று நிறுத்தி வைக்கப்படுகிறது. ஆனால் நாம் விடுமுறை விடுகிறோம். எனவேதான் அந்த நாடு முன்னேறுவதாக நான் கருதுகிறேன். அப்பேர்ப்பட்ட தலைவர் மறைந்ததற்கு நானும் என்னுடைய அனுதாபத்தை இணைத்துக்கொண்டு, அந்த சோஷலிசக் கொள்கைகளை நாட்டிலே நிறைவேற்றுகின்ற பொறுப்பு நமக்கும் இருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ரஷ்யாவிற்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கெல்லாம் உரிமைகள் நசுக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவர் முன்வந்து ஆதரவு தந்திருக்கின்றார்கள். அன்னாருடைய மறைவுக்கு என் சார்பிலும் என்னைச் சார்ந்த கட்சியின் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ரஷ்யக் குடியரசுத் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களுடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்துகின்ற இந்தத் தீர்மானத்தை, ஆசிரியர்கள் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பாக, ஆதரித்து சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்

[திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்] [1984 பிப்ரவரி 14

எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டது போல, சோவியத் நாட்டில் தனிமனித வழிபாடு இல்லாமல், தனி மனிதனுக்கும் தலைவருக்கும் முக்கியத்துவம் தராமல், அந்த நாடு எந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்றதோ அந்தக் கொள்கையை அந்த நாட்டினுடைய தலைவர் சரியான முறையில் செயல்படுத்துகின்றாரா என்று பார்ப்பதில் தான் அந்த நாட்டுமக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள் என்பதை அங்கே நடைபெறுகின்ற சம்பவங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. ஆதலால்தான் அந்த நாட்டிலே தலைவர் பொறுப்பிலே வருகின்றவர்கள், நாடு ஏற்றுக் கொண்டிருக்கின்ற தத்துவத்தை, ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையைச் சரியான முறையிலே செயல்படுத்த நாட்டினுடைய தலைவர்களும் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆட்சியிலிருந்து ஒரு சிறிதும் வழுவாமல், கொள்கைப் பிடிப்போடு ஆட்சி நடத்துகின்றார்கள். வேறு சில நாடுகளிலே அந்த நாட்டினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களைப் பொறுத்து, அந்த நாட்டினுடைய கொள்கைகள் மாற்றப் படுகின்றன அல்லது திருத்தப்படுகின்றன. அதனால் குழப்பங்கள் ஏற்படு கின்றன. ஆனால் சோவியத் நாட்டைப் பொறுத்தவரையில், அங்கே முழுத் தெளிவாக கொள்கைக் கட்டுப்பாடோடு இருப்பதால், இப்படிப்பட்ட சலசலப்புகளுக்கும் குழப்பங்களுக்கும் இடமில்லாமல் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர் களுக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்பு பல ஆண்டுகளாக இருக்கின்றது. நம்முடைய முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உலக நாடுகளுக்கு எடுத்துச்சொன்னார்கள் "Peaceful co-existence" "சமாதான சக வாழ்வு" என்ற ஒரு அருமையான தத்துவத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தத்துவத்தை ஏற்ற பல நாடுகளில் சோவியத் நாடும் ஒன்று என்பது மட்டுமல்ல, அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற நாடுமாக அது இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



984 பிப்ரவரி 14] [திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்]

(முற்பகல் 11-30)

ஆகவே, (Peaceful Co-existence) என்ற தத்துவத்திலே அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் சோவியத் நாட்டிலே வெவ்வேறு தலைவர்கள் பொறுப்புக்கு வந்தாலும், அந்தக் கொள்கையிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களாக, அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு உலக சமாதானத்திற்காக பாடுபடுகிற தலைவர்களாகத் தான் சோவியத் நாட்டிலே தலைவர்கள் பொறுப்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் சோவியத் ரஷ்யா உலகத் திற்கே வழிகாட்டியாக, முன்னணியில் இருக்கிறது. அந்த நாட்டினுடைய தலைமைப் பொறுப்புக்கு யார் வருகிறார்கள் என்பதை விட, அந்த நாட்டி னுடைய தலைமைப் பொறுப்புக்கு வருகிற தலைவர்கள் கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதைத் தான் அந்நாட்டு மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அந்த வகையில் அந்த நாட்டு மக்கள் உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிறார்கள். அதுபோல் ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட அந்நாட்டுத் தலைவருடைய பதவி மாற்றம் ஏற்பட்டபோது, எனக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் சோவியத் நாட்டுக்குப் போயிருந்தார். அப்போது அந்நாட்டு மக்கள் சிறிதும் சலசலப்புக்கு இடம் கொடுக்காமல், குழப்பத்துக்கு ஆளாகாமல் அன்றாடம் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்ததைப் பார்த்து என்னுடைய உறவினர், அந்நாட்டு மக்களிடம் "ஒருசிறு விமர்சனம் கூட ஒருவரும் செய்யவில்லையே, அது ஏன்?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு அந்நாட்டு மக்கள் "எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. யார் தலைமைப் பொறுப் புக்கு வருகிறார்கள், யார் போகிறார்கள், யார் மாறுகிறார்கள் என்பது பற்றிக் கவலையில்லை, ஆனால் எங்களுக்குக் கொள்கை தான் முக்கியம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொன்னது அந்நாட்டிலுள்ள சாதாரண பாமர மக்கள். அந்த நாட்டிலுள்ள சாதாரண மக்களிடத்தில் இருக்கின்ற கொள்கைப் பிடிப்பு பாராட்டுக்குரியது. அதை நினைத்துப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

Men may come and Men may go but the Government remains for ever.

என்பதற்கேற்ப அந்த நாட்டிலுள்ள மக்களும் சரி, தலைவர்களாக வருகிற வர்களும் சரி உலக சமாதான சக வாழ்விற்கு உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிறார்கள். அந்தத் தத்துவத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை யுடைய தலைவர்கள் தான் அங்கு தலைவர்களாக வர முடியும். மீண்டும்

[சி. ரா. லெட்சுமி காந்தன்] [1984 பிப்ரவரி 14

ஒரு பெரிய உலக மகா யுத்தம் உலகத்தில் வராமல் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம். அப்படிப்பட்ட ஒரு வலிமைவாய்ந்த நாடாக சோவியத் ரஷ்யா இன்றைக்கு இருக்கிறது. உலக நாடுகளுக்கு உற்ற தோழனாக ரஷ்யா இருக்கிறது. குறிப்பாக இந்தியாவுக்கு மிகவும் உற்ற தோழனாக இருந்த சோவியத் நாட்டினுடைய அதிபர் ஆன்ட்ரபோவ் இன்றைக்கு மறைந்திருக்கிறார்கள். தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் எவ்வளவு நாட்களுக்குப் பதவியில் இருந்திருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. ஆனால் பதவியில் இருந்த கொஞ்ச நாட்களில் அவர்கள் எவ்வளவு சாதனை செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொண்ட லட்சியத்திலிருந்து வழுவாமல், மாறாமல் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அதேசமயத்தில் இந்தியாவுக்கும் சோவியத் நாட்டுக்கும் இடையே இருக்கின்ற உறவு மேலும் மேலும் பலப்படையும் வகையில் உறுதியாக, உற்ற தோழனாக இருந்து அவர்கள் மறைந்திருக்கிறார்கள். இந்தியர் ஒவ்வொருவருக்கும், தமிழர் ஒவ்வொருவருக்கும் இயற்கையாக உள்ளத்திலே இருக்கின்ற அந்த உணர்வு நமக்கெல்லாம் ஏற்படுகிறது. நம்மில் ஒருவரை நாம் இழந்து விட்டதைப் போன்ற அந்த உணர்வு நம்மை எல்லாம் ஆட்படுத்தியுள்ளது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே சொல்லியதுபோல், சம்பிரதாயமாக நாம் தெரிவிக்கின்ற அஞ்சலி போல் இதை எடுத்துக்கொள்ளாமல், நம்மில் ஒருவரை இழந்து விட்டோம் என்கிற உணர்வோடு இந்த மன்றமே இதில் பங்கு கொள்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், நானும், நான் சார்ந்திருக்கின்ற பட்டதாரி ஆசிரியர் முன்னணியும் பங்கு கொள்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தோடு அவர் ஆற்றிய உரையிலுள்ள கருத்துக்களோடு என்னுடைய உணர்வுகளையும் நான் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் குறுகிய காலம் பொறுப்பில் இருந்து விட்டு மறைந்து விட்டார்கள் என்ற உண்மை உலகம் அறிந்த ஒன்று. உலகத்தில் உயர்ந்த பதவி எது என்றால், சோவியத் ஜனாதிபதி பதவி. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் பதவி. ஆனால் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் தம்முடைய 16-வது வயதிலிருந்து 69-வது வயது வரை மகத்தான சேவை செய்திருக்கிறார்கள். தம்முடைய இளமைக் காலத்திலிருந்தே அந்த நாட்டிலே சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலே மிக முக்கிய பங்கு வகித்திருக்கிறார். இரண்டாவது உலகப் பெரும் போரின்



1984 பிப்ரவரி 14] [திரு. ப. மாணிக்கம்]

போது, கொரில்லா படைக்குத் தலைமை வகித்து லெனின்கிரேட் பகுதியிலுள்ள கரேலியா என்ற இடத்தில் ஹிட்லர் படைகளைத் தாக்கி அழித்தார். தான் என்று சொல்லக்கூடிய முக்கிய கொரில்லா இயக்கத்துக்கு தலைமை ஏற்று நடத்திச் சென்றிருக்கிறார். அந்த இடத்தில், மகாபலிபுரத்தில இருப்பது போல், அவர் சாதனைகளை நினைவுகூரும் வகையில் பாறைகளில் கல்வெட்டுகளைச் செதுக்கி சிற்பங்கள் அமைத்திருக்கிறார். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தினுடைய உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்று, அந்நாட்டினுடைய பல்வேறு அபிவிருத்திகளுக்கு, முன்னேற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்கிறார். அந்தப் பொறுப்பிலிருந்து வேறு பொறுப்புக்கு வந்த போதும், மறைந்த தோழர் திரு. பிரஷ்நேவ் அவர்கள் 1½ ஆண்டுக் காலமாக உடல் நலமில்லாமல் இருந்த சமயத்தில் பெரும்பாலும் அவருடைய பொறுப்புக்களைத் திறம்பட இவர் தான் நிறைவேற்றினார். அப்படிப்பட்ட பல பொறுப்புக்களை ஏற்று நிர்வகித்தவராதலால் தான், திரு. பிரஷ்நேவ் அவர்கள் மறைந்தவுடன் அவருடைய பொறுப்பை இவர் ஏற்றார். தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள உடல் நலம் பாதிக்கப்பட்டது பற்றி பலவித செய்திகள் பத்திரிகைகளில் வந்தன. ஆனால் உண்மையான காரணங்களும் என்னவென்றால், அவர் கொரில்லா போரில் ஈடுபட்டபோது, சொல்லொணா துன்பங்களுக்கு ஆளானார். அதிலிருந்து தொடர்ச்சியாக அவர் சில நோய்களுக்கு ஆளாகியிருந்தது உண்மை. இருப்பினும் அவர் தம் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றினார். இந்த உலகத்துக்காக அவர் ரொம்ப சேவை செய்திருக்கிறார்.

குறிப்பாக கடைசியாக மனித குலத்துக்கு அவர் ஆற்றிய இரண்டு நிகழ்ச்சிகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று அமெரிக்காவிலே சோவியத் யூனியன் பற்றி சக்தி வாய்ந்த ஒரு பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதாவது, சோவியத் யூனியன் ஏராளமான அணு ஆயுதங்களை, ஏவு கணைகளை தன் கைவசம் வைத்துக்கொண்டிருக்கிறது, அது என்றைக்காவது அமெரிக்காவைத் தாக்கி அமெரிக்க மக்களை எல்லாம் அழித்து விடும் என்கிற ஒரு எச்சரிக்கையை, உணர்வை அமெரிக்க மக்களிடத்தில் வளர்த்து விட்டார்கள். அதனுடைய விளைவாக இத்தகைய பிரச்சாரங்களை பத்திரிகை வாயிலாகவும், ரேடியோ வாயிலாகவும், டி.வி. வாயிலாகவும் பார்த்த ஒரு 13 வயது அமெரிக்கச் சிறுமி இதுபற்றி தோழர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களுக்கு நேரடியாகவே எழுதியது. அந்தச் சிறுமி திரு. ஆண்ட்ரபோவ் அவர்களுக்கு "நீங்கள் யுத்தத்தை ஆரம்பிப்பீர்களா?

[திரு. ப. மாணிக்கம்] [1984 பிப்ரவரி 14

யுத்தத்தைத் தவிர்க்க உங்களால் ஆன எதையாவது செய்வீர்களா ?" என்று எழுதிக் கேட்டது. உடனே தோழர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் அந்தச் சிறுமியை சோவியத் நாட்டுக்கு அழைத்து, சோவியத் நாட்டைச் சுற்றிக் காண்பித்து, சோவியத் நாடு சமாதானத்தை விரும்புகிறது என்பதைத் திட்டவட்டமாக அந்தச் சிறுமிக்குத் தெரிவித்து, அதன் மூலம் அமெரிக்க மக்களுக்கும் சோவியத் நாட்டினுடைய தத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். இதைக் கூட நம்முடைய நாட்டிலே ஏற்கெனவே இருக்கிற மரபுப்படி, 'பிரச்சார தந்திரம்' என்று சொல்லக் கூடும். அவர்கள் அவ்வாறு 13 வயது சிறுமியை நாட்டை சுற்றிக்காட்ட காரணம் "இளம் வயதுடைய குழந்தைகள் மத்தியில் இத்தகைய தவறான சிந்தனையை வளர்த்து விடக் கூடாது" என்பதுதான்.

அடுத்து, ஐரோப்பாவில் மீண்டும் அணு ஆயுத ஏவுகணைகளை நிர்மாணித்தார்கள். சோவியத் யூனியன் சார்பில் அவர் பொறுப்பில் இருந்தபடியால், அது கூடாது என்று எச்சரிக்கை செய்தார்கள். இப்படிச் செய்வதால் ஐரோப்பாவில் மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படலாம் என்று கருதி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஏற்கெனவே ஜெர்மனியிலிருந்து தான் இரண்டு உலகப் பெரும் போர்கள் தொடங்கியுள்ளன. பிரஞ்ச் நாட்டிலும், ஐரோப்பாவிலும், ஜெர்மனி நாட்டிலும் அணு ஆயுதங்களை ஏவு கணைகளைக் குவிப்பது என்றால், அது நிச்சயமாக அருகிலுள்ள சோஷலிச நாடுகளை அழிக்கும், அந்த வகையில் அது உலக மக்களையும் அழிக்கும், ஆகவே அது கூடவே கூடாது என்று வேண்டுகோள் விடுத்து, 3 யோசனைகளையும் தோழர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் தெரிவித்தார்கள். "அணு ஆயுத, ஏவு கணைகளை உற்பத்தி செய்வதை இன்றே நிறுத்தி விடுவோம், குறைப்போம், அழித்து விடுவோம்" என்று யோசனை சொன்னார்கள். இந்த மூன்று ஆலோசனைகளையும் ஐரோப்பாவில் நடைமுறைக்குக் கொண்டுவர சோவியத் அரசின் சார்பில் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் மிகக் கடுமையாக முயற்சி செய்தார்கள். அதற்கு

(முற்பகல் 11-40)

இப்போது கைமேல் பலன் கிடைக்காவிட்டாலும், அவரையடுத்து தற்போது ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக வந்திருக்கும் திரு. செர்னென்கோ அவர்கள் காலத்தில், நிறைவேறலாம் என்று எதிர்பார்க்கலாம்.



1984 பிப்ரவரி 14] [திரு. ப. மாணிக்கம்]

நமது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது, மூன்று முக்கியமான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதில் மூன்றாவது கருத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். "இராணுவ பலாபலத்தைப் போல, இராணுவ சாகசங்களில் உள்ள சக்தி இருக்கிறதே அதைச் சீர்குலைக்க விடமாட்டோம், அதைச் சீர்குலைத்தால் அதன் பொருள் எந்த நாட்டின் கை ஓங்கினாலும் அதனால் மனித குலம் அழிந்து விடும் என்ற ஆபத்தில் மனித குலம் வாழ்கிறது" என்று தலைசிறந்த விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆபத்தின் மூலம் மனித குலத்தை அழித்து விடக்கூடாது, மனித குலத்தைக் காப்பாற்றுவது நமது முதல் கடமை என்பதற்காக திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் தனது இறுதி மூச்சு வரை பாடுபட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு தலைவரின் மரணத்திற்கு இந்த அவை தனது அஞ்சலியைச் செலுத்துகிற நேரத்தில், நானும் இங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அஞ்சலி செலுத்தி அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தையும், அதையொட்டி அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் ஒட்டி, நான் என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"திரு. ஆண்ட்ரோபோவ் அவர்கள் உலக சமாதானத்திற்காகப் பாடுபட்டவர். அணு ஆயுதக் குறைப்புக்காகப் பாடுபட்டவர். இந்திய-சோவியத் நட்புறவு உறுதிப்படுத்த பாடுபட்டவர். அதை வளர்ப்பதற்காகவும் முயற்சி செய்தவர்" என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அவரைப் பொறுத்தவரையில், அது மிகவும் பொருத்தமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய உலகத்தின் அணு ஆயுத யுத்த பயத்தைக்கூட ஒருவகையில் அவர் போக்கியவர் என்பதைச் சொல்ல வேண்டும். காரணம் இன்றைய உலகம் அணு ஆயுத யுத்தத்தை எதிர்நோக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். 1936 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் இட்லர், முசோலினி போன்றவர்களால் பாசிச யுத்த நிலைமை ஏற்பட்ட போது, அப்போதைய சோவியத் நாடுதான் உலகத்திற்கு சமாதான யோசனை சொல்லியது. இரண்டாவது யுத்தத்திற்குப் பிறகு, யுத்த அபாயம் நீங்கிய பிறகு, உலக சமாதானத்திற்கு, சோவியத் யூனியன் ஒரு திட்டம் வகுத்துத் தந்தது. விவசாய வளர்ச்சியில் உலக நாடுகள் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும் என்று கூறியது. பாப்புலர் ஃபிரண்ட் மூலமாக அதைத் தொடங்க வேண்டுமென்று அன்றைய சோவியத் தோழர் ஸ்டாலின்

தலைமையில் தீர்மானமாகச் சொல்லியது. நம்முடைய நாட்டின் தேசிய இயக்கம் அத்தகைய கருத்துக்கு ஆதரவை அளித்தது. பண்டித நேரு போன்றவர்கள் அந்தக் கருத்துக்கு தங்கள் ஆதரவை அளித்தனர். ஜப்பானிய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானம் எத்தகைய உதவி செய்ததோ அதேபோன்று ஐரோப்பிய நாடுகளும் இந்தியா போன்ற நாடுகளும் விஞ்ஞானத்தின் மூலம் பலன்களைப் பெறவேண்டும் என்று கூறப்பட்டது.

இந்திய மக்கள் தந்த அந்த நன்னம்பிக்கையின் அடிப்படையில் தேசிய இயக்கம் உலக சமாதானத்திற்காக வழி வகுத்தது. அப்போது பெரிய உலக யுத்த அபாயம் இருந்ததைப் போல அணு ஆயுத யுத்த அபாயம் இன்றைக்கு இருக்கிறது. ஆனால் அப்படி ஒரு யுத்தம் வருவதற்குக் காரணமாக இருக்கிற அமெரிக்காவுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையைக் கொடுக்கக்கூடிய ஒரு கடமையைத் தோழர் ஆண்ட்ரோபோவிற்கு சரித்திரம் கொடுத்துவிட்டது. ரஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக அவர் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டாலும், அந்த நாட்டின் அதிபராக அவர் பொறுப்பேற்று ஒரு வருடம் கூட ஆகவில்லை. இருந்தாலும், இந்தக் குறுகிய காலத்திற்குள் உலக சமாதானத்திற்காக அமெரிக்காவை எச்சரிக்கை செய்த கடமையைச் செய்திருக்கிறார். அவர் "அணு ஆயுதங்களைக் கொண்டு செல்லக்கூடிய எவுகணைகளை மேற்கு ஐரோப்பா மூலமாக பல்லாயிரக் மைல்களைத் தாண்டிக் கொண்டு செல்வதாகச் சொல்கிறார்கள். இல்லாவிட்டால் தனக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதற்காக மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பயன்படுத்திக்கொள்கிறது அமெரிக்கா. அதனால் ஐரோப்பாவுக்கு பெரிய ஆபத்து ஏற்படும். அந்த எவுகணைகளால் ஐந்து கோடி பேர் இறந்தால், அதில் இரண்டு கோடி பேர் ரஷியர்களாக இருப்பார்கள். கோடிக் கணக்கான பேர் அதில் காயம்பட்டிருந்தாலும் அதிலும் பாதிப்பேர் சோவியத் மக்களாகத்தான் இருப்பார்கள். அப்படி யுத்த அனுபவம் கண்டவர்கள் நாங்கள். ஆகவே நாங்கள் அமெரிக்காவைத் தாக்கப் போவதில்லை. அட்லாண்டிக் கடலைத் தாண்டி அமெரிக்கா இருக்கிறது. நாங்கள் அங்கே போக விரும்பவில்லை" என்று சொன்னார். அந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்காக தோழர் ஆண்ட்ரோபோவ் அவர்கள் உலக மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய நாடுகள் மூலமாக எவுகணைகளைக் கொண்டுவரக்கூடாது. அதையும் மீறி மேற்கு ஐரோப்பா மூலமாகக்கொண்டு வந்தால் யுத்தம் தான் வரும். சமாதானத்தை பிச்சை கேட்டுப் பெற முடியாது என்று அவர் சொன்னார். "மேற்கு



ஐரோப்பிய நாடுகள் மூலமாக எவுகணைகளைக் கொண்டு சென்றால், நாங்கள் கிழக்குப் பக்கமாக கிழக்கு ஜெர்மனி, யுகோசுலோவியா நாடுகளில் எங்களது எவுகணைகளை வைக்க வேண்டி இருக்கும். அதன் காரணமாக அட்லாண்டிக் கடல் பகுதி நிச்சயமாக யுத்த அபாயத்தை எதிர் நோக்க வேண்டி வரும்" என்று திட்டவட்டமாகச் சொன்னவர்தான் தோழர் ஆண்ட்ரோபோவ். அப்படி தனது குறுகிய பதவிக் காலத்தில் அமெரிக்காவை எச்சரித்த பெருமை சோவியத் யூனியனுக்கு ஏற்படச் செய்தவர் அவர். தன்னுடைய நாட்டுக்கு மட்டுமல்ல, 1936ஆம் ஆண்டு யுத்த அபாயம் இருந்ததைப் போலவே, இன்றைக்கு இருக்கிற அணு ஆயுத யுத்தம் நடைபெற்றுவிடுமேயானால், யார் தோற்றார்கள், யார் வெற்றி பெற்றார்கள் என்று சொல்வதற்குக்கூட ஆளே இல்லாமல் போய்விடக்கூடிய நிலைமைதான் ஏற்படும் என்று சொல்கிற நோக்கில், சோவியத் யூனியன் தான் சமாதானத்திற்காக முயற்சி செய்கிறது என்றார். அப்படி சமாதானம் வெற்றி பெற முயற்சி எடுத்த சமாதானப் பெரியாராக அவர் விளங்கினார். அதற்குள்ளே விளக்கமாகப் போக விரும்பவில்லை.

15 மாதம் கூட அவர் அந்த நாட்டின் ஜனாதிபதியாக இல்லை. அதற்குள்ளாக சரித்திர முக்கியமான கட்டத்தில் அமெரிக்காவை எச்சரித்த கடமையைத் துணிந்து செய்தார். அப்படிச் சரித்திரப் புகழ் வாய்ந்த அவர் இந்திய-சோவியத் நட்புறவு வளரவும் முயற்சிகள் மேற்கொண்டார். அதன் காரணமாக 1983ஆம் ஆண்டில் மூவாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இந்தியாவுடன் வியாபாரம் நடந்து வந்தது. இந்த ஆண்டிலிருந்து நான்காயிரம் கோடி ரூபாயாக உயரக்கூடிய நிலையில் அவர் முயற்சிகள் மேற்கொண்டார். விவசாய வளர்ச்சியிலும் சோவியத் யூனியனை முழு மூச்சுடன் ஈடுபடச் செய்தார். அவரது சேவை சோவியத் யூனியன் சோஷலிஸ்ட் நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது. அவரது தன்னலமற்ற அந்த உதவிக்கு அந்த நாடு அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறது.

இங்கே கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தில் இந்திய-சோவியத் நட்புறவு பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் எப்படிப்பட்ட உறவு இந்த நாட்டுடன் கொண்டிருந்தார் என்பது குறித்து, "இந்து" பத்திரிகை தனது தலையங்கத்திலே சொல்கிறது :—

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 பிப்ரவரி 14

"Mr. Yuri Andropov emerged as an authoritative figure who impressed soviet citizens as well as external observers with his intellectual and political gifts, his no-nonsense and realistic style, his plain-speaking on the problems within the Soviet system to which he was solidly committed, his detailed grasp of inter-national affairs and his non-pursuit of any kind of personality cult."

என்று சொல்லிவிட்டு, கடைசியாக தனிநபர் வழிபாடு இல்லாமல் கூட்டுத் தலைமையில் ஒரு நாடு செயல்படக் கூடிய முறையில் எப்படி இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது.

"While there are indications he attached importance to strengthening relations with India, he also happened to be the only top Soviet figure in recent years with whom this country has had no direct contact or experience. As an interim leader—despite his long absence from the public stage—he was quietly impressive."

ஆகவே இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள அனுதாபத் தீர்மானத்தில் நானும் கலந்து கொண்டு, என்னுடைய சார்பிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு, அரசின் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(மு.பகல் 11-50)

THIRU J. M. MIAKHAN: Respected Chairman Sir, on behalf of the Indian Union Muslim League, I associate myself with the sentiments expressed in this House regarding the demise of the late lamented leader of U.S.S.R. Mr. Andropov.

Mr. Andropov, though he was in office only for about 15 months, has not only endeared himself to his own countrymen, but also to many people outside his country, especially in countries like India which are having good relationship with U.S.S.R. Really his aim was to cut down the armaments and to bring peace in this world. We are really horrified to see that there is still escalation in manufacture of arms of destruction and he, like other Russians or the people who have suffered a lot during the years of War, decried war. We, in India, might have suffered during the 1914 War and also during the Second World War; but actually we have suffered only indirectly. But those in Russia have directly suffered not only human loss but also loss of property and other things and



1984 பிப்ரவரி 14] [Thiru J. M. Miakhan]

because of the Wars their entire economy was completely shattered. Whether it is rightly started or wrongly started, when once a war starts the war somehow gets escalated and it ends only in destruction not only to the victor but also to the vanquished. So, Mr. Andropov was trying his level best to bring peace through all International forums and to reduce tension and also bring about amity amongst all people. Only because of his immense friendship towards this country, we are adopting a resolution of this type in our State Legislature. Normally such Resolutions are passed only in Parliament and since there is very good relationship between this country and U.S.S.R. we mourn the death of Mr. Andropov and especially feel that his death is a loss not only to his country but also to the entire world.

I, once again, on behalf of the Indian Union Muslim League, associate myself with the sentiments expressed in this House and wish that our sentiments also may be conveyed to their people.

Thank you, Sir.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் தலைசிறந்த நட்பு நாடான சோவியத் நாட்டின் சிறந்த தலைவர் தோழர் ஆண்ட்ரோபோவ் அவர்களின் மறைவுக்கு, மிகச் சிறந்த முறையில் உயர்ந்த உணர்வோடு இந்த அவையின் முன்னவர் அவர்கள் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கூடிய வகையில் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் உணர்வுகளோடு, நான் சார்ந்திருக்கும் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலும் என் உணர்வையும் இரங்கலையும் இந்த அவையின் குறிப்பில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவின் நெருங்கிய நண்பராக, ஆரம்பக் காலத்திலிருந்தே இந்திய நாட்டிற்கு நெருக்கடி வந்தபோதெல்லாம், அந்நிய ஆக்கிரமிப்பு மிரட்டல்கள் வந்தபோதெல்லாம், இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் தொல்லைகளை உருவாக்க மேற்கத்திய நாடுகள் முயன்றுவிட்டு நெருக்கடிகளை உருவாக்கிய போதெல்லாம் நமக்குப் பக்க பலமாக இருந்து உதவியதோடு, நம் நாட்டிற்குப் பெருந் தொழில்களையெல்லாம் உதவி அந்நிய அச்சுறுத்தல்களிலிருந்தும் நம்மைப் பாதுகாத்து நட்புறவோடு நம்மோடு உடன்பாடு கொண்டிருக்கிற உயர்ந்த நாட்டின் தலைவர் இன்றைக்கு நம்மிடையே இருந்து மறைந்திருக்கிறார். அவருக்குப் பதிலாக வேறு ஒரு தலைவரையும் அந்த நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

[திரு. செ. முத்துசாமி] [1984 பிப்ரவரி 14

அந்த சோவியத் நாட்டிற்குத்தான் நான் சென்ற ஆண்டு சென்றிருந்தேன். இரண்டு கோடி மக்கள் பெரும் தியாகத்தைச் செய்து அந்த நாட்டைக் காத்திருக்கிறார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத்தை, அந்த நாட்டு மக்கள் அப்படிக் குறிப்பிடுவதில்லை; மாறாக மாபெரும் தேசம் காக்கும் யுத்தம் என்றுதான் சொல்கிறார்கள். அந்தத்து இன்றைக்கு பெருமளவில் வளர்ந்திருக்கும் அந்த நாட்டு மக்களுடைய தியாக மரபுகளைச சென்று பார்த்தபோது, என்னுடைய தேச பக்தி நான் இந்த நாட்டுக் குடிமகனாக, இந்தியக் குடிமகனாக ஆனபோது ஏற்பட்ட தேச பக்தியை விட, நான் ஆசிரியனாக ஆன போது ஏற்பட்ட தேச பக்தியைவிட, அதற்கும மேலாக நான் இந்தச் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக வந்த பிறகு ஏற்பட்ட தேசபக்தியை விட, அந்த சோவியத் நாட்டின சின்னங்களையெல்லாம் நேரில் சென்று பார்த்தபோது, அதிகமாகவே ஏற்பட்டது.

ஒரே பிரதேசத்தில் சுமார் 50 லட்சம் மக்கள் இறந்து போனதற்காக ஒரு நினைவுச் சின்னத்தை அந்த நாட்டு மக்கள் அங்கே எழுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்கள் இருக்குமிடங்களுக்கெல்லாம் எங்களை அழைத்துச் சென்று காட்டினார்கள். அந்த மக்களின் தியாகங்களைப் பற்றியெல்லாம் சொன்னபோது, எங்களையும் அறியாமல் அந்தத் தியாகிகளின் உணர்வுகளை மதிக்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றியது. அதன் காரணமாக அந்த நினைவுச் சின்னங்களையெல்லாம நாங்கள் பார்த்தபோது, அவைகளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு வந்தோம். அப்போது அங்கே புதுமணத் தம்பதியர் வந்து வீர வணக்கம் செலுத்திய காட்சியைப் பார்த்து, எங்களோடிருந்த இன்டர்பிரட்டரைப் பார்த்து இவர்கள் யார், எதற்காக இங்கே வந்து வணக்கம் செலுத்துகிறார்கள் என்று கேட்டோம். மாண்புமிகு டாக்டர் நாவலர் அய்யா அவர்களும் எங்களோடு அங்கே இருந்தார்கள். நாங்கள் எல்லோரும் கேட்டோம். அதற்கு அந்த மொழிபெயர்ப்பாளர் சொன்ன காரணம் இதுதான. "எங்களுக்கு வாழ்வதற்கான வாழ்க்கையைத் தந்தவர்கள் இவர்கள். இவர்கள் இந்த நாட்டைக் காத்தவர்கள். இவர்கள் இல்லையென்றால் இந்த நாடே இல்லை, நாங்களும் இல்லை. எனவே நாங்கள் வாழ்க்கையைத் தொடங்குகிறபோது முதலில் அவர்களுக்கு வீர வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, எங்கள் வாழ்க்கையைத் தொடருகிறோம்" என்று குறிப்பிட்டார். உண்மையிலேயே மற்றவர்களின் தியாகத்தை அந்த நாட்டு மக்கள் எப்படி மதிக்கிறார்கள், தங்களுக்கு வாழ்வைத் தேடித்தந்த அந்த தியாகிகளை எவ்வாறு நேசிக்கிறார்கள் என்பதைப் பார்த்தபோது மெய்சிலிர்த்துப் போனோம். அந்த நாட்டு மக்கள்



1984 பிப்ரவரி 14] [திரு. செ. முத்துசாமி]

யுத்தத்தை விரும்பமாட்டார்கள். காரணம் அதன் பாதிப்பை அவர்கள் அனைவரும் நல்முறையில் உணர்ந்திருக்கிறார்கள். போரின் காரணமாக ஏற்படுகிற துன்பம் என்ன என்பதை அந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அத்தகைய காட்சிகளையெல்லாம் பார்த்தபோது, உண்மையிலேயே எங்கள் மேனி சிலிர்த்தது. மனம் உருகியது. அந்த அளவுக்கு எங்கள் மனம் உருகத்தக்க வகையில் பெரும் தியாகங்கள் அந்த நாட்டு லெனின்கிராடில் நடைபெற்றிருக்கின்றன. அந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு குடிமகனும் - அந்த தேசத்தில் பிறந்த ஒவ்வொருவரும்—மாணவப் பருவத்திலிருந்தே அத்தகைய தியாக உணர்வுகளை மதிக்கும் வகையில் வளர்ந்து வருகிறார்கள். தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் சாதாரண சக வாழ்வுக்காக வாழ்ந்தார் என்றால், அந்த உணர்வு சாதாரண மக்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் எழுகிற உணர்வு. யார் எதைச் சொன்னாலும் அந்த நாட்டு மக்களைப் பார்த்தபோது, எனக்கு ஒன்று நன்றாகத் தெரிந்தது. இந்த நாட்டின் கவிஞன் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பாடினான். "எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்த நாட்டு மன்னர்" என்று பாடினான். இந்த நாட்டு மக்கள் எல்லோரும் இந்த நாட்டு மன்னர்களாக வாழவேண்டும் என்று விரும்பினான். அப்படிப்பட்ட நிலை இங்கே ஏற்பட வேண்டுமென்று அந்தக் கவிஞன் கனவு கண்டான். அந்தக் கனவை அங்கே இருப்பவர்கள் நனவாகச் செய்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல, தந்தை பெரியார் அவர்கள் விரும்பிய ஜாதி சமய பேதங்களற்ற சமுதாயத்தை அங்கே அவர்கள் கண்டிருக்கிறார்கள். அவர் மிகவும் கண்டித்த அந்த ஜாதி சமயக் கொடுமைகளை அங்கே இல்லாமல் அவர்கள் செய்திருக்கிறார்கள். அங்கே பணக்காரர்கள் இல்லை. காரணம் அங்கே கையேந்துகிறவர்கள் இல்லை. அங்கே கேவலமான கூவம் பருகிகள் இல்லை. இவைகளையெல்லாம் பார்த்தபோது, என்னையும் அறியாமல் இப்படி ஒரு சமுதாய அமைப்பு ஏற்பட எப்படிப்பட்ட தியாகங்கள் தேவைப்படுகின்றன என்பது தெளிவாகியது. ஒவ்வொரு நாட்டிலும் இப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டும் என்ற உணர்வுதான் ஏற்பட்டது. அப்படிப்பட்ட உணர்வு எனக்கு அங்கே சென்றபோது ஏற்பட்டது. அப்படிப்பட்ட நாட்டின் தலைசிறந்த தலைவரான தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை. நம்மோடு தலைசிறந்த நட்புநாடான அந்த நாட்டுக்கு நாம் அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. செ. முத்துசாமி]

[1984 பிப்ரவரி 14

அந்தத் தலைவர்கள் காலகாலமாக வளர்த்துவிட்ட கொள்கையை, தலைசிறந்த முறையில் அணுகுவதற்குக் காரணம் அங்கே தலைமைக்குத் தலைமை கொள்கை மாற்றமில்லை, கொள்கைக்காகத் தலைமையே தலைமைக்காகக் கொள்கை இல்லை என்ற உயர்ந்த கொள்கையைத் தவிர பிடித்துக் கொண்டு மக்கள் சமாதான சகவாழ்வில் கொண்டு செல்லும் தன்மையைப் பார்த்து வந்தேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். அங்கே ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானமாக வாழ்கிற, பாரதி அந்தப் பாங்கினை, கான முடிந்தது. அத்தகைய ஒரு சீரிய நாட்டின் தலைவன் மறைவின் காரணமாக அவைகளையெல்லாம் மீண்டும் ஒரு முறை எண்ணிப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்தத் தலைவனுடைய ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று இறை நம்பிக்கை உள்ளவர்கள் சொல்லுவார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், அந்த மாபெரும் நாட்டின் தலைவன் மறைவுக்காக என்னுடைய இரங்கலையும், நான் சார்ந்திருக்கிற ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலும் இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(நண்பகல் 12—00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் உள்ள ஒவ்வொரு வார்த் தையிலும், அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும், அவையிலுள்ள உறுப்பினர்கள் தெரிவித்துள்ள ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள உணர்ச்சி யோடு இதயபூர்வமாக அவைத் தலைவர் என்ற முறையிலே நானும் கலந்து கொண்டு மறைந்த சோவியத் நாட்டின் மாபெரும் தலைவர், உலக சமாதான இயக்கத்தின் காவலர், உலக சோஷலிச இயக்கத்தின் வழிகாட்டி, இந்தியாவின் மாபெரும் தோழர் திரு. யூரி ஆண்ட்ரபோவ் அவர்களுடைய மறைவுக்கு வருத்தத்தோடு அவருக்கு இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிற்கும் சோவியத் நாட்டிற்கும் உள்ள நட்பு—பல நாடுகளோடு இந்த நட்பு இருந்தாலும்—அவற்றை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் சோவியத் நாட்டோடு இந்தியாவிற்கு உள்ள நட்பு உறுதியானது. இந்த 36 ஆண்டுக் காலத்திலே உலக நாடுகள் ஒன்றோடொன்று நட்பு கொண்டிருந்ததை நாம் பார்த்து வந்திருக்கிறோம். இந்தியாவோடு கொண்ட



1984 பிப்ரவரி 14] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

நட்பு பகையாக மாறியது, நட்பு நாடு பகை நாடாக மாறியது. ஆனால் சோவியத் நாட்டோடு இந்தியாவிற்கு உள்ள நட்பு இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதற்கொண்டு இந்த நாள் வரை வளர்பிறையாக வளர்ந்து, எந்தச் சிக்கலுமின்றி எந்தக் காலத்திலும் அழிந்ததில்லை என்பதை நினைக் கிறபோது, அவருடைய இழப்பினால், அவை முன்னவர் அவர்கள் சொன்னது போல, நம்முடைய குடும்பத்தில் ஒருவரை இழந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

சீன பெருநாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் எல்லைச் சிக்கல் காரணமாக போர் மூண்டபோது, சோவியத் ருஷ்யா இந்தியாவோடு கொண்ட நட்பு நலியவில்லை என்றால், அதைவிட ஒரு சோதனைக் காலத்தை இந்தியாவோடு சோவியத் நாடு கொண்டிருந்த நட்பிற்கு உவமை காட்ட முடியாது.

இந்தியாவோடு மட்டுமல்லாமல், நாம் வாழ்கிற நாடான தமிழ்நாட்டோடு சோவியத் நாட்டுக்குள்ள நட்பு வேறு பிற மாநிலத்திற்கு எளிதில் கிடைக்க முடியாத சிறப்பு என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த நாடு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்திலே, காங்கிரஸ் மகா சபையின் தலைவராக இருந்த திரு மயிலை சீனிவாச ஐயங்கார் சோவியத் நாட்டிற்குச் சென்று அந்த நாட்டைப் பார்த்துவிட்டு வந்தார்கள். காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்து முதலில் சோவியத் நாடு சென்றவர் திரு சீனிவாச ஐயங்கார்தான் என்பதைப் பார்க்கிறோம்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்த காலத்திலே, சமுதாயப் புரட்சி இயக்கமாக நடத்திக் கொண்டிருந்த காலத்திலே, சோவியத் ருஷ்யாவிற்குச் சென்று வந்தார். அவர் அங்கிருந்து திரும்பிய பிறகு தம்முடைய சமுதாயப் புரட்சி இயக் கத்தைப் பொருளாதாரப் புரட்சி இயக்கமாக மாற்றிவிட வேண்டுமென்று எண்ணுகிற அளவிற்கு சுயமரியாதை இயக்கத்திலே புரட்சிகரமான மாற் றத்தைக் கொண்டு வந்தார். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, அப்போது இந்த ஜஸ்டிஸ் கட்சி அவரைச் சிறை வைக்க திட்டமிடும் அளவிற்கு சோவியத் யூனியன் ஆகர்ஷண உணர்ச்சியால் தீவிரம் காட்டினார் என்று நினைக்கிறபோது, எந்த அளவிற்கு தமிழ்நாட்டிற்கும் அதோடு தொடர்பு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1984 பிப்ரவரி 14

இதற்கெல்லாம் முன்பு 1917-ல் சோவியத் ருஷ்யா பூத்தபோது, அதை வரவேற்று அங்கீகரிக்க நமக்கு ஒரு ஆட்சி இல்லையே, அதை ஏற்றுக் கொள்கிறோம் என்று கொடி வெளியிட நமக்கு ஒரு அரசு இல்லையே என்ற அந்த நாளில் மகாகவி இந்தியாவின் ஏகப்பிரதிநிதியாக நின்று சோவியத் ஆட்சி எந்தத் திங்களில் பூத்ததோ, அதே திங்களில் "புதிய ருஷ்யா" என்ற தலைப்பில் பாடியிருக்கிறார். அந்தப் பாடலில் வரிக்கு வரி வார்த்தைக்கு வரி, சொல்லுக்கு சொல், செய்யுளுக்கு செய்யுள், வரவேற்று "இது புது உலகத்தின் தொடக்கம்" என்று சொல்லியிருக்கிறார்.

சோவியத் நாடு என்பதைப் புது உலகம் என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அதை வரவேற்ற மகாகவி இந்தியாவிற்கும், சோவியத் நாட்டிற்கும் நட்பு ஏற்பட முதலில் இருந்தவர். அது தனி மனிதனுடைய கவிதை அல்ல. விடுதலைப் பாசறை சார்பாக அவர் விடுத்த பிரகடனமாகப் பார்க்கிறோம்.

திரு இராஜாஜி அவர்கள் பொதுவுடைமையாளர் அல்ல. சோவியத் ருஷ்யாவுடன் தொடர்பு கொண்டார் என்று சொல்ல முடியாது. "அணுகுண்டை கடலில் எறிய வேண்டும்" என்று சொல்வதற்கு அவர் அமெரிக்கா சென்றபோது நான் அவரிடம் பேசினேன். அவர் ருஷ்யாவிற்கும் செல்ல வேண்டும் என்று நான் சொன்னபோது "எனக்குச் சந்தேகம் இல்லை, அமெரிக்கா அணுகுண்டைப் போட்டுவிட்டால், ருஷ்யாவும் விட்டு விடும். அந்த நம்பிக்கையில் நான் இருக்கிறேன். ஆகவேதான் அமெரிக்காவிற்கு நான் போகிறேன்" என்று அவர் திரும்பச் சொன்னார். அணுகுண்டு ஒழிய வேண்டுமானால், அதை எங்கு தொடங்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் அவர். சோவியத் ருஷ்யாவினுடைய உலக சமாதான இயக்கத்திலே, அணுகுண்டு எதிர்ப்பு இயக்கத்திலே திரு. இராஜாஜி அவர் களுக்குள்ள நம்பிக்கையை உறுதியாக நாம் பார்த்தோம்.

திரு ஆண்ட்ரபோவ் அவர்கள் ஒரு தொழிலாளி குடும்பத்திலே பிறந்து அந்த தேசத்தின் ஜனாதிபதியாக வந்தார் என்பதைப் பார்க்கிறோம். அந்த நாட்டிலே பொது மொழி நாட்டு மொழி. மாநிலந்தோறும் மாநில மொழி ஆட்சி மொழி. அந்த மொழியே எங்கும் எதிலும் நாட்டு மொழியாக ஆக்கி நிற்கின்ற காரணத்தாலே, தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தவர் தலைவர் அதிபர் ஆவதற்கு தடையேதும் இல்லாத நிலை இருக்கிறது. பலர் அப்படி வந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் திரு.க ஆண்ட்ரோபோவ் அவர்களும் ஒருவராக இருந்தார் என்பதைப் பார்க்கிறோம்.



1984 பிப்ரவரி 14] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

இந்தியாவிற்கும் சோவியத்துக்கும் வெறும் அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல், இரண்டு நாடுகளுக்கும் உள்ள பாதுகாப்புத் துறையிலும் நட்பு இருப்பதை நினைவில் கொள்ளவேண்டும். கூட்டுசேரா நாடுகள் அணியிலும் இந்தியா இருக்கிறது. அது மட்டுமல்லாமல் காமன்வெல்த் நாடுகள் அணியிலும் இந்தியா இருக்கிறது. கூட்டுசேரா அணியில் இருப்பதற்கு சோவியத் ருஷ்யா நம்மை ஐயுறுவதில்லை. அதே மாதிரி காமன்வெல்த் நாடுகள் அணியில் இந்தியா அங்கம் வகிப்பதையும் ஐயுற்ற தில்லை. அதற்கு காரணம் நம்முடைய கொள்கையில் அதற்குள்ள நம்பிக்கை, மக்கள் அடிப்படையில் நாம் ஆட்சி நடத்துகிறோம் என்ற உறுதிப்பாடு, நாட்டினிடையே நட்பு என்றால், ஆட்சிகளிடையே நட்பு என்பதுதான் உலகத்திலே வழக்கம். இந்திய-சோவியத் நாடுகளுடைய நட்பு அரசினுடைய நட்பாக மட்டுமல்லாமல் இரண்டு சமுதாயத்தினுடைய நட்பாக இருப்பதால், நபர் மாறினாலும் நட்பு மாறுவதில்லை. இங்கே ஆளும் கட்சி மாறினாலும், நட்பை மாற்ற முடியவில்லை என்பதை சோதனை காலத்திலேயே கண்டுவிட்டோம். மாபெரும் நட்பிற்குக் காரணமாக இருந்த மாபெரும் தேசத்தின் உலகப் பெருந்தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைந்ததற்கு உங்களோடு சேர்ந்து நானும் என்னுடைய அஞ்சலி யையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்பு மிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவ்வாறே மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்றனர்.)

இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்தி வைக்கப் பட்டு, அவை மீண்டும் நாளை 15—2—1984 புதன்கிழமையன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-05)

தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, பிப்ரவரி 15, 1984—தொகுதி 203-எண் 2
Wednesday, 15th February, 1984—Volume 203 - No. 2

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009

## பொருளடக்கம்


பக்கம்

1. வினாக்கள்—விடைகள்: 29—43

2. அறிவிப்புகள்—

(1) அவை நிகழ்ச்சி நிரல் குறித்து 44

(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் அனுப்புதல் குறித்து. 44

(3) மாற்றுத் தலைவர் பட்டியல் 44

3. ஆளுநர் உரை மீதான விவாதம். 44—98

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 98—114


143883

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1984 பிப்ரவரி 15.

மாசி 3, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Providing Street Lights in V.O.C. Nagar (East), Pammal.*

*11 Q. Thiru E. S. VENKATESAN (on behalf of Thiru S. Muthusamy): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any representation has been received during 1982 from Podu Nala Manram, V.O.C. Nagar (East) Pammal, requesting the Tamil Nadu Electricity Board, Pammal Branch Office, to provide street lights in V.O.C. Nagar (East);

(*b*) whether the Panchayat Office at Pammal has forwarded any proposal for the provision of street lights in V.O.C. Nagar (East), Pammal; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) பம்மல் நகரிய ஊராட்சி செயல் அலுவலரிடமிருந்து இதற்கான விண்ணப்பமும், தீர்மானமும் பெறப்பட்டபின் மேற்கொண்டு நடவடிக்கை மின்வாரியத்தால் எடுக்கப்படும்.

**திரு. க. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே பாம்புகள் அதிகமாக நடமாடுகின்றன. அது மட்டுமல்ல, முகமூடி கொள்ளையர்கள் அட்டகாசமும், திருடர்கள் அட்டூழியமும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே மின்சார வாரியம் இதில் எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுத்தால் நல்லது. அப்படி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாம்புகள் நடமாடுகின்றன என்பது இப்போதுதான் எனக்கு தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாம்பு பிடித்து வேண்டுமானால் ஆடும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வேண்டுமானால், பாம்பு படம் எடுத்துத்தான் ஆடும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வது போல இதிலே தலைவர் அவர்கள் சொல்வது அவ்வலியிலிருந்து தீர்மானம் போட்டு வேண்டியுள்ளது. அது சம்பந்தமாக உறுப்பினர் மொழி அவர்கள் அவையிலே கேட்டுக் கொண்டுள்ளார். அவர்கள் தீர்மானம் போட்டு அறிவுரைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** முகமூடிக் கொள்ளையர்கள் விளக்குகளை உடைத்து விடுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். தெரு விளக்குகள் ஆங்காங்கு அணைக்கப்படுகின்றன. தனிப் பிரிவின் மூலம் கட்டணத்துடன் பழுது பார்த்து சரி செய்கின்ற அளவுக்கு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அதற்கான வாய்ப்புகள் எல்லாவற்றிலும் இருக்கின்றன. இதற்காக என்று தனிப் பிரிவு அமைக்கவில்லை. எல்லாவற்றிலும் இருக்கின்ற பணியாளர்களே செய்வார்கள்.

**மின் விளக்குகள், குழல் விளக்குகள் தயாரித்தல்.**

* 12. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் —

(அ) தமிழ் நாடு மின்சார வாரியம் தனது பொறுப்பிலேயே மின் விளக்குகள், குழல் விளக்குகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?



(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இப்படி வாங்குவதால் அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஆகவே அரசே, மின்சாரவாரியமே தயாரித்தால், அரசுக்கு லாபகரமாக இருக்கும். அந்த முயற்சியை மேற்கொள்ளுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, குழல் விளக்குகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் ஏற்கனவே நிறைய இருக்கின்றன. ஆகையால் மின்சார வாரியம் இதற்காக மேற்கொண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. வாரியம் நிர்வகித்தால் அது லாபகரமாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வாரியத்தின் மீது அவர்களுக்கு இருக்கின்ற அளவு கடந்த நம்பிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே வாரியம் லாபத்திலே நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** குழல் விளக்கு தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழல் விளக்குகளை, வாரியங்கள் தமிழ் நாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பிறகே அவர்களிடமிருந்து வாங்குகின்ற எண்ணம் அரசுக்குண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டுத்தான் விளக்குகள் வாங்கப்படுகின்றன. யார் குறைவான விலையில் தருகின்றார்கள் என்று பார்த்து, அவர்களுக்குத்தான் ஆர்டர் தரவேண்டும் என்பது நமது அரசின் நியதியாகும். தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலே மட்டும்தான் வாங்க வேண்டுமென்பதை அரசு விதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த மின்சாரத் துறைக்கு ஒரு ஆண்டுக்கு பல்புகள், குழல் விளக்குகள் எவ்வளவு தேவைப்பட்டு வாங்கப்படுகின்றன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

### Maize Milling Plant, Udumalpet

* 13. *Q.* DR. T. R. JANARTHANAM (on behalf of Thiru S. J. Sadiq Pasha): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Maize Milling Plant in Udumalpet which was in good condition was sold by the Tamil Nadu Agro Industries Corporation; and

(*b*) if so, the details of the transaction?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் உடுமலைப்பேட்டையில் உள்ள மக்காச்சோள மாவாலையை இன்னும் விற்கவில்லை. சோள ரவைக்கு பொதுமக்களிடம் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், இந்த ஆலை வியாபார ரீதியில் இயங்க இயலவில்லை. எனவே இவ்வாலையை விற்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, டெண்டர்கள் அனுப்புமாறு கேட்டு தமிழக ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. டெண்டர்கள் பெற கடைசி நாள் 31—10—1983 ஆகும். வரப்பெற்ற டெண்டர்களை ஆய்வு செய்த பின் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தெரிவித்துள்ளது.

### புகையிலை ஆராய்ச்சி நிலையம்.

* 14. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் புகையிலை ஆராய்ச்சிக்கென தனி நிலையம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அதனை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம். மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி மையம், மைய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் (I.C.A.R.) இயங்கி வருகிறது.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, புகையிலை ஆராய்ச்சி நிலையம் ஏதாவது புதிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறதா ? புகை பிடிப்பதில் ஆபத்து இல்லாத நிலை இருப்பதாக ஏதாவது சொல்லியிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஆராய்ச்சி மையத்தின் நோக்கம் புகையிலையை ஆபத்தில்லாத அளவுக்குக் கொண்டு வருவது என்பதல்ல. உணவியல், தாவரவியல் ஆராய்ச்சிகளைத்தான் அது மேற்கொள்கிறது.

### சிறுவர்களைப் பணியில் அமர்த்தல்.

* 15. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுவதைத் தடை செய்யும் வகையில் புதிய சட்டம் ஏதும் கொண்டுவர செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, சிறுவர்களை வேலைகளில் அமர்த்துகிற காரியம் பல இடங்களில் நடக்கிறது. இன்னும் ஸ்கூட்டர், கார், மெக்கானிக் தொழில் துறையிலும் சிறுவர்களை இதுபோல் வேலைக்கு அமர்த்துகிறார்கள். அவர்கள் குடும்பச் சூழ்நிலையில் அவ்வாறு வேலைக்கு வருவதை தவிர்க்க முடியாதது என்றாலும், அந்தச் சிறுவர்களுக்கு உதவுகிற வகையில் கல்வி அளிப்பது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மேற்கொண்டு வருகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** சிறுவர்களைப் பணியில் அமர்த்துவது குறித்து பரிசீலிப்பதற்காக திரு. அர்ஜுன் சிங் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் ரிப்போர்ட்டு இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறதா? ஆம் எனில், அதன்மீது அரசின் மேல்நடவடிக்கை என்ன ? சிறுவர்களுக்குப் பகுதி நேரப் படிப்பும், பகுதிநேர வேலையும் அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா ?

[1984 பிப்ரவரி 15

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** திரு. அர்பான்ஸ் சிங் கமிட்டி பரிந்துரைகள் குறித்து 8—2—1979 அன்று அமைச்சரவை கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்தது :—

(அ) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தொடர்பான சட்டங்களின் விதித்துறைகளைக் கண்டிப்பான முறையில் அமல்படுத்த வேண்டும்;

(ஆ) தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைகளை சிறுவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு மாற்றும் வகையில் வேலைக் கொட்டகைகளை அந்தந்த கிராமங்களிலேயே தொழிலதிபரோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ ஏற்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்;

(இ) சிறுவர்கள் பள்ளி செல்ல போதுமான ஊக்கங்கள் அளிக்கவும் இவர்கள் வேலை செய்யும்போதே, அந்தந்த இடங்களிலேயே கல்வி கற்பிக்கவும், ஒரு விரிவான திட்டம் வகுக்க வேண்டும்.

(ஈ) தொழிலாளர்களின் சம்பாதிக்கும் திறமையை உயர்த்தும் வகையில் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்; மற்றும்

(உ) தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை உறுதிப்படுத்தவும் மற்றும் சிறுவர்களை வேலையில் அமர்த்துவதில் ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதில் ஈடுபட்டுள்ள பல்தரப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளை ஒருமுனைப்படுத்தவும் இராமநாதபுர மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகவும் தொழிலதிபர் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

அதுவுமல்லாமல், என் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவும் இரண்டு, மூன்று நாட்களாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

Thirumathi TARA CHERIAN : Mr. Chairman, will the Hon. Minister place on the table of the House the different types of action taken in different districts for alleviating the sufferings of the people so that we may know exactly what has been done? So much is being talked about conditions in Sivakasi and other places. I am not sure, though I have been there, what kind of action has been taken, how many children have come into this group and how many have been benefited.



1984 பிப்ரவரி 15]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சரவை எடுத்த முடிவைச் சொன்னேன். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அதைக் கண்காணித்துக்கொண்டு வருகிறது. என் தலைமையில் உள்ள குழுவும் கவனித்துக்கொண்டு வருகிறது. இதுவுமல்லாமல் குறைந்த அளவு என்ன வயது இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதற்காக குஜராத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. சனத் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் நானும் ஓர் உறுப்பினராக இருக்கிறேன். அந்தக் குழு முடிவு எடுத்த பின்னர், பாராளுமன்றம் பரிசீலனை செய்து எந்த வயது அளவுக்குக் கீழே உள்ள குழந்தைகளை வேலையில் வைக்கக்கூடாது என்று முடிவெடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. முறைசாராக் கல்வியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. 30 இடங்களில் சிவகாசியில் சொல்லித்தரப்படுகிறது. இரண்டு மணி நேரம் பாடங்கள் சொல்லித்தரப்படுகிறது. அந்த இரண்டு மணி நேரத்திற்கும் தொழில் அதிபர்களே ஊதியம் தருகிறார்கள். இது எல்லாவற்றிற்கும் மேலாக சத்துணவு தருகிற காரணத்தினால், பல குழந்தைகள் இப்போது வேலைக்குப் போவதிலிருந்து பள்ளிக்கு வர ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. இப்படி பல நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**திருமதி தாரா செரியன் :** தலைவர் அவர்களே, எத்தனை இரயில்வே ஸ்டேஷன்களில் பத்து பைசா எடுத்துக் கொடுத்து விட்டு சிறுவர்களை பெரிய பெரிய பளுவான பொருட்களைத் தூக்க வைக்கிறார்கள்? அதை நம் கண்ணாலேயே காண்கிறோம். சத்துணவு கொடுப்பது என்பது வேறு.

How many of the ordinary child labour are benefited? What is wrong in the Hon. Minister placing the details on the table of the House? We know what he has stated, but the people also should understand, because it is a very big all-India question. Could I ask the Hon. Minister kindly to let us know the kind of action taken in detail so that we may tell the other people about the action taken by the Government?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, இப்போது நான் சொன்னதையெல்லாம் மக்களுக்குச் சொன்னால் போதும். மேலும் அவ்வப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி அவைக்குத் தெரிவிக்கப்படும். குழந்தைகள் வேலைக்குச் செல்லுவதைத் தடுக்க என்னென்ன அரசு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களுக்குச் சொல்வதன்மூலம், பெரிய உதவி செய்தவர்களாவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 15

திரு. க. இராமமூர்த்தி : எந்தெந்தத் தொழிற்சாலைகளில் சிறுவர்களைப் பணிக்கு வைக்கும் நிலை அதிகமாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். எந்தெந்த மாவட்டத்தில் இந்த நிலை இருக்கிறது? தனியாக இதுபற்றி ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா? அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் அதிகமாகக் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தவிர்க்க ஏதேனும் ஆலோசனையை அரசு பரிசீலனை செய்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூடுமானவரையில் சிவகாசியில் உள்ள மத்தாப்பு, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில்தான் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. எனவே அங்கேயே அலுவலர்களை நியமித்து, அது பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அது போதாது என்று சொல்லி என் தலைமையிலே உள்ள குழுக் கூட்டம் நடந்தபோதுகூட, ஒரு கருத்து சொல்லப்பட்டது. அந்த நேரத்தில் ஒவ்வொரு தொழிற்சாலையாகச் சென்று, பரிசீலனை செய்த உறுப்பினர்கள், அங்கு சிறுவர்கள் வேலை செய்கிறார்களா என்று பரிசிலிக்கச் சென்ற உறுப்பினர்கள், தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு வந்த பிறகு, குழுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "இப்போதுதான் பார்த்தோம், எனவே உடனடியாக அஜெண்டாவுக்கு சப்ஜெக்ட் கொடுக்க நேரமில்லை, அடுத்த கூட்டத்திற்கான அஜெண்டாவுக்கு சப்ஜெக்ட் தருகிறோம்; அப்போது இதைப்பற்றி விவாதிக்கலாம்" என்று சொன்னார்கள். என்னோடு வந்த உறுப்பினர்கள் எல்லாம் நன்றாகச் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். எனவே அடுத்த கூட்டத்திற்கு 'சப்ஜெக்ட்' அனுப்புவார்கள். அது குறித்து விவாதம் நடந்த பிறகு, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Drinking Water to Madurai from Vaigai Dam.*

* *Q.* DR. T. R. JANARTHANAM : (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to bring drinking water to Madurai from Vaigai Dam; and

(b) if so, the details thereof?



1984 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ரூ. 32.51 கோடி செலவில் உலக வங்கியின் கடனுதவியுடன் மதுரை மாநகருக்குத் தேவையான குடிநீரை வைகை நதியிலிருந்து கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட இருக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகே 1984-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்கப்பெற்று சுமார் நாலரை ஆண்டுகளில் முடிக்கப்படும்.

### வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களைத் திறத்தல்.

17. வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் (திரு. ஏ. ஜே. தாஸ் சார்பில்) மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் (Co-optex) விற்பனை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை. ஏற்கெனவே சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையம் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலம் ஏற்பட்டு, இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு ஏற்றுமதி ஒரு கோடி ரூபாய் அளவில் இருந்தது. இந்த ஆண்டு ஏற்றுமதி சுமார் 1¼ கோடி ரூபாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அமெரிக்க நாட்டிலும், ஐரோப்பிய நாடுகளிலும் கோவாப்டெக்ஸ் துணிகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த நாடுகளிலே விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : சிங்கப்பூரில் சென்ற ஆண்டு ஒரு கடையை ஏற்படுத்தி இருக்கிறோம். அங்கிருந்து மற்ற நாடுகளுக்கு கைத்தறித் துணிகள் அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது வேறு நாடுகளில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்துகிற யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நம் நாட்டிலிருந்து சிங்கப்பூர், மால்தீவ், மொரீசியஸ், லட்சத்தீவு போன்ற இடங்களுக்குத் தனியாரால் அனுப்பப்படுகிறது. மேற்கண்ட நாடுகளில் நம்முடைய கோவாப்டெக்ஸே இயங்கிகள், கைத்தறித் துணிகள் போன்றவைகளை விற்பனை செய்வதற்கு ஆவன செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஏற்கெனவே சிங்கப்பூரில் இருக்கிற விற்பனை நிலையத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஒரு கடையை ஏற்படுத்துவதற்கு முன்பு அதற்கு ஆகிற வாடகை, பணியாளர்கள், பணியாளர்களுக்கான சம்பளம் போன்றவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, அதன் மூலம் மீதம் எவ்வளவு வரும் என்பதையெல்லாம் பார்த்துத்தான் மற்ற இடங்களில் தொடங்க முடியும். அந்தவகையில் முன்மாதிரியாக சிங்கப்பூரில் ஒன்றைத் தொடங்கியிருக்கிறோம். அதைப் பரீட்சார்த்தமாக வைத்து, அதனால் ஏற்படுகிற பலா பலன்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து அதற்குப் பிறகு மற்ற இடங்களில் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்கெனவே அரசு எடுத்துள்ள பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக இயங்குகிறது அல்லது செயல்படுகிறது என்று நான் நம்புகிறேன். கோவாப்டெக்ஸ் என்பது இன்றையதினம் அதிக அளவிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற ஒன்றாக மாறியிருக்கிறது. அதோடு கூட லாபமா அல்லது நஷ்டமா என்று பார்க்காமல், அதிக அளவில் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளில் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. மேலும் உள்ளூரிலேயே கோவாப்டெக்சை வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஒரு பக்கம் லாபம் இல்லையென்றாலும் கூட, அதிக நஷ்டம் இல்லாத வகையில் அயல் நாடுகளில் கைத்தறித் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கையை எடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஏற்கெனவே நெசவாளர் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை விற்பனை செய்வதற்கு தமிழ் நாடு மற்றும் இந்திய அளவிலே மற்ற மாநிலங்களிலே 600-க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. வருகின்ற நடப்பு ஆண்டில் சுமார் 100 விற்பனை நிலையங்கள் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன. ஆனால் மற்ற நாடுகளில் இந்தக் கடைகளைத் திறப்பது என்றால், பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இருந்தாலும் இதன் விற்பனையை உயர்த்த வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம். அதற்கேற்ற வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வெளி நாடுகளில் விற்பனை நிலையங்களைத் துவக்குவது என்றால், சிரமங்கள் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் வெளி நாடுகளில் விற்பனையாளர்களை நியமிக்கலாம் அல்லவா ? அதோடு கூட வெளி நாடுகளில் எந்தமாதிரி நிறங்களை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப துணிகளைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மற்ற நாடுகளில் உள்ள மக்கள் எதை எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக முன்னாள் கைத்தறி அமைச்சர், கோவாப்டெக்ஸ் தலைவர், இயக்குநர் மற்றும் தொழில் நுட்ப அதிகாரி இவர்கள் எல்லாம் வெளி நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, இப்போதே தனியார் மூலமாக, ஏஜென்சி மூலமாக மற்ற நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் அரசின் சார்பில் அவ்வாறு அனுப்புவதில்லை.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை.

*** 18. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(இ) ஏற்கெனவே சுமார் 200 கோடி ரூபாய் செலவில் புகளூரில் ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாளும், 40 ஆயிரம் டன் காகிதமும் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்று உருவாகியுள்ளது. அந்தத் தொழிற்சாலை இந்த ஆண்டு டிசம்பரில் உற்பத்தியைத் துவங்கும். அது தவிர தற்போது புதிதாக காகித ஆலை ஏற்படுத்துகிற திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** முதல் காகித உற்பத்தித் தொழிற்சாலையின் உற்பத்தி பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மேற்கொண்டு ஆண்டுக்காண்டு எவ்வளவு உற்பத்தி அதிகரிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இப்போது தான் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. முதல் உற்பத்தி 1984 டிசம்பர் மாதத்தில் தொடங்க இருக்கிறது. கெப்பாசிட்டி அளவு ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாளும், அது போல் 40 ஆயிரம் டன் எழுது தாளும் ஆகும். இது தான் அதனுடைய 'மாக்சிமம் கெப்பாசிட்டி'.

## சீர்திருத்தப்பள்ளிகள்.

* 19. வினா.—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிகள் எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) அப்பள்ளிகளில் சேர்க்கப்படும் இளங்குற்றவாளிகளின் வயது வரம்பு என்ன ?

(உ) இளங்குற்றவாளிகளின் பிற்கால நல்வாழ்வுக்கு அவை எவ்விதத் தில் பயன்படுகின்றன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ) ஆம். விரிவான அறிக்கை @ அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.50)

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்டது 'பார்ஸ்ட்டல்' பள்ளிகளைப்பற்றியதாகும். ஆனால் இங்கே பதில் சொல்லப்பட்டிருப்பது ஜுனியர் மற்றும் சீனியர் சர்ட்டிபைடு பள்ளிகளைப் பற்றியதாக இருக்கிறது. இருந்தாலும் பரவா யில்லை. இந்தப் பள்ளிகளில் பயின்று பயிற்சி பெற்றவர்களில் சிறப்பான முறையில் இருப்பவர்கள் எத்தனை பேர் ? அவர்களில் சிலரையாவது இங்கே குறிப்பிட முடியுமா ?

@ 115-117 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய புள்ளிவிவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டிருக் கிற விவர அறிக்கையில் குற்றம் புரியாதவர்கள்கூட இத்தகைய பள்ளிகளில் சேர்க்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே. எந்தெந்த நிலையில் குற்றம் புரியாதவர்கள் இந்தப் பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தற்போது சில பெண்கள் தங்களின் பாதுகாப்பிற்காகக் கூட இத்தகைய இல்லங்களுக்கு வருகின்றார் கள். அனாதைகளாக இருக்கிற பெண்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தங்களை இத்தகைய இல்லங்கள் அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களாகவே இங்கே வந்து தங்கி உதவிகளைப் பெறு கிறார்கள். எனவே அந்த அடிப்படையில்தான் குற்றம் புரியாதவர்களும் இந்தச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறோம். குற்றம் புரிந்தவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் காவல் துறையின் மூலம் நீதிமன்றங்களின் முன் கொண்டு செல்லப் பட்டு, பின்னர் கோர்ட்டு ஆணைகளின் மூலமாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப்பள்ளிகளில் பயிலும் சிறுவர்கள் எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கும், வாழ்க்கையில் சிறப்பாக முன்னேற்றம் அடைவற்கும் உரிய வகையில் பகுத்தறிவுப் பிரச்சாரக் கருத்துக்களைச் சொல்லிக் கொடுக்கும் வகுப்புகள் அங்கே நடத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மேலவைத் தலைவர் அவர் களே, அவர்கள் எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் உயர்வதற்கான வழிவகை களைத்தான் அரசு ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு பொதுக் கல்வியையும் தொழிற் கல்வியையும் தற்போது அவர்களுக்குக் கொடுத்து வருகிறது. பொதுக் கல்வியில் ஆர்வமும் நாட்டமும் உள்ளவர்களுக்கு மேல்நிலைக் கல்வியும், பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிற்கும் வழிவகைகள் செய்து தரப்படுகின்றன. தொழிற் கல்வியில் ஆர்வம் உள்ளவர்களுக்கு தச்சு வேலை, தையல் வேலை போன்ற பல்வகையான தொழில்களில் பயிற்சி கொடுக்கப்பட்டு எதிர்காலத்தில் அவர்கள் பொருளாதாரத்தில் தங்களையே நம்பி இருக்கக்கூடிய வகையில் இந்த அரசு அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறது.

[1984 பிப்ரவரி 15

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தொழிற் கல்வி பெற்ற மாணவர்களுக்கு பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையிலோ அரசின் வேறு திட்டங்களின் அடிப்படையிலோ தனியாக வங்கிகள் மூலமாகவோ மற்ற அரசு நிறுவனங்கள் மூலமாகவோ கடன் தருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தந்து அவர்கள் தங்களின் சொந்தக் கால்களிலேயே நிற்பதற்கான வழியை அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் அரசு ஏதேனும் அமைப்பு மூலமாகச் செயல்படுகிறதா? அப்படியானால் இது வரை எத்தனை மாணவர்கள் அத்தகைய உதவி பெற்றிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, தொழிற் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசு நிறுவனங்களிலும் போக்குவரத்து நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அவர்கள் தன்னிச்சையாகத் தானே தொழில் நடத்துவதற்கு வேண்டிய வாய்ப்புகளை உருவாக்க வங்கிகள் மூலமாகக் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டதா என்று கேட்டால், அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. அதைப்போலவே எவ்வளவு பேர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற விவரமும் இப்போது இல்லை. ஆனால் அவர்கள் தாமாகவே தொழிலை நடத்தக் கூடிய அளவுக்கு முன்வருவார்களானால், அவர்களுக்கு நிச்சயமாக உதவுவதற்கு அரசு முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** தலைவர் அவர்களே, குற்றவாளிகளாக இருக்கிறவர்களைச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்பது சரி. ஆனால் அமைச்சர் அவர்கள் அளித்த பதில் அபயம் கேட்டு வருகிறவர்களையும் அதே பள்ளிகளில்தான் சேர்த்துக்கொள்கிறார்கள். அங்கே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எனவே அபயம் கேட்டு வருகிறவர்களையும் அதே பள்ளியில் வைத்து, இரண்டு பேர்களும் ஒரே இடத்தில் சேர்ந்து இருக்கும்படி செய்வது நல்லதல்ல என்பதால் இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஆண்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வழக்கு மன்றங்களின் மூலமாகத் தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பெண்கள் மட்டும்தான், அவர்கள் அனாதைகள் என்பதன் காரணமாக, அவர்களுக்குப் பாதுகாப்புக்காக மட்டுமே, வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் அங்கே அரவணைக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 15]

**மன்னார்குடியில் பனைப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.**

***வினா எண் 20.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறுவப்படும் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இச் செயற்குறிப்பு பற்றி சமூக நல இயக்குனர், கதர் மற்றும் கிராம தைத்தொழில் வாரியத்துடன் கலந்து ஆலோசித்து வருகிறார்.

(இ) விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வெளி நாட்டார் விரும்புகிற வகையில் பனை ஓலையிலே அழகிய வண்ணங்களினால் ஆன கூடைகள் தயாரிக்கிற முயற்சி போன்றவை மேற்கொள்ள இருக்கிறார்களா ? அதோடு பனங்கற்கண்டு சுவையானது என்கிறார்கள். அதை அழகிய பெட்டிகளிலே விற்கின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மேலவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் பனைப் பொருட்கள் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படுவது குறித்தது. மற்ற இடங்களைப் பற்றிய விவரம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1984 பிப்ரவரி 15

## 2. அறிவிப்புகள்.

### (1) அவை நிகழ்ச்சி நிரல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் அலுவல்கள் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் அனுப்புதல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

### (3) மாற்றுத் தலைவர் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 6-வது விதியின் கீழ் மேலவையின் 65-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் —

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா.
3. திரு. எ. ஜெ. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

### ஆளுநர் உரை மீதான விவாதம்.

**மண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை திரு. வலம்புரி ஜான் அவர்கள் முன்மொழிவார்கள்.

**திரு. வலம்புரி ஜான் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

" 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர் ".

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

---

@ 117-152 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 பிப்ரவரி 15]

**திரு. சி. இராமலிங்கம் :** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர் ".

**திரு. வலம்புரி ஜான் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்ற அவைகளில் நடைபெறுகின்ற ஆளுநர் உரை என்பது ஒரு சரிகை வேலைப்பாடுகள் அமைந்திருக்கிற சம்பிரதாயம் என்பதைப் போல பொதுவாக ஒரு தவறான கருத்து நிலவி வருகிறது. பொதுவாக ஆளுநர் உரை என்பது இந்த நாட்டினுடைய அரசியல் சட்ட வரலாற்றை நன்கு உணர்ந்தவர்கள் இதுவரைக்கும் ஏற்றுக்கொண்டிருப்பதைப்போல, தனி ஒரு அலங்கார அமைப்பு என்று அல்லாமல், அதற்கு நேர் மாறாக ஆட்சிக் கட்சியாக இருக்கின்ற ஒன்று தனது சாதனைகளை, வேலைத் திட்டங்களை விரிவாக்கவும், வெளிப்படுத்தவும், அதேநேரத்தில் தனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற வேலைப்பாடுகளை விளக்கமாக எடுத்துச் சொல்லவும், இந்த நாட்டினுடைய அரசியல் சட்டத்தில்—சட்ட வரலாற்றில் சட்டமன்றங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு மாபெரும் சரித்திரச் சந்தர்ப்பம் என்று அதை அழைக்க வேண்டும். அப்படி எண்ணிப் பார்க்கிறபோது, இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிற ஆளுநர் உரையிலிருந்து சில குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரம் சுட்டிக்காட்டுவது எனது கடமையாகிறது. பொதுவாக வறட்சி என்பது ஏதோ இன்றைக்கு நேற்று நிகழ்வது என்பதல்ல. இந்த ஆண்டில், குறிப்பாக இந்த நிதி ஆண்டில் நடைபெற்றிருப்பதைப் பார்க்கிறபோது, ஒரே நிதியாண்டில் அதிகமான வறட்சி, அதிகமான வெள்ளம், அதன் காரணமாக சீரழிவு என்பது அடுத்தும் தொடுத்தும் நிகழ்ந்திருப்பதைப் பார்க்கிறோம். பஞ்சம், பற்றாக்குறை என்பது ஒரு நாட்டைப் பொறுத்தவரை, ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரை, புதிதான ஒன்றல்ல ஏற்கெனவே தமிழகத்தினுடைய நீண்ட நெடிய வரலாற்றில், தாது வருடம் என்கிற ஒரு குறிப்பிட்ட வருடத்தில் தாது வருடப் பஞ்சம் என்று நடந்து, இந்த நாட்டில் எழுதப்பட்ட இலக்கியம், கவிதை, நாடகம் இத்தனையிலும் தாது வருடப் பஞ்சம் என்றே குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள பாடல்களிலே தாது வருஷப் பஞ்சத்தைப் பற்றி நிரம்பச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தாது வருஷத்தில் இந்த நாட்டில் உருவான

[திரு. வலம்புரி ஜான்] [1984 பிப்ரவரி 15

பஞ்சத்தின் காரணமாக எவ்வளவு தவிப்புக்கு இந்த நாட்டு மக்கள் ஆளாகி
யிருக்கிறார்கள் என்பதையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்கிறார். அதைப்
போலவேதான் சிதக்காதி வாழ்ந்த நாட்டில் எப்படி கொடுமையான
பஞ்சத்துக்கும் குடிநீர் வறட்சிக்கும் மக்கள் ஆளானார்கள் என்பதை
இந்த நாட்டு இலக்கியங்கள் எடுத்துப் பேசுகின்றன. குறிப்பாக சிதக்காதி
யைப் பற்றி வருகிற பாடல் ஒன்றில்—

'ஓர் தட்டிலே பொன்னும்
ஓர் தட்டிலே நெல்லும்
ஒக்கவிற்கும் கார் தட்டிய பஞ்சகாலத்திலே
தங்கள் காரியப்பேர் ஆர் தட்டினும்
தட்டு வாராமலே—அன்னதானத்துக்கு
மார் தட்டிய துரை
மால் சிதக்காதி வரோதயனே."
என்று வருகிறது.

(முற்பகல் 10-00)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை).

ஆகவே இந்த நாட்டில் எவ்வளவு பஞ்சம் வந்த போதிலும், எவ்வளவு வறட்சி
என்று பார்த்தாலும், இந்த நாட்டில் அந்தந்தக் கால கட்டத்தில் வறட்சியும்
பஞ்சமும் மாறி மாறி வந்து கொண்டுதான் இருக்கின்றன. நான் அதை
எடுத்துச் சொல்வதற்குக் காரணம், ஏதோ மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவர் இந்த ஆட்சிக்கு வந்த பின்னாலேதான் இந்த நாட்டிலே மாபெரும்
வறட்சி வந்து விட்டதைப் போலவும், கண்மாய்கள் வற்றி பாழடைந்து
விட்டதைப் போலவும், மக்கள் தண்ணீருக்கு ஆலாய்ப் பறப்பதைப் போலவும்,
கடுமையான வெள்ளம் வந்து விட்டதைப் போலவும், மக்களெல்லாம்
அவதிப்படுவதைப் போலவும் இன்றைக்குச் சிலபேர் சொல்லிக் கொண்டிருக்
கிறார்களே என்பதற்காகச் சொல்கிறேன். அதைப் போலவே சில பத்திரிகை
களும் பல்லவி பாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இவை
களுக்குப் பிறகும்கூட இந்த ஆட்சி, தொடர்ந்து தொய்வில்லாமல் நடந்து
கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். நாட்டின் வரலாற்றைப் பார்த்தால்,
தொடர்ந்து வறட்சியும் பஞ்சமும் வெள்ளமும் மாறி மாறி வந்து கொண்டுதான்
இருக்கின்றன. ஆனால் எந்த ஆண்டும் இருந்ததைப் போல இந்த நிதியாண்
டில்தான், சிறப்பான அம்சமாக கடுமையான வறட்சியும் வந்தது, கொடுமை
யான வெள்ளமும் வந்தது.



1984 பிப்ரவரி 15] [திரு. வலம்புரி ஜான்]

அந்தக் கடுமையான வறட்சியையும் கொடுமையான வெள்ளத்தையும் இந்த அரசு சந்தித்து, அதற்கான துயர் துடைப்புப் பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், எதிர்க் கட்சிகள் குறை சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், எந்த மக்களுடைய துயரைத் துடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்ததோ, அந்த மக்கள் அவர்களின் குற்றச்சாட்டுகளைக் கேட்க மறுத்து விட்டார்கள். வறட்சிப் பணிகள் முடிவடைவதற்கு முன்னரே, வெள்ளம் அதிகமாக வந்தது. அந்த வெள்ளத்தில் விழுந்து கிடக்கிற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கிற அவசியம் இந்த அரசுக்கு வந்தது. முதன் முதலாக இந்த நாட்டில் ஒரு நாட்டு இராணுவம் துப்பாக்கி ஏந்துவதற்குத்தான் இருக்கிறது என்ற எண்ணத்தை மாற்றிக்கொண்டு, துப்பாக்கி ஏந்துவதற்காக மட்டுமல்ல, மக்களுடைய துயரத்தைத் துடைக்கக்கூட இராணுவம் இருக்கிறது என்பதை, தஞ்சை போன்ற வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடத்திலுள்ள மக்கள் உணர்ந்தார்கள். ஆகவே ஒன்றைச் சொல்வேன். குடி தண்ணீர் வறட்சி என்று பார்க்கிறபோது, குடிதண்ணீர் வறட்சி காரணமாகவே கொந்தளிப்பு வந்து புரட்சி பூகம்பமாக வெடித்து, மாறிப் போன ஆட்சிகளுக்கு உலகத்திலே வரலாறு உண்டு. எதியோப்பிய நாட்டை ஆண்டு கொண்டிருந்த ஹெய்லிசலாசி என்ற மன்னன் அப்படிப்பட்ட குடிதண்ணீர் பிரச்சினைக்கு மறுமொழி சொல்ல முடியாமல்தான் கோரமான முடிவுக்கு ஆளாகினான்.

இந்த அரசுக்கு மக்களிடத்தில் செல்வாக்கைப் பார்த்தால், இந்த ஆட்சிக்குத் தலைமை தாங்குகிற டாக்டர் புரட்சித் தலைவருக்கு இருக்கிற செல்வாக்கைப் பார்த்தால், கொடுமையான வறட்சிக்கு ஆளாகியிருந்தாலும்கூட, மாபெரும் கிளர்ச்சிக்கான காரணம் இருந்தும் கூட, இந்த நாட்டிலே இருக்கிற சாமானிய மக்கள், சாதாரண மக்கள், "மழை வராவிட்டால் எம்.ஜி.ஆர். என்ன செய்வார்?" என்று தான் சொன்னார்கள். அதை சாதாரண ஒரு வார்த்தை என்று கருதவில்லை. அதற்குள்ளே ஒரு வரலாறே இருக்கிறது என்பதைக் காண்கிறோம். அதிலே வாழ்க்கைச் சரித்திரம் இருக்கிறது. ஒரு கொடுமையைத் தாங்கக்கூடிய அளவுக்கு பழக்கமில்லாத மக்களாக இருந்தாலும்கூட, கடுமையான குடிநீர்ப் பஞ்சம் வந்த பின்னாலும்கூட, அரசு கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும்கூட, அதையெல்லாம் பற்றிக் கவலைப் படாமல் அந்த நாட்டை ஆளுகிற தலைவரின் மேல் இருக்கிற நம்பிக்கையின் காரணமாக அந்தத் துன்பத்தையும், துயரத்தையும் போக்க நாமும் தோள் கொடுக்க வேண்டுமென்கிற அளவுக்கு பாதிக்கப்பட்ட மக்களே இருந்தார்கள்.

காரணம், இதே மாதிரியான குறைந்த அளவுள்ள கொடுமைகள் நடந்த நாட்டிலெல்லாம் ஆட்சிகள் வீழ்ந்ததை நாம் பார்க்கிறோம். மக்கள் கிளர்ந்து எழுந்ததையும் பார்க்கிறோம். நான் அதைத்தான் எதியோப்பியாவில் ஏற்பட்ட புரட்சி என்று முன்பு குறிப்பிட்டேன். இங்கே மக்களுக்கு இருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கையின் அடையாளமாகத்தான் இந்த அளவுக்கு வெற்றி கிடைத்ததையும் பார்க்கிறோம். சென்னை நகரம் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்திற்கு ஆளாகியிருந்தபோது, எப்படி இராணுவ நடவடிக்கை போல், தெருவுக்குத் தெரு, சந்துக்குச் சந்து லாரிகள் மூலம் குடிதண்ணீர் வினியோகிக்கப்பட்டது என்பதை இதயம் உள்ளவர்கள் மனச்சாட்சியுடன் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் குற்றம் சொல்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட ஒருசிலர், சாவா, அது மர்மக்கொலை, தீயா, அது வைப்புத் தீ, மழை விழுகிறதா, வெள்ளம் வந்து விட்டது, மழை வரவில்லையா, எங்களுக்குத் தெரியுமே, இந்த நாட்டை ஆளுவது கிங்கரர்கள் அல்லவா, அதுதான் மழையில்லை, இங்கே நடப்பது அநியாய ஆட்சி என்று எவ்வளவு இழித்தும் பழித்தும் சொன்ன பிறகும், ஆட்சியை ஒன்றும் செய்ய முடியவில்லை. அரசியலில் எதிர்க் கட்சி ஆளும் கட்சியின் நிழலாக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். பிரிட்டானிய பாராளுமன்ற முறை அவ்வாறு இருப்பதாகச் சொல்கிறார்கள். எதிர்க் கட்சி அமைச்சரவையின் நிழல் என்பார்கள். அப்படி உதவியாக இருக்க வேண்டிய எதிர்க் கட்சி, குற்றம் காண்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த நேரத்தில் அரசாங்கம் அதைப் புறந்தள்ளி, மக்களுக்காக மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறதென்பதை ஆளுநரின் உரை மிக அருமையாக உணர்த்தியிருக்கிறது.

அடுத்து, ஆளுநர் உரையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஈழத் தமிழர்கள் பற்றித்தான். உலக வரலாற்றிலேயே மனித நாகரிகம் கண்டிராத அநாகரிகப் படுகொலை ஈழத்தில் நடந்தது. இரண்டு நாடுகளுக்கிடையிலே இருக்கின்ற ஒரு பிரச்சினையை, எப்படி தீர்க்க வேண்டுமென்பதிலே இந்த அரசு தீவிரம் காட்டுகின்ற காரணத்தால், அது ஒரு நாட்டுக்குள்ள பிரச்சினை என்பதிலே இருந்து, இரண்டு நாடுகளுக்குள்ள பிரச்சினை என்று ஆகி, பிறகு அதை சர்வதேச மன்றத்திலே கொண்டு வந்ததன் மூலமாக அது ஒரு சர்வதேசப் பிரச்சினை என்ற அளவுக்கு வந்து விட்டிருக்கிறது. ஆகவே உள்நாட்டுப் பிரச்சினை இரண்டு நாடுகளுக்குள்ள பிரச்சினை என்று வளர்ந்து இன்றைக்கு சர்வதேச பிரச்சினை என்று வளர்கின்றபோது, உலகத்திலே இருக்கின்ற நாடுகள் தலையிட்டு, அதிலே சங்கடங்கள் உருவாக்கி விடாமல், அதே நேரத்தில் பல நாடுகள் இந்தப் பிரச்சினையைப் பற்றி





தெரிந்துகொண்டால், இந்தப் பிரச்சினைகள் தீர்வதற்கு வழி பிறக்கும் என்ற அடிப்படையில் காரியங்களை ஆற்றியிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வரலாற்றில் தன்னுடைய பணியைச் செவ்வனே செய்திருக்கிறது என்பதற்காக எதிர் காலத்திலும் எல்லா மக்களாலும் நினைவு கூரப்படும். அது மாத்திரமல்லாமல், ஐ. நா. மன்றத்திலே, இந்த அரசாங்கத்தினுடைய அங்கமாக இருக்கின்ற மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக இந்தப் பிரச்சினையின் மனிதாபிமான கூறுகளை எடுத்துச் சொல்லி ஸ்ரீலங்கா பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணுவதற்கு இந்த அரசாங்கம் முயன்றிருக்கிறது.

இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகளை, கட்சி எல்லைகளை மீறி, கட்சி எல்லைகளைக் கூட மறந்து, கோடுகளைத் துறந்து, அவர்களை எல்லாம் எப்படியாவது ஒன்றிணைக்க வேண்டுமென்பதற்கு, இந்த அரசின் முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகளை நாம் நன்றாக அறிவோம். அதே நேரத்தில், ஆளுநர் அவர்களுடைய உரையில் கண்ணில் ஒற்றிக் கொள்வதுபோல இருக்கிறது. ஒரு வரி காணப்படுகிறது. ஒரு வார்த்தை காணப்படுகிறது. அது சாதாரண வார்த்தையாக சில பேருக்குத் தோன்றலாம். தராசுத் தட்டைக் கீழே வைத்துப் பார்ப்பவர்கள் எவருக்கும் எடை தெரியாது. ஆனால் தராசுத் தட்டை மேலே உயர்த்திப் பார்த்தால், எடை நன்றாகத் தெரியும். ஒரு வார்த்தை என்று அதை விட முடியாது. இதிலே குட்டிமணி, தங்கதுரை என்று வருகின்ற இடத்தில் ஒரு வார்த்தை வருகிறது. 'விடுதலை வீரர்களான குட்டிமணி தங்கதுரை' என்று வருகிறது. அந்த 'விடுதலை வீரர்களான' என்பதற்குப் பதிலாக வேறு எந்தச் சொல்லையும் அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அதிலேகூட மெத்த கவனமாக, மெத்த கவனமாக என்றால், அதற்குள்ளே ஒரு வரலாறல்லவா வந்து விடுகிறது. விடுதலை வீரர்கள் என்று அவர்களை ஆளுநர் அவர்கள் உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கை அறிவிப்புத் திட்டம் அங்கீகரித்தது என்றால், வரலாற்றுக்கு இந்த அரசு, இந்த அரசினுடைய முதலமைச்சர் அவர்கள் கருணை மனம் படைத்திருக்கின்ற பொன்மனச் செம்மல் தலை வணங்குகின்றார் என்று அர்த்தம். அந்த விடுதலை வீரர்கள்' என்ற சொல்லுக்குள் எவ்வளவு வரலாறு பொதிந்திருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சான்றோர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே அன்றைக்கு நடந்த அந்தக் கலவரம், இனப் படுகொலை அன்றைக்கு நடைபெற்ற காட்டுமிராண்டித்தனமான, வெறித்தனமான செயல்கள்தான் என்று இல்லாமல், அந்த நிகழ்ச்சியிலே பாதிக்கப்பட்ட விடுதலை

[திரு. வலம்புரி ஜான்] [1984 பிப்ரவரி 15

விரர்களுக்கு இன்றைய வரைக்கும் தொடர்ந்து தொய்வு இல்லாமல் காரியமாற்றிக்கொண்டிருக்கின்றது இந்த அரசு. இந்த விடுதலை முயற்சி ஒரு நாள் முற்றுப் பெறும், மிகச் சிறப்பாக முற்றுப்பெறும். தமிழர்களின் நலன்களை முற்றுப்பெறச் செய்ய முடியும் என்று கட்டியம் கூறுவது போல அமைந்திருக்கிறது.

அதைப்போலத்தான், பயிர்க் காப்புறுதித் திட்டம் பற்றி ஆளுநர் உரை விரிவாகச் சொல்லவில்லை என்றாலும், விளங்கச் சொல்கிறது இதுவரைக்கும் நெல் பயிருக்கு மட்டும்தான் பயிர்க் காப்புறுதித் திட்டம் என்று இருந்தது. இப்போது எல்லாப் பயிர்களுக்கும் வழங்கப்படுகிறது. நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே குற்றம் சொல்வதைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டேன். ஆனால் நோபல் பரிசு பெற்ற விவசாய விஞ்ஞானி, திரு. பரோன் தோத் என்பவர் அவருடைய கருத்தினைச் சொல்லியிருக்கிறார். நான் அண்மையிலே அதைப் படித்தேன். இரண்டு திங்களுக்கு முன்னால் அவருடைய கருத்தைத் தாங்கியிருக்கின்ற 'ஸ்மால், பியூட்டிபுஃல்' என்ற அழகான புத்தகம் வந்திருக்கிறது. அந்தப் புத்தகத்திலே காணப்படுகின்ற கருத்தை எடுத்துச் சொல்வது தகுதியுடையது என்று நான் கருதுகிறேன். அதிலே அவர் குறிப்பிட்டிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிலே இருக்கின்ற வேளாண் குடிமக்கள், விவசாயிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நோபல் பரிசு பெற்ற ஒரு விவசாய விஞ்ஞானி என்று பாராட்டுகின்ற திரு. புரோன் லோக் அவர்கள் "பிலிப்பைன்ஸ் நாட்டு விவசாய மக்கள், வேளாண்மையிலே வளர்ந்திருக்கின்ற அமெரிக்க நாட்டிலே உள்ள விவசாய மக்கள் ஏற்றுக்கொள்ளாத பூச்சி மருந்துகள் உபயோகிப்பதையும் ஒப்புக்கொள்கின்ற அளவுக்கு மனப்பக்குவம் உள்ளவர்களாகத் தமிழகத்திலே உள்ள விவசாயக் குடிமக்கள் இருக்கின்றார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இருக்கின்ற வேளாண் குடிமக்கள் உலகத்திலேயே சிறந்தவர்கள் என்று சொல்வது இங்கே இருக்கின்ற விஞ்ஞானிகூட அல்ல, நோபல் பரிசு பெற்றிருக்கின்ற விவசாய விஞ்ஞானி. உலகத்திலேயே விவசாயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கின்ற ஒரு விஞ்ஞானி என்று பாராட்டப்படுகின்றவர் சொல்கின்றார். அவர்கள் வேளாண்மையில் வளர்ந்திருக்கின்ற நாடுகளில் ஏற்றுக்கொள்ளாத பொறுக்கு விதைகளையும் பூச்சி மருந்துகளையும் ஏற்கின்ற அளவுக்கு மனப்பக்குவம் உள்ளவர்கள் தமிழ் நாட்டு விவசாயிகள் என்று சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையிலே புரட்சியை வேகமாக முடுக்கி விடுகின்ற அளவுக்கு ஆற்றல் பெற்றது தமிழ் நாடு அரசாங்கம் என்று, இங்கே இருக்கின்ற அரசாங்கத்தை, அகில இந்திய



1984 பிப்ரவரி 15] [திரு. வலம்புரி ஜான்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை, அந்த அரசாங்கத்திலே நிருவகிக்கப்படுகின்ற விவசாயத் துறையை, இந்தத் துறையின் மூலமாக சேர்க்கப்பட்டு மாபெரும் புரட்சிக்கு தங்களை ஒப்படைத்துக் கொள்கின்ற தமிழ் நாட்டு உழவர்களை, அமெரிக்க நாட்டிலேயிருந்து நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஒருவர் பாராட்டுவதைப் பார்க்கிறோம். அவர்கள் பாராட்டுகின்றார்கள். பாராட்டுகின்ற நல்ல மனம் எங்கோ தூரத்திலே இருக்கிறதே என்பதுதான் நமக்கு இருக்கின்ற கவலையாக இருக்கிறது.

அதற்கு அப்பாலே, வீட்டிற்கு ஒருவருக்கு வேலைத் திட்டம். அது பற்றி ஆளுநர் அவர்கள் உரை எப்படி புள்ளிவிவரங்களைச் சேகரிக்கின்றார்கள், எப்படி அந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறது என்பதையும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறது. நான் அண்மையிலே படித்தேன். தன்னுடைய மகன் வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குச் சென்று தன்னுடைய கார்டைப் புதுப்பிக்கச் செல்கின்றான். அந்த மகனைப் பார்த்து தந்தை சொல்கிறார். 'மகனே, வேலைவாய்ப்பு நிறுவனத்தில் உன்னுடைய கார்டைப் புதுப்பிக்கின்ற நேரத்தில் என்னுடைய கார்டைக்கூட எடுத்துப் போக மறந்து விடாதே' என்று சொல்கிறார்.

(முற்பகல் 10-10)

தந்தைக்கும் மகனுக்கும் ஒரே நேரத்தில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் கார்டுகளைப் புதுப்பிக்கிற அளவிற்கு சூழ்நிலைகள் இருக்கலாம். ஒரு நாட்டில்—வளர்ந்து வருகிற ஒரு நாட்டில் தவிர்க்க முடியாத பிரச்சினையாக அது இருக்கிறது. ஆனால் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்பது ஏதோ கவர்ச்சிகரத் திட்டமாக இருந்தாலும், இந்த நாட்டுக்கு உண்மையிலேயே நலம் பெறும் திட்டமாக இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவாக்க புள்ளிவிவரங்களை அரசு சற்றுக் கவனத்தோடும் கவலையோடும் சேகரித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

போக்குவரத்துத் துறையைப்பற்றி ஆளுநர் உரை அருமையாகக் குறித்திருக்கிறது. அதிலே மகுடமாக இருப்பது மத்தியத் திட்டக் குழுவின் பாராட்டைப் பெற்றிருப்பதாகும். இந்தத் துறை குறித்து அதிகமாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றை மட்டும் குறிக்க வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டு போக்குவரத்துத் துறை எவ்வளவு வேகமாக மாறியிருக்கிறது, வளர்ந்திருக்கிறது என்பதற்குப் புள்ளிவிவரங்கள் தேவை இல்லை. அதற்குள்ள அடிப்படைக் காரணம் நம் மாநிலத்தில் பேருந்துகள் ஓடுகிறபோது அசைகின்றன, ஆனால் மற்ற மாநிலங்களில் ஓடுகிறபோது அல்ல,

நிற்கிறபோதே அசைகிற பேருந்துகளை வைத்திருக்கிறார்கள். நான் அதற் காக அவர்களைக் குறைத்துச் சொல்லவில்லை. அந்த மாநிலங்களில் அப்படிப் பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் செயல்படுகிற நேரத்தில், நம்முடைய மாநிலத்தில் மத்தியத் திட்டக் குழுவினுடைய பாராட்டைப் பெறுகிற நிலையில் இருக்கிறோம்.

அதைப்போலத்தான் இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் குடும்ப நலத் திட்டம் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது, நிர்ண யிக்கப்பட்ட இலக்கை எட்டியிருக்கிறது என்பதை ஆளுநர் உரை அருமை யாகத் தெரிவித்திருக்கிறது. நான் இதை வற்புறுத்திச் சொல்வதற்குக் காரணம், 'ஃபேமிலி பிளானிங்' என்பது இரண்டு சொற்களாக இருக்கலாம். 'ஃபேமிலி' என்ற சொல்லும், 'பிளானிங்' என்ற சொல்லும் ஆங்கில மொழியில் நெடுங்காலமாக இருந்துவருகிற சொற்களாகும். ஆனால் அந்த இரண்டு சொற்களையும் 'ஃபேமிலி பிளானிங்' என்று முதன்முதலாகச் சேர்த்து உரு வாக்கியவர் திருமதி மார்கரெட் சாண்டர் என்கிற அமெரிக்க அம்மையார் ஆவார்கள். இந்த இரண்டு சொற்களையும் இவ்வாறு சேர்த்து உருவாக்கிய காரணத்திற்காக அந்த அம்மையார், மனிதனைச் சந்திரனுக்கு அனுப்புகிற அளவுக்கு அறிவியலில் முன்னேற்றம் பெற்றிருக்கிற அந்த அமெரிக்க நாட்டில் கைது செய்யப்பட்டார்கள், கண்டிக்கப்பட்டார்கள். மக்கள் எல்லாம் அவர் மீது சீறிப் பாய்ந்தார்கள். இப்படி விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனை புரிந் திருக்கிற அமெரிக்க நாட்டில் 'ஃபேமிலி பிளானிங்' என்ற சொல்லை உருவாக்கிய அம்மையார், கண்டனத்திற்கும் கடுமையான சொல்லுக்கும் ஆளாகி இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இங்கேயுள்ள மக்கள் புரா ணத்தை நம்புகிறவர்கள், இதிகாசங்களை நம்புகிறவர்கள். பிற்போக்குச் சேற்றிலே புதைந்து கிடக்கிறவர்கள் என்றெல்லாம் பழிக்கப்படுகிற ஒரு நாட்டில், குடும்பநலத் திட்டம் தன்னுடைய இலக்கை எட்டியுள்ளதோடு, அதையும் தாண்டிச் செல்லும் அளவிற்கு, அதற்கும் அப்பால் எட்டிப் பார்க்கும் அளவிற்கு இங்கே புரட்சி நடக்கிறது என்றால், இந்த அரசு, இந்த அரசைச் சார்ந்த அதிகாரிகள், எந்த அளவிற்கு இதிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நாடு. குழந்தைகள் எல்லாம் ஆண்டவன் தந்தவை என்ற மூட நம்பிக்கை முழுமையாக நிறைந்திருக்கிற நாடாகும். இந்த நாட்டிலேதான் குடும்பநலத் திட்டம் இந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக் கிறதென்றால், அரசு இயந்திரம் எந்த அளவிற்கு அசுரத்தனமாக இருக்கிறது, இந்தக் கருத்துப் புரட்சி எந்த அளவிற்கு கிராமங்களைத் தொட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.





அதேபோல், இந்த ஆளுநர் உரையில் மகுடமாக, இதயத்திலே விழுந்திருக்கிற வரலாற்று விதையாக நான் கருதுவதெல்லாம், கட்டிடப் பணியாளர்களுக்குத் தந்திருக்கின்ற, செய்யப்பட்டிருக்கின்ற சட்ட மாற்றங்கள். கட்டிடப் பணி யாளர்கள் என்பவர்கள் பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு 'ஆர்கனைசுடு லேபர்' என்று சொல்ல இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந் தாலும்கூட அப்படிப்பட்ட சாமானியர்கள், அப்படிப்பட்ட சாதாரணமான வர்கள் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் விழா கொண்டாடுகிறார்கள். விருந்து வைத்து உள்ளே போகிறார்கள். ஆனால் இவர்களோ மறைக்கப்படுகிறார்கள். இவர்கள் அடிபட்டுக் கீழே விழுந்துவிட் டால், இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அடிபட்டுவிட்டால், இவர்கள் வாழ்க்கையிலே அவலம் சூழ்ந்துவிடுகிறது. இந்தச் சூழ்நிலையை இந்த அரசு மாற்றியிருக்கிறதென்றால், இது இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே வழிகாட்டுகிறது என்பேன்.

திரு. மாசேதுங் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "நூறு மலர்கள் மல ரட்டும், நூறு கருத்துக்கள் இங்கே உருவாகட்டும்" என்ற பாடலை அவர் தொழிற்சாலையிலே சென்று பாடவில்லை. இங்கே 'அன் ஆர்கனைசுடு லேபர்' என்று சொல்கிறோமே, பயிர்க்காடுகளிலும், பண்ணைக் காடுகளிலும் இருக்கிற ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்களுக்காக நாம் உழைத்தாக வேண்டும். அதுதான் உண்மையான மக்கள் பணி என்று அவர்கள் குறித்ததைப் போல, கட்டிடத் தொழிலாளர்களை இதுவரை எந்த அரசும் கவனத்திலே கொண்டதில்லை. அப்படிக் கவனத்திலே கொள்ளப்படாத கட்டிடத் தொழி லாளர்களை இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் இந்த முற்போக்கு அரசுதான் கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதைத் தொழி லாளர்கள்பால் நாட்டம் உள்ளவர்கள், தொழிலாளர்களுக்காக என்றைக்கும் குரல் கொடுக்கிறவர்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் தங்களுடைய மனத் திலே வாழ்த்துவார்கள். அரசியல் நிர்ப்பந்தம் நேரிடையாக வாழ்த்த அவர் களுக்கு இடம் தரவில்லை என்றாலும், நெஞ்சிலே வாழ்த்துவார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோலத்தான், இந்த நாட்டிலிருக்கிற கல்வி முறை மெக்காலே காலத்தி லிருந்த கல்வி முறை. ஆங்கிலேயருடைய ஆட்சிமுறையை விரிவாக்கவும், வளர்க்கவும் ஏற்பட்டதுதான் அந்தக் கல்வி முறை. அந்தக் கல்வி முறைதான் இன்றைக்கு வரைக்கும் இருக்கிறது. இந்த நாட்டிலே சில பேர் கல்லூரியில் படித்தவர்கள்தான் படித்தவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகங்கள் எல்லாம், என்னைப் பொறுத்தவரை, மாணவர்களை முட்டாள்களாக்கும் முயற்சியில்தான் இதுவரைக்கும் தோற்றுக் கொண்டிருக்

[திரு. வலம்புரி ஜான்] [1984 பிப்ரவரி 15

கின்றன. சாதாரணமாக கிராமங்களிலே கேட்பார்கள் "உன் தங்கைக்கு எப்போது திருமணம்" என்று. பதில் சொல்கிறவன், "அவள் படிப்பு முடிந்ததும் திருமணம்" என்று சொல்லுவான். மீண்டும், "என்ன தம்பி, படிப்பு முடிந்து விட்டதா?" என்று கேட்பார்கள். ஆகவே பொதுவான நம்பிக்கை மனிதனுடைய அடிமனத்திலே, கல்லூரியிலே படித்தால், அந்தப் படிப்பு முடிந்து விட்டது என்ற எண்ணம் இந்த நாட்டிலே இருக்கிறது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு, 'சாந்துணையும் கல்லாதவாறு' என்று திருவள்ளுவர் சொல்கிறார். அதுதான் திருவள்ளுவர் காட்டியிருக்கிற கல்லூரிப் படிப்பு; சொல்லியிருக்கிற பல்கலைக் கழகப் படிப்பு. சாகிறவரைக்கும் படிக்க வேண்டும். காரணம், அந்தப் படிப்பு மனிதனை சாகாமல் இருக்க வைக்கும் என்று நம்பிய காலம் இருந்தது. ஆனால் படிப்பு முடிந்துவிட்டதா என்று கேட்கிற இந்த நாட்டைப் பார்த்தால், மனிதனுடைய மனதிற்குள்ளே உள்ள அடிமனம் என்ன சொல்கிறது என்றால், கல்லூரிப் படிப்புதான் படிப்பு என்று சொல்லுகிறது. ஆனால் நாட்டிலே உள்ள அறிவியல் விஞ்ஞானிகள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. கல்விச் சிந்தனையாளர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "புள்ளி விவரங்களைச் சேர்ப்பது கல்வியா, இல்லை பூமியை உழுவது, கல்வியா?" என்று கேட்டால், "பூமியை உழுவது ஒன்றுதான் கல்வி. புள்ளி விவரம் சேர்ப்பது கல்வியல்ல" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

Betrand Russel, " It is not the inculcation of a settled object of knowledge. It is an inculcation of spirit of inquiry"

என்று அழகாகச் சொல்லுகிறார். இன்னின்ன வேலை தெரிந்து கொண்டிருக்கிறான் என்றால், அவன் கல்விமான் அல்ல. இன்னின்னவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தோடு எவனை ஒரு கல்வி முறை ஈடுபடுத்துகிறதோ, அது கல்வி என்று சொல்லுகிறான். பாரதியும் வெகு அழகாகச் சொல்கிறான். ரஸ்ஸலுக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை. 'தேடு கல்வி இலாத ஒரு ஊரை தீயினுக்கு இரையாக விடுத்தல்' என்கிறான். கல்வி என்பது புள்ளி விவரங்களைச் சேர்ப்பதல்ல. இன்னின்னவைகளைத் தெரிந்து கொள்வதல்ல. 'தேடு கல்வி' என்று சொல்கிறான். 'தேடு' என்பதுதான் 'என்கொயரி'. இன்னின்னவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை உருவாக்கினால், அது கல்வி என்று சொல்கிறான். அந்தக் கல்வி இந்த நாட்டிலே பாழ் பட்டதற்கு எத்தனையோ காரணங்கள் சொல்கிறார்கள். ஆனால் அதற்கு அடிப்படையான மூலக் காரணம், எந்தச் சமுதாயம் உடல் உழைப்பைக் கொச்சைப்படுத்துகிறதோ. எந்தச் சமுதாயம் உடல் உழைப்பைக் கேவலப்படுத்துகிறதோ, அந்தச் சமுதாயத்தினுடைய நாகரீக அடிப்படை



1984 பிப்ரவரி 15] [திரு. வலம்புரி ஜான்]

தகர்ந்து போகும் என்பதை உலக நாடுகள் பார்க்கின்றன. அப்படி எண்ணிப் பார்க்கும்போது. இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு கல்வியிலே கொண்டு வந்துள்ள மாபெரும் மாற்றம் உள்ளபடியே நன்மை தருவதாகும். தொழிற் கல்வியோடுதான் கல்வி பெற வேண்டும், அதுதான் உண்மையான கல்வி என்று வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம், நாகரீக அடிப்படை அங்கேதான் பாதுகாக்கப்படுகிறது. உடல் உழைப்பை உதாசீனப் படுத்துகிற, உடல் உழைப்பைக் கேவலப்படுத்துகிற, உடல் உழைப்பைக் கொச்சைப்படுத்துகிற எந்தக் கல்வி முறையும் நாட்டிலே நாகரீகத்தை தோற்றுவிக்காது, நாட்டை வளர்க்காது. உடலால் உழைக்கிறவர்கள் எல்லாம் ஒரு சாதி; மனத்தால் உழைக்கிறவர்கள் எல்லாம் மற்றொரு சாதி. சாதியிலே புதிய பரிணாமங்கள் உற்பத்தியானால் நிச்சயமாக சமுதாயத்தில் பிளவுகள் என்றைக்கும் இருக்கும். அதை நீக்க, அரசு ஒரு ஆழமான அடிப்படையை இன்றைக்குப் போட்டுக் கொண்டிருக்கிறது என்பது பாராட்டத்தக்கது.

அதைப்போலவேதான் அரசுப் பணியாளர்கள்கூட, கருத்து மாறுபாடு கொண்டவர்கள்கூட, பணிக்கொடை தவிர 10,000 ரூபாய் தருவோம் என்ற மசயத்யை வரவேற்றிருக்கிறார்கள். வந்த ரூ. 10,000 தருவதிலேகூட குறை சொல்ல வேண்டுமென்பதற்காக, குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக, நேற்றைக்குப் பேசியவர்கள் சிலர் 10,000 ரூபாய் எங்கே தருகிறார்கள்; 5000 ரூபாய் தானே தருகிறார்கள் என்று தங்களுக்குக் கணக்கிலே உள்ள ஆற்றலை வெளிப்படுத்துகிறார்கள். அடுத்து. மிகச் சிறந்த முறையில் மாவட்டப் பிரிவினை இருக்கிறது. மிகச் சிறந்த சான்றோர்களின் திருநாமங்களால் இந்த மாவட்டங்கள் வழங்கப்படுமென்று அறிவிப்பு வருகிறது. சிலர், "ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பேரறிஞர் அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம் என்று அழைத்து விடுவதால் இந்த நாட்டிலே உள்ளவர்கள் கவலை தீரப் போகிறதா; கண்ணீர் வற்றிவிடப் போகிறதா?" என்று கேட்கிறார்கள். ஆனால் எல்லா நாடுகளிலும் பார்க்கிறோம். சான்றோர்களை வாழ்த்துவதும், சரித்திரத்தை உருவாக்கியவர்களை, தலைவர்களை வழிபடுவதும் தொன்று தொட்டு மரபாக இருக்கிறது. நேற்றைக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள், உரையாற்றும்போது, ஒன்றைச் சொன்னார்கள். சோவியத் சொர்க்கத்தில் திருமணமான தம்பதியர்கள் எல்லாம் தியாகச் சின்னங்களை வழிபட்ட பின்னர்தான் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள் என்று சொன்னார்கள். தியாகச் சின்னங்களை வழிபடுகிறார்கள் சோவியத் மக்கள். "அதுதான் நாட்டிலே தீவிரமான திருப்பங்களை உருவாக்கும், மாபெரும் மாற்றங்களை உருவாக்கும்" என்று நம்புகிறார்கள். இப்படி வரலாற்றை வணங்காதவர்கள், வரலாற்றுச் சின்னங்களை நெஞ்சிலே

கொள்ளாதவர்கள், தங்களுடைய பழமையை மறந்து போகிறவர்கள் நிச்சயமாக நிகழ்காலத்திலே உலகத்தால் வாழ்த்தப்பட மாட்டார்கள். இந்த எண்ணத்திலேதான், பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்று வந்திருக்கிறது. ஆனால் இதிலேகூட குறை சொல்லுகிறார்கள். நான் நினைத்துப் பார்க்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள்—நான் எடுத்துச் சொல்லி, தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் என்னுடைய ஆன்மாவின் ராகமாகச் சிலவற்றைச் சொல்லியாக வேண்டும்—தமிழர்களின் அடிமை இரவுகளை முடிப்பதற்காக விடியல் பாடிய ஆலோகத்தைப்போல் வந்தவர்கள். பூந்தாது வாரி வருகிற பொதிகை மலைத் தென்றல் காற்றைப்போல, தாழ்ந்து கிடக்கிற தமிழகத்தைத் தட்டி எழுப்ப வந்தவர்கள். குளிர்ந்து கிடந்த தமிழகத்தினுடைய குருதி ஓட்டத்திலே கொந்தளிப்பை உருவாக்கியவர்கள்.

(முற்பகல் 10-20)

மிகச் சிறந்த மக்களாட்சி மலர் என்று உலகத்தவரால் புகழப்படுகின்றவர் பேரறிஞர் அண்ணா. நீக்குப் போக்கும், நெளிவுச் சுழிவும் நிரம்பிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஒரு தாயைப் போன்ற தலைவர் பேரறிஞர் அண்ணா. எவர் மீதும் பொறாமைப்பட இயலாத அளவுக்கு தன்னம்பிக்கையுடைய தனித்த மாபெரும் கலங்கரை விளக்கமாக வாழ்ந்த தலைவர் அவர். இதிகாசத்திலும், புராணத்திலும் விழ்ந்து கிடந்த தமிழகத்தைத் திருத்தி, திசை திருப்பி ஒரு மிகப் பெரும் முற்போக்கான சூழ்நிலையை இந்த நாட்டு இளைஞர்களுக்காக உருவாக்கித் தந்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா. தமிழர்கள் எல்லாம் இன்றைக்கு அதை நினைத்துப் பார்க்கிறார்கள். அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலே ஒரு மாவட்டம் இன்றைக்கு உருவாகிறது. அப்படி உருவாகிறபோது, தமிழ் படித்த நெஞ்சங்கள் எல்லாம், இந்த நாட்டினுடைய எதிர்கால வரலாற்றில் நம்பிக்கை படைத்த கோடானு கோடி இளைஞர்கள் நெஞ்சங்கள் எல்லாம் இன்றைக்கு மகிழ்கிறது, அவர்களுடைய நெஞ்சங்களில் எல்லாம் மழை விழுகிறது, பால் பொழிகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அதையும் விட்டார்களா என்றால், விடவில்லை. ஆளுநர் அவர்களுடைய உரை முடிவடைந்து 6 மணி நேரம்கூட ஆகவில்லை. உடனே அதற்கும் குறை சொல்ல புறப்பட்டு விட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலே மாவட்டம் இருக்கலாம், ஆனால் அண்ணா பிறந்த செங்கல்பட்டு மாவட்டத்தை அல்லவா இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதோடு மாத்திரமில்லாமல், மதுரையைப் பிரித்து திண்டுக்கல்லைத் தலைநகராக வைத்து அண்ணா மாவட்டத்தை அமைப்பா





னேன் என்று குற்றம் சொல்ல புறப்பட்டு விட்டார்கள். எதிர்க் கட்சியிலே இருக்கிற பெருமக்கள், ஆண்ட கட்சியினர் ஆளும் கட்சியைக் குற்றம் சொல்லலாம், குறை சொல்லலாம். அது அவர்களுக்கு இருக்கிற மக்களாட்சிக் கடமை, அவர்களுக்கு இருக்கிற உரிமை. ஆனால் குற்றம் சொல்வதையும், குறை சொல்வதையும் மட்டுமே அவர்கள் வாழ்க்கையினுடைய குறிக்கோளாகக் கொண்டால், அவர்கள் மக்களாட்சியைக் கேவலப்படுத்துகிறார்கள், அவமானப் படுத்துகிறார்கள் என்றுதானே அர்த்தம். பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஒரே ஒரு மாவட்டத்திற்கு மட்டும் உரியவரா பேரறிஞர் அண்ணா அவர்கள்? இல்லை, இல்லை. "சிங்க நடையையும், சிங்கார தென்றல் நடையையும் தன் நடையால் சந்தித்த கோமான்" என்று ஊரிலும், உலகத்திலும் பேர் பெற்றவர் பேரறிஞர் அண்ணா. மற்றவர்கள் எல்லாம் உலகத்தைத் தமிழகத்திற்குக் காண்பித்தார்கள். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ தமிழகத்தை உலகத்திற்குக் காண்பித்தார்கள். ஷேக்ஸ்பியரை, இங்கர்சாலை, சன்யாட்சென்னை, சமார்செட்மாமை இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் ஆர்வத்தோடு படித்தார்கள் என்றால், அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எழுத்துத்தான். இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். கூனி, குறுகிக் கிடந்த தமிழகத்தினுடைய சிந்தனைக்குக்கூட அவர்கள் புதிய ஒளியை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் தமிழ் உலகத்திற்குச் சொந்தம். மலேசியாவில் தமிழன் இருந்தாலும். மொரீசியஸ் தீவில் தமிழன் இருந்தாலும், ஈழத்திலே தமிழன் இருந்தாலும், தமிழன் எந்த நாட்டிலே வாழ்ந்தாலும், அவனுடைய நெஞ்சத்திலே எல்லாம் சங்கநாதமாக ரீங்காரமிட்டுக் கொண்டு வாழ்கிறவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை செங்கல்பட்டு மாவட்டத்திலே ஒரு பகுதிக்கு வைத்திருக்க வேண்டாமா, மதுரையிலே வைக்கலாமா, என்று கேட்பவர்கள் குறித்து நான் எண்ணிப் பார்க்கிறேன். உண்மையிலேயே நான் இதைச் சொல்வதற்காக தலை குனிகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு மட்டும் உரியவரல்ல. இந்த மாநிலத்திற்கு உரியவர். எங்கெங்கு தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் உரியவர்கள். அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களை செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் என்று பிரித்துவிட வேண்டும், குறுக்கி விட வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள் என்றால், அவர்கள் குற்றம் சாட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு, வேண்டுமென்றே அப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வலம்புரி ஜான்] [1984 பிப்ரவரி 15

அதைப் போலவே பெருந்தலைவர் காமராசர் அவர்களை மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நினைத்திருக்கிறது. விருதுபட்டி
யிலே பிறந்த ஒரு சாதாரண மனிதன், ஆலமர விழுதுகளைப்போல் இமயம்
வரை சென்றிட முடியும், நிலை பரப்பிட முடியும், இந்த நாட்டினுடைய
வரலாற்றை உருவாக்கிட இயலும் என்றால். அதற்குச் சொந்தக்காரர் திரு.
காமராசர் அவர்கள்தான். மகாத்மா காந்திபோல் வளர வாய்ப்பிருந்தும்,
இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக உயரக்கூடிய வாய்ப்பு இருந்
திருந்தும்கூட, தனக்கு அதிகாரத்திலே பங்கு வேண்டாம் என்கிற அளவுக்கு,
தானே பிரதமர் ஆகக்கூடிய வாய்ப்பு இருந்தும், "நான் பிரதமர்களை
உருவாக்கிக் காட்டுகிற பிரதம பிரதமராக இருப்பேன்" என்கிற அளவுக்கு
ஒரு வரலாற்றை உருவாக்கியவர் திரு. காமராசர் அவர்கள். மரணம் சில
பேருக்கு முற்றுப்புள்ளியாக இருக்கிறது. ஆனால் பெருந்தலைவர் காமராசர்
அவர்களைப் பொறுத்தவரை, மரணம் என்பது ஒரு இடைவேளையாக இருக்
கிறது. சிலர் சாவதற்காக வாழ்கிறார்கள். சிலர் வாழ்வதற்காகவே சாகி
றார்கள். சாதாரண மனிதன் கடுமையான உழைப்பை மேற்கொண்டால்,
வரலாற்றில் இடம் பெறும் அளவுக்கு உயர்ந்திட இயலும் என்கின்ற
நம்பிக்கையை இந்த நாட்டு இளைஞர்களுக்கு எல்லாம் உணர்த்துகின்ற அள
வுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கி, வாழ்ந்து. மறைந்தவர் திரு.
காமராசர் அவர்கள். அவர் பெயரைப் போற்றுகின்ற அளவுக்கு அவர் பெய
ராலே ஒரு மாவட்டம் உருவாகிறது.

அடுத்து, முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பொறுத்தவரை, வீரமும்,
தேச பக்தியும் இணைந்த இந்த நாட்டை தீமைகள் தீண்டாது என்று சொல்லி
வந்தவர் அவர். நான் அவரைச் சின்ன வயதிலே பார்த்த நினைவு எனக்கு
உண்டு. நின்று பேசுகிறபோது, கந்தா, கடம்பா, கழுகாசலபதியே என்று
தொடங்குவதாக இருந்தால், தமிழ் மொழியானது அருவி போல் அவரிட
மிருந்து கொட்டும். ஆன்மீக நலன் இந்த நாட்டுக்கு அவரிடமிருந்து வந்து
சேரும் என்பதை இந்த நாட்டிலே இருந்தவர்கள் நன்றாக உணர்ந்திருந்
தார்கள். அப்படி தேச பக்தி, தெய்வ பக்தி இந்த இரண்டும் இந்த நாட்டிலே
ஊன்றுவதற்குக் காரணமாக இருந்தவர் அவர். சில பேர் சாதியின் பெய
ராலே, சமயத்தின் பெயராலே அவரை சாடுகிறவர்களாக இருந்தார்கள்.
ஆனால் அவரோ சாதிக்கும், சமயத்துக்கும் அப்பாற்பட்ட மனித குல ஒருமைப்
பாட்டுக்காகப் பாடுபட்டார். அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தலைவரான
திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு அரசு தன்னுடைய அஞ்சலியைச்
செலுத்தும் முகமாக ஒரு மாவட்டத்திற்கு அவர் பெயரை வைத்திருக்கிறது.



1984 பிப்ரவரி 15] [திரு. வலம்புரி ஜான்]

அடுத்து, வள்ளலார் பெயர் ஒரு மாவட்டத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயரை எடுத்துக்கொள்கிறபோது, அவர் வாழ்ந்த இடத்திற்கு அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். சென்னையிலேகூட அவர் வாழ்ந்திருக்கிறார். இங்கேயிருக்கிற கந்தகோட்டத்தைப்பற்றிக்கூட அவர் பாடியிருக்கிறார்; பார்த்திருக்கிறார். ஆனால் அவர்களுடைய நினைவு எங்கே இருக்கிறதோ அங்கே அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்ற அளவிலேதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

"அகத்தே கறுத்து, புறத்தே வெளுத்திருந்த உலகோர் அனைவரையும் தகர்த்தே திருத்தி சன்மார்க்க சங்கத்திடை வித்திட என்றே இதற்கே பாத்தை பெற்று அருளுக என்று என்னை எம்மால் இந்த உலகிற்கு அனுப்பினானே" என்று எடுத்துச் சொல்லி, இந்த உலகத்திற்கெல்லாம் ஆன்மீக ஒருமைப் பாட்டைத் தந்திருக்கிற வள்ளலார் பெருமானுடைய பெயராலே ஒரு மாவட்டம் ஏற்படுத்தப்படவிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றுகின்ற ஒரு மாபெரும் அரசு இப்பெயரை வைப்பதுதானே பொருத்தம். ஒரு அரசு வள்ளல் பெருமானுடைய பெயரை மாத்திரம் வைத்து, ஒரு மாவட்டத்தை மட்டும் உருவாக்கியதா என்றால் இல்லை, "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன், இளைத்தேன்" என்று அவர் சொன்ன வார்த்தைகளுக்கு வாலாறு படைக்கவில்லை என்றால், குற்றம் சொல்லலாம். இந்த அரசு அப்படிப்பட்ட நிலையில் அந்த மாவட்டத்திற்கு வள்ளலாரின் பெயரை மாத்திரம்தான் வைத்ததா என்றால் இல்லை. வள்ளலார் பெருமானுடைய கனவை நினைவாக்குகிற வண்ணம் இந்த நாட்டில் இருக்கும் இலட்சக் கணக்கான குழந்தைகள் இன்றைக்கு சிலேட்டோடும் போகிறார்கள், பிளேட்டோடும் செல்லுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இன்றைக்கு கல்வி வருகிறது என்றால், அறியாமை அகலுகிறது என்றால், வெளிச்ச விழுதுகள் வேர் விடுகின்றன என்றால், அவர்களின் வயிறு குளிருகிறது என்பதைப் பார்க்கிறோம். அதிலேயும் குறை சொல்லுகிறவர்கள் உண்டு. "சத்துணவுத் திட்டமா ? அதிலே ஊழல்" என்கிறார்கள். திட்டமே ஊழல் என்கிறார்கள். ஊழல் எங்கே இருக்கிறது என்று கேட்டால், உடனே பொதுவாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள். சத்துணவுத் திட்டமே தவறு என்கிறார்கள். சிலர் நம்பிக்கை படைத்தவர்களாக, முற்போக்கு எண்ணம் படைத்தவர்களாக இருந்தாலும்கூட இது ஒரு சரியான நடைமுறையல்ல என்ற சாயங்கால வாதத்தை ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் மெத்தப் பணிவன்போடு சொல்லிக் கொள்வேன். நகத்தில் அழுக்குச் சேருகிறது என்றால், அழுக்கை நீக்க வேண்டும் என்று மட்டும் சொல்லாமல், நகத்தையே அகற்ற வேண்டும் என்று

சொல்லுகிறவர்கள் உண்டு. அல்லது நகத்தை வெட்டிவிட்டால், அழுக்குச் சேராது என்றுகூட சொல்லலாம். அதுகூட நல்லது. ஆனால் அழுக்குச் சேருகிறது என்றால், நகம் இருந்தால் அழுக்குச் சேரும், ஆகவே நகத்தை வெட்டு என்றுகூட சொல்லாமல், இந்த நகமே விரல் இருப்பதால்தானே வருகிறது, ஆகவே அழுக்குச் சேராமல் தடுக்க வேண்டுமானால் விரலையே வெட்ட வேண்டும் என்று வாதம் படைப்பவர்களை நாம் கடைத்தேற்றவும் இயலாது, காப்பாற்றவும் கூடாது. என்ன குறை சொல்லுகிறார்கள் என்றால் வள்ளளாருடைய பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைக்கலாமா என்கிறார்கள். ஆனால் வள்ளல் பெருமானுடைய பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைக்கிற முழுத்தகுதி இந்த அரசுக்கு உண்டு, காரணம் அவருடைய கனவை நனவாக்கியது இந்த அரசுதான்.

அதைப்போலவே சிதம்பரனார் பெயராலே ஒரு மாவட்டம் உருவாக இருக்கிறது. "செக்கிழுத்தார், சிறை அடைந்தார், காலமெல்லாம் சுதந்திரத்திற்காகக் கண்ணீர் உகுத்தார்" என்ற பெருமைக்குச் சொந்தக்காரர் வ. உ. சிதம்பரனார். அவர் வெறும் கப்பலோட்டிய தமிழர் மாத்திரமல்ல. நிறைய இலக்கியத்தைப் படைத்திருக்கிறார். திருக்குறளுக்கு விளக்கம் சொன்னார். தொல்காப்பியத்திற்கு அந்த நாளிலேயே வியாக்கியானம் செய்து கொடுத்தார். ஜேம்ஸ் ஆலன் போன்ற வெளிநாட்டினிலே இருக்கிற சிறந்த நம்பிக்கையாளர்களின் நூல்களையெல்லாம் நம் நாட்டு இளைஞர்களுக்கு நம்பிக்கை வர வேண்டும் என்பதற்காக, வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் "நான் சிறைக்குப் போனாலும், நான் உள்ளே இருக்கிற நேரத்தில் இந்த நாட்டு இளைஞர்கள் நம்பிக்கை மிகுந்தவர்களாக இருக்க வேண்டும்" என்று எண்ணி, "என்னுடைய நூல்கள் உங்களையெல்லாம் ஊக்குவிக்கும்" என்று சொல்லுகிற வகையில் மிகச் சிறந்த இலக்கிய வாதியாக அவர் திகழ்ந்தார். அவருடைய நினைவைப் போற்றுகிற வகையில் ஒரு மாவட்டத்திற்கு 'சிதம்பரனார் மாவட்டம்' என்று பெயரிடப்படுகிறது.

அடுத்து, வள்ளியம்மை மாவட்டம் என்று வள்ளியம்மை பேரால் ஒரு மாவட்டம் அமையவிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய விடுதலைப் போராட்டத்தில் ஒன்றிணைந்து அதிலே நிழலாக, நிஜமாக இருந்தவர் வள்ளியம்மை. அப்படிப்பட்டவர் பெயராலே ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது என்றால், அதிலேகூட குறை சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். "அந்த அம்மையார் பெயராலே எதற்காக ஒரு மாவட்டத்திற்குப் பெயர் வைக்க வேண்டும்? அவருடைய பெயரை ஒரு ஒன்றியத்திற்கு வைத்திருக்கலாம், மாவட்டத்திற்கு வைத்திருக்க வேண்டாம்" என்று அந்த





அம்மையாரின் வரலாற்றையே குறைத்துப் பேசியவர்கள் வரலாற்றை நேற்றைய மாலை இதழ்கள் தாங்கி வந்திருக்கின்றன. வள்ளியம்மையாரின் வரலாறு என்பது சாதாரண வரலாறு அல்ல. இந்த அரசு இன்றைக்கு எவ்வாறு மொழி உரிமைக்காக, இன உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறதோ அதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கிற நாட்டுரிமைக்காகப் போராடியவரை நாம் நெஞ்சத்திலே கொண்டாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் அந்தப் பெயரை இன்றையதினம் ஒரு மாவட்டத்திற்கே சூட்ட இருக்கிறோம். "மாவட்டத்திற்கு அவர் பெயரை வைக்கலாமா, ஒன்றியத்திற்கு மட்டும் வைத்தால் போதாதா?" என்று சிலர் கேட்கிறார்கள். அதில் என்ன வேடிக்கை என்றால், அப்படிச் சொல்லுகிற பெருமகன்தான்; நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, "அண்ணாவின் பெயரை செங்கற்பட்டு மாவட்டத்திற்கல்லவா வைத்திருக்க வேண்டும், அவர்கள் அங்கேதானே பிறந்தார்கள்" என்று கேட்டவர்தான், அண்ணா அவர்கள் காஞ்சீபுரத்தில்தான் கருக்கொண்டார் என்பதைக் கூட நாம் அறியாதவர்கள் என்பதைப்போல் சிறந்ததொரு சொற்பொழிவை நிகழ்த்திவிட்டு மேலும் சொல்லியிருக்கிறார். "தென் சென்னைக்கு திருவள்ளுவரின் பெயரையும் வட சென்னைக்கு இளங்கோவடிகளின் பெயரையும் வைக்கலாம்" என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். நான் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். வடசென்னைக்கு இளங்கோவடிகள் பெயரைச் சூட்டலாம் என்றால், சேரன் தம்பி சிலம்பை இசைத்தது வட சென்னையிலா? இளங்கோவடிகள் வாழ்ந்து மறைந்தது வடசென்னையிலா? மதுரையை எரித்தாளே கண்ணகி அது இடம் பெயர்ந்து வந்தது வடசென்னையிலா? வடசென்னைக்கு இளங்கோவடிகள் பெயரை வைக்க வேண்டும் என்று வடசென்னைக்கும் இளங்கோவடிக்கும் முடிச்சுப் போடுகிற அளவுக்கு வாதத்திலே விழுந்து போவதற்கு என்ன காரணம் என்றால், குற்றம் சொல்வதே அவர்களின் குறிக்கோளாக இருப்பதுதான். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, சிகரம் வைத்ததைப்போல் 2000 ஆண்டுகளாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் புகழ்க் கொடியைப் பரப்பி வருகிறவர் திருவள்ளுவர். அவருடைய பெயராலே ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது. இலக்கியத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள், இலக்கியம் எப்படி சமுதாயத்தைச் சீர்படுத்த முடியும் என்ற அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாதவர்கள் ஒருவேளை நினைக்கலாம், திருவள்ளுவர் பெயராலே ஒரு மாவட்டம் இருந்தால் என்ன நடந்து விடும் என்று, ஆனால் அழுதும் தொழுதும் அன்றாடம் படிக்கிற இந்த நாட்டு இளைஞர்களைக் கேட்டால், திருவள்ளுவர் வாழ்க்கைக்கு எவ்வளவு தேவையானவர் என்பதைச் சொல்லுவார்கள்,

"Danger of Marcus Uralius, Universality of Shakespeare, Characteristic combination of great thinking of Shelley"

என்று இவைகளையெல்லாம் சொல்லிக்கொண்டே' வருகிறான், ஜி. யு. போப். இவைகள் எல்லாம் காணப்படும் திருக்குறள் என்று சொல்லுகிற இந்த மண்டலத்திலே இருக்கிற பழமையான நூலுக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று சொல்லத்தக்க வகையில் அவர் பெயராலே ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது. "தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது" என்று நம்மைக் காட்டிலும் நம்முடைய குழந்தைகள் அறிவுடையவர்களாக விளங்குவார்கள் என்ற விஞ்ஞான விளக்கம் அதிலே இருக்கிறது. அப்படி ஒரு மாபெரும் நிலையை இந்த உலகத்துக்

(முற்பகல் 10-30)

கெல்லாம் தந்து, தமிழனுடைய புகழை என்றைக்கும் கனவிலும் இந்த நாட்டு வரலாற்றிலும் உலகத்தினுடைய பெயர் ஏட்டிலும் ஏற்றிவைத்திருக்கிற திருவள்ளுவரை இந்த அரசு நினைக்கிறது. ஆகவே இப்படி மனிதாபிமானிகள் நாட்டு விடுதலைக்காக பாடுபட்டவர்கள், அவர்களுடைய பெயரைச் சூட்டுவதில் ஒரு கவர்ச்சிகரமான திட்டம் என்று கருதுகிறவர்கள் வரலாற்றை மறுமுறை வாசித்து அறிந்து கொள்ள வேண்டியவர்கள். எல்லா நாடுகளிலும், தெருக்களுக்குக்கூட ஏன் லண்டன் மாநகரிலே ஷெல்லி தெரு என்று இல்லையா? ஷேக்ஸ்பியர் நினைவுச் சின்னங்கள் இல்லையா? எல்லா நாடுகளும் தன்னுடைய வரலாற்றைப் பாதுகாக்கிறது, போற்றுகிறது. வரலாற்றிலிருந்து தவறுகளை விடுவித்துவிடலாம். ஆனால் வரலாறு தருகின்ற பாடங்களை நாம் என்றைக்கும் மறந்துவிடக்கூடாது. ஆகவே குறை சொல்பவர்கள் என்றுமே அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கட்டும். குற்றம் சொல்பவர்கள் குற்றம் சொல்லிக் கொண்டே இருக்கட்டும். ஆனால் அவர்கள் இந்த அரசினுடைய செயல் திட்டங்களை, சாதனைகளை எடுத்துச் சொல்லும்போது எவ்வளவு பொறுப்பு இல்லாமல் நடந்துகொண்டாலும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் இந்தக் கருணை மிக்க அரசு, இந்தத் துர்பாக்கியச் சூழ்நிலைகளையெல்லாம் கடந்து மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளிலே முன்நிற்கும். ஏசுநாதரே முதலமைச்சராகி, நபிகள் நாயகம் நிதியமைச்சராகி, கன்பூசியஸ் கல்வியமைச்சராகி, புத்தர் பொதுப் பணித் துறை அமைச்சராகி, வர்த்தமான மகாவீரர் வருவாய்த் துறை அமைச்சராகி, ஜோராஷ்ட்டிரர் சமூகநல அமைச்சராகி ஒரு அரசாங்கம் நடந்தாலும், குற்றம் சொல்கிறவர்கள் குற்றம் சொல்லிக்கொண்டே தான் இருப்பார்கள். ஆனால் இந்த அரசு ஒரு வானம்பாடியைப் போல மேகங்களுக்கு மத்தியில் பறந்து கொண்டிருந்தாலும், ஈரத் தரைகளிலும் கால்





ஊன்றி தன்னுடைய மகத்தான பணியை என்றைக்கும் செய்து கொண்டிருக்கும். ஆகவே அவைகளைக் குறிப்பிடுகிற அந்தக் கொள்கைத் திட்டங்களை அறிவிக்கின்ற இந்த ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை முன்மொழிந்து என்னுடைய வார்த்தைகளை நிறைவுசெய்கிறேன்.

*** திரு. க. அருணாசலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் ஒரு பெரும் முன்னுரையே தந்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் நானும் வரவேற்று வழிமொழிவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுவாக இப்போது இருக்கிற மாவட்டங்களை 24 மாவட்டங்களாக ஆக்க அரசு முன்வந்ததாகச் சொன்னார்கள். பொதுவாக உலகத்திலே பெயர் வைக்க வேண்டுமென்றால், அந்தக் காலத்திலே இருக்கிற பெரிய மனிதர்கள், குறிப்பாக அரசியலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் பெயர்களை மட்டும் தான் வைப்பார்கள். இப்போது வள்ளியம்மை பெயரை வைத்திருப்பது அந்த எண்ணத்தையே மாற்றிக் காட்டுகிறது. ஒரு மாவட்டத்திற்கு வள்ளியம்மையின் பெயரைச் சேர்க்கிறபோது, நாம் ஒரு புது யுகத்தில் இருக்கிறோம் என்பதைப் பார்க்கிறோம். ஒரு முறை வன்முறைகளும், சதித் திட்டங்களும் ஆண்டுகொண்டிருந்த உலகத்தை உயர்த்த அகிம்சை முறையில் காந்தியடிகள் முயற்சி செய்தபோது, நமது பக்கத்தைச் சேர்ந்த வள்ளியம்மையார் அவருக்கு உறுதுணையாக இருந்து முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். இந்தியரின் உரிமைகளையும் தன்மானத்தையும் காக்க தனது உயிரையே ஈந்தார். இதைக் காந்தியடிகள் பாராட்டியதை நாம் இன்னும் நினைத்துப் பார்க்கிறோம். அவர்களின் தியாகம் என்றும் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் எப்போதும் அவர் பெயர் நிலைத்திருக்க வேண்டுமென்றும் கருதி நமது அரசு அவர் பெயரை இப்புதிய மாவட்டத்திற்கு வைக்க முன்வந்துள்ளது. இதனை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

வறுமையை ஒழிக்க உலகத்திலே எல்லோரும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ரஷ்யா போன்ற நாடுகளிலே திட்டமிட்டு வறுமையை ஒழித்திருக்கிறார்கள். நம் நாட்டிலேயும் சுதந்திரம் பெற்றவுடன் திட்டக் கமிஷன் நிறுவி பெரிய திட்டமிட்டு பொருளாதார வளர்ச்சிக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனாக நமது பொருளாதார வளம் பெருகியுள்ளது. ஆனால் வறுமை ஒழியவில்லை. பணக்காரர்கள் அதிகப் பணக்காரர்களாகவும்

ஏழைகள் அதிக ஏழைகளாகவும் ஆகி உள்ளதைக் கண்டு பிடித்தார்கள். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிலும் வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவர்கள் அதிகரித்து வருவதைக் கண்ட நமது பிரதமர் அதற்கான மாற்றுத் திட்டங்களை சிறப்பான வழியில் செய்ய முயலுகிறார்கள். பிரதமர் தமது 20 அம்சத் திட்டத்தை நாட்டின் முன் வைத்து பொருளாதார வளம் குன்றாமல், வேலை வாய்ப்பைப் பெருக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்போது தமிழகமும் அதைப் பின்பற்றி சிறப்பாகச் செய்வதை இந்த ஆளுநர் உரை மூலம் காண முடிகிறது. இதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். இதைத்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே வள்ளுவர் சொல்லிச் சென்றிருக்கிறார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப் பகுத்துக் கொடுப்பதால் வளம் பெருக வாய்ப்பிருக்கிறது. ஆனால் வறுமைதானே நிறைய இருக்கிறது, அதை எப்படி பகுப்பது என்று கேட்பார்கள். வறுமையைக் கூட பகுத்துக்கொண்டால், அதன் கஷ்டம் குறையும். அதன் மூலம் கூட வளமையைக் காணலாம். எல்லோரும் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் "ஷேரிங் சொசைட்டி" என்ற அடிப்படையில் உள்ளதைப் பகுத்துக்கொண்டு வாழலாம் என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் பாடியிருக்கிறார். இருந்தாலும் நாம் அதனை இதுவரை செயல்படுத்தவில்லை. அரசு அலுவல்களில் ஒருசில குடும்பத்தினரே அதிகமாக இருக்கின்றனர். இப்போது நம்முடைய மாநில அரசு பகுத்துண்டு வாழ வேண்டுமென்று நினைத்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறது. வேலையையும் பகிர்ந்துகொள்வது என்ற இத்திட்டம் உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இந்தத் திட்டம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. மகாராஷ்டிராவில் வேலைக்கு உத்தரவாதம் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் எத்தனை சட்டங்கள் வந்தாலும், மனிதனுடைய மனதில் மாற்றங்கள் வரவேண்டும். கல்வித் துறையில் மாற்றங்கள் வரவேண்டுமென்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. வலம்புரி ஜான் பேசுகிறபோதுகூட குறிப்பிட்டார். பல்கலைக் கழகங்களால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிக அளவில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, அதைக்கூட கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி வைக்கலாம் என்று சொன்னதாக நினைக்கிறேன். வினோபாஜி அவர்கள் கூட இதையே முன்பொருமுறை சொன்னார். கல்லூரிகளில் வேலை பார்க்கும் பேராசிரியர்களும், படிக்கும் மாணவர்களும் கிராமங்களுக்குச் சென்று அங்கே எப்படி வாழ்க்கைத் தரம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவி





னால் இவர்களும் அறிவு பெறுவார்கள், அவர்களும் நலமடைவார்கள். இன்று திரு. ஜான் அவர்களும் இதுபற்றிச் சொன்னார்கள். பொதுக் கல்வியை விட தொழில் கல்வியே எதிர்கால சந்ததிகளுக்கு வாழ்வளிக்க வல்லது என்று திட்டங்கள் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதை நான் வரவேற்கிறேன். இது ஒரு தேசிய திட்டம். முன்பு பிரைமரி கல்வி என்று ஒரு திட்டம் கொண்டு வந்து, அது சரியாகவே செயல்படாமல் போய்விட்டது. ஆங்கிலேயரின் அடியொற்றி மெக்காலே கொண்டு வந்த இந்தக் கல்வித் திட்டம், அழுக்குப்படாமல் அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்காகக் கொண்டுவரப்பட்டதாகும். அதை இன்னமும் நாம் பிடிவாதமாக வைத்துக் கொண்டிராமல், தொழில் கல்வியை அதிக அளவில் புகுத்தி, எதிர்கால சந்ததியினரை நாம் காப்பாற்ற வேண்டும். அதற்கான வழி முறைகளைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். பல ஆராய்ச்சிகள் செய்ய வேண்டி வரும். அதற்குச் செய்ய வேண்டியதை அவசியம் செய்தாக வேண்டும். எதிலும் குற்றம் காண்பவர்கள் எப்போதும் இருப்பார்கள். அதற்காக இங்கே ஒரே மாதிரி கல்வி முறை இருக்க வேண்டாம் என்பது எனது கருத்து.

(முற்பகல் 10-40)

**ஆகவே கொஞ்சம் சுதந்திரம்** கொடுத்து அவர்கள் ஆராய்ச்சி செய்ய வாய்ப்புத் தரவேண்டும். உடல் உழைப்பின் மூலமாக கல்வி அறிவை வளர்த்துக்கொள்வதற்கு வழிவகை செய்து தரவேண்டும். உடலும், மனமும் வளரும் வகையில் பாதி நேரம் தொழிலும், பாதி நேரம் அறிவியல் கல்வியும் பெறலாம். எதிர்காலத்திலே வீட்டிற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்று திட்டம் வருகின்ற போது, உடல் உழைப்பின் மூலமாக கல்வி பெற்றாரா, வெறும் புத்தகங்களின் மூலம் கல்வி பெற்றாரா என்று பார்த்து தொழில் மூலம், அதாவது உடல் உழைப்பின் மூலம் கல்வி கற்றவர்களுக்கு அரசு அலுவலக வேலை கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றேன். அதற்கு என்று அரசு (கைட்லைன்ஸ்) சில வழிமுறைகளை வகுக்கலாம். அதனை ஏற்று ஆராய்ச்சி செய்வதற்கு ஆசிரியர்களுக்கு இடம் கொடுத்தால், அவர்கள் சுதந்திரமாகச் செய்வார்கள். சிலர் தொழில் கல்வி கொடுங்கள் என்றும், வேறு சிலர் தொழில் மூலமாகவே கல்வி அனைத்தும் கற்பிக்க வேண்டும் என்றும், சில பேர்கள் ஆலைகளிலே தொழில் கல்வி பயிலட்டும், வீட்டிலே பொதுக் கல்வி பயிலட்டும் என்றும் சொல்கின்றார்கள். கல்வி அளிப்பதிலே இப்படிப் பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் பலன் கிடைக்கின்ற மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டும். பலருக்கும் சுதந்திரம் கொடுத்து, இந்தத் தொழில் கல்வியைக் கொண்டு வந்தால், மிகச் சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

[திரு. க. அருணாசலம்] [1984 பிப்ரவரி 15

ஆரம்பத்திலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, சிறு வயதிலே படிக்கின்றவர்களுக்குக்கூட, முதல் வகுப்புக்கு முன்னாலே படிக்கின்றவர்களுக்குக்கூட ஏதாவது செய்ய வேண்டும். அவர்களுக்கு விளையாடுவதிலே அக்கறை இருக்கிறது. நான்கூட சிறுவனாக இருந்தபோது நடந்த ஒன்று எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் பள்ளிக்கூடம் படிக்கின்ற காலத்திலேயே போய் உழவு வேலை செய்ய விரும்பினேன். ஆகவே வேலை செய்ய வேண்டும், அந்த வேலையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணி நிலத்திற்குப் போனேன். அங்கே வேலை செய்து கொண்டிருந்த வேலையாளிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டு வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய தாத்தா அங்கே வந்தார். நான் வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, அந்த வேலையாளைப் பார்த்து சொன்னார். படார். படார் என்று அடித்துச் சொன்னார். 'ஏண்டா பயலே, அவன் படித்து தாசில்தார் ஆக வேண்டியவன், கலெக்டர் ஆக வேண்டியவன், அவன் உழவு வேலை படிக்கிறேன் என்று சொன்னாலும் அவனை அப்படிச் செய்ய விடலாமா?' என்று கேட்டார்கள். நான் அவர் போன பிறகு தனியே அந்த வேலையாளைப் பார்த்து, சமாதானம் சொன்னேன். 'அவர் அங்கு வராதபோது வந்து கற்றுக்கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்தேன். எனக்கு அப்போது கொஞ்சம் வருத்தமாகக்கூட இருந்தது. அவனிடம் சென்று அனுதாபம் சொல்லிவிட்டு வந்தேன். 15 ஆண்டுகள் ஒரு வேலையும் செய்யாமல் படிப்பு மட்டும் படித்துக் கொண்டிருந்தேன். அதனால் உடலுழைப்புக்கு வழி இல்லை. மரியாதையான வார்த்தைகள்தான் பேச முடிந்ததே தவிர, வேறு ஒன்றும் வரவில்லை.

விளையாட்டு மூலமாகவும், வேலை மூலமாகவும் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வழிமுறைகளை மட்டும் தெரிந்துகொண்டால். இன்னும் சிறப்பாக நம்முடைய ஆற்றல் வளரும், உடல் வளம் பெறும், மனம் வளம் பெறும். நம்முடைய குறுகிய நோக்கங்கள் எல்லாம் நீங்கி விரிந்த மனப்பான்மையோடு இருப்போம். ஊர் குடிமகனாகவும் இருக்கலாம். நம்முடைய நாட்டை நேசிக்கலாம். தேசத்தை நேசிக்கலாம். உலகத்தை நேசிக்கலாம். அந்த மாதிரியான எண்ணங்கள் நமக்கு வளர முடியும். நம்முடைய நாடு என்ற எண்ணம், தேசிய உணர்வு நாம் எங்கே போனாலும் நம்மிடையே இருக்கும். எந்தப் பக்கம் போனாலும் என்னுடைய நாடு என்று சொல்கின்ற அளவுக்கு வரும். தேசியம் என்று பேசுகின்றவர்களைப் பார்த்து குறைத்துப் பேசுகின்றவர்களும் இருக்கின்றார்கள். அப்படியெல்லாம் இல்லாமல், நம்முடைய நாட்டிற்குப் புதிய வழிகாட்டியாக இருந்து நம் காந்தியடிகளின் வழியிலே இந்த எண்ணத்தை நாம் சிறப்பாக வளர்க்க வேண்டும். நல்ல சுதந்திரத்தைக் கொடுத்து கீழ்மட்டத்திலே இருப்பவர்களை வாழ்வில் வளரச் செய்ய



1984 பிப்ரவரி 15] [திரு. க. அருணாசலம்]

வேண்டும். தொழில் மூலம் கல்வி என்று வந்தால், தொழில் மூலம் மனிதனும் தன்னுடைய கருத்துக்களை வளர்த்துக் கொள்ள முடியும். விரிவான புத்தி அவனுக்கு வந்து சேரும். அதோடுகூட நம் நாட்டிலுள்ள மக்களோடு அன்போடு பழகுகின்ற நிலை ஏற்படும். இன்பத்தை எல்லோரும் பகிர்ந்து கொள்கின்ற நிலை வரும். 'தான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற வேண்டும் என்ற' அந்த ஆர்வத்தோடு அவர்கள் காரியங்களிலே ஈடுபட முடியும் என்ற கருத்தை நான் வெகுவாகப் பாராட்டி, வரவேற்கின்றேன்.

பல்கலைக் கழகங்களை யாரும் மூடிவிடமாட்டார்கள். பல்கலைக் கழகங்களில் புதிய விஞ்ஞானக் கூடங்களை உண்டு பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அண்மைக் காலத்திலே, மூன்று நான்கு ஆண்டு காலமாக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே காந்திய வழியில், காந்தி-இராமலிங்க வள்ளலார் துறை என்று ஒரு துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி ஏன் இணைத்துச் சொல்ல வேண்டும் என்று சில பேர்கள் சொல்கிறார்கள்.

"காந்திக்கும் இராமலிங்க வள்ளலாருக்கும் என்ன சம்பந்தம்? அவரையும் இவரையும் சேர்த்துக் கட்டிப் போட்டிருக்கின்றார்களே, ஏன்?" என்று கேட்கின்றார்கள். காந்தி அடிகளுக்கு முன்னால் இராமலிங்க அடிகள் இருந்திருக்கின்றார்கள். இயேசுநாதருக்கு ஜான் தி பேப்டிஸ்ட் எப்படி முன்னோடியாக இருந்தாரோ அதுபோல, இராமலிங்க வள்ளலார் காந்தியடிகளுக்கு முன்னோடியாக இருந்திருக்கின்றார். அவர் வழியில் பல காரியங்களைச் செய்திருக்கின்றார். அதை விளக்கமாக திரு. வலம்புரி ஜான் அவர்கள் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். உணவு கிடைத்து சாப்பிட்ட உடனே மனிதன் படிக்க வேண்டும் என்றுதான் வள்ளலார் தர்மசாலையும் ஞானசாலையும் அந்நாளில் நிறுவனம் செய்திருக்கின்றார்கள். நாம் எல்லோரும் படிப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள். வள்ளலாருக்குப் பின் வந்த காந்தியடிகள் உழைத்து உண்பதிலே தன்மானம் வளரும் எனக் கருதி வேலைக்கு ஏற்பாடு செய்தார். வேலை செய்தால் அதன் மூலம் துய்ப்புப் பண்டங்களும் கிடைக்கும். அறிவும் பெறலாம் என்பது அவர் கருத்து. உழைக்காமல் உண்பது மனிதன் தன்மானத்தைக் கெடுக்கும், தன் காலிலே நிற்க வேண்டுமென்ற உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதால்தான் காந்தியடிகள் உடலுழைப்பை வற்புறுத்தினார். அனைவருக்கும் வேலை வாய்ப்பிருக்கும்படி தொழில் பரவலாக அமைய வேண்டும் என்றும் சொன்னார். நம்முடைய திட்ட வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் குடியல்முறைத் தொழில்கள் மூலமே பொருள்வளம் உண்டாகும். எனவே நிதி வசதிகளை அதிலே ஈடு படுத்துங்கள் என்கி

றார்கள். எண்பது விழுக்காடு கிராமத்திலே வாழ்கிறார்கள். நகரத்திலே எஞ்சிய 20 சதவிகிதத்தினர் வாழ்கிறார்கள். ஆனால் நம் திட்டத்திலே இன்வெஸ்ட்மெண்ட்டில் 80 விழுக்காடு நகர்ப்புறத்தில் உள்ள பெரும் தொழில் களுக்கும் 20 விழுக்காடு சிறு தொழில்களுக்கும் ஈடுபடுத்துகிறார்கள். இந்தச் சிறு தொழில்கள் பெரும்பாலும் வளர வேண்டும் என்று நம்முடைய கொள்கையிலே திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றால், சிறப்பாக இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். ஏனென்றால் நம்முடைய நாட்டிலே நெசவுத் தொழில் சிறப்பாக நடந்து வருகிறது. நெசவுத் தொழிலில் தேசத்திலே அதிகமானவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பு என்பதில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பும் உத்தரவாதமும் வேண்டுமென்று இப்போது அண்மையில்தான் சொல்கிறார்கள். திரு. ராஜாஜி அவர்கள் அன்றே சொல்லியிருக்கிறார்கள். நெசவுத் தொழிலாளர்களுக்கே நெசவை ஒதுக்க வேண்டும். முடியாதென்றால் நெசவுத் தொழிலில் சில இனங்களையாவது நெசவாளருக்காக விட்டு வைத்துவிட வேண்டும். "புதிய நூற்பாலைகள் வேண்டியதில்லை, மக்களே நூற்றுக் கொடுத்துவிடுவார்கள்", என்று காந்தியடிகள் கருதினார். இதை முன்பே செய்திருந்தால், எந்தக் காலத்திலும் நம்முடைய நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டமே இருந்திருக்காது. நம்முடைய நாட்டிலே பெரும் தொழில்கள் என்று சொல்கிறபோது. நூற்பு நெசவாலைகள்தான் பெரும் தொழில்களாக இருக்கின்றன. ஆனால் கிராமங்களிலே அதிகத் திறமை இல்லாதவர்கள்கூட அதிக அறிவில்லாதவர்கள்கூட இந்தத் தொழிலைச் செய்ய முடியும். நூற்புத் தொழில் செய்யும்போதே அவர்கள் அறிவையும் வளர்த்துக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட தொழில்களை கிராமங்களுக்காக ஒதுக்கி வைக்க வேண்டுமென்று முயற்சி எடுத்து, அவர்களுக்கு அதை ஒதுக்கி வேறு தொழில்களை வளர்த்திருந்தால், இன்றைக்கு புத்தம் புதிய தொழில்கள் பல நம் நாட்டிலே ஏற்பட்டிருக்க முடியும். நமக்குக் கிடைக்கிற பணத்தையெல்லாம் நூற்பு நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தியிருப்பதை மாற்ற முடியுமானால், மிகச் சிறப்பாக இருக்கும். ஆகவே மத்திய அரசு இதைச் செய்ய வேண்டுமென்று காத்துக் கொண்டிருக்காமல், நம்முடைய மாநிலத்திலேயே ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டும். சென்ற திட்டத்திலேயே 20, 30 நூற்பாலைகள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்குப் பதிலாக சில ஆலைகளை நிறுத்தி வைத்து, இந்த ஆராய்ச்சியைச் செய்தால், வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் செய்துவிட முடியும். மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருப்போம்.



இப்போது வெளிநாட்டினர் பலர் இங்கு வருகிறார்கள். காந்தியின் மூலம் சுதந்திரம் பெற்றவர்கள் என்ன முறையிலே வாழ்கிறார்கள் என்று பார்க்க விரும்புகிறார்கள். ஆனால் சுற்றிப் பார்த்த பிறகு. இங்கேயும் அமெரிக்கா போல, ரஷ்யா போலத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சோர்ந்து போய்விடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் எல்லா நலன்களையும் பெற்று வாழ்கிறார்களா என்று பார்க்க வருகிறார்கள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இந்த மூன்றையும் பெறத்தான் புரட்சி நடக்கிறது. ஆனால் இந்த மூன்றிற்கும் உத்தரவாதம் கொடுக்கும் நாடு எங்குமில்லை. சுதந்திரம் இருந்தால் சமத்துவம் இல்லை, சமத்துவம் இருந்தால் சகோதரத்துவம் இல்லை. இப்படி பல கோளாறுகள் இருந்து கொண்டிருக்கின்றன.

இவை மூன்றும் கிடைக்க வேண்டுமென்றால் ஒருங்கிணைந்து தைரியமாகச் செய்ய வேண்டும். கிராமங்கள் வளர்வதற்கு உதவியாக இருக்கும் அளவிற்கு பண்பாடு, போக்குவரத்து, பண்டமாற்றம் ஆகியவற்றிற்கு உதவி செய்யும் அளவிற்கு நகரங்களை அமைத்தால், நன்றாக இருக்கும். அதற்கு இந்த ஆளுநர் உரையிலே பல கருத்துக்கள் அமைந்திருப்பதால். இதை முழு மனதோடு வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

* திரு. மு. **மாசிலாமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மேலவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் மிக மிகத் தாழ்ந்த சமுதாயத்திலே உள்ள என்னையும், நலிந்த பிரிவிலே இருக்கின்ற அன்புச் சகோதரர் திரு. சி. ஆர். கோலப்பா அவர்களையும், அன்புச் சகோதரர் திரு. ப. அங்கமுத்து அவர்களையும் மேதகு ஆளுநர் அவர்கள் நியமனம் செய்து. மேலவையிலே நாங்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பை நல்கிய மேதகு ஆளுநர் அவர்களுக்கும், எங்களது இதயத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அவரது அமைச்சரவைக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மிக்க நன்றியுணர்வோடு, கடமையுணர்வோடு, எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த குடும்பங்களின் சார்பிலே. என்னுடைய சார்பிலே சமர்ப்பிக்கிறேன்.

[திரு. மு. மாசிலாமணி] [1984 பிப்ரவரி 15

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னார்கள். நான் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரும், 5 கோடி மக்களின் தள நாயகரும், விடி வெள்ளியாக வந்த வித்தகரும், பொன்மனச் செம்மலான எங்களுடைய தலைவர் எங்களை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தி வந்த நேரத்தில், பொது மக்களுக்கு, நலிந்தோர் பிரிவுக்குப் பணி செய்ய, இன்றைக்கு அவர்கள் எங்களுக்கு ஆசி தெரிவித்திருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நான் பதவி ஏற்ற பிறகு, தமிழகத்திலே உள்ள 29 லட்சம் மருத்துவச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்களுக்கும், தமிழக அமைச்சரவைக்கும் ஆயிரக்கணக்கான தந்திகளும், வாழ்த்துக்களும் தெரிவித்த வண்ணமாக இருக்கிறார்கள். இதைத்தான் 'காலத்தினாற் செய்த நன்றி' என்று வள்ளுவர் அவர்கள் சொன்னார்கள். நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று என்று வள்ளுவர் அவர்கள் அழகாகப் பின்னாலே சொன்னார்கள். அந்த நன்றியை நாங்கள் மறக்காமல், நாங்கள் சார்ந்துள்ள இயக்கத்திற்கும், எங்களை எந்தப் பணிக்கு மாண்புமிகு தலைவரவர்கள் பணித்தாரோ, அந்தச் சமுதாய மக்களுக்கு பணியாற்றுவோம் என்ற உறுதி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் மேதகு ஆளுநர் அவர்கள் நல்லதொரு வரலாற்றுச் சான்றுகளைத் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 15—7—1983 முதல் நிறுவன நிதித் துறை என்ற துறையை நிறுவி, நலிந்த பிரிவினருக்குப் பயன்படும் அளவில் அந்த நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு, சில மாதங்களில் ரூபாய் 30.16 கோடி அளவுக்குக் கடன்கள் 1,70,564 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சார்ந்துள்ள முடி திருத்துவோர் சமுதாயப் பெரு மக்களும் இதன் மூலம் பலன் அடைந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து, 1977 ஆம் ஆண்டு என்னை இந்த இயக்கத்தில் அர்ப்பணித்துக்கொண்டபோதிலிருந்து 6 ஆண்டுக்கால இடைவெளியில் நலிந்தோர் பிரிவாக உள்ள மருத்துவச் சமுதாய மக்களுக்கு, முடி திருத்துபவர்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்பது எனக்குத் தெரியவில்லை என்றாலும், பதவி ஏற்ற பின் முதன்முதலாக காஞ்சீபுரத்தில் எனக்குப் பாராட்டுக் கூட்டம் நடந்தபோது, என்னிடத்தில் ஒன்றைத் தெரிவித்தார்கள். யாரும் மனு கொடுக்காமல், எந்தச் சங்கமும் வேண்டிக் கொள்ளாமல், ஒரு மருத்துவர் சமூகத்தின் பிரதிநிதி அவர் தெரிவிக்காமல், இந்தப் புனித அரசு, பொன்மனச் செம்மல் அரசு மருத்துவச்



1984 பிப்ரவரி 15] [திரு. மு. மாசிலாமணி]

சமுதாயப் பெரு மக்களுக்கு, 104 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கியிருப்பதைக் கண்டு நான் பெருமிதம் கொண்டேன். இதைக் கேள்விப்பட்டு நான் பூரித்தேன். எனக்கே தெரியவில்லை. புரட்சித் தலைவர் அரசு, தமிழக அரசு நலிந்த பிரிவினருக்கு, மருத்துவச் சமுதாயத்திற்கு இதைச் செய்திருக்கிறது. இதேபோன்று கோவை மாவட்டத்திற்கும், பெரியார் மாவட்டத்திற்கும் நான் சென்றபோது, அங்கேயும் நூற்றுக்கணக்கான வீட்டு மனைப் பட்டாக்களை அரசு வழங்கி இருக்கிறதென்றும், மேலும் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, என்னிடத்தில் மனு கொடுத்திருக்கிறார்கள்

அடுத்து, முடி திருத்தும் தொழில் செய்பவர்களும், வைத்தியம் பார்ப்பவர்களும், நாதஸ்வரக் கலைஞர்களாக இருப்பவர்களும் தமிழகத்தில் சுமார் 29 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். அண்மையிலே தமிழக அரசு அமைத்த அம்பாசங்கர் குழு இவர்களுடைய மொத்த எண்ணிக்கை சுமார் 20 இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் இப்படி குறைவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களைச் சந்தித்துப் பார்த்தவர்களுடைய எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டு அவ்வாறு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இச்சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே மருத்துவர் பல்வேறு பெயர்களில் 29, 30 லட்சம் பேர் வாழ்கிறார்கள். அரசு கெசட்டில் கூட மருத்துவர் என்று குறிப்பிட்டு பிராக்கெட்டுக்குள் (நாவிதர்) என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்தில் மருத்துவர் (மங்களா) என்று சொல்கிறார்கள். அதுபோல் தெலுங்கு பேசுகிறவர்கள் ஒருவிதமாகவும் தமிழ் பேசுகிறவர்கள் வேறு ஒரு விதமாகவும் குறிப்பிடுகிறார்கள் இன்னும் சில பெயர்களில் மருத்துவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மருத்துவர் (பரோபகனாரி), மருத்துவர் (வேலைகாட்டு தலைவன்) என்றெல்லாம் ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்தாற்போல் ஒவ்வொரு பெயர் இருக்கிறது. கெசட்டில் அவற்றைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் அம்பட்டன், நாவிதர் என்றெல்லாம் பெயர் சொல்லி அழைத்த நேரத்தில், இதற்காக வேண்டிய பெரிய போராட்டத்தையே, போரையே எங்கள் தலைவர் பண்டிட் எஸ். ஆனந்தம் அவர்கள் நடத்தினார்கள். அதன் அடிப்படையில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். அப்போதே முடிதிருத்தும் தொழிலாளர்கள் என்று இருந்த பெயரை மாற்றி மருத்துவர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மருத்துவர் என்று அழைக்கும்போது, நாட்டிலே உள்ள டாக்டர்கள் "நாங்களும் மருத்துவர்கள் தான், ஆகவே அவர்களை மருத்துவர்கள் என்று அழைத்தால், எங்களுக்குச் சிக்கல் வரும்" என்று

எதிர்ப்பு தெரிவித்ததால். 25 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. மருத்துவர் (நாவிதர்) என்று மருத்துவருக்குப் பக்கத்தில் போட்டால், அவர்களுக்கு அரசுச் சலுகைகள் கிடைக்கும் என்று சொல்லி, இதனை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில், 1969 ஆம் ஆண்டிலிருந்து 1973 ஆம் ஆண்டு வரை மொத்தம் 11,740 சலூன்கள் இருந்தன. ஆனால் 1984 ஆம் ஆண்டு வரையிலான புள்ளிவிவரத்தைப் பார்ப்போமேயானால், இன்றைக்கு சென்னை மாநகரிலே மொத்தம் 15,600 சலூன்கள், அதாவது முடி திருத்தும் கடைகள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற முடி திருத்தும் கடைகளுக்குள் உள்ளாட்சித் துறை மூலமாக அல்லது மாநகராட்சி மூலமாக அதிகாரிகள் திடீர் திடீரென்று நுழைந்து. சலூன்களில் கழிவு நீர் செல்லுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதோடு கூட கடைக்காரர்கள் மீது வீண் பழி சுமத்தி 200 ரூபாய், 300 ரூபாய் என்று அபராதம் விதிக்கிறார்கள். இதை என்னுடைய கவனத்திற்கு சலூன்காரர்கள் கொண்டு வந்தார்கள். 1977 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த நேரத்தில், நான் கட்சி வேலை செய்துகொண்டிருந்தேன். அப்போது நான் மேலவை உறுப்பினராக இல்லை. அப்போது தான் என்னுடைய கவனத்திற்கு இப்பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நான் உடனே அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்களிடம் இதுகுறித்து விண்ணப்பம் கொடுத்தேன். அவர்கள் உடனே ஒரு உத்தரவு போட்டு அவ்வாறு செய்வதை நிறுத்தி வைத்தார்கள். இன்றையதினம் வரை அச்செயல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் இந்த அவையின் மூலமாக மருத்துவர் சமுதாய மக்களுக்கு நன்றி உணர்வோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நான் மேலவை உறுப்பினராக இல்லாத சமயத்திலேயே, யாரும் கேட்காமலேயே முடி திருத்துவோர் கண்ணீரைத் துடைத்திருக்கிறது. இது வரலாற்றில் பொறிக்க வேண்டிய ஒன்று. வட சென்னை மற்றும் தென் சென்னையில் இருக்கிற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் டிரெயினேஜ் லைன் கட்டவில்லையென்று சொன்னால், லைசன்ஸ் மறுக்கப்படும் என்று கூறுகிறார்கள். வீட்டுச் சொந்தக்காரர்கள். அல்லது கடைக்குச் சொந்தக்காரர்கள் அவ்வாறு டிரெயினேஜ் லைன் கட்டுவதற்கு அனுமதிப்பதில்லை. கடையைக் காலி செய்து கொடுத்து விடு என்று சொல்கிறார்கள். ஆகவே புனித அரசின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இதிலே உடனே கவனம் செலுத்தி முடி திருத்துவோருக்கு உதவ ஏற்பாடு செய்ய வேண்டும்.





அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் முடி திருத்துவோருக்கு, சவரத் தொழிலாளர்க்கு நீண்ட காலத் தவணையில் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள். நான் சுற்றுப்பயணம் செல்லும் போதெல்லாம் இதுசம்பந்தமாக ஆயிரக்கணக்கான கடிதங்கள் கொடுக்கிறார்கள். அவர்களுடைய கடைகளைப் பெரிதுபடுத்த, அழகுபடுத்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாய் வரை கடன் உதவி வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

ஆனால் அது நம்முடைய மாநில அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் என்பவை டெல்லியில் உள்ள மத்திய அரசின் கட்டுப்பாட்டில், அவர்கள் நிர்ணயிக்கும் முறையில் செயல்படுபவை. எனவே அவைகளை நாம் கேட்க முடியாது என்றாலும், நம்முடைய அரசின் மூலமாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகப் பரிந்துரை செய்து, அவர்களுக்குக் கடன் உதவி கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக அவர்கள் தங்களின் முடிதிருத்தகங்களை, சலூன்களை வளப்படுத்திக் கொள்ளவும் அழகுபடுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும் என்பதை இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நமது புரட்சித் தலைவர் மாண்புமிகு பொன்மனச் செம்மல் அவர்களின் அரசு முடிதிருத்துவோருக்கு மட்டுமல்லாமல், ஏழை எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் போன்ற நலிந்த பிரிவினருக்கு எல்லாம் உலக வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு உதவிகளைச் செய்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகியபோதும் சரி, இந்த ஆட்சி அதற்குப் பின்னாலே டிஸ்மிஸ் செய்யப்பட்டபோதும் சரி, நடிகர் சமுதாயத்தின் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களுடைய குடும்பம் நசிந்துபோய், முடிசூடா மன்னனாக இருந்த எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள் தன்னுடைய கண்பார்வையை இழந்து மறைந்த பிறகு, அவருடைய மனைவி மக்கள் கஷ்டப்படுவதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் பொன்மனச் செம்மல் அறிந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிகப் பெரிய நிதியை அந்தக் குடும்பத்திற்கு அளித்து, அவருடைய நினைவாக திருச்சியில் ஒரு கலையரங்கத்திற்கு பெயர் வைத்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதைப்போலவே இன்றைக்கு தாய்க்குலத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமளவுக்கு உதவிகளைச் செய்து வருகிறார்கள். விதவைகளுக்கும், வாழ்விழந்தவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் இன்றைய தினம் ஏராளமான உதவிகள் இந்த அரசாலே செய்யப்படுகின்றன. தாய்மார்களுக்காக என்றே ஒரு காப்பரேஷனை நிறுவி தமிழகத்தின் தாய்க்குலத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பி, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினராக இருக்கும் தாய்மார்களுக்கு நிதி உதவி கிடைக்க வழி வகை செய்திருப்பதோடு, அந்த நிறுவனத்திற்கு ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியையே நியமித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே நினைவு கூர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளெல்லாம் இன்றையதினம் வரலாற்றுச் சான்றுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. என்னுடைய மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் புரட்சித் தலைவர் அவர்கள் உதவிகளைச் செய்து வருகிறார் என்பதில்லை. சமுதாயத்தில் நலிந்த பிரிவினராக இருப்பவர்களுக்கும், நலிந்த நாடக நடிகர் நடிகைகளுக்கும் குடிசை மாற்று வாரியத்திலும் வீட்டு வசதி வாரியத்திலுமாக வீடுகளை அளித்திருக்கிறார்கள். இங்கே இருந்து பணியாற்றிய உறுப்பினர் மறைந்த மாவீரன், எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த திரு. அய்யாசாமி அவர்களை உங்களெல்லோருக்கும் தெரியும் என்றே கருதுகிறேன். 6 ஆண்டுக் காலம் உறுப்பினர் பதவியிலிருந்து கடைசியில் பிச்சை எடுக்காத அளவுக்கு சிரமப்பட்டு மறைந்துவிட்டார். அவருடைய துணைவியார் கஞ்சிகூட இல்லாமல் கஷ்டப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு மாண்புமிகு முதல்வர், எங்கள் தலைவர் அவர்கள் அவருக்கே உரித்தான பாங்கில் மறைந்த முன்னாள் காங்கிரஸ் அமைச்சராக இருந்த, போலீஸ் துறையின் அமைச்சராக இருந்த கக்கன் பெருமகனார் அவருடைய குடும்பத்திற்கு முன்பு உதவியதைப் போல், என்னுடைய சமுதாயத்தைச் சேர்ந்த திரு. அய்யாசாமி அவர்களின் குடும்பத்திற்கும் நிதி உதவி செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் இதைச் செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.



அதைப்போலவே காலஞ்சென்ற தியாகி எஸ். எஸ். விஸ்வநாத தாஸ் அவர்களின் குடும்பத்திற்கும் அரசு மான்யம் வழங்கி வருகிறது. கடந்த காலத்தில் நான் இந்த அவையில் உறுப்பினராக இருந்தபோது, டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, சென்னையில் பெரிய மாநாடு ஒன்று நடத்தி ஒரு தீர்மானமே கொடுக்கப்பட்டது. அப்போது தேசிய திலகம் விஸ்வநாத தாஸ் அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி கேட்டபோது கிடைக்கவில்லை. காரணம் கலெக்டர் அவர்கள் அவர்களின் குடும்பமே இல்லை என்று சொல்லிவிட்டார். நான் திருமங்கலம் சென்று வீட்டைப் பார்த்தபோது, அவருடைய வீடு 2000 ரூபாய்க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அங்கே ஒரு அம்பர் சர்க்கா நிலையம் செயல்பட்டு வருகிறது. அந்த வீட்டை அதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்த தேசிய திலகம் விஸ்வநாத தாஸ் அவர்களுடைய குடும்பத்திற்கு அரசு மாதம் ரூ. 75 நிதி உதவி கொடுத்து வருகிறது. நம்முடைய பொன்மனச் செம்மலின் அரசு அதை இரட்டிப்பாக்கி தற்போது ரூ. 150 கொடுத்து வருகிறது. அதற்காக நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றாலும் ரூ. 150 என்பது போதுமானதாக இல்லை. இன்றைய தினம் வரவு செலவுக் கணக்கைப் பார்த்தால், விலைவாசி உயர்ந்திருக்கிறது. விஸ்வநாத தாஸ் குடும்பத்திலுள்ள 5 பேருக்கும் குறைந்த பட்சம் 300 ரூபாயாவது தரவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விஸ்வநாத தாஸ் அவர்களுக்கு ஒரு சிலை வைக்க வேண்டுமென்று எங்கள் இயக்கத்தின் தலைவர்களைக் கேட்டு புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்ல இருக்கிறேன். கடந்த கால அரசு விஸ்வநாத் தாஸ் குடும்பத்தாருக்கு ரூ. 75 தான் கொடுத்தது. ஆனால் புரட்சித் தலைவரின் அரசு அதை உயர்த்தி ரூ. 150 கொடுக்கிறது. விஸ்வநாத் தாஸின் கடைசித் தம்பி ஹார்மோனியம் வாசித்தார். அவருக்கும் அரசு உதவி கிடைப்பது விடுபட்டுப் போயிருந்தது. பின்னர் புரட்சித் தலைவர் அரசு அவருக்கும் உதவி செய்தது. ஆனால் அவர் இன்றையதினம் காலமாகிவிட்டார். விஸ்வநாத தாஸ் அவர்களின் மூன்றாவது மகன் காசிநாத தாஸ் இரண்டாவது தங்கம்மாள் மூத்த மகன் சுப்ரமணிய தாஸ். காசிநாத தாஸ் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களை நேரில் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

1967 அமரர் அண்ணா அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு. அவர்கள் சொன்னார்கள், "மருத்துவ சமுதாயமும், சலவையாளர் சமுதாயமும்—அவற்றின் முதுகிலேதான் நாம் நடந்துகொண்டிருக்கிறோம்." என்னையும், திரு. கோலப்பனையும், விஸ்வகர்மா சமுதாயத்தைச் சேர்ந்த அருமை சகோதரர் அங்கமுத்து அவர்களையும் இந்த அரசு பரிந்துரை செய்திருப்பதை இந்த நாடே

போற்றுகிறது. ஆளுநர் உரை மீது பேச வாய்ப்புத் தந்த மேலவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய பேச்சைக் கேட்டு ஆதரவு தந்த அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்று எல்லோருக்கும் வள்ளுவப் பெருமகனார் சொன்னார். இந்த நாடு உள்ள அளவிலும், தமிழ் உள்ள அளவிலும், தமிழகத்திலே சான்றோர்கள் உள்ள அளவிலும், அறிஞர் பெருமக்கள் உள்ள அளவிலும் இந்த நல்லாட்சி நீண்டு வளர வேண்டும் என்று கூற மாண்புமிகு மேலவைத் தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய உரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த நிதி ஆண்டிற்கு அரசினுடைய கொள்கையாக ஆளுநர் அவர்களுடைய உரையில் 21 அம்சங்கள் முக்கியமான கொள்கைகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே, வரக்கூடிய ஆண்டில் இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த அரசு மத்திய அரசின் உதவியை எதிர்பார்க்கிறது.

(முற்பகல் 11-10)

அது அரசியல் பருவ காலங்களை ஒட்டித்தான் அமைகிறது. பருவம் சாதகமாக இருந்தால், உதவி முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் பாதியாவது கிடைக்கும். பாதகமாக இருந்தால், அறவே கிடைக்காது. அப்படிப்பட்ட நிலைமையில் அதை எதிர்பார்த்து அமையக் கூடிய சில திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படும் என்று தெரியவில்லை.

அரசாங்கக் கொள்கையில் மிக முக்கியமாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுபவை வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ளவர்களைக் கைதூக்கி விடுவதற்கும், வேலையின்மையைக் குறைப்பதற்குமான கொள்கைத் திட்டங்கள். ஆனால் இந்த வறுமைக் கோட்டைக் குறைப்பதற்கும், வேலையின்மையைக் குறைப்பதற்கும் வகுத்துள்ள திட்டங்களில் முக்கியமானது மத்திய அரசினுடைய உதவியை எதிர்பார்த்திருப்பதுதான். அப்படியில்லாமல் போனால், இந்தத் திட்டங்கள் செயலுக்கு வராது. எனவே இந்தக் கொள்கையில் மத்திய அரசு எதிர்பார்த்து அமைந்திருக்கக்கூடிய சில திட்டங்கள், கொள்கைகள் நிறைவேறாமல் போகக்கூடிய ஆபத்திருக்கிறது என்று சொல்கிறேன். குறிப்பாக, கல்வித் துறையில் புதிதாக ஒரு கொள்கை வகுக்கப்



பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த பொதுக் கல்வி, வேலை வாய்ப்புக்குத் தகுதியற்றதாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கல்வியைப் பயன்படுத்தி வரும்போது வேலை வாய்ப்பு குறைந்து விடுகிறது. அதனால் அந்த வேலை வாய்ப்பை அதிகரிக்கக்கூடிய அளவில் தொழில் நுட்பக் கல்வித் திட்டமே தேவையென்பதை, அதாவது "வொகேஷன் ஸ்கில்" என்ற நல்ல கொள்கையை அறிவித்தபோதிலும், மத்திய அரசின் எட்டாவது நிதி கமிஷனின் உதவியை எதிர்பார்த்தே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசின் நிதியாதாரத்தை மட்டுமே இதில் நாம் நம்பியிருக்கவில்லை. அப்படியானால் இன்றைக்கு எட்டாவது நிதிக் கமிஷன் எப்படிப்பட்ட திட்டங்களுக்கு உதவி தரும் என்ற வரையறையும் இல்லை. ஏனென்றால் மத்திய அரசுக்கே நிதி நெருக்கடி இருப்பதாகத் தெரிகிறது. அங்குள்ள நிலைமை அப்படி. அப்படி நிதிக் கமிஷனின் கொள்கையைப் பார்க்கும்போது, அது மாதிரி மாநிலங்களுக்கு இன்னும் கணிசமான அளவில் உதவி செய்யக்கூடிய அளவில் இல்லையென்று தெரிகிறது. மத்திய அரசுக்கு இருக்கிற நெருக்கடி அப்படி இருக்கிறது.

அப்படிப்பட்ட நல்ல திட்டங்கள், மத்திய அரசின் நிதி உதவியை நம்பி வெறும் அறிவிப்பாகப் போய் விடக்கூடுமோ என்ற அச்சம் நியாயமாக எழுகிறது. ஏழ்மையை அகற்றுவதற்குரிய திட்டங்கள் என்று சொல்வதில் பல்வேறு அம்சங்கள் இருந்த போதிலும், கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்குக் குறிப்பிட்ட திறமை உள்ளவர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை என்னால் ஏற்க முடியவில்லை. காரணம், திறமை உள்ளவர்களுக்கு அரசாங்கம் சொல்கிற அளவுக்குத் தகுதியில்லை. பஞ்சாயத்து யூனியனிலே எலெக்ட்ரீசியன், வயர்மேன் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நன்றாக, திறமையாக அந்த வேலை செய்பவர்கள் அதிகமாக எட்டாவது வகுப்பு வரைதான் படித்திருப்பார்கள். இதைப்போன்ற கட்டுப்பாட்டு உத்தரவுகளால் அவர்கள் பயன்பெற முடியவில்லை. திறமையும் அனுபவமும் கொண்டவர்கள் படிப்பில்லாதவர்களாக இருக்கிறார்கள். படித்தவர்கள் வேலை தெரியாதவர்களாக இருப்பதை நாம் அனுபவ பூர்வமாகப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட கோளாறுகள் இந்தத் திட்டத்தில் இருக்கின்றன. ஆகவே நகரங்களிலும் கிராமங்களிலும் வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் யாருக்கு லைசென்ஸ் இருக்கின்றதோ,

அவரைத் தேடிப்போய் அவருக்கு லஞ்சம் கொடுத்து வேலை வாய்ப்பை
ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். வேலை செய்வது இவர்கள். அவர்கள்
வெறும் லைசென்ஸ்தான் வைத்திருக்கின்றார்கள். அவர்கள் வேலை செய்ய
வில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அதை எப்படித் தீர்மானிப்பது? அவர்கள் படித்
திருக்கின்றார்கள். லைசென்ஸ் வைத்திருக்கின்றார்கள். இவர்கள் தவறான
ஏற்பாடு செய்துகொண்டு போய் வேலை செய்கின்றார்கள். அதை எப்படி
நாம் தீர்மானிப்பது?

**திரு. ப. மாணிக்கம் :** தீர்மானிப்பதிலே பிரச்சினை இல்லை. எற்கெனவே
எத்தனை வருடங்கள் அவர்கள் வேலை செய்திருக்கின்றார்கள் என்பது வேலை
கொடுத்தவர்களுக்குத் தெரியும். அவர்கள் பல பேர்களிடம் பழக்கப்பட்டிருக்
கின்றார்கள். லைசென்ஸ் பெற்றவர்களைக் கூப்பிட்டுக் கேட்கலாம். அவர்
களிடம் இந்த வேலைக்காரர்கள் எத்தனை வருடங்கள் வேலை செய்திருக்கின்
றார்கள் என்று கேட்கலாம். அவர்களுடைய அத்தாட்சிகளை வைத்துக்கூட
கொடுக்கலாம் என்பது என்னுடைய கருத்து. அடுத்து ஒரு மூடான
உத்தரவு இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தால்தான் கொடுக்கப்படும்
என்று இருக்கிறது. அவர்கள் 8 வருடம் அனுபவம் பெற்றிருக்கலாம். அந்த
அனுபவத்திற்கு அத்தாட்சியாக அவர்கள் எந்தெந்த இடத்திலே ஒயரிங் செய்
திருக்கின்றார்கள், வேலை செய்திருக்கின்றார்கள் என்று அவர்கள் வேலை
செய்த இடங்களிலே இருந்து கையெழுத்து வாங்கிவந்து கொடுக்கலாம்.
கிராமங்களிலே நில ஒதுக்கீடு செய்யும்போது. ஒரு முறையைக் கையாளுகின்
றார்கள். 4 பேர்களிடம் கிராமத்திலே விசாரிக்கச் செய்கிறோம். அங்கே
என்ன நடக்கிறது என்று. நமக்குத் தெரியும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்
நமக்குச் சாதகமாக இருந்தால், நடக்கும். இல்லையென்றால், ஊர் மொத்தம்
சாதகமாக இருந்தாலும், சாதகமான பதில் இருக்காது. இருந்தாலும் 8
வீடுகளிலே இவர்கள் ஒயரிங் பண்ணியிருந்தால், அந்த 8 வீடுகளில் இருந்து
கையெழுத்து கேட்டால்கூட போதும். அவர்களுக்கு தாராளமாகக் கொடுப்
பார்கள். அந்த அடிப்படையிலே கொடுக்கலாம். அப்படி ஆய்ந்தறிந்து
அந்த வேலைவாய்ப்புக்களை நாம் தர முடியும். எனவே இப்படிப்பட்ட
கோளாறுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. கல்விக் கொள்கையிலே ஒரு புதிய கொள்கையை அறிவித்
திருப்பது வரவேற்கக்கூடியதுதான். அது நிறைவேறுமா என்பதுதான்
சந்தேகம். அதற்கு நிதி உதவி அதிகம் தேவைதான். ஆனால் இப்போது
என்ன போக்கு ஆரம்பித்திருக்கிறது? நடைமுறையிலே என்ன நடக்கிறது?





அரசினுடைய நிதி வசதி குறைவு என்பது உண்மை,, அதை நான் ஏற்றுக்
கொள்கிறேன். இந்தத் துறையிலே வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால்
பொதுக் கல்வியினால் இப்போது பயன் இல்லை என்று தெரிந்திருக்கிறது.
அந்தக் காரணத்தினாலேயே, இப்போது பல தொழில் நுட்பக் குடும்பங்கள்
தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்திருக்கின்றன. அப்படி
ஆரம்பிக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. தனியார் தொழில் நுட்பக்
கல்வி நிறுவனத்தை ஆரம்பிக்கக்கூடாது, அது வேண்டாம் என்று சொல்ல
வில்லை. இன்றைக்குள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தினால்தான், நாம்
முன்னேற முடியும். ஆனால் அது எப்படிப் போகிறது என்று சொன்னால்,
பல்வேறு தொழில் குடும்பங்கள் தான் அனுமதி பெற்று பாலிடெக்னிக்குகள்
ஆரம்பித்திருக்கின்றன. எந்த இடத்திற்குத் தேவையோ அந்த இடத்தில்
நிதிவசதி குறைவால் இடைப்பதில்லை. ஒரு இடத்தில் ஆரம்பிப்பதற்கு
வசதி இருக்கின்றதா என்று கேட்கின்றார்கள். அவர்கள் இருக்கிறது என்றால்,
அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றார்கள். எனவே தொழில் நுட்பக் கல்வி
பரவலாக வருவதற்கு தனியார் துறைதான் தேவை என்பதை விட, அந்த நிறு
வனங்கள் தான் தேவை என்பதை விட, கிராமங்களிலே, ஊராமைப்புகளிலே
உள்ளவர்கள் நிதி வைத்துக்கொண்டு கேட்டால், அவர்களுக்கு முன்னுரிமைக்
கொடுத்து அனுமதிப்பதுதான் சரியாக இருக்கும். ஆனால் சில நிபந்தனை
களைப் போட்டுவிடுகின்றார்கள். இந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய
வேண்டுமென்றால், அதைப் பூர்த்தி செய்யக்கூடியது யார்? பெரிய தொழில்
குடும்பங்களில் இருப்பவர்களால்தான் அதைப் பூர்த்தி செய்ய முடியும். ஆகவே
அவர்கள்தான் அதைச் செய்கின்றார்கள். அவர்கள் அங்கே மாணவர்களாக
அவர்களுக்கு வேண்டியவர்களைத்தான் சேர்க்கின்றார்கள். அம்மாதிரி மூன்று
இடங்கள் எனக்குத் தெரியும். நான் குறிப்பிட்டு அவர்களைப்பற்றி இங்கே
சொல்ல விரும்பவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு இடம், பெரியார்
மாவட்டத்தில் ஒரு இடம், மேற்கு முகவை மாவட்டத்தில் ஒரு இடம்.
அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைத்தான் சேர்த்துக்கொள்ள முடியும்.
அதற்கு என்று சில அடிப்படைக் கொள்கைகளை அவர்கள் வைத்துக்கொண்டி
ருக்கின்றார்கள். மற்றவர்கள் சேர முடியாது. எனவே இப்போது அதிகப்
படித் தேவைக்குள்ளானவைகள், மருத்துவ, பொறியியல் கல்லூரிகள்தான்.
அவைகளுக்கு ஈடாக பாலிக்டெக்னிக் நிறுவனங்கள் வந்துவிட்டன. நிரம்ப
அப்ளிகேஷன்கள் வருகின்றன. தொழில் நுட்பக் கல்லூரிகள் அதிகம்
ஆரம்பிக்கலாம். அரசாங்கம் ஆரம்பிப்பது என்றால்கூட, நிதிப் பற்றாக்
குறை இருக்கலாம். இருந்தாலும் கிராமப்புறங்களிலே, பல ஊர்களிலே உள்ள

நிறுவனங்கள் பல இடங்களிலே, பல பேர்கள் சேர்ந்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி வைக்க நிதி சேர்த்துக்கொண்டு அனுமதி கேட்கின்றார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுப்பதுபோல், இந்தத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கவும் அனுமதி கொடுக்கலாம். அந்த முறையில் இந்தத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்க அவர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்றால், அதற்குத் தேவையான நிதி வசதியை அவர்கள் பெற்றுத் தருகின்றார்கள் என்றால், அப்படிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். அவர்களையும் இந்த முறையில் ஊக்குவிக்க வேண்டும். எனவே நிதிவசதி படைத்த தொழில் குடும்பங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று இருப்பதற்குப் பதிலாக, இப்படி பல பகுதிகளிலே, உள்ளவர்கள், ஊர்க்காரர்கள் கேட்டால் அதற்கு அனுமதி தருவதற்கு அரசு ஆலோசிக்க வேண்டும். மற்றொரு முக்கியமான அம்சம். வறுமை, வேலை வாய்ப்பு என்ற விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். இந்தச் சமுதாயத்திலே அந்தப் பிரச்சினை அவ்வளவு சுலபமாகத் தீரப்போகின்ற விஷயமாக இல்லை. வறுமையைத் தீர்க்க இந்த அரசு ஒன்றும் செய்வதற்கில்லை. இதில் முக்கியமான பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. அதனுடைய கொள்கையும் அப்படி அமைந்திருக்கின்றது. இன்று அமைத்திருக்கக்கூடிய தொழில் கொள்கை, பொருளாதாரக் கொள்கை இவைகள் எல்லாம் ஆண்டுதோறும் வருகின்றன. திட்டங்கள் என்று ஓரளவுக்கு வந்துகொண்டிருந்தாலும், ஒரு பக்கம் பொருளாதார வளர்ச்சி இருக்கின்றது என்றாலும்கூட, பலனில்லாமல் இருக்கின்றது. ஒரு படி ஏறினால் 3 படிகள் இறங்குகின்றன. இந்த நிலையில் வறுமையும் இருந்துகொண்டிருக்கின்றது. திட்டமிட்ட வளர்ச்சி

(முற்பகல் 11-20)

இருக்கின்றதா? இருக்கிறது. பொதுவான வளர்ச்சிதான். வளரும் பொருளாதாரத்தில், விலை உயர்ந்து வேலை வாய்ப்பு பெருகும் என்று சொல்கிறார்கள். அந்த சித்தாந்தம் சரியல்ல. நவீன பொருளாதார நிபுணர்கள் பலபேர் குறிப்பிட்டுவிட்டார்கள். நம்முடைய நாட்டிலே தண்டேகர் சொல்லியிருக்கிறார். ஜனநாயகத்திற்கே ஆபத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

ஏழ்மையைக் குறைப்பதற்கு வெறும் நிவாரண, தர்ம நடவடிக்கைகள் மட்டும் போதாது. குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. உதவி செய்வதென்பது தொன்றுதொட்டு இந்த நாட்டில் இருந்து வந்திருக்கிறது. பெரிய தர்ம நிறுவனங்களும் அமைப்புகளும் இருந்திருக்கின்றன. அதுமட்டுமே பிரச்சினையைத் தீர்க்காது. அதற்கு மாறாக தர்மம் செய்யக்கூடிய நிலையை மாற்றி, அவர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய முறையிலே செய்ய வேண்டும்.



தொழில் நுணுக்கத் துறையிலே இன்னும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "பைபர் டெக்னாலஜி" பனை நாரிலே தொழில் நுணுக்கத்தை அதிகப்படுத்த வாய்ப்பிருக்கிறது. அதுமட்டுமல்ல, நாணலில் பலவகை நாணல்கள் இருக்கின்றன. அவைகளிலே நார் எடுத்து அவைகளைக் கொண்டு பல பேர் படுக்கை விரிப்புகள், கதவு, ஜன்னல் ஆகியவைகளுக்குத் தொங்கவிடக்கூடிய விரிப்புக்கள் தயாரிக்கின்றார்கள். அப்படி 'ஃபைபர் டெக்னாலஜி' என்பதை விரிவான அளவிற்குக் கொண்டுவர முடியும். அதையும் நாம் யோசிக்க வேண்டும். இதன் மூலம் புதிய தொழில்கள் வளர்வது என்பதோடு வேலை வாய்ப்பும் பெருக முடியும். அதுமட்டுமல்ல, அதில் முதலீடு உண்மையிலேயே நிரந்தரப் பாதுகாப்பாக அமையும். அதுமாதிரி 'ஜியாலஜி". ஆனால், இப்போது, கல்லூரிகளில்தான் படிக்கும் வாய்ப்பு இருக்கிறது. 'சர்டிபைட் கோர்ஸ்' 'டிப்ளமா கோர்ஸ்' இல்லை. நம்முடைய கனிவளங்கள் பல்வேறு இடங்களில் இருப்பதைத் தெரிந்துகொள்ள தொழில் நுணுக்கத் துறையை ஆரம்பிப்பதன் மூலம் தமிழகத்திலுள்ள மண்வளம், பாறை ஆகியவைகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று பல நிபுணர்கள் கூறுகிறார்கள். அந்த மாதிரியும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக புதிய கல்லூரிகள் தேவை இல்லை. நம்முடைய பாலிடெக்னிக்குகளிலே இதை ஆரம்பிக்க யோசிக்கலாம் என்ற முறையிலே, இந்த ஆண்டிலேயே தொடங்க பரிசீலனை செய்யலாம் என்ற கருத்தைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிக முக்கியமாக இந்த ஆண்டில் காலம் தவறி பெய்த மழை. மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றி பல பழமொழிகள் உண்டு. 'காய்ந்தும் கெடுத்தது, பெய்தும் கெடுத்தது' என்று சாதாரண மக்கள் தமிழில் சொல்வார்கள். ஏற்கெனவே வறட்சி. அது ஒரு பக்கம் கோளாறு. இப்போது காலம் தவறி மழை பெய்திருக்கிறது. பெய்ததும் பேய் மழையாகப் பெய்திருக்கிறது. இல்லாத நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. விளைச்சல் 50 சதவிதம் குறைந்திருக்கிறது. அரசு பல்வேறு மதிப்பீடுகளைக் கொடுத்திருக்கிறது. ஆனால் மூன்று முறை மழை பெய்திருக்கிறது. முதல் முறையில் தான் பெய்மழையாக வந்தது. எதிர்பாராத முறையிலே வந்துவிட்டது. இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று ஏற்பட்டிருக்கிற நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. நெல், கடலை, பருத்தி, உளுந்து, மல்லி ஆகிய தானியங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 35 ரூபாய் கூடுதல் என்று அரசு அறிவித்திருக்கிறது. பரவாயில்லை. இல்லாத பட்சத்திற்கு 35 ரூபாய் கூடுதல் என்று கேட்க ஆசையாக இருக்கிறது. ஆனால் உண்மையிலேயே அது பலன் அளிக்காது. ஏழு ஏக்கரில் 13 மூட்டை நெல் கண்டிருக்

கிறது என்று சொன்னால், ஒரு ஏக்கருக்கு ஒன்பது மூட்டை காண வேண்டும். நான் திருத்துறைப்பூண்டி தாலுகாவில் நேரடியாகப் பார்த்து விட்டுச் சொல்கிறேன். சாப்பாட்டுக்குக்கூட நெல் கிடைக்கவில்லை என்று நம் உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பான அம்சங்களை நான் சொல்கிறேன். தஞ்சாவூருக்கு மட்டும்தான் நெல் விலையை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் மழை மாற்றி மாற்றி பெய்திருப்பதால் பாதி நெல் என்று சொன்னவர்களுக்குக்கூட தேறாத நிலை ஏற்பட்டிருக்கிறது. விலையைக் கூட்ட வேண்டும். வரக்கூடிய நாட்களில் நிச்சயமாக விலையேற்றம் ஏற்படும். எனவே அரசு அதற்குரிய கண்காணிப்பை பொது விநியோக முறையைச் சீர்படுத்தி, விநியோகிக்க அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-25)

பொதுவிநியோக முறை பற்றி இதிலே அழுத்தமாகக் குறிப்பிடப் படாதது வருத்தத்தை ஏற்படுத்துகிறது. பொதுவிநியோக முறையை எப்படிக் காப்பாற்றி இருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். நெருக்கடியான நிலைமையில் எப்படி பின்பற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது பேய் மழையால் சேதம் ஏற்பட்டிருக்கிறது. கொள்முதலிலே. விநியோகத்திலே அரசுக்கு முன் தயாரிப்பு இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள சேதாரம் மிக அதிகமாக இருக்கிறது. ஒரு ஏக்கரில் 13 மூட்டை தான் விளைச்சல் கண்டிருக்கிறது. எனவே அரசு கொள்முதல் செய்யும்போது 13 மூட்டை விளைச்சல் கண்டவரிடம் தொந்தரவு பண்ணக்கூடாது. ஜனாதிபதி அவர்கள் பேசியிருக்கிறார்கள்,

"Law should not be used to harass the citizens"

என்று பொதுமக்களைத் துன்புறுத்தும் அளவுக்குப் போகக்கூடாது. ஏமாற்றுவது என்பது வேறு. விளைச்சல் எப்படி இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு, பொதுமக்கள் ஒத்துழைப்போடு கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதலில் அப்படிக் கவனம் செலுத்தினால்தான், ஓரளவு செய்ய முடியும். சம்பாவில் எதிர்பார்த்த அளவுக்குக் கொள்முதல் செய்ய முடியாது. காவிரி நீர்ப் பிரச்சினையில் அந்தரத்தில் ஆடுகிறோம். இரண்டு மாநில அரசுகளுக்கு மத்தியில் உள்ள பிரச்சினை இது. வேறு இரண்டு மாநில அரசுகளும் இந்தப் பிரச்சினையில் வருகிறதென்றாலும்கூட, நாம் இந்தப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு, அந்தப் பிரச்சினையைப் பேசிப் பிரயோசனமில்லை. அந்தப் பிரச்சினையைத் தீர்வுக்குக்கொண்டு வரப் பார்க்க வேண்டும். தஞ்சை காவிரி டெல்டாப் பகுதியாக இருக்கிறது. காவிரிப் பகுதியிலே நம்முடைய விவசாய முறை இருக்



கிறதே, அதாவது பயிர் செய்யும் முறை "கிராப் பேட்டர்ன்"—அதை மாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். இதைச் சொல்லும்போது தஞ்சையிலே இரண்டு போகத்தை மாற்றுவதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் அவர்கள் கூப்பாடு போடுகிறார்கள் என்ற செய்தி வந்தாலும் வருத்தப்பட மாட்டேன். வருமானத்திற்காக அப்படிப்பட்ட பழக்கம் வந்து விட்டது. தொன்றுதொட்டுப் பார்த்தால், மிகத் தொன்மையான விவசாயம் காவிரிப் பகுதியில் இருந்திருக்கிறது என்பது வரலாற்றுப் பூர்வமாகச் சொல்லுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப்பற்றி நான் அறிந்த மட்டும், சொல்கிறேன். தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன். எனக்குப் பூர்வீகம் அந்த மாவட்டம் என்பதால் சொல்கிறேன். சிறு வயதில் உழவர்கள் வீட்டுக்குப் போனால் உளுந்தும், கொண்டைக் கடலையும் தாராளமாகப் பயன்படுத்துவதைப் பார்க்க முடியும். இன்றைக்கு அப்படிக் காண முடியவில்லை. அரசு பல திட்டங்களை அறிவிக்கிறது. நெல்லும், பயறு வகைகளையும் அதிகப்படுத்துமளவிற்கு, தஞ்சையிலே கிராப் பேட்டர்னை ஏற்படுத்த முயற்சிப்பது நல்லதாக இருக்கும். அதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டும். விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெற்று ஆவன செய்ய வேண்டும். காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். 'கிராப் பேட்டர்ன்' பற்றியும் யோசிக்க வேண்டும். இப்படிப் பட்ட பிரச்சினைகளை அரசு மேற்கொள்ளவில்லையே என்ற ஏமாற்றத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, வெள்ளம் வந்தது. தவறாக அரசு அறிவிப்பு வருகிறது. அது தவறான தகவலில் வந்த அறிவிப்பு. நல்ல விளைச்சல் இருக்கும் என்று சொன்னார்கள். இருக்கட்டும். அந்தப் பிரச்சினை உண்மையிலேயே விவசாயி வயிற்றிலே நெருப்பையும், கோபத்தையும் உண்டாக்கியது. இந்த மாதிரி வெள்ளம் வந்தால், என்ன செய்ய வேண்டுமென்று 'மாஸ்டர் பிளான்' இருக்கிறது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தார்களா? மாவட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்கள் மீது குற்றம் சாட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. 'மாஸ்டர் பிளான்' - வெள்ளம் வந்தால் என்ன செய்ய வேண்டும், என்ன எச்சரிக்கை எடுக்க வேண்டும், என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் ஒன்றும் செய்யப்படவில்லை. அந்தச் சமயத்திலே நான் சென்றிருந்தேன். பல இடங்களிலே விசாரித்தேன். மாஸ்டர் பிளானை கவனத்தில் எடுத்துக்கொண்டு செய்யப்பட்டதா? ஏன் செய்யவில்லை? என்னவாறு நேர்ந்தது? அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்தவில்லை. அத்தகைய சுணக்கம் ஏன் ஏற்பட்டது? அப்படி

[திரு. ப. மாணிக்கம்] [1984 பிப்ரவரி 15

ஏற்படும் இயற்கையின் சீற்றத்தை வெறும் அரசு மட்டும் சமாளிக்க முடியுமென்று நம்புகிறவன் அல்ல நான். அரசு மீது குற்றம் சுமத்த வேண்டுமென்று முயற்சிக்கவில்லை. வெள்ளத்தால், இயற்கையால் ஏற்பட்டுள்ள சேதம் அளவுக்கு மீறி ஏற்பட்டிருக்கிறது. [illegible] நடவடிக்கை

(முற்பகல் 11-30)

எடுக்கப்படவில்லை. இப்பொழுதைய [illegible] குறை என்று நான் எதிர்பார்க்கிறேன். இரண்டாவதாக மிக மிஞ்சிய மழை பெய்திருக்கிறது. இவர் மழை பெய்துள்ளது. 21, 22 ஆகிய தேதிகளிலே யாரும் எதிர்பாராத அளவுக்கு பெரு மழை பெய்துள்ளது. அதிகாரிகள் மழையைப்பற்றிக் கணக்கிடவில்லை. நடந்திருக்கிறது. புதுக்கோட்டையில் உள்ள குளங்கள் எல்லாம் உடைந்து அருகில் உள்ள கல்லணை போன்றவை எல்லாம் உடைந்தது. அந்தத் தண்ணீர் எல்லாம் வெண்ணாற்றில் புது ஆறில் எல்லாம் கலந்து அதன் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தண்ணீர் ஓடியது. இதையெல்லாம் அரசு எதிர்பார்த்து முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். எல்லா வெள்ளமும் ஒரு காலத்தில் ஒன்று திரண்டு வந்ததின் காரணமாக இவ்வளவு பெருக்கம் ஏற்பட்டது. இதற்குமேல் அதிக நேரத்தை நான் செலவிட விரும்பவில்லை. இந்தத் தடவை பல புதிய இடங்களிலுள்ள குளங்களில் கூட உடைப்பு எடுத்துள்ளது. 12 ஆயிரம் கன அடி தண்ணீர் செல்லக்கூடிய ஆற்றிலே 35 ஆயிரம் கன அடி தண்ணீர் ஓடியதாக பொதுப்பணித்துறை சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக கரைகள் எல்லாம் உடைந்து நூறு ஏக்கர் கணக்கிலே பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு [illegible] இருக்கிறது. இப்போது மறுபடியும் பெரு மழை பெய்திருக்கிறது. பொதுவாகவே மழை அதிகமாகப் பெய்தால் குளங்கள் உடைப்பு ஏற்படுமா என்று கேட்டால், நிச்சயம் ஏற்படும். எல்லாவற்றுக்கும் அரசாங்கமே உத்தரவாதம் கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதையும் உணர்கிறேன். இதற்கு முன்புகூட பல சந்தர்ப்பங்களில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. வேடசந்தூரில் உள்ள அணை உடைந்து, அந்தத் தண்ணீர் கரூரிலுள்ள அமராவதியில் வந்து, அது காவிரியில் கலந்து பெருவெள்ளம் ஏற்பட்டு, ஸ்ரீரங்கமே மூழ்கக்கூடிய அபாயம் ஒருபொழுது ஏற்பட்டது நமக்கெல்லாம் தெரியும். குளங்கள், கண்மாய்கள் குறித்து அரசு கவனம் செலுத்துவதாக ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. குளங்களை அரசு அவசியம் சீர்படுத்த வேண்டும். இவ்வளவு காலத்திற்குள் குளங்களைச் சீர்படுத்த வேண்டும் என்று காலத்தை நிர்ணயித்து அதற்குள் குளங்களைச் சீரமைக்க அரசு உறுதியாக இருக்க வேண்டும். ஏற்கனவே பல குளங்கள் நம் நாட்டிலே இருக்கின்றன. ஆனால் உள்ளபடியே இருக்கின்ற



1984 பிப்ரவரி 15] [திரு. ப. மாணிக்கம்]

பல குளங்களை நாம் காப்பாற்றத் தவறிவிட்டோம். இதுகுறித்து நான் இந்த அவையிலே பலமுறை பேசியிருக்கிறேன். ஆட்சிகள் மாறியிருக்கலாம். அந்தக் காலத்திலே முகலாயர் ஆட்சிக் காலத்திலாவது ஆகட்டும் அல்லது சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக் காலத்திலாவது ஆகட்டும் பல குளங்களை அமைத்து அற்புதமாக என்று நீர்ப்பாசன முறையைக் கூட கடைப்பிடித்து வந்தார்கள். அப்படி அமைத்த பல குளங்களை, கண்மாய்களை பல்வேறு காரணங்களால், அரசியல் செல்வாக்கு காரணமாக உடைத்து விட்டார்கள். கால்வாய்களை தூர்த்துவிட்டார்கள். இதன் காரணமாக பெய்கின்ற மழைத் தண்ணீர் தேங்கி நிற்பதற்கு வழியில்லாமல் பயனில்லாமல் ஓடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. வெள்ளம் என்பது இன்று நேற்று நிகழும் ஒன்றல்ல. வெள்ளம் வருமென்பது தெரிந்துதான் அந்தக் காலத்திலேயே கரிகால்சோழன் கல்லணையைக் கட்டியிருக்கிறான். ஆக, வெள்ளம் என்பது எப்போதும் உண்டு. இப்போதுதான் வெள்ளம் என்பதல்ல. ஆனால் இப்படி வருகின்ற வெள்ளத்தைத் தேக்கி வைக்கக்கூடிய முறையிலே செய்யத் திட்டத்திலே நாம் தவறியிருக்கிறோம். நம்முடைய நிலத்தடி நீர் வெளியேறி போய்விட்டது. ஏரி, குட்டைகள், கண்மாய்கள் இல்லாத நிலையில் இன்னும் சில ஆண்டுகள் சென்றால், நீர் வற்றிப் போய்விடும். பச்சை குழந்தைகள் பிறந்தால் எப்படி ஒரு தாயின் தாய்ப் பால் வற்றி விடுமோ அதுபோல் நிலத்தடி நீரும் வற்றிப் போய்விடும். நிலத்தடி நீர் ஏற்கனவே தாழ்ந்துகொண்டே இருக்கிறது. ஏரி, குட்டைகள், கண்மாய்கள் போன்றவற்றை ஏற்படுத்தி, சீரமைத்து அதன் மூலம் நீர் எப்போதும் நிலத்தடியில் தேங்கி நிற்கும் வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். நிலத்தடி நீர் குறையாத நிலையில் இருப்பதற்கு அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் கால தாமதம் கூடாது. ஒன்றை நான் மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். குளக் கரைகளை வலுப்படுத்துவதற்கும், குளங்களை ஆழப்படுத்துவதற்கும் காண்ட்ராக்ட் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு நடைபெறுகின்ற வேலைகள் எல்லாம் மழை வந்தால் பாழாகி விடுகிறது. ஆகையால் உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. இவ்விதம் வேலைகள் நடைபெறுகின்ற இடங்களில் எல்லாம் மன்னிக்க முடியாத அளவுக்கு தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக பயிர்களுக்கு அழிவு ஏற்படுவது ஒருபுறமிருக்க உயிர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஏன் இந்த கதி? எனவேதான் இந்த விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். மிகக் கவனமாக இல்லையென்றால் தமிழகம் அதிகமான விலையைக் கொடுக்க வேண்டும். ஒன்று வறட்சியின் காரணமாக, மற்றொன்று வெள்ளத்தின்

[திரு. ப. மாணிக்கம்] [1984 பிப்ரவரி 15

காரணமாக எங்கெங்கே மனிதன் தவறு செய்கின்றானோ அங்கெல்லாம் அவனை இயற்கை விடுவதில்லை. ஒரு இடத்தில் நிராகரித்தால் இன்னொரு இடத்தில் கண்டிப்பாகப் பழி வாங்கும் என்று விஞ்ஞானிகளே சொல்லுகிறார்கள்.

வறட்சி நிவாரணத்தில் குளங்களைச் சீரமைப்பதில் தவறுகள் நடைபெற்றுள்ளன. ஏற்கெனவே குடிமராமத்து என்ற பழைய முறை இருந்தது. பல ஆண்டுகளாக, ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊர்க்காரர்களே முறை வைத்துக் கொண்டு அந்த மராமத்தைச் செய்து வந்தார்கள். அதன் காரணமாக நல்ல பலன் இருந்தது. வாய்க்காலிலிருந்து வண்டல் மண்ணை எடுத்து வயலுக்குப் போடுவார்கள். அதன் காரணமாக வாய்க்காலின் தண்ணீர் வருவது சுலபமாக இருக்கும். அப்படிப்பட்ட குடிமராமத்து முறையை என்ன காரணத்தாலோ நாம் கைவிட்டுவிட்டோம். நீர்ப்பாசனம் குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அப்படிப்பட்ட முறையை மீண்டும் ஏற்படுத்துவது குறித்து ஒரு முடிவெடுத்தோம். அதை நிர்வாகம் செயல்படுத்துவதில் குறைபாடுகள் இருக்கலாம் என்றாலும் மீண்டும் அதை எப்படியாவது கொண்டு வருவது குறித்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, பாசன அமைப்பில் நாம் குளங்களை பெருவாக நம்பியிருக்கிறோம். அத்தகைய குளங்களை நாம் சீர்படுத்தியாக வேண்டும். ஏற்கெனவே இந்த அவையில் சென்ற வரவு-செலவுக் கூட்டத் தொடரின்போது ஒரு வாக்குறுதியே தரப்பட்டது. குளங்களை இனிமேல் யாரும் குடிசை போடுவதற்கோ மற்ற காரியங்களுக்கோ ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் ஒரு அவசரச் சட்டமே போடப்படும் என்று சொல்லப்பட்டது. ஒரு 6 மணி நேரம் அதிகாரிகள் இரவில் உறங்கப் போய்விட்டால்கூட, இத்தகைய குளங்கள் இருக்கிற பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் எந்தவிதமான அனுமதியுமின்றி செய்யப்பட்டு விடுகின்றன. ஆகவே அவசரச் சட்டம் ஒன்றின் மூலமாக இத்தகைய ஆக்கிரமிப்புகள் தடுக்கப்படும் என்று வாக்குறுதி இங்கே அளிக்கப்பட்டது. மீண்டும் ஓர் வாக்குறுதியை நான் இங்கே கேட்கவில்லை. ஆனால் ஒரு கொள்கையை நிறைவேற்றுவதில் ஏன் இந்தக் காலதாமதம் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். இன்றையதினம் சென்னையைச் சுற்றியுள்ள பல குளங்கள் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருக்கின்றன அதற்குப் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். நான் அதன் உள்ளே போக விரும்பவில்லை. கட்சி அரசியலுக்காக நான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவும் விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை நாம் தடுத்து நிறுத்தாவிட்டால், சென்னையில் தற்போது வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் மக்களுக்குக் குடிப்பதற்குக் கூட நீர் இல்லாமல் போய்விடும்.



1984 பிப்ரவரி 15] [திரு. ப. மாணிக்கம்]

போன வருஷம் கிணற்றில் தண்ணீரே இல்லாமல் போய்விட்டது. சென்னையைச் சுற்றி வாழ்ந்தவர்கள் அவ்வளவு பேரும் பைப் தண்ணீரைத்தான் குடித்தார்கள் என்று யாரும் கருதத் தேவையில்லை. கிணற்றுத் தண்ணீரைத்தான் பயன்படுத்தினார்கள். ஒவ்வொருவரும் ஏராளமாகச் செலவு செய்திருக்கிறோம். கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக நிரம்ப செலவு செய்திருக்கிறோம். அப்படி செலவழித்தும்கூட நீர் கிடைக்கவில்லை. இது தமிழ்நாட்டில் உள்ள அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல. பாண்டிய நாட்டிலும் பல்லவ நாட்டிலும்தான் குளங்கள் அதிகம் என்று அரசாங்கமே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறது. எதற்காக அவர்கள் அதிகமான குளங்கள் வைத்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய புள்ளி விவரங்களை அரசே கொடுத்துவிட்ட பிறகு அந்தக் குளங்களைப் பாதுகாப்பதற்கும் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மட்டும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இத்தனை கோடி இதற்காகச் செலவிட இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ரொம்பவும் சரி. இவ்வாறு செலவிடுவது மட்டும் போதாது. ஏற்கெனவே இருந்த குடிமராமத்து முறையை, ஊர் மக்களைக் கொண்டே செய்வதற்கான முயற்சியையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காவிரிப் பகுதியில் வருகிற வெள்ளம், சில நேரங்களில் எதிர்பாராத அளவுக்கு அதிகமாக வந்துவிடும். அதற்கான வடிகால் திட்டத்தை ஒரு "நியூ மாஸ்டர் பிளான்" மூலமாகச் செயல்படுத்த வேண்டும். ஏற்கெனவே ஒரு மாஸ்டர் பிளான் இருக்கிறது. வெள்ளம் வந்தால் என்ன செய்வது என்பதுபற்றி இருக்கிறது. அதுவும் இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. அதுவே ஒரு குறைபாடு. நான் இப்போது சொல்வது பல ஆண்டுகளாகத் தூர்ந்துவிட்ட, மேடு தட்டிவிட்ட, மண் வந்து அடைத்துக் கொண்டதன் காரணமாக தண்ணீர் வரும்போது பழைய சொள் அளவு இல்லாமல் போவதன் காரணமாக தண்ணீர் கரைகளை உடைக்கிறது. காவிரியின் கரை முழுவதுமாக அங்கங்கே இப்படிப்பட்ட ஆபத்துக்கள் அதிகரித்து விட்டன. பல இடங்களில் தண்ணீரைத் தாங்குகிற குளங்கள் மேடு தட்டிப் போய்விட்டன. எனவே ஒரு புதிய 'மாஸ்டர் பிளான்' மூலம் வடிகால் வாய்க்கால்களையும் குளங்களையும் ஆழப்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டாக வேண்டும். எனவே இந்தத் திட்டத்தை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும் வெள்ளம் வருவதில்லை என்றாலும், ஒருமுறை வந்தால் ஒரு தலைமுறைக்கே கேடுதி செய்துவிடுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் ரூ. 40,000 வரை க்ரெடிட் பேங்கில் கடன் வாங்கி பயிர் செய்து அறுவடை செய்து ஒழுங்காகக்

கட்டிக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் வேதாரண்யம் பகுதியில் இன்றைய தினம் அறவே மூழ்கிவிட்ட நிலையில் முத்துப் பேட்டையில் இருக்கிற சிலர் அங்கே சென்று அவருடைய பொருள்களைத் திருப்பிக்கொண்டு போய் விட்டார்கள்.

(முற்பகல் 11-40)

இன்னொன்று ஒரு விவசாயி 15 ஏக்கர் வைத்திருக்கிறார். அவருடைய வீடு களை இழந்தது மட்டுமல்ல. அந்தக் கொள்ளையின் போது வீட்டிலே இருக்கிற நகைகளைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள். அந்தக் குடும்பம் தப்பித்தால் போதும் என்று ஓடிவிட்டது. இருந்தது என்றால் கட்டியபடியே இருந்துவிடுகிறார்கள். [illegible] 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருக்கும். குடிசைகள் இழந்த மக்கள் ஏராளம். ஆடு, மாடு, கோழி இழந்தது ஏராளம். ஆனால் ஏராளமான கோழிகளையும் விட்டுவிட்டு இருந்திருக்கிறார்கள். [illegible] வாழ்க்கை [illegible] இல்லை. அந்த [illegible] போகிறார்கள். நான் [illegible] காரணம் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் நிலத்தில் படிந்திருக்கிற மண்ணை எடுத்துவைத்து மீண்டும் அவர்கள் விவசாயத்துக்குக் கொண்டு வந்தால்தான் தெரியும். அதனால் தான் அம்மாதிரி இடங்களிலே 5 ஏக்கர் காரர், 10 ஏக்கர் காரர் என்று பார்க்காமல், அரசு [illegible] பகுதியிலே குறிப்பாக [illegible] சிறிய விவசாயியா, பணக்கார விவசாயியா என்று பாராமல், நிலங்களை மண் அறுத்து காயவைக்க வேண்டும். இருந்த பயிர் 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்து பயிர் செய்தேன் என்று சொன்னால், அவர் 10 வருடத்துக்கு வருந்திருக்க முடியாது. கடனைக் கட்ட முடியாமல் எனவே 60 வட்டிக்கு கடன் வாங்கி, வட்டி கட்டி, ஏலம் போட்டு நிலங்களை விற்கவும் செய்யலாம். அது வேறு விஷயம். அதை அவருடைய பிரச்சினையாக மட்டும் பார்க்கக்கூடாது. அப்படி ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடத்திலே இந்த நிலத்தை மீட்டுக் கருதுகிற பொறுப்பை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். அது ஓரளவு நிதிச் சுமை என்று கருதுகிறேன். இருப்பினும் அதை [illegible] செய்வது என்பதைச் சொல்லப்போனால், அதற்கு வட்டி இல்லாக் கடனாகக் கூட அரசு நீட்டிக்கலாம். அந்தக் கடன் தெரியாது. அவரைப் பொறுத்தவரையில், கடன் வட்டியும், அபராத வட்டியும் தான் வாங்குகிறார்களே தவிர, அவர் நிலத்தை மீட்டு விவசாயத்துக்குக் கொடுக்க வில்லை. பல பேர் போக முடியாமல் இன்றைக்கு திகைத்து நிற்கிறார்கள்.



எங்கு போவார்களோ, தெரியாது. எனவே அரசு அவர்கள் விஷயத்தில் ஒரு கொள்கையை மேற்கொள்ள வேண்டும். இப்படி வெள்ளச் சேதத்திற்கு அரசு [illegible] நடவடிக்கைகள் எடுத்தாலும்கூட, சில விஷயங்களை நான் குறிப்பாகச் சொல்வதற்குக் காரணம், இம்மாதிரி பணிகளில் நாம் வாதிடும்போது தொழிலாளிக்கு மட்டுமல்லாமல், சிறிய விவசாயியாகவும் இருக்கலாம், அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது; ஆனால் பணக்கார விவசாயிகள் கூட மீளமுடியாத நிலைமைக்கு ஆளாகி இருக்கிறார்கள். நெல்லை மீண்டும் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதிலும் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்.

கடைசியாக ஒரு முக்கியமான விஷயம், விலைக் கொள்கை பற்றியது. வரக்கூடிய ஆண்டில் கரும்புக்கு 160 ரூபாய் என்று விலையை அறிவித்திருக்கிறார்கள். கரும்புக்கு அந்த விலை சரியில்லை. நெல்லுக்கும், கரும்புக்கும் விலை சரியில்லை. தமிழ்நாட்டில் நவீன விவசாயம் செய்கிறார்கள். எனவே கரும்புக்கு விலையை உயர்த்த வேண்டும். நெல்லுக்கும் விலையை உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்துவதற்கு, மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அது நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கிறது. ஒரு முறை மத்திய அரசிடம் நாம் எல்லோரும் தூது கோஷ்டிபோல சென்று, மனு கொடுப்பதாக இருந்தோம். காவிரி வடிகால் பகுதியிலே, தாமிரபரணி பகுதியிலே, வைகைப் பகுதியிலே நெல் பயிரிடுவதற்கு ஆகும் விவசாயச் செலவு களை நம்முடைய அரசு கணக்கிட்டு, என்ன தேவை என்பதை அறிந்து, விலையை உயர்த்தாவிட்டால், நம்முடைய விவசாயப் பொருளாதாரம் நொறுங்கிவிடும். அரசு எவ்வளவுதான் பணத்தைச் செலவு செய்தாலும், கடன் கொடுத்தாலும், வட்டி வாங்க முடியவில்லை; கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்க முடியவில்லை. திரும்பப்போட வேண்டும், போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இது ஒரு விஷச் சக்கரம்போல் சுற்றி, வந்துகொண்டே இருக்கிறது. விவசாயச் செலவும் ஏறிக் கொண்டே இருக்கிறது. அது பெருகி வரக்கூடிய செலவாக இருக்கிறது. இப்போது ஒரு ஏக்கருக்கு 5 மெட்ரிக் டன் என்று சொல்லுகிறார்கள். நல்ல குறிக்கோள். அதை அடைய பல்வேறு முயற்சிகளைக் கையாண்டு, அதில் வெற்றி கண்டு, உற்பத்தி செய்து, 130, 135 ரூபாய்க்கு நெல் கொடுங்கள் என்றால் எவன் தருவான்? மெடீரியல் இன்வெஸ்ட்மெண்ட் எல்லோருக்கும் வேண்டியிருக்கிறது. விவசாயிக்கும் அது வேண்டியிருக்கிறது. நவீன விவசாயம் அப்படி அமைந்திருக்கிறது. இதையும் யோசிக்க வேண்டும். உற்பத்திச் செலவைச் சரியாகக் கணக்கிட்டு, விலை நிர்ணயிப்பதில் மத்திய அரசுடன் நாம் வெற்றி பெற வேண்டும். வேண்டுமானால் போராட்டம் என்ற வார்த்தையை அரசு ஏற்காவிட்டாலும், சில நேரங்களில் போராட்டத்தான்

வேண்டும். போராடுவது தப்பு அல்ல. போராட்டம் எதுவும் நடக்கவில்லை இந்த அரசு கூட போராட்டம் ஆதாரத்தால் வந்தது. வாதாடுகிறோம். போராட்டம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்போதுதான் இந்த விலைக் கொள்கை நிர்ணயமாக மாறும். இல்லாவிட்டால் தமிழகப் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படும்.

அடுத்து, தொழில் துறையிலே முக்கியமான பிரச்சினையை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழகத்திலே தொழில் வளர்ச்சி ஏற்பட்டது அதிகமாகவும் ஏற்பட்டது. மேலும் தொழில் வளர்ச்சிக்காக இப்போது வாய்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு முயற்சி எடுக்கவில்லை என்று நான் குற்றம் சாட்டி சொல்ல விரும்பவில்லை. முயற்சி எடுக்கிறது. இருப்பினும் மத்திய அரசின் ஒத்துழைப்பு இதில் மிகவும் அதிகம் தேவை. வைக்கப்பட்ட காலத்தில் அது கிடைக்கும் என்று நம்புகிறேன். எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பது 'நம்பிக்கை' யாகத்தான் இருக்கிறது, வானம் பொழியும் என்று நம்புவதுபோல, பொழிந்தாலும் உண்டு; சில நேரங்களில் மிகவும் ஆபத்தாகக்கூட மழை பொழியலாம். அம்மாதிரி நிலைமைகள்கூட வரலாம். இந்த உதவி பெறுவதும் பெறாததும் எப்படி இருந்தபோதிலும், தொழிற்சாலைகளை பல காரணங்களால் மூடுகிறார்கள். இன்றைக்குள்ள பொருளாதார நெருக்கடியிலும், காலப் போக்கிலும், ஆட்களைக் குறைப்பது வேலைப் பளுவை அதிகரிப்பது, சம்பளத்தைக் குறைப்பது போன்ற பல வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதற்குக் காரணம் தொழிலுக்குக் கட்டுப்பாடு இல்லையென்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் எல்லாவற்றையும் முறைப்படி தரவேண்டியிருக்கிறது. ஓரூரில் தொழிற்சாலையை ஆரம்பித்தால், சென்னையில் உள்ளதை விட குறைவான சம்பளம் கொடுக்கலாம், அதன்மூலம் வேலையையும் அதிகமாகப் பெற்று இலாபத்தையும் அதிகமாகப் பெறலாம் என்ற எண்ணத்தில் அங்கே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறார்கள். அதுபோன்ற காரியங்களுக்கு அரசாங்கம் ஆதரவு தரக்கூடாது. அது நல்லதும் அல்ல. நலிவடைந்த தொழிற்சாலை என்று சொல்லி மத்திய அரசும் பஞ்சாலைகளை ஏற்கிறது. மாநில அரசுகளும் ஏற்கின்றன. ஆனால் அப்படி ஏற்கும்போது, மறைமுகமாக மோசம் நடக்கிறது. எங்கே என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பல இடங்களில் நடக்கின்றது. பழைய ஆளே வேறு ஆளின் பெயரில் அந்தத் தொழிற்சாலையை ஏலத்தில் எடுக்கிறார், மனிதனின் கெட்டிக்காரத்தனத்திற்கு எல்லையே கிடையாது.



ஆனால் பின்தங்கிய இடத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசாங்கம் உதவுகிறது. அது நல்லது தான். ஆனால் அதையே பயன்படுத்திக் கொண்டு தொழிலாளிகளைக் குறைக்கவும், வேலைப் பளுவை சுமக்கவைப்பதுமான இப்படிப் பட்ட நெருக்கடிகளையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலைப் பொறுத்த வரையில், வேலை நிறுத்தம் போன்ற சங்கடங்கள் ஆகவே இதில் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தொழிலைப் பொறுத்த வரையில், வேலை நிறுத்தம் போன்ற சங்கடங்கள். ஏற்படும். தொழிலாளர் நலத் துறை கூட எப்படி இந்தப் பிரச்சினையில் பார்க்கிறது என்று சொன்னார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கிறது என்றார்கள். இதை ஓர் அமைப்பு முறையாகவே கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் துறைத் தொழில் களில் ஆட்களைக் குறைத்தும் வேலைப்பளுவை அதிகரித்தும் வருவதால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்பற்றி ஆழமாகப் பரிசீலித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க திட்டமிட வேண்டும். இதில் லாப நோக்கத்தைக் கருதக் கூடாது. அப்படிக் கருதவும் முடியாது. எல்லாவற்றுக்கும் சட்டங்கள் போட்டிருக்கிறோம். ஆனால் அதன்படி காரியங்கள் நடக்காவிட்டால், தமிழகத்தில் நெருக்கடிகள் ஏற்படும். அப்படிப் பட்ட போக்குகளை அரசு திருத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

தொழிற்சங்க அமைப்புக்கள்பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். அந்த இயக்கத்தில் பல பேர் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தில் 42 கட்சிகள் இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது, நமக்கே கூச்சமாக இருக்கிறது. ஒரு பேக்டரியை எடுத்துக் கொண்டால், 200 பேர் இருக்கிறார்கள். ஆனால் 200 பேர்களுக்கு 8 சங்கம் இருக்கிறது. முன்பெல்லாம் இப்படி அதிக சங்கங்கள் கிடையாது. நாம் எல்லோரும் சேர்ந்துதான் சங்கங்களை ஆரம்பிக்கிறோம். இதில் ஒளிவு மறைவு கிடையாது. ஆனால் பிரச்சினை என்று வந்து அரசாங்கத்திற்குப் போகும்போது, அந்தப் பிரச்சினைகளை அரசு எவ்விதக் கண்ணோட்டமும் இல்லாமல் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டும். ஆய்ந்தோய்ந்து ஆராய வேண்டும். சிலப்பதிகாரத்தில் கூட, கண்ணகி கூறும்போது, "ஆய்ந்தோய்ந்து பாராமல் தீர்ப்பளித்த மன்னன்" என்று சொல்வதாக இருக்கிறது.

இன்றைக்கு தொழிலாளர் துறையிலும், சங்கங்களின் அமைப்பிலும் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒரேயடியாகத் தீர்க்க முடியாது. அப்படி தீர்க்கவும் மாட்டார்கள். இதற்காக அதிகார முறையும் அமைப்பும் மாற்றப்பட வேண்டும். நான் அதற்குள்ளே விளக்க

[திரு. ப. மாணிக்கம்] [1984 பிப்ரவரி 15

(முற்பகல் 11.50)

ளாகப் போக விரும்பவில்லை. ஆனால் தமிழகத்தில் தொழில் துறையில் சட்டங்களைப் பார்த்து நியாயமான பரிகாரங்களை ஆய்ந்தறிந்து வேலை வாய்ப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட அணுகுமுறை இல்லை. வழக்கமாக நாங்கள் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறோம். நானும் திரு. நல்லசிவனும் தூயாபடன் நாள் தோறும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள் கொள்கைகள் ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. தொழிற் கொள்கையைப் பற்றிச் சொல்கிறோம். இப்போது உள்ள கொள்கையை மாற்ற வேண்டும் என்றுதான் சொல்கிறோம். அதனால் அரசுக்கு நல்ல பெயரா, அல்லது கெட்ட பெயரா, போதனை என்ற பிரச்சினைக்கே நாங்கள் போகவில்லை. தமிழகத்தி னுடைய பொருளாதாரம் பல்வேறு விதமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

1946-லே ஏற்பட்ட புரட்சி பற்றியெல்லாம் சொன்னார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலே பல்வேறு இடங்களிலே நெருக்கடியை உண்டாக்கினார்கள். பல் வேறு இடங்களிலே ஆட்சி மாறியிருக்கிறது. காரணம் அஸ்திவாரத்தில் அடிப்படையிலேயே சில கோளாறுகள் இருக்கின்றன என்பதை அரசு உணராமல் கவனிக்க வேண்டும். அதனாலேயே நாளைக்கே புரட்சி வரும் என்று நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட போக்குகளை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். அதையும் காலத்தே செய்ய வேண்டும். தொழில் உற்பத்தி நடக்க வேண்டும். உற்பத்தி குறைவால் என்ன ஆகிறது? தொழில் உற்பத்தியில்லாததால் பொருள்களில் விலைகள் ஏறுகின்றன. இம்மாதிரி விஷயத்திலே, தொழில் துறையிலே தொழில் முதலாளிகள் அனுசரித்துக் கொண்டிருக்கக்கூடிய கொள்கைகள் என்ன என்பதை அரசும் ஆராய்ந்தறிய வேண்டும். அதே மாதிரி தொழிலாளர்கள் கிளப்பக்கூடிய பிரச்சினைகளிலேயும், தொழிற்சங்கங்கள் கிளர்ச்சி நடத்துகின்றபோது, அதைச் சார்ந்த தொழிற்சாலைகளிலே, பல பேர்கள் "எங்களுக்கு இவ்வளவு போனஸ் வேண்டும், எங்களுக்கு இவ்வளவு சம்பள உயர்வு வேண்டும்" என்றெல்லாம் கேட்கின்றார்கள். அப்போது அவர்கள் ஆட்களைக் குறைக்கமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். தொழிற் சங்கங்களை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட நடத்தியிருக்கிறார் கள். அவர்களும் இதிலே அனுபவம் உள்ளவர்கள்தான். பல ஆண்டு களுக்கு முன்பு வேலை நிறுத்தம் நீடிக்கும் என்று சொல்வோம். பிறகு பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்வோம். வேலைநிறுத்தத்தை எந்த நேரத்திலே ஆரம்பிக்கலாம், எந்த நேரத்திலே முடிக்கலாம் என்று அவருக்கும் தெரியும். எந்த நேரத்திலே அதை நடத்தலாம் என்று தெரியும். தொழில்



1984 பிப்ரவரி 15] [திரு. ப. மாணிக்கம்]

துறையிலே, தொழிலாளர் நலத் துறையிலே இப்போதுள்ள கொள்கை யிலே, அணுகுமுறையிலே மாற்றம் வேண்டும். அதிலே சில நோக்கங் கள் இருக்கலாம். அதுபோலவே தொழிற் சங்கங்களும் நோக்கம் எதுவும் இல்லாமல் இருக்க முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொழில் துறையிலே, தொழிலாளர் நலத் துறையிலே அரசினுடைய போக்குகள் திருத்தப் பட வேண்டும். அதை நான் வலியுறுத்துகிறேன். காரணம் இந்த ஆண்டிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றித் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். சுற்றுப்புறச் சூழல் தூய்மைப்படுத்தல் மூலம் நமக்குச் சில அபிவிருத்தி ஏற்பட வேண்டும். தண்ணீரை, காற்றின் தூய்மையைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு என்று செப்டம்பரில் சட்டம் நிறைவேறி, அக்டோ பர் முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. இதனால் நமக்கு அதிக தொழில்கள் ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது. அப்படி அதிகமான தொழில்கள் ஏற்படுத்தும் போது, சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் குறைவு ஏற்படும். அதனாலே தொழில் வளர்ச்சியும், காற்றும் தண்ணீரும் பாதிக்கப்படுவதற்கு சாட வாய்ப்பு இருக் கின்றது. அதுபோன்ற நிலைமைகளில் தொழில் வளர்ச்சி தடைபடாமல் இருக்கவும், அதே நோக்கில் காற்றும் தண்ணீரும் பாதிக்கப்படாமல் இருப்ப தற்கும் நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும். அது இப்போது குறைவாக இருக்கிறது. இன்றைக்கு இதற்கென்று ஒரு துறையையும் உரு வாக்கியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே 5 ஆறுகள் இருக்கின்றன. அதிலே நமக்குச் சொந்தமான ஆறு ஒன்றுதான். அது தாமிரவருணி ஆறாகும். தாமிரவருணி ஆறு தூய்மை கெடாமல் இருந்தது. அது இல்லாமல் சின்ன ஆறுகளும் இருக்கின்றன. இருந்தாலும் தமிழ் நாட்டில் உள்ள 5 ஆறுகள், காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரவருணி ஆறு என்று இருக் கின்றன. அவைகளில் தாமிரவருணி ஒன்றுதான் நமக்கு இருப்பது. மற்றவை எல்லாம் வெளியிலிருந்து வருகின்றன. அந்த ஆறு மலையிலே இருந்து கீழே இறங்குகின்றது. தண்ணீர் மேலேயிருந்து கீழே இறங்குகின்ற இடம் புண்ணிய ஸ்தலமாகக் கருதப்படுகிறது. அங்கே இன்றைக்கு நூற்பாலைகள் மட்டு மல்லாமல், ஆர். வி. நெசவாலைகளும்கூட இருக்கின்றன. அந்தத் தண்ணீர் இறங்கி வருகின்ற இடத்திலே, கரையைத் தொடுகின்ற இடத்திலே சாயம் கலக் கிறது. அதைத் தள்ளிப் போனால் திருநெல்வேலி சாக்கடை இருக்கிறது. அருமையான தாமிரவருணி ஆற்றின் நீரில் அந்தச் சாயக் கழிவு கலக்கின்றது. அந்த நீரைச் சுத்தப்படுத்துவதற்கென்று என்ன ஆக்ஷன் எடுக்க இருந்தாலும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

எனக்குத் தெரியும். நான் குடியிருக்கின்ற பல்லாவரம் பகுதியிலேகூட தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் காரணமாக அந்த வட்டாரத்திலேயுள்ள பல்லாவரம் ஏரித் தண்ணீர் பாழாகின்றது. அதன்

நீர் அருமையான நீர். அது பாழாகின்றது என்று சொல்லி கமிஷனர் நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த முதலாளிகள் ஹைகோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கியிருக்கின்றார்கள். இதுவரைக்கும் ஒன்றுமில்லை. வேறு காரணங்களுக்காகவும் தொழிற்சாலைகள் குறைந்திருக்கின்றன. வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறது. அப்படி பாழ்படுத்தப்படுவதைத் தடுக்க இன்னும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு நடவடிக்கை எடுத்தால், தொழில் முதலாளிகள் கோர்ட்டுக்குப் போகத்தான் செய்வார்கள்.

மின்சாரத்திற்கு பல திட்டம் உண்டு. என்ன செய்கிறார்களோ செய்யட்டும். சில யோசனைகள், நல்ல திட்டங்கள் வைத்திருக்கிறார்கள். நிறைவேறினால், நல்லது. அப்போது தண்ணீரைக் காப்பாற்றுவதற்கு என்ற முறையிலே, 'பொதுமுதல் கண்ட்ரோல்' என்பதற்கு அரசு உண்மையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குளங்களை, நீர்ப்பிடிப்புகளைக் காப்பாற்றுவதற்கு உண்மையிலேயே சில நடவடிக்கைகள் தேவை. இன்றைக்கு அதை இல்லை. வழக்காட வேண்டுமென்ற முறையிலே அதை வற்புறுத்தவில்லை. அரசு எவ்வளவு காராகவும், பல உள்ள முறையிலும் என்ன என்ன உறுதியான நடவடிக்கைகளைக் கையாள வேண்டுமோ அவைகளைக் கையாண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீரைக் காப்பாற்றுவது அவசியம் வேண்டுமென்று பல இடங்களில் அராஜகமான முறையில் தண்ணீர் பாழாக்கப்படுகிறது. தமிழர்களுக்கு பதி நுட்பம் உண்டு என்று சொன்னால், தண்ணீரும் அதற்கு ஒரு காரணம். அது விந்தான உண்மை. ஆனால் தண்ணீர் கெட்டுக் கெட்டு, தமிழர்களின் மதி நுட்பமும் பாழாகிக் கொண்டிருக்கிறது. சுற்றுப்புறச் சூழல் தூய்மையைப் பாதுகாக்க இரண்டு சட்டங்களைக் கொண்டு வந்தோம். அதை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு சில திட்டங்களை மத்திய அரசு நிதி உதவியை எதிர்பார்த்து போட்டிருக்கிறது. அது ஆபத்தில் முடியும் என்பது என்னுடைய அச்சம். இருக்கக் கூடிய நிதி வாய்ப்புக்களைக் கொண்டு என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வெள்ளச் சேதம் ஏற்பட்ட பகுதிகளில் நிவாரணம் கிடைப்பதற்கும் சிறுசிறு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மாறாக, அவர்களுடைய ஒத்துழைப்போடு திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே அந்த மக்களோடு ஒத்துழைப்பை நேரடியாகப் பெறுகிற வகையில் வாய்ப்புக்களை அதிகப்படுத்தி, அம்மாதிரி புனரமைக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னொன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த 'மாஸ்டர் ...ிளான்' மீது என் நடவடிக்கை எடுக்கவில்லை? நடவடிக்கை எடுத்திருந்தால் ...சேதாரத்தைக் குறைத்திருக்கலாம். மாஸ்டர் பிளானை அதிகாரிகள் மறந்து ...ிட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே 'எங்கே ...றை? ஏன் அந்தக் குறை?' என்று கண்டுபிடித்து, அந்தக் குறையை நீக்கி ...ிருந்தால், வரக்கூடிய வெள்ளத்தில் சேதத்தைத் தவிர்த்திருக்கலாம். இல்லா ...ிட்டால் பழைய கதை தொடரும். அந்த விஷயத்தில் அரசு கவனம் செலுத்த ...வேண்டுமென்று சொல்லி, இதில் எதிர்பார்ப்புகள் அதிகமிருக்கின்றன. நடந்தால் ...ல்லது என்றி, அமர்கிறேன்.

திரு. எ. வெ. ஆ. வள்ளிமுத்து: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் ...அவர்களே, கவர்னர் உரையின்மீது நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ...ம்புரி ஜான் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நண்பர் அருணாசலம் ...அவர்கள் வழிமொழிந்து, நம்முடைய கவர்னர் உரையின் மீதான விவாதத்தைத் ...தொடர்ந்து, தொடர்ச்சியாக நானும் சில கருத்துக்களைப் பேச வேண்டுமென்று ...வாய்ப்பு பணித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

ஏற்கனவே கவர்னர் உரையில் அமைக்கப்பட்டிருக்கிற நல்லபல அம்சங்களை எல்லாம் மாற்றுக் கட்சி நண்பர்கள், எவ்வளவு இருந்தாலும்கூட, குறிப்பிடுவதே கிடையாது. அரசுக்கு யோசனை தருவார்களே தவிர, அரசு செய்த ...ல்ல காரியங்களுக்கு ஊக்கம் தருவது கிடையாது. இந்த அடிப்படையில்தான் ...நம்முடைய நண்பர்கள் எதிர்க்கட்சித் தோழர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். ...என்றால் தமிழ் நாட்டில் 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு ...கொடுமையான பஞ்சம் ஏற்பட்டிருந்தது, எவ்வளவு வறட்சி ஏற்பட்டது, அந்த ...வறட்சி எல்லாம் தமிழகத்தில் எப்படி சமாளிக்கப்பட்டதென்பதையெல்லாம் ...இந்த அவையிலே குறிப்பிட மறந்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல, இவ்வளவு ...நெருக்கடியான காலத்திலும், பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ...மக்களுக்கு நல்லபல உணவைத் தருவித்து, உணவைக் கொடுத்து உற்சாகம் ...கொடுத்து, இந்த நாட்டில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கிய ஓர் அரசு இருக்கிற ...தென்றால், அது தமிழக அரசு என்பதை யாராலும் மறக்க முடியாது.

(நண்பகல் 12-00)

நல்ல காரியங்களைப் பாராட்டுவதும், தவறு இருந்தால் அதைக் கண்டிப்பதும் தான் மற்றுங் கட்சியினரின், எதிர்க் கட்சியினரின் கடமையாக இருக்க வேண்டும். எதுவாக இருந்தாலும் குறை கூறுகிறார்கள். நல்லவைகளை மறந்து விடுவது என்ற அடிப்படையிலே இந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் தவறான எண்ணம் கொண்டு, இந்த அரசைப் பற்றி தவறாகப் புரிந்துகொண்டு, சொல்வது வழக்கமாக இருக்கிறது. ஆகவே கவர்னர் அவர்கள் உரையிலே உள்ள முக்கியமான விஷயங்கள் அனைத்தையும் மறந்து விட்டார்கள். கட்டிடத் தொழிலாளர்கள் மறைந்தால் 10,000 ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து கொடுப்பது என்ற திட்டத்தை தமிழக அரசு முன் வைத்திருக்கிறது. ஆக [illegible]ர்கள் இறந்தால், 10,000 ரூபாய் கொடுப்பது என்ற திட்டம் ஏற்கெனவே இருக்கிறது என்றாலும், ஓய்வு பெற்றாலும் 10,000 ரூபாய் என்ற அடிப்படையிலே அரசு இப்போது ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை வரவேற்றிருக்க வேண்டும். தவறான திட்டங்களாக இருந்தால், கண்டிக்க வேண்டும். அப்படி இல்லாமல் எதை எடுத்தாலும் கண்டிப்பது என்றால், இந்த அவையிலே நாம் சொல்லும் கருத்துக்களை பொது மக்கள் கேட்கவும் மாட்டார்கள், மகிழ்ச்சி கொள்ளவும் மாட்டார்கள். எதைக் கூறினாலும் மறந்துச் சொல்வது, நல்ல காரியங்களை [illegible] தவறு சொல்வது—இதுதான் தமிழகத்தில் எதிர்க் கட்சிகளின் [illegible] இருக்கிறது. இந்த நிலையிலே நம்முடைய மன்றங்கள் [illegible] என்று என்னைப் [illegible] வாது முதிர்ந்தவர்கள் நினைக்[illegible] இந்த மாமன்ற நடவடிக்[illegible] 1931லிருந்து, இங்கே உறுப்பினராக [illegible]ாலும்கூட, வெளியில் இருந்துகொண்டு நான் கவனித்து வருகிறேன். அரசின் நோக்கங்களை [illegible] எண்ணிப் பார்த்து, அதிகமாக [illegible] நானும் ஒருவன். ஆகவே இந்த மாமன்றங்கள் ஒரு காலத்திலே எப்படி இருந்தன என்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஒரு காலத்திலே சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதல்வராகவும், எதிர்க் கட்சித் தலைவராக திரு. ஏ. டி. பன்னீர்செல்வம் இருந்தபோது, எதிர்க் கட்சியும், ஆளுங் கட்சியும் எப்படி விவாதங்களிலே கலந்து கொண்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் நல்ல கருத்துக்களைக் கேட்டு ஆனந்தம் அடையும் வகையிலே அன்றைய தினம் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் இருந்தன. அப்படி இல்லாமல், நல்ல காரியங்களை மறந்து, இந்த அரசுக்குப் புதிய கருத்துக்களைச் சொல்வதுபோல சொல்லிக் கொண்டிருப்பது அனுபவம் மிக்கவன் என்ற முறையில் எனக்கு வருத்தமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் போன்றவர்கள் அந்தக் காலத்திலேயே ஆளுங் கட்சிக்கு





எதிராக இருந்து போராடியவர்கள். அப்படிப்பட்ட போராட்டங்களில் பங்கு கொண்டவர்களில் நானும் ஒருவன். வருங்காலத்திலே தமிழகத்திலே பஞ்சம், பசி, பட்டினி ஏற்பட்டபோது, பெற்றவர்கள் பிள்ளைகளை வளர்க்க முடியாமல், 'பிள்ளையோ பிள்ளை' என்று வீதியிலே விலைக்கு விற்ற காரணத்தால், வேலை கொடு அல்லது குடிக்க கஞ்சி கொடு என்று கூறியவர்கள். என்னைப் போன்றவர்கள், திரு. மாணிக்கம் போன்றவர்கள் அதிலே பங்கு கொண்டு, போராடியிருக்கிறோம். மாநிலத்திலே நல்லாட்சி அமைய வேண்டுமென்ற அடிப்படையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நல்லாட்சி உருவாக்கப்பட்டு, இன்று புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மக்கள் நல்லாட்சியை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எடுத்துக்காட்டாக ஆட்சி நடக்கிறதென்றால், அந்தப் பெருமையை நாடு நகரம், பட்டி தொட்டிகளில் பேசுகிறார்கள். அந்த நிலைமையிலே நல்லாட்சி நடப்பதைப் பார்த்து எதிர்க் கட்சிகள் பெருமைப்படவில்லை. நான் இதற்காக ரொம்பவும் வேதனைப்படுகிறேன், வருத்தப்படுகிறேன். நல்லதை நல்லது என்று கூறுங்கள். எதை எடுத்தாலும் தவறான கருத்துக்களைச் சொல்கிறார்கள். எது எடுத்தாலும் போராட்டம், எது எடுத்தாலும் எதிர்ப்பு தெரிவிப்பது. நல்ல காரியங்களைச் செய்ய முட்டுக்கட்டையாக இருப்பது—இதுதான் இந்த நாட்டின் எதிர்க் கட்சிகளின் நிலை என்றால், மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதை எண்ணிப் பார்த்து நல்லவைகளை நல்லது என்று சொல்ல முற்பட வேண்டும். கவர்னர் உரையிலே சொல்லப்பட்ட நல்ல காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. தலைவர்கள் பெயரால் மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை விட்டு விடுங்கள். சாதாரண மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய இந்த அரசு முற்பட்டிருக்கிறதே, அதை பாராட்டியிருக்க வேண்டாமா? கட்டிடத் தொழிலாளர்களுக்கு 10,000 ரூபாய் என்றால் பாராட்ட வேண்டாமா? எந்தத் தொழிலாளிக்காக எதிர்க் கட்சிகள் பாடுபடுகின்றன? தொழிலாளர்களுக்கு நல்ல காரியங்களை செய்ததைப் பாராட்டியிருக்க வேண்டும். அதைப் பாராட்டத் தயங்குபவர்கள் தொழிலாளிகளுக்காகப் பேச எந்த சந்தர்ப்பமும் இராது. இறுதியாக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்கள் ஒவ்வொருவரும் இவ்வளவு நேரம்தான் பேச வேண்டுமென்று நேரத்தை நிர்ணயித்து விட்டு போயிருக்கிறார்கள். எனக்குப் பிறகு நிரம்ப அனுபவம் பெற்றவர்கள் எல்லாம் பேச இருப்பதாலும், அவர்களுக்குக் குறுக்கே நான் நிற்கக் கூடாது என்பதாலும், இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-05)

## 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படியான விதிகள், ஆணைகள்.

*** 1. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குச் சொந்தமான வண்டிகளுக்கு மோட்டார் வண்டி வரி செலுத்தப்படுவதினின்று விலக்கு அளிப்பது தொடர்பாக, உள் (போக்குவரத்து-1) துறையின் 1—9—1983 ஆம் நாளிட்ட 1838 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் பட்டது.]

*** 2. தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) கீழ், தமிழ்நாடு புயல் பாதிப்புப் பகுதி தனிக் கட்டிட விதிகள் இயற்றுவது தொடர்பாக, ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2—9—1982 ஆம் நாளிட்ட, 1352 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) ஆம் பிரிவின் கீழ், அவை முன் வைக்கப்பட்டது.]

*** 3. தமிழ்நாடு, 1938 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 5/1938) தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்து விதிகளின் 42-A விதியில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள்துறையின் 16—2—1983 ஆம் நாளிட்ட 302-ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1938) 3 ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 4. தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு சாராய வடிசாலை விதிகள் இயற்றுவது தொடர்பாக, மதுவிலக்கு ஆயத் துறையின் 4—3—1983 ஆம் நாளிட்ட 155 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]



*** 5. இலங்கை அகதிகளுக்கு தமிழ்நாடு சிறுதொழில் கழகம் ஏழுபது சிறுகடைகளை விற்றதற்கு விற்பனை வரி செலுத்துவதினின்று விலக்கு அளிப்பது தொடர்பாக, வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 21—7—1983 ஆம் நாளிட்ட, 601 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 6. வருவாய்த் துறையின் 22—5—1962 ஆம் நாளிட்ட 2437/1962 ஆம் எண்ணுள்ள அறிவிக்கை I-1யில் திருத்தங்கள் வெளியிடுவது தொடர்பாக, 1—3—1983 ஆம் நாளிட்ட வணிக வரிகள் அறநிலையத் துறையின் 299 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 7. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக வருவாய்த் துறையின் 6—6—1983 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 8. இலுப்பூர் அங்காடியை அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 25—7—1983 ஆம் நாளிட்ட 1362 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 9. தமிழ்நாடு திரையரங்கக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான செயல்முறை பற்றிய பதினோராவது ஆண்டு அறிவிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( ) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 10. தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக வணிக வரி-அறநிலையத் துறையின் 11—5—1983 ஆம் நாளிட்ட 518 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

*** 11. சென்னை, திருவாளர்கள் பண்டாலை கார்டியோ தொராசிக் பவுண்டேசன் நிறுவனத்திற்கு, நோயாளிகளை எடுத்துச் செல்லும் ஊர்தியை விற்றதற்கு விற்பனை வரியினின்று விலக்கு அளிப்பது தொடர்பாக 15—7—1983 ஆம் நாளிட்ட வணிகவரி-அறநிலையத் துறையின் 763 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

*** 12. கிராமப்புறச் சிறார்களுக்கு இலவசப் பல்பொடி வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திற்குப் பல்பொடி விற்றதற்கு விற்பனை வரியினின்று விலக்கு அளிப்பது தொடர்பாக, 28—12—1982 ஆம் நாளிட்ட வணிகவரி-அறநிலையத் துறையின் 1429 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

*** 13. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ், அனுமதியளிக்கப்பட்ட திருவொற்றியூர் நகராட்சியின் 4-ஆம் நகரமைப்புத் திட்டத்தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 617 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப் பட்டது.)

*** 14. தமிழ்நாடு, 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத் திற்கு மாற்றங்கள் செய்தது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 816 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப் புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

*** 15. மாம்பலம் விரிவாக்கப் பகுதி (தி. நகர்) நகர அமைப்புத் திட்டத் தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக, வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 9—6—1983 ஆம் நாளிட்ட 884 ஆம் நாளிட்ட அரசாணையில் வெளி





யிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

16. தமிழ்நாடு, 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டததின் கீழ், பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 5—2—1983 ஆம் நாளிட்ட 230 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

17. மீஞ்சூர், அரியன்வயல் கிராமங்களை சென்னைப் பெருநகர் பகுதியில் சேர்ப்பதற்கான பெருந்திட்டத்தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக. வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 818 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

18. தமிழ்நாடு, 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்கீழ், மயிலாப்பூர் தென்பகுதி நகர அமைப்புத் திட்டத்தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 9—6—1983 ஆம் நாளிட்ட 883 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

19. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ் திருவொற்றியூர் நகராட்சியின் 4-ஆம் எண் பகுதித் திட்டத்தில் மாற்றங்கள் செய்தது தொடர்பாக, வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 24—1—1983 ஆம் நாளிட்ட 156 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

20. சென்னை, யூனானி மருந்து வட்டார ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான (பதிவெண்கள் TNJ 1914 மற்றும் TMT 2825) மோட்டார் வண்டிகளுக்கு செலுத்தப்படும் வரியைக் குறைப்பது தொடர்பாக உள்துறையின் (போக்குவரத்து-1) 11—10—1983 ஆம் நாளிட்ட 2112 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

21. தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு மரங்கள் (எடுத்துச் செல்லுதல் மீதான கட்டுப்பாடு) ஆணையில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக வன-மீன் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1145 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு-கேட்டுப் பெறுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1949) 2 ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

22. தமிழ்நாடு, 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளின் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, உணவு-கூட்டுறவுத் துறையின் 8—8—1983 ஆம்' நாளிட்ட 567 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப் பட்டது.)

23. அமோனியம் குளோரைடு, சோடா உப்பு தயாரிப்பதற்காக, தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் அம்மோனியா வாயு விற்பனை செய்வதற்கு விற்பனை வரி செலுத்துவதினின்று விலக்கு அளிப்பது தொடர்பாக வணிக வரி-அறநிலையத் துறையின் 1—7—1983 ஆம் நாளிட்ட 712 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

24. வணிகவரி-அறநிலையத் துறையின் 25—7—1977 ஆம் நாளிட்ட 1162 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையினை ரத்து செய்தது தொடர்பாக வணிகவரி-அறநிலைத் துறையின் 11—11—1982





ஆம் நாளிட்ட 1256 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப் பட்டது.)

††† 25. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பாசனப் பணிகள் (கன்னி வாய்க் கால் கட்டுதல்) சட்டத்தின் நோக்கங்களுக்காக சில பாசனத் திட்டங்களையும், கால்வாய்களையும் பாசனப் பணிகளாக அறிவிப்பது தொடர்பாக பொதுப் பணித்துறையின் 3—6—1982 ஆம் நாளிட்ட 1106 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பாசனப் பணிகள் (கன்னி வாய்க்கால் கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1959) 9 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 26. வணிகவரி-அறநிலையத் துறையின் 3—1—1981 ஆம் நாளிட்ட 11-ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, வணிகவரி-அறநிலையத் துறையின் 29—4—1983 ஆம் நாளிட்ட 476 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 27. 18—3—1970 ஆம் நாளிட்ட, 86/1970 ஆம் எண்ணுள்ள வருவாய்த் துறை அறிவிக்கையில், திருத்தம் செய்தது தொடர்பாக, 13—4—1983 ஆம் நாளிட்ட வணிகவரி-அறநிலையத் துறையில் 423 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 28. 6—9—1969 ஆம் நாளிட்ட வருவாய்த்துறையின் அறிவிக்கை
III 539/1969 இல் திருத்தங்கள் செய்தது தொடர்பாக, 19—4—1983 ஆம் நாளிட்ட, வணிகவரிகள்-அறநிலையத் துறையின், 436 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

††† 29. தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, 29—4—1983 ஆம் நாளிட்ட வணிகவரி-அறநிலையத் துறையின் 475 ஆம்

எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 30. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ், நுங்கம்பாக்கம் கிழக்குப் பகுதி நகர அமைப்புத் திட்டத்தில் மாற்றங்கள் செய்வது தொடர்பாக, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 18—3—1983 ஆம் நாளிட்ட 624 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

††† 31. திருவாளர்கள் சென்னை, பெட்ரோ-கெமிகல் லிமிடெட் நிறுவனத்திற்கு HVI ஸ்பிண்டில் எண்ணெய் விற்பனை செய்தது குறித்து 8% லிருந்து 4 % ஆக விற்பனை வரியை குறைத்தது தொடர்பாக, வணிக வரி-அறநிலையத் துறையின் 27—9—1983 ஆம் நாளிட்ட 1093 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 32. தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விற்பனையாகும் எல்லா வகையான தாவர எண்ணெய்களுக்கும், புண்ணாக்குகளுக்கும், வரியைக் குறைக்கும் பொருட்டு திருத்தங்கள் செய்வது தொடர்பாக வணிகவரிகள்-சமயஅறக்கட்டளைகள் துறையின் 10—11—1983 ஆம் நாளிட்ட, 1300 ஆம் எண்ணுள்ள அரசாணையில், அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 33. தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு, உணவகங்கள்-தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகளுக்கான வரி விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக வணிகவரிகள்-சமயஅறக் கட்டளைகள் துறையின் 25—8—1983 ஆம் நாளிட்ட 764 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு உணவகங்கள்-தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகளுக்கான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)



††† 34. தமிழ்நாடு, 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, வருவாய்த் துறையின் 11—7—1983 ஆம் நாளிட்ட 1220 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 35. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் 140- விதியில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, வருவாய்த் துறையின் 11—10—1983 ஆம் நாளிட்ட 2110 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 36. சென்னை, புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்குச் (W.I.A.) சொந்தமான TMK 4378 ஆம் எண் மோட்டார் வண்டிக்கு வரி வீதத்தைக் குறைக்க திருத்தம் செய்வது தொடர்பாக, உள்துறையின் 25—10—1983 ஆம் நாளிட்ட 2247 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 37. திருச்சிராப்பள்ளி காஜாமலை மகளிர் சங்கத்திற்குச் சொந்தமான TNX 2527 ஆம் எண் ஆம்புலன்ஸ் வண்டிக்கு வரியைக் குறைப்பது தொடர்பாக, உள்துறையின் (போ.-I) 26—10—1983 ஆம் நாளிட்ட 2260 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 38. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான TNU 7600, MDA 8380, TNW 9500 ஆம் எண் மோட்டார் வண்டிகளைப் பொறுத்தவரையில் வரியைக் குறைப்பது தொடர்பாக, உள்துறையின் (போ. I) 31—10—1983 ஆம் நாளிட்ட 2303 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

††† 39. திருச்சிராப்பள்ளி பர்மா அகதிகள் விற்பனை செய்கின்ற பொருள்களுக்கு விற்பனை வரி செலுத்துவதினின்று விலக்களிப்பது தொடர்பாக, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20—5—1983 ஆம் நாளிட்ட 567 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 40. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் உள்துறையின் 21—10—1975 ஆம் நாளிட்ட ப 3900/75 ஆம் எண் அறிக்கையை ரத்து செய்வது தொடர்பாக உள துறையின் (போ. I ) 26—10—1983 ஆம் நாளிட்ட 2259 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 41. கிராமப் பகுதிகளிலுள்ள சாலைகளில் பயணிப் பேருந்துகளாகப் பயன்படுத்தப்படுகின்ற ஜீப் வண்டிகளுக்குச் சலுகை வீதத்தில் வரி விதிப்பது தொடர்பாக உள்துறையின் (போ. I ) 29—9—1983 ஆம் நாளிட்ட 2038 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 42. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கும் அதிகாரியை நியமனம் செய்வது தொடர்பாக, உள்துறையின் (போ. I ) 14—10—1983 ஆம் நாளிட்ட 2160 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25. (2) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 43. வேளாண்மை காரியங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களும், ஏனைய தனியார் சொந்தக்காரர்களும் பயன்படுத்துகின்ற டிராக்டர் தொடர் வண்டிகளுக்கு வரி செலுத்துவதினின்று விலக்களிப்பது தொடர்பாக, உள்துறையின் (போ. I ) 18—3—1983 ஆம் நாளிட்ட 596 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 44. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் விடுதி (இடவசதி) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக, பொதுத்துறை (பணியாளரமைப்பு I )யின் 10—11—1983 ஆம் நாளிட்ட 1823 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).



††† 45. வருவாய்த்துறையின் 18—11—1983 ஆம் நாளிட்ட SRO No. 3570||a|80 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக, வருவாய்த் துறையின் 17—3—1983 ஆம் நாளிட்ட 468 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அதிகாரிகளின் பதவிகள் நீக்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 12 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 46. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக, உள்துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 2048 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

††† 47. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் 7 ( i ), 4 ( a ), 5 (4) பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக, வேளாண்மைத் துறையின் 29—8—1983 ஆம் நாளிட்ட 1543 ஆம் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)

††† 48. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் கீழ் குன்னத்தூர், சத்தியமங்கலம், புஞ்சை-புளியம்பட்டி, கோபிச்செட்டிப்பாளையம் அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குதல் தொடர்பாகவும், நம்பியூர் அங்காடியை அறிவிக்கையிடப்பட்ட அங்காடியாக அறிவிப்பது தொடர்பாகவும், வேளாண்மைத் துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 1749 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 49. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் கீழ் சிவகங்கை, திருபுவனம் ஒழுங்குமுறை அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குதல் தொடர்பாக, வேளாண்மைத் துறையின் 21—10—1983 ஆம் நாளிட்ட 1832 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை

வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 50. புதுக்கோட்டை மாவட்டத்தில் பருத்தி, சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் ஆகியவற்றை வாங்குவதற்கும் விற்பனை செய்வ தற்கும் கட்டுப்பாடு விதிப்பதனை அறிவிப்பது தொடர்பாக, வேளாண்மைத் துறையின் 21—10—1983 ஆம் நாளிட்ட 1833 ஆம் எண் அரசாணையில் அறி விக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 51. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் கீழ், சென்னையிலுள்ள விலங்குகள் நல வாரியத்தின் இய ஊர்தி பிரிவைப் பொறுத்தவரையில், மோட்டார் வண்டி வரியினை குறைப்பது தொடர்பாக, உள்துறையின் 29—9—1983 ஆம் நாளிட்ட 2039 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 52. சேலத்திலுள்ள திருவாளர்கள் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான ஆறு பயணிப் பேருந்துகளைப் பொறுத்தவரை யில் வரி விதத்தினைக் குறைப்பது தொடர்பாக, உள்துறையின் 5—12—1983 ஆம் நாளிட்ட 2535 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப் பட்டது. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

††† 53. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதி களில் திருத்தம் செய்வது தொடர்பாகவும், கோயம்புத்தூரிலுள்ள அரசினர் டிராக்டர் பட்டறை B படிவம், C படிவத்தில் பதிவேடுகளை வைத்து வருவதினின்று விலக்களிப்பது தொடர்பாகவும், தொழிலாளர் நலத்துறையின் 2990 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)





††† 54. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள்
அங்காடிகள் சட்டத்தின் கீழ் நிலக்கடலை, பருத்தி, நெல், மிளகாய் ஆகிய
வற்றைப் பொறுத்தவரையில் கோபால்பட்டி அங்காடியை அறிவிக்கையிடப்
பட்ட அங்காடியாக அறிவிப்பது தொடர்பாக, வேளாண்மைத் துறையின்
11—8—1983 ஆம் நாளிட்ட 1457 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை
வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள்
அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்
கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

55. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின்
கீழ் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் செய்த மாற்றங்கள்
தொடர்பாக, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 7—7—1983 ஆம்
நாளிட்ட 1022 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.
(தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது)

56. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிகாலை விதிகளில் செய்யப்பட்ட
திருத்தங்கள் தொடர்பாக, மதுவிலக்கு-ஆயத்துறையின் 30—11—1983 ஆம்
நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.
(தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

57. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள்
சட்டத்தின் கீழ் வெங்காயத்தைப் பொறுத்தவரையில், சேலம் மாவட்டத்தை
அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது தொடர்பாக,
வேளாண்மைத் துறையின் 1—9—1983 ஆம் நாளிட்ட 1568 ஆம் எண் அர
சாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

58. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள்
சட்டத்தின் கீழ், பருத்தி, நிலக்கடலை, மிளகாய் ஆகியவற்றைப் பொறுத்த
வரையில் திசையின்விளை அங்காடிப் பகுதியை அறிவிக்கையிடப்பட்ட அங்காடி
பகுதியாக அறிவிப்பது தொடர்பாக, வேளாண்மைத் துறையின் 1—10—1983
ஆம் நாளிட்ட 1751 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

(தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

59. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டமன்ற விதிகளில் (இரயில் மூலம் கட்டணமின்றி அழைத்து செல்லுதல்) திருத்தங்கள் செய்வது தொடர்பாக, பொதுத்துறையின் (பணியாளரமைப்பு I) 18—11—1983 ஆம் நாளிட்ட 1871 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

60. வருவாய்த் துறையின் 15—12—1925 ஆம் நாளிட்ட 313 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர் வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17—11—1983 ஆம் நாளிட்ட 1335 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

61. சென்னையிலுள்ள இந்திய பருத்திக் கழகம் கொள்முதல் செய்கின்ற பருத்திக்கு விற்பனை வரி விதிப்பதினின்று விலக்களிப்பது தொடர்பாக, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 1117 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

62. திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அகதிகள் விற்பனை செய்கின்ற பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதினின்று விலக்களிப்பது தொடர்பாகவும், பதிவு செய்வதினின்று மேலும் நான்கு திங்களுக்கு விலக்களிப்பது தொடர்பாகவும், வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 14—10—1983 ஆம் நாளிட்ட 1196 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.)





63. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்களைத் திரும்பக் கொடுத்தல் (நீதிமன்ற ஆணையின்படி) விதிகளில் திருத்தம் செய்வது தொடர் பாக உள்துறையின் 23—2—1983 ஆம் நாளிட்ட 350 ஆம் எண் அரசாணை யில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள்-வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1955) 73 (2), 82 (2) ஆகிய பிரிவுகளின் கீழ் அவைமுன் வைக்கப் பட்டது).

64. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயத் தயாரிப்பு விதிகளில் செய்யப் பட்ட திருத்தங்கள் தொடர்பாக, மதுவிலக்கு ஆயத்துறையின் (III) 29—11—1983 ஆம் நாளிட்ட 1020 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப் பட்டது).

65. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, பொதுத்துறையின் (பணியாள ரமைப்பு) 5—9—1983 ஆம் நாளிட்ட 1435 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

66. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத் தங்கள் செய்வது தொடர்பாக, உள்துறையின் 10—10—1983 ஆம் நாளிட்ட 2100 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

67. கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு 61 பேருந்து களை மாற்றிக் கொடுத்த வகையில், பற்றுவரவுகள் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வது தொடர்பாக, வணிகவரிகள்-சமய அறக்கட்டளை துறையின் 3—5—1983 ஆம் நாளிட்ட 484 ஆம் எண் அர சாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

[1984 பிப்ரவரி 15

68. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, உள்துறையின் 26—10—1983 ஆம் நாளிட்ட 2258 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

69. வருவாய்த் துறையின் 9—7—1894 ஆம் நாளிட்ட 419 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக, வன-மீன் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1151 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 1. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமனம் செய்தல்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 15/1983).

** 2. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்துறை தமிழ்நாடு மாவட்டக் காவல்துறை (இரண்டாவது திருத்தம்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1983).

† 3. 1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 17/1983).

†† 4. 1983 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிறுவனத்தைக் கையகப்படுத்தல்-மாற்றுதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1983).

†† 5. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள், தமிழ்நாடு வேளாண்விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-தனி விதித் துறைகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1983).



1984 பிப்ரவரி 15]

††† 6. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1984).

‡ 7. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசெட் ரிக்கார்டர் மூலம் தொலைக்காட்சி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1984).

‡‡ 8. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1984).

@ 9. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1984).

@ 10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1984).

11. காவல்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை (தமிழ்).

12. மாவட்ட நிருவாகம் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (தமிழ்).

13. தொழிற்பேட்டைகள் உட்பட கிராம-சிறுதொழில்கள் குறித்து நடவடிக்கை அறிக்கை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (தமிழ்).

14. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டு அறிக்கை (வணிக) பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

15. 13—2—1984 அன்று தமிழ்நாடு சட்டமன்ற இரு அவைகளின் ஒருங்கிணைந்த (கூட்டத்தில்) தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

---

‡‡ 17—12—1983 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

** 20—12—1983 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

*** 21—12—1983 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

† 30—12—1983 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

†† 4—1—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

††† 12—1—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

‡ 20—1—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

‡‡ 23—1—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

‡‡‡ 27—1—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

@ 2—2—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

@@ 13—2—1984 அன்று பேரவையில் உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப் பட்டது.





## இணைப்பு I.

(40 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 19-க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழகத்தில் இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிகள், கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன :—

### அரசு சீர்திருத்தப்பள்ளிகள்.

1. அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளி, ஜி.எஸ்.டி. ரோடு, செங்கல்பட்டு.

2. அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளி, தட்டப்பாறை, திருநெல்வேலி மாவட்டம்.

3. அரசினர் முதுநிலை இளநிலை சீர்திருத்தப்பள்ளி, பஞ்சப்பள்ளி, தருமபுரி மாவட்டம்.

4. அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.

5. அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, தஞ்சாவூர்.

6. அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, தேவனாம்பட்டினம், கடலூர்.

7. அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, மல்லிபுதூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

8. அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, 155, சூர்ய நாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை.

9. அரசினர் முதுநிலை இளநிலை பெண்கள் சீர்திருத்தப்பள்ளி, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10.

தனியார் சீர்திருத்தப்பள்ளிகள்.

1. குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர் திருத்தப்பள்ளி, 288, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-21.

2. சேவா சமாஜம் சிறுவர் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத் தப்பள்ளி, பள்ளிப்பட்டு, அடையாறு, சென்னை-20.

3. சேவா சமாஜம் பெண்கள் இல்லத்தின் கீழ் இயங்கும் சீர்திருத்தப்பள்ளி, 29, காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை.

4. சேவா சமாஜம் குழந்தைகள் இல்லத்தின் கீழ் இயங்கும் சீர்திருத்தப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை-93.

5. பாலவிகார் கீழ் இயங்கும் பெண்கள் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, ஹாரல்ஸ் ரோடு, சென்னை-10.

6. பாலவிகார் கீழ் இயங்கும் சிறுவர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சென்னை-10.

7. பாலமந்திர் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, கோபதி நாராயணசாமி செட்டி தெரு, சென்னை-17.

8. தனியார் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சித்திரக்குடி, தஞ்சாவூர் மாவட்டம்.

9. குழந்தைகள் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, காந்தி கிராமம், மதுரை மாவட்டம்.

10. சேவா நிலையத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சிரியன் சர்ச் ரோடு, கோவை.

11. வள்ளலார் கல்வி நிலையத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, விங்கத்தடிமேடு, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

12 தயாசதன் குழந்தைகள் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர் திருத்தப்பள்ளி, நெற்குன்றம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-53.

13. ஔவை ஆசிரமத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சிவசைலம், திருநெல்வேலி.

**(இ) அப்பள்ளிகளில் சேர்க்கப்படும் இளங்குற்றவாளிகளின் வயது வரம்பு**



இளநிலை சீர்திருத்தப்பள்ளிகளில் (குற்றம் புரிந்தோர் மற்றும் குற்றம் புரியாதோர்) 8 முதல் 16 வயது வரையிலும், முதுநிலை சீர்திருத்தப்பள்ளி களில் (குற்றம் புரிந்தோர்) 12 வயது முதல் 18 வயது வரையிலும், தனியார் சீர்திருத்தப்பள்ளிகளில் (குற்றம் புரியாதவர்) 3 வயது முதல் 16 வயது வரை யிலும் அனுமதிக்கப்படுகின்றனர்.

**(உ) இளங்குற்றவாளிகளின் பிற்கால நல்வாழ்வுக்கு அவை பயன்படும் முறை :—**

சீர்திருத்தப்பள்ளிகளில் அனுமதிக்கப்படும் இளங்குற்றவாளிகளின் வயதிற்கும், விருப்பத்திற்கும் ஏற்றவாறு அவர்களுக்கு பொதுக் கல்வியும், தொழிற் கல்வியும் அளிக்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் கல்வி பெறவும், வேலை வாய்ப்பு பெறும் வகையில் தொழிற் பயிற்சியும் பெறவும் இயலுகிறது. இதனால் அவர்கள் வெளியுலகில் வேலை வாய்ப்பைப் பெற்று வாழும் வகையில் அவர்கள் பெறும் கல்வி மற்றும் தொழிற்கல்வி பயன்படு கின்றது.

## இணைப்பு II.

(44ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

Address by Thiru Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council, assembled together at the Assembly Chamber, Fort St. George, Madras at 10.00 a.m. on Monday, the 13th February, 1984.

*Honourable Members of the Legislature,*

At the outset, may I take this opportunity of wishing you a prosperous and happy New Year. I hope the year ahead of us, will prove to be one of allround economic development for the State.

2. While I did make a passing reference, in my address to you last year, to the drought conditions prevailing in the State and the various steps taken by the Government in alleviating the sufferings of the people, the full impact of the misery and suffering caused by the consecutive failure of the monsoon became evident only later in the year. The State is only now getting out of what has been one of the most severe droughts to have gripped the State.

3. Against the Rs. 68.36 crores cleared by Government of India for drought relief works, the State has spent a sum of Rs. 114.28 crores. Apart from the items of expenditure approved by the Central Government, the State has had to take up several relief works on its own to meet the situation. These include mainly the sanction of loans towards sinking of 5,000 filter point tube wells in Thanjavur district amounting to Rs. 7.5 crores the sanction of Rs. 5 crores towards loans for the deepening of private irrigation wells and the scheme for free distribution of janata sarees and dhoties to landless agricultural labourers in rural and municipal areas, costing over Rs. 10 crores.

4. The severe drought created a veritable water famine and the Government launched massive relief operations for the sinking of borewells practically throughout the State. Twenty-one thousand and seven hundred bore wells were sunk at a cost of about Rs. 46 crores. The water scarcity was particularly acute in the city of Madras. Although piped water could be supplied only on alternate days for a few months, optimum level of supply was maintained by the installation of water tanks and daily supplies through lorries. In addition, 11,951 tube well pumps and 1,204 India Mark II pumps were installed in Madras city at a cost of Rs. 252.28 lakhs.

5. The drought had a widespread impact on various sectors of the economy. In addition to large scale relief operations, the Government had to take other measures to compensate for the drag imposed by drought on these sectors. The food sector was one of these where heavy State help was needed. In spite of monopoly procurement operations and the offer of Rs. 15 per quintal over and above the levy price, as drought allowance, the Civil Supplies Corporation could procure only two lakhs and twenty thousand tonnes of rice during the 1983 Samba season. Though the State received 15,000 tonnes of rice in April 1983 from Government of India which has been gradually raised to the present level of 35,000 tonnes per month, the commitment on account of the public distribution system could be discharged in full only by buying rice from markets outside the State at high prices. An average supply



of 75,000 to 80,000 tonnes per month was maintained at the subsidised issue price which has been retained unaltered for the last few years. During the 1983 Kuruvai season it has been possible to procure a lakh and ten thousand tonnes of rice and it is expected that the procurement during 1984 Samba season will be higher. Government has announced a drought, irrigation and risk allowance of Rs. 35 per quintal over and above the procurement price fixed by Government of India from 8th September 1983 to 29th February 1984 for the rice purchased by the Civil Supplies Corporation in the monopoly procurement areas. Thus, the cost borne by the Government, in the current year, to maintain this essential service of supply of rice to the poorer sections of the people through fair price shops in the State has been enormous. Recently, Government of India have further increased the issue price of rice to the Civil Supplies Corporation and consequently, subsidies involved in rice supply through the public distribution system have gone up further.

6. Although the State Government spared no effort to alleviate the sufferings of the people hit by drought conditions, the limited resources at the command of the State made it necessary for us to present a supplementary memorandum to the Government of India for further assistance towards drought relief works. This memorandum is primarily intended to seek reimbursement of expenditure already incurred by the State Government rather than for new relief works. In response to the memorandum, the members of a central team visited certain districts of the State and although the outcome of the team's visit is not yet known the State Government is hopeful of a substantial financial assistance from Government of India.

7. As the Honourable Members are aware, even as the State was recovering from the drought and the economy was being restored to normalcy the districts of Thanjavur, Tiruchirappalli, South Arcot, Pudukkottai and Ramanathapuram were hit by torrential rains, causing large scale damage to property and loss of life. The Chief Minister undertook an aerial survey of the flood affected areas immediately after the disaster and personally supervised the relief operations in Thanjavur, Tiru-

chirappalli and Ramanathapuram districts. The Army authorities responded promptly by despatching their men who brought and erected three bailey bridges in record time which served to reopen communications with marooned villages. Helicopters lent by the Navy and Air Force and inflatable boats lent by the Navy rendered valuable assistance through the air dropping of food packets to the marooned villagers and by rescuing them. The State Government takes this opportunity to place on record its appreciation for this timely service rendered by the Defence forces. Medical and health teams with adequate supply of medicines were rushed to the affected areas to take up preventive measures against the outbreak of epidemics. The police force rose to the occasion and rendered the necessary assistance for speeding up rescue and relief operations.

The State Government would like to thank the Indian Red Cross Society, the Tamilar Peravai, Bombay, the Ramakrishna Mutt, the N.S.S. and N.C.C. units who extended all possible assistance in expediting flood relief operations. The floods have caused extensive damage to 7,10,000 huts, 3,183 irrigation sources and 4,211 roads belonging to Panchayat Unions, and Panchayats. One thousand six hundred and fifty-eight relief camps were organised to feed 10 lakh persons affected by the floods.

8. The State Government has already sanctioned Rs. 37.51 crores towards restoration and repairs to roads, irrigation works and providing gratuitous relief. A memorandum seeking assistance of Rs. 128 crores has been presented to the Government of India. The Central Team has also visited the affected districts and the State is hopeful of a substantial assistance from Government of India.

9. The barbarous acts of violence let loose on the Indian nationals and in particular on the Tamil population of Sri Lanka and the heartless massacre of Tamil speaking people which that country witnessed caused reverberating waves of indignation and anguish in Tamil Nadu. The Chief Minister convened an All Party Leaders' Conference first on 28th July 1983, followed by two more meetings in August, to express the solidarity of



ie people of Tamil Nadu with the Tamils of Sri Lanka. A eneral stoppage of work was sponsored by the Government on ad August 1983 in support of the cause of Tamils in Sri Lanka 1 which all political parties and departments of the Central Government participated. The Government of India also susended air and train services in support of this general stoppage f work. This is the first time, in the history of the country, hat air services have been suspended. We are grateful to the Prime Minister for the prompt and effective steps she has nitiated to find a lasting solution to this problem.

There has been a massive influx of refugees from Sri Lanka to Tamil Nadu and apart from the people of Indian origin coming under the Indo-Ceylon Agreement of 1964. Tamils affected by the riots in Sri Lanka started streaming in from July 1983. Of the 35,394 persons who came to Tamil Nadu both by ship and air till January 1984 only 14,334 have returned to Sri Lanka. Transit refugee camps were opened to give immediate succour and relief to the helpless refugees. Government of Tamil Nadu has constituted a State Level Committee consisting of Members of the Legislature and important political party leaders, to receive and channelise the funds collected for Sri Lanka Tamils. An Advisory Committee of eminent industrialists has also been set up in addition to the district level committees in all districts. The Government has allotted flats to Thirumathi Kuttimani and Thirumathi Thangadurai, wives of two Tamil patriots who were killed in the riots and to Thiru Kuttimani's sister. Thirumathi Kuttimani has also been sanctioned financial assistance of Rs. 1,000 per month for a year or till her family returns to Sri Lanka.

10. The late advent of the south-west monsoon last year and the resultant adverse seasonal conditions affected the timely planting of the Samba crop. The Government distributed seeds, fertiliser and pesticides to the tune of Rs. 464 lakhs, at subsidised prices, to the farmers hit by the drought conditions. In order to augment irrigation facilities, Government took up a massive scheme of sinking 5,000 filter point tube wells in Thanjavur district at a cost of Rs. 7.50 crores. Under the scheme, a maximum assistance of Rs. 15,000 is being given as

loan to the farmer to enable him to sink a tube well and so far, loans for the sinking of 2,521 filter point tube wells have been given. Although the State was facing a severe power shortage, power for the agricultural pumpsets was made available for twelve hours a day. In order to encourage farmers in the Cauvery Delta to go in for Samba cultivation, Government announced a procurement price of Rs. 171 per quintal this year, i.e. Rs. 35 more than the price announced by the Government of India.

Although it was expected that the various steps taken by the Government would result in a good Samba harvest, the torrential rains in the last week of December 1983 unfortunately caused heavy damage to the standing crops in the Cauvery Delta area. The State Government immediately arranged for the distribution of 500 metric tonnes of pulse seed, at subsidised prices.

While the rainfall resulted in heavy damage to standing Samba crops in the Cauvery Delta area it helped to fill up various ponds and lakes in the northern districts of the State. The Government has taken advantage of this and launched a massive programme to bring under cultivation ten lakh acres under pulses, 7 lakh acres under Navarai paddy and 8 lakh acres under groundnut. It is hoped that this would to some extent compensate for the damage and loss in Cauvery Delta area.

Although the State's agro-economy suffered a serious setback due to successive natural calamities the various steps taken by the Government are expected to result in satisfactory food production. Despite a heavy overdue position the Agricultural Service Co-operative Societies have advanced crop loans to the extent of Rs. 58.01 crores upto December 1983.

During the year 1984-85, 95 lakh M.T. of foodgrain is targeted for production. The State Government has taken up various schemes to ensure the achievement of this target. Seed production and distribution systems will be strengthened so that large quantity of good quality seeds are made available to the farmers. Various schemes to maximise efficiency in



water management in Cauvery, Vaigai, Sathanur and Parambikulam area river basins will be taken up. "5 Metric tons of paddy per hectare" has been set up as the goal which the State Government will endeavour to accomplish in the year 1984–85.

11. The crop insurance scheme, now in operation is confined to paddy. The maximum amount that can be insured by a farmer, under the scheme, is Rs. 10,000 or 150 per cent of the crop loan whichever is less in respect of irrigated crops and Rs. 5,000 or 150 per cent of the crop loan whichever is less in respect of unirrigated crops. As the present scheme covers only paddy, the Government is considering making it a more comprehensive one to cover various types of loss of life and property.

12. The Operation Flood II programme is now being implemented in nine districts of the State. In view of the encouraging results obtained under this programme, the Government has approached the Indian Dairy Corporation to bring in three more districts under the programme. A frozen semen bank and a network of 400 sub-centres with frozen semen is being established for the upgradation of the cattle and raising milk production.

13. A major policy of the Government has been to bring new areas under irrigation as also to stabilise the existing irrigation facilities. As against a sum of Rs. 189.79 crores set apart for major and minor irrigation and flood control schemes in Sixth Five-Year Plan a sum of Rs. 80.73 crores have been spent in the first three years of the plan period. A sum of Rs. 55.14 crores has been provided for these scher in the current year and Rs. 60.62 crores next year.

Irrigation potential for an area of 78,000 hectares created in the Sixth Plan period. In the first t the Plan, the State has created irrigation poter of 36,656 hectares and it is proposed to brir of 16,880 hectares under irrigation in the cu

14. A lasting solution to the long standing problem of providing adequate drinking water-supply to the City of Madras was found through the agreement entered into between the Government of Tamil Nadu and the Government of Andhra Pradesh on 18th April 1983 for drawal of 15 tmc. of water from the river Krishna, a standing monument to inter-State co-operation. This project would harness the waters of Krishna river for irrigation in Andhra Pradesh and for augmenting drinking water-supply to Madras City. Out of the estimated project cost of Rs. 760 crores, Tamil Nadu's share would be Rs. 200 crores. The Government has also accorded administrative sanction for an expenditure of Rs. 30.15 crores towards the first stage of the project. The excavation of the canal from the border of the State to the Poondi Reservoir is under execution by us while the rest of the work is being undertaken by the Government of Andhra Pradesh. With the completion of the Krishna River Water-Supply Scheme, the per capita daily availability of water in Madras will go up from the present 65 litres at the peak supply period to 127 litres.

15. Tamil Nadu has very little potential left for exploiting surface water resources for cultivation. Ground water exploitation has also reached its full potential in some areas and with about 50 per cent of the cultivable areas in the State still to be irrigated, the need to resort to more prudent and scientific water management has become inescapable. The Govrnment of Tamil Nadu has taken several steps like creation of new percolation ponds, modernisation of the transmission systems of major and medium irrigation projects towards development of better water management practices. More than 39,000 rain-fed tanks are the sources of irrigation to 9 lakh hectares and this sector would bear the next highest priority for modernisation and water management. The Government has succeeded in getting a grant of Rs. 25 crores from the European Economic Community through the Government of India for modernisation of the minor irrigation system in the State. From its commencement, the scheme will take in all five years.. The tanks in five districts of Tamil Nadu, viz., Chengalpattu, North Arcot, South Arcot, Pudukkottai and Ramanathapuram will be taken up for modernisation, effecting a saving of around 20 per cent of the water now used resulting in both stabilisation of the existing ayacuts and their extension.



16. In order to study the measures and monitor their implementation for improving the efficiency in usage of water and enhancing the productivity of land, the State Government has decided to set up an Irrigation Management and Training Institute. This Rs. 10 crores project, to be implemented with the assistance of the United States Agency for International Development (USAID), would commence shortly and will be spread over 7 years. The share of the Tamil Nadu Government in the project cost will be Rs. 4.4 crores and rest would be advanced by USAID, Rs. 1.4 crores as loan and the balance amount of Rs. 4.2 crores as grant.

17. Another sector which periodically faces the full impact of the adverse seasonal conditions is Power. Tamil Nadu is in the unenviable position of having a greater mix of high-cost thermal power in its total generation system. An immediate result of consecutive failure of monsoons is the dwindling of hydel generation adding to the loss of the Electricity Board which, in turn, places a heavy strain on the financial resources of the State. It was only on account of judicious operation and management of the hydel stations and the efficient handling of other generating stations that the State could relax the power-cut on H.T. industries, which, the members may recall, had to be 100 per cent for a short period last year. The power-cut has now been brought down from 75 per cent on demand and 60 per cent on energy to 30 per cent for power-intensive H.T. industries and 15 per cent for other H.T. industries, on both demand and energy. H.T. industries started after 1st October 1981 have been completely exempted from power-cut till 30th June 1984. The ban on industries from availing electric power during peak hours has been lifted. The power-cut on all L.T. services was lifted from 11th July 1983.

18. Any permanent solution to the power shortage in the State will be only through substantial increase in thermal capacity. Government of India has since cleared the Mettur Thermal Extension Project of two units of 210 MW each. A project report for the establishment of five thermal units of 210 MW each at Neyveli utilising the lignite has been formulated and forwarded to the Government of India in June 1983. Our Government has also requested the Government of India to open a third mine cut at Neyveli and earmark the entire lignite for this project. The State Government has also been urging the Government of India to start another Atomic Power Project in the State, which would help relieve the chronic power shortage faced by the State, at least to some extent.

19. In spite of the revision of tariff in May 1983, the electricity charges collected from the consumers do not meet even the cost of production, let alone achieve a 3 per cent return on investment as urged by the Union Planning Commission. This position has been further aggravated by the recent 25 per cent increae in the price of coal. The Electricity Board has to depend heavily on the State not only for its capital projects but also cover its operational deficits.

20. Provision of protected drinking-water to the rural population has been given high priority by the Government. According to the survey conducted in 1976-77 out of 47,273 habitations in the State, 18,167 were categorised as problem habitations. Due to adverse seasonal conditions in the recent past, there have been further additions to this number. These habitations are expected to be covered by the end of March 1985.

21. It has been proposed to undertake a water-supply and low-cost sanitation project with the assistance of the World Bank. Under this project water-supply schemes will be taken up in the 3 major towns of Coimbatore, Salem and Madurai, 75 other towns and 740 rural habitations, in addition to low-cost sanitation for 14 municipalities. The total estimated cost of the project, spread over four years and six months is Rs. 149.42 crores.

22. The EEC has agreed to finance a project covering 726 habitations in Periyar and Coimbatore districts, where the water has a high fluoride content. The project, at an estimated cost of Rs. 15.20 crores, is expected to be completed in a period of 30 months.

23. As the Honourable Members are aware, the major thrust in the activities of the Government has been towards the removal of poverty. It is not possible to achieve this avowed objective without overall economic development and the creation of more job opportunities. It was with this end in view that the Government lanuched a scheme of providing one job for each family. The State Government has recently laid down that preference in employment in Government Departments and the Public undertakings will be given to those candidates who come from families below the poverty line where no other member is employed. Up-to-date statistics has also been collected regarding the number of families beneath the poverty line in rural areas and the details of members in such families, willing and qualified to take up self employment activities.



It is also well known that appropriate skills are not available in the rural areas. Any self employment programme therefore, will have to focus on skill development. Training programmes under various projects will have to be dovetailed and schemes already under implementation for tapping institutional finance in setting up self-employment schemes have to be co-ordinated. The Prime Minister's scheme for providing employment opportunities to the educated unemployed and the Integrated Rural Development Programme, financed both by the State and the Centre have been taken advantage of, and suitable institutional agencies set up in order to divert the benefits to these programmes to those below the poverty line.

The Government has created a separate Department of Institutional Finance from 15th July 1983 to serve as a catalyst for the flow of credit to the weaker sections of society. It is note-worthy that during the first few months after it was set up, loans to the tune of Rs. 30.16 crores were distributed to 1,70,564 persons in the State including 56,966 Adi-Dravidars. The newly constituted department of Employment Services has organised a drive to obtain bank credit for 10,000 ITI—trained unemployed persons, by providing seed capital assistance.

24. The Government of India have allocated a sum of Rs. 8.90 crores in the current year and Rs. 44.50 crores in the next year for the programme of providing emplyoment to the rural landless labour. The State Government has already obtained Government of India's approval for projects costing Rs. 44 crores.

25. Under the ongoing National Rural Employment Programme founded equally by the State and the Centre, it has been proposed to spend Rs 36 crores in the current year 1,64,867 works have been completed under this programme from 1979-80 up to the end of November 1983. It is proposed to set apart Rs. 40 crores for this programme, in the plan for 1984-85, 50 per cent of which would be financed by the Government of India.

26. The problem that confronts our society today is one of ensuring job opportunities to the increasing numbers of students who will be thrown by the prevailing educational system. Non-specific and generalised educational system at all levels creates an unabsorbable labour force whose growing sense of discontent and frustration adds to the social unrest and tension. Government is keen on re-orienting the educational system, in such a way, that relevant and location-specific job training is provided at all levels of education.

so that young boys and girls are equipped with the appropriate skills which can either enable them to obtain jobs in industries, or find self-employment. Such a multi-dimensional programme would necessarily exceed the limited financial resources of the State. The State Government had, therefore, sought the assistance from the Central Government through the Eighth Finance Commission award, for implementing this massive programme throughout the State. Though the interim report of the Commission has not covered this point, a detailed blue-print is being prepared to seek Government of India's assistance for this proposal.

27. Apart from the various concessions and incentives offered by the State Government to facilitate the growth of industries, steps have also been taken to set up public-sector units involving huge financial commitments. The Tiruttani Co-operative Sugar Mills being set up in Tiruvalangadu in Chengalpattu district at a cost of about Rs. 10 crores is expected to commence its crushing operations in the middle of April this year. In order to ensure smooth running and to avoid large scale retrenchment of labour, the State Government has taken over administration of Madura Sugars Limited in Madurai district.

28. As the Honourable Members are aware, the Tamil Nadu Newsprints and Papers Limited, promoted by the State Government is setting up a newsprint *cum*-paper project in a backward area at Pugalur in Tiruchirappalli district. This Rs. 195 crores project funded by the World Bank to the extent of 50 per cent of the project cost, has been planned to produce 50,000 tonnes of newsprint and 40,000 tonnes of paper annually. The project when commissioned would save foreign exchange to the tune of Rs. 40 crores annually. Construction works for the project are under progress and the project is likely to be completed by September-October this year as originally scheduled.

29. Government of India has recently cleared the proposal for establishing a free trade zone in Madras and a stretch of about 150 acres of Government land has already been identified for its location. The work on the development of the area has been entrusted to SIPCOT.

30. The work on the Pamban Bridge, which after completion will provide an un-interrupted road transport facility up to Dhanuskhodi, the tip of Rameswaram Island, would be restarted soon. It is expected to cost Rs. 16.65 crores now.



31. The performance of the State Transport Corporations continues to be highly satisfactory and the Union Planning Commission has ranked the Tamil Nadu Corporations amongst the best in the Country. The three new transport corporations, viz., Jeeva Transport Corporation at Erode, Nesamony Transport Corporation at Nagercoil, and Marudhu Pandiyar Transport Corporation at Karaikudi have started functioning independently from 1st April 1983. Although during the last financial year, the operations of all Corporations excepting three, resulted in profits, it is difficult to maintain this financial performance in view of the periodical increases in the administered price of diesel. Between 1980 and now the price of diesel oil has gone up by more than 100 per cent and these increases have resulted in an additional expenditure of Rs. 115 crores for the State transport undertakings in the last three and half years.

32. Provision of health care in rural areas has been one of the major policies of the State Government. In pursuance thereof, a health sub-centre is being established for every 5,000 population. In the current year, it is proposed to establish 712 additional sub-centres. This would be an addition to the 4,586 sub-centres existing in the State.

33. The DANIDA assisted health care and family welfare project, being implemented in South Arcot district and Salem district has entered its third year. Under this project, so far 449 health sub-centres have been established and works are in progress on 313 sub-centre buildings.

34. It is gratifying to note that the special attention to the Family Welfare Programme has paid rich dividends and the State stands first in the country in having done 3,77,827 sterilisations by the end of January 1984 as against the annual target of 3.99 lakhs which is expected to be exceeded substantially by the end of this year. Government has sanctioned the purchase of 26 laparoscope at an estimated cost of Rs. 7.8 lakhs for distribution to taluk hospitals.

35. A separate department for Environment Control was created from 15th July 1983 in order to implement effectively the various laws governing environmental pollution. The entire State has been notified "Air Pollution Control Area" with effect from 1st October 1983 and with the notification of the Tamil Nadu Water (Prevention and Control of Pollution) Rules, 1983 and Tamil Nadu Air (Prevention and Control of Pollution) Rules, 1983 on 30th September 1983, the State is qualified for uninterrupted Central Government sanction for setting up of new industries in the State.

36. The Honourable members are aware that the State Government has taken up a scheme for the construction of 2 lakhs houses under the Rural Housing Scheme in the Sixth Plan period. As against the target of 40,000 houses, 40,092 houses were constructed during 1982-83 and in the current year up to the end of October 17,894 houses have been constructed out of which 15,058 houses have been constructed for Adi-Dravidars. 20,759 houses are under variation stages of construction. The estimated cost of a house has been increased to Rs. 6,000 from the existing Rs. 4,000 from the beginning of the financial year.

37. A noteworthy result of the Chief Minister's Noon Meal Programme is a marked increase in the enrolment of students in the schools. It has also proved to be fruitful investment in human capital. A sample survey conducted by Shri Avanashilingam Home Science College for Women, Coimbatore has shown that over a period of four months all the children covered by the survey showed a general improvement in health and an increase in their mean hight and weight. A detailed scheme for providing health cover for the pre-school children covered by the scheme has also been drawn up.

38. The Members may recall that Tamil Nadu was adjudged best in terms of performance under the Twenty-Point Programme in 1982-83 by the Union Planning Commission. This tempo has been maintained in the current year also, with the State having already achieved more than 70 per cent of the target set in respect of production of oil seeds, creation of mandays under National Rural Employment Programme, surplus land resumed for allotment, Scheduled Tribe families assisted to cross the poverty line, villages provided with drinking water-supply, allotment of house-sites, tree plantation, setting up of bio-gas plants, number of sterilisation done, establishment of Public Health Centres, coverage under Integrated Child Development Services, entrolment in the age-group 6—14 and coverage under adult literacy.

39. In the light of the experience gained from the year 1981-82 on the working of the Tamil Nadu Prohibition Act, the State Government decided that in public interest, the wholesale trade in arrack and Indian-Made Foreign Spirits throughout the State should be taken over, managed and regulated by a fully-owned Government undertaking. The Tamil Nadu State Marketing Corporation Limited was set up and the wholesale supply of arrack and Indian-Made Foreign Spirits was taken over by the Government and entrusted to this Corporation from 1st June 1983.



40. In order to make district administration more effective, the Government has decided to divide some of the larger districts of the State in stages. Accordingly Ramanathapuram district would be divided into Ramanathapuram district with the headquarters at Ramanathapuram, Pasumpon Muthuramalingar district with head-quarters at Sivagangai and Kamarajar district with head-quarters at Virudhunagar. Tirunelveli district would be bifurcated into Tirunelveli district with headquarters at Tirunelveli and Chidambaranar district with headquarters at Tuticorin. North Arcot district would be divided into North Arcot district with headquarters at Vellore and Sambuvarayar district with headquarters at Thiruvannamalai. Madurai district would be bifurcated in to Madurai district with headquarters at Madurai and Anna district with headquarters at Dindigul. Thanjavur district would be divided in to Thanjavur district with headquarters at Thanjavur and Valliammai district with headquarters at Thiruvarur. South Arcot district would be bifurcated into South Arcot district with headquarters at Cuddalore and Vallalar district with headquarters at Villupuram. Tiruchirappalli district would be divided into Tiruvalluvar district with headquarters at Perambalur and Tiruchirappalli district with headquarters at Tiruchirappalli.

An expert committee will be set up to make recommendations to Government on the area covered by the new district, the taluks to be included in them, the various infrastructural facilities that have to be created, etc. The Government will consider the recommendations of the Committee and take necessary action to implement, in stages, the decisions taken on the report of the Committee.

41. The Government has been viewing with utmost concern the various demands from the employees. There has been a long standing request for enhancing the retirement benefits to the Government servants by paying a lumpsum of Rs. 10,000 in addition to the normal gratuity. The Government has decided to implement the scheme by enrolling the employees on the basis of a contribution of Rs. 20 per month till it adds upto Rs. 5,000 with interest. The Government would contribute Rs. 5,000 from their own funds in order to enable the employees to receive Rs. 10,000 at the time of retirement. However, those who retire earlier will also be paid Rs. 5,000 by the Government in addition to their own contribution with interest. This scheme, drawn up in consultation with the representatives of employees, would come into operation from 1st April 1984.

42. Recently the Government has extended the benefit of the Liberalised Pension Rules to all those Government servants who retired prior to October 1979.

43. The Government is also aware that all the Government servants have been anxiously looking forward to the constitution of the Fourth Pay Commission. I am happy to inform the Hon'ble Members that a decision on this will be announced this year itself.

44. The Government is aware of the hardships caused to the families of the building construction workers who happen to lose their lives while engaged in building construction activities. The Workmen's Compensation Act of 1923 has been made applicable to such workers by incorporating a suitable provision in the Tamil Nadu Building and Construction Workers (Condition of Employment and Miscellaneous Provisions) Bill, 1983. This will reduce to some extent the hardships caused to the families of building construction workers who die while engaged in building construction activities. The Government also proposes to bring an official amendment to the provisions of the Tamil Nadu Building and Construction Workers (Conditions of Employment and Miscellaneous Provision) Bill, 1983. As per this amendment, the employers of these building construction workers are required to take up adequate insurance to cover loss of life or limb to the workers during employment. For those who are not benefited by the above provision, the Government has decided to provide for a payment of Rs. 10,000 as compensation from the Chief Minister's Relief Fund to the bereaved family. The building construction workers will have to register themselves with the Labour Department on a payment of Rs. 5 to get the benefit of this scheme.

45. The Government had earlier decided to conduct the panchayat and municipal elections during February 1984. All the priliminary arrangements were also made accordingly. However, due to the recent heavy floods in certain parts of the State, viz., Thanjavur, Pudukkottai, Tiruchirappalli and South Arcot districts heavy damage was caused to properties leading to disruption to communication facilities in those areas. The entire Government machinery in these districts was fully engaged in relief works on a war footing. Restoration works are still in progress. Several persons have been displaced from their houses in districts like Thanjavur. Only after they either return to their houses or settle down in newly constructed houses, will they be able to enrol themselves as voters and exercise their franchise in this election. It has therefore become necessary to postpone the panchayat and municipal elections. The Government has proposed to conduct the Panchayat and Panchayat Union Elec-



tions on 19th April 1984 and 23rd April 1984 in two batches and the Municipal Elections on 28th April 1984, after the Budget Session of the Legislature is over. I am sure the Honourable Members, would welcome this news.

The Government has decided to upgrade the Tiruchirappalli, Salem and Tirunelveli municipalities into municipal corporations. The Government has also proposed to frame a common Act for all the municipal corporations in this State.

46. I have briefly touched upon the steady progress made by the State in various prominent areas of the economic and social scene despite the successive natural calamities we had to face. I have also attempted an overview of the future plan of action for removal of poverty and creation of employment opportunies in the State. May I seek the co-operation of the House in this stupendous endeavour in which the Government is engaged?

*Vanakkam.*

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை முதற்கண் மகிழ்ச்சி
யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப் புத்தாண்டில் நம் மாநிலத்தின்
பொருளாதாரம் எல்லா வகையிலும் மேலும் வளம் பெறும் என்று உளமாற
நம்புகிறேன்.

2. சென்றமுறை உங்கள் முன் உரையாற்றியபோது இம் மாநிலத்தில் நிலவிய
வறட்சி நிலைமைபற்றியும், மக்கள் துயர் துடைக்க அரசு எடுத்த பல்வேறு
நடவடிக்கைகள் பற்றியும் நான் உங்களுக்கு கோடிட்டுக் காட்டியிருந்தேன்.
அடுத்தடுத்து இரண்டாண்டுகள் மழை பொய்த்ததன் விளைவாக மக்கள்
அடைந்த சொல்லொணாத் துயரமும், தொல்லையும் ஆண்டு முடிவில்தான்
முழுமையாகத் தெரிந்தது. என்றுமே கண்டிராத கடுமையான வறட்சியின்
பிடியிலிருந்து மாநிலம் இப்பொழுதுதான் விடுபட்டு வருகிறது.

3. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக இந்திய அரசு ரூ. 68.38
கோடி செலவினத்தை அனுமதித்திருக்க, மாநிலம் ரூ. 114.28 கோடி செலவிட்
டுள்ளது. இந்திய அரசு ஒப்புதல் அளித்த செலவினங்களைத் தவிர, மாநில
அரசு தானாகவே மக்களின் துயர் களைய வேறு பல பணிகளையும் மேற்
கொள்ள வேண்டியிருந்தது. தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக்
குழாய்க் கிணறுகள் அமைக்க கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 7.50

கோடி செலவும், தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 5.00 கோடி செலவும். மேலும், ரூ. 10.00 கோடிக்கு மேல் செலவாகும், கிராமங்களிலும், நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஜனதா சேலை, வேட்டிகளை இலவசமாக வழங்குதல் ஆகிய முக்கிய திட்டங்கள் இதில் அடங்கும்.

4. கொடும் வறட்சி காரணமாக ஏற்பட்ட கடும் குடிநீர் பஞ்சத்தைச் சமாளிக்க மாநிலம் முழுவதிலும் துளைக் கிணறுகளை அமைப்பதற்காக அரசு பெரிய அளவில் நடவடிக்கை எடுத்தது. ரூ. 46 கோடி செலவில் 21,700 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. குடிநீர்ப் பிரச்சினை, குறிப்பாக சென்னை மாநகரில் மிகவும் கடுமையாக இருந்தது. ஒரு சில மாதங்களுக்கு சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டபோதிலும், போதிய அளவு குடிநீர் வழங்க மாநகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் அனுப்பப்பட்டது. மேலும், ரூ. 252.28 இலட்சம் செலவில் சென்னை மாநகரில் 11,951 குழாய் கிணறு பம்புகளும், 1,204 இந்தியா மார்க் II பம்புகளும் அமைக்கப்பட்டன.

5. வறட்சியினால் எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. பெருமளவு துயர்த் தணிப்புப் பணிகளைத் தவிர பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்ய, அரசு மேலும் பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வகையில் உணவுப்பொருள் வழங்கும் பணிக்கு மாநில அரசின் நிதியுதவி அதிக அளவில் தேவைப்பட்டது. கொள்முதல் செய்வதில் அரசுக்கு ஏகபோக உரிமை இருந்தும், லெவி விலைக்கு மேல் வறட்சி ஈட்டுத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 அதிகமாக கொடுத்த போதிலும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1983 சம்பா பருவத்தில் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் டன் அரிசி மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. மத்திய அரசிடமிருந்து 1983 ஏப்ரலில் மாநில அரசு பெற்ற 15,000 டன் படிப்படியாக உயர்ந்து தற்போது 35,000 டன் அரிசி பெறுகின்ற போதிலும், வெளி அங்காடியிலிருந்து அதிகமான விலையில் அரிசி வழங்குவதன் மூலமே, பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ் பொதுமக்களுக்கு முழு அளவில் உணவுப்பொருள்களை வழங்க முடிந்தது. சென்ற சில ஆண்டுகளாகத் தொடர்ந்து அதே அளவில் இருந்துவரும் விற்பனை விலையிலேயே மாதம் ஒன்றுக்கு சுமார் 75,000 முதல் 80,000 டன் அரிசி வழங்கப்பட்டது. 1983 குறுவை பருவத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. 1984 சம்பா பருவத்தில் கொள்முதல் இன்னும் அதிகமான



அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29 ஆம் நாள் வரையிலான கால அளவில், நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏகபோகக் கொள்முதல் செய்யும் இடங்களில் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட, குவின்டால் ஒன்றுக்கு, வறட்சி. பாசன ஈட்டுச் தொகையாக ரூ. 35 அளித்து வருகிறது. நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்படும் அரிசியின் விலையினை மத்திய அரசு அண்மையில் மேலும் உயர்த்தியுள்ளதன் காரணமாக, பொது பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விலைக்கு ஈடாகக் கொடுக்கப்படும் மானியத்தின் அளவும் உயர்ந்துள்ளது.

6. வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க, மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், மாநில அரசின் நிதி ஆதாரங்கள் போதுமான அளவு இல்லாததால், வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளுக்காக மேற்கொண்டும் உதவி கேட்டு மத்திய அரசுக்கு மற்றுமோர் வேண்டுகோள் விடுக்கும்படியான அவசியம் நமக்கேற்பட்டது. இப்போது வைத்திருக்கும் வேண்டுகோள், அரசு ஏற்கனவே துயர்த்தணிப்புப் பணிகளுக்காக செலவிட்ட தொகையை ஈடு செய்யத்தானே தவிர, புதிய பணிகளுக்காக அல்ல. இந்த வேண்டுகோளுக்கிணங்க, மத்திய அரசின் குழு இம் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களைப் பார்வையிட்டது. இக் குழுவின் பரிந்துரைகள் இன்னும் நமக்கு தெரியவில்லை என்றாலும் இந்திய அரசு கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்குமென மாநில அரசு நம்புகிறது.

7. வறட்சிக் கொடுமையிலிருந்து விடுபட்டு மாநிலத்தின் பொருளாதாரம் இயல்பான நிலைக்குத் திரும்பும் நிலையில், தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை கடும் மழை தாக்கியதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இம்மழையின் காரணமாக பெருமளவில் சொத்துக்களுக்கு சேதமும் உயிரிழப்பும் ஏற்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக விமானம் மூலம் பார்வையிட்டு தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டார். இராணுவ அதிகாரிகள் நமது வேண்டுகோளுக்கு இணங்க உடனடியாக தங்கள் ஆட்களை அனுப்பினர். வெள்ளத்தினால் சூழப்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தும் வகையில், மிக குறுகிய கால அளவில் மூன்று பெய்லி பாலங்களை இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்தனர். கடற்படை, விமானப்படையினர் அளித்த ஹெலிகாப்டர்கள் மூலமும், கடற்படையினர் அளித்த காற்றினால் பெரிதாகக்கூடிய சிறிய படகுகள் மூலமும் வெள்ளத்தினால் சூழ்ப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்

[1984 பிப்ரவரி 15

கும் அவர்களை மீட்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடிந்தது. உரிய தருணத்தில் அளித்த சேவைக்காகவும், உதவிக்காகவும், முப்படைகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அரசு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. இப்பகுதிகளில் தொற்று நோய்கள் தலைதூக்காவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் போதுமான அளவு மருந்துகளுடன், மருத்துவர்களும். சுகாதாரதுறை அதிகாரிகளும் அந்தந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். வெள்ள நிவாரண பணிகளைத் துரிதப்படுத்த காவல் துறையினர் தகுந்த உதவிகளைச் செய்தனர்.

வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க உதவிய, இந்திய செஞ்சிலுவைச் சங்கம், பம்பாய் தமிழர் பேரவை, இராமகிருஷ்ணா மடம், தேசிய சமூக சேவை மற்றும், தேசிய மாணவர் படை உறுப்பினர்களுக்கும் அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. வெள்ளத்தினால் 7,10,000 குடிசைகளும், 3,183 பாசன வாயில்களும், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், ஆகியவற்றைச் சேர்ந்த 4,211 சாலைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் மக்களுக்கு உணவு அளிக்க 1,658 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன.

8. சாலைகள், பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பழுது பார்த்து அவற்றை முந்தைய நிலைக்குக் கொண்டு வரவும் நிவாரணத் தொகை அளிக்கவும் மாநில அரசு ஏற்கனவே ரூ. 37.54 கோடி வழங்கியுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 128 கோடி உதவி கேட்டு மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்தியக் குழுவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவிற்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய வம்சாவழியினர் மீது குறிப்பாக தமிழர்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட அரக்கத்தனமான வன்முறை நடவடிக்கைகளினால் தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களிடையே கொதிப்பையும் தாங்கொணாத் துயரையும் ஏற்படுத்தியது. தமிழக மக்கள் ஸ்ரீலங்கா தமிழர்களுடன் ஒன்றுபட்டு நிற்பதை எடுத்துரைக்க தமிழக முதல்வர் 1983 ஆம் ஆண்டு சூலை திங்கள் 28 ஆம் நாள் அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டினார். ஆகஸ்டு மாதத்தில் இத்தகைய கூட்டங்கள் இரண்டை மீண்டும் கூட்டினார். ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாநில அரசு 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ஆம் நாளன்று பொதுவேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. இதில் எல்லா அரசியல் கட்சிகளும் மைய அரசின் துறைகளும் கலந்து கொண்டன. இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இந்திய அரசு, விமானப் பணிகளையும் ரயில்



1984 பிப்ரவரி 15]

போக்குவரத்தையும் நிறுத்தி வைத்தது. இந்திய வரலாற்றிலேயே, விமானப் பணிகளை நிறுத்தி வைத்தது இதுவே முதல் முறையாகும். இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண உடனடியாகவும் செவ்வையான முறையிலும் நடவடிக்கை எடுத்ததற்காக நாம் இந்தியப் பிரதமருக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

1964 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கு திரும்பிவரும் இந்திய வம்சாவழியினரைத் தவிர, ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகள் 1983 ஜூலை முதற்கொண்டு ஸ்ரீலங்காவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பெருமளவில் வரத் தொடங்கினர். 1984 ஜனவரி வரையில் கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் 35,394 பேர் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் 14,334 பேர்தான் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பிச் சென்றுள்ளனர். நாதியற்ற அகதிகளுக்கு உடனடி உதவியும் நிவாரணமும் அளிக்க இடைத்தங்கல் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா தமிழர்களின் இடருதவிக்காக வசூலிக்கப்படும் நிதியைப் பெறவும் அவற்றைச் செவ்வையான முறையில் வழிப்படுத்தவும் சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட நிலையில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட குழுக்களைத் தவிர பெருந் தொழிலதிபர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களில் கொல்லப்பட்ட விடுதலை வீரர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகிய இருவரின் துணைவியருக்கும் திரு. குட்டிமணியின் சகோதரிக்கும் அரசு வீடுகள் கொடுத்துள்ளது. திருமதி குட்டிமணியின் குடும்பத்திற்கு ஓராண்டு வரையில் அல்லது அவர் குடும்பம் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பும் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 1.000 நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

10. கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை காலம் தாழ்த்தி வந்ததால் ஏற்பட்ட இடர்ப்பாடு காரணமாக விவசாயிகளால் சம்பா சாகுபடியை உரிய காலத்தில் துவங்க முடியவில்லை. இந்த நிலைமையைச் சமாளிக்க, விவசாயிகளுக்கு ரூ. 464 இலட்சம் செலவில் விதைகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் அரசால் கொடுக்கப்பட்டன. பாசன வசதிகளை மேம்படுத்த தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ. 7.50 கோடி செலவில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகளை வெட்டும் ஒரு பெரும் திட்டத்தை அரசு மேற்கொண்டது. இத்

திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கிணறுவெட்ட ரூ. 15,000 வரை கடனாக அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,521 வடிமுனைக் குழாய் கிணறுகள் ஏற்படுத்த கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் கடுமையான மின் பற்றாக்குறையை எதிர் நோக்கியிருந்த போதிலும் நாளொன்றுக்கு 12 மணி நேரம் அளவிற்கு விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டது. காவிரி பாசனப் பகுதியில் விவசாயிகளை சம்பா பயிரிட ஊக்குவிக்கும் வகையில் அரசு கொள்முதல் விலையை இவ்வருடம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 171 என அறிவித்துள்ளது. அதாவது மத்திய அரசு அறிவித்துள்ள விலையைவிட ரூ. 25 அதிகம்.

அரசு சரியான நேரத்தில் எடுத்த இந்த அனைத்து நடவடிக்கைகளாலும் சம்பா பயிர் விளைச்சல் உற்சாகம் தருவதாக இருக்குமென எதிர்பார்த்திருந்த போதிலும் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் பெய்த கடும் மழையின் காரணமாக துரதிர்ஷ்டவசமாக காவிரி பாசன பகுதியில் சம்பா பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. இக் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக குறைந்த விலையில் 500 மெட்ரிக் டன் அளவிற்கு பருப்பு விதைகளை வினியோகிக்க ஏற்பாடு செய்தது.

கடும் மழை காரணமாக காவிரி பாசனப் பகுதியில் சம்பாப் பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டாலும் இம் மழையினால் மாநிலத்தில் வட மாவட்டங்களில் உள்ள ஏரிகளும், குளங்களும் நிரம்பின. இப் பாசன வசதியைப் பயன்படுத்தி அரசு 10 இலட்சம் ஏக்கரில் பருப்பு விதைகளையும். 7 இலட்சம் ஏக்கரில் நவரை நெல் வகைகளையும், 8 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலையையும் சாகுபடி செய்ய பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இந்த விளைச்சலால் காவிரி பாசனப் பகுதியில் ஏற்பட்ட சேதத்தை ஓரளவிற்கு ஈடுகட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கூறியபடி இயற்கைச் சீற்றங்கள் காரணமாக மாநிலத்தின் விவசாயப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்ததால் உணவு உற்பத்தியின் அளவு திருப்திகரமாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மிக அதிகமான நிலுவை இருந்தும், விவசாயப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் 1983-ம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 58.04 கோடியளவிற்குப் பயிர் கடன்கள் வழங்கியுள்ளன.



1984-85 ஆம் ஆண்டில் 95 இலட்சம் மெட்ரிக் டன் அளவு உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயர்ந்த இலக்கினை நாம் அடைய அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. நல்ல தரமான விதை உற்பத்தியும் அதன் விநியோக முறையும் வலுப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இவை பெருமளவில் கிட்ட வழிவகைகள் செய்யப்படும். விவசாயத்திற்கான தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த காவிரி, வைகை, சாத்தனூர் மற்றும் பரம்பிக்குளம்-ஆளியாறு ஆகிய பாசனப் பகுதிகளில் விசேஷமான கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. "ஹெக்டேர் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி" என்ற இலக்கினை 1984-85-ல் அடைய முயற்சிகள் எடுக்கப்படும்.

14. தற்போதுள்ள பயிர்க் காப்புறுதித் திட்டம் நெல் பயிருக்கு மட்டும் உள்ளது. இதன் கீழ் ஒவ்வொரு விவசாயியும், பாசன பயிருக்கு ரூ. 10,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர் கடனில் 150 சதவீதம், இவற்றில் எது குறைவோ, மேலும் மானவாரி பயிருக்கு ரூ. 5,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர் கடனில் 150 சதவீதம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு பயிர் காப்பு பெறலாம். தற்போதுள்ள திட்டம் நெல் பயிருக்கு மட்டும் இருப்பதால், பல்வேறு பொருள் மற்றும் உயிர் சேதத்தையும் ஈடுகட்டும் வகையில். அரசு இத்திட்டத்தினை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

12. பால்வளத் திட்டம் II தற்போது மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உற்சாகமூட்டும் பயன்கள் கிட்டியிருப்பதால் அரசு, மேலும் மூன்று மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயலாக்க இந்திய பால்வள நிறுவனத்தை கேட்டுக்கொண்டுள்ளது. மாடுகளின் தரத்தை மேம்படுத்திப் பால் உற்பத்தியை பெருக்க, உறை விந்துக்கான ஒரு வங்கியைத் தொடங்கி 400 துணை மையங்களில் இவ் வசதி கிடைக்குமாறு வகை செய்ய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

13. இதுவரை பாசன வசதி பெறாத நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதும், ஏற்கெனவே பாசனம் பெற்று வரும் நிலங்களுக்கு, அவ்வசதியை நிலையாக்குவதும் அரசின் முக்கிய கொள்கையாகும். ஆறாவது திட்டக் காலத்தில் சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்கள் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 189.79 கோடி அனுமதிக்கப்பட்டிருக்க, திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 80.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத் திட்டங்களுக்கு என ரூ. 55.14 கோடியும், அடுத்த ஆண்டில் ரூ. 60.62 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

[1984 பிப்ரவரி 15

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 78,000 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தவேண்டுமென இலக்கிட்டிருக்க, முதல் மூன்று ஆண்டு களில் 36,656 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 16,880 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. கிருஷ்ணா நதியிலிருந்து 15 ஆயிரம் மில்லியன் கன அடி நீரைப் பெறு வதற்காக, தமிழ்நாடு அரசும், ஆந்திர பிரதேச அரசும் 18—4—1983 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டதன் வாயிலாக, சென்னை மாநகரில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்கும் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்கும் கிருஷ்ணா நதி நீர் திட்டம் வகை செய்யும். இதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தத் திட்டச் செலவான ரூ. 760 கோடியில், தமிழ்நாட்டின் பங்கு ரூ. 200 கோடியாக இருக்கும். திட்டத்தின் முதற்கட்டப் பணிக்காக ரூ. 30.15 கோடி செலவிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் மாநில எல்லைப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கால்வாய் வெட்டும் பணியை நாம் மேற்கொண் டுள்ளோம். எஞ்சிய பணியை ஆந்திரப் பிரதேச அரசு நிறைவேற்றி வருகிறது. இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் நிறைவேறியபின் சென்னை மாநகரில் தற்போதுள்ள உயரளவாக, நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு கிடைக்கும் 65 லிட்டர் நீர் 127 லிட்டராக உயரும்.

15. தமிழ் நாட்டில் பயிரிடத்தக்க நிலத்தில் 50 சத வீத நிலப்பரப்புக்கு இன்னும் பாசனம் அளிக்க வேண்டியுள்ள நிலையில், மேல்பரப்பு நீர் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. சில பகுதிகளில் நிலத்தடி நீரும் பயன்படுத்தப் பட்டுவிட்டது. ஆகவே, அறிவார்ந்த முறையிலும், அறிவியல் அடிப்படையிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாடுகளை நவீனப் படுத்துவதினாலும்; புதிய கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்துவதினாலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 9 இலட்சம் எக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்க 39,000-க்கும் மேற்பட்ட மானவாரி ஏரிகள் உள்ளன. இவற்றை நவீனப்படுத்தி, இந் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த பணிகளுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இம்



1984 பிப்ரவரி 15]

மாநிலத்திலுள்ள சிறுபாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு மத்தய அரசின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றிகண்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளில் முடிவடையும். தமிழ்நாட்டிலுள்ள ஐந்து மாவட்டங்களில் அதாவது, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏரிகளை நவீனப் படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். இதன்மூலம், தற்போது பயன்படுத்தப் படும் நீரில் 20 சதவீதத்தை மிச்சப்படுத்த முடியும். இதனால் தற்போதுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், அவற்றின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் முடியும்.

16. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும், நிலத் தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்து, கண்காணிக்க பாசன நிருவாக-பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், அனைத்து நாட்டு வளர்ச்சி குறித்த அமெரிக்க நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம், சுமார் ரூ. 10 கோடி மொத்தச் செலவில் விரைவில் துவங்கி 7 ஆண்டு காலத்தில் செயல் படுத்தப்படும். இதில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ. 4.4 கோடியாகும். மீத முள்ள தொகை, அமெரிக்க நாட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 1.4 கோடி கடனாகவும், மீதமுள்ள ரூ. 4.2 கோடி மானியமாகவும் பெறப்படும்.

17. பருவமழை பொய்த்துவிடுவதனால் அவ்வப்போது பாதிக்கப்படும் மற்றொரு துறை மின்சக்தித் துறையாகும். தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியில், அதிக செலவில் உற்பத்தியாகும் அனல் மின்சக்தி பெருமளவு இடம் வகிப்பது தவிர்க்கமுடியாததாகும். அடுத்தடுத்து பருவமழை பொய்த்த தன் காரணமாக, புனல் மின் உற்பத்தி குறைந்து மின் வாரியத்தின் இழப்பு அதிகமாகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் நிதி நிலையிலும் பெருஞ்சுமை ஏற்படுகிறது. புனல் மின் உற்பத்தி நிலையங்களையும், ஏனைய மின் உற்பத்தி நிலையங்களையும் கவனமாகவும், திறம்படவும் நிருவகித்ததன் மூலமே, சென்ற ஆண்டு ஒரு சிறிது காலம் இருந்த 100 சதவீத மின்வெட்டினை உயரழுத்த மின்சக்தியைப் பிரதானமாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தளர்த்த முடிந்துள்ளது. உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற் சாலைகளுக்கு தேவையில் 75 சதவீதமாகவும், மின் அழுத்தத்தில் 60 சதவீத மாகவும் இருந்த மின்வெட்டு தேவையிலும் மின் அழுத்தத்திலும் 30 சதவீத மாகக் குறைக்கப் பட்டுள்ளது. உயரழுத்த மின் சக்தியைப் பயன் படுத்தும்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 78,000 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தவேண்டுமென இலக்கிட்டிருக்க, முதல் மூன்று ஆண்டு களில் 36,656 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 16,880 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. கிருஷ்ணா நதியிலிருந்து 15 ஆயிரம் மில்லியன் கன அடி நீரைப் பெறு வதற்காக, தமிழ்நாடு அரசும், ஆந்திர பிரதேச அரசும் 18—4—1983 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டதன் வாயிலாக, சென்னை மாநகரில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்கும் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்கும் கிருஷ்ணா நதி நீர் திட்டம் வகை செய்யும். இதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தத் திட்டச் செலவான ரூ. 760 கோடியில், தமிழ்நாட்டின் பங்கு ரூ. 200 கோடியாக இருக்கும். திட்டத்தின் முதற்கட்டப் பணிக்காக ரூ. 30.15 கோடி செலவிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் மாநில எல்லைப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கால்வாய் வெட்டும் பணியை நாம் மேற்கொண் டுள்ளோம். எஞ்சிய பணியை ஆந்திரப் பிரதேச அரசு நிறைவேற்றி வருகிறது. இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் நிறைவேறியபின் சென்னை மாநகரில் தற்போதுள்ள உயரளவாக, நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு கிடைக்கும் 65 லிட்டர் நீர் 127 லிட்டராக உயரும்.

15. தமிழ் நாட்டில் பயிரிடத்தக்க நிலத்தில் 50 சத வீத நிலப்பரப்புக்கு இன்னும் பாசனம் அளிக்க வேண்டியுள்ள நிலையில், மேல்பரப்பு நீர் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. சில பகுதிகளில் நிலத்தடி நீரும் பயன்படுத்தப் பட்டுவிட்டது. ஆகவே, அறிவார்ந்த முறையிலும், அறிவியல் அடிப்படையிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாடுகளை நவீனப் படுத்துவதினாலும்; புதிய கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்துவதினாலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 9 இலட்சம் எக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்க 39,000-க்கும் மேற்பட்ட மானவாரி ஏரிகள் உள்ளன. இவற்றை நவீனப்படுத்தி, இந் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த பணிகளுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இம்





மாநிலத்திலுள்ள சிறுபாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றிகண்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளில் முடிவடையும். தமிழ்நாட்டிலுள்ள ஐந்து மாவட்டங்களில் அதாவது, செங்கற்பட்டு. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏரிகளை நவீனப் படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். இதன்மூலம், தற்போது பயன்படுத்தப் படும் நீரில் 20 சதவீதத்தை மிச்சப்படுத்த முடியும். இதனால் தற்போதுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், அவற்றின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் முடியும்.

16. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும், நிலத் தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்து, கண்காணிக்க பாசன நிருவாக-பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம். அனைத்து நாட்டு வளர்ச்சி குறித்த அமெரிக்க நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம், சுமார் ரூ. 10 கோடி மொத்தச் செலவில் விரைவில் துவங்கி 7 ஆண்டு காலத்தில் செயல் படுத்தப்படும். இதில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ. 4.4 கோடியாகும். மீத முள்ள தொகை, அமெரிக்க நாட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 1.4 கோடி கடனாகவும், மீதமுள்ள ரூ. 4.2 கோடி மானியமாகவும் பெறப்படும்.

17. பருவமழை பொய்த்துவிடுவதனால் அவ்வப்போது பாதிக்கப்படும் மற்றொரு துறை மின்சக்தித் துறையாகும். தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியில், அதிக செலவில் உற்பத்தியாகும் அனல் மின்சக்தி பெருமளவு இடம் வகிப்பது தவிர்க்கமுடியாததாகும். அடுத்தடுத்து பருவமழை பொய்த்த தன் காரணமாக. புனல் மின் உற்பத்தி குறைந்து மின் வாரியத்தின் இழப்பு அதிகமாகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் நிதி நிலையிலும் பெருஞ்சுமை ஏற்படுகிறது. புனல் மின் உற்பத்தி நிலையங்களையும், ஏனைய மின் உற்பத்தி நிலையங்களையும் கவனமாகவும், திறம்படவும் நிருவகித்ததன் மூலமே, சென்ற ஆண்டு ஒரு சிறிது காலம் இருந்த 100 சதவீத மின்வெட்டினை உயரழுத்த மின்சக்தியைப் பிரதானமாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தளர்த்த முடிந்துள்ளது. உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற் சாலைகளுக்கு தேவையில் 75 சதவீதமாகவும், மின் அழுத்தத்தில் 60 சதவீத மாகவும் இருந்த மின்வெட்டு தேவையிலும் மின் அழுத்தத்திலும் 30 சதவீத மாகக் குறைக்கப் பட்டுள்ளது. உயரழுத்த மின் சக்தியைப் பயன் படுத்தும்

ஏனைய தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டுத் தேவையிலும், மின் அழுத்தத்திலும் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1—10—1981க்குப் பிறகு தொடங்கப்பட்ட உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 30—6—1984 வரை மின்வெட்டிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது. உயர் உபயோக நேரத்தில் (Peak hour) தொழிற்சாலைகளுக்கு மின்சக்தியைப் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் அனைத்துப் பணிகளுக்கும் 11—7—1983-லிருந்து மின்வெட்டு நீக்கப்பட்டது.

18. அனல் மின்சக்தி உற்பத்தியைக் கணிசமான அளவுக்குப் பெருக்குவதன் மூலம் மட்டுமே இம்மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணமுடியும். 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட இரண்டு யூனிட்டுகள் அமைக்கும் மேட்டூர் அனல் மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தற்போது மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி நெய்வேலியில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்து அனல் மின் யூனிட்டுகள் ஏற்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, 1983 ஜூனில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கத்தை வெட்டும் பணியைத் தொடங்குவதற்கும், மேற்குறிப்பிட்ட அனல் மின் உற்பத்தித் திட்டத்திற்கு முழு அளவில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குமாறு நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் மற்றுமொரு அணு மின்சக்தித் திட்டத்தைத் தொடங்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இம்மாநிலத்தில், நீண்ட காலமாக நிலவி வரும் மின்சக்திப் பற்றாக்குறையை ஓரளவிற்காவது நீக்க இத்திட்டம் உதவும்.

19. 1983 ஆம் ஆண்டு மே திங்களில் மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டபோதிலும், மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மின் கட்டணங்கள், மின் உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்யப் போதுமானதாக இல்லை. அப்படியிருக்க, மத்திய திட்டக் குழு வலியுறுத்தும் முதலீட்டிற்கு 3 சதவீத ஆதாயம் கிட்ட வாய்ப்பில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. அண்மையில் நிலக்கரி விலை 25 சதவீதம் உயர்ந்துள்ளதால் இந்நிலை மேலும் மோசமாகியுள்ளது. தனது அடுத்தத் திட்டங்களுக்கு பாதிப்பின்றி மின் உற்பத்தித் திட்டங்களுக்கான செலவில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடு செய்யவும், மாநில அரசின் நிதியுதவியை மின்வாரியம் பெருமளவில் நாட வேண்டியுள்ளது.



20. கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத் திற்கு அரசு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் படுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்குப்படி இம்மாநிலத்தில் உள்ள 47,273 குடியிருப்புப் பகுதிகளில் 18-167 குடியிருப்புப் பகுதிகள் குடிநீர்ப் பிரச்சினை யுள்ள குடியிருப்பு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு களில் பருவமழை பொய்த்ததன் காரணமாக குடிநீர்ப் பிரச்சினையுள்ள கிராமங் களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. 1985 மார்ச் இறுதிக்குள், இந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுமென்று நம்பப்படு கிறது.

21. உலக வங்கியின் நிதியுதவியுடன் குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுப் பணித் திட்டத்தை மேற்கொள்ளத் திட்ட மிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூன்று பெரு நகரங்களுக்கும், ஏனைய 75 நகரங்களுக்கும், 740 கிராமக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களும் 14 நகராட்சிகளுக்குக் குறைந்த செலவில் துப்புரவு வசதி அளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்படும். ரூ. 149.42 கோடி செலவில் செயலாக்கப்படவிருக்கும் இத்திட்டம் நாலரை ஆண்டுகளில் முடிவடையும்.

22. பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் தண்ணீரில் அதிக ஃபுளுரைட் உள்ள 726 குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் ஒரு திட்டத் திற்கு நிதியுதவி அளிக்க ஐரோப்பிய பொருளாதாரக் குழு ஒப்புக்கொண் டுள்ளது. இத்திட்டம் ரூ. 15.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 30 மாதங்களில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

23. வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். போதுமான பொருளாதார வளர்ச்சி இன்றியும், மேலும் வேலைவாய்ப்பு களை உருவாக்காமலும் இந்த உயரிய நோக்கத்தை எய்த இயலாது. இதனைக் கருத்தில் கொண்டுதான், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, ஒருவருமே வேலை வாய்ப்புப் பெறாத, குடும்பத்தில் உள்ள வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று மாநில அரசு அண்மையில் அறிவித்துள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் பற்றியும், அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடத் தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் பற்றியும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தேவையான தகுதி வாய்ந்த கைவினைஞர்கள் கிராமப் பகுதிகளில் இல்லை என்பதனால் எந்த ஒரு சுய வேலைவாய்ப்புத் திட்டமும் திறமையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். ஏற்கெனவே நிறுவன நிதியின் உதவியுடன் செயலாக்கப்படும், சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களுடன் பல்வேறு திட்டங்களின் கீழான பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது. பிரதமரின், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் பலன், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் தகுந்த நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் உதவி கிடைக்கச் செய்வதை முறைப்படுத்தும் ஓர் அமைப்பாகப் பணியாற்ற 15—7—1983 முதல் நிறுவன நிதித் துறை என்ற ஒரு துறையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது, ஏற்படுத்தப்பட்ட சில மாதங்களில் ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களை இம் மாநிலத்திலுள்ள 1,70,564 பேருக்கு வழங்கியுள்ளது. இதில் 56,966 பேர் ஆதி திராவிடர்கள் ஆவர். தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிற்சி பெற்ற வேலையில்லாமல் இருக்கும் 10,000 பேர்களுக்கு தொடக்க மூலதன உதவி அளித்து, அதன் மூலம் வங்கிக் கடனைப் பெறச் செய்யும் பணியைப் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேலை வாய்ப்புப் பணிகள் துறை மேற்கொண்டுள்ளது.

24. நிலமற்ற கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 8.90 கோடியையும் அடுத்த ஆண்டிற்கு ரூ. 44.50 கோடியையும் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. ரூ. 44 கோடி மதிப்பிட்டுச் செலவிலான திட்டங்களுக்கு, மாநில அரசு, மத்திய அரசின் ஒப்புதலை ஏற்கெனவே பெற்றுள்ளது.

25. மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் நிதியுதவி அளித்து செயற்படுத்திவரும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ரூ. 36 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979-80 முதல் 1983 நவம்பர் இறுதி வரை, இத் திட்டத்தின்கீழ் 164,867 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 40 கோடி ஒதுக்கப்படும். இதில் 50 சதவீதத் தொகையை மத்திய அரசு அளிக்கும்.



26. நம்முடைய சமுதாயத்தை இன்று எதிர்நோக்கியுள்ள மிக முக்கியப் பிரச்சினை, தற்போதைய கல்வி முறையில் படித்துவிட்டு வரும் எண்ணற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுதான். அனைத்து நிலைகளிலும் உள்ள பொதுவான கல்விமுறை, வேலை வாய்ப்பை அளிக்க முடியாத அளவிற்கு மனித ஆற்றலை உருவாக்கித் தந்துள்ளது. இவர்களிடையே வளர்ந்து வரும் அதிருப்தி, சமுதாயத்தில் அமைதியின்மையையும் பதட்ட நிலையையும் அதிகமாக்குகின்றன. கல்வியின் அனைத்து நிலைகளிலும் அந்தந்த இடத்திற்கேற்றாற்போல் குறிப்பிட்ட பணிப் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில், தற்போதைய கல்வி முறையை மாற்றியமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அப்பொழுதுதான், இளைஞர்கள் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கோ அல்லது சுய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கோ திறனைப் பெற்றிருப்பர். இந்த பல்திறப்பட்ட திட்டத்தைச் செயலாற்றுவது மாநிலத்தின் நிதி ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டு இருக்குமாதலால், மாநில அரசு, எட்டாவது நிதிக் குழுவின் மூலம் மைய அரசிடம் நிதியுதவியைக் கோரியுள்ளது. இக்குழுவின் இடைக்கால அறிக்கையில் இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை எனினும், இச்செயற் குறிப்பிற்கு மைய அரசின் நிதியுதவி பெற விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

27. தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இம் மாநில அரசு அளித்துள்ள பல்வேறு சலுகைகள், வசதிகளைத் தவிர பெரும் செலவில் பொதுத் துறைத் தொழில்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கற்பட்டு மாவட்டம், திருவாலங்காட்டில் சுமார் ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, இவ்வாண்டு ஏப்ரல் மத்தியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவில் ஆட்குறைப்புச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் பணி செம்மையாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காகவும் மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரா சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை மாநில அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது.

28. மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு பத்திரிகை காகிதம்—பிற காகித ஆலை நிறுவனம், திருச்சி மாவட்டத்தின், பின்தங்கிய பகுதியான புகளூரில் பத்திரிகைக் காகிதம்-பிற காகித ஆலை ஒன்றை அமைத்து வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ரூ. 195 கோடி செலவிலான இத்திட்டத்திற்கு, உலக வங்கி, திட்டச் செலவில் 50 சதவீதத்தை ஏற்கிறது. ஆண்டு ஒன்றிற்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதத்தையும், 40,000 டன் பிற

காகிதத்தையும் உற்பத்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் செயல்படத் தொடங்கிய உடன் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணியை மிச்சப் படுத்தும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன. திட்டமிட்டுள்ளவாறு, நடப்பு ஆண்டின் செப்டம்பர்-அக்டோபருக்குள், இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

29. சென்னையில் வரிக் கட்டுப்பாடற்ற வணிக மண்டலம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பிற்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. அரசுக்குச் சொந்தமான 150 எக்கர் நிலம் இம் மண்டலத்தை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப் பகுதியின் மேம்பாட்டுப் பணி, மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் (சிப்காட்) ஒப்படைக்கப் பட்டுள்ளது.

30. பாம்பன் பாலப்பணி விரைவில் மறுபடி ஆரம்பிக்கப்படும். இராமேஸ்வரம் தீவின் முனையில் இருக்கும் தனுஷ்கோடி வரை தடங்கலற்ற சாலைப் போக்குவரத்து வசதியை இப்பாலம் ஏற்படுத்தும். இப்பணிக்கு இப்போது ரூ. 16.65 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பணி தொடர்ந்து மிகவும் திருப்தி தரும்வகையில் நடைபெற்று வருகிறது. நாட்டிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் தலை சிறந்தவைகளில் ஒன்றாக விளங்குகின்றன என்று மத்தியத் திட்டக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. ஈரோட்டில் ஜீவா போக்குவரத்து நிறுவனம், நாகர்கோவிலில் நேசமணி போக்குவரத்து நிறுவனம், காரைக்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்து நிறுவனம், ஆகிய புதிய மூன்று போக்குவரத்து நிறுவனங்கள் 1—4—1983 முதல் தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. கடந்த நிதியாண்டில், மூன்று நிறுவனங்கள் தவிர, பிற நிறுவனங்கள் அனைத்தும் ஆதாயம் ஈட்டியுள்ள போதிலும், டீசல் வழங்கல் விலை அவ்வப்போது உயர்ந்து வருவதால், இந்த ஆதாய நிலை தொடர்ந்து இருப்பது கடினமாகும். 1980 முதல் இப்பொழுதுவரையிலான கால அளவில், டீசலின் விலை 100 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த மூன்றரை ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூ. 115 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.





32. கிராமப்புறப் பகுதிகளுக்குச் சுகாதார வசதி அளிப்பது மாநில அரசின் கொள்கைகளில் முக்கியமான ஒன்றாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில், 5,000 மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு பகுதியிலும், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 712 துணை நிலையங்களைக் கூடுதலாக ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இவை மாநிலத்தில் தற்போது உள்ள 4,586 துணை நிலையங்களுக்குக் கூடுதலாக அமையும்.

33. தென் ஆர்க்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் டேனிடா (DANIDA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம் மூன்றாம் ஆண்டை எட்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 449 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 313 துணை நிலையங்களில் கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

34. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டு வருவதால், நல்ல பயன் கிட்டியுள்ளது. இந்த ஆண்டில் 3.99 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட வேண்டுமென இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 1984 சனவரி இறுதிவரை 3,77,827 கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்து, இம் மாநில அரசு, நாட்டிலேயே முதன்மையாகத் திகழ்கிறது. இவ் வாண்டின் முடிவிற்குள், இது தொடர்பான பணி இலக்கை கணிசமான அளவுக்கு விஞ்சக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. வட்டார மருத்துவமனைகளுக்கு அளிக்க ரூ. 7.80 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 26 லேப்ரோஸ்கோப் கருவிகளை வாங்க இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

35. சுற்றுப்புறச் சூழல் சுகாதாரத்தைப் பற்றிய சட்டங்களைச் செவ்வனே செயல்படுத்த 1983 ஜூலை மாதம் 15 ஆம் தேதியிலிருந்து அரசு, இதற்கான ஒரு தனித் துறையை உருவாக்கியது. மாநிலம் முழுவதும் 1983 அக்டோபர் முதல் தேதியிலிருந்து "காற்று தூய்மைக்கேடு கட்டுப்பாடு இடமாக" அறிவிக்கப் பட்டுள்ளது. 1983 செப்டம்பர் 30-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்த, தமிழ்நாடு நீர் (தூய்மைக்கேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983, மற்றும் தமிழ்நாடு காற்று (தூய்மைக் கேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983, ஆகியவையினால் மாநிலத்தில் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கான நிரந்தரத் தகுதியை மாநிலம் பெற்றுள்ளது.

[1984 பிப்ரவரி 15

36. ஆறாவது திட்டக் காலத்தில், கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இரண்டு இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றை மாநில அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 1982-83 ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்ட வேண்டுமெனத் திட்டமிட்டிருக்க, 40,092 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் அக்டோபர் இறுதிவரையில் 17,594 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஆதி திராவிடர்களுக்காக 15,058 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 20,759 வீடுகளைக் கட்டும் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப்பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4,000-லிருந்து ரூ. 6,000 ஆக உயர்ந்துள்ளது.

37. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் ஒரு முக்கிய பலன் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்ததாகும். இத் திட்டம், மனிதவளத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி இது தொடர்பாக மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தியது. ஆய்வு செய்யப் பட்ட பகுதியில் உள்ள அனைத்துக் குழந்தைகளின் உடல் நலத்தில் முன் னேற்றம் ஏற்பட்டு சராசரி உயரம், எடை ஆகியவையும் நான்கு மாத கால அளவில் அதிகரித்துள்ளன என்பது இந்த ஆய்விலிருந்து தெரிய வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வரும் பாலர்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் சிகிச் சையும் அளிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

38. 1982-83 ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில், தமிழக அரசு தலைசிறந்து விளங்கியது என்று மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதே முறையில் நடப்பாண்டிலும் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதின் பயனாக எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி கிராம வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத் தின்கீழ் உருவாக்கப்பட்ட வேலை நாட்கள், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம், வறுமைக் கோட்டி னைத் தாண்ட பழங்குடியினருக்கு உதவியளித்தல், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல், ஏழைகளுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், மரங்கள் நடுதல் கரிம எரிவாய்வு தயாரிப்புச் சாதனங்கள் அமைத்தல், செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை, தொடக்கச் சுகாதார நிலையங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் தின்கீழ் செயல்பாடு, 6—14 வயதுத் தொகுதியிலுள்ள சிறார்களைப் பள்ளியில்



1984 பிப்ரவரி 15]

சேர்த்தல், முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்கள் ஆகிய அம்சங்களில், நடப்பாண்டிற்கான இலக்கில் 70 சதவீதத்தை ஏற்கெனவே அடைந்துவிட்டது.

39. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் 1981-82 முதல் நாம் பெற்ற அனுபவத்தைக் கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதிலும், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை, பொது நலன் கருதி அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று இதனை நிருவகிக்கவும், முறைப்படுத்தவும் வேண்டும் என்று மாநில அரசு முடிவு செய்தது. இந்த நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில விற்பனை நிறுவனம் அமைக்கப்பட்டது. சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, 1—6—1983 முதல் இந்த நிறுவனத்திடம் அந்த உரிமையை ஒப்படைத்தது.

40. மாவட்ட நிர்வாகத்தை மேலும் பயனுள்ள தாக்குவதற்கென மாநிலத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்களை படிப்படியே பிரிக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது. இதன்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாத புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் என்றும், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராம லிங்கர் மாவட்டம் என்றும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டம் என்றும், தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். வட ஆற்காடு மாவட்டம், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட வட ஆற்காடு மாவட்டம் என்றும் திருவண்ணா மலையைத் தலைமையிடமாகக் கொண்ட சம்புவராயர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். மதுரை மாவட்டம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட மதுரை மாவட்டம் என்றும், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டமாகவும் பிரிக்கப்படும். தஞ்சை மாவட்டத்தை தஞ்சா வூரை தலைமையிடமாகக் கொண்ட தஞ்சை மாவட்டம் என்றும், திருவா ரூரைத் தலைமையிடமாகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். தென் ஆர்க்காடு மாவட்டம் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென் ஆர்க்காடு மாவட்டமாகவும், விழுப்புரத்தைத் தலைமையிட மாகக் கொண்ட வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படும்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டம் எனவும், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம் எனவும் பிரிக்கப்படும்.

புதியனவாக அமைக்கப்படும் மாவட்டங்களின் பரப்பளவு, அவை உள்ளடக்கும் வட்டங்கள், அவைகளில் ஏற்படுத்த வேண்டிய வசதிகள் போன்றவற்றை இதற்கென அமைக்கப்படும் வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசிற்கு பரிந்துரைகள் செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட குறிப்புகளை அரசு தக்கபடி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து, அந்த முடிவுகளை படிப்படியாக நிறைவேற்றும்.

41. அரசுப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை அரசு அக்கறையுடன் கவனித்து வருகிறது. வழக்கமாகக் கொடுக்கப்படும் பணிக்கொடையைத் தவிர, ரூ. 10,000-மும் வழங்குவதன் மூலம் அரசுப் பணியாளர்களின் ஓய்வு ஊதிய சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அரசுப் பணியாளர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ஐ அத்தொகை வட்டியுடன் ரூ. 5,000 ஆக சேர்கிற வகையில் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில், பணியாளர்களை இத்திட்டத்தில் சேர்த்துக்கொண்டு செயல்படுத்த அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. அரசுப் பணியாளர் பணியிலிருந்து, ஓய்வு பெறும்போது ரூ. 10,000 பெற இயலும் வகையில், அரசு தனது நிதியிலிருந்து ரூ. 5,000 சேர்த்துக் கொடுக்கும். எனினும், முன்னதாகப் பணியிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு அவர்கள் செலுத்தும் தொகை வட்டியுடன் கொடுக்கப்படுவதோடு அரசிடமிருந்து ரூ. 5,000-மும் பெறுவர். அரசுப் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து வரையறுக்கப்பட்ட இத்திட்டம் 1—4—1984 முதல் செயலுக்கு வரும்.

42. தாராள ஓய்வூதிய விதிகளை 1979 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் அரசு நீட்டித்துள்ளது.

43. நான்காவது ஊதிய ஆணைக்குழு (சம்பளக் கமிஷன்) அமைக்கப்படுவதை அரசுப் பணியாளர் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் இவ்வரசு அறியும். இது குறித்த முடிவு இவ்வருடமே அறிவிக்கப்படும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



44. கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கட்டிடப் பணி நடந்து வருகையில் விபத்தில் இறக்க நேரிடும்போது அவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்படும் துன்பத்தை அரசு அறியும். 1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டு சட்டம், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமான பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவுவிற்கு பொருந்தும் வகையில் அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதனால், கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ஏற்படும் துன்பம் ஓரளவுக்கு நீக்கப்படும். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு அதிகார பூர்வமான திருத்தம் ஒன்றை அரசு கொண்டுவர இருக்கிறது. இதன்படி, இப்பணியாட்களை வேலையில் வைத்திருப்பவர்கள், வேலையின்போது இவர்களின் ஆயுளுக்கும் மற்றும் அங்க இழப்புகளுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும். இத்திருத்தத்தினால் பயன் பெறாதவர்களுக்கு அரசு, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கட்டிடப் பணியாளர்கள் ரூ. 5 கொடுத்து தங்களை தொழிலாளர் நலத் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

45. ஊராட்சி-நகராட்சித் தேர்தல்களை 1984 பிப்ரவரியில் நடத்த அரசு முன்னர் முடிவு செய்திருந்தது. அவ்வண்ணமே அதற்கான தொடக்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன. எனினும், மாநிலத்தின் சில பகுதிகள், அதாவது, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்கள் அண்மையில் கடுமையான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இப்பகுதிகளில் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதுடன் போக்குவரத்து வசதிகளும் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில், அரசு நிர்வாகம், போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. நிவாரணப் பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. மிகப் பெரும்பாலோர் தஞ்சை போன்ற மாவட்டங்களில் வீடிழந்து குடி பெயர்ந்துள்ளனர். அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிய பிறகு அல்லது புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியேறிய பிறகே தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்டு இத்தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த இயலும். எனவே, ஊராட்சி நகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தபின் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தேர்தல்களை இரண்டு கட்டமாக 19—4—1984

அன்றும், 23-4-1984 அன்றும் நடத்தவும் நகராட்சித் தேர்தல்களை 28-4-1984 அன்று நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இது மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என நம்புகிறேன்.

திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி நகராட்சிகளின் நிலையை மாநகராட்சிகளாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள் அனைத்திற்கும் பொதுவான சட்டம் ஒன்றை இயற்றவும் அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

46. அடுத்தடுத்து இயற்கை இடர்ப்பாடுகள் வந்தபோதிலும், மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வறுமையை ஒழிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், வருங்காலத்தில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன். மாநிலம் ஏற்றிருக்கும் இந்த மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்ற உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

27 ... சட்டமன்ற ... செயலகம் ... சென்னை-600 009

266

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, பிப்ரவரி 16, 1984—தொகுதி 203-எண் 3
Thursday, 16th February, 1984—Volume 203 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் | 153—165 |
| 2 | துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் | 165—183 |
| 3 | ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி | 183—230 |
| 4 | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 230 |



143883

D

V211,32'N84

N84·203·1—4

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**வியாழக் கிழமை, 1984, பிப்ரவரி, 16.**

*(மாசி 4, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு 2014.)*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண்கள் 21-ம், 22-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Avvayaramman Temple.*

*23. *Q.*—Thiru E. S. VENKATESAN : Will the Hon the Minister for Information and Religious Endowments be pleased to state, whether there is any proposal by the Hindu Religious and Charitable Endowments Department to take over the Avvayaramman (ஔவைய்யரம்மன்) Temple in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் கிராமம், தாழக்குடி அஞ்சல், ஆதிச்சன்புதூரில் உள்ள அருள்மிகு ஔவையாரம்மன் திருக்கோவில் இந்து சமய அறநிலைய சட்டப் (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவுகள் 92 (1) மற்றும் 92 (2) இவற்றின் கீழ் முறையே உதவித் தொகை, தணிக்கை தொகை இவை மட்டும் 1961-ம் ஆண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை துணை ஆணையர் 3—7—1964-ல் திரு. பத்மநாப பிள்ளை என்பவரை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்தார். 1967 முதல் திரு. பத்மநாப பிள்ளை பின் வாரிசு யார் என்பது குறித்து ஒரு வழக்கு நாகர்கோவில் சப்-கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. 14—8—1976 முதல் இத்திருக்கோயில் சப்-கோர்ட் நியமித்த வழக்குறிஞரான ரிசீவர் ஒருவரின் மேற்பார்வையில் உள்ளது.

நவம்பர் 1982 முதல் இந்து அறநிலைய (ஆட்சித்) துறை பூதபாண்டி ஆய்வாளர் இத்திருக்கோயிலுக்கு தக்காராக நியமனம் செய்யப்பட்டும், ஆலயப் பொறுப்புகளை ஆய்வரிடம் ஒப்படைப்பதை ஆட்சேபித்து 1982 முதல் ஒரு வழக்கும் நாகர்கோவில் மாவட்ட முன்சீப் கோட்டில் நிலுவையில் உள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்ற கோயில்கள் தமிழகத்தில் வேறு எங்கும் கிடையாது. ஔவை யாருக்கு அந்த ஒரு இடத்தில் மட்டும் கோயில் இருக்கிறது. ஆகவே இந்தக் கோயிலுக்கு அரசு மானியம் ஏதும் கொடுக்குமா? அல்லது அரசே அந்தக் கோயிலை ஏற்று, சிறந்த முறையில் பராமரிக்க ஏதும் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கோயிலை நானே நேரில் பார்வையிட்டேன். இப்படிப்பட்ட தொன்மையான, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களை அறநிலையத் துறையே எடுத்துக்கொண்டு, அதற்கு நல்ல சிறப்புக்களையெல்லாம் சேர்க்க வேண்டுமென்று முனைகிறபோது, இப்படிப்பட்ட தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. பாரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரால் இப்படி சிலர் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அதில் அரசாங்கம் நுழைய விடாதபடி வழக்கு மன்றத்திற்குச் சென்று, அந்த வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருகின்றன. வழக்கு மன்றத்தின் முடிவு பெறாத சூழ்நிலையில் அரசு அதற்குள்ளே தலையிட்டு, அந்தக் கோயிலின் வளர்ச்சிக்கோ, சிறப்புக்கோ காரியங்களைச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, இப்போதுள்ள அந்த ஔவையார் கோயிலுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் ஏதும் இருக்கின்றனவா ன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ந்தக் கோயிலுக்கு மிகப்பெரிய சொத்துக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. முக்குடி கிராமத்தில் புஞ்சை 6 செண்ட்டும், நஞ்சை 85.5 ஹெக்டேரும் ள்ளது. அதை ஆண்டுக் குத்தகைக்கு விட்டு நாற்பது கோட்டை நெல் நகிறது. புஞ்சை நிலத்தை குத்தகைக்கு விடவில்லை. 13 மரங்கள் ள்ளன.



டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இதுபோன்ற தமிழ்ப் புலவர்கள் வேறு யாருக்கும் வேறு எங்கும் கோயில்கள் இருக்கின்றனவா? அப்படியுள்ள கோயில்களில் அவர்களது பாடல்கள் எழுதி வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, ஔவை யாருக்கு இன்னொரு இடத்தில் கோயில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதற்கான விபரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இப்படிப்பட்ட கோயில்களை அரசுப் பொறுப்பில் எடுத்துக்கொண்டால்தான், நாம் நினைக்கிறபடி, தமிழ் மூதாட்டியின் நினைவுகள் நிலைத்து நிற்கும்படி செய்ய முடியும்.

## தந்தத்துக்காக யானைகளைக் கொல்லுதல்.

*24 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டின் மலைப்பகுதியில் வாழும் யானைகளை, பிற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சட்ட விரோதமாகக் கொன்று, தந்தம் எடுத்துச் செல்கிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கடந்த மூன்று வருடங்களில் இது தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) பிறமாநிலத்தவர்களும் குற்றங்களில் ஈடுபட்ட செய்தி அரசுக்குக் கிடைத்துள்ளது.

(இ) நான்கு.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது யானைகள் எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கு இருக்கிறதா? யானைகளைத் தந்தங்களுக்காக கொலை செய்பவர்களைக் கண்டுபிடிக்க தனிக் காவல் பிரிவு ஏற்படுத்துவது உதவியாக இருக்குமா?

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :* தலைவர் அவர்களே, தமிழகத்திலே எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்பது ஓரளவுக்குக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. இதைப் போன்ற கடுமையான வனக் குற்றங்கள் செய்பவர்களை, குறிப்பாக வன விலங்குகளை பாதுகாப்பிற்காக கொல்வதிலோ, தந்தங்களை எடுக்கின்ற முயற்சியிலோ ஈடுபடுகின்ற குற்றவாளிகளைப் பிடித்து தண்டிப் பதற்காக இப்போது பெரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதை யொட்டித் தான் ஒரு டி.ஐ.ஜி. தலைமையில் தனிப் போலீஸ் படையே வனத் துறைத் தலைவரின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கிறது.

### *Teachers absorbed from Aided Schools.*

*25. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that as per G.O. Ms. No. 992, Education, dated 1st June 1978, teachers absorbed from Panchayat Union Schools while upgrading such schools, are eligible to have their services counted for awarding Selection Grade from 1st July 1971 on the basis of percentage ; and

(*b*) if so, the reasons for not extending the same privilege to teachers absorbed from Aided Schools ?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* (அ) ஆம்.

(இ) அரசாணை நிலை எண் 992, கல்வி, நாள் 1—6—1978-ல் வெளி யிடப்பட்ட ஆணை பஞ்சாயத்து யூனியன் பள்ளி மற்றும் முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கே பொருந்தும். அவர்கள் முன்பு வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழ் பணிபுரிந்திருந்தாலும், அவர்களின் முந்தைய பணி தல நிர்வாகப் பணியாக ஒரே பணியின் கீழ் வருவதோடு பணிமூப்பும் மாவட்ட அடிப்படை யிலேயே இருப்பதாலும் மாவட்டக் கழகப் பணியில் அவர்கள் ஈர்க்கப்பட்ட போது, அவர்களது பணிமூப்பில் எந்த மாற்றமும் ஏற்படாத காரணத்தால்,





10 விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை வழங்க அவர்களது முந்தைய பணியையும் கணக்கில் எடுத்துக் கொள்வதில் எந்தவித சிரமமும் இல்லை. ஆனால் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 10 விழுக்காடு அடிப்படையில் அந்தந்த ஆசிரியர்கள் அந்தந்த நிர்வாகத்தின் கீழ் ஆற்றிய பணியின் அடிப்படையிலான பணிமூப்பைக் கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கப்படுகிறது. அவ்வாறு தேர்வு நிலை வழங்கும்போது ஒவ்வொரு தனியார் பள்ளியும் வெவ்வேறு நிர்வாகத்தின்கீழ் உள்ளதால், அந்தந்த நிர்வாகத்தின் கீழ் ஆசிரியர் ஆற்றியுள்ள பணிக்காலத்தையே பணிமூப்பிற்கு எடுத்துக் கொள்ள முடியும். அவ்வாறின்றி வேறு நிர்வாகத் தின் கீழான முந்தைய பணியை தேர்வு நிலைக்கு எடுத்துக் கொண்டால், ஒரு நிர்வாகத்தின் பணிமூப்புள்ள ஆசிரியர் (Senior) சாதாரண நிலையிலிருக்கும்போது, அவரைவிட பணிமூப்பில் இளையவரானவர் வேறு நிர்வாகத்தின்கீழ் ஆற்றிய பணியை தேர்வுநிலைக்கு கணக்கிட்டதின் காரணமாக தேர்வுநிலையில் இருவருக்கும் ஏறுமாறான நிலை ஏற்படும். எனவே, உதவி பெறும் பள்ளிகளிலிருந்து அரசுப் பள்ளிக்கு ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்களது முந்தைய பணிக்காலத்தைக் கணக்கிட்டு தேர்வு நிலை வழங்குவது சாத்தியமில்லை.

*திரு. க. மீனாட்சிசுந்தரம் :* தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஒரு பள்ளியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு தேர்வுநிலை இப்போது இல்லை என்று சொல்லும்போது, அதிலே ஏழாண்டு, ஆறாண்டு பணியாற்றி யவர்கள் கூட தேர்வுநிலை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே, அரசுப் பள்ளிகளிலே அதே எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு என்று சொல்கின்றபோது 10 ஆண்டு 15 ஆண்டு ஆனாலும் தேர்வு நிலை கிடைக்காத நிலையும் ஏற்பட்டு, முரணான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு எல்லோருக்குமே எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு என்று சொல்லுவதை விட்டு, 10 ஆண்டுகள் பணியின் அடிப்படை என்று வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* தலைவர் அவர்களே, அப்படி ஒரு எண்ணம் இல்லை.

[1984 பிப்ரவரி 16

## கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டபோது வேலையிழந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்

*26. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட போது வேலையிழந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வு ஊதியத்தோடு, (1) அரசு அவ்வப்போது அறிவிக்கும் பஞ்சப்படியையும் (2) மேற்கூறிய ஓய்வூதியம் பெறுபவர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டு மென்றும் (3) இவர்களுக்கு 1—3—1970-லிருந்து 1—5—1977 வரை நிலுவை ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்றும் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) பஞ்சப்படியும், குடும்ப ஓய்வூதியமும் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன. 1—3—1970-ல் இருந்து 1—5—1977 வரை நிலுவை ஓய்வூதியம் வழங்கும் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டபோது வேலையிழந்த ஆசிரியர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைப்பதற்காகப் போராடியவர்கள் ஏதாவது சங்கம் வைத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அது பற்றி விவரம் இல்லை.



1984 பிப்ரவரி 16]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவருக்கு எழுதினால் சரியாகச் சொல்லிவிடலாமே : (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும், அங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் இன்னும் சில பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு அதிகாரியை அனுப்பி அதுபற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி அவர்கள் ஆராய்ந்துதான் இந்த முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். 1977-க்குப் பிறகு அந்த ஓய்வூதியம் கிடைக்கின்ற வகையிலே வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9—40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு ஓய்வு பெற்றவர்கள் சிலருக்கு இன்னும் ஓய்வூதியம் கொடுக்கப்படவில்லை என்பதுதான் அது. அதுபற்றி அரசிடம் முறையிடுகின்றபோது, விரிவாகப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டைப் பகுதியிலுள்ள உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்து, 1—11—1956-க்கு முன் ஓய்வு பெற்ற உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களும், 1—11—1956-க்கு முன்போ, பின்போ ஓய்வு பெற்று திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் பணியாற்றி பணிக்கொடை பெற்ற மற்றும் ஒப்படைக்கப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட்ட பள்ளி ஆசிரியர்கள், இவர்களுக்கு 9—7—1980ல் மேற்படி ஓய்வு ஊதியம் 1—4—1978 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 65லிருந்து ரூ. 100க்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்கு முன்னாலே 1—5—1977லிருந்து ரூ. 65 வாங்கியிருக்கிறார்கள்.

## விவேகானந்தா கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம்

*27. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், விவேகானந்தா கல்லூரியின் நிர்வாகம், தன் போக்குக்கு வகுப்புகளையும் மாணவர் விடுதியையும் மூடியுள்ளது என்பது உண்மையா ?

[1984 பிப்ரவரி 16

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) கோவை இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்லூரி நிர்வாகம் சென்ற ஆண்டு நடைபெற்று வந்துள்ள வகுப்புகளில் பி.காம். பட்டப் படிப்பு முதல் ஆண்டு வகுப்பை மட்டும் மூடியுள்ளது. மற்ற வகுப்புகள் வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன.

மாணவர் விடுதியில் பி.காம். பட்டப் படிப்பு மாணவர்கள் முதலில் சேர்க்கப்படவில்லை என்றாலும் அவர்களை பின்னர் சேர்க்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

(இ) பி. காம் வகுப்பு மூடியது தொடர்பாகக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்கு ஓர் அறிக்கை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இது போன்ற தனியார் நிறுவனங்கள், தனியார் கல்லூரிகள் நிர்வாகங்கள் அரசுக்கு எந்த விதமான முன் அறிவிப்பும் தராமலேயே வகுப்புகளை அல்லது விடுதியை மூடுகின்ற நிலையைத் தவிர்க்க நிரந்தரமாக ஒரு புதிய சட்டத்தையாவது உருவாக்கி அமுல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற முறைப்படி அவர்கள் அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதிவிட்டு மூடிவிடலாம் என்று இருக்கிறது. ஆனால் அதை அரசு தடுத்து நிறுத்து கின்ற அளவுக்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் வருகின்ற வகையில் சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறோம்.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, நிர்வாகிகள் அந்த நிறுவனங் களுக்கு ரெககனிஷன் வாங்கும்போதே, அம்மாதிரியாக அவர்கள் தன்னிச்சை யாக வகுப்புகளை மூடமாட்டார்கள் என்று எழுத்துமூலம் அரசு எழுதி வாங்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படி எழுதி வாங்கினாலும், சட்டப்படி அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள், பி. காம். வகுப்புகளுக்கு அனுமதி யையே மிகச் சிரமப்பட்டுத்தான் வழங்குகின்றார்கள். அவ்வளவு சிரமப்பட்டு வகுப்புகளுக்கு அனுமதி வாங்கு[illegible] அவர்களுக்கு மூடுகின்ற [illegible]



984 பிப்ரவரி 16]

ன்றபோது, அரசினுடைய அனுமதியைப் பெறாமலேயே வகுப்புகளை மூடக் டிய வாய்ப்பு இருக்கின்றது. இதற்குக் காரணம் கேட்டால், அவர்கள், ங்கே மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தரவில்லை என்கின்றார்கள். விவேகானந்தா கல்லூரி இராமகிருஷ்ணா மிஷனால் நடத்தப்படுகின்றது. ங்கே இருக்கின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இல்லாததால், தை நடத்த முடியவில்லை என்று சொல்கின்றார்கள். அப்படிப் பார்க்கும் போது அவர்கள் வாங்க முடியாத அளவுக்கு இருக்கும் சலுகையை சிரமப் பட்டு வாங்கியபின், ஏன் மூடுகின்றார்கள் என்று தெரிய வேண்டும். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி சட்டத் துறை யோடு நாம் கலந்தாலோசித்து வருகிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, இராமகிருஷ்ண வித்யாலயம் நான் படித்த பள்ளி. நான் படித்த காலத்தில் ஒரு நாளும் இப்படி நடக்கவில்லை. இப்போது இவ்வாறு நடக்கிறது என்றால், அந்த நிர்வாகம் தவறு செய்கின்றதா ? பி. காம். வகுப்பு ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்புவது என்றால், அந்த வகுப்பை நிர்வாகம் செய்ய முடியவில்லையா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதைத் தான் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அரசு அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் அவர்கள் சட்டப்படி அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பயன்படுத்துகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே படித்தவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் அந்தக் கல்லூரியின் தலைவராகவே இருந்து வந்திருக்கிறார். அதையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் எதையும் பேசுவதற்கில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் நிலையில் உயர்த்தப்படும்போது, வேறு உயர் பள்ளிகளுக்குப் போகின்ற அடிப்படை, அங்கு ஈர்த்துக்கொள்கின்ற அடிப்படை இருக் கின்றது. இப்படி ஒரு ஊராட்சியிலிருந்து இன்னொரு ஊராட்சிக்குப் போவதைப் போல், ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாறுதல் செய்கின்ற உத்தேசம் அரசுக்குண்டா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் கேட்கின்ற துணைக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, போன கேள்விக்கு இப்போது உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி போடு கின்றார்கள் என்று கருதுகிறேன்.

[1984 பிப்ரவரி 16

சிறப்பு நிலை.

* 28. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. ஜி. சுவாமிநாதன், திரு. பா. ரா. தாமஸ், அண்ட் திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) கல்வித் துறையால் 11—8—1981ல், வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 1759-ல் இடைநிலை ஆசிரியர்களுக்கும், அவர்களுக்கு இணை யான ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் மட்டும் இருபது ஆண்டுப் பணிக் கால அடிப்படையில் சிறப்பு நிலை (Special Grade) வழங்கப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், தலைமை ஆசிரியர்கள், மேல்நிலைத் தொழிலாசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஆகியோருக்கு இச்சலுகை வழங்கப்படாததால், சுமார் 50,000 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கும் இச் சலுகையினை நீட்டித்துத் தர அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, பத்தாண்டு பணிக்கால அடிப்படையிலே தேர்வு நிலை வழங்க வேண்டும் என்பதும், இருபது ஆண்டு பணிக்கால அடிப்படையிலே சிறப்பு நிலை வழங்க வேண்டும் என்பதும் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையாகும். அதில் ஒன்றை அரசு நிறை வேற்றியிருக்கிறதென்றாலும், சிறப்பு நிலையைப் பொறுத்தவரையிலே, பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் முதலியவர்களுக்கு மட்டுமல்லாமல், தலைமையாசிரியர்களுக்கும் கூட இதுவரை சிறப்புநிலை வழங்கப்படவில்லை. ஆகவே ஒரு நிலைக்குத் தரப்பட்டிருப்பதை மற்ற நிலைக்கும் விரிவாக்குவதில் அரசுக்கு சிரமம் இருக் காது, அரசு இதைப் பரிவோடு பரிசீலிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்விக்கு இப்போது பதில் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தலைமையாசிரியரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அதுபற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 16]

செல்வி ஆ. லீலாவதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியதுபோல, செகண்டரிகிரேட் ஆசிரியர் களுக்கு மட்டும் 20 ஆண்டுகள் பணி செய்தால், ஸ்பெஷல் கிரேடு கொடுக்கப் படுகிறது. ஏனைய ஆசிரியர்களுக்கும், 20 ஆண்டுகள் பணி புரிந்த பிறகு, ஸ்பெஷல் கிரேடு கொடுக்காதது, ஒரு கண்ணிலே வெண்ணையும், இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைப்பது மாதிரி இருக்கிறது. ஆகையால் இவர் களுக்கும் ஸ்பெஷல் கிரேடு கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில், ஹையர் கிரேடு ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், அதே ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும், மேலும் பட்டதாரி ஆசிரியர்களும், அவர்களது ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும் சிறப்பு நிலை 1—6—1981, 1—4—1982 முதல் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப்பற்றி விவரமில்லை.

தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடுதல்.

* 29. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறிலிருந்து வாட்டாகுடி, உம்பளாச்சேரி வழியாக, திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இதிலே குறிப்பிடப் பட்டிருக்கின்ற ஊர்கள் மிகவும் குக்கிராமங்கள் ஆகும். போக்குவரத்துக்கு வசதி இல்லாமல் மக்கள் எல்லாம் அவதிப்படக்கூடிய நிலையில் இருக் கிறார்கள். அதுவும் இந்த ஊர்களில் உள்ளவர்கள் பேருந்தையே பார்த்த தில்லை என்கிற நிலை இருக்கிறது. ஆகவே இப்போதில்லாவிட்டாலும், அமைச்சரவர்கள் மீண்டும் செயற்குறிப்பினைத் தயாரித்து அதை வருங் காலத்தில் விரிவாகச் செயல்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற பாதைகள் இப்போது பேருந்துகள் போவதற்கு சாத்தியமாக இல்லை என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதில் முன்னேற்றம் ஏற்பட்டால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, பேருந்து வேண்டுமென்று கோரிக்கை எழுப்பினால், பேருந்து ஓடுவதற்கு சாலையும் வேண்டுமென்று தான பொருள்படும். எனவே சாலை வசதிக்கும் ஏற்பாடு செய்வதற்கு அந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பரிந்துரை செய்து, சாலையையும் உருவாக்க முன்வருவார்களா? அது சற்று அதிகப்படியான பளு என்றாலும் உருவாக்க முன்வருவார்களா? அது சற்று அதிகப்படியான பளு என்றாலும் கோரோடு அதைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, நல்ல காரியத்தைச் செய்வதற்கு எவ்வளவு பளு இருந்தாலும், அதைச் சுமந்து நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம். இந்தக் கேள்வியை முதலில் போட்டுவிட்டு, பிறகு அந்தக் கேள்வியைப் போட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இதே கேள்வியிலே கூட அந்தப் பகுதியிலே சாலை வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் தயாரா என்று கேட்டிருந்தால் கூட, அதையும் கூட நாங்கள் விசாரித்து அந்தத் துறையினரோடு பேசி முடிவு எடுத்திருந்திருக்கலாம். தொடர்ந்து செய்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது தலைஞாயிறு பாதை விஷயம். டாக்டர் இரா. சனார்த்தனம் . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, இதைப்போன்று பாதை அவ்வளவு சரியாக இல்லாத இடங்களில் மினி பஸ்ஸையாவது விடுவது பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அங்குள்ள மக்கள் பஸ்ஸையே பார்த்ததில்லை என்று சொன்னார்கள். அதனால் அவர்களுக்கு பஸ்ஸைப் பார்க்க ஆவல் இருந்தால், அதையாவது அமைச்சரவர்கள் நிறைவேற்றுவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஏதோ சொந்த ஊர் என்ற காரணத்தால் கொஞ்சம் வேகமாகச் சொல்லி அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாதா என்ற ஆர்வத்திலே சொல்லியிருக்கிறார். அதையே உறுப்பினர் அவர்கள் முழுமையாக நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. மினி பஸ் ஓடவேண்டும் என்றாலும், பாதை வேண்டும். பாதை இருந்தால்தான் அது சாத்தியம். அந்த பஸ்ஸிற்கும் நான்கு சக்கரங்கள்தான், இந்த பஸ்ஸிற்கும் நான்கு சக்கரங்கள்தான். எனவே பாதை இருந்தால்தான் எந்த வண்டியும் விட முடியும்.



**தலைஞாயிறிலிருந்து வேதாரண்யத்திற்குப் பேருந்து விடுதல்.**

* 30. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறிலிருந்து கரியாப்பட்டினம், வாட்டாகுடி, குரவப்புலம் வழியாக வேதாரண்யத்திற்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியும், இதற்கு முந்தைய கேள்வியும் ஒரே மாதிரியானாலும், மேலே நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தக் கேள்வி முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, வினா 29-ம், 30-ம் ஒரே மாதிரிதான். நடவடிக்கையும் ஒரே மாதிரி தான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**2. துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சி நிரலில் காணும் அடுத்த அலுவல் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதாகும். தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 5-வது விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ், இப்பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளவர் பெயரையும், அவரின் பெயரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் முதற்கண் இந்த அவையில் நான் படிக்க வேண்டும். அவர்கள்—நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்—திரு. ஜி. சுவாமிநாதன்; முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்; வழிமொழிந்தவர்—திரு. க. இராசமூர்த்தி; நியமனம் செய்யப்பட்ட உறுப்பினரைச்

—திரு. ஜி. சுவாமிநாதன்; முன்மொழிந்தவர்—டாக்டர் இரா. சனார்த்தனம்; வழிமொழிந்தவர்—மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். தேர்தலுக்கு ஓர் உறுப்பினர் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டுள்ளதால், திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக நான் அறிவிக்கிறேன். (கை தட்டல்)

அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, அவரைத் துணைத் தலைவர் அவர்களின் இருக்கையில் வந்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவர் இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அவைக்குத் துணைத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் போட்டியின்றி ஒருமனதாக இந்த அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இந்த மன்றத்தின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், குறிப்பாக ஆளுகிற கட்சியாகிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், முதலில் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற துணைத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றம் ஒரு மிகச் சிறந்த மரபையும், மாண்பையும் நிலைநிறுத்திக் கொண்டு, வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிற மன்றமாகும். இந்த மன்றத்திலே அவைத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்கள் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் மிகச் சிறந்த வழிகாட்டிகளாக அமைந்திருக்கிறார்கள். நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அத்தகைய சிறந்த மரபையும், மாண்பையும் உருவாக்கிக் கொண்டிருக்கிற தங்கள் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த மன்றத்திற்குத் துணைத் தலைவராக திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகப் பொருத்தமான ஒன்றாகும். அவர்கள் இந்த அவையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராக இருந்து, மிகச் சிறந்த பணியாற்றி இருக்கிற அனுபவம் மிக்க உறுப்பினராவார்கள். அதுமாத்திரமின்றி, இந்த அவையிலே துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையை 2 ஆண்டுகள் உங்களுடைய தலைமைக்குத் துணையாக இருந்து நடத்திய பெருமையும் அவர்களுக்கு உண்டு. அவர்கள் துணைத் தலைவராக இருந்த காலத்தில், அதில் உலகச் சார்பிலே நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்திலே கலந்துகொண்டு, இந்தியாவின் சார்பிலே நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு,





தமிழகத்தின் சிறப்பை, பெருமையை எடுத்துக் காட்டி, மிகப் பெரிய பங்கை, புகழைப் பெற்றிருக்கிறார்கள். அதுமாத்திரமின்றி அவர்கள் கடந்த 15 ஆண்டுகளில் உறுப்பினராகப் பங்கேற்று பணியாற்றிய 13 ஆண்டுகளும், துணைத் தலைவராகப் பங்கேற்று பணியாற்றிய 2 ஆண்டுகளும் இந்த அவைக்கும், இந்த அவையின் மூலம் நாட்டுக்கும், தன்னுடைய மிகச் சிறந்த விவாதங்களின் மூலமும், வெளியிட்ட கருத்துக்களின் மூலமும் இந்தச் சமுதாயத்திற்கும் நல்ல பலனை ஏற்படுத்தித் தந்திருக்கிற ஒரு அருமையான உறுப்பினராவார்கள். அதிலும் மிகப் பெரிய சிறப்பு, அவர்கள் தங்களாலே உருவாக்கப்பட்டு, தங்களுடைய சீடன் என்ற பெருமையைப் பெற்றவர்கள் என்பது இன்னும் பெருமை சேர்க்கிற ஒன்றாகும். அவர்கள் ஆங்கிலத்திலே தேர்ச்சி பெற்றவர்கள். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற காரணத்தாலே, தமிழைப் புறக்கணிக்கும் நிலை இல்லாமல், தங்களுடைய தலைமையிலே வளர்ந்த காரணத்தினாலே தமிழை ஆங்கிலத்திற்கு இணையாக மாத்திரமல்ல, அதைவிட அதிகமாக. தாயைப் போன்று நேசிக்கும் உணர்வும், விவாதிக்கும் உணர்வும் படைத்தவர்கள். அப்படிப்பட்ட ஆற்றலுக்குச் சொந்தக்காரரானவர் அவர். எல்லோரிடத்திலும் இனிமையாகப் பழகுகிறவர் அவர். அன்போடு பழகுகிறவர். பிரச்சினைகளை விவாதிக்கிறபோது உணர்ச்சிவசப்படாதவர். விவரமாக ஆய்ந்து, அறிந்து வைத்து அதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு பிரச்சினைகளை எடுத்து வைக்கிறவர். இவ்வளவு அனுபவம் மிக்க ஒருவர் மாண்புமிகு தலைவராகிய உங்களின் கீழே துணைத் தலைவராக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகச் சிறந்த வாய்ப்பாகும்.

அவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களாக நான் உரிமை கொண்டாடினாலும், அவர்கள் இந்த அவை முழுவதற்கும் சார்ந்தவர்கள் தான். காரணம் இந்த அவையில் ஆளுகிற கட்சியைச் சார்ந்தவர் தலைவராகவும், துணைத் தலைவராக வருகிறவர் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் இருக்கவேண்டுமென்கிற ஒரு மரபு இடைக்காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஆளுகிற கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்ட பிறகு, ஒரு கட்சியிலே இன்றைக்கும், என்றைக்கும் தலைவராக இருக்கிற உங்களை, நாங்கள் எங்களுடைய தலைவர் என்று ஏற்றுக் கொண்டாலும், எங்களுடைய கட்சிக்காரர் என்று சொல்வது உங்களையே குறைத்து மதிப்பிடுவதாகும். தொடர்ந்து ஒரு தனித்த இயக்கத்தைக் கண்டு, தமிழகத்திலே தனித்த ஒரு வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிற உங்களை இந்த மன்றத்தின் தலைவராக, எங்களுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கையிலே அமர்த்தி, தமிழை அரியாசனத்திலே, அரியணையிலே அமர்த்துகிறேன் என்று அறிவித்

திலே இந்த எண்ணங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காண முடிகிறது. இந்த அவையின் உயர்வு மேலும் மேலும் பெருகவேண்டுமென்றால், இந்த அவையின் உறுப்பினர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதற்கும் மேலாக எப்படி தலைவர் அவர்களும் துணைத் தலைவர் அவர்களும் வழிநடத்திச் செல்கிறார்கள் என்பதில்தான் அடங்கியிருக்கிறது. அந்த அளவில் ஆங்காங்கே கொஞ்சம் தவறுமோ என்ற நிலை வருகிறபோது, ஆட்சியின் தலைவர் கொஞ்சம் திரும்பிப் பார்க்கிறபோது, அப்படியே அடங்கிப் போகிற நிலையும், கொஞ்சம் சோர்வு காணுகிறபோது உற்சாக மூட்டுகிற அளவில் விவாதத்திற்கு உணர்வூட்டுகிற நிலையும், எப்படிப்பட்ட நிலைமையையும் சமாளிக்கிற அளவில் இந்த அவையில் நாம் அவரவர்களுடைய கொள்கைகளுக்கேற்ப அந்தப் பின்னணியில் செயல்பட்டு வருவதைக் காண்கிறோம். அந்த அளவிலே எங்கே எங்கே தவறுகள் என்ற நிலை வருகின்றபோது, தலைமை காக்கின்றபொழுது, இருந்து நடத்திச் செல்கின்ற நிலைமை இருக்கிறது. மிகுந்த உரிமையோடு தவறுகின்ற நிலைமை வருகின்றபோது தலைமையிலே இருந்து அடக்குகின்ற நிலைமையும், பின்னர் சோர்வு காணுகின்றபோது உற்சாகமூட்டுகின்ற வகையிலே விவாதங்களுக்கு எடுத்துக் கொடுக்கின்ற நிலைமையும் எப்படிப்பட்ட சூழ்நிலையையும் சமாளித்துச் செல்கின்ற நிலைமையையும் இந்த அவைக்குள்ளே நாம் அவரவருடைய கொள்கைகளுக்குச் சொந்தக்காரர்களாக, உரிமையுள்ளவர்களாக வந்தபோது உள்ளே அந்தக் கொள்கையின் பின்னணியிலேதான் செயல்படுகிறோமே தவிர, தனிப்பட்ட முறையிலே நமக்கு எந்த உணர்வும், காழ்ப்பு உணர்வும் இருக்க முடியாது. அதற்கு மாறாக, இந்த ஜனநாயகத்தை வளர்க்க ஒத்து நிற்கின்றோம் என்பதை அது எடுத்துக்காட்டுகின்றது. நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் சாதாரண காலங்களிலேயே அவையினுடைய விதிகளை திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருப்பவர்கள். அதற்கு மேலாக, அவையினுடைய நடவடிக்கை பற்றிய ஆங்கிலப் புத்தகங்களைத் தொடர்ந்து எடுத்துப் படித்து வருபவர்கள். இந்த அவையினுடைய நடவடிக்கைகளை, துணைத் தலைவராகப் பொறுப்பிலே இருந்து, நடத்திச் செல்வதிலே காட்டுகின்ற ஆர்வம் அவரிடம் இருக்கிறது. துணைத் தலைவராக இல்லாமல் உறுப்பினராக இருந்தபோது, சிக்கல்கள் வருகின்றபோது, அவர் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்குத் தயங்கியதில்லை. சொல்லாமல் இருந்ததில்லை, அவையினுடைய நடவடிக்கைபற்றிய பிரச்சினையாக இருக்குமானால், நம்முடைய துணைத் தலைவர் அவர்களுடைய வார்த்தை இல்லாமல் இருக்காது. அந்த அளவுக்கு அவை நடவடிக்கைகளோடு ஒன்றிப் போயிருக்கிற அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றது இந்த அவைக்குப் பெருமை சேர்க்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



இன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய றுப்பினராக இந்தப் பொறுப்பினை ஏற்றிருந்தாலும் கூட, மாண்புமிகு வையின் முன்னவர் அவர்கள் கூறியதைப் போல, இந்த அவைக்குச் ாந்தக்காரராக இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சொந்தக் ாராக இந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கிறார்கள். இந்த நல்ல பாரம் ரியத்தை உருவாக்கியமைக்காக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக் ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் என்னுடைய பாராட் டத் தெரிவித்து, இந்தத் தேர்வு நல்ல முறையாக அமைவதற்கு அத்தனை றுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன்.

* திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களே இந்த அவையி டைய துணைத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த வையினுடைய பாரம்பரியப் பெருமையிலிருந்து நாம் வழுவாமல் நமது பருமையை நிலைநாட்டி இருக்கிறோம் என்பதை எடுத்துக் கூறுவதாகும் ன்ற பொருள்பட மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வாழ்த்துரை வழங் னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் நான், தேர்ந் தெடுக்கப்பட்ட துணைத் தலைவர் அவர்களை என்னுடைய மகிழ்ச்சியின் ல்லையிலிருந்து பாராட்டுகிறேன். அவர்களுடைய நீண்ட அனுபவம், ழ்ந்த அறிவு இந்த அவையினுடைய நடவடிக்கைகளைச் சிறப்பாக நடத்திச் செல்வதற்கு எப்போதுமே துணை நின்றதைப் பார்த்தோம். இன்றும் அவர் ள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையை நடத்திச் செல்வதற்குத் துணையாக ருப்பது இந்த அவைக்குப் பெருமையாகும்.

மனிதனுடைய வாழ்க்கையில் உணர்ச்சிக் கூறு, அறிவுக் கூறு இரண்டும் ணைந்து, அப்போதைக்கப்போது இவ்விரண்டு கூறுகளும் 50 சதவிகிதம் ணைந்து இருப்பதுதான் உயர்வாகும். உணர்ச்சிக் கூறு மட்டும் மிஞ்சி டுகிறபோது, அறிவு அற்ற செயலைச் செய்யவும், அறிவு மட்டும் மிஞ்சி விடும் ாது மனிதத் தன்மையற்ற செயலைச் செய்கிற ஒரு நிலைமை ஏற்படுவது யல்பாக அமைவதை நாம் பார்க்கிறோம். ஆகவே உணர்ச்சிக் கூறிலேயே ருக்கிறபோது தான் உணர்ச்சியின் எல்லையிலே இருக்க முடியும். அறிவு லையிலே நின்று பார்க்கும்போது, காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதற்கு ன்னெல்லாம் தப்புச் செய்ய வேண்டுமென்றாலும் செய்கிறேன் என்று கூடச் சால்லலாம். ஆகவே இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று மிஞ்சி விடாமல் ருக்கவேண்டியது ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலே இருக்க வண்டிய ஒன்று. எனவே அதுபோல ஒரு நாட்டினுடைய சட்ட மன்றம் ரண்டு அவைகளும் சேர்ந்து உணர்ச்சியும், அறிவும் குன்றாமல் இருக்க

[திரு. ம. சங்காலிங்கம்] [1984 பிப்ரவரி 16

(முற்பகல் 10-10)

அங்கே உணர்ச்சி மிஞ்சி விட்டால், இங்கே அறிவு மிஞ்சி அதை மிதப்படுத்த வேண்டும். ஏனென்றால் இரண்டும் சேர்ந்துதான் ஒரு அவை. ஏனென்றால், சட்டமன்றங்கள் என்று சொல்வதில்லை. சட்டமன்றம் தான். அதனாலே அதிலே மேலவை, பேரவை என்று சொல்கின்றோமே தவிர, சட்ட மன்றம் ஒரு மனிதன் போல. அந்தச் சட்டமன்றத்திலே அங்கே உணர்ச்சி குன்றி இருக்கக்கூடாது. அது உணர்ச்சிக்குச் சொந்தமான இடம். இங்கே அறிவு குன்றி இருக்கக்கூடாது. இது அறிவுக்குச் சொந்தமான இடம். இந்த இரண்டும் கலந்து இருக்கின்றபோது, அங்கே 60 பர்செண்ட் உணர்ச்சி வருகின்றபோது இங்கே 40 பர்செண்ட் இருக்கக்கூடாது. இங்கே 60 பர்செண்ட் அறிவு வந்து இரண்டும் சேர்ந்து மிதப்படுத்துகின்ற அளவுக்கு அறிவு மிஞ்ச வேண்டும். இநத அவையை இந்நிலையில் நாம் கொண்டு செல்கின்ற பான்மை பெற்று, அந்தப் பாரம்பரியத்தைப் பெற்று, பெருந்தலைவர்கள் இருந்த இருக்கையிலே நாம் எல்லாம், நாம் அனைவருமே இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்தப் பெருமையைப் பெற்று இருந்துகொண்டிருப்போம்.

திரு. சுவாமிநாதன் அவர்கள் தமிழகத்திலே, தஞ்சை தரணியிலே பிறந்து அங்கே அறிவார்ந்த பட்டதாரிகளின் பிரதிநிதியாக இருந்து இந்த அவையிலே தங்களாலே அரசியலுக்குக் கொண்டுவரப்பட்டு, தங்களுடைய அரசியலுக்கு வலது கரமாக இருந்து, இந்த அவையிலேயும் தங்களுக்கு வலது கரமாக இருந்து, இந்த அவையிலே உங்களுக்குப் பக்கத்திலே, வலது பக்கத்திலே அமர்கின்ற ஒரு பேற்றினை உருவாக்கியிருக்கிறதில் எங்களுக்கும் ஒரு உரிமை இருந்தது என்று நான் தெரிவித்துக்கொள்ளும்போது, நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களுடைய ஆர்ந்த அறிவும், அனுபவமும், தங்களிடத்திலே அவருக்குள்ள பற்றுதலும், தனியாக அவருக்குள்ள தமிழ்ப் பற்றுதலும் நமக்குத் தெரியும். இந்த அவையிலேயும் முழு அளவிலே, அவர்களும் தமிழிலேயே நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு சென்று, தமிழ் வளர, தமிழ்நாடு வளர தமிழகத்தின் அரசியல் வழிமுறைகள் சிறப்புற பணியாற்றுவார்கள். நாங்கள் பணிபுரியும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, நாங்களும் துணை நிற்போம் என்று உறுதி கூறி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் எங்கள் வாழ்த்தைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்போது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் தமிழகத்தில் அனுபவம் மிக்க அரசியல் தலைவர்களிடம் பயிற்சி பெற்றவர். இப்போது அவர்கள் சார்ந்திருப்பது



1984 பிப்ரவரி 16] [திரு. ப. மாணிக்கம்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்றாலும், இந்தப் பொறுப்பிற்கு அவர்கள் தகுதி வாய்ந்தவர். மெத்த படித்தவர். இன்று அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதுதான். அவர் தமிழ் ஆங்கிலம் இரண்டும் தெரிந்தவர். அத்துடன் தமிழகத்திற்கு அவருடைய காணிக்கை ஒன்றும் உண்டு. அது அவர்கள் மருந்து இயல் துறையிலே இருப்பது. அந்தத் துறையிலே அவருக்கு ஒரு சிறப்பான திறமை இருக்கிறது. அவர் மருந்து இயல் துறையிலே பட்டம் பெற்று ஒரு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகூட நடத்துகின்றார்கள் என்பது நமக்குத் தெரியும். சில புதிய மருந்துகளைத் தயாரிக்கின்றார்கள். தீராத நோய்களைத் தீர்க்கவும், நாள்பட்ட நோய்களைத் தீர்க்கவும் புதிய மருந்துகளைத் தயாரிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். அந்த முறையிலே நம்முடைய தமிழகத்திற்கு அவருடைய ஒரு காணிக்கை உண்டு. அதுபோன்று இந்த அவையிலே சில தீராத பிரச்சினைகளுக்கு அவர் துணைத் தலைவராக இருந்து வழி காட்டி உதவுவார் என்ற நம்பிக்கையில் நான் அவரை வாழ்த்தி அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அவையின் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை என்னுடைய கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்தி வணங்குகிறேன்.

அவர்கள் இந்தப் பதவிக்குப் புதியவர் அல்ல. ஏற்கெனவே உதவித் தலைவராக இருந்தவர்தான். அப்போது சுயேச்சை உறுப்பினராக இருந்தார்கள். இப்போது கட்சியின் சார்பிலே நின்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அதை நான் குறைவாகச் சொல்லவில்லை. இருந்தாலும் இந்தச் சட்டமன்றத்தில் சிறுபான்மையினருக்கு அவரிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும் இந்தச் சட்டமன்ற அவையிலே விவாதத்திற்கு உரிய பிரச்சினைகளை அவர் கிளப்புவார்கள். சில சமயங்களில் விவாதத்தில் பதில் சொல்வார். அவர்கள் தனக்குள்ள அந்த உரிமையை விட்டுக் கொடுத்து விடுவார் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் எங்கள் விவாதத்திற்கு உதவி செய்வார் என்று நம்புகிறேன். என் சார்பிலும், என் கட்சியின் சார்பிலும் அவரை வாழ்த்தி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்போது நானும் உட்காருகிறேன்.

THIRU. J. M. MIAKHAN. Mr. Chairman, on behalf of the Indian Union Muslim League also, I wholeheartedly welcome the election of Thiru G. Swaminathan as Deputy Chairman of this House. He fully deserves the honour. He is fully capable of discharging his duties as I know that he has got good experience, having been

Deputy Chairman for two years. His ability to conduct the affairs of the House ably is known to all of us. We, the Members in the Opposition, have full confidence in him and I am sure he will discharge his duties to the full satisfication of all concerned. Thank you.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, என் வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் மேலவையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டது கண்டு ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பில் நான் மகிழ்ச்சி யடைகிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அவர் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாக்களித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், ஆசிரியர்களாவார்கள், குறிப்பாக தமிழாசிரியர் களாவார்கள். ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் நலன்களில் எல்லாம் அக்கறை உள்ளவர்கள். எனவே எங்களில் ஒருவர் மேலவையினுடைய துணைத் தலைவராக இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நான் ஆசிரியர் சமு தாயத்தின் சார்பிலே அவரை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மகிழ்ச்சி அடைவதற்கு மற்றொரு காரணம், அவர் எங்கள் தஞ்சை மாவட்டத்துக்காரர் என்று சொல்லிக் கொள்வதிலே நான் மெத்த மகிழ்ச்சி அடைவதோடு கூட, அவர் பணிகளைத் திட்டமிட்டு, திட்டமிட்ட பணிகளைத் திட்டமிட்ட முறையிலே செய்வதற்கு ஒவ்வொன்றுக்கும் நேரம் ஏற்படுத்திக் கொண்டு, அதை ஒழுங்காக அந்த அந்த நேரப்படி செய்து முடிக்க வேண்டு மென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர். அந்த வகையிலே அவரை நாம் பின்பற்ற வேண்டும். அவர் திட்டமிட்டு ஆற்றும் பணிக்கு, இன்றைக்கு ஒரு சிறந்த பரிசு கிடைத்திருக்கிறது என்று எண்ணி நான் வாழ்த்தக் கடமைப்பட் டிருக்கிறேன்.

தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர் மருந்துகள் தயாரிப்ப தோடு மட்டுமல்ல, விருந்து உபசாரத்திலும்கூட 'செல்விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்திருப்பான்' என்ற வள்ளுவர் கூறியுள்ள தற்கிணங்க, மற்றவர் களை விருந்து உபசரிக்கும் அளவிற்கு, அனைத்து தாப்பினரையும் அழைத் துச் சென்று, பல்வேறுவிதமான பாச உணர்வுகளைக் காட்டுகின்ற நல்லவர் அவர் இன்றைக்கு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது என்று மேலும் மேலும் வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். அவர் இதுவரை இங்கே இருந்து அவையிலே சுவையூட்டுவார். அதை இப்போதும் அவர்கள் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவர் ஒரு சுயேச்சை உறுப்பினராக இருந்து, பிறகு ஓர் ஆளும் கட்சி உறுப்பினர்





என்ற தன்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், சுயேச்சைகளின் நிலை அவருக்கு நன்றாகத் தெரியும். மேலவையிலே சுயேச்சை உறுப்பினராக பல ஆண்டு காலம் இருந்தவர். அவர்கள் மேலவைத் தலைவர் இடத்திலே உட் காருகிற நேரத்திலே பழைய சுயேச்சை உறுப்பினர் என்ற உணர்வோடு எங்களை எல்லாம் பாராமரிப்பார்கள்; அதிக அளவு வாய்ப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு, அவருடைய பணி வெல்க, அவர் வாழ்க, இந்தப் பொறுப்புக்கு புதிய பெருமையினை மீண்டும் மீண்டும் சேர்க்க வேண்டுமென்று சொல்லி, ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே வாழ்த்தி அமர்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, I thank you for giving me 'also' an opportunity to join the previous speakers in congratulating and felicitating the Hon. Thiru G. Swaminathan on his assumption of the august office as Deputy Chairman of this House. I said 'also' because so many leaders are in this House, when we are only three women Members to represent the women. I hope you will not mind my making a mention about this. Thiru G. Swaminathan has been the Deputy Chairman of this House and I do hope that he will give the women Members more opportunities to speak. Thiru Meenakshisundaram in his speech, asked for more time to talk. I want to mention one thing very clearly and that is that the voice of the teachers is being heard in this House in season and out of season. With the completion of election to the Panchayats and other local bodies, one-third of the membership of the House will be filled up and on behalf of the three lady Members including myself. I want to say how happy we are that Thiru Swaminathan has been given this august post. One day suddenly I saw Thiru Swaminathan wearing black shirt and sitting along with my colleagues on this side of the House. It was the time when there was torture and killing of Tamils in Sri Lanka. When I inquired, I learnt that he had changed parties and had joined the ruling party A.I.A.D.M.K. I am well aware of his ability and experience and I hope the Cabinet will make use of him. I also do hope that during his term as Deputy Chairman, we, the lady Members will be able to get more time to speak. Once again I thank the Hon. Chairman for giving me an opportunity and I once again congratulate Thiru Swaminathan on his election to this high office which he is very fit to occupy.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர்களே, இன்று இரண்டாம் முறையாக நம்முடைய மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவர் பதவிக்கு வந்திருப்பதை, உங்கள் எல்லோரையும் போல நானும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். ஆளுங் கட்சியினர்—

குறிப்பாக, தமிழகத்தின் முதல்வர், இந்த அவையின் முன்னவர் எல்லோரும் அவரைத் தேர்ந்தெடுத்தது, சந்தர்ப்பவசமாக அவர் கட்சிக்காரராக அமைந் திருக்கிறார் என்றாலும்கூட, அவருடைய தகுதிக்காகத்தான் என்பது, ஏற் கெனவே அவர் கட்சியில் இல்லாதபோது அவருக்கு துணைத் தலைவர் பதவி தந்ததை நினைவில் கொண்டு, அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன் அவர் என்னுடைய நண்பர் என்ற முறையில்.

இந்த வாரத்தில் இரண்டு நல்ல நிகழ்ச்சிகள் நடந்து, 2, 3 நாட்களாக நான் மகிழ்ச்சி அடையக் காரணமாக இருந்தன. ஆளுநர் அவர்கள் உரையில் வ. உ. சிதம்பரனார், அண்ணா, வள்ளலார், முத்துராமலிங்கத் தேவர் ஆகியவர்களுடைய பெயர்களை புதிய மாவட்டங்களுக்கு வைத்ததற்காக என் னுடைய மனதிலே எவ்வளவு பூரிப்பு தெரியுமா? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும், இதற்காகத்தான் காங்கிரசிலிருந்தபோது சண்டை போட்டுக் கொண்டிருந்தேன் என்று. மதிக்கப்பட வேண்டியவர்கள் தள்ளப்படுகிறார்கள் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தேன். அடுத்து, திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் சிறந்த நண்பர். துணைத் தலைவராக இருப்பவரை, நண்பர் என்று சொல்வதை வயதால் மூத்தவர் சொல்கிற உரிமை என்று கருத வேண்டும். அவருக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் வலது பக்கத்திலே அவர்கள் அமர்கிறார்கள் என்று சொன்னார்கள். இடது பக்கத்தில் அமர்ந் திருக்கிறவர்கள்கூட என்னுடைய நண்பர்கள்தான். நேற்று எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவரும், இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற வரும் பிள்ளைப் பருவம் முதல் என்னோடு பழகியவர்கள், என்னால் அறியப் பட்டவர்கள், என்னை அறிந்தவர்கள். எதிர்க் கட்சித் தலைவராக திரு. சங்கரலிங்கம் அவர்கள் இருந்தபோது, இந்த அவையை அமைதியாக நடத்த முடிந்ததென்றால், அவர் உதவியதும் ஒரு காரணம். இந்த நேரத்திலே வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு, ஒன்று சொல்ல வேண்டும். இப்போதுள்ள எதிர்க் கட்சித் தலைவரும் என்னைப் புரிந்தவராதலால், என்னோடு ஒத் துழைக்கிறார். இன்னும் ஒத்துழைப்பார் என்று முன்கூட்டியே சொல்லி வைக்கிறேன்.

நம்முடைய துணைத் தலைவர் அவர்கள், மூன்று முறை[illegible]ாக பட்டதாரி கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். பட்டதாரிகள் தொகுதியில் எளிதில் வெற்றி பெற முடியாது. உணர்ச்சிவயப்படாத வாக்காளர்கள் அவர்கள். திரும்பத் திரும்ப ஒருவருக்கு வாக்களிக்க சலிக்கும் மனப்பான்மை உடையவர்கள். அப்படிப்பட்ட தொகுதியில் 3 முறை அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தொகுதி என்று நினைக்கும்போது,



எந்த அளவுக்கு அவர்கள் படித்த சமுதாயத்திடம் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறார் என்பது தெரிகிறது. ஆளுங் கட்சியில் சேர்ந்து இந்தப் பதவிக்கு இப்போது வந்திருப்பது, அவர் தொகுதியில் உள்ள வாக்காளர் களுக்கு அவர் தேடிக் கொடுத்த பெருமை. அவர்கள் இதை நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள் என்று நினைக்கிறேன். முன்பு துணைத் தலைவராக இருந்தபோது, எல்லோரும் சொன்னது போல, என்னோடு பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள். சில நேரங்களில் நான் வீட்டுக்குச் செல்லும் அவசியம் ஏற்பட்டபோது, உங்களுக்குத் தெரியாது, அவை முடிவதற்கு முன்பாக 2 முறை டெலிபோன் செய்து நிலைமை பற்றி கேட்டுக் கொண்டிருப்பேன். காரணம், மற்றவர்கள் நடத்த மாட்டார்கள் என்றல்ல. இந்த அவையின் கண்ணியம் எந்த வினாடியும் குறைந்துவிடக் கூடாது என்பதில் உள்ள அக்கறைதான். திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராக இருந்தபோதும் சரி, புலவர் புலமைப்பித்தன் அவர்கள் துணைத் தலைவராக இருந்தபோதும் சரி, வீட்டுக்குச் சென்று, திரும்பவும் வர வேண்டிய நிலை ஏற்படவில்லை. என்னுடைய அறையிலே இருந்து வருவேன். நேரம் நீள்கிறது என்று சலித்துக்கொள்ளும்போது, எப்போதோ ஒரு முறை வருவேன். எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அழகாகச் சொன்னார்கள். பார்வையிலேயே ஒத்துழைப்போம் என்று. அந்த முறையில் அவர்கள் நன்றாக ஒத்துழைத்தார்கள். அதுபோல் தூர தேசங்களில் நடக்கிற மாநாடுகளின்போது என்னுடைய வயது, உடல்நிலை போன்ற காரணங் களால் நான் கலந்துகொள்ள இயலாது. அப்போதெல்லாம் தூர தேசங் களுக்கு அவர்கள் சென்று வந்திருக்கிறார்கள். முன்பு துணைத் தலைவராக இருந்த நேரத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். பிள்ளை பிராயத்திலிருந்தே எனக்கு அவர்களைத் தெரியும். இன்னும் வளர்ந்து பெரிய நிலைமைக்கு வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அவர்கள் தமிழரசுக் கழகத்தில் இல்லாமல் இருந்த காலத்திலும் எனக்கு அயலார் அல்ல. குடும்ப ரீதியாக நட்புடையவராக என்றைக்கும் அவர்கள் இருந்திருக்கிறார்கள். துணைத் தலைவர் பதவியால் புதிதாக ஏற்பட்டதல்ல எங்களுடைய நட்பு. அந்த வகையில் அவரைப்பற்றிப் பேசி இன்னும் அதிக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவருடைய பதவிக் காலத்தில், இந்த அவையே அவரைப் பாராட்டுகிற வகையில் பணி அமையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் ஏற்கெனவே அவர் சுயேச்சையாக இருந்ததை சூட்சமமாக இங்கே நினைவூட்டினார். இப்போது அவர் ஒரு கட்சியில் இருப்பதையே நாம் மறந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் ரொம்ப அருமையாக இங்கே அவரைப் பற்றிச் செ' னார். உணர்ச்சி ஒரு புறம், அறிவு ஒரு புறம் என்று சூட்சமமாக, அ' யாகச் சுட்டிக் காட்டினார். ஆகவே நம்முடைய அவையைப் பொறு'

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1984 பிப்ரவரி 16

யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், சுயேச்சையான மனப் பான்மையுடையவர்களாக நடப்பது நல்லதுதான். இதுவரை அப்படித்தான் நாம் நடந்து வந்திருக்கிறோம். மீண்டும் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரை இந்த அவைக்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த ஆட்சியாளர்களுக்கும், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்து, துணைத் தலைவர் அவர்களை பேசுமாறு அழைக்கிறேன்.

*** திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்த அந்த சமயத்திலே இலங்கை பிரச்சினை மும்முரமாக இருந்தது. அச்சமயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கறுப்புச் சட்டை அணிந்துகொண்டு சட்டமன்றத்திலே அமர்ந் திருந்தார்கள். அப்போது நானும் கறுப்புச் சட்டை அணிந்திருந்தேன். அதைத் தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாராசெரியன் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பார்த்த உடனே "திடீரென்று கறுப்புச் சட்டை அணிந்து கொண்டு வந்திருக்கிறீர்களே, ஏன்?" என்று கேட்டார்கள். அதோடு "ஸ்ரீலங்கா பிரச்சினை சம்பந்தமாகவா கறுப்பைச் சட்டை போட்டிருக்கிறீர்கள்?" என்றும் கேட்டார்கள். நான் உடனே "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திருக்கிறேன், அதோடுகூட ஸ்ரீலங்கா பிரச்சினை காரணமாகவும் போட்டிருக்கிறேன்" என்று சொன்னேன். அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் கறுப்புச் சட்டை போட்டிருந்தோம். தலைவருக்கு வலது பக்கத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் உட்கார்ந்திருந்தோம். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களுக்கு அருகில் உட்கார்ந்திருந்தேன். தலைவருக்கு இடது பக்கத்தில் எதிர்க் கட்சியினர் உட்கார்ந்திருந்தார்கள். யார், எங்கே அமருவது என்பதற்கு பாரம்பரியம் உண்டு. திருமணம் ஆகும்போது மணப்பெண்ணை இடது பக்கத்தில்தான் உட்கார வைப்பார்கள். அந்த சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் துணைக் கேள்வி கேட்பதற்காக கையைத் தூக்கி தூக்கி தலைவர் அவர்களுடைய பார்வையை தன் பக்கம் ஈர்ப்பதற்காக ரொம்ப முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். என்ன காரணமோ மாண்புமிகு தலைவர் அவர்களுடைய பார்வை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பக்கமே இருந்தது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்களும் அதையே பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறேன்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** உடனே திரு. இராமலிங்கம் தன்னை கவனிக்க வில்லை என்று சலித்துக்கொண்டார். உடனே, தலைவர் அவர்களே, தாங்கள்



1984 பிப்ரவரி 16] [திரு. ஜி. சுவாமிநாதன்]

கூட அந்தப் பக்கம் இருட்டாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னீர்கள். அப்போது நான் ஒரு கேள்வி கேட்டேன். அந்தக் கேள்வியை, தலைவர் அவர் களே, உங்களைப் பார்த்து நான் கேட்டிருக்கக்கூடாது. ஏதோ கேட்டு விட்டேன். "தாங்கள் கண்ணாடி மாட்டி எவ்வளவு நாள் ஆகிறது?" என்று நான் அப்போது தங்களைக் கேட்டேன். அப்படி தலைவர் அவர்களைப் பார்த்து நான் கேட்டிருக்கவே கூடாது என்று பின்னர்தான் நான் எண்ணினேன். உடனே தாங்களும் மிகவும் பொருத்தமாக அருமையாக பதில் சொன்னீர்கள். "கண்ணாடி போடாமலேயே எனக்குப் பார்வை நன்றாகத் தெரியும்" என்று சொன்னீர்கள். தலைவர் அவர்களே, நான் மிகவும் பெருமையோடு சொல்கிறேன். இன்றைக்குக்கூட தாங்கள் கண்ணாடி போட வில்லை. தங்களுக்கு 80 வயது ஆகிறது. தாங்கள் ஆண்டுதோறும் பிறந்த நாள் கொண்டாடி வருகிறீர்கள். தாங்கள் பிறந்த நாள் கொண்டாடி வருவதை நிறுத்திவிட வேண்டும் (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானே பிறந்த நாளைக் கொண்டாடு வது போல் இங்கே சொல்கிறார்கள். நண்பர்கள் அந்த யோசனையை ஏற்று நடைமுறைப்படுத்தினால் ஏற்றுக்கொள்கிறேன். அவ்வளவுதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நண்பர்கள் ஏற்று நடத்தினாலும் கூட தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் நடத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், தலைவர் அவர்களைப் பார்க்கும் எவருக்கும் தலைவருக்கு 80 வயது ஆகி யிருக்கும் என்கின்ற உணர்வே வராது. ஏதோ 60 வயது ஆகியிருக்கும் என்று எண்ணுகிற உணர்வு தான் வரும். ஆனால் தலைவர் அவர்களுடைய பிறந்த நாளின்போது அவர்களே தனக்கு என்ன வயது ஆகிறது என்று சொல்வதால் தான் அவர்களுடைய உண்மையான வயது பற்றி வெளியே தெரிகிறது. தவிர வும் தலைவர் அவர்களுக்குப் பெரியார் அவர்களுக்குப் பிசிராந்தையார் போல் முடி நரைக்கவில்லை. மீசையும் நரைக்காமல் இருந்திருந்தால் தலைவர் அவர்களை 50 வயதுக்கு மேல் மதிக்க முடியாது. நான் இந்த அவையிலே துணைத் தலைவராக இருப் பதை விட, நீங்கள் தலைவராக இருக்கும்போது நான் துணைத் தலைவராக இருப்பதிலே தான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

(முற்பகல் 10-30)

ஆகவேதான் தாங்கள் எனக்கு வாழ்த்து கூறுகிறபோது, தலைவராகிய தாங்களே நிரந்தரமாகத் தலைவராக இருந்து நானும் துணைத் தலைவராகப் பணியாற்ற வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். அதனால் நானும் நிரந்தரமாக துணைத் தலைவராக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன் என்பது அல்ல. நான் துணைத் தலைவராகப் பணியாற்ற விரும்புவது தாங்கள் மேலவைத் தலைவராக இருக்கும்போது என்பதற்காகச் சொன்னேன். இப்போதும் அதுமாதிரி அதைத்தான் நான் பாக்கியமாகக் கருதுவேன்.

வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அவையின் பாரம்பரியத்தைப்பற்றி அவை முன்னவர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் முன்மொழிந்து, மாண்புமிகு அவை முன்னவர் வழி மொழிந்து துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை நான் பாக்கியமாகக் கருதுகிறேன். இதற்கு முன்பு திரு. பி. ராஜகோபாலாச்சாரியார், திரு. எம். ரத்தினசாமி போன்றவர்கள் இந்த அவையின் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட அவையின் துணைத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது என் பாக்கியம் என்று கருதுகிறேன். இந்த அவை பாரம்பரியமுடையதென்றாலும் மேலவை என்று ஒன்று இருப்பதே 1952-ல்தான் எனக்குத் தெரியும். திருவல்லிக்கேணி பக்கத்தில் உள்ள ஐஸ் ஹவுஸ் தங்கள் வீடு இருக்கிறபோது, நான் கல்லூரி மாணவனாக தங்களைக் கடற்கரையில் சந்திப்பது வழக்கம். பல நாட்கள் அல்ல. பல ஆண்டுகள் தங்களுடன் பழகியிருக்கிறேன். தாங்கள் முதன் முதலில் காமராஜர் அவர்களால் 1952-ல் இந்த மேலவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமிக்கப்பட்டோ உறுப்பினரானபோது தான் மேலவை என்று ஒன்று இருப்பதாகவே அறிந்து கொண்டேன். உண்மையிலேயே அப்போது பெரியவர்கள் இந்த அவையின் உறுப்பினர்களாக இருந்தார்கள். வயதாகிவிட்ட காரணத்தால் கைத்தடி ஏந்தி வருகிறவர்களாக அவர்கள் இருந்தார்கள். அப்போது கைத்தடியேந்தி அவைக்குள் வர அனுமதி இல்லை என்ற விவரத்தையெல்லாம் எங்களிடம் தாங்கள் சொன்ன நினைவு இருக்கிறது. இங்கே உறுப்பினராக இருக்கும் திருமதி மந்தாகினி திருஞானமூர்த்தி அவர்களின் உறவினர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் துணைத் தலைவராக இருந்திருக்கிறார்கள். அப்போதுதான் தங்களிடமிருந்து மேலவையைப்பற்றிய முழு விபரங்களையும் சுவையுடன் தங்களிடமிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. டாக்டர் செரியன் அவர்கள் அப்போது தலைவராக இருந்தார்கள். கிட்டத்தட்ட 12 ஆண்டுக்காலம் அவர்கள் இருந்தார்கள். அவர் மிகச் சிறந்த பெரியவர். அவரிடம்கூட நான் மாணவனாக இருந்தபோது டான்சிலுக்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தலைவர்கள் வீற்றிருந்த சிறப்பு கொண்டது இந்த அவை. 1866-ல் இந்த அவை தோன்றி, 1893-ல்தான் முழு அந்தஸ்து பெற்றதாக இருந்தது. ஏறத்தாழ 100 ஆண்டுகள் ஆகிறது. டாக்டர் ஏ. எல். முதலியார், டாக்டர் ஏ. ஆர். முதலியார் போன்றவர்கள் இங்கேதான் வீற்றிருந்திருக்கிறார்கள். முதலில் கவர்னர்தான் இந்த அவையின் தலைமை தாங்கக்கூடியவராக இருந்தார்கள். 1903-ல் அவையில் தீர்மானம் போட கவர்னர் அனுமதியளித்தார். அப்படிப் போட்ட முதல் தீர்மானம் கிராம அதிகாரிகள் பற்றியது. அவர்கள் அதிகாரம்





எப்படி இருக்க வேண்டும், அவர்கள் வேலை என்ன என்று ஒரு தீர்மானம் போடப்பட்டது. கிராமங்களுக்கு வரக்கூடிய அதிகாரிகள், அங்கு இருக்கக் கூடிய மணியக்காரர்கள் அல்லது பட்டாமணியார்கள் சப்ளை செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்தக் கூடாது என்று இந்த அவை கவர்னர் ஜெனரலைக் கேட்டுக்கொண்டது என்று சொன்னார்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்தக் காலத்திலேகூட அதிகாரிகளுக்கு சப்ளை என்பது இருந்திருக்கிறது. அண்மையிலே நான் புவனேஸ்வர் போனபோது, அங்கு அசோகனுடைய கல்வெட்டு ஒன்றை கொனார்க்குக்குப் பக்கத்திலே போய் பார்க்கிறபோது, கிராம அதிகாரிகளாக இருக்கிறவர்களிடம் மேல் அதிகாரிகள் பணம் வாங்கக்கூடாது என்று அந்தக் காலத்திலேயே எழுதியிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பாரம்பரியம் மிக்க இந்த அவையின் துணைத் தலைவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய படம் கூட—முதல் டெப்டி சேர்மனாக இருந்தவர்கள்—டெப்டி சேர்மன் அறையில் இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்கது இந்த அவை. இந்த அவையினுடைய துணைத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்பது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தச் சமயத்திலே ஒரு நல்ல தகவலும் முன்னாள் துணைத் தலைவரைப் பற்றித் தரப்படுகிறது. பேரவைத் தலைவர் திரு. ராஜாராம் அவர்கள் தொகுதியிலே ஒரு மருத்துவ மனைக்கு முன்னாள் துணைத் தலைவர் 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி' மருத்துவமனை என்று சேலம் மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது கடந்த வாரத்தில்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அப்படிப்பட்ட ஒரு சிறந்த பாரம்பரியம் மிக்கது இந்த அவை. இந்த அவை வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றியெல்லாம் நான் பேசத் தயாராக இல்லை. எல்லா நாடுகளிலும் இரண்டு சபைகள் இருக்கின்றன. சுப்ரீம் சோவியத்திலே 'சோவியத் ஆப் தி ரிபப்ளிக்', 'சோவியத் ஆப் தி நேஷனாலிடீஸ்' என்று இருக்கின்றன. இங்கிலாந்து நாட்டிலே இருக்கிறது. கனடா நாட்டிலே இருக்கிறது. ஆஸ்திரேலியாவில் இருக்கிறது. இரு அவைகள் எல்லா நாடுகளிலேயும் பாரம்பரியமாக இருந்து கொண்டிருப்பதனாலே, இந்த அவை வேண்டும் என்ற முடிவை, நல்ல வளர்ச்சி பெற்ற நாடுகளிலேகூட எடுத்திருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும்கூட, என்னுடைய கடமையை நான் துணைத் தலைவராகப் பதவி வகிக்கிறபோது பாரபட்சமில்லாமல் நிச்சயமாக ஆற்றுவேன் என்பதை உங்களுக்கு உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். துணைத் தலைவருக்கும், தலைவருக்கும் வேறுபாடு உண்டு. தலைவருக்கு அவையில் ஒரே இடம்தான் உண்டு. துணைத்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 பிப்ரவரி 16

தலைவருக்கு இரண்டு இடம் உண்டு. இது விக்கிரமாதித்தன் சிம்மாசனம் மாதிரி. தலைவராக அமர்ந்துவிட்டபோது தலைவராகத்தான் இயங்க முடியும். உறுப்பினராக இடத்தில் அமர்ந்திருக்கிறபோது கட்சிக்காகவும், பேசமுடியும். தலைவராக நான் இருக்கும்போது உங்கள் மனநிறைவு பெறும்படி பாரபட்சமின்றி எனது பணியை ஆற்றுவேன் என்ற கருத்தை நான் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில் நீண்ட நாட்கள் நான் உறுப்பினராக இருந்திருப்பதால், ஒன்றிரண்டு சுவையான நிகழ்ச்சிகளைச் சொல்ல விரும்புகிறேன். 1968-வது ஆண்டிலே நான் இந்த அவைக்கு வந்த பிறகு, 1969-லே இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கு பென்சிலும், ரப்பரும் கொடுப்பார்கள். கிட்டத்தட்ட 24 பென்சில்கள் கொடுப்பார்கள். 12 ரப்பர்கள் கொடுப்பார்கள். பிரிட்டிஷ்காரன் காலத்திலே இருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பென்சிலை எடுத்து சீவி எழுதினால் முதலிலே அந்தக் கூர் அல்லது முனை உடைந்துகொண்டே வரும். எழுத எழுத அது எழுதவே எழுதாது. எழுதியதை ரப்பராலே அழித்தால் அந்த ரப்பர் அழிக்காது. அப்போது எனக்குக் கொடுத்த பென்சில் எழுதவே இல்லை. அப்போது அந்தத் துறைக்குரிய அமைச்சராக இருந்தவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். அப்போது நான் சபையில் சொன்னேன்; உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் பென்சில்களால் எழுதமுடியவில்லை என்று. அப்போது மதிப்பிற்குரிய உறுப்பினரான அறிவழகன் அவர்கள் இங்கே இருந்தார்கள். அவரும் ஒரு கேள்வி கேட்டார். கொடுத்த ரப்பர் அழிக்கவே இல்லை என்று சொன்னார்கள். உடனே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நல்ல முறையிலே பதில் சொன்னார்கள். "எழுதாத பென்சிலுக்கு அழிக்காத ரப்பரே போதும்" என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். அதுபோல சுவையான நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். நான் முதல் தடவையாக துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், இந்த முறை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனம் நிறைந்த எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1978-வது ஆண்டில் நான் துணைத் தலைவராக ஆவேன் என்று நினைக்கவே இல்லை. தற்போது அவை முன்னவராக இருக்கும் மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள் என்னிடம் தொலைபேசி மூலம் துணைத் தலைவராக நிற்க வைப்பதற்கு அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். நான் எதிர்பாராமல் அந்தச் சமயத்திலே துணைத் தலைவராக ஆனேன். மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், துணைத் தலைவராக நான்



1984 பிப்ரவரி 16] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தேர்ந்தெடுக்கப்பட உதவியதற்கு எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வெளியிட்டதுபோல, நான் அவை முன்னவர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் [illegible] தெரிவிப்பார்கள் என்று கருதி முடிவாக மீண்டும், தாங்கள் தலைவராக இருக்கக்கூடிய இந்த அவையிலே நான் துணைத் தலைவராக இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கான எனது கருத்தை மீண்டும் வலியுறுத்தி, தலைவர் அவர்கள், நீண்ட நாள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு தலைவராக நீண்ட நாள் இருக்க வேண்டும் என்ற கருத்தை மேலும் சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

## 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரை இங்கே தரப்பட்டிருக்கிறது. பல்வேறு செய்திகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. என்றாலும், ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் சார்பிலே நின்று இந்த உரையிலே ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் மகிழ்ச்சி தருகின்ற செய்திகள் என்ன இருக்கின்றன என்று நான் பார்த்தேன். கடந்த 4—2—1984 அன்று நான் அங்கம் பெற்றிருக்கக் கூடிய தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தின் முன் நின்று, அனைத்து நிலை ஆசிரியப் பெருமக்கள் கோரிக்கைகளிலே 25 அம்சங்களைச் சேர்த்து, அதற்காக மாவட்ட தலைநகரில், கல்வி மாவட்டத் தலைநகரங்களில் மிகப் பெரிய பேரணிகள் நடத்தி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கைகளை கல்வித் துறையின் மூலமாக அனுப்பியிருந்தோம். அப்படி அனுப்பியிருந்த அந்த 25 அம்சக் கோரிக்கைகளிலே 2 கோரிக்கைகள் இந்த ஆளுநர் உரையிலே நிறைவேற்றப்பட்டிருப்பதைப் பார்த்து, நான் மெத்த மகிழ்ச்சியடைந்தேன். நான் அரசையும், முதல்வர் அவர்களையும், பாராட்டுகின்றேன். அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாவேன். அதிலே, ஓய்வு பெறுகின்றபோது, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ரூபாய் 10 ஆயிரம் அளிக்க வேண்டும் என்பது ஒரு திட்டமாகும். இரண்டாவது, நான்காவது ஊதியக் குழுவையும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அமைக்க வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாகும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் இந்த நோக்கில் ஏற்று அறிவிப்புத் தந்திருக்கின்ற இந்த ஆளுநர் உரையை, அந்த வகையிலே, நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஆனால் அதே நேரத்திலே ஆளுநர் உரையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே, எங்களுடைய கோரிக்கைகளையும் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற காரணத்தினாலே, அதைப்பற்றிச் சில விமரிசனங்களைக்கூட இங்கே செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் என்ற கோரிக்கையைத்தான் நாங்கள் வைத்தோம். இது 1976 ஆம் ஆண்டு முதல் எழுப்பப்பட்ட ஒரு கோரிக்கையாகும். ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் திட்டம் சாதாரணமாக தமிழகத்திலே நடைபெற்று வருகின்ற ஒரு சங்கம், தனிப்பட்டவர் நடத்துகின்ற ஒரு திட்டம். அதுவே நடக்கிறது. அதைக்கூட இந்த அவையிலே ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அந்தச் சங்கம்கூட ரூபாய் 10 ஆயிரம் தருகின்ற போது, இந்தத் திட்டத்தை அரசு ஏற்று பாதியாகத் தந்திருந்தாலும், அதை வரவேற்றாலும், அதை முழுமையாகவே நிறைவேற்றலாமே என்று சொல்கிறேன். இது ரூபாய் 5 ஆயிரம் திட்டமா, ரூபாய் 10 ஆயிரம் திட்டமா என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டத் தவறக் கூடாது என்று நான் கருதுகிறேன். நாங்கள் கேட்டது ரூபாய் 10 ஆயிரம், தந்தது ரூபாய் 5 ஆயிரம் தான். இந்த ஐந்தாயிரத்தை பத்தாயிரம் ரூபாயாகவே தந்திருக்கலாம். அதிலேகூட இப்போது ரூபாய் 20, ரூபாய் 20 மாதந்தோறும் கட்டிவர வேண்டும். அப்படிக் கட்டினால், அது ரூபாய் 5 ஆயிரமாக முழுமையாக நிறைவு பெறுகிறபோது, வட்டியோடு அரசின் ரூபாய் 5 ஆயிரத்தையும் சேர்த்து ரூபாய் 10 ஆயிரமாகத் தருவதாக ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி 15 ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டும். அதற்குப் பின்னர் ஊழியர்கள் பணம் கட்ட வேண்டுமா, கட்ட வேண்டாமா என்று விளக்கமாக இல்லை. அதற்குப் பின்னாலே பணம் கட்டுவதானால், இந்தத் திட்டத்தினாலே எங்களுக்குப் பயன் இல்லை. பின்னாலேயும் தொடர்ந்து பணம் கட்ட வேண்டும் என்று சொல்லாமல், என்று முடிகிறதோ அத்துடன் 5 ஆயிரம் ரூபாய் சேர்த்துக் கொடுத்தால்தான் பயன் இருக்கும். அப்படி தொடர்ந்து பணம் கட்ட வேண்டாமென்று சொன்னாலும் கூட பயன் இல்லை. அந்த ஐந்தாயிரம் ரூபாய் என்று கட்டி முடிகிறதோ அப்போது ரூபாய் ஐந்தாயிரம் சேர்த்துக் கொடுத்தால்தான் பயன் உடையதாக இருக்கும். அந்தத் தொகையை வங்கியில் சேமித்து அப்படியே வைத்திருந்தால்கூட, ஊழியர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம், ரூபாய் 25 ஆயிரம் என்றுகூட வட்டியாகவே சேர்த்து வரும். ஆகவே அதற்கான விளக்கமும் உரையில் இல்லை.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அல்லது இந்த ஐயாயிரம் ரூபாய் கட்டி முடிகிற நேரத்திலேயே ஐயாயிரம் ரூபாயையும் சேர்த்து உடனே தரப் போகிறார்களா என்ற விளக்கம் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விளக்கத்தோடு தயாரித்து



மனநிறைவு தருகிற வகையிலே திட்டத்தைத் தரவேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டம் 1—4—1984 முதல் அமுல்படுத்தப்படும் என்று போடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், கல்வியாண்டிலே இடையிலேயே அவர்கள் ஓய்வு பெற்றாலும்கூட, அவர்கள் கல்வியாண்டு இறுதிவரை பணியாற்ற வாய்ப்புகள் அளிக்கப்படும். அவர்கள் இடையிலே ஓய்வு பெற்றாலும் உண்மையிலேயே ஓய்வு பெறுவது மே திங்களில் தான். ஏப்ரல் முதல் செயல்படுகிறது என்று சொல்லக்கூடிய இந்தத் திட்டத்தை சூபர்அன்னுவேசன் (Superannuation) ஆசிரியர்களுக்கும் அளிக்கத்தக்க வகையில் அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்வதற்கு இயலாது என்று சொல்வார்களேயானால், அதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஆசிரியர்களுக்குத் தந்து வந்த 'இன்சென்டிவ்' என்கிற ஊக்கத் தொகையை நிறுத்தி, 'லம்ப்சம்' ஆகத் தருகின்ற திட்டத்தினை 5—9—1983-லே கொண்டு வந்தார்கள். அப்போது கொண்டு வந்தாலும் கூட, அதற்கு முன்னரே பாஸ் செய்துவிட்டு, இலாக்காக்களில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகப் பெற முடியாது இருப்பவர்களுக்குக் கூட தரமுடியாதென்று உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். இவ்வாறு பணிசெய்து ஓய்வு பெற்றிருப்பவர்களுக்கும் அது கிடைக்கும்படி அதை ஏன் மாற்றக்கூடாது? அப்படி மாற்றி ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவது ஊதியக் குழு நியமிக்கப்பட இருக்கிறது என்று அறிவிப்பு வந்திருக்கிறது. நான்காவது ஊதியக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பு இதிலே வரவில்லை. வருங்காலத்திலே நியமிக்கப்பட இருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். ஓர் அறிவிப்பு வருவதற்கு அறிவிப்பா? ஆளுநர் உரையிலே 'நான்காவது ஊதியக் குழு அமைக்கப்பட்டது' என்று சொல்லக்கூடிய அளவிற்குச் செய்திருந்தால், மனநிறைவு ஏற்பட்டிருக்கக் கூடும். அறிவிப்பு வருவதற்கு அறிவிப்பாகச் சொல்லியிருப்பதால், 'வர இருக்கிறது, வர இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டு, அதிலேயே நாட்டத்தைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக அமைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊதியக் குழு அமைத்தாலே கூட அது செயல்பட்டு அறிக்கை தயாரித்து அரசாங்கத்திற்குத் தந்து, அரசாங்கத்தால் அது பரிசீலிக்கப்பட்டு, பின்னாலே அரசாங்கத்தால் அமுல்படுத்துவதற்கு ஏறக்குறைய 3, 4 ஆண்டுகளாகி விடும். வரும் என்று சொல்லி இன்னும் ஓராண்டு கடத்த இருக்கிறார்கள், பல ஆண்டு கடத்த இருக்கிறார்கள். ஆகவே கடத்திக்கொண்டே போகிற நிலை இருக்கிறது. ஆகவே கர்நாடக மாநிலத்திலே பே கமிஷன் 'பே ரிவிஷன்' தந்ததைப் போல, ஒவ்வொரு சங்கத்தையும் கூப்பிட்டுப் பேசி, அதன் அடிப்படையிலே ஊதியத்தை மாற்றி அமைத்ததைப்

போல, ஒரு மாதம், 2 மாதம் நிர்ணயித்து அதற்குள் 'பே ரிவிஷன்' செய்யும் நடவடிக்கையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 'பே ரிவிஷன்' செய்வதற்கு முன்னமேகூட 'பே கமிஷன்' பரிந்துரை வருவதற்கு முன்னமேகூட, இடைக்கால நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 300 வழங்க வேண்டுமென்கிற வேண்டுகோளையும் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரூபாய் பத்தாயிரம் மட்டுமல்ல, ரூபாய் பத்தாயிரத்தோடு போனசும் தர வேண்டுமென்ற கோரிக்கையை, நான் சென்ற கூட்டத் தொடரிலேயே எழுப்பி போனசும் அறிவியுங்கள் என்று அன்று கேட்டிருந்தேன். இந்த, பத்தாயிரம் ரூபாய் கோரிக்கையை ஐயாயிரம் ரூபாயாகச் சுருக்கி அறிவித்திருக்கிறார்கள் என்பதிலே மன நிறைவு இருந்தாலும், போனஸ் பற்றி அறிவிப்பு வரவில்லை. கல்வி அமைச்சர் அவர்கள், "இவைகள் உங்களுக்கு உரிய நேரத்தில் உரியவர்களால் உரிய முறையில் அறிவிக்கப்படும்" என்று குறிப்பிட்டார்கள். நான்கூட அப்போது நினைத்துக் கொண்டேன், "உரிய நேரம் என்பது தேர்தல் நேரமா" என்று. தேர்தல் நெருங்க ஆரம்பித்து விட்டது என்று எனக்குப் படுகிறது. ஆகவே அந்த போனஸ் குறித்தும் உடனடியாக அறிவித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் சமுதாயத்திலே இப்போது கிளம்பியிருக்கிற பிரச்சினை, கூடுதல் தகுதியைப் பெற்றவர்களுக்குக் கூடுதல் ஊக்க ஊதியம் தருவது குறித்து.

(முற்பகல் 10-50)

அந்த ஊதிய உயர்வைத் தந்து வந்த அந்த ஆணையை இப்போது தடை செய்து, புதிதாக 'லம்ப் சம்', மூன்று ஆண்டுகளுக்கு என்ன கிடைக்குமோ அதைத் தருகிறோம் என்று சொன்ன பிறகு, அந்த உத்திரவால் ஆசிரியர் சமுதாயத்திற்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டது. பணிக்காலம் பூராவும் கிடைக்கும் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் கிராஜுட்டி தொகை குறைகிறது. பென்ஷன் குறைகிறது. இவையெல்லாம் சுட்டிக் காட்டி, கல்வித் தகுதியை நீங்கள் உயர்த்திக்கொள்ளத் தேவையில்லை என்று அரசு மறைமுகமாகச் சொல்கிறது என்று சுட்டிக் காட்டி, அந்த ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னேன். அன்றைய தினம் முதல்வர் அவர்கள் இருந்தார்கள். 23—11—1983 அன்று "அண்ணா அவர்கள் தந்தார்கள் இந்தச் சலுகையை; அவருடைய தம்பி பறிக்கலாமா?" என்று கேட்டேன். அண்ணா தந்ததை தம்பி பறிக்கலாமா என்று கேட்டதற்குப் பின்னாலே, நிதி அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொன்னார்கள். முதல்வரவர்களைக் கலந்துகொண்டு. "அண்ணா தந்ததைத் தம்பி பறிக்க மாட்டான்; அண்ணா தந்ததைத் தருவான். அதற்கு மேலேயும் தருவான்" என்று சுட்டிக் காட்டி, "அந்த ஆணை எந்த நேரத்திலே எப்போது வெளி வந்தது என்று





தெரியாது" என்று சுட்டிக்காட்டி, மீண்டும் நிலைநிறுத்துகின்ற அந்த ஆணையைப் பிறப்பிப்பேன் என்ற உறுதியை நிதி அமைச்சர் அவர்கள் தந்தார்கள். அது குறிப்பில் இருக்கிறது. உறுதிமொழி தந்து இன்றையதினம் மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆனால் அது நிறைவேற்றப்பட்டதா என்றால், நிறைவேற்றப்படவில்லை. அது நிறைவேற்றப்படுமென்று ஆளுநர் உரையில் அறிவிப்பு வருமென்று எதிர்பார்த்தேன். அதாவது வந்திருக்கிறதா என்றால் அதுவும் வரவில்லை. நாங்கள் கேட்டது மீண்டும் தர வேண்டுமென்று. ஆனால் இப்போது வருகின்ற உத்தரவு 5—9—1983க்கு முன்னதாகத் தேர்விலே தேர்ச்சி பெற்றவர்களுக்குக் கூட இல்லாமல் தாமதம் செய்திருந்தால் தராது என்பதுபோல, நம்முடைய நிதி அமைச்சர் தந்த உறுதிமொழிக்கு முரணாக, உத்தரவுகள் வந்துகொண்டிருக்கின்றன. அமைச்சர்கள் சொல்வதை அதிகாரிகள் கவனிக்கிறார்களா? அமைச்சர்கள் தரும் உறுதிமொழி அதிகாரிகளுக்கு அலுப்பைப்படுத்துகிறதா? அமைச்சர்கள் சொன்னதற்கு முரணாக உத்தரவு போடுவது என்று அதிகாரிகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம்? ஓட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல இருக்கிறது. நான் கேட்கிறேன், நிதி அமைச்சர் ஒத்துக்கொள்கிறார்; அண்ணா அவர்கள் தந்ததைத் தொடர்ந்து தருவோம் என்று உறுதிமொழி தருகிறார். ஆனால் பின்னால் வரும் ஆணை அதற்கு முரணாக, தந்ததையும் பறிப்பதுபோல வருகிறது. அது நியாயம்தானா? அமைச்சர்கள் தரும் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்றால், இயக்க வேறுபாடு கருதாமல், அனைத்து நிலை ஆசிரியர்களும், உறுதிமொழியை நிறைவேற்றுங்கள் என்று மாபெரும் போராட்டம் நடத்த அவசியம் ஏற்படுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மற்றொரு மிக மிக முக்கியமான பிரச்சினை. 10 (எ) (1) அடிப்படையில் தற்காலிகமாக 1978 ஆம் ஆண்டு முதல் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, இன்றுவரை 6 ஆண்டுகளாகியும், நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, பட்டதாரி ஆசிரியர்களிலும் அப்படி இருக்கிறார்கள். தமிழாசிரியர்களும் அப்படி இருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியர்கள் அப்படி இருக்கிறார்கள். அதைப் பல முறை சுட்டிக் காட்டி, கேட்ட போது, தேர்வாணைக் குழு அவர்களை நிரந்தரம் செய்வதற்குத் தடையாக இருக்கிறது; அவர்கள் நடவடிக்கை துரிதமாக அமையவில்லை; அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்போது நான் ஒன்றைச் சுட்டிக் காட்டினேன். ஆந்திர மாநிலத்திலே கல்வி நிறுவனங்களில் நியமனங்களுக்கு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை என்று சட்டம்

கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது கல்வித் துறையிலே செய்யப்படும் நியமனங்களுக்கு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை. அதை முன்மாதிரியாகக் கொண்டு, இங்கேயும் செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அதோடு கல்வி ஆலோசனைக் குழுவில் இது ஏற்கப்பட்டும் கூட, கல்வி ஆலோசனைக் குழு பரிந்துரை செய்து, அது இயக்குநரால் ஏற்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்ட பிறகும் கூட, இன்றையவரை அவர்கள் நிரந்தரம் செய்யப்படாமல், எந்தவிதச் சலுகையும் பெறாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருகிற 19 ஆம் தேதி தமிழ் நாடு முதுகலைப் பட்டதாரிகள் சங்கம் அதற்காக உழைப்பாளர் சிலை அருகில் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள். 6 ஆண்டுக் காலமாக அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சொல்லி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கல்வித் துறை மிக மிக மெத்தனமாக நடை போட்டுக்கொண்டிருக்கிறது. அமைச்சர் விரும்பியும், இயக்குநர் விரும்பியும், நாங்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியும், எங்களுடைய கருத்துக்கள் ஏற்கப்பட்டும் இன்றுவரை அதனைச் செயல்படுத்தாமல் கல்வித் துறை மிக மிக மெத்தனமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு போராட்டத்தைத் துவங்கும் அளவுக்கு அரசே ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்காமல் இருப்பதற்கு, உடனடியாக அவர்கள் எல்லோரையும் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்வாணைக் குழுவினுடைய ஒப்புதலைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களையும், பட்டதாரி ஆசிரியர்களையும் கூட இன்று வரை நிரந்தரம் செய்யவில்லையென்று சொன்னால், கல்வித் துறை தூங்கிக் கொண்டிருக்கிறதா? குறட்டை விட்டுக்கொண்டிருக்கிறதா? குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருக்கிறது என்று தானே பொருள். தேர்வாணைக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவர்களையே கூட இன்றைய வரை நிரந்தரம் செய்யவில்லையென்று சொன்னால், கல்வித் துறை உண்மையிலேயே சரியாக இயங்குகிறதா என்கிற சந்தேகம் என்னைப் போன்றவர்களுக்கு வருகிறது.

அதுபோல் இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரை, தேர்வாணைக் குழுவினுடைய ஒப்புதல் தேவையில்லை என்று சட்டம் இருந்தும், அவர்களையும் இன்னும் நிரந்தரம் செய்யவில்லை. தயவுசெய்து குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருக்கிற கல்வித் துறையைத் தட்டி எழுப்புங்கள். இன்னும் எத்தனையோ திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. 1—1—1971 முதல் இடைநிலை ஆசிரியர்களுக்குத்



தேர்வு நிலை அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, அது வழக்குமன்றத்திற்குச் சென்று, வழக்குமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தும் இன்னும் அது அமுல்படுத்தப்படவில்லை. அதுபோல் ஓர் ஊதிய உயர்வு சிறப்பு ஆசிரியர்களுக்கு இடைநிலைத் தேர்ச்சிக்காகத் தர வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டு, புள்ளி விவரங்கள் எல்லாம் கல்வி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, அது தொடர்பான குறிப்புகள் தலைமை அலுவலகத்திற்கு வந்து 6 மாதம் ஆகிறது. இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் உடனடியாக ஓர் ஊதிய உயர்வு தர வேண்டும். ஏன் தட்டிக் கழிக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. கல்வித் துறையை மீண்டும் செயல்படும் அளவுக்கு தயவுசெய்து தூண்டி விடுங்கள்.

அதுபோல் உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை மேல் நிலைப் பள்ளிகளில் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கு அனுப்புவதைத் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் எல்லாம் விவாதித்து, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதாக வாக்குறுதி தந்தது. அந்தப் பயிற்சிக்காக அவர்கள் 250 ரூபாய் கட்டணமும் கட்டி விட்டார்கள். ஆண்டுக்கணக்கில் ஆகிறது. இன்னும் பயிற்சி தொடங்கப்படவில்லை. கல்வித் துறையின் மெத்தனப் போக்கைத் தானே இது காட்டுகிறது. பயிற்சியும் இதுவரை தொடங்கவில்லை. கட்டிய பணமும் ஆண்டுக்கணக்கில் அரசிடத்தில் இருக்கிறது. அதற்கு வட்டி என்ன என்று ஆசிரியர்கள் கேட்கக் கூடிய நிலை இருக்கிறது. இது குறித்தும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தமிழ் நாட்டிலே தகுதி பெற்றிருந்தும், தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வர முடியாத நிலை இருக்கிறது. உடனடியாக அவர்கள் தலைமை ஆசிரியர்களாக வருவதற்குரிய வாய்ப்பு அளிக்க வேண்டும். இது பற்றித்தான் வழக்குமன்றத்தில் அவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வந்தும், இதுவரை செயல்படுத்தப்படவில்லை. உடனடியாக அரசு அதைச் செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இன்னும் ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லை. அதை உடனடியாக நிர்ணயம் செய்ய வேண்டுமென்று உரிமைக் குரலில் அழுத்தமாகச் சொன்னதன் பேரில், இப்போது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி ஊதியம் நிர்ணயம் செய்யும்போது, (எப். ஆர்.) அடிப்படை விதி 22 (பி)யின் கீழ் செய்யாததால் ஏற்கெனவே அவர்கள்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984 பிப்ரவரி 16

வாங்கிக்கொண்டிருந்த ஊதியத்தை விட குறைவாக நிர்ணயம் செய்து, ஏற்கெனவே அதிகமாக வாங்கிய ஊதியத்தைப் பிடித்தம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற அனைவருக்கும் அடிப்படை விதி 22 (பி)யின் கீழ் ஊதியம் நிர்ணயம் செய்யப்படும்போது, இவர்களுக்கு மட்டும் ஏன் இது மறுக்கப்படுகிறது என்று எனக்கு விளங்கவில்லை. அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி களையப்பட வேண்டும்.

அடுத்து, தலைமை ஆசிரியர்களுக்கு 50 ரூபாய் சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்று, பயிற்சியில் தேர்ச்சி பெற்றால், அவர்களுக்கு 50 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸ் தர வேண்டுமென்று சொன்னால், அதில் பொருள் இருக்கிறது. இன்றைக்கு அரசு விசித்திரமான உத்தரவு

(முற்பகல் 11-00)

ஒன்றைப் போட்டிருக்கிறது. ஸ்பெஷல் அலவன்ஸ்பற்றி உத்தரவு வந்திருக்கிறது. இப்போது அங்கே ஆசிரியர்களாக இருப்பவர்கள் அந்த க.த. கணக்குத் தேர்வை எழுத 19—9—1986 வரையில் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள் ஒருபுறம். ஆனால் அந்தத் தேர்வை 1—7—1978-ல் எழுதி தேர்ச்சி பெற்ற பின்னால், அவர்களுக்கு அந்த ஸ்பெஷல் அலவன்ஸ் கிடையாது என்ற ஒரு புதுமையான, விசித்திரமான உத்தரவு வந்திருக்கிறது. ஏற்கெனவே "அந்த க.த. கணக்கு டெஸ்ட்டை பாஸ் செய்தால்தான், பணம் கொடுப்போம். இல்லாவிட்டால், கிடையாது பதவி உயர்வு கிடையாது" என்றார்கள். இப்போது பாஸ் பண்ணிய பிறகு பணம் கிடைக்காது என்று உத்தரவு வந்திருக்கிறது. இப்படி முன்னுக்குப் பின் முரணான உத்தரவுகளை அரசாங்கம் உடனே வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு உத்தரவைப் போடும்போது அது நியாயமானதுதானா என்று ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளி வேலை நாட்களை 200 நாட்களிலிருந்து 220 நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். அமைச்சுப் பணியாளர்களுக்கும், [illegible] வசதி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்க வேண்டுமென்று கோரியிருக்கிறோம். அதற்கான முன்னுதாரணங்களைக் காட்டியிருக்கிறோம். இவைகள் எல்லாம் ஏற்கப்படவேயில்லை. ஆனால் கொடுத்திருக்கிற உறுதிமொழிகள் ஏராளம். எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் ஏராளமாகக் கொடுத்திருக்கிற உறுதிமொழிகள் வந்திருக்கின்றன. ஆனால் உறுதி மொழிகளாகவே அவை இருப்பதைத்தான் காண்கிறோம்.



1984 பிப்ரவரி 16] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

புதிய சலுகைகள் அளிப்பது ஒருபுறம் இருந்தாலும், ஏற்கெனவே இங்கே தந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. அவைகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை என் வேண்டுகோளாகவும் வைக்கிறேன்.

அடுத்ததாக, பொதுமக்கள் நலன் கருதி ஒன்றே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பள்ளிகளில் இந்த ஆண்டில் வேலை நாட்கள் மிகமிகக் குறைவு. முதலில் வறட்சியால் பள்ளிக்கூடம் மூடப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை வந்ததால், அதற்காகக் கொஞ்ச நாள் மூடப்பட்டது. பிறகு தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டபோது, அப்போதும் பள்ளிக்கூடம் மூடப்பட்டது. இப்படியாக இந்த ஆண்டு 40 நாட்கள் வேலை நடக்கவில்லை. ஆனால் திட்டமிட்டபடி, வழக்கமாக நடைபெறுவது போல, இந்த ஆண்டும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை மார்ச் 23-ந் தேதி நடத்துவதாக இருக்கிறார்கள். 40 நாட்கள் வேலை நடக்காததால், அவர்களின் பாடத் திட்டத்தை முடிக்காத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் தேர்வை நடத்தினால் கல்வித் தரம் இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே எஸ். எஸ். எல். சி. தேர்வைக் கொஞ்சம் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி தள்ளிவைத்து, முடிக்காத பாடத்திட்டங்களை முடிக்க வாய்ப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை யென்றால் இந்தத் தேர்வு முடிந்து மேலே செல்லச் செல்ல கல்வியின் தரம் பாதிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தலைமையாசிரியர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஊதிய உயர்வு இல்லாத நிலை இருக்கிறது. பதவி உயர்வு வேண்டாம் என்று எழுதிக் கொடுத்தவர்களுக்கு செலக்ஷன் கிரேடு, ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதில்லை. அப்படி உத்தரவு இருப்பதாகச் சொல்கிறார்கள். தலைமையாசிரியர்கள் மேற்பார்வையிடுவதற்காக எந்தவிதத் தனி சம்பளமும் கிடையாது. அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் அவர்கள் அப்படி எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி எழுதிக் கொடுத்தவர்களுக்கு ஸ்பெஷல் கிரேடு போன்றவைகள் கிடையாது என்று ஆணை இருக்கிறது. அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நடுநிலைப் பள்ளியாசிரியர்களுக்கு, 2—10—1970 ஊதியக் குழு அறிக்கைப்படி, பதவி உயர்வு உண்டா இல்லையா என்பது குறித்து அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். ஆனால் அதை வைத்துக்கொண்டு ஊதிய உயர்வு கொடுத்ததை ரத்து செய்திருக்கிறார்கள். அந்த உத்தரவையும் ரத்து செய்ய வேண்டு

[திரு. எஸ். முத்து] [1984 பிப்ரவரி 16

அடுத்தபடியாக, அனல் மின்சாரம். அனல் மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நம் நாட்டிலே என்றைக்குமே மின்பற்றாக்குறை இருந்துகொண்டே தான் இருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார் கள். பழுப்பு நிலக்கரிபற்றிச் சொல்கின்றார்கள். அந்தப் பழுப்பு நிலக்கரி சரியாகக் கிடைக்கவில்லை. அது கிடைக்குமானால், நிச்சயமாக இன்னொரு அனல் மின் நிலையத்தை உருவாக்க முடியும் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அதற்கு மாறாக பழுப்பு நிலக்கரி விலையை 25 பர்சென்ட் விலையை உயர்த்தி, இது வேண்டாம் என்று நாம் சொல்கின்ற அளவுக்கு, நாம் பாதிக்கப் படுகின்ற அளவுக்கு சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, உலக வங்கி உதவியுடன் கோவை, சேலம், மதுரை நகரங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு அதுவும் சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கும் சேர்த்து குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக இங்கே ஆளுநர் அவர்கள் உரையிலே நாம் பார்க்கிறோம். ஆனால் மதுரையைப் பொறுத்தவரையில், நான் சொல்கிறேன், குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், உலக வங்கியின் மூலம் மதுரையின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து விடமுடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. நீண்ட நாளாக கல்லாறு அணைத் திட்டம் இருக்கின்றது. அந்தக் கல்லாறு திட்டத்தின் மூலமாகத்தான் மதுரையினுடைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியுமே தவிர, பெரியாற்றில் அல்லது வைகையிலே இருந்து தண்ணீர் கொண்டுவந்து மதுரையினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியும் என்று சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. அனுபவம் இல்லாத அதிகாரிகள், ஏதோ தேவைக்கேற்ற முறையிலே திருப்திப்படுத்துவதற்காக சில அறிக்கைகளை சர்க்காருக்கு அனுப்பியிருக்கின்றார்கள். வைகையிலே தண்ணீர் இருப்பதில்லை. ஏதோ சில நேரங்களில் வெள்ளம் வருகிறது. தண்ணீர் வருகிறது, அவ்வளவுதான். இந்த நிலைமையில் ஒழுங்காக மதுரை நகருக்கு, அந்நகர மக்களுக்கு, 10 லட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால், நிச்சயமாக கல்லாறு அணையிலிருந்துதான் தண்ணீர் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தாலொழிய, மதுரையினுடைய தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை நான் இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தொழில் பயிற்சிக் கல்லூரி. இந்த அரசு இந்த ஆண்டு புதிதாக தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் தொடங்க அனுமதி கொடுத்திருக் கின்றது. அதை நான் வரவேற்கிறேன். நான் பாராட்டுகிறேன். தொழிற் கல்வி அவசியம் என்பதை உணர்கிறேன். ஆனால் கொடுக்கப்பட்ட பள்ளிகள்



1984 பிப்ரவரி 16] [திரு. எஸ். முத்து]

தனியாரிடம் கொடுக்கப்பட்டு, அங்கே வியாபாரம் ஆகிக்கொண்டிருக்கிறது.
சாதாரண ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், உழைப்பாளி மக்கள்,
ஏன், இங்கே அமர்ந்திருக்கின்றார்களே, மாற்றுத் தலைவர் அவர்கள், நெசவாளி
வகுப்பைச் சேர்ந்தவர்கள், அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் அங்கே இடம்
பெறமுடியுமா என்றால், நிச்சயமாக முடிவதில்லை. அங்கே என்ன
செய்கின்றார்கள்? தனியார்களுக்கு அந்தக் கல்லூரிகள் வியாபாரம்
ஆகியிருக்கிறது. அதனால் ஒரு பையனை கல்லூரியில் சேர்க்க வேண்டு
மென்றால், ரூ. 15 ஆயிரம், ரூ. 20 ஆயிரம் என்று கேட்கின்றார்கள். செக்காக,
டிராப்ட் ஆக மறைவில்லாமல் ஓப்பனாகவே கேட்கின்றார்கள். மறைமுகமாகக்
கூடக் கேட்கவில்லை. ஆக அது ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகிறதா?
நிச்சயமாக இல்லை. இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். நாம் தொழில் வளர வேண்டும் என்று நினைக்
கிறோம். தொழிற் பயிற்சி வேண்டுமென்று நினைக்கிறோம். எதிர்காலத்தில்
இந்த இளைஞர்கள் வாழ வேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காக நாம்
தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை ஆரம்பிக்கிறோம். ஆனால் அதைத் தனியார்
பெற்று அதை விற்பனை செய்கின்றார்கள். இதுதான் நடந்துகொண்டிருக்
கிறது. ஆதாரபூர்வமாகவே சொல்ல முடியும். எதையும் மறைத்துக்கூட
வாங்குவதில்லை. 'டிராப்ட் கொடுங்கள்' என்கின்றார்கள். அதுவும் "முத்து
சொல்லிவிட்டார். ஆகவே சொல்கின்றோம் ரூ. 15 ஆயிரம் கொடுங்கள்" என்று
சொல்கின்றார்கள். "முத்து சொல்லியிருக்கின்றார், ஆகவே ரூ. 20 ஆயிரம்
கொடுங்கள்" என்கிறார்கள். "அப்படி இல்லாவிட்டால் உங்களுக்கு இட
மில்லை" என்று சொல்கின்றார்கள். ஆக தொழிற் பயிற்சிக் கல்லூரிகள்
இன்றைக்கு விற்பனை ஆகிவிட்டன. அரசு அதிலே உடனடியாகத் தலையிட்டு
கவனிக்க வேண்டும். அப்படி யார் நடந்திருந்தாலும் சரி, அதைப் பார்க்க
வேண்டும். ஏன் தனியார்கள் இந்தக் கல்லூரிகளை நடத்திக்கொண்டு
வருகின்றார்கள்? 170 சீட் ஒதுக்கப்படுகிறது. ரூ. 15 ஆயிரம், ரூ. 20 ஆயிரம்
என்று வாங்குகின்றார்கள். பேக்வேர்டு கம்யூனிட்டி என்றால் ரூ. 10 ஆயிரம்.
இப்படி ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபாய் என்றால் 170 சீட்டுக்களுக்கு எவ்வளவு
என்று பார்க்க வேண்டும். இது எவ்வளவு பெரிய அக்கிரமம்? நெசவாளி
களைப் பற்றிப் பேசும்போது, மாற்றுத் தலைவர் அவர்கள் கண்ணீரே உகுக்
கின்றார்கள். நிச்சயமாக அவர்களுக்கு இருக்கின்ற உணர்ச்சியெல்லாம்,
நெசவாளர் சமுதாயம் என்றென்றைக்கும் அடித்தளத்திலேயே இருக்க
வேண்டுமா என்பதுதான். அந்த நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்
எல்லாம் ரூ. 15 ஆயிரம், ரூபாய் 20 ஆயிரம் என்று கொடுத்து, தொழிற்
பயிற்சிக் கல்லூரியிலே சேர்ந்து தொழிற் பயிற்சி பெற முடியுமா? தொழிற்
பயிற்சிக் கல்வியைப்பற்றிச் சொல்லும்போது, இந்த ஆண்டு 78 கல்லூரிகளைத்

திறக்க தனியாரிடம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை விற்பனை நிலையமாக மாற்றுகிறார்கள். 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் முதல்போட்டு 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் என்று சீட்டுக்குப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், உழைத்து வாழக்கூடிய மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் வகையில் விதிகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு பணம் வாங்கினால் அவர்களுக்குக் கொடுத்துள்ள அங்கீகாரத்தை ரத்து செய்து, ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைகள் வியாபாரமாக ஆகிவிட்டது.

அடுத்தபடியாக, மது விலக்குக் கொள்கை. மது விலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்கள் சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலேயே "என்னுடைய காலத்திலேயே மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கே நான் மகிழ்ச்சி அடைந்தேன். இன்றையதினம் அதை உறுதிப்படுத்துகிற வகையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்துள்ள பேட்டியில், நிச்சயமாக இந்த ஆண்டு சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மதுவின் காரணமாக எத்தனை குடும்பங்கள் கெட்டுப்போயிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். பலர் 60 ஆண்டு, 70 ஆண்டு வாழுகிற இந்தக் காலத்தில் 30, 40 வயது இளைஞர்கள் எல்லாம் ஈரல் வெந்து சாகிறார்கள் என்றால், சாராயம் அவர்கள் உடலைக் குடித்துவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற கூட்டத்தில் சொன்னதைப்போல. நிச்சயமாக வரப்போகிற நாட்களில் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில். இரண்டுவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள். என்ன கருத்தைச் சொன்னாலும், ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதை வரவேற்கிறார்கள். நானும் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நகராட்சிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகாரிகள் ஏகபோக ஆட்சி நடத்து கொண்டிருக்கிறது. அவர்களைத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால், வறட்சி நிவாரணப் பணிகள் எப்படி நடந்தன என்பதைப் பார்த்தோம். அதிகாரிகள் எல்லாம் லட்சாதிபதிகளாக மாறினார்கள். இது நமக்குத் தெரியும்,





மக்களுக்கும் தெரியும். ஆகவே தாமதப்படுத்தாமல் ஏப்ரல் மாதத்தில் நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து அரசு அறிவித்ததற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. இந்த மாநிலத்திலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சி இல்லை என்பதை நாடறியும். தொழில் வளர்ச்சி இல்லாததற்கு முக்கிய காரணம் அகல ரயில் பாதை இல்லாதது. தொழில் அதிபர்களைக் கேட்டால், அவர்கள், "இங்கே அகல ரயில் பாதை இல்லை. அவ்வாறு அகல ரயில் பாதை இல்லாத காரணத்தால் தொழில் துவங்க இயலாது" என்கிறார்கள். ஆனால், இரயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டால் அவர்கள், "அங்கே தொழிற்சாலைகள் இல்லை, ஆகவே அகல ரயில் பாதை தேவை இல்லை" என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்காக சென்ற ஆண்டு டோக்கனாக 4 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் ஒதுக்கி ஆய்வு நடத்தி எல்லாம் முடித்துவிட்டு, இந்த ஆண்டு வராது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நமது அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மத்திய சர்க்காரிலே ஆளும் கட்சியிலே இருக்கிறார்கள். அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். திரு. கோசல்ராம்கூட ஏதோ அறிக்கை விட்டிருக்கிறார். கரூர்—தூத்துக்குடி அகல ரயில் பாதை அவசியம் தேவை. அது ஏற்பட்டால் தான், தென் தமிழகத்தைப் பொறுத்தவரை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய மாவட்டங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வாழ முடியும். நம் நாட்டை விட்டு வெளி நாட்டிற்கு ஓடுகிறவர்களில் பெரும்பகுதி தென் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்றால், அதற்கு முதல் காரணம் தொழில் வளர்ச்சி இல்லாதது. தொழில் வளர்ச்சி இல்லாததற்குக் காரணம் அகல ரயில் பாதை இல்லாதது. அகல ரயில் பாதை இல்லாததால், நிலக்கரி வரமுடியவில்லை. ஆகவே அகல ரயில் பாதையை அமைப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அங்கே பாராளுமன்றத்திலே இருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எப்படியாவது மார்ச்சு மாதத்திலே வர இருக்கின்ற ரயில்வே பட்ஜெட்டிலே இந்தத் திட்டம் சேர்வதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் சொல்வதைவிட, பொறுப்பான இடத்தில் இருக்கிற நீங்கள் சொன்னால், 'நம்முடைய கட்சிக்காரர்களையும் இது பாதித்திருக்கிறது, இதில் கவனம் செலுத்த வேண்டும்' என்ற எண்ணம் மத்திய அரசுக்கு வருமென்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கை சேது கால்வாய். சேது கால்வாய் திட்டம் உருவானால், நிச்சயமாகச் சொல்கிறேன், ஸ்ரீலங்கா அஞ்சும். அங்கே நம்மால் பொருளாதார நெருக்கடியை உருவாக்க முடியும். இன்றைக்கு வருகிற கப்பல்கள் ஸ்ரீலங்காவிற்குப் போய் பெட்ரோல் பிடித்துக்கொண்டு, அங்கேயிருந்து போக வேண்டி இருக்கிறது. சேது கால்வாய் வந்தால், ஸ்ரீலங்காவிற்குப் போகாமல் நேரடியாகக் கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகும். தமிழகம் வளர்ச்சியடைய சேது கால்வாய் முக்கியமென்று பல ஆண்டுகளாக தமிழகம் வற்புறுத்தி வந்திருக்கிறது. இதுவரை மத்திய அரசு செவி சாய்க்கவில்லை. அப்படி ஒரு எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று நினைத்துப் பார்க்கிறார்களா என்று கூடத் தெரியவில்லை. அவர்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் பஞ்சாப் என்னவாகுமோ, அஸ்ஸாம் என்னவாகுமோ, காஷ்மீர் என்னவாகுமோ என்பதுதான். இந்த நிலையில் தமிழக மக்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகிறார்களே, பிச்சை எடுக்கிறார்களே, நாடோடிகளாகத் திரிகிறார்களே, அவர்களைக் காப்பாற்ற இப்படிப்பட்ட திட்டங்களைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வர வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கு வரக்கூடிய சூழ்நிலையை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, நான் மதுரைவாசி என்ற அடிப்படையிலே ஒன்றைக் கூற விரும்புகிறேன். மதுரை நகரைப் பொறுத்தவரையில், வடக்கு, தெற்கு என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படி இரண்டாகப் பிரித்துள்ளதில், வடக்குப் பகுதி வளர்ந்து வருகிறது. குறிப்பாக மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே 5, 6 வார்டுகளிலே செல்லூர், கோரிப்பாளையம், நரிமேடு இப்படிப்பட்ட பகுதிகளிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் நெசவாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்த 50 ஆயிரம் தொழிலாளர்களிலே 25 ஆயிரம் பேர்கள் தெற்கு பகுதியிலே இருந்து வடக்குப் பகுதிக்குத் தொழில் செய்ய செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே வெள்ளமே வருவதில்லை. ஆனால் வந்துவிட்டால், ரயில்வே தண்டவாளத்தில் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் பல பேர் அடிபட்டுச் சாகிறார்கள். அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்பது தணியாத ஆசை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அவருடைய தொகுதியில் அந்தப் பாலம் வருகிறது. அது அவசியம் தேவை என்று கருதுகிறேன். இந்த நேரத்தில் அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதை நிதிநிலை அறிக்கையில் சேர்க்கலாம் என்பதால் சொல்கிறேன்.





அடுத்து, பாதாள சாக்கடைத் திட்டம். மதுரையிலே வட பகுதியிலே 100 ஆண்டுகளாகியும் பாதாள சாக்கடை இல்லை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. நான் மேயராக இருந்தபோது குடிநீர் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகளோடு போராடி, எத்தனை ஆண்டுகள் சொல்லிக்கொண்டிருப்பது? "யானைக்கல் அண்ணா சிலைக்கு முன்னாலே பூஸ்டர் போட்டு தண்ணீர் கொண்டு போங்கள்" என்று சொன்னேன். அரசு அதிகாரிகள் அமைச்சர்களை வேலை செய்ய விடமாட்டார்கள். செய்யாமல் இருக்க என்னென்ன காரணங்கள் சொல்ல வேண்டுமோ, அவற்றை எழுதி வைப்பார்கள். இது பாரம்பரையாக, வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து அரசு அதிகாரிகள் செய்யும் வேலை. ரூ. 1¼ கோடியில் பாதாளச் சாக்கடை வேண்டுமென்றால், எத்தனை ஆண்டுகள், என்ன பதில் எழுதினார்கள் தெரியுமா? "ரூ. 1¼ கோடிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் என்றால், அந்தப் பணத்தை எங்கேயிருந்து கட்டுவீர்கள்?" என்று எழுதியிருக்கிறார்கள். "நகராட்சி 1¼ கோடி ரூபாயை எங்கேயிருந்து கட்டும்?" என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு மேயர், உள்ளாட்சித் துறைச் செயலாளர், மற்ற எல்லோரும் இருந்து, அமைச்சரவர்களும் இருந்து பேசும்போதும் அதையே சொல்லுகிறார்கள். "1¼ கோடி ரூபாயை எங்கேயிருந்து கட்டுவீர்கள்?" என்று கேட்டார்கள். "மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கடன் வாங்குகிறதே, அதை எங்கேயிருந்து கட்டுவார்கள்; அப்படித்தான் நாங்களும் கட்டுவோம்" என்று சண்டை போட்டேன். அதற்குப் பிறகு ஒத்துக்கொண்டு, 10, 15 ஆண்டுகளாகிறது. 1972-லே போட்ட திட்டம் இன்னும் முடியாமல், இப்போது ரூ. 10 கோடி அளவுக்கு அந்தத் திட்டம் போய்விட்டது. 1¼ கோடி ரூபாயில் போட்ட திட்டம் இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்லி, இன்றைக்கு 10 கோடி ரூபாய் இருந்தால்தான் முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. இன்னும் காலதாமதப்படுத்தினால், இன்னும் செலவு அதிகமாகும். வாங்கிப் போட்ட பைப்புகள் எல்லாம் அப்படியே கிடக்கின்றன. தோண்டினது தோண்டினபடியே இருக்கிறது. ஆனாலும் திட்டம் இன்னும் முடியவில்லை. இந்தத் திட்டத்தை சீக்கிரம் முடிக்க வேண்டும். அவையில் மாண்புமிகு குடிநீர் வடிகால் அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டாலும் கூட, நான் பேசுகின்ற பேச்சு அவர்களுக்குப் போகுமென்று நினைக்கிறேன். இந்த ஆண்டிலேயே இத்திட்டத்தை முடித்து விடுவதாக சென்ற ஆண்டிலேயே அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னும் திட்டம் முடியாமல் அப்படியே கிடக்கிறது. இன்றைக்கு 1¼ கோடி ரூபாய் என்று திட்டம் போட்டதற்கு மாறாக 10 கோடி ரூபாய்க்கு மேல் ஆகுமென்று சொல்கிறார்கள். நாள் ஆக ஆக

திறக்க தனியாரிடம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை விற்பனை நிலையமாக மாற்றுகிறார்கள். 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் முதல்போட்டு 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் என்று சிட்டுக்குப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், உழைத்து வாழக்கூடிய மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் வகையில் விதிகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு பணம் வாங்கினால் அவர்களுக்குக் கொடுத்துள்ள அங்கீகாரத்தை ரத்து செய்து, ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைகள் வியாபாரமாக ஆகிவிட்டது.

அடுத்தபடியாக, மது விலக்குக் கொள்கை. மது விலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்கள் சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலேயே "என்னுடைய காலத்திலேயே மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கே நான் மகிழ்ச்சி அடைந்தேன். இன்றையதினம் அதை உறுதிப்படுத்துகிற வகையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்துள்ள பேட்டியில், நிச்சயமாக இந்த ஆண்டு சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மதுவின் காரணமாக எத்தனை குடும்பங்கள் கெட்டுப்போயிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். பலர் 60 ஆண்டு, 70 ஆண்டு வாழுகிற இந்தக் காலத்தில் 30, 40 வயது இளைஞர்கள் எல்லாம் ஈரல் வெந்து சாகிறார்கள் என்றால், சாராயம் அவர்கள் உடலைக் குடித்துவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற கூட்டத்தில் சொன்னதைப்போல. நிச்சயமாக வரப்போகிற நாட்களில் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில். இரண்டுவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள். என்ன கருத்தைச் சொன்னாலும், ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதை வரவேற்கிறார்கள். நானும் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நகராட்சிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகாரிகள் ஏகபோக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அவர்களைத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால், வறட்சி நிவாரணப் பணிகள் எப்படி நடந்தன என்பதைப் பார்த்தோம். அதிகாரிகள் எல்லாம் லட்சாதிபதிகளாக மாறினார்கள். இது நமக்குத் தெரியும்,



மக்களுக்கும் தெரியும். ஆகவே தாமதப்படுத்தாமல் ஏப்ரல் மாதத்தில் நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து அரசு அறிவித்ததற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. இந்த மாநிலத்திலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சி இல்லை என்பதை நாடறியும். தொழில் வளர்ச்சி இல்லாததற்கு முக்கிய காரணம் அகல ரயில் பாதை இல்லாதது. தொழில் அதிபர்களைக் கேட்டால், அவர்கள், "இங்கே அகல ரயில் பாதை இல்லை. அவ்வாறு அகல ரயில் பாதை இல்லாத காரணத்தால் தொழில் துவங்க இயலாது" என்கிறார்கள். ஆனால், இரயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டால் அவர்கள், "அங்கே தொழிற்சாலைகள் இல்லை, ஆகவே அகல ரயில் பாதை தேவை இல்லை" என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்காக சென்ற ஆண்டு டோக்கனாக 4 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் ஒதுக்கி ஆய்வு நடத்தி எல்லாம் முடித்துவிட்டு, இந்த ஆண்டு வராது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நமது அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மத்திய சர்க்காரிலே ஆளும் கட்சியிலே இருக்கிறார்கள். அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். திரு. கோசல்ராம்கூட ஏதோ அறிக்கை விட்டிருக்கிறார். கரூர்—தூத்துக்குடி அகல ரயில் பாதை அவசியம் தேவை. அது ஏற்பட்டால் தான், தென் தமிழகத்தைப் பொறுத்தவரை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய மாவட்டங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வாழ முடியும். நம் நாட்டை விட்டு வெளி நாட்டிற்கு ஓடுகிறவர்களில் பெரும்பகுதி தென் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்றால், அதற்கு முதல் காரணம் தொழில் வளர்ச்சி இல்லாதது. தொழில் வளர்ச்சி இல்லாததற்குக் காரணம் அகல ரயில் பாதை இல்லாதது. அகல ரயில் பாதை இல்லாததால், நிலக்கரி வரமுடியவில்லை. ஆகவே அகல ரயில் பாதையை அமைப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அங்கே பாராளுமன்றத்திலே இருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எப்படியாவது மார்ச்சு மாதத்திலே வர இருக்கின்ற ரயில்வே பட்ஜெட்டிலே இந்தத் திட்டம் சேர்வதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் சொல்வதைவிட, பொறுப்பான இடத்தில் இருக்கிற நீங்கள் சொன்னால், 'நம்முடைய கட்சிக்காரர்களையும் இது பாதித்திருக்கிறது, இதில் கவனம் செலுத்த வேண்டும்' என்ற எண்ணம் மத்திய அரசுக்கு வருமென்று கருதுகிறேன்.

விலைவாசி ஏற ஏற தொகையும் ஏறுகிறது. இத்திட்டத்தை சீக்கிரம் நிறைவேற்ற வேண்டும், முடிக்க வேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகரங்களில் இப்போது ஆக்கிரமிப்பு ரொம்ப அதிகமாக நடைபெறுகிறது. ரொம்ப திறமைசாலிகளாக ஆங்காங்கே இருக்கிற போக்கிரிகள் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ அந்தக் கட்சியின் தலைவர் பெயரைச் சொல்லி ஆக்கிரமிக்கிறார்கள். காமராஜர் ஆட்சியில் இருக்கிறார் என்றால் காமராஜர் பெயரையும், இந்திரா காந்தி ஆட்சியில் இருக்கிறார் என்றால் இந்திரா பெயரையும், அண்ணா ஆட்சியில் இருக்கிறார் என்றால் அண்ணா பெயரையும், கருணாநிதி ஆட்சியில் இருக்கிறார் என்றால் கருணாநிதி பெயரையும், புரட்சித் தலைவர் ஆட்சியில் இருக்கிறார் என்றால் புரட்சித் தலைவர் பெயரையும் சொல்லி இவ்வாறு செய்கிறார்கள்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை வைக்கக் கூடாது என்று அவர்களே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். முத்து :** பொதுவாகவே ஆட்சியில் இருப்பவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆக்கிரமிப்பவர்கள் எண்ணிக்கை அதிகம். முதல்படியாக கோயில் அல்லது படிப்பகம் என்று துவங்குகிறார்கள். ஆனால் உண்மையில் படிப்பகம் நடத்துவதுமில்லை, கோயிலில் கும்பிடுவதுமில்லை. அதோடு கூட நோட்புக் வைத்துக்கொள்கிறார்கள். வருடா வருடம் வியாபாரிகளிடத்தில் போய் மிரட்டுகிறார்கள். என்ன முதலாளி, போன வருடம் 10 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள், இந்த வருடம் ஏன் கொடுக்கவில்லை என்று சொல்லி முதலாளிகளை மிரட்டுகிறார்கள். அவர்களும் பயந்து உடனே கேட்பதைக் கொடுக்கிறார்கள். இப்படி கோயிலின் பெயரால், படிப்பகத்தின் பெயரால் ஆக்கிரமிப்புகள் அதிகமாகிக் கொண்டே போவதால், நகரங்களில் போக்குவரத்து நெரிசல் மிகுந்து தெருக்களில் நடக்க முடியவில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆக்கிரமிப்பாளர்களை உடனே அந்த இடத்திலிருந்து அகற்ற வேண்டும். தெளிவாக ஆக்கிரமிப்பாளர்கள் ஒன்றைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இப்படி ஆக்கிரமிப்பவர்கள் காமராஜ் நகர், இந்திரா நகர், கருணாநிதி நகர், புரட்சித் தலைவர் நகர் என்று பெயர் வைத்து விடுகிறார்கள். ஒரு சம்பவத்தை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சமயம் "சத்தியா நகர்" என்று பெயர் வைத்து ஒரு கண்மாய்க்குள் ஆங்காங்கே தட்டிகளை அமைத்து விட்டார்கள். மறுநாள் சுற்றுலா மாளிகைக்கு 100 பெண்களைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் போய் கண்மாய்க்குள் தட்டிகள் அமைத்திருப்பதைப் பார்த்தார்கள். உடனே மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து, 24 மணி நேரத்திற்குள் தட்டிகளை கண்மாய்க்குள்ளிருந்து எடுத்துவிடச் சொன்னார்கள். இப்படி நாட்டிலே ஏமாற்றுகிறவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் நாட்டுக்கு ஆபத்து.



அடுத்து, சினிமா படங்கள். இப்போது வருகின்ற படங்கள் சினிமா படங்களா? பார்க்க முடிகிறதா? சமீபத்தில் நிறைய பழைய சினிமா படங்களைப் பார்த்தேன். வீடியோ வந்திருப்பதால் கொண்டு வந்து காட்டுகிறார்கள். பார்க்கிறேன். இப்போது வருகின்ற படங்களிலும் சரி, முன்பு வந்துள்ள படங்களிலும் சரி, டான்ஸ், பரத நாட்டியம் எல்லாம் வருகிறது. எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? உதாரணத்திற்கு 'மன்னாதி மன்னன்' படத்தில் புரட்சித் தலைவர் நடித்த படத்தில் பத்மினி ஆடுகிற காட்சியைப் பார்த்தேன். அதுபோல் சிவகெங்கை சீமையில் கமலா களிர்நடனம் கோயிலில் ஆடுவதைப் பார்த்து நமக்கெல்லாம் புல்லரிக்கிறது. அதுபோல் வஞ்சிக் கோட்டை வாலிபனில் பத்மினியும், வைஜயந்திமாலாவும் போட்டி போட்டுக் கொண்டு பரதநாட்டியம் ஆடுகிறார்கள். ஏன்தான் சீக்கிரம் முடிந்ததோ என்று நினைக்கத் தோன்றியது. அதுபோல் தில்லானா மோகனாம்பாள் படத்திலே சிவாஜி நாயனம் வாசிக்கிறார். அசல் நாயனம் வாசிக்கிறவர் கூட அவரிடம் பிச்சை வாங்க வேண்டும். அவ்வளவு அருமையாக நாதஸ்வரம் வாசிக்கிறார். பத்மினி அந்தப் படத்தில் ஆடுகிறார். அதுதான் கலை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கலைத் துறையிலே தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கியவர். அவர் அவையில் இருக்கும்போது சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். தியாகராய பாகவதர், பி. யூ. சின்னப்பா, கே. ஆர். ராமசாமி, புரட்சித் தலைவர், சிவாஜி, என். எஸ். கே. இப்படி எல்லாம் கலை உலகுக்கு சேவை செய்ய பலர் வந்தார்கள். ஆனால் இன்றைக்கு வருகிற படங்களில் கலையா இருக்கிறது?

(முற்பகல் 11.30)

பத்திரிகையில் பாராட்டினால் நாம் என்ன செய்வது? இப்போது எங்கே பார்த்தாலும் என்ன நடக்கிறது? கொலை, கொள்ளை, மோசடி, கற்பழிப்பு, இவை இல்லாத நாளே கிடையாது. பத்திரிகையை எடுத்துப் படித்தால், கொலை, கொள்ளை, மோசடி, கற்பழிப்பு பற்றிய செய்திகள். எப்படிச் செய்தார்கள் என்று விசாரித்தால் சினிமாவைப் பார்த்து அதே மாதிரி செய்திருப்பதாகச் செய்தி வருகிறது. அத்தனையையும் இன்று சினிமாவில் கற்றுக் கொடுக்கிறான். கொலை செய்யவும், கொள்ளையடிக்கவும், கற்பழிக்கவும் தான் இப்போது சினிமா காட்டுகிறார்கள். சமீபத்தில் ஒரு படம் பார்த்தேன். இப்போது வீடியோவில் சினிமா காட்டுவதால் அதைப் பார்க்கும்படியானது. அந்தப் படத்தில் தமிழன் பண்பாடே சாகடிக்கப்பட்டு,

தமிழன் பண்பாட்டுக்கு விரோதமான காட்சி வருகிறது. ஒருவன் மூட்டை முடிச்சோடு வருகிறான். அவனைப் பார்த்து அந்த கிராமத்தில் உள்ள பெண் ஒருத்தி ஆசைப்படுகிறாள். அந்த ஆளுக்கு பெண்டாட்டி செத்து, பிள்ளையோடு வருகிறான். வாத்தியார் வேலை பார்க்கிறான். இந்தப் பெண்ணும் வாத்தியாராக, முதியோர் பள்ளி ஆசிரியராக இருக்கிறாள். அங்குள்ள வயதானவர்களுக்குப் படிப்பு வரவில்லையென்று, ஒரு கிழவர் கையைப் பிடித்து அ, ஆ என்று எழுதுகிறாள். அதைப் பார்த்து மற்ற கிழவர்களும் தனது கையையும் பிடித்து எழுதட்டுமே என்று படிக்காமல் உட்கார்ந்திருக்கிறார்கள். இதன் பயனாக இப்போது பேப்பரில் ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். 75 வயது கிழவன், 10 வயது பெண்ணைக் கற்பழித்தான் என்று. அந்தப் படத்தில் முதியோர் கல்விக் கூடத்திற்கு அரைகுறை ஆடையோடு அவள் வருகிறாள். அவர்கள் கையைப் பிடித்து எழுதக் கற்றுக் கொடுக்கிறாள். இப்படி ஒரு காட்சி. அதன் பிறகு அந்த வாத்தியாருக்கும், இந்த ஆசிரியைக்கும் காதல் வருவதாக ஒரு கற்பனைக் காட்சி. காதல் வந்து விட்டது போல் ஒரு கற்பனை. காதல் பண்ணுவது போல ஒரு காட்சி. இது மாதிரி காட்சி வந்தால் சின்னவனும் கெட்டுப் போகிறான், வயதானவனும் கெட்டுப் போகிறான், வாலிபனும் கெட்டுப் போகிறான். அதோடு போய்விடவில்லை. அந்த ஆசாமி போய்க் கேட்கிறான். பிறகு கட்டிப் புரண்டு கொண்டிருக்கிறான். பிறகு என் ஜோலியைப் பார்க்கப் போகிறேன் என்கிறான். அவ்வளவு மோசமாக இருக்கிறது.

வெள்ளை ரோஜா என்று ஒரு படம். சிவாஜி ரொம்ப திறமையாக நடித்தார். அந்தப் படத்திலே தேவையில்லாத ஒரு சீன். பிரபு ஆற்றுத் தண்ணீரில் விழுந்து விடுகிறார். அந்தப் பையனை வெளியில் தூக்கி ஒரு பெண் அவன் மீது ஏறி அமுக்குகிற காட்சி வருகிறது. இதையெல்லாம் சொல்வதற்குக் கூட வெட்கப்படுகிறேன். சென்சார் போர்டு என்ன செய்கிறது என்றே தெரியவில்லை. கலை என்ற பெயரில் நாட்டைக் குட்டிச்சுவராக ஆக்குகிறார்கள். இந்த மாதிரி படங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நமது அவை முன்னவர் அவர்கள், இந்தத் துறையிலேயே நீண்ட காலம் அனுபவம் பெற்றவர்களாதலால், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்தித் துறை அவர் கையில் இருப்பதால், இப்படிப்பட்ட கதைகள், இரண்டு பொருள் இருக்கிற வசனங்கள், இதுமாதிரி படங்களை யார் எடுத்தாலும், அதைத் தடுக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல கலைகளை வளர்க்க வேண்டும். தியாகராஜ பாகவதர் நடித்த படங்கள் எல்லாம் இரண்டாண்டுக் காலம் ஓடியது. இப்போதும் பழைய படங்களைத்தான் பார்க்க முடிகிறது. இப்போது வருகிற படங்களில் தேவையில்லாத டான்ஸைச் சேர்க்கிறார்கள். பெண்கள் புடவை இல்லாமல்





ஆடுகிறார்கள். சினிமாவைப் பார்க்கிறவன் அந்த ஒரு காட்சியை மட்டும் போய் பார்த்துவிட்டு, வெளியில் வந்துவிடுகிறான். வேறு காட்சிகளைப் பார்ப்பதில்லை. அவ்வளவு ஆபாசங்கள் சினிமாத் துறையில் இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மதுரையில் நடந்த மாணவர் போராட்டம். உண்மையிலேயே சொல்கிறேன். அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திறமையுள்ளவராக இருந்திருந்தால், இதைத் தவிர்த்திருக்கலாம். அவருடைய திமிரான பேச்சும், அலட்சியமான போக்கும்தான் இந்த அளவுக்குக் கொண்டு வந்துவிட்டது. அவர் இருந்த இடத்தில் வேறு ஒருவர் இருந்திருந்தால், இந்த அளவுக்கு வந்திருக்காது. மதுரைதான் எல்லாவற்றுக்கும் களமாக இருக்கிறது. இது போன்ற இடங்களில், அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகவும், பெரிய போலீஸ் அதிகாரிகளாகவும் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்தான் இந்த மாதிரி நிலைமைகளைச் சமாளிக்க முடியும்.

அடுத்து, இந்திப் பிரச்சினை. இந்தி தமிழ் நாட்டில் பல ரூபத்தில் நுழையப் பார்க்கிறது. மத்திய தலைவர் ஒருவர் மும்மொழித் திட்டத்தை நாடு பூராவும் கொண்டு வரவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிறார். இந்தியை பல ரூபத்திலும் நுழைக்க மத்தியிலுள்ளவர்கள் முயற்சி செய்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, மும்மொழித் திட்டம் வரும் என்று சொன்னால், ஒரு தமிழன் உயிரோடு இருக்கிறவரை, மும்மொழித் திட்டம் இங்கே வர முடியாது. அதற்காக 1965-ல் மாணவர்கள் சிந்திய ரத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே கொண்டுவரவேண்டுமென்று, பேசிப் பார்க்கிறார்கள். மறைமுகமாகத் திணித்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்து கொண்ட தியாகிகள் பலருக்கும் உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் 45 ஆண்டுக்காலம் அனுபவம் உள்ளவர் என்ற காரணத்தால் இப்படிப்பட்ட செயல்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சமுதாயம் கெட்டுச் சீரழிந்துகொண்டிருப்பது பரிசுச் சீட்டினால் தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இப்போது எல்லாம் 2 சதவிகிதம் வரி என்று சொன்னதும் பரிசுச் சீட்டு விற்பவர்கள் எல்லாம் ஊர்வலம் வருகின்றனர். சம்பளம் வாங்குகிறவர்கள்—படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லாம்—வாங்குகின்ற சம்பளத்தில் பாதிப் பணத்தைக் கொண்டு போய் பரிசுச் சீட்டில் கொட்டுகிறார்கள். எல்லோரும் குறுக்கு வழியிலே, பாடுபடாமல், கோடீஸ்வரனாக ஆவதற்கு ஆசைப்படுகிறார்கள். வேறு மாநிலத்

திலிருந்து இந்த மாநிலத்திற்குப் பரிசுச் சீட்டுகள் கொண்டுவந்து விற்கக் கூடாது என்று மத்திய அரசே சட்டம் கொண்டுவர வேண்டும். ஆனால் எந்த மாநிலமாக இருந்தாலும், தனியாருக்குக் கொடுக்காமல் அந்த அரசே நடத்த வேண்டும். இப்படிச் செய்தால்தான், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் நாட்டில் இருக்கிற எல்லோரும் பிச்சைக்காரர் களாகப் போய்விடுவார்கள். ஆகவே தான் பரிசுச் சீட்டைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று எச்சரிக்கையோடு சொல்கிறேன்—அது மக்களை செல் அரிப்பதுபோல அரித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு நல்லதொரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு முதற் கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் சமுதாயம் சார்பாக தங்களைத் துணைத் தலைவராக இந்தச் சபை தேர்ந்தெடுத்ததற்கு நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுதல்களை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுள்ளபடி கொடும் வறட்சி நமது மாநிலத்தில் ஏற்பட்டபோது, அரசு எடுத்த போர்க் கால நடவடிக்கைக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரைக்கு நான் சென்றிருந்த போது, அரசை எப்போதுமே காரணமின்றி எதிர்த்துப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு பொறுப்பாளர் அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பார்த்து மிகவும் பாராட்டிப் பேசியபோது, நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆகையால் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இந்தப் பாராட்டுதல்களை மிக வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், உள்ளூரப் போற்றுவதை நான் பார்த்தபோது, நான் எண்ணற்ற மகிழ்ச்சி அடைந்தேன். என் மத்திய அரசும் இதனை வெளிப்படையாகவே பாராட்டியது. சென்னை மாநகரிலே குடிநீர் கிடைக்காதபோது, அரசு மிகத் தீவிரமாக அனைத்துப் பகுதிகளுக்கும் நீரைக் கொண்டு வந்து எல்லோருக்கும் அளித்து திருப்தி செய்ததைக் கண்கூடாகப் பார்த்தபோது மக்களுக்கு இவ்வரசின் மேல் இனி அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஏற்கெனவே பல உறுப் பினர்கள் கூறியதுபோல, ஆளுநர் உரையில் இருப்பதுபோல, அநேக தொல்லை களுக்கும் துன்பங்களுக்கும் அரசு உள்ளாகி இருக்கும் நிலை இருந்தது, சென்ற ஓர் ஆண்டுக் காலமாக சொல்லொண்ணாத கொடுமைகளை அரசு அனு



பவித்து வருகின்றது. இயற்கையின் சீற்றம் ஒரு புறம். இயற்கை வறட்சி ஒரு புறம். அதிகமான மழை ஒரு புறம். காலம் தவறிப் பெய்கின்ற மழை யினால் அரசு அனுபவித்து வரும் கொடுமை—ஆக இவற்றையெல்லாம் நினைக்கும்போது, எனக்கு பைபிளில் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

(முற்பகல் 11-40)

"யாகோப்" என்பவர் மிகச் சிறந்த ஒரு மகான். அவர் சிறந்த முறையிலே அரசாண்டுக்கொண்டிருந்தபோது, பிசாசு கடவுளைப் பார்த்து "அவருக்கு வேண்டியதையெல்லாம் நீர் கொடுத்திருக்கின்றீர்கள். அதனால்தான் அவர் நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார். அதனால் தான் அவர் எல்லாரிட மும் நல்ல பெயர் வாங்கிக்கொண்டிருக்கின்றார்" என்று சொன்னதாம். அவரை சோதிக்க வேண்டுமென்று வரம் கேட்டதாம். அப்படி வரம் கொடுத்தபின், அது சோதனை செய்ததாம். அதனால் யாகோப் அவர்கள் பல சோதனை களுக்கு உள்ளானார். அதுமாதிரி எல்லா வகையான சோதனைகளும் நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், இந்த தமிழகத்தை ஆண்டுக் கொண்டிருக்கும்போது, ஏற்பட்டு, பல சோதனைகளை மிகத் திறம்பட சமாளித்து மக்கள் மத்தியிலே நல்ல பெயரை எடுத்துக் கொண்டிருக்கின் றார்கள். நான் இந்த நேரத்திலே அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். எல்லோராலும் மெச்சத்தக்க அளவுக்கு புகழக்கூடிய அளவுக்கு பெருமை பெற்றிருக்கிறது இந்த அரசு. அதற்கு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிற்க, ஆளுநர் உரையிலே அரசு எல்லா வகையினருக்கும் மகிழ்ச்சி அளிக் கக்கூடிய விதத்தில் அறிவிப்புக்கள் செய்துள்ளது என்றால், அது மிகை யாகாது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்று இருக்கின்றது. அது ஒரு வரப்பிரசாதம். ஒரு குடும்பத்திலே ஒருவருக்கு வேலைவாய்ப்பு செய்துகொடுத்தால், நிச்சயமாக அந்தக் குடும் பத்தைத் தலை தூக்க வைக்க முடியும். ஆக இது ஒரு வரவேற்கத் தக்க திட்டம். கிராமப்புறப் பகுதிகளிலேயும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பத்தினருக்கும் கூட வேலை வாய்ப்புத் திட்டம் என்று இருக்கிறது. அதுவும் ஒரு மாபெரும் திட்டம். கிராமத்திலே உள்ள மக்களுக்கும், நகர்ப்புறத்திலே உள்ள மக்களுக்கும் பாகுபாடு இன்றி, பலவகைகளிலே திட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள இந்த அரசு பலவிதமான திட்டங்களைக் கொண்டு வந்து அவற்றை நல்ல முறையில் நடத்தி வந்தால், இன்னும் சில நாட்களிலே வறுமையை ஒழித்து எல்லோரும் நல்ல முறையிலே வாழ வழிவகை செய்யும் என்பதை நான் சொல்லவேண்டிய தில்லை. இவற்றிற்கெல்லாம் உச்சகட்டமாக, கல்வி முறையிலே அரசு எடுத் துக்கொண்ட நடவடிக்கை இருக்கின்றது. அது மிகவும் போற்றத்தக்கது.

தொழில் கல்வியைப் புகுத்தி அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. ஆம், இன்றைய கல்வியாலே எந்தவிதமான பலனும் பெற முடியாமல், பலர் படித்து பட்டம் பெற்றும் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக தொழில் கல்விக்கு அரசு முக்கியத்துவம் கொடுப்பதை நான் அனைத்து ஆசிரியர்கள் சார்பிலேயும் வரவேற்கின்றேன். ஆசிரியர்கள் சமுதாயமும் இதை வரவேற்கின்றது. நல்ல முறையிலே இந்தத் தொழில் கல்வி வளர வேண்டும். அந்தக் கல்வி பள்ளிகளுக்கெல்லாம் வரவேண்டும் என்று அவர்களில் பலர் எதிர்பார்க்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் கூறியதுபோல, அந்தக் கல்வி நிலையம் வியாபார ஸ்தலமாக ஆகாமல் இருக்க வேண்டும். உண்மையிலேயே தகுதி பெற்றவர்களுக்கு அது போய்ச் சேரவேண்டும். முக்கியமாக அந்தத் தொழில் கல்வி பள்ளிகளிலே வருகின்ற போது, அந்தக் கல்வியை ஏழை எளிய மாணவர்கள் வரவேற்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அந்தக் கல்லூரிகளில் நிறைய இடம் தந்து அரசு உதவி செய்ய வேண்டும். இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புவது, தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு, பட்டம் பெற்றவர்களாக இருக்கின்ற அவர்களுக்கு, ரூ. 150 தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் பல ஆண்டுகளாக இருக்கின்றார்கள். 6, 7 ஆண்டுகளாக அந்த ரூ. 150 சம்பளத்திலே பகுதி நேர ஆசிரியர்களாக இருந்தாலும், முழு நேரமும் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு வெறுப்பான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை அந்தத் தொழில் கல்வி ஆரம்பிக்கும்போது, ஈர்த்து அவர்களுக்கு முழுச் சம்பளம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டம். அது எல்லோராலும் பாராட்டப் பட்டது. அதனால் பல நன்மைகள் குழந்தைகளுக்குக் கிடைத்திருக்கின்றன. இதை செய்தித்தாள்களும் முழுமையாகப் பாராட்டி இருக்கின்றன. அனைவரும் முழுமையாகப் பாராட்டி இருக்கின்றனர். அதைப் பயன்படுத்திக்கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. முதியோர்களுக்கும் இந்த சத்துணவு கொடுக்கப்படுகின்றது. அதைப்போல இந்த சத்துணவை பள்ளி இறுதி வகுப்பு மாணவர்களுக்கும்— பத்தாவது வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழ்மையின் காரணமாக அவர்கள் படிப்பை விடக்கூடிய ஒரு நிலை இருப்பதால், ஏழை மாணவர்களுக்கு இந்த சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவதனால், அந்த மாணவர்கள் ஏழ்மையின் காரணமாக படிப்பை விடாமல் தொடர்ந்து படிக்க முடியும். அப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்தை அரசு விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகும். இது ஆசிரியர்கள் மத்தியிலே மிகமிக பாராட்டுக்குரியதாக இருக்கிறது. எல்லோரும் பல ஆண்டுகளாக, பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இதைக் கேட்டுவந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவிக் காலத்திலே அவர்கள் இதை அறிவித்ததை நாங்கள் மிகவும் பாராட்டுகின்றோம். இதிலே அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 செலுத்த வேண்டுமென்று கூறப்படுகிறது. ஒரு அரசுப் பணியாளரோ, ஆசிரியரோ 25 வயது அடைந்தவுடன் வேலைக்கு வந்தால், 12 ஆண்டுகளிலே அவருக்கு வட்டியுடன் 5,000 ரூபாய் கிடைக்கின்றது. அந்த ஆசிரியர்களோ, அரசுப் பணியாளர்களோ இன்னும் 21 ஆண்டுகள் வேலை செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். 25 வயதிலே வேலைக்கு வருகிற ஒருவர் தன்னுடைய 37 ஆவது வயதிலேயே தன்னுடைய இலக்கை எட்டிவிடுகிறார். அதற்குப் பிறகு 58 வயதுவரை அந்தப் பணத்தை பிக்சட் டிபாசிட்டிலே போடவேண்டும் என்று அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு போட்டால், ஒருவர் ஓய்வு பெறும்போது ரூபாய் பத்தாயிரம் அல்ல, அதற்கு மாறாக அவர் ரூபாய் 20,000 பெறுகிறார். ஆகவே ஓய்வுபெறும் அவர்களுக்கு இந்தத் தொகை மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, அந்த முறையிலே இந்தத் திட்டத்தைச் செம்மைப்படுத்தி அரசு தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியது போல, ஆசிரியர்களில் சிலர் சூபரானுவேஷன் பீரியட்டில் இருக்கின்றார்கள். அதாவது ஜூன் மாதத்தில் ஓர் ஆசிரியர் ஓய்வுபெறும் வயதை அடைந்துவிட்டாலும், பள்ளி ஜூன் மாதத்திலே திறக்கப்பட்டு அடுத்த ஜூன் மாதம் வரை அவர் பணியில் இருக்கலாம். அம்மாதிரியான ஆசிரியர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் விசேஷ சலுகையாக அவர்கள் சூப்பரானுவேஷன் பீரியட்டிலிருந்து ஓய்வுபெறும்போது இந்த ஐயாயிரம் ரூபாயை அவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஆசிரியர் மத்தியிலே மிக மனக்கசப்பையும், மனக்கவலையையும் உண்டாக்குவது ஊக்க ஊதியம் ஆகும். ஓர் ஆசிரியர் ஊக்க ஊதியம் கிடைக்கிறது என்பதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து மற்ற மாநிலங்களுக்குச் சென்று, எம்.ஏ., போன்ற முதுகலைப்பட்டங்களைப் பெற்று வருகிறார். அதற்காக செலவு ஐயாயிரம் ரூபாய்க்கும் மேலாகச் செய்கிறார். அவர்களுக்கு 'லம்ப்சம்' அளிப்பதை ஆசிரியர் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது.

ஓர் நிலையிலே இருக்கிறது. ஆசிரியர்கள் உயர்ந்த பதவிகளுக்குச் செல்ல முடியாத நிலையிலே இருக்கிறார்கள். மற்ற ஊழியர்களுக்கு இந்த 'லம்ப்சம்' ஏற்பாடு சாதகமாக இருக்கலாம். ஆனால் ஆசிரியர்களுக்கு இது சாதகமாக இல்லை. ஏனென்றால் இது பிரமோஷன் இல்லாத ஒரு 'ஜாப்'. ஆகையால் ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த இன்செண்டிவ் இன்கிரிமெண்ட்டைக் கொடுத்தால், ஆசிரியர்கள் அதனை மிகவும் வரவேற்பார்கள். நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கின்றார்கள். நிதி அமைச்சரிடம் இதைப்பற்றிக் கூறியிருக்கின்றேன். ஆகையால் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைய தினம் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் 15 நிமிடங்கள் கொடுக்கலாமென்று மாண்புமிகு தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு, 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்கள் பேசி விட்டார்கள். எனவே விரைவில் அவர் பேசி முடித்தால், மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**செல்வி ஆ. லீலாவதி :** 'லீவ் டிராவல் கன்செஷன்' அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தருகின்ற திட்டம் வருகின்ற பட்ஜெட்டிலாவது இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சிப் பணியாளர்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கும்போது, அவர்கள் பத்திரச் செலவு கொடுக்க வேண்டியிருக்கிறது. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் செலவில்லை. அதையும் அரசு கொடுக்க வேண்டும். மேலும் வீட்டு வசதி வாரியம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வீடுகளை ஆசிரியர்களுக்கு ஒதுக்க வேண்டும். பல வகைகளில் வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறது. அந்த முறையில் ஆசிரியர்களுக்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டும். வீட்டு வசதி வாரிய அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதைச் செய்து கொடுக்குமாறு நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போனஸ் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். 'மெடிகல் ரீஇம்பர்ஸ்மென்ட்'-ஐப் பொறுத்தவரையில் பல ஊழல்கள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. எனவே மாதத்திற்கு ஒரு தொகையை எல்லோருக்கும் மெடிகல் ரீஇம்பர்ஸ்மென்ட்டுக்குப் பதிலாகக் கொடுத்தால், அதை ஆசிரியர் சமுதாயமும் வரவேற்கும். தமிழாசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற முடியாத நிலையில், 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடக்கப் பள்ளிகளில்





வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு முதல் நிலை வழங்க வேண்டும். இப்போது பள்ளி வேலை நாட்கள் 220 என்று ஆக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 180 நாட்கள்தான் ஆசிரியர் வேலை செய்தார்கள். அதை 200 நாட்களாக்கினார்கள். அதற்குப் பிறகு அதை 220 நாட்களாக்கிவிட்டார்கள். இப்போது 40 நாட்கள் அதிகமாக ஆசிரியர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதை மறுபடியும் 200 நாட்களாக்க வேண்டும். பல ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாத அனைத்து நிலை ஆசிரியர்களையும் நிரந்தரப்படுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நான்காம் ஊதியக் குழு அமைக்கும் நேரத்திலே எல்லா ஆசிரியர் சங்கங்களையும், ஆசிரியர் பிரதிநிதிகளையும் அழைத்து, அவர்களுக்கு உதவுமாறு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கட்டிடத் தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருந்ததை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது உயிரிழந்தால், அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை இரண்டாகப் பிரித்ததுபோல, செங்கை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்து, நல்லபடியாக ஆட்சி செய்ய அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

* **திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீங்கள் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று, இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிற இந்த நல்ல சூழ்நிலையில் உங்களுக்குப் பாராட்டையும் வணக்கத்தையும் சொல்லி, ஆளுநர் உரையின்மீது என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்வதிலே உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் உரையில் தமிழகத்தினுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு, எதிர்காலத்தில் தமிழகம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும், எந்தெந்த வளர்ச்சிகளை எல்லாம் பெற வேண்டுமென்று சொல்லி, தொலைதூர நோக்கோடு உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் தமிழகத்தினுடைய வளர்ச்சியையும், கம்பீரமான எதிர்காலத்தையும் நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. நாட்டிலே சில பேர் கோட்டையை நோக்கி, கோட்டையை மனதிலே எண்ணி, நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் நடை ராஜ நடையாக மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய எதிர்கால உயர்வுக்கு அவர் எடுத்து வைக்கிற அடிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது. அந்த

அடிப்படையில் ஆளுநர் உரையில் பல சான்றுகளை எடுத்துச் சொல்ல முடியும்.
ஆனால் சில குறிப்பிட்ட சான்றுகளை இங்கே எடுத்துச்சொல்வது பொருத்த
மாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்று தமிழகத்தில் பசி இருக்
கிறது, வறட்சி இருக்கிறது. பசி இருக்கிறது, வறட்சி இருக்கிறது, என்று
சொன்னால் அதைச் சொல்கிற நானும் அதை உணர்ந்திருக்கிறேன். இந்த
அவையில் இருக்கிற பெரியவர்களும், சான்றோர்களும் உணர்ந்திருக்கிறார்கள்.
ஆனால் இந்தப் பசியைத் தீர்ப்பதற்கு, வறட்சியைப் போக்குவதற்கு இதுவரை
இதற்கு முன்னாலே இருந்தவர்கள் வழிவகை கண்டிருக்கிறார்களா என்று
சொன்னால் இல்லை. அதை சொல்லியதோடு நிறுத்தியிருக்கிறார்கள்.
ஆனால் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்கள் தான் இந்த நாட்டிலே இருக்கிற 65 இலட்சம் பிஞ்சு இதயங்களின்.
குழந்தைகளின் பசியைப் போக்கக் கூடிய காவலனாக இன்றைக்கும் திகழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு உலகத்திலே சில புள்ளிவிவரங்களைத்
தந்திருக்கிறார்கள். ஒரு நிமிடத்திற்கு இந்த உலகத்தின் பாதுகாப்புக்காக
ஏறத்தாழ 1.3 மில்லியன் டாலர் செலவு செய்யப்படுவதாக புள்ளிவிவரம்
தருகிறார்கள். ஒரு நிமிடம் இந்த உலகத்தைப் பாதுகாக்க, இந்த உலகத்தின்
மக்களைப் பாதுகாக்க ஏறத்தாழ 1.3 மில்லியன் டாலர் செலவிடுகிறார்கள்
என்று சொன்னால், இப்படிச் செலவிடுகிற இந்த உலகத்திலே தான் ஒவ்வொரு
நிமிடமும் ஏறத்தாழ 30 குழந்தைகள் பசியினால், சோறு இல்லாமல் செத்துக்
கொண்டிருப்பதாகவும் வல்லுநர்கள் புள்ளிவிவரம் தந்துகொண்டிருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட ஒரு பட்டினிச் சாவு ஏற்படுவதை, குழந்தைகள் இறக்கின்ற
நிலையைத் தடுக்கின்ற வகையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
மிக உன்னதமான சத்துணவுத் திட்டத்தை தமிழ்நாட்டிற்காக அர்ப்பணித்திருக்
கிறார்கள். அப்படி அர்ப்பணிக்கப்பட்ட அருமையான சத்துணவுத்
திட்டத்தைக் கூட இன்றைக்கு சிலபேர் கிண்டல் கேலி
செய்தார்கள். ஆனால் அதைப்பற்றி நாங்கள் கவலைப்பட்ப்
போவதில்லை. கடந்த ஓராண்டு காலத்தில் இந்த சத்துணவுத்
திட்டத்தின் மூலம் பயனடைந்த குழந்தைகள் எந்த அளவுக்கு
வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதுபற்றி கோவையில் இருக்கிற
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் பயிலும் மாணவிகள் ஒரு புள்ளி
விவரத்தை இந்த நாட்டுக்காகத் தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ குழந்தை
களின் மன வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் சீராக ஏற்பட்டிருக்கிறது.
அதோடு மட்டுமல்லாமல் ஏறக்குறைய 2.2 கிலோ அந்தக் குழந்தைகளின் எடை
கூட கூடியிருப்பதாக அவர்களுடைய புள்ளிவிவரம் கூறுகிறது. அது மட்டு
மல்லாமல் ஏறத்தாழ 4 சென்டிமீட்டர் அவர்களுடைய உயரம் கூடியிருக்கிறது.
அப்படி உடல் வளர்ச்சியை அவர்கள் பெற்றிருக்கிற அதேநேரத்தில் உள்ளமும்
வளர்ச்சி அடைந்திருக்கிற பாங்கினையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.





பாரதி கூட இந்த நாட்டுக்காக ஒரு பாடலைப் பாடியபோது ஒரு கருத்தை அருமையாகச் சொல்லியிருக்கிறார். "இந்த நாட்டிலே சாதிகள் சேர்கிறது, சண்டைகள் சேர்கிறது" என்று பாரதி பாடியிருக்கிறார். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை மட்டும் என்று நான் சொல்ல மாட்டேன். இந்தியா பூராவிலும் சாதிகள் சேர்கின்றன, சண்டைகள் பெருகுகின்றன என்று சொல்கிற நிலைமை தான் இருக்கிறது. ஆனால் சாதிகள் சேர்கின்றன என்ற வார்த்தை மறுக்கப்பட்டாலும், தண்ணீரில் எழுதப்பட்ட ஒன்றாகத் தான் இதுவரை இருந்து வருகிறது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய புனிதமான திட்டத்தின் அடிப்படையில் சாதி, சமய, மொழி வேறுபாடு எல்லாம் அகன்று போய்விடும். இத்தகைய மாறுபாட்டை எல்லாம் வளர்ந்து வருகிற அந்தப் பிஞ்சு இதயங்களின் மனதிலிருந்து ஒழிக்க வேண்டும், குழந்தைகள் சமமாக வாழ வேண்டும், அதற்கு முதல்படிதான் சம பந்தி என்று சொல்லக் கூடிய போஜனம் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டிலே எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு காலடியும் இந்த நாட்டு மக்களுடைய எதிர்கால வளர்ச்சியை மனதிலே கொண்டு வைக்கிற அடிகள் என்பதற்கு இந்த ஒரு காரியம் மிகச் சிறந்த உதாரணம் ஆகும்.

இந்த அவையிலே ஈழத் தமிழர்கள் பற்றி எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரிலே ஈழத் தமிழர்கள் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது எந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். "புரட்சித் தலைவர் அவர்களுடைய கரங்களில் இந்தத் தமிழ் சமுதாயம் பாதுகாப்பாக இருக்கும்" என்று சொல்லி இங்கே உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லியதோடு நடைமுறையிலும் செய்து காட்டியிருக்கிறார்கள். அதைக் கூட இன்றைக்கு சில பேர் கேவலப்படுத்திப் பேசுகிற நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான் ஈழத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

(நண்பகல் 12-00)

1948-ல் துவங்கிய தாக்குதல்கள் 1983 வரை தொடர்கதையாக இருந்தாலும், 1983-க்குப் பின்பு அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்து, இனிமேல் தொடர முடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று திட்டமாக காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார், நமது டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். இந்த நேரத்தில் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. 1964-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், டெல்லி ராஜ்யசபையில் பேசும்போது, சிரிமாவோ பண்டாரநாயகாவும், லால் பகதூர் சாஸ்திரியும் ஒரு ஒப்பந்தத்தை இந்த மண்ணுக்குத் தருகிறார்கள், அப்படித் தருகிற நேரத்தில் லட்சக்

கணக்கான தமிழர்கள் அகதிகளாக இங்கே வருகிற சூழ்நிலை உருவாக்கப் படுகிறது. அந்த நேரத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், "அதை நாங்கள் கடுமையான முறையில் எதிர்க்கிறோம், இது தமிழ் நாட்டுக்கு இழைக்கப்படுகிற மிகப் பெரிய துரோகம்" என்றார்கள். மேலும், "இந்தப் பிரச்சினை ஸ்ரீலங்கா-இந்தியா பிரச்சினை அல்ல. முற்றிலும் ஸ்ரீலங்கா பிரச்சினைதான். ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய மக்கள், ஸ்ரீலங்காவின் நல்வாழ்விற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர்கள், பாடுபட்டுக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் அங்கே வாழ நிரந்தரமான தீர்வு காணாமல், அவர்களைத் தமிழகத்திற்கு அகதிகளாக அனுப்ப ஒப்பந்தம் செய்வது மிகப் பெரிய துரோகமாகும்" என்றார்கள். அப்படி அவர்களை அகதிகளாக நாம் ஏற்றால், அங்கேயுள்ள மீதமுள்ள தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப் படாமலேயே போய்விடும் என்று எச்சரித்தார்கள்.

ஸ்ரீலங்கா தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர பரிகாரம் காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்தார்கள். அதற்குத்தான் இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர், பொன்மனச்செம்மல், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஸ்ரீலங்கா தமிழர்களின் அயாரங்களுக்கு நிரந்தரமான பரிகாரத்தைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புதுவாழ்வு கொடுக்கின்ற வகையில், ஈழத் தமிழர்களுக்காக, நமது புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நல்வாழ்வுக்காகவே இருப்பதை இப்போது பார்க்கிறோம்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் வறட்சியைப்பற்றிச் சொன்னார்கள். தீவிரமாகப் பேசுகிறார்கள். அதைப்பற்றி இப்போது நடக்கிற வழிநடைப் பயணத்திலும் பேசுகிறார்கள். ஜப்தி, ஜப்தி, விவசாயிகள் பொருட்கள் ஜப்தி என்று பேசுகிறார்கள். அப்படிப் பேசுகிற கட்சிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் இந்த அவையின் வாயிலாகச் சொல்வதெல்லாம், இந்த மண்ணிலே ஏற்பட்டிருக்கிற வறட்சி புதிய வறட்சி தான். 75 ஆண்டு காலமாக ஏற்படாத வறட்சி இப்போது ஏற்பட்டுள்ளது. 75 ஆண்டுக்கு முன்னாலேதான் மூன்றாண்டுக்காலம் தொடர்ந்து வறட்சி இருந்ததாம். நாம் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட வறட்சியையே இந்த அரசு புரட்சித் தலைவரின் தலைமையில் சமாளித்திருக்கிறது. லோயர் பவானி சாகர் காய்ந்து போனதையே பார்த்ததில்லை. மேட்டூர் அணையின் தரைப்பகுதிக்கு 300, 400 அடிக்குக் கீழே தண்ணீர் ஊற்று போய்விட்டது. இந்த நேரத்தில்தான் மைய அரசு ஏறத்தாழ 13 கோடி ரூபாய் கடனாகத் தந்தது. ஆனால் நாம் 68 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கினோம். புரட்சித் தலைவர் அரசு வானம் பொய்த்தாலும், கருணை பொங்கும் உள்ளத்தோடு வறட்சி நிவாரணத்திற்காக





ரூ. 114 கோடி ரூபாயை அள்ளி அள்ளித் தந்தார்கள். இதற்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காண உத்தரவிட்டார்கள். அந்த வேலைகள் நடந்ததையும் நாம் பார்த்தோம். இதை நான் சொல்லவில்லை. மைய அரசிலிருந்து வந்த வறட்சி நிவாரணக் குழுவின் தலைவர் திரு. பி. சி. சடால் போன்றவர்கள் ஆய்வு நடத்திச் சொன்னார்கள். எதிர்கால வறட்சியை நிரந்தரமாகச் சமாளிக்கிற வகையில் பணிகள் வேகமான அளவில் செய்திருக்கிறார்கள் என்று அவர்கள் டெல்லிக்குச் சென்று அறிக்கை தருகிறார்கள். அந்த அளவுக்கு நாம் வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்திருக்கிறோம்.

ஆனால் இங்கே கடந்த கால வறட்சியைக் கூட பார்த்தோம். நாங்கள் செய்கிற வறட்சிப் பணியைக் கிண்டலும் கேலியும் செய்கிற நிலையைத்தான் நாம் பார்க்க முடிகிறது. அந்தச் சூழ்நிலையைத்தான் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வறட்சிப் பணிகளிலே பழுது பார்க்கப்பட்ட பல குளங்கள் உடைந்து வெள்ளம் எடுத்ததாகவும் தகவல் இருக்கிறது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** உண்மை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இது வறட்சிப் பணி பற்றியதா? வறட்சிப் பணிகளிலே உள்ள குறைகளையும் பற்றியதா?

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** வறட்சிப் பணிகளிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்படுகிற குறைகளை நிச்சயமாக உணர்ந்து அதற்கு நிவாரணம் அளிப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது. அந்த நிலைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையின் வாயிலாக நான் சொல்லிக்கொள்கிறேன். பிறகு அந்த வறட்சி நிவாரணப் பணிகளில் இந்த அரசு தீர்க்கமான முறையிலே நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. இதற்கு முன் எத்தனையோ தடவை வறட்சி இந்த நாட்டைத் தாக்கிய நேரத்தில் இப்படிப்பட்ட நிவாரணப் பணிகளை எடுத்திருப்பார்களேயானால், இந்த வறட்சி நிச்சயமாக நம் மக்களை இந்த அளவிற்குப் பாதித்திருக்காது. ஆனால் அவர்கள் அப்படி நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலே, இந்த வறட்சி முழுமையாக தமிழ் நாட்டை வாட்டியது. 1973-74-லே தமிழ் நாட்டிலே மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டது. அந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் அந்தக் கிராமங்களைக் காலி செய்துவிட்டு வருகிற நேரங்களில் அந்த மக்களுக்கு வறட்சி வறட்சி என்று சொல்லி அரசை எதிர்த்துப் போராடாமல், அந்த மக்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்தார்—கஞ்சியை ஊற்றுகிற மிகப் பெரிய பணியினை எங்களுடைய தலைவர்

அவர்கள் செய்தார்கள். ஆனால் இன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவர்கள் வறட்சியை வாழ்த்துப்பா பாடி வருகிறதைத்தான் நம்மாலே பார்க்க முடிகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அந்தநேரத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்ட மாவட்டமாக அறிவிக்கவேண்டுமென்று இன்றைய விவசாய அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களும் அன்று அவரோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் மதுரையிலே உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதையும் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அன்றைய தினம் எங்களோடு தோழமையாக நின்று கைகொடுத்த நீங்கள் இன்றைய தினம் அந்த வறட்சியைப் பாராட்டுகிற சூழ்நிலையில் நடைப்பயணத்தோடு தோழமைபோகிற காட்சியை இந்த நாடு மறக்கவில்லை. இது மக்கள் நினைவிலேயே இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அன்றும் எதிர்த்தோம்; இன்றும் எதிர்த்தோம்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** எதை எதிர்க்கிறார்கள் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை இப்பொழுது. எனவே அன்றைய வறட்சி நிலைமையின்போது எங்களுடைய தலைவர் மக்கள் பக்கத்தில் நின்றார் ஆனால் இன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவர்கள் வாழ்த்துப்பா பாடி அந்த வறட்சியை வரவேற்கின்ற காட்சியைப் பார்க்க முடிகின்றது. நாட்டிலே வறட்சி இருந்தாலும், நிலத்திற்குக் கீழே நீர் போனாலும் கூட, ஆழ் குழாய் கிணறுகள் எல்லா இடங்களிலும் போட்டு வறட்சியே தெரியாத ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், வறட்சிப் பணிகள் நடக்கிற இடங்களிலே அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குழுக்களை நியமித்து அவர்கள் கண்காணிப்பதற்கான அதிகாரத்தை இந்த அரசு கொடுத்திருக்கிறது. பல்வேறு பணிகளைக் கவனிப்பதற்கு வழிவகைகளைக் கூட இந்த அரசு மனிதாபிமானத்தோடு செய்துவருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

வறட்சி ஒரு புறம். தெரிந்தே சொல்கிறார்கள் விலைவாசியைப் பற்றி. இந்த மாநிலத்திற்குத் தேவையான உணவு 60 லட்சம் டன் அரிசி என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே 29 லட்சம் டன் அரிசி தான் உற்பத்தியாகிறது. அந்தநேரத்திலும் கூட மைய அரசு எங்களுக்குக் கைகொடுக்க



வில்லை. 11 மாத காலம் மைய அரசிடமிருந்து எங்களுக்கு ஒரு மணி அரிசி கூடக் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைக்காத நேரத்திலே கூட அரிசியினுடைய விலை தமிழ் நாட்டிலே எவ்வளவு என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் விலைவாசி ஏறிற்று என்று சொல்லி ஒரு புறத்திலே வறட்சி இருந்தும், மறுபுறத்திலே அந்த வறட்சிச் சூழ்நிலையை இந்த நாட்டிலே . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 நிமிடமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விரைவாக முடித்தால் அவையை 12.30 மணிக்கு முடிக்கலாம். இல்லாவிட்டால் மதிய உணவுக்கு 1.00 மணியைத் தாண்டக்கூடிய நிலைமை ஏற்படும்.

(பிற்பகல் 12.10)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** விலைவாசிப் பிரச்சினையை இங்கே அவர்கள் தொட்டுப் பேசுகின்றார்கள். கடந்த காலத்திலே விலைவாசி எப்படிப்பட்ட நிலையிலே இருந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. எங்களுக்கு ஏற்பட்ட இந்தச் சூழ்நிலைகளைப்பற்றி இப்போது சொல்வது பொருந்தும் என்று நான் கருதுகிறேன். 11 மாத காலம் மைய தொகுப்பிலேயிருந்து ஒரு மணி அரிசி கூட கிடைக்கவில்லை. அது உலகம் அறிந்த ஒன்று. தமிழ் நாட்டிலே இருக்கின்ற சான்றோர்கள் அறிந்த ஒன்று. தமிழ் நாட்டினுடைய விளைச்சல் ஏறத்தாழ 29 லட்சம் டன்தான். அந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு அனுமதித்ததற்கும் மேலாக ஏறத்தாழ ரூ. 114 கோடியை அதிகமாக அள்ளித் தெளித்து, நாட்டிலே ஒரு வசந்த சூழ்நிலையை உருவாக்கிய தலைவர் தான் அவர்கள். வறட்சியிலேகூட ஒரு வசந்தத்தைக் கொண்டு வந்த வரலாற்று நாயகன், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். என்று சொன்னால், அதை இந்த நாட்டிலே உள்ள யாரும் மறுக்க முடியாது. எனவே ஒரு வசந்தத்தை இந்த வறட்சியிலே கொண்டுவந்த வரலாற்று நாயகன் புரட்சித் தலைவர் அவர்கள். அரிசி விலையா அல்லது மற்ற விலைகளா? அவற்றை ஏறாமல் பாதுகாப்பதில் மட்டுமல்ல, மனிதருடைய உணர்வுகளைப் புரிந்து, மனிதாபிமானமுள்ளவராக டாக்டர் பட்டத்தைப் பெற்ற, மனிதருடைய உணர்வுகளை, பசியைப் புரிந்துகொண்டிருக்கின்ற தலைவராக, புரட்சித் தலைவர் அவர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

இங்கே ஜப்தி ஜப்தி என்று சொல்கிறார்கள். நான் மெத்தப் பணிவோடு கேட்கின்றேன். தமிழ் நாட்டில் எந்த இடத்தில் யாருடைய சொத்தை இந்த அரசு ஜப்தி செய்தது? முடிந்தால் ஒருவரைச் சொல்லுங்கள். நான் பட்டியல்கூட கேட்கவில்லை. ஒருவரைச் சொல்லுங்கள். இந்தத் தமிழ் மண்ணில், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்த பிறகு, வறட்சிச் சூழ்நிலை

வந்த பிறகு, கடந்த் ஆண்டாக இருந்தாலும், அதற்கு முந்திய ஆண்டாக இருந்தாலும் சொல்லுங்கள். வறட்சி வந்ததற்குப் பின்னாலே, வெள்ளம் வந்ததற்குப் பின்னாலே இந்த மண்ணிலே யாரிடத்திலே இந்த அரசு ஜப்தி செய்தது? சொல்லுங்கள். ஒருவனைச் சொல்லுங்கள். இந்த விவசாயி களுக்கு இந்த அரசு செய்ததைவிட எந்த ஆட்சி செய்தது? இதற்கு முன்னாலே இருந்தவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொல்லுங்கள், பார்க்கலாம். குறைந்த கட்டணத்திலே மின்சாரம். அது மட்டுமா? ஒரு புறத்திலே வறட்சிக்கு அள்ளித் தரவேண்டிய சூழ்நிலை, ஒரு புறத்திலே வெள்ளம் பாதிக்கின்றது, வாங்கிய கடனைத் திரும்பத் தரமுடியாத சூழ் நிலை, இந்த நேரத்திலேகூட ஏறத்தாழ ரூ. 58 கோடியை பயிர் பாதுகாப்புக் கடனாக, இந்த விவசாயிகள் வாழ்வு வளம் பெறவேண்டுமென்று சொல்லி, விவசாயிகளுடைய நண்பனாக, பக்கத்திலே நின்று அழகு பார்க்கின்ற தெய்வம் அல்லவா புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஜப்தி என்று சொல் கின்றார்களே? எங்கே? எந்த இடத்திலே, எப்படி என்று சொல்லுங்கள். ஏதாவது ஒன்றை உதாரணத்திற்குச் சொல்லுங்கள். அது போதும். ஆனால் அதைச் சொல்ல முடியாதவர்கள், கோட்டையை நோக்கி, ஜப்தி ஜப்தி என்று சொல்லிக்கொண்டு வருகின்ற காட்சியைத்தான் நம்மாலே பார்க்க முடி கின்றது. ஜப்தி ஜப்தி என்று பேசுகின்ற அந்தச் சூழ்நிலையைத்தான் நம்மாலே பார்க்க முடிந்தது.

கிருஷ்ணா நதி பற்றிச் சொன்னார்கள். கிருஷ்ணா நதி பற்றி நானும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். சென்னை மாநகர மக்களுடைய நூறு ஆண்டுக் கால கனவை, அவர்களுடைய எண்ணத்தை, அவர்களுடைய எதிர்பார்ப்பை, இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றி யிருக்கின்றார்கள். தமிழ் நாட்டு வரலாற்றை உற்று உற்று பார்த்து, தமிழ் நாட்டிலே பள்ளியிலே படிக்கின்ற எந்தப் பிள்ளைக்கும், காவேரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை என்று சொல்லி அந்த ஆறுகளைத் தான் இதுவரையில் சொல்லி வந்தார்கள். ஆனால் எதிர்காலத்திலே, காவேரி, தென்பெண்ணையை பாலாறு, வைகை என்று சொல்பவர்கள் அதற்குப் பக்கத்திலே கிருஷ்ணாவும் தமிழகத்தை நோக்கி வருகிறது என்று சொல்லி வரைப் படத்திலே ஒரு மாற்றத்தை உருவாக்கிய வரலாற்று நாயகன் அல்லவா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அதைப் பாராட்டக்கூட வேண்டாம். அதைப்பற்றிப் பேசாமல் இருந்தால்கூட போதும். அதைத் தொடாமல் இருந்தால் போதாதா?

அடுத்ததாக, தொழில் கல்வி. இந்தியாவிலேயே ஒரு மௌனப் புரட்சியை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே ஒரு மௌனப் புரட்சி என்று சொன்னால், இதுவரையில் பி, ஏ., எம், ஏ, என்று இருந்து அந்தப்



படிப்பு ஏட்டுப் படிப்பாக, வீட்டிற்கு உதவாததாக இருந்தது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்வார்கள். அது வெறும் வீட்டுப் படிப்பாக இருந்தது. அது வெறும் வீட்டுப்படிப்பாகத்தான் பயன்பட்டது. நாட்டிலே ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கானவர்கள் படித்த பட்டதாரிகள் வேலை இல்லாமல் அலைகின்ற அந்தச் சுமையையும தாங்கவேண்டிய நிலைமை இன்றைய அரசுக்கு வந்துள்ளது என்று சொன்னால் கடந்த கால்க் கல்வியிலே ஏற்பட்ட கோளாறுதான் அது. அதற்குத் தீர்வு காணு வதற்கு யாரும் முன்வரவில்லை. தீர்வதற்கு முயற்சி எடுக்கவில்லை. தீர்க்க கால சிந்தனை, தொலைதூர சிந்தனை இதற்கு முன்னாலே இருந்தவர்கள் செய்ததில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் அந்தக் கல்வி முறையை மாற்றியிருக்கிறது. வெறும் கணக்குப்பிள்ளை, குமாஸ்தாக் களை உருவாக்கிக்கொண்டிருந்த, பழம் சுவடிப்படிப்பைத் தூக்கி எறிந்து விட்டு, இந்த நாட்டுக்கு தொழிற் கல்வியைக் கொண்டுவந்த அரசு புரட்சித் தலைவர் அரசு "அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரந் தொழில் செய்திடுவீரே. பெரும்புகழுநுமக்கே யிசைக்கின்றேன் பிரமதேவக்கலையிங்கு நீரே" என்று பாடினாரே, பாரதியார் அதைப்போல இந்த உலகத்திலேயே படைக்கின்றவர்கள், அவர்களை உருவாக்க வேண்டுமென்று இன்றையதினம், தொலைநோக்கோடு, இந்த தமிழகம், இந்தியத் துணைக்கண்டத்திலேயே மட்டுமல்ல, எதிர்கால உலகத்திலே ஒரு இடத்தைப் பெற வேண்டுமென்று, சொல்லி, தொழில் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற ஓர் அரசு என்ற இதை பாராட்ட மனம் இல்லை.

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் பெறுவதைப் பற்றிச் சொன்னார்கள். எந்தக் கட்சியும் இதுவரை செய்யாத அந்தத் திட்டத்தை மனம் திறந்து பாராட்டக்கூடாதா? நான் பச்சையாகவே கேட்கிறேன். தமிழகத்திலே புரட்சித் தலைவர் அரசு ஒன்றுதான் 18 அக விலைப் படிகளை அளித்திருக்கிறது. புரட்சித் தலைவர் அரசுதான் இவ் வாறு செய்திருக்கிறது. இந்தத் தலைமைச் செயலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்த ஒரு காட்சியை அரசு ஊழியர்கள் மறந்திருக்க மாட்டார்கள். 18 அக விலைப்படியை மத்திய அரசு கொடுத்த காலத்திலேயிருந்து தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற தலைவர்கள், புரட்சித் தலைவர் 18 அகவிலைப்படி கொடுத்ததைப் பாராட்டக்கூடாதா? ஒரு அகவிலைப்படி பெற இந்தத் தலைமைச் செயலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்களே, அப்படி நிலைமை ஏற்படாமல், தருகிறாரே புரட்சித் தலைவர் அவர்கள். அள்ளி அள்ளித் தருகிறார்களே, அதைப் பாராட்டக்கூடாதா? தட்டுங்கள் திறக்கப் படும், கேளுங்கள் தரப்படும் என்றார் இயேசு. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தட்ட வேண்டியதில்லை. தட்டாமலேயே கிடைக்கும். கேட்காமலேயே தரப்படும். அவர் நமக்கு அள்ளித்தருகிற காட்சியை நாம் உருவாக்கி இருக்கிறோமே, அதைப் பாராட்டக்கூடாதா?

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1984 பிப்ரவரி 16

நடைபயணம் போகிறார்கள். அப்போது 'இது தொழிலாளர் விரோத அரசு' என்று சொல்கிறார்கள். என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. கட்டிடத் தொழிலாளர்களுக்கு பத்தாயிரம். நெசவுத் தொழிலாளிக்கு செத்து விட்டால் காப்புறுதி, கட்டுமரத்திலே செல்லும் மீனவருக்குப் பாதுகாப்பு. மரம் ஏறும் தொழிலாளிக்கு அவன் இறந்துவிட்டால், அவன் குடும்பத்திற்குக் காப்புறுதி. இப்படி காப்புறுதிகளை அள்ளித் தருகிற அரசு எந்த வகையிலே தொழிலாளர் விரோத அரசு என்று சொல்ல முடியும்? நான் பச்சையாகவே சொல்கிறேன். எந்த நிலையிலே இருந்து அவ்வாறு சொல்கிறார்கள் என்பதை நான் இங்கே சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

1974-இல் பஞ்சாலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டபோது, உடனடியாக வேலைநிறுத்தத்தைத் தடை செய்தது, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சரவர்கள் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். 1974-ல் பஞ்சாலைத் தொழிலாளிகள் கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்தபோது தடை செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டதோடு மட்டுமல்ல, அன்றையதினம் இருந்த காட்டூர் கோபாலை விட்டு அதை எப்படியெல்லாம் முறியடிக்க வேண்டும் என்பதற்கு என்னென்ன செய்தார்கள்? செய்தது மட்டுமல்ல வானொலியிலேகூட அதை நிறுத்த வேண்டுமென்று காட்டூர் கோபாலைப் பேசவைத்தவர்கள், தொழிலாளியைப் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்பதைத்தான் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நாடு பரிதாபத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. பாவம். அவர்களுக்குப் பக்கத்திலே தொழிலாளர்களுக்காகப் பாடுபடுபவர்கள். இந்த நாடு அவர்களை வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் எங்களைக் கேவலம் செய்கிறார்கள். இன்னொன்று சொல்ல வேண்டும். இந்தியநாட்டுக்கே, தொழிற் சங்கச் சட்டத்தில் முன்னோடியாக இருக்கிற அரசுதான் எங்கள் அரசு. இங்கேயிருந்து நாங்கள் தொழிற் சங்க விதிகளை பக்கத்து மாநிலம் என்று கூடச் சொல்ல மாட்டேன், வடக்கிலே ஆண்டு கொண்டிருக்கின்ற மேற்கு வங்க மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். தைரியமாகச் சொல்கிறேன். 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாக ஆலைகளிலே பணியாற்றுபவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்; அதற்குண்டான விதிகளை எங்களுக்கு அனுப்புங்கள் என்று மேற்கு வங்க அரசிலிருந்து தாக்கீது வந்தது, இங்கே இருந்து அதை ஏற்றுமதி செய்த தொழிலாளர் நல அரசுதான் புரட்சித் தலைவர் அரசு. 10 (பி) சட்டம் சட்டமன்றத்திலே வந்த நேரத்தில் அதை எதிர்க்கிறோம் என்று சொல்லி, வெளி நடப்பு செய்தவர்கள், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் நெல்லிக்குப்பம் ஆலையைத் திறக்க வேண்டுமென்று



1984 பிப்ரவரி 16.] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

மனு கொடுக்கிறார்களே, இவர்கள் எங்களைப்பற்றிப் பேசுகிறார்கள், எங்களை
எதிர்க்கிறார்கள். இந்தியாவுக்கே தொழிற் சட்டங்களை முன்னோடியாகத்
தந்திருக்கிற அரசு எங்கள் அரசு. நான் தொழிற் சங்கத் தலைவர்களைக்
கேட்கிறேன். எங்கள் தலைவர் ஒரு தீர்க்கமான முடிவெடுத்தார்கள்.
தொழிற்சாலைகளில் ஸ்டிரைக் என்றால், அங்கே வேலை செய்கிற தொழி
லாளர்களில் 60 விழுக்காடு தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டால், ஸடிரைக்
செய்யலாம். எங்களுடைய தலைவர் நாட்டுக்குத் தந்த தொழில் தத்துவம்
இது. இதுவரை எந்தத் தொழிற் சங்கவாதிகள் தொழிலாளர்களைக் கேட்டு,
60 விழுக்காடு உறுப்பினர்களை ஒத்துக் கொள்ள வைத்து, வேலை நீக்கம்
செய்திருக்கிறார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். ஏதாவது ஒன்றைச்
சொல்லுங்கள்: எங்கள் தலைவர் தொழிலாளர் பக்கம் நிற்கிறார்; தொழி
ளாளர்களைக் காப்பாற்றுகிறார் என்று சொன்னால் அதில் என்ன தவறு?

திரு. ப. மாணிக்கம்: 100 சதவிகிதத் தொழிலாளர்கள் ஒரு பேக்டரியில்
வேலை நிறுத்தத்தில் பங்குகொள்கிறார்கள் என்றால், 60 சதவிகிதம் என்னும்
போது, அதைவிடக் குறைவா, கூடுதலா?

திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத்
மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, முதல்வரவர்கள் சொன்னது, ஒரு தொழிற்
சாலையில் வேலைநிறுத்தம் செய்வது என்றால், தொழிலாளர்களுக்காகச்
செய்கிறார்கள். You should have the sanction of the workers to go
on strike. அதற்காக ரகசிய வாக்கெடுப்பு நடத்தி, ரகசிய வாக்கெடுப்பில் 60
சதவிகிதம் உறுப்பினர்கள் ஆதரவு தந்தால், வேலை நிறுத்தம் செய்யுங்கள்
என்பதுதான். அதைப்போல ஒப்பந்தம் ஏற்படும்போது, இந்த ஒப்பந்தத்தை
ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டால், ஏற்றுக்கொள்ள முடியாது என்று
தலைவர்கள் சொல்லி விடுகிறார்கள். அந்த ஒப்பந்தம் தொழிலாளர்
களுக்காக உள்ளதால், அதன் நகலை, டிராப்ட் அக்ரிமென்டை
தொழிலாளர்கள் முன்னால் வைத்து, ரகசிய வாக்கெடுப்பு நடத்தி, 60 சத
விகிதம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டால், அதில் கையெழுத்து போடுங்கள்;
இல்லையென்றால் வேண்டாம் என்று மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதி
பாசுவிடம் நேரில் சொன்னார்கள். அவர்களும், இது நல்ல யோசனை
என்று ஏற்றுக்கொண்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் உணர்ச்சிபூர்வமாகப் பேசுகிற நேரத்தில் இடையூறு செய்ய விரும்ப
வில்லை. 35 நிமிடங்களாகப் பேசுகிறார்கள். எனவே விரைவாக
முடித்தால் நல்லது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** தொழிலாளர் பக்கம் புரட்சித் தலைவர் இருக்கிறார் என்பதற்கு இன்னொரு சான்றைச் சொல்கிறேன். இன்றைய தினம் நடைப் பயணம் போய், அதிலே போடுகிற கோஷங்களை உற்றுப் பார்க்கும்போது, தொழிலாளர்களுக்கு விரோதமாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். எப்படி என்று சொன்னால், சென்னை நகரை எடுத்துக் கொள்வோம். இங்கே உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நகர ஈட்டுப்படி என்று இருந்தது. முன்னாள் முதல்வர் அவர்கள் அதை எடுத்துவிட்ட வரலாற்றை இந்த நாடு மறக்காது. ஆனால் அந்த நகர ஈட்டுப் படியை போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கொடுத்த வள்ளல்தான் புரட்சித் தலைவர் அவர்கள். எப்படித் தான் அவர்கள் கை கோர்த்துக்கொண்டு ஊர்வலம் போகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த அரசு தொழிலாளர்கள்

(பிற்பகல் 12-20)

பக்கம் நிரந்தரமாகவே இருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டுவரை, 7 ஆண்டுக்காலத்திலே 149.10 ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, தொழிலாளர்கள் போராட்டம் நடத்தாமலேயே தொழிலாளர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு இந்த ஆறு ஆண்டுக் காலத்தில் மட்டும் 618 ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே தொழிலாளர்கள் கேட்டுப் பெறுகின்ற நிலையிலே இந்த ஆட்சி இல்லை. அவர்கள் கேட்காமலேயே இந்த ஆட்சியே அவர்களுக்கு அள்ளித் தருகின்றது, தருகின்ற நிலையில் என்றைக்கும் இருக்கும் என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை நினைவுபடுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். 1969 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா ஒன்றைச் சொன்னார். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அரைத்த மாவையே திருப்பித் திருப்பி அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் அரைப்பதற்கு புதிதாக ஆள் கிடைக்க வில்லை அல்லது ஒன்றும் கிடைக்கவில்லை. இரண்டாவது, சரியாக, முறையாக அரைக்கத் தெரியவில்லை. இதை நான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருப்பதாக ஒரு புத்தகத்தில் படித்தேன். அதையே இங்கேயும் நினைவுபடுத்துகிறேன். வறட்சி என்று சொல்லிய உடனே ஊழல். வெள்ளமா—மழைபெய்து ஓய்வதற்கு முன்பே ஊழல், அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க் கட்சியினர் சொன்னால், அதில்





என்ன நியாயம் இருக்கிறது? அரசு சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், அதில் நியாயம் இருக்கிறது. அதை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் வேண்டுமென்றே குற்றம் சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? எங்கே ஊழல்? மழை பெய்து ஓயவில்லை, நிவாரண நடவடிக்கைகள் முடியவில்லை, அதற்குள்ளே எங்கே ஊழல் இருக்கிறது? எப்படி செக்கு மாடு சுற்றிச் சுற்றி வருமோ அதுபோல் ஊழல் ஊழல் என்று சொல்லி அரைத்த மாவையே திருப்பித் திருப்பி அரைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு புதிதாக அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அல்லது மாவையே ஒழுங்காக, சரியாக அரைக்க முடியவில்லை, தெரியவில்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை எதிர்க் கட்சியினருக்குத் தெரிவித்து இதுவரை நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது பேச வாய்ப் பளித்த தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் முன்மொழிந்து பேசியிருக்கிறார்கள். அதை நானும் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். கடந்த ஆண்டு கடும் வறட்சியினால் தமிழகம் பாதிக்கப்பட்டபோது, போர்க் கால அடிப்படையில் தமிழக அரசு தீவிரமாக இறங்கி செயல்பட்டு ஏறத்தாழ 114 கோடி ரூபாய் செலவிட்டு அந்த வறட்சியைப் போக்கியது. அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் மத்திய அரசு எவ்வித உதவியும் செய்வது கிடையாது என்று குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் வறட்சி ஏற்படுகிறபோதெல்லாம், வெள்ளம் ஏற்படுகிற போதெல்லாம் மத்திய அரசு ஏனோ தானோ என்று இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையிலே நிலைமை என்னவென்றால், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறமாதிரி, தமிழக அரசு சார்பாக 114 கோடி ரூபாய் இதற்காகச் செலவிட்டாலும் கூட, மத்திய அரசும் ஏறத்தாழ 68 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் படித்திருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இந்த நேரத்தில் இதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மத்திய அரசு மாநில அரசு கேட்கும்போதெல்லாம் தகுந்த நேரத்தில், தகுந்த உதவியைத் தந்துகொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கு

குறிப்பிடாமல் இருக்க முடியாது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் போது தமிழக அரசு செய்த சாதனையை யாரும் மறுக்க முடியாது. நாம் வறட்சி நிவாரணப் பணியில் ஒருமித்து ஈடுபட்டிருக்கிறபோது, திடீரென்று கடும் மழை பெய்தது. தென் மாநிலங்களான தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்கள், இன்னும் பல பகுதிகள் எல்லாம் கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தால்

(பிற்பகல் 12-30)

பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக அரசின் சார்பாக நமது முதலமைச்சர் அவர்களும், மத்திய அரசின் சார்பாக மத்திய இராணுவ அமைச்சர் அவர்களும் விமானம் மூலம் சுற்றிப் பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரண வேலைகளைத் துரிதப் படுத்தி நல்ல முறையில் சேவை செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடியும் வரையில், அவையின் அனுமதியோடு, அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**திரு. பி. முனுசாமி :** ஆனால் இங்கே பேசிய உறுப்பினர் திரு. மூத்து அவர்கள், மத்திய அரசு உதவியே செய்வது கிடையாது, கேட்ட போதெல்லாம் எந்த உதவியையும் செய்ய மத்திய அரசு மறுக்கிறது என்று சொன்னார்கள். எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய மாநாடு சமீபத்திலே கல்கத்தாவிலே நடந்தபோது, எங்கள் தலைவரும் நானும் சென்றபோது, நம்முடைய பிரதமர் அவர்களைச் சந்தித்து, தமிழ கத்தில் ஏற்பட்டிருக்கிற வெள்ள நிவாரணத்திற்கு அவசியம் உதவ வேண்டு மென்று கேட்டோம். அவர்கள் உடனடியாக தமிழக அரசு கேட்காத நிலையிலும், ஐந்து கோடி ரூபாய் முன்பணமாகத் தருகிறேன் என்று குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் மறந்து, இங்கே பேசுகிற உறுப்பினர் கள் "ஒன்றும் செய்வதில்லை" என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே அந்த அளவுக்கு வறட்சி ஏற்பட்டபோதும் சரி, வெள்ளம் வருகிறபோதும் சரி, மத்திய அரசு அவ்வப்போது உதவிக்கொண்டுதான் வருகிறது என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

தமிழக முதல்வர் அவர்கள் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது உளமாறப் பாராட்டியவர்களில் நானும் ஒருவன். இந்தத் திட்டம் இன்றைக்கு குழந்தைகளின் எடை கூடவும், உதவி செய்திருக் கிறது. திட்டம் நல்ல திட்டம்தான். கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள், ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் பெறக்கூடிய திட்டம் தான். யாரும் அதை மறுக்க முடியாது. இந்தத் திட்டத்தின் மூலமாக அரசுக்கு ஏறத்தாழ ரூ. 130 கோடி ரூபாய் செலவாகிறது. மேல் நாடுகளில்



உள்ள சத்துணவுத் திட்டங்களில் பால், ரொட்டி, முட்டை சத்துணவாகக் கொடுக்கிறார்கள். அதையே நாமும் கொடுத்தால் அரிசி, பருப்புச் செலவும் மிச்சமாகும். இதற்காக சமையல் கூடச் செலவுகளும் மிச்சமாகும். எனவே எனது இந்த ஆலோசனையை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக இப்போது செல வழிக்கும் பணத்தில் சில கோடி ரூபாய் மிச்சப்படும்.

உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் பேசுகிறபோது, கிருஷ்ணா நீர்த் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார். அது பாராட்டப்பட வேண்டிய திட்டம் தான். இதற்கு முன்பிருந்த அரசுகள் இந்த குடிநீர்ப் பஞ்சத்தைப் புறக்கணித்துவிட்டார்கள். குறிப்பாக சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை நீண்ட காலமாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ளபடியே நல்ல திட்டமிட வேண்டும். இந்தத் திட்டத்தைப் போல காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர திட்டம் போடப்பட்டாலும், அதை விட கிருஷ்ணா நீர்த் திட்டம் சிறந்தது என்பதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக பாராட்டுகிறேன். இப்போது கிருஷ்ணா நதித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீண்ட காலத்திற்குப் பிறகு இந்தத் திட்டம் வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக மொத்த முதலீட்டுத் தொகை 760 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த 760 கோடி ரூபாயில் தமிழகத்தினுடைய பங்கு 200 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையால் இதன் மூலமாக நிரந்தர மாகக் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரத்தைக் காண்பதற்கு ஏதுவாக இருக்கிறது. முக்கியமாக இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு காலம் கடந்தாலும் கூட எதிர் காலத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது ஒரு நல்ல திட்டம் என்ற முறையில் இதை நான் வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தில் முனைப்பாக வேலை செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அனல் மின்சாரத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் நீர் மின்சாரத்தை நம்பிப் பயன் இல்லை. அனல் மின்சாரத்தை நாம் அதிகப் படுத்த வேண்டும். எண்ணூர் மின்சாரத் திட்டம், தூத்துக்குடி மின்சாரத் திட்டம் இன்னும் நெய்வேலி மின்சாரத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன. அதையெல்லாம் விரிவுபடுத்தி மேலும் பல மின்சாரத் திட்டங்களை உருவாக்க வேண்டும். மத்திய அரசோடு பேசி அதற்கான நிலக்கரியை அதிகமாக வாங்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், இங்கே இருக்கின்ற கல்பாக்கம் அணு மின்சக்தித் திட்டத்தில் உற்பத்தியாகிற மின்சாரத்தை தமிழகம் முழுமையாகப் பெறுவதற்கு நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால்

இன்று பத்திரிகையிலே பார்க்கின்றபோது, கல்பாக்கத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கும் தரவேண்டுமென்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. நமக்கு இப்பொழுது அதிக மின்சாரம் தேவை. ஆகவே அதைப் பெறுவதற்கு நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அணு மின்சாரத் திட்டம் என்ற மற்றொரு திட்டத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செய்கின்ற பல திட்டங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. மைய அரசு முழுமையாகச் செய்திருக்கின்ற திட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக நடப்பாண்டில் நிலமற்ற கிராமத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்பதற்கு நடப்பு ஆண்டு 8 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டு 44 கோடி ரூபாயும் மத்திய அரசு அனுமதி வழங்கியதைப் பாராட்டுகிறேன். அந்தத் திட்டத்தை முழுமையாகச் செயலாற்றுவதற்கு தமிழக அரசு முனைப்பாக வேலை செய்ய வேண்டும். ஏனென்றால் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டமும் இருக்கிறது. இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நாடு பூராவும் இருக்கிறது. படித்த வாலிபர்கள் இன்றைக்கு வேலை இல்லாத நிலைமையில் ஆங்காங்கே திண்டாடுகின்ற நிலைமையையும் பார்க்கிறோம். மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக படித்த வேலையில்லாத வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் போக்குவரத்து நிறுவனங்களைப் பொறுத்தவரையில், நான் வெளி மாநிலங்களுக்குச் சென்றபோது, அங்கே மிகவும் பாழடைந்த நிலையில், ஓட்டை உடைசல்களாக ஊர்திகள் ஓடுகின்ற நிலைமையைப் பார்த்தேன். அதே சமயத்தில் தமிழகத்திலே ஓடுகின்ற அரசுப் போக்குவரத்து ஊர்திகளைப் பார்க்கின்றபோது, மிகவும் சுத்தமாக நல்ல நிலைமையில் பராமரிக்கப்பட்ட நிலைமையில் இங்கே இருக்கின்ற பேருந்துகள் இருக்கின்றன. இருப்பினும் அண்மையில் பத்திரிகையில் போக்குவரத்துப் சோழன் போக்குவரத்துக் கழகத்திலே பல ஊழல்கள் நடந்ததாகக் கேள்விப்படுகிறேன். அதேபோன்ற சில போக்குவரத்துக் கழகங்களில் சில ஊழல்கள் இருக்கின்றன. ஆகையால் அதைப் போக்குவதற்கு அரசு முனைப்பாக வேலை செய்ய வேண்டும்.

கிராம வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 17 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், அரிசன...





மக்களுக்கு 15 ஆயிரம் வீடுகள் வரை கட்டியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதிலே மேலும் முனைப்பாகச் செயலாற்றிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, பிரதமரின் 20 அம்சத் திட்டம். அந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களிலே உள்ளதைவிட, தமிழகத்திலே தமிழக அரசுதான் மிக முனைப்பாக நிறைவேற்றுவதாகச் சொல்கின்றார்கள். மத்திய அரசு அதிகாரிகளே கூடச் சொல்கின்றார்கள். அவர்கள் அதற்குச் சர்டிபிகேட் கொடுத்திருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் பல மாநிலங்களுக்குச் செல்கின்றபோது, பிரதமரின் 20 அம்சத் திட்டத்தை மற்ற மாநிலங்களைவிட தமிழக அரசு முனைப்பான முறையில் நிறைவேற்றுவதாகத் தெரிகிறது. நான் அங்கே அந்தத் திட்டம் எப்படி நடக்கிறது என்று கேட்டேன். உண்மையிலேயே காங்கிரஸ் மாநிலங்களைவிட அதிகமாக நம் மாநிலம் தான் செய்கின்றது. இந்தத் திட்டத்தில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்குவது—ஏழை ஆதி திராவிட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நிலப் பட்டா வழங்குவதற்கு இந்த 20 அம்சத் திட்டத்தில் வகை இருக்கின்றது. ஏழை விவசாய மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகளை வழங்குவதற்கு பிரதமரின் 20 அம்சத் திட்டம் வகை செய்கின்றது. அதை நிறைவேற்றுவதற்கு வேலை செய்ய வேண்டும். ஏனென்றால் அந்தத் திட்டத்தில் ஏறத்தாழ 4 அம்சங்கள் ஆதி திராவிட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்றே விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நெசவாளப் பெருமக்களுக்கும் சலுகைகள் கொடுக்க அந்த 20 அம்சத் திட்டத்திலே வழிவகை இருக்கின்றது. ஆகவே அந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு, இந்த 20 அம்சத் திட்டத்தைப் பயன்படுத்தி தமிழக அரசு வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, மதுவிலக்குத் திட்டம். இன்றைக்கு நாடு பூராவும் மோசமான நிலைமையிலிருக்கின்றது. பெரும்பான்மையான ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் அவர்கள் சொல்வதுபோன்று, சாராயக் கடைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏழை மக்கள் தான். ஆகவே அதை உடனடியாகக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் கொண்டு வந்த ஆளுநர் உரையின் மீதான தீர்மானத்தை ஒட்டி பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே இந்த மன்றத்திற்கு என்னை ஒரு உறுப்பினராக தேர்ந்தெடுத்ததற்கு முக்கிய காரணமாக இருந்த நமது அண்ணாவின் இதயக் கனி, பொன்மனச் செம்மல், திராவிடத்தின், தமிழக மக்களின் தலைமகன் தமிழ் நாட்டின் முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நலிந்த சமுதாயத்தின் சார்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்கள் சமுதாயத்தின் சார்பாகவும், மிகவும் பின்தங்கிய மக்களின் சார்பாகவும், குறிப்பாக சலவைத் தொழிலாளர்கள் சமுதாயத்தின் சார்பாகவும் புரட்சித் தலைவர் அவர்களுடைய பாதங்களைத் தொட்டு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகளில் உள்ளவர்கள் சிலர், தமிழகத்திலே நமது புரட்சித் தலைவர் அவர்கள் சாதியின் பெயராலே, எம்.எல்.சி. யாக, அமைச்சராகப் பதவிகளைப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்று ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அவையின் மூலமாக நான் சில பதில்களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற நலிந்த மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஒரு தேர்தலிலே நின்று வெற்றி பெற முடியாது என்ற காரணத்திற்காகவும், அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவும் 1952 ஆம் ஆண்டு பெருந் தலைவர் காமராசர் அவர்களிடம் சென்று நாங்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்தோம். மிகவும் பின்தங்கியோர் சமுதாயப் பட்டியலையும் தாழ்த்தப் பட்டோர் பட்டியலையும் சேர்க்க வேண்டும், இரண்டாவது மேலவையிலே உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்று பெருந்தலைவர் காமராசர் அவர் களைக் கேட்டோம். அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலில் சேர்ப்பது மத்திய அரசின் உரிமை என்று சொன்னார்கள். பிறகு சென்னை-தமிழ்நாடு சட்டமன்ற மேலவையிலே ஒரு உறுப்பினரைச் சேர்ப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று கூறினார்கள். அதே நேரத்திலே கடலூரில் இருந்து திரு. எம். எத்திராஜுலு என்பவருக்கு மேலவை உறுப்பினராகப் பதவி கொடுத்தார்கள். அதன்பிறகு அவர்கள் 18 ஆண்டுக் காலம் இருந்தார்கள். அவர் இறந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எனக்கு இந்த மேலவையிலே ஒரு உறுப்பினராகப் பதவி கொடுத்தார்கள். ஆனால் இந்தப் பதவிகள் எல்லாம் ஜாதியின் அடிப்படையிலே கொடுப்பதில்லை என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்திலே நலிந்த மக்களுக்காக அவர்களது கருத்துக்களை எடுத்துக்



கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற கருத்திலேதான் இந்த நலிந்த, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்குப் பதவிகள் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி ராபின்சன் பூங்காவிலே அவர்கள் இயக்கத்தைத் துவக்கி வைத்துப் பேசும்போது, "நலிந்த மக்களுக்காக இந்த இயக்கம் பாடுபடும். நீங்கள் எல்லாம் எந்தவிதமான கவலையும்பட வேண்டாம்," என்று கூறினார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் பேசிய கூட்டங்களில் எல்லாம் அந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். காரணம் தமிழகத்திலே ஜாதியின் அடிப்படையிலே, வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படையிலே மக்கள் சமுதாயம் இருக்கிறதென்பதை அவர்கள் தெரிந்துகொண்டுதான், இந்த நலிந்த மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று அந்தக் காலத்திலேயே கருதினார்கள். இன்று நமது புரட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் திட்டங்களை, கொள்கைகளை நிறைவேற்றும் வகையில்தான் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்தத் திட்டங்களையெல்லாம் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் ஏற்று, நன்றிகூறக்கூடிய வகையிலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இங்கே பேசும்போது, ஆளுநர் உரையிலே இருக்கின்ற கட்டிடத் தொழிலாளர்கள் பத்தாயிரம் பெறுவதைப்பற்றியெல்லாம் ஒன்றுமே பேசவில்லை. அதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வள்ளிமுத்து அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் தோழர்கள் ரஷ்யாவில் 15,000 ரூபாய் சம்பளம் வாங்குபவர்களைத்தான் தொழிலாளியாக நினைக்கின்றார்கள். இங்குள்ள தொழிலாளர்களைத் தொழிலாளிகளாக ஏற்றுக்கொள்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நான் மே தின விழாவைக் கொண்டாடியவன். அண்ணாவை வைத்துக்கொண்டு கொண்டாடியிருக்கிறேன். அது மட்டுமல்ல, நமது தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்களை அந்தக் காலத்திலேயே அழைத்து மே தின விழாவினை நடத்தியுள்ளேன். திரு. ஜீவானந்தம் அவர்களை, திரு. சக்கரை செட்டியார் அவர்களை, இதுபோன்ற தொழிலாளர் தலைவர்களை அழைத்து மே தின விழாவைக் கொண்டாடியிருக்கிறேன். தொழிலாளர்களுடைய கருத்தை எல்லாம் மக்களிடத்திலே பரவச் செய்திருக்கிறேன்.

ஒரு தடவை ஐலண்ட் கிரவுண்டிலே திரு. வி. க. அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மே தின விழாவில் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்திலே என் பக்கத்திலே நின்றுகொண்டிருந்த ஒரு 'தோழரை'க் கேட்டேன், "அண்ணா பேசுவதைக் கேட்டீர்களா?" என்று, '[illegible]

நகரத்திலே நடந்த போராட்டத்தை எல்லாம் கூறுகிறார்' என்று சொன்னேன். அப்போது அவர் கூறினார்: "ரஷ்யாவில் இருக்கின்ற தலைவர்கள் இதைவிட நல்லமுறையிலே பேசுவார்கள்" என்று கூறினார். 'ரஷ்யாவிலே இருக்கின்ற தலைவர் பேச்சைக் கேட்பதற்கு தமிழகத்திலே ஆள் இல்லை' என்று கூறினேன். காரணம் 'அவர்கள் ரஷ்ய மொழியில்தான் பேசுவார்கள், ஆகவே உங்கள் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்திலே வளராது' என்று அந்தக் காலத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவேதான் அந்த நிலைமை இன்றும் தமிழகத்திலே இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கட்டிடத் தொழிலாளி இறந்தால், பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். நேற்று மாலையிலே கூட ஒரு கட்டிடத் தொழிலாளி விழுந்து இறந்துவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அவன் தொழிலாளி இல்லையா? ஏன் இவைகளைப் பற்றி நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு மனம் வரவில்லை என்பதை வருத்தத்தோடு கேட்டுக்கொள்கிறேன். கட்டிடத் தொழிலாளர்கள் பல ஆண்டுக் காலமாக அந்தக் கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நிறைவேற்றியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். கட்டிடத் தொழிலாளர்கள் சார்பாக - நான் கட்டிடத் தொழிலாளர் சங்கக் காப்பாளராக இருக்கிறேன் - என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் உதவி வழங்க இப்போது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் மூலமாக லட்சக்கணக்கான மக்கள் பலனடைந்திருக்கிறார்கள். தமிழகத்திலே 25 லட்சம் தொழிலாளர்கள், சாதாரண நலிந்த மக்கள், சாதாரண பூ வியாபாரம் செய்பவர்கள், ஆப்பக்கடை வைத்திருப்பவர்கள், காய்கறி வியாபாரம் செய்பவர்கள், இப்படிப்பட்ட ஏழைகள், ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம், பலன் அடைந்திருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் பேசுவதற்குக்கூட எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கு மனம் வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டங்களையெல்லாம் நல்லமுறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாக, புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்தபடியாக சத்துணவுத் திட்டம். சத்துணவுத் திட்டம் மிக நல்ல திட்டம். கிராமங்களிலே இருக்கிற ஏறக்குறைய 40,000 சலவைத் தொழிலாளர்களின் குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பலனடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்து மைல்



தூரத்திற்கு துணிகளை எடுத்துச் சென்று, சலவை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களின் குழந்தைகள் அனாதைகளாக இருந்தார்கள். இப்போது அந்த நிலை இல்லை. அந்தக் குழந்தைகள் முதலமைச்சருடைய குழந்தைகள் சத்துணவுத் திட்ட மையங்களுக்குப் போய் சத்துணவு சாப்பிட்டுவிட்டு, பெற்றோர்கள் வீடு திரும்பிய பிறகு வீடுகளுக்கு வருகிறார்கள். எனக்கு ஏறக்குறைய 100 கடிதங்கள் வந்திருக்கின்றன. "இந்தச் சத்துணவுத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்கக்கூடாது, அது இருக்க வேண்டும், எங்களுடைய குழந்தைகள் நல்ல முறையிலே வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை ஆரம்பத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். இடையிலே பாராட்ட அவர்களுக்கு மனம் வரவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. அவர்கள் மக்களிடையே நல்ல அடி வாங்குவார்கள் என்பதை இந்த சபையின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். நலிந்த சமுதாய மக்களுக்கு சென்னை நகரத்திலே ஏறக்குறைய 13, 14 துறைகள் இருக்கின்றன. ஆனால் அந்தச் சலவைத் துறைகள் எல்லாம் சாக்கடைகள், கக்கூஸ்களாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கேட்க திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாரும் இல்லை என்பது வருந்தத்தக்க விஷயம்.

**திரு. சி. ஆர். கோலப்பா:** அந்தச் சலவைத் துறைகளை நல்லமுறையில் பாராமரிக்க வேண்டும். இது குறித்து ஆணையர் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். நகரசபையில் உள்ள அதிகாரிகள் ஒவ்வொருவரும் நல்ல முறையிலே பணியாற்றுவதில்லை. அவர்களுக்கு லாபம் கிடைக்கக்கூடிய தொழிலைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். சலவைத் தொழிலாளி ஒரு நயா பைசாகூட கொடுக்க மாட்டான். அதனால் அதைப் புறக்கணிக்கிறார்கள். சலவைத் துறைகளை நல்ல முறையிலே கவனிக்க, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை; 17—2—1984 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-53)

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | 233—255 |
| 2. தகவல் கோரல்—பெருமழையிலும் மேலவையை நடத்திக் கொண்டிருப்பது பற்றி .. .. .. | 255 |
| 3. கவன ஈர்ப்பு—அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிப்பது குறித்து .. .. .. .. | 255—257 |
| 4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி | 257—325 |
| 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 324 |



143883

D

/21.32/N46

N84.203.1-4

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பரிசுச் சீட்டுத் தொகையை எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. வேறு மாநிலங்களில் ரூபாய் ஒரு கோடி, ஒன்றரை கோடி, இரண்டு கோடி என்று பல்வேறு வகைகளில் பரிசுச் சீட்டுகளை வெளியிட்டிருப்பதால், தமிழகப் பரிசுச் சீட்டு பரிசுத் தொகையையும் ஓரளவுக்கு அதிகப்படுத்தி சிறப்புக் குலுக்கல் மூலம் அப்படிச் செய்யலாமா, அந்த வகையில் போட்டி போடக் கூடிய அளவுக்கு ஆக்கலாமா என்பது பற்றிய செயற் குறிப்பு இருக்கிறது. ஆனால் இன்னும் இதுபற்றி முடிவு செய்யவில்லை. வெளிமாநிலங்களிலிருந்து இங்கு போலி பரிசுச் சீட்டுகள் வருவதாக அரசுக்குத் தகவல் இல்லை. அப்படிப்பட்ட புகார்களை முழு விவரங்களுடன் அந்தந்தப் பரிசுச் சீட்டுக்குரியவர்கள் தருகின்றபோது, அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழ்நாடு பரிசுச் சீட்டுகளை அச்சிடுவதற்கென்று தனியாக ஒரு அச்சகம் நிறுவுவதுபற்றி அரசு பரிசீலிப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அப்படி என்றால், நிரந்தரமாகப் பரிசுச் சீட்டை நடத்திவிடுவது என்று அரசு முடிவுக்கு வந்துவிட்டதா? பரிசுச் சீட்டு விற்பனையாவதன்மூலம் மக்களுடைய உழைக்கும் மனப்பான்மை குறைந்து, பரிசுச் சீட்டை வாங்கி பரிசு விழாமல் அவர்கள் ஏமாறுகிற நிலை இருக்கிறது. தவிரவும், அடித்தளத்து மக்களின் வருவாய் முழுவதும் இந்தப் பரிசுச் சீட்டை வாங்குவதற்காகவே போய்விடுகிறது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? பிற மாநிலங்களோடு கலந்து பேசி இந்தப் பரிசுச் சீட்டுகளை ஒழிப்பதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பரிசுச் சீட்டை ஒழிக்க வேண்டுமென்றால், அகில இந்திய ரீதியில் அது ஒழிக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களைப் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வார்கள். ஆனாலும் இதற்கான நடவடிக்கையை மத்திய அரசுதான் எடுக்க வேண்டும். பிற மாநிலங்களில் எல்லாம் பரிசுச்சீட்டை நடத்த விட்டு விட்டு, நாம் மட்டும் நிறுத்துவது என்றால், நிலைமை என்னவாகும் என்பதையும் யோசித்துப்பார்க்க வேண்டும். ஏற்கெனவே மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனையாவதற்கு ஏற்ற இடமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்நிலையில் தமிழக அரசுப் பரிசுச் சீட்டையும் நாம் நிறுத்துவோம் என்றால், மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுக்களுக்கு இன்னும் அதிக வாய்ப்பு கிடைப்பது மாதிரி ஆகிவிடும். ஆனால் மத்திய அரசும் இதுகுறித்து பரிசீலித்து வருவதாகக்



கேள்விப்பட்டேன். அறவே நிறுத்தாமல் இப்போது பரிசுத் தொகை ரூ. 1 கோடி, ரூ. 2 கோடி என்று கொடுக்கிறார்களே அம்மாதிரி இல்லாமல் உச்ச வரம்பு வைத்து ரூ. 5 இலட்சம், ரூபாய் 10 இலட்சம் என்கிற அளவுக்குக் டுப்பதற்குரிய வழி வகையை ஆராய்ந்து வருவதாக, கருத்து இருப்பதாகக் வியப்பட்டேன். ஆனால், அதுபற்றி முழு விவரம் எனக்குத் தெரிய லை.

இங்கே தனியாக ஒரு அச்சுக்கூடம் வைக்க வேண்டுமென்று சொல்லுவதற் காரணமே, ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்திலே கிட்டத்தட்ட 8 கோடி பரிசுச் டுக்களை நாம் அச்சடிப்பதுதான். அரசாங்க அச்சகத்திலே அச்சடிப்ப ல் பல வண்ணங்களில் அச்சடிக்க வாய்ப்பு வசதிகள் இல்லை. நாம் இரண்டே ண்ணங்களில் தான் அச்சடிக்கிறோம். மற்ற மாநிலத்தவர்கள் நான்கைந்து ண்ணங்களில் அச்சடிக்கிறார்கள். இதிலே வருகின்ற வருவாய், மற்றவற்றை க்கிடும்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டாலும் கூட தற்கென்று தனியாக ஒரு அச்சகம் வைத்தால், அரசு அச்சகத்தில் வேலைப் ளு இல்லாமல் தவிர்க்க வாய்ப்பு ஏற்படும். பரிசுச் சீட்டுக்களை அகில ந்திய ரீதியில் நிறுத்தும் சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்த அச்சகத்தை வறு வழியில் பயன்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. க. எஸ். வெங்கடேசன் :** பரிசுச் சீட்டுக்களின் மீது வரி விதிக்கின்ற த்தேசம் அரசுக்கு உள்ளதா? உள்ளது என்றால் அப்படி வரி விதிப்பதன் நாக்கம், பரிசுச் சீட்டுக்களின் மேல் மக்களுக்கு உள்ள மோகத்தைக் குறைப் பதற்காகவா அல்லது அரசுக்கு நிதி சேர்ப்பதற்காகவா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வரி விதிப்பதன் நோக்கமே, ஓரளவிற்கு பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுக்களை கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான். முதன் முதலில் பரிசுச் சீட்டுக்களைத் துவங்கியது தமிழகம் தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. பிற நாடுகளில் இந்த முறை இருக்கிறது, வருமானத்தைப் பெருக்க வழியாக இருக்கும் என்று கருதி, 1967 ஆம் ஆண்டில் இதை நுழைத்தார்கள். அதற்குப் பிறகு வேறு மாநிலங்களில் இந்த முறையைக் கடைப் பிடித்ததன் மூலம் அதிகமாக வெளியாகத் தொடங்கிவிட்டன. நம்முடைய அனுமதி இல்லாமல் விற்ற, பிற மாநிலப் பரிசு சீட்டுக்களை நாம் தடுத்து நிறுத்தியபோது, அவர் கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் 'ஸ்டே' வாங்கி மறுபடியும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பம்பாயில் கூட அங்குள்ள அரசு மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுக்கள் அந்த மாநிலத்திற்குள் வரக்கூடாது என்று தடுத்து நிறுத்

தியது. அவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கி அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே பிற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுக்களைக் கட்டுப்படுத்த இது உதவும். அதே சமயத்தில் பெருந் தொகையெல்லாம் நம்முடைய மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்குப் போகிறது என்ற நிலைமை ஏற்படும்போது, அதைக் கட்டுப்படுத்தவும், நம்முடைய அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடும் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்தும் இந்த விற்பனை வரி போடப்படுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சிங்கப்பூர் பரிசுச் சீட்டுக்களை மலேசியாவில் விளம்பரப்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. அந்த அளவிற்குக் கட்டுப்பாடு விதித்து வேறு இடத்து சீட்டுக்கள் அங்கே வராமல் தடுத்து நிறுத்தியிருக்கிறது. அதே போல பிற மாநிலப் பரிசுச் சீட்டுக்களுக்கான விளம்பரங்களைத் தடுக்க ஏதாவது சட்டத்தில் இடமிருக்கிறதா? இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகின்றன என்று சொல்லுகிறார்கள். அப்படி அதிகமாக லாட்டரி விற்பனையாவதற்குக் காரணம் தமிழர்கள் நிலை லாட்டரி அடிக்கிறதா? அவர்கள் உழைப்பில் நம்பிக்கையை விட்டுவிட்டு இந்த அதிர்ஷ்டத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மலேசியா தனி நாடு. சிங்கப்பூர் வேறு ஒரு நாடு. ஆகவே அந்த நாடு அதைத் தடுக்க முடியும். நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், அந்தந்த மாநிலத்தினுடைய சீட்டுக்களை அந்தந்த மாநிலத்திலேயே விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே, நம்மோடு உடன்பாட்டுக்கு வராத மாநிலத்தின் பரிசுச் சீட்டுக்களைத் தடுத்துப் பார்த்தோம். அது இப்போது உச்சநீதிமன்றத்திலே இருக்கிறது. மகாராஷ்டிர மாநிலமும் அதற்கு முயன்று பார்த்தது. ஆனால் சரிப்பட்டு வரவில்லை. பரிசுச் சீட்டுக்களைத் தடுக்கும்போது என்ன நிலை ஏற்படுகிறதோ அதே நிலைதான் விளம்பரத்தைத் தடுக்கும்போதும் ஏற்படும். இந்தியா ஒரே நாடாக இருப்பதால் விளம்பரப்படுத்தக் கூடாது என்று தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அதை முறைப்படுத்த, கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது. இங்கே அதிகமாகப் பரிசுச் சீட்டுக்கள் விற்பதற்குக் காரணம் நம்மவர்கள் ராசி பலனில் நம்பிக்கை வைத்திருப்பதுதான். இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில் நம்முடைய மாநிலத்துப் பத்திரிகைகளில்தான் வாரம் தவறாமல், நாள் தவறாமல் ஏடு தவறாமல் ராசி பலன்களைப் பக்கம் பக்கமாகப் போடுகிறார்கள். ஒவ்வொருவரும் ராசி பார்க்க வேண்டிய





அவசியத்தைக் கூடுமானவரையில் நிறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு தங்களுடைய அறிவு, ஆற்றல், உழைப்பு ஆகியவற்றில் நம்பிக்கை ஏற்படக்கூடும்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** பரிசுச் சீட்டுக்களின் மூலம் பல ஏழைகள் இலட்சாதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு தொடர்ந்து பரிசுச் சீட்டுக்களை நடத்தி தமிழகத்திலே உள்ள பல ஏழைகளை இலட்சாதிபதிகளாக ஆக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல ஏழைகள் இலட்சாதிபதிகள் ஆவதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கூட இலட்சாதிபதிகளாக ஆக்க விரும்புகிறேன். அதன் மூலம் சம்பளம் கொடுக்காமல் நிறுத்த வழி ஏற்படக்கூடும். இவர் என்று சொல்லுவது கூட பொருந்தாது. ஏனெனில், ஒருவர்-இருவர் பெயரைப் போடக்கூடிய அளவிற்குத்தான் வருகிறது. இலட்சக்கணக்கான மக்கள் வாங்கிய பிறகு ஒருவர், இருவருக்குத்தான் முதல் பரிசு விழுகிறது. இதிலே 35 சதவிகிதம் மத்திய அரசு வருமான வரியாக எடுத்துக்கொள்கிறது. மேலும் ஒரு 20 சதவிகிதம் வரியாகப் போட்டு 55 சதவிகிதம் என்று ஆக்கி அதிலே 35 சதவிகிதத்தை அவர்கள் எடுத்துக் கொண்டு 20 சதவிகிதத்தை நமக்குக் கொடுத்தால் நல்லது. இந்த யோசனையை சமயம் வரும்போது சொல்லலாம் என்றிருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

## *Kesari Dhal.*

....

*2 *Q.*—Thiru M. SANKARALINGAM (on behalf of Thiru S. J. Sadiq Pasha) : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government are aware of the import of 'Kesari Dhal' in Tamil Nadu from other States; and

(*b*) if so, whether the Government will come forward to ban the sale of Kesari Dhal in Tamil Nadu, in view of the reported health hazard ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1963-ம் ஆண்டே அரசு தடை செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

[1984 பிப்ரவரி 17

தியது. அவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கி அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே பிற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுக்களைக் கட்டுப்படுத்த இது உதவும். அதே சமயத்தில் பெருந் தொகையெல்லாம் நம்முடைய மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்குப் போகிறது என்ற நிலைமை ஏற்படும்போது, அதைக் கட்டுப்படுத்தவும், நம்முடைய அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடும் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்தும் இந்த விற்பனை வரி போடப்படுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சிங்கப்பூர் பரிசுச் சீட்டுக்களை மலேசியாவில் விளம்பரப்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. அந்த அளவிற்குக் கட்டுப்பாடு விதித்து வேறு இடத்து சீட்டுக்கள் வாங்க முடியாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறது. அதே போல பிற மாநிலப் பரிசுச் சீட்டுக்களுக்கான விளம்பரங்களைத் தடுக்க ஏதாவது சட்டத்தில் இடமிருக்கிறதா? இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகின்றன என்று சொல்லுகிறார்கள். அப்படி அதிகமாக வாங்குவதற்கு என்ன காரணம்? தமிழர்கள் நிலை லாட்டரி அடிக்கிறதா? அவர்கள் உழைப்பில் நம்பிக்கையை விட்டுவிட்டு இந்த அதிர்ஷ்டத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மலேசியா தனி நாடு. சிங்கப்பூர் வேறு ஒரு நாடு. ஆகவே அந்த நாடு அதைத் தடுக்க முடியும். நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், அந்தந்த மாநிலத்தினுடைய சீட்டுக்களை அந்தந்த மாநிலத்திலேயே விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே, நம்மோடு உடன்பாட்டிற்கு வராத மாநிலத்தின் பரிசுச் சீட்டுக்களைத் தடுத்துப் பார்த்தோம். அது இப்போது உச்சநீதிமன்றத்திலே இருக்கிறது. மகாராஷ்டிர மாநிலமும் அதற்கு முயன்று பார்த்தது. ஆனால் சரிப்பட்டு வரவில்லை. பரிசுச் சீட்டுக்களைத் தடுக்கும்போது என்ன நிலை ஏற்படுகிறதோ அதே நிலைதான் விளம்பரத்தைத் தடுக்கும்போதும் ஏற்படும். இந்தியா முழுவதும் ஒரு நாடாக இருப்பதால் விளம்பரப்படுத்தக் கூடாது என்று தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அதை முறைப்படுத்த, கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது. இங்கே அதிகமாகப் பரிசுச் சீட்டுக்கள் விற்பதற்குக் காரணம் நம்மவர்கள் ராசி பலனில் நம்பிக்கை வைத்திருப்பதுதான். இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில் நம்முடைய மாநிலத்துப் பத்திரிகைகளில்தான் வாரம் தவறாமல், நாள் தவறாமல் ஏடு தவறாமல் ராசி பலன்களைப் பக்கம் பக்கமாகப் போடுகிறார்கள். ஒவ்வொருவரும் ராசி பார்க்க வேண்டிய



1984 பிப்ரவரி 17]

அவசியத்தைக் கூடுமானவரையில் நிறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு தங்களுடைய அறிவு, ஆற்றல், உழைப்பு ஆகியவற்றில் நம்பிக்கை ஏற்படக்கூடும்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** பரிசுச் சீட்டுக்களின் மூலம் பல ஏழைகள் இலட்சாதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு தொடர்ந்து பரிசுச் சீட்டுக்களை நடத்தி தமிழகத்திலே உள்ள பல ஏழைகளை இலட்சாதிபதிகளாக ஆக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல ஏழைகள் இலட்சாதிபதிகள் ஆவதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கூட இலட்சாதிபதிகளாக ஆக்க விரும்புகிறேன். அதன் மூலம் சம்பளம் கொடுக்காமல் நிறுத்த வழி தேடக்கூடும். சிலர் என்று சொல்லுவது கூட பொருந்தாது. மிகமிகச் சிலர், ஒருவர்-இருவர் பேரைப் போடக்கூடிய அளவிற்குத்தான் வருகிறது. இலட்சக்கணக்கான மக்கள் வாங்கிய பிறகு ஒருவர், இருவருக்கு மட்டும் முதல் பரிசு விழுகிறது. இதிலே 35 சதவிகிதம் மத்திய அரசு வருமான வரியாக எடுத்துக்கொள்கிறது. மேலும் ஒரு 20 சதவிகிதம் வரியாகப் போட்டு 55 சதவிகிதம் என்று ஆக்கி அதிலே 35 சதவிகிதத்தை அவர்கள் எடுத்துக் கொண்டு 20 சதவிகிதத்தை நமக்குக் கொடுத்தால் நல்லது. இந்த யோசனையை சமயம் வரும்போது சொல்லலாம் என்றிருக்கிறோம்.

(மூற்பகல் 9-40)

## Kesari Dhal.

*2 Q.—Thiru M. SANKARALINGAM (on behalf of Thiru S. J. Sadiq Pasha): Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether the Government are aware of the import of 'Kesari Dhal' in Tamil Nadu from other States; and

(b) if so, whether the Government will come forward to ban the sale of Kesari Dhal in Tamil Nadu, in view of the reported health hazard?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1963-ம் ஆண்டே அரசு தடை செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தார்கள். அதற்குப் பிறகு கடந்த முறை இதே திரு. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் எங்களுடைய கட்சிக்காரராக அல்ல, கட்சியைச் சாராத ஒரு சுயேச்சை உறுப்பினராக இருந்தார்கள். ஆகவே தலைவராக வருகிறவர் எங்கள் கட்சியைச் சார்ந்தவராகவும், துணைத் தலைவராக வருகிறவர் எதிர்க் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்க வேண்டுமென்ற மரபு இருந்தாலும் இந்த நாட்டுக்காக, ஜனநாயகத்திற்காக ஒரு புதிய மரபை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். இந்த முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பியபோது, இந்த அவையின் முன்னவர் என்கிற முறையிலே நான் முன்மொழிந்ததை இந்த அவையினுடைய எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வழிமொழிந்து ஒரு புதிய மரபை, புதிய சிறப்பை, சிறப்புமிக்க வரலாற்றை உருவாக்கியதற்காக நான் இந்த அவையின் சார்பிலேயும், இந்த அரசின் சார்பிலேயும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் நேற்றையதினம் சற்று முன்னாலேயே வந்திருந்தால், அவரிடத்தில் ஒரு விண்ணப்பத்தைக் கொடுக்கலாமென்று இருந்தேன். அவர்கள் காலதாமதமாக வந்தார்கள். சுயேச்சை உறுப்பினராக இன்றைக்கு அவையில் இடம் பெற்றிருந்தாலும், எங்களுடைய உள்ளங்களில் இடம் பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜனார்த்தனம் அவர்களைக் கேட்டபோது, அவர்களே நம்முடைய மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் பெயரை முன்மொழிந்தார்கள். அப்படிப்பட்ட உணர்வை அவர்கள் வைத்துக்கொண்டிருப்பதற்கு நான் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகச் சிறந்த உறுப்பினராகப் பணியாற்றிய, அனுபவம் பெற்ற ஒரு நல்ல சட்டமன்ற, பாராளுமன்ற அறிவாற்றல் பெற்றவரை இன்றைக்கு நாம் துணைத் தலைவராகப் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுடைய தலைமையிலே பணியாற்றுவதற்கு, உங்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றுவதற்கு அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மன்றம் மீண்டும் ஒரு முறை இந்த அவையின் மரபிற்கேற்ப தங்களுடைய தலைமையிலே பெருமையான ஒரு நிகழ்ச்சியைச் செய்து வரலாறு படைத்திருக்கிறது. மாண்புமிகு



அவை முன்னவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், இந்த அவை யினுடைய ஏகோபித்த உணர்வோடு, இந்த அவையிலே இடம் பெற்றிருக் கின்ற அத்தனை அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் கலந்து முடிவு எடுக்கின்ற அளவில் ஒரு ஜனநாயகப் பாங்கினை மீண்டும் செய்து காட்டி உறுதிப்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நெடிய அனுபவத்தோடு மீண்டும் ஒருமுறை, இரண்டாவது முறை யாக இந்த அவையினுடைய துணைத் தலைவராகப் பதவி ஏற்கின்றார்கள்.

(முற்பகல் 10-00)

அவருக்கு நீண்ட அனுபவமும் நல்ல ஆங்கில அறிவும் உண்டு. தமிழில் அவருக் கிருக்கின்ற அறிவையும் புலமையையும், கடந்த முறை அவர் இந்த அவையை நடத்திச் செல்வதில் இருந்த பாங்கையும் கண்டோம். அவர் கடந்த முறை இந்த அவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இருந்த நிலையிலிருந்து இப்போது ஒரு மாற்றத்தைக் காண முடிகிறது. இந்த இடைக்காலத்தில் எந்த அளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன என்பதற்கு மேலாக, நாமும்கூட ஒருவரையொருவர் புரிந்து கொண்டிருக் கிறோம். நெருங்கி வந்திருக்கிறோம் என்பதற்கும் மேலாக, இந்த அவையின் கண்ணியத்தை, மதிப்பை, மரியாதையை உயர்த்துவதில் அத்தனை பேருக்கும் பங்கு இருக்கிறது என்ற நிலையில் செயல்பட்டு வருவதைக் காண்கிறோம். இந்த அவையின் நீண்ட பாரம்பரியம், மிகப் பெரிய வரலாற்றை உள்ளடக்கியிருக்கிறது. ஒரு பெரிய வளர்ச்சியைக் காண முடிகிறது. ஜனநாயக அமைப்புகளில் காலத்திற்கேற்ற மாற்றத்தைக் காண் பதைப் போலவே, இந்த மேலவையிலிருந்து சாதாரணமாக கடந்த காலங் களில் ஓரிருவர்தான் அமைச்சர் பொறுப்பை ஏற்பார்கள் ; ஆனால் இன்றைக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஒன்றிரண்டு பேர் என்ற நிலை மாறி, இந்த அவை உறுப்பினர்களில் பலர் அமைச்சரவையில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, ஆட்சியை நடத்துவதில் இந்த அவைக்குக்கூட பெரும் பொறுப்புண்டு என்பதை வரலாறு நிரூபித்துக்கொண்டிருக்கிறது. அதே அளவில்தான் இந்த அவையின் வாதங்களும் இருக்கின்றன. எவ்வளவுதான் கொள்கை வேறுபாடுகளும் மாச்சரியங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், இந்த அவையின் உயர்ந்த நிலைமைகள், அந்த வாதங்களில் இருக்கிற வேகம், விவேகம் அத்தனையும் கோபத்தினாலேயோ, ஆத்திரத்தினாலேயோ மறைந்துபோகாமல், வெளியிலிருந்து காண்பவர்கள் இந்த அவையின் விவா தங்களை ஆய்ந்தறிந்து பார்த்தாக வேண்டும், படித்தாக வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை எழுப்புகிற அளவுக்கு இந்த அவையின் நடவடிக்கைகள் அமைந்து வருவதன் காரணமாக, நாட்டு மக்களின் உள்ளத்

[1984 பிப்ரவரி 17

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, அந்த ஆணை பிறப்பித்த பிறகும் இப்போதுதான் வெளி மாநிலங்களிலிருந்து கேசரிப் பருப்பு வருவதாக வும், அதை உணவுப் பண்டங்களிலே பயன்படுத்துகிறபோது மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதாகவும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அந்தத் தடையை அமல்படுத்துவதற்கு அரசு என்ன நடைமுறைகளை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கேசரிப் பருப்பு என்பது நச்சுத் தன்மை கொண்டது என்ற விஞ்ஞானப் பூர்வமான அறிக்கையின் அடிப்படையிலே, இப்பருப்பை விற்பனை செய்வதோ, விற பனைக்காக சேமித்து வைப்பதோ, அதைப் பயன்படுத்துவதோ குற்றம் என்ப தாக 9-7-1963-லே சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கேசரிப் பருப்பை இங்கே கொண்டுவந்து பிற பருப்புகளோடு கலப்படம் செய்து விற்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வருகின்றபோது. அந்த நிலைமை கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். சில காலத் துக்கு முன்னால் கூட பிற மாநிலத்திலிருந்து 1,571 மூட்டைகள் கேசரிப் பருப்பு இங்குள்ள வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளது. என்ற செய்தி வந்த உடனே, அதுபற்றி விசாரித்து, அவர்கள் பிற பருப்புக ளோடு கலப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள் என்பது கண்டுபிடிக்கப் பட்டு, அந்தப் பருப்புகள் மீண்டும் அந்த மாநிலத்திற்குத் திருப்பி அனுப்பப் பட்டது மட்டுமல்லாமல், அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று, கலப்படம் செய்வதாக அண்மையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அதைத் தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி, குறிப்பிட்ட அதிகாரிகள் ஆணையிடப் பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கின்ற கேசரிப் பருப்பு வேறு மாநிலங்களிலிருந்து தமிழ் மாநிலத் திற்கு வருவது தடைசெய்யப்படுமானால், அது கள்ளத்தனமாக வருகிறது. உடல் நலத்திற்குக் கேடுவிளைவிக்கும் இந்தக் கேசரிப் பருப்பைப் பயிரிடக் கூடாது என்று ஏன் மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யக்கூடாது? அது விஷயமாக மாநில அரசு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நம் முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, தடை விதித்திருக்கிறோம். ஆகவே உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, நச்சுத் தன்மை கொண்டது என்று



1984 பிப்ரவரி 17]

விஞ்ஞான அடிப்படையிலே கண்டுபிடித்த பிறகு, அதை பயிரிடுவதற்கும், வியாபாரம் செய்வதற்கும் அனுமதிக்கக் கூடாதுதான். அது தக்க நேரத்தில் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, கேசரி பருப்பைத் துவரம் பருப்பில் கலப்பதைப் போலவே, இங்குள்ள வியாபாரிகள் இலவங்கப் பூவிலே வேறு விதமான அதே போன்றுள்ள பூவைக் கலக்கிறார்கள். பேரிச்சம் பழத்திலே வெல்லப்பாகை கலக்கிறார்கள். அதேபோல திராட்சைப் பழத்திலே தண்ணீரை ஊற்றி ஊறவைத்து விற்கிறார்கள். இப்படி கலப்படம் செய்து விற்பனை செய்வதை அரசு அறியுமா? ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கலப் படத்தைத் தடுப்பதற்கும், அதிலே ஈடுபடுபவர்களுக்கு உரிய தண்டனை கொடுப்பதற்கும் சட்டம் இருக்கிறது. அதுவும் குறிப்பிட்ட துறைகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அகப்படுகிறவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். பல வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று அப்படிப்பட்ட வழக்குகளிலே தப்பிப்பதற்கான வழிவகைகளையும் வைத்திருக் கிறார்கள். அவைகளைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கேசரிப் பருப்பைப் போல, கலப்படம் யார் செய்கிறார்கள் என்றால். மொத்த வியாபாரிகள் செய்கின்றார்கள். அந்த மொத்த வியாபாரிகள் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இடங்களை அடிக்கடி சோதனை செய்து, இதைப் போன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கலப் படம் எங்கு ஆரம்பிக்கின்றது. எந்த முறையில் ஆரம்பிக்கின்றது என்ற அளவுக்கு அதைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. தண்டனைக்குரிய வர்கள், தண்டனை பெற வேண்டும். அதிலே நம்முடைய மாநிலத்தினரும் ஈடுபட்டிருக்கலாம், பிற மாநிலங்களில் இருப்பவர்களும் ஈடுபட்டிருக்கலாம். கலப்படம் என்று சொல்லும்போது, பெரிய வியாபாரிகள், அதாவது மொத்த வியாபாரிகள்கூட செய்கின்றார்கள். அதிலே கலப்படம் இருக்கின்றதா என்று தெரிவதில்லை. சிறிய வியாபாரிகள் அதிலே கலப்படம் இருக் கின்றதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்கின்றார்கள்.

ஆதனால் நாங்கள் தண்டனைக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது என்று சிறிய வியாபாரிகள் முறையிடுகின்றார்கள். சிறிய வியாபாரிகள் தண்டனைக்கு ஆளாகாமல் இருக்குமாறு செய்யவேண்டும். குற்றம் செய்யாதவர்கள் தண்டனைக்கு ஆளாகக்கூடிய நிலைமையும் இருக்கின்றது. அதனை எந்த அளவுக்குத் தவிர்க்கலாம் என்பதுபற்றியும் இந்தத் துறை ஆராயும்.

## *Sales Tax on Tyres for Trucks and Buses.*

*3 *Q*.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that there is a great loss of revenue for the State, consequent on the increase in the rate of Sales Tax on Tyres for Trucks and Buses; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this regard?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக மாண்புமிகு [illegible] அண்டை மாநிலங்களிலே வரி விதிப்பு விகிதம் குறைவாக இருந்த தால் நம்முடைய மாநிலத்தில் உள்ள அனைத்து பெரிய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் அங்கே சென்று டயர்களை வாங்கி வந்து இந்த மாநிலத்தில் உபயோகம் செய்திருக்கின்றார்கள். நம்முடைய வரி விகிதத்தைவிட அங்கு குறைவான வரி விகிதத்தில் உள்ள [illegible] என்று சொல்லப்பட்டது. பத்திரிகைகளிலே கூட குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது உண்மையா? அப்படியானால் இந்த வரி விகிதத்தை நம்முடைய மாநிலத்திலே குறைத்திருக்கின்றோமா என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் முதலிலே வரி 12 சதவிகிதமாக இருந்தது. அந்த 12 சதவிகிதத்தை 9 சதவிகிதமாக இன்று குறைத்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல. நம் மாநிலத்தில் இப்பொழுது [illegible] வியாபாரத் [illegible]. **Diversion of Trade** தடுத்து நிறுத்த வேண்டுமென்று தேவையானபோது வரியைக் குறைத்தும், தேவையானபோது





வரியை ஏற்றியும் வைப்பதன் மூலம் டைவர்ஷன் இல்லாமல் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி அரசு ஆலோசித்துச் [illegible] செய்கின்றது.

முதலிலே 12 சதவிகிதமாக இருந்ததை 9 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம். அண்டை மாநிலங்களில் டயர்கள் மற்றும் டியூப்கள் வரி தமிழ்நாட்டில் [illegible]. ஆந்திராவிலே 9 சதவிகிதம், கர்நாடகாவில் [illegible] கேரளாவிலே 9 சதவிகிதம், பாண்டிச்சேரியில் 7 சதவிகிதம் என்றும் [illegible] 10 சதவிகிதம் என்றும், [illegible] 9 சதவிகிதம் என்று இருக்கின்றது. [illegible] 7 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். [illegible] இந்த வருவாய் [illegible] வரியைக் குறைத்ததனாலே [illegible] 1—3—1981 லிருந்து 28—2—1982 [illegible] 1—3—1982 [illegible] அந்த வருடத்தில் ரூ. 575 லட்சம் [illegible] அந்த ஒரு ஆண்டில் 657 லட்சம் ரூபாய் வருவாய் முதல் 28—2—1983 வரை [illegible] ரூ. 81 லட்சம் அதிகமாக வந்திருக்கின்றது. ஆகவே [illegible] வந்திருக்கின்றது. [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, 12 விழுக்காடு வரிவிதிக்கப்பட்டிருந்தது 9 [illegible] வருவாய் குறைந்ததனால் என்று [illegible] விழுக்காடாக வரியைக் குறைத்ததே இந்த [illegible]. நம் மாநிலத்திலுள்ள [illegible] வேண்டுமென்றால், [illegible] கார்ப்பரேஷன் எல்லாம், [illegible] வாங்குகின்ற [illegible] இல்லாமல் இயங்க வேண்டும். அந்த முறையிலே நம்முடைய [illegible] குறைவாகத்தான் இருக்க வேண்டும். [illegible] சார்ந்தவர்கள் எல்லாம் பொதுவாக [illegible] கார்ப்பரேஷன்களைச் [illegible] வாங்க வேண்டும். 7 சதவிகித வரியில் பாண்டிச்சேரிக்குப் போய்த்தான் வாங்க வேண்டும். அந்த முறையிலே நம்முடைய டயர்கள் கொள்முதல் செய்ய வேண்டும். [illegible] கார்ப்பரேஷன்களுக்குக் கொடுக்கப்படுகின்ற டயர்கள் [illegible] முறையிலே உள்ள [illegible] மாநிலத்திலுள்ள வரி விகிதப் [illegible] பொருள்களுக்கானது அண்டை [illegible] அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை? [illegible] அந்த விலையில் [illegible] பொறுத்த வரையில், அண்டை மாநிலங்களில் [illegible] பொதுவாக இந்த வரிவிதிப்பைப் பொறுத்த வரையில் [illegible] வரிவிதிப்பை நாம் குறைத்துக் கொடுப்பதால். அதனால் [illegible] ஏற்றவாறு வரிவிதிப்பை [illegible], வருவாய் அதிகமாகச் [illegible] கொள்முதல் அதிகமாகி, விற்பனைகள் அதிகமாகி, [illegible] சம்பாதிக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா அல்லவா? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

[1984 பிப்ரவரி 17

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்கள் என்று பார்க்கின்றபோது, பாண்டிச்சேரியை மட்டும் அண்டை மாநிலமாக எடுத்துக்கொள்வதில்லை. கேரளாவும், ஆந்திரமும், கர்நாடகாவும் இந்த மூன்றையும் பார்க்கிறோம். இந்த மூன்று மாநிலங்களுக்கும் நமக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. அதுபோலவே பாண்டிச்சேரியில் எவ்வளவு விற்பனை ஆகிறது? நம் மாநிலத்தில் எவ்வளவு விற்பனையாகிறது? 'டைவர்சன் ஆப் டிரேட்', அதாவது வியாபாரச் சந்தையில் என்ன ஆகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிறோம். வியாபாரச் சந்தையில் அதிகமானால், அதற்கு ஏற்ப வரியைக் குறைக்கிறோம். பாண்டிச்சேரி மட்டும் 7 சதவிகிதம் என்பதாலேயும் மற்ற மாநிலங்களிலும் நம்முடைய மாநிலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதாலும், வியாபாரச் சிதறல் மிக அதிகமாக இல்லை என்று அரசுத் துறை கணக்கு சொல்கின்றது. அதைப் பொறுத்து தேவைப்பட்டால் குறைக்கலாம்.

**நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.**

* 4. வினா—**டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நாமக்கல் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) & (இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-50)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, அப்படி தாலுகா இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, பிரிக்கப்படும் தாலுகாவிற்கு நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பெயரையோ தீரன் சென்னிமலை, எங்கள் பகுதியைச் சேர்ந்த வீரமலை அவர்கள் பெயரையோ வைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, ஆளுநர் உரையில் செய்யப்பட்டிருக்கிற அறிவிப்புகளிலிருந்து மாவட்டங்களுக்குப் பெயர்கள் வைக்கிறபோது, எப்படிப் பெயர்கள் வைக்கிறோம் என்று உறுப்



1984 பிப்ரவரி 17]

பினர்கள் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். மாவட்டங்களுக்குப் பெயர் வைக் கிறபோதே, இருக்கும் பெயர்களை அப்படியே மாற்றாமல்தான் செய்திருக்கி றோம். ஆகையால், நாமக்கல் தாலுகா பிரிக்கப்படுகிறபோது, நாமக்கல் என்ற பெயர் இருக்கும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையினால் உடைப்பு.**

* 5. வினா—**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், கன்னியாகுமரி மாவட்டம், கீழ்க்குளம் ஏலாவின் இருபுறமும் பாய்கிற வாய்க்காலில் மீண்டும் உடைப்பு ஏற்பட்டதால், சுமார் இருநூறு ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர் சேதமடைந்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) இதே இடத்தில் முதலில் எப்போது உடைப்பு ஏற்பட்டது? அது எப்போது அடைக்கப்பட்டது?

(எ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் கன்னியாகுமரி மாவட்டத் தில் பெய்த மழையின் அளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) மணல் மூட்டைகளால் உடைப்பு சரி செய்யப்பட்டுள்ளது. இப் பகுதியை வரும் காலங்களில் வருவாய்த் துறையிடமிருந்து பொதுப் பணித் துறையின் ஒப்படைத்து பராமரிப்பு வேலைகளை கவனிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) 1978-ல் ஏற்பட்ட உடைப்பை 1981-82 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சுமார் ரூ. 2.52 இலட்சத்தில் சரி செய்யப் பட்டது.

(எ) 1982ஆம் ஆண்டு அக்டோபர் 98.40 மில்லிமீட்டர் மழை பெய் தள்ளது.

**திரு. ம. சங்காலிங்கம் :** தலைவரவர்களே, 1978-ல் இதே பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. அதை 1981-82-ல் 2.60 இலட்சம் ரூபாய் செலவு செய்து அந்த உடைப்பு அடைக்கப்பட்டது. 1982-ல் 98 மி.மீ. மழை பெய்து மீண் டும் உடைப்பு ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட உடைப்பு எப்படி அடைக்கப் பட்டதோ, அப்படி அடைக்கப்பட்டும், இந்த மாதிரி மீண்டும் ஏன் உடைப்பு

ஏற்பட்டது என்பதை அரசு உணர்கிறதா? முதலில் எப்படி அடைத்தார்கள், என்ன தவறு ஏற்பட்டது என்று அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு சரி செய்வதற்காக தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் வேலை தொடங்கப்பட்டது. 1981-82-ல் 2.52 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தப் பகுதியிலே உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே இந்தப் பகுதி வருவாய்த் துறையிலிருந்து, பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டு, அதன்மூலமாக தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் வேலைகளைச் செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எப்போது மழை அதிகமாகப் பெய்தாலும், உடைப்பு ஏற்படுகிற காரணத்தால், நிரந்தரமாக ஒரு பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் உள்ள இந்தக் குளத்தில் உடைப்பை அடைப்பதற்காக 1981-82-ல் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். 1978-ல் பெய்த மழையில் கால் பங்கு மழையிலேயே மீண்டும் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. என்னுடைய கருத்து என்னவென்றால், பணத்தைச் செலவு செய்திருக்கிறார்களே தவிர, உடைப்பை அடைக்கவில்லை என்பதுதான். அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? அடுத்ததாக, அதனால் பாதிக்கப்பட்ட 200 ஏக்கரா நிலங்களில் பயிரிட்ட விவசாயிகளுக்கு அரசு என்ன உதவி செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, நாம் பணம் செலவு செய்திருக்கிறோம். அவை சரியான முறையில் நடைபெற்றதா? வேலைகள் குவாலிடி-வைஸ் (Quality-wise) என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்ததா என்பதைப்பற்றிக் குறிப்புகள் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விகளை அடிப்படையாக வைத்துப் பதில்களைப் பெறுவேன். அதே நேரத்தில் வருகிற காலகட்டத்தில் இதை நிரந்தரப் பணியாகவே செய்து முடிக்க வேண்டும் என்பது அரசின் பரிசீலனையிலிருக்கிறது. இனி இதுமாதிரி வாராமலிருக்கக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவரவர்களே, சென்னை நகரில் சைதாப்பேட்டையில் பல சலவைத் தொழிலாளர்கள். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள குளத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தனியொரு குளமாகக் குறிப்பிட்டால் எப்படி?

**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவரவர்களே, நிலைப்படுத்துவதற்காகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் (சென்னையில்) ஏறக்குறைய பத்தாயிரம் சலவைத் தொழிலாளர்கள் ஆற்றோரத்தில் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். மழைக்காலங்களில் அவர்கள் வீடுகளில் வெள்ளம் புகுந்து மிகவும் அவஸ்தைப்பட்டு வருகிறார்கள். இந்த இடங்களில் கரையெழுப்பிட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சி ஆணையரிடத்தில் ஏற்கெனவே கூறி இருந்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கிறேன்.

### *Bala Sevikas*

*6 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Bala Sevikas serving as on 1st February 1983, at the Schools under the control of the Dindigul Municipality; and

(*b*) the number of Bala Sevikas, whose services were regularised as on 1st February 1983?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) 21.

(ஆ) ஒருவரும் இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, இந்த 24 பால சேவகிகள் ஏறத்தாழ கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படவில்லை. முறையான சலுகைகள் வழங்கப்படவில்லை. 1—10—1980 ஆம் தேதியன்று அவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு ஊதிய விகிதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட தொகையை 1—4—1983-லே வழங்கப்பட்ட ஆணையின் மூலமாக 1983-லிருந்து நிறுத்தி மாதம் 20 ஆகப் பிடித்தம் செய்து, திரும்பக் கட்ட வேண்டுமென்று அச்சுறுத்தப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் முறையாக 10 ஆண்டுகள் முடித்த தேதியிலிருந்து அவர்களை வரன்முறை செய்து, அவர்களுக்கு முழுமையாக எல்லாச் சலுகைகளையும் அளிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணை வழங்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, திண்டுக்கல் நகராட்சியில் 24 பாலசேவகிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்களல்ல. பகுதி நேர ஊழியர்கள். அப்படி பகுதி நேர ஊழியர்களாக இருந்தவர்களைத்தான், புரட்சித் தலைவர் அரசு 11—10—1979 அன்று ஒரு ஆணையின் மூலமாக நிரந்தரப் பணியாளர்களாக்கி, 200 ரூபாய் அடிப்படை ஊதியம் அளித்தார்கள். அதற்குப் பின்னாலே ஏற்பட்ட அரசியல் விபத்து காரணமாக 17—2—1980-லே ஆட்சி கலைக்கப்பட்டு, பின்னர் 1—3—1980 ஆம் தேதியன்று மற்றொரு ஆணை மூலமாக இவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கக் கூடாது, பகுதி நேர ஊழியர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னால் கொடுத்த பணத்தை ரிகவரி செய்து, மீண்டும் அரசாங்கம் வசூலிக்க வேண்டுமென்ற முறையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்தில், அப்படி பிடித்தம் செய்யக் கூடாது, கொடுத்தது கொடுத்ததாக இருக்கட்டும் என்று சொல்லி 18 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தில் பகுதி நேர ஊழியர்களாகப் போட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய கருணை உள்ளத்திற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஊழியர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், பிடித்தம் செய்யாமல் நிறுத்தியதற்காக. இப்போது விபத்து போய்விட்ட நிலையில், மீண்டும் ஆட்சியில்



உள்ளபோது, கருணை உள்ளத்தோடு 10 ஆண்டுகள் முடித்த அனைவரையும் வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. அமைச்சரவர்கள் நகராட்சியிலிருந்து விவரமான குறிப்பைக் கேட்டு, தெரிந்துகொள்ளலாம். அவர்கள் காலையிலிருந்து இரவு 8 மணிவரையில் வேலை பார்க்கிறார்கள். எனவே அவர்கள் பகுதி நேர வேலை பார்க்கவில்லை என்று கூறி, இதை மறுபரிசீலனை செய்து, அவர்களை முழு நேர ஊழியர்களாக்கி எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று கூறினேன். இருக்கின்ற பாலசேவகிகள் எல்லாம் ரிடையரிங் ஸ்டேஜில், அதாவது 40, 45, 50, 53 வயதில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இவர்களை நிரந்தரமாக்க முடியுமா. அப்படி நிரந்தரமாக்கினால் பென்ஷனரி பெனிபிட்ஸ் போன்றவைகள் அவர்களுக்குக் கிடைக்குமா என்பதையெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** விபத்து ஏற்பட்டு, இப்போது விபத்திலிருந்து மீண்டவுடன், என்னென்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ, அதை மாற்றுவதுதான் முறை. 1980-ல் விபத்து ஏற்பட்டு, 1980 லேயே முடிந்துவிட்டது. இப்போது 1984. 4 வருடங்களாக அதை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு நடவடிக்கை அரசு மிக விரைவில் எடுத்து, அதை அறிவிக்குமா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** 1—3—1980-ல் அந்த ஆணை போடப்பட்டது. 1—5—1980-லே கொடுத்த பணத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று சொல்லி, ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஆணை போடப்பட்டது. இந்த அரசு மறுபடியும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதற்குப் பிறகு, அரசு பரிசீலித்து இன்றைக்கு நிதித் துறையிலே அது பெண்டிங்கில் இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## Automatic Dimmer in Lorries

*7 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of accidents are caused by Lorries due to non-dimming of head-lights during night times; and

(*b*) if so, whether there is any proposal with the Government to enforce upon the Lorry-Owners to have an Automatic Dimmer?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) தானியங்கி விளக்கணைக்கும் கருவியைப் பொருத்துவதைக் கட்டாயமாக்கவேண்டும் என்ற யோசனை பரிசீலனைக்குப் பின் கைவிடப் பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கிற விளக்கு களின் ஒளியைத் தானியங்கி ஒளிக்குறைப்பான் முறையைப் பயன்படுத்தி ஒளியைக் குறைப்பது சிறப்புடையது என்று முதலில் கருதி விட்டு, இப் போது ஏன் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என்று நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** முதலாவதாக, தேவையான அளவுக்கு இன்னும் அவை உற்பத்தி செய்யப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், இவை சிறப்பாக, நல்லமுறையில் இயங்குகின்றனவா என்று இன்னும் தீவிரமாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. சரியாகத்தான் இயங்கு கின்றன என்று நம்பி வண்டிகள் போய், சரியாக இயங்காமல் போகும் நிலை ஏற்பட்டால், இப்போது ஏற்படுவதை விட இன்னும் அதிகமாக விபத்து ஏற் பட வாய்ப்பு ஏற்படும். தானாக இயங்கும் என்று உறுதியாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் பரவலாக அமுல்படுத்தலாம் என்கிற எண்ணத்தில்தான் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

Thiru J. M. MIAKHAN: Sir, in some countries, the light that comes from the headlights of motor vehicles is polarised and the light travels on parallel lines and the light does not hit the eyes of the drivers of the on-coming vehicles. For example, in France and other countries, there is a mandaory rule that they have to fit their vehicles with this kind of polarised lights. If this is installed



in every vehicle, there is no necessity to have a dimmer and the eyes of the drivers will not be hit directly and there will not be more number of accidents. Will the Hon. Minister consider the suggestion?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அதனால்தான் விளக்குகளின் மத்தியில் ஒரு கறுப்புப் புள்ளி வைக்க வேண்டுமென்ற ஒரு முறையை வைத்திருக் கிறோம். அதிலும் சிரமம் இருக்கிறது என்பதால்தான் புதிய கண்டுபிடிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. புதிய கண்டுபிடிப்பு வெற்றிகரமாக வரும் என்று நாம நினைத்தால் கூட, அதுபற்றி தேவையான அளவுக்கு ஆராய்ச்சி செய்து முழு வெற்றி பெற முடியும் என்று நிரூபிக்கும்வரை செயல்படுத்துவதுபற்றி தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரின் யோசனையும் நல்ல யோசனைதான்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விளக்குகளின் நடுவில் கறுப்புப்புள்ளி அடிப்பதைக் கட்டாயப்படுத்தி அதன் மூலம் விளக்குகளின் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இரவு நேரத்தில் வாகனங்களில் செல்வதற்குப் பயமாக இருக்கிறது. விளக்கை அணைப்பது, குடித்துக் கொண்டு ஓட்டுவது, வேகமாக ஓட்டுவது போன்றவற்றை தக்கமுறையில் கண் காணித்து அதன்மூலம் விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மூன்று காரியங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை உண்டு. இப்போதே இவை குறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக் கிறோம். விளக்கின் நடுவில் கறுப்புப்புள்ளி அடிக்க வேண்டுமென்று இப் போதே கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். அதுபோல் குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டுகிறவர்கள் மீதும், வேகமாக ஓட்டுகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி குற்றங்களைச் செய்ப வர்கள் மீது ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, could I add some more information to what was stated by the hon. Member Dr. Janarthanam? There is no point in saying that action is being taken. The Police could at least enforce the putting of 'cat's eye' in the lights of all the motor vehicles. When the vehicles are being

மு



driven without such change in lights, it is very, very dangerous Will the Hon. Minister give an assurance on the floor of the Hous that it will be compulsorily done by the Police Department ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** போக்குவரத்துத் துறையும காவ துறையும் ஏற்கெனவே அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதை கட்டாயப்படுத்த வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே க்கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி அது சம்பந்தமாக நடவடி கையையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** குஜராத் மாநிலத்தில் ஹைவேஸ் மூலம் காவ துறையினர் இரவு நேரங்களில் ரோந்து அடிக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ரோந்து வருகிறார்கள் அல்ல ரோந்து சுற்றுகிறார்கள் என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

**திரு. சி. இராமலிங்கம் :** ரோந்து வருகிறார்கள். அப்படி வருகிற நேர தில் எங்காவது விபத்து ஏற்படுகிற நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அதுபோல் வேகமாகச் செல்லும் வாகனங்களை கட்டுப்படுத்துகிறார்கள். தேவையான உதவி செய்கிறார்கள். சாலைகளி ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறார்கள். இதற்காக ஹைவே போலீஸ் என்று தனியாக அமைத்துச் செயல்படுகிறார்கள். அதுபோ நம்முடைய மாநிலத்திலும் ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்க முன்வருவார்களா ? அந்த வகையில் இரவு நேரங்களில் அதிகமா ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கெனவே போக்குவரத்துத் துறை யினரும், காவல் துறையினரும் இருக்கிறார்கள். அவர்கள்தான் இங்கே போக்குவரத்து வசதிகளை ரெகுலேட் (regulate) செய்துகொண்டி ருக்கிறார்கள். நெடுஞ்சாலையில் வைக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

---





தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 8. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய் வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அதைப் போல பணிமனை இல்லாத பகுதி களில் புதிய பேருந்துகள் விடவும், பணிமனைகள் இருக்கும் இடங்களில், புதிய பேருந்துகள் இருந்தாலும், ரிப்பேர் செய்யப்பட வேண்டும் என்ற அடிப் படையில் புதிய பேருந்துகளை விடுகிற யோசனை அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பணிமனை இல்லாத பகுதி என்று சொல்ல முடியாது. எங்கெங்கே பணிமனை இல்லையோ அங்குள்ள பேருந்துகள் பக்கத்திலே உள்ள பணிமனைகளுக்கு பராமரிப்புக்காகச் செல்கின்றன. எல்லா வண்டிகளும் பணிமனையைத் தொட்டுச் செல்ல வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்டுதல்.

* 9. வினா—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு நிர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற் குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரியின் வெள்ள நீரை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல, கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மழைக் காலங்களில் காவிரியில் கிடைக்கும் வெள்ள நீரை வீணாக்காமல் பயனுள்ள வகையில் உபயோகப் படுத்துவது குறித்த முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ழ

1984 பிப்ரவரி 17

driven without such change in lights, it is very, very dangerous. Will the Hon. Minister give an assurance on the floor of the House that it will be compulsorily done by the Police Department?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** போக்குவரத்துத் துறையும காவல் துறையும் ஏற்கெனவே அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி அது சம்பந்தமாக நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** குஜராத் மாநிலத்தில் ஹைவேஸ் மூலம் காவல் துறையினர் இரவு நேரங்களில் ரோந்து அடிக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ரோந்து வருகிறார்கள் அல்லது ரோந்து சுற்றுகிறார்கள் என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

**திரு. சி. இராமலிங்கம்:** ரோந்து வருகிறார்கள். அப்படி வருகிற நேரத்தில் எங்காவது விபத்து ஏற்படுகிற நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அதுபோல் வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். தேவையான உதவி செய்கிறார்கள். சாலைகளில் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறார்கள். இதற்காக ஹைவேஸ் போலீஸ் என்று தனியாக அமைத்துச் செயல்படுகிறார்கள். அதுபோல் நம்முடைய மாநிலத்திலும் ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அந்த வகையில் இரவு நேரங்களில் அதிகமாக ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** ஏற்கெனவே போக்குவரத்துத் துறையினரும், காவல் துறையினரும் இருக்கிறார்கள். அவர்கள்தான் இங்கே போக்குவரத்து வசதிகளை ரெகுலேட் (regulate) செய்துகொண்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலையில் வைக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.



1984 பிப்ரவரி 17]

### தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 8. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அதைப் போல பணிமனை இல்லாத பகுதிகளில் புதிய பேருந்துகள் விடவும், பணிமனைகள் இருக்கும் இடங்களில், புதிய பேருந்துகள் இருந்தாலும், ரிப்பேர் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் புதிய பேருந்துகளை விடுகிற யோசனை அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பணிமனை இல்லாத பகுதி என்று சொல்ல முடியாது. எங்கெங்கே பணிமனை இல்லையோ அங்குள்ள பேருந்துகள் பக்கத்திலே உள்ள பணிமனைகளுக்கு பராமரிப்புக்காகச் செல்கின்றன. எல்லா வண்டிகளும் பணிமனையைத் தொட்டுச் செல்ல வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

### கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்டுதல்.

* 9. வினா—திரு ம. சங்கரலிங்கம் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு நிர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரியின் வெள்ள நீரை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல, கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மழைக் காலங்களில் காவிரியில் கிடைக்கும் வெள்ள நீரை வீணாக்காமல் பயனுள்ள வகையில் உபயோகப் படுத்துவது குறித்த முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** காவிரி ஆற்றிலிருந்து மழைக் காலத்தில் வருகிற மிகுதி நீரை இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய திட்டம் எவ்வளவு காலமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது? எப்போது ஆரம்பிக்கப்பட்டு அமல்நடத்தப்படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** காவிரி ஆற்றின் தண்ணீரை வறட்சியான பகுதிகளுக்குக் கொண்டு செல்லக்கூடிய திட்டம் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதை இரண்டு கட்டமாக எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக புதுக்கோட்டை வட்டாரத்திற்கு காவிரி வெள்ள நீரை வெள்ள நீர்க் கால்வாய் மூலம் கொண்டு செல்வது என்பது. இந்த முதற்கட்டம் இன்னும் முடியவில்லை. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முதற்கட்டத்திற்கும், இரண்டாவது கட்டத்திற்கும் சேர்ந்து 188 கோடி ரூபாய் செலவாகும் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது. 188 கோடி ரூபாய்க்குப் பணிகள் மேற்கொண்டாலும், இது வெள்ளக் காலத்திலே மட்டும்தான் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும் உரிய நடவடிக்கையை முறையாக வாய்ப்பு ஏற்படும்போது எடுக்க அரசு விரும்புகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் அறிந்த வரையில், ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையை விரைவில் செய்து, இது ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமா அல்லது தள்ளப்பட வேண்டிய திட்டமா என்பதை முடிவு செய்ய வேண்டும். இப்படி காலம் கடத்துவதால் இப்போது 188 கோடி ரூபாய் என்று திட்டமிட்டிருந்தாலும், பின்பு 588 கோடி ரூபாய் என்ற நிலைக்குப் போய்க்கொண்டிருக்கும். ஆகவே ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டிய திட்டங்களைக் காலம் தாழ்த்தாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** இந்த அரசைப் பொறுத்த வரையில், ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறது. காவிரி பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். காவிரியில் வெள்ளம் ஏற்படும் காலங்களில்தான் இப்படிப்பட்ட திட்டங்களால் வறண்ட பகுதிகளுக்குப் பயன் கிடைக்கும். ஆகவே அதைப்பற்றி அவசர அவசரமாக விரைந்து ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.





## *Representation from Villagers of Kattukkanalloor*

* 10 *Q*.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government, from the villagers of Kattukanalloor, Kannamangalam Firka, Arni taluk, North Arcot district, during the last week of January 1983, for forming (i) a supply channel to Thangal Eri for storage of water in that lake, and (ii) to prevent the wastage of water discharged from Gooneri and to avoid damage to crops; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) ஆம்.

(ஆ) அதன் மீது உரிய மதிப்பீடு தயாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு தல அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆளுநர் உரையில்கூட சிறு நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய அம்சம். ஆனால், நான் குறிப்பிட்டிருக்கிற கூனேரியிலிருந்து வருகிற தண்ணீர் தாங்கல் ஏரி சென்று சேருவதற்கு வடிகால் வசதிகள் இல்லை. அதன் காரணமாக மழைநீர் வீணாகிறது. பெருக்கெடுத்தோடும் வெள்ள நீரால் அந்தப் பகுதியில் உள்ள பயிர்கள் நாசமாகின்றன. ஆகவேதான். இந்தக் கால்வாயை அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் மிகவும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு, மூன்று நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக அந்தப் பகுதியில் எல்லாம் ஏராளமான நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆகவே, இதைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, இந்த வடிகால் அமைப்புகளைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 800 அடி நீளம் 60 அடி அகலத்திற்குப் போட வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டம் போடப்படுவதால் பாதிக்கப்படுவது 15 எக்கர் பட்டா நிலமாகும். இருந்தாலும் இந்த 15 ஏக்கர் பட்டா நிலத்தில் கூட விளைச்சல் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தனியான திட்ட மதிப்பீடு ஒன்று ரூ. 70 ஆயிரம் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி உரிய நடவடிக்கை எடுப்பதற்குத்தான் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து தக்க ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கேள்வியில் குறிப்பிட்ட மையப் பொருளைப்பற்றி இந்த அறிவிப்பு இல்லாவிட்டாலும், தற்போதுள்ள சூழ்நிலையைப் பற்றிக் கேட்டிருந்தேன். தற்போது தமிழகத்தில் ஒரு வார காலமாக இடைவிடாத மழை பெய்து கொண்டிருப்பதால், எவ்வளவோ வகையான அபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை உணர்ந்து எதிர்காலத்திலாவது, இந்த அபாயங்களைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளப்பாதுகாப்புக்காக என்று தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே அந்த வகையில் அந்தத் தலைமைப் பொறியாளர் அரசுக்கு உரிய திட்டங்களையும் விளக்கங்களையும் தருவார்கள். அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கே மழை வரப்போகிறது என்று மக்கள் நினைத்து, பல ஏரிகளில் குடிசைகள் போட்டவர்கள், இப்போது பெய்து கொண்டிருக்கிற மழையால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மழையை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, இனிமேலாவது ஏரிகளில் குடிசைகள் போடாமலிருப்பதற்காக அரசாங்கமே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏதாவது செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வி போடவேண்டிய ஒரு கருத்தாகும். இருந்தாலும்கூட, இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு இங்கே ஒரு கருத்தைத் தெரிவிக்க முன் வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. ஏரிகளின் கரைகளில் குடிசைகள் போடுவதால் ஏரிகளின் கரைகள் பலமிழந்து போகின்றன. ஆகவே அப்படிப்பட்ட குடிசைகளை அப்புறப் படுத்தி, மேட்டுப் பகுதிகளுக்கு அவர்களைக் கொண்டு செல்ல அரசு எண்ணு-



கிறது. ஆனால், அனைத்து இயக்கங்களின் சார்பிலும், இதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைத்தால் இதன் பலன் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

பெரு மழையிலும் மேலவையை நடத்திக்கொண்டிருப்பதுபற்றி.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். அடாது மழை பெய்தாலும், விடாது மேலவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். வீட்டிலிருந்து மழையில் வருவதற்கு மிகுந்த கஷ்டமாக உள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கிளாரிபிகேஷன் என்றால் அதை முன் கூட்டியே தலைவரிடம் தெரிவிக்கவேண்டும். அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்.

## 3. கவன ஈர்ப்பு.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிப்பது குறித்து.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உச்ச நீதி மன்றமும் இந்திய அரசும் ஆணைகள் பிறப்பித்திருந்தும் கூட, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை ஓய்வூதியம் பெறுபவர் அனைவருக்கும் கொடுக்க அரசு தவறியது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து, விவர அறிக்கை (1) ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1984 பிப்ரவரி 17

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களுக்குரிய ஓய்வூதியப் பயனை அளிக்க அரசு முடிவு செய்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி கடந்த ஆண்டும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்தேன். உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கொடுத்து, அதற்குப் பிறகு மத்திய அரசு அவர்களது பணியாளர்களுக்கான உத்திரவை இயற்றிவிட்டது. அதேபோன்று கர்நாடக அரசும் செய்திருக்கிறது. ஆகவே, தமிழக அரசும், இது குறித்து எவ்வளவு சீக்கிரம் அளிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தப் பயனை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்தத் தேதியிலிருந்து அவர்களுக்கு அந்தப் பயனை அரசு தர முடிவு செய்திருக்கிறது, பாக்கியை எப்படி அளிக்க உத்தேசித்துள்ளது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1979க்கு முன்பும் ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுடைய தன்மைகளும், அதற்கான விதிமுறைகளும் பல்வேறு முறைகளைப் பொறுத்து மாறியிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு தனிப்பட்ட கணக்குகளை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படி தனிப்பட்ட திட்டம் வகுத்து, அதை ஏற்றுக்கொள்வதா, அல்லது பொதுவான கருத்தை ஏற்றுக்கொள்வதா என்று பல்வேறு மாநிலங்களில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே இதற்கென்று ஒரு தனிக் குழுவை அமைத்து, அவர்கள் இதுகுறித்து ஆராய்ந்து வருகிறார்கள். இதை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக முடித்து வழங்க முடியுமோ அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. எப்போது வழங்கினாலும் முந்தைய ஆண்டுகளுக்கும் சேர்த்துத்தான் தரப்படுகிறது என்ற காரணத்தால், தொகை முழுவதும் கிடைக்கும். அதில் குறையேற்பட வாய்ப்பில்லை. சில மாதங்கள் கழித்துக் கிடைத்தாலும், தொகை முழுவதும் கிடைக்கும் அதில் குறை ஏற்பட வழியில்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில் ஓய்வு பெற்றவர்களுடைய அவல நிலைமைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்காக தனி சம்பளக் கமிஷன்போல் பென்சனர் கமிஷன் அமைக்க அரசு முன்வருமா?



1984 பிப்ரவரி 17]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்பெஷல் கமிஷன் வைக்க வேண்டிய அவசியமில்லை. இதற்காக 18—1—1984-ல் அதிகாரிகளைக் கொண்ட தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளெல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன. விரைவில் நடவடிக்கை எடுப்பதில் கஷ்டமான நிலைமைகள் இருந்தால், அதை இன்னும் வலிவுபடுத்தி விரைவுபடுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எனது கருத்துக்களையும் சொல்ல அனுமதித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு நாட்களாக சத்துணவுத் திட்டம்பற்றி ஒரு முக்கியமான பிரச்சினை பல இடங்களில் பேசப்பட்டு வருகிறது. அதிலே ஒன்று போலியோ நோய் வந்த ஒரு சிறுவனுக்கு சத்துணவு உண்ட காரணத்தால் போலியோ நோய் போய் விட்டது என்று அரசு சொன்னதாகச் சொன்னார்கள். அது எப்படி நியாயமானது என்ற பிரச்சினையையும் சில எதிர்க்கட்சி நண்பர்கள் பேசியதை பத்திரிகையிலும் பார்த்தேன்; நேரிலும் தெரிந்துகொண்டேன்.

இதுகுறித்து 'தமிழரசு' பத்திரிக்கையில் டிசம்பர் 1983 இல் ஒரு செய்தி வந்தது. அதிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், காத்தமங்கலத்தில் வீரையா என்பவருடைய மூன்றாவது குழந்தை, சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து 54 குழந்தைகளோடு சாப்பிட்டதாகவும், இந்தக் குழந்தைக்கு மட்டும் ஏதோ காரணத்தால் திடீரென்று போலியோ நோய் வந்து சிரமப்படுகிற நிலை ஏற்பட்டது என்றும், அந்த நிலையில் சத்துணவு சாப்பிட்டதோடு மட்டுமல்லாமல், பிசியோதெரபி என்ற பயிற்சியையும் செய்ததால் அந்த நோய் போனது என்றும் போட்டிருக்கிறார்கள்.

"Because of the physio-therapy exercises given by the organiser of the Noon-Meal Centre, he began to walk. He began taking noon meals daily and the physio-therapy exercises given by the organiser of the Noon-Meal Centre. He began to walk."

என்று போட்டிருக்கிறார்கள். சத்துணவு சாப்பிட்டதால் அந்தக் குழந்தைக்கு நோய் தீர்ந்து விட்டது என்று போடவில்லை. சத்துணவு சாப்பிட்டதால் அந்தக் குழந்தை நல்ல உடல் வளர்ச்சி பெற்றிருந்தது. அதே சமயத்தில் அதற்குரிய மருந்துகளையும் பயிற்சிகளையும்

கொடுத்த காரணத்தால், அந்தக் குழந்தைக்கு உடல் நலம் நல்லபடியாயிற்று என்றுதான் போட்டிருக்கிறதே தவிர, இதை எந்த வகையிலும் பிரச்சினைக் குரிய விஷயமாக நான் கருதவில்லை.

(முற்பகல் 10-20)

சத்துணவுத் திட்டம்பற்றி மேலும் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்பு கிறேன். இதிலே சில நேரங்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்பது பற்றியும், சில இடங்களில் சமையல் கூடங்களில் சரியாக சமைக்கவில்லை யென்றும் அதனால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். சத்துணவுத் திட்டம் பற்றி முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அரசுக்கு அதனால் லாபம் வருகிறது என்றும், அதனால் மக்களிடத்தில் செல்வாக்கு வந்து, அதனால் வாக்குகள் வரும் என்பதற்காக

(மாற்றுத் தலைவர் திரு. ஏ. ஜே. தாஸ் தலைமை)

மட்டும் அரசு செய்வது போல் அவர்கள் சொல்கிறார்கள். சத்துணவுத் திட்டம், நாம் முன்னரே சொன்னது போலவே, தமிழகத்திலே மட்டுமல்ல, உலகத்திலே பல நாடுகளிலும் இருக் கிறது என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். முதல்வர் அவர்களுக்கு அந்தச் சிந்தனை தோன்றி இந்தச் சத்துணவுத் திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். முக்கியமாக, மனித வளத்திலே செய்யப்பட்ட ஒரு முதலீடு என்ற அடிப்படையிலே தான் இந்தச் சத்துணவுத் திட்டம் பல நாடுகளிலே கடைப்பிடிக்கிற ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. அமெரிக்க நாட்டு புத்தகம் 'ஸ்பான்'-இல் அந்த நாட்டிலே கூட இந்தமாதிரி சத்துணவுத் திட்டம் வைத்திருக்கிறார்கள் என்று போட்டிருக் கிறார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், வயதானவர்களுக்கும் ஏன் சத்துணவு கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினை மறுபடியும் எழுப்பப்பட்டது. ஆனால் அமெரிக்க நாட்டிலே . .. . .

"With the Federal Government leading the way, old programmes such as the Aid to Dependent Children were expanded and new programmes such as food-stamps to help the poor obtain better nutrition and health care for the elderly and infirms' medicare were taken."

அமெரிக்க நாட்டிலே வயதானவர்களையெல்லாம் S nior Citizen என்று சொல்வார்கள். அங்கு வயதானவர்களுக்கு சத்துணவு கொடுப்பதற்காக "ஃபுட் ஸ்டாம்ப்" என்று ஒன்று கொண்டுவந்திருக்கிறார்கள். இது அமெரிக்க நாட்டிலேயே இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, நமது நாட்டிற்கு இது



எவ்வளவு தேவை என்பதைப் பார்க்கிறோம். அண்மையிலே கௌடில்யா வில் கூட இதுபோன்ற திட்டங்கள் இனப் பெயராலே ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன என்று சொன்னார்கள்.

அதேபோல, பல்பொடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்தபோது, "இதை கிராமத்திலே உள்ளவர்களுக்கும், குழந்தை களுக்கும் கொடுக்கச் சொல்கிறார்கள். இது ஒரு நூதனமான திட்டமாக இருக்கிறது" என்று கூடச் சொன்னார்கள். ஆனால் பல புத்தகங்களைப் படித்துப் பார்க்கிறபோது, இந்தோனேசிய நாட்டிலே கூட குழந்தைகளுக்கு இந்தப் பல்பொடி வழங்குவது அமுலுக்கு வந்திருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்களது எண்ணத்திலே இரண்டு விதமான மாறுபட்ட கோணங்கள் இருக்கின்றன. ஒன்று படித்தவர்களாக இருப்பவர்களுக்கு—கல்லூரியிலே படித்தவர்களுக்கு எல்லாம்—ஒரே மாதிரியாகத்தான் அவர்களுடைய திங்கிங் இருக்கிறது. இந்தக் காலத்திலே புதுமாதிரியாக எண்ணவேண்டிய அவசியம் உள்ளது என்பதைப் பார்க்கிறபோது—சோவியத் நாட்டிலே "கோட்டகிரீன் ஆப் திங்கிங்" என்று சொல்லுவார்கள், அதுபோல்—வேறு மாதிரியிலே எண்ணக்கூடிய அவசியம் என்று பார்க்கிறபொழுது, நமது முதலமைச்சர் அவர்கள் நாட்டுக்குத் தேவையான நல்ல திட்டங்களை ஒரே கோணத்திலே ஆராயாமல், எல்லாக் கோணத்திலேயும் ஆராய்ந்து, நல்லமுறை யிலே அதற்கான காரியங்களைச் செய்துவருகிறார்கள் என்பதை நாம் எல்லாம் கவனிக்க வேண்டும். சில இடங்களிலே உணவு எல்லாம் திருடு போகிறது என்ற குறைபாடு இருக்கிறது. குழந்தைகளுக்குக் கொடுக்கிற உணவிலே பங்குபோடுகிறவர்கள். ஆயாக்களும், பால சேவிகாக்களுமே. நான் ஊர்களிலே உள்ள மக்களைச் சந்திக்கிறேன். இந்தச் சத்துணவுத் திட்டம் நல்லமுறையிலே அமைய வேண்டுமானால் ஆங்காங்கே இருக்கக்கூடிய கிராமங் களில் ஆலோசனைக் கமிட்டிகள் அமைக்க வேண்டும். அதில் உள்ளவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தில் உள்ள சிறிய குறைபாடுகளை ஆலோசித்துச் சொன்னால், அக்குறைபாடுகள் எல்லாம் ஏற்படாவண்ணம் இருக்கும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 பிப்ரவரி 17

தஞ்சை மாவட்டத்திலே பெரு மழை பெய்தது பற்றி ஆளுநர் அவர்கள் தமது உரையில் சொல்லியிருக்கிறார்கள். நான் அண்மையில் தஞ்சையில் இருந்து வருகிறபோதுதான் வயல்களிலே அறுவடை நடந்துகொண்டிருந்தது. திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், பட்டுக்கோட்டை போன்ற இடங்களிலே மறுபடியும் அவ்விடங்களிலே மழையின் காரணமாக பெரிதும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தோம். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் குடிசைகள் பாதித்துள்ளன, கடந்த மழையின் காரணமாக. கிட்டத்தட்ட 17 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் 'கேட்டில்' பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர 2½ லட்சம் ஏக்கர் அந்தச் சமயத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது இன்னும் அதிகமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பெருமழையின்போது உடனடியாக தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று தகுந்த முறையிலே அந்த நிலைமைகளை எல்லாம் கவனித்ததோடு அமைச்சர்களை எல்லாம் அங்கே அனுப்பி, சிறந்த முறையிலே காரியங்கள் ஆற்றினார்கள். அங்கே தஞ்சை மாவட்டத்திலே, திருச்சி மாவட்டத்திலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் அதைப் பெரிதாகப் பாராட்டுகின்றார்கள். அதிலேயும் மிக முக்கியமானது அண்மையிலே குவிண்டாலுக்கு ரூ. 35 அரசினாலே வறட்சி பாசன ஈட்டுத் தொகையாகக் கொடுப்பது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், எனக்குத் தெரிந்தவர்கள், என் உறவினர்கள் எல்லாம் விவசாயிகள் என்ற முறையில் அதைப் பெரிதும் வரவேற்கிறார்கள். அடுத்த மாதம் வரையிலும் தொடர்ந்து அதைக் கொடுக்க இருக்கின்றார்கள். அது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இந்த ரூ. 35 கொடுப்பது என்பது பிப்ரவரியிலிருந்து அடுத்த மாதம் வரையில் என்பது புதிய தகவலாகத் தெரிகிறது. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நேற்றையதினம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. டெலிவிஷனிலும் காட்டப்பட்டிருக்கிறது.



1984 பிப்ரவரி 17] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இந்த மாதம் முடிவு வரையிலே வேண்டும் என்று எல்லோரும் கேட்டார்கள். முதலிலே 15 ஆம் தேதி வரையிலே என்று சொன்னார்கள். இந்த மாதம் முடிவு வரையிலே கேட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள். அடுத்த மாதம் 15 ஆம் தேதி வரையிலே நீடிக்க வேண்டும் என்று தஞ்சை மாவட்டத்திலே இருந்தவர்கள் எல்லாம் கேட்டார்கள். நாம் செய்தி அறிகிறபோது, அடுத்த மாதம் வரைக்கும் அதை நீடித்திருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கிறோம். இது விவசாயிகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று. கொள்முதல் நிலையங்களுக்கு இந்த மழையின் காரணமாக நெல்லைக் கொண்டுவர முடியாத சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு ஒரு திட்டத்தினை முதலிலே வைத்து அதை வாங்கி லாரிகள் மூலமாகவும், டிராக்டர்கள் மூலமாகவும் கொள்முதல் செய்கின்ற நிலையங்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கலாம். அப்படி முதலிலே ஒரு ஏற்பாடு செய்திருந்தார்கள். அது சில நாட்களுக்கு நன்றாக நடந்தது. கிராமங்களிலே இருந்து அந்த இடத்திற்கு ரோடுகள், கொண்டுவரக்கூடிய வசதி, வாகனங்கள் இல்லாத காரணத்திலே கொள்முதல் நிலையங்களுக்கு வரவேண்டிய அளவுக்கு நெல் வராமல் இருக்கின்றது. அதையும் அரசு கவனித்து, பழைய முறையை மறுபடியும் கொண்டு வந்து, எங்கே விளைச்சல் இருக்கின்றதோ அந்த இடத்திற்கு லாரிகளை, டிராக்டர்களை அனுப்பி அங்கேயிருந்து கொண்டு வரக்கூடிய ஒரு பாங்கினைச் செய்தால், நன்றாக இருக்கும் என்று அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று இந்தமாதிரி மழை பெய்த சமயங்களில் நெல்லை உலர்த்துவதற்கு தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே எந்தவிதமான இடமும் கிடையாது. தஞ்சை மாவட்டத்திற்குச் செல்பவர்கள் எல்லாம் பார்த்திருப்பார்கள். நெல் அறுப்புக்குப் பிறகு அதைக் கொண்டு வந்து நடு ரோட்டிலே போட்டு விடுவார்கள். அந்த சமயத்திலே கார் போவதற்கோ, லாரி போவதற்கோ எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமைதான் அங்கே இருந்துகொண்டிருக்கின்றது. அதுவும் இதுபோல மழை பெய்துவிட்டால், எந்தவிதமான முறையிலும் உலர்த்த முடியாமல் அதை அறுத்துக் கொண்டுவந்து தஞ்சையிலே உள்ள பல ரோடுகளிலே போட்டு வைத்து விடுகிறார்கள். அதற்காக திரு. சி.

சுப்பிரமணியம் அவர்கள் மத்தியிலே அமைச்சராக இருந்தபோது, தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களிலே நெல் உலர்த்தும் நிலையங்கள் என்று ஆரம்பித்திருந்தார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அது மிகவும் தேவையானதாகவும் பயன் உள்ளதாகவும் இருந்தது. அப்போது அதை அறுத்து நெல் உலர்த்தும் நிலையங்களிலே கொண்டுபோய் உலர்த்தவும் விற்பதற்கும் விவசாயிகளுக்கு வசதியாக இருந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில் நெல் உலர்த்தும் நிலையங்கள் புஃட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்தினுடைய கண்காணிப்பில் இருந்தன. திடீரென்று பாதிக்கு மேற்பட்ட நெல் உலர்த்தும் நிலையங்களில், அதிலும் கிராமங்களில் இருந்த நிறுவனங்களில், இருக்கக்கூடிய இயந்திரங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வட இந்தியாவிற்குப் போய்விட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது நெல் உலர்த்தும் நிலையங்கள் இது போன்ற சந்தர்ப்பங்களில் மிகவும் தேவையான ஒன்றுதான். அதை எண்ணித்தான் அவர்கள் அப்போது செய்திருக்கின்றார்கள். இன்னும் பல இடங்களிலே நெல் உலர்த்தும் நிலையங்களில் வாங்கிய இயந்திரங்கள் நல்ல முறையில்தான் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் இயங்காமல் இருக்கின்றன. அந்த நிலையிலேதான் இருக்கின்றன. அதையும் அரசு கவனித்து புஃட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நடத்தாவிட்டால். நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்து நடத்தினால், இந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்கு அது நல்ல முறையாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. கட்டவேண்டிய கடனைப் பொறுத்தவரையில், எவ்வளவு தூரம் விவசாயிகள் இந்த நேரத்தில் திரும்பக் கட்டமுடியும் என்று பார்க்க வேண்டும். இந்த நிலைமையில் கடனைத் திரும்பக் கட்டுவது என்பது ஒரு பெரிய பிரச்சினையாகும். ரிசர்வ் வங்கியிலே அந்த மார்ஜின் வைத்திருப்பதன் காரணத்தினாலே, பல இடங்களிலே கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கும் கொடுத்த கடனை இவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று விதி இருக்கின்ற காரணத்தினாலே, சங்கடங்கள் ஏற்படும். திரும்ப கடன் கொடுக்க வேண்டிய நிலையிலே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பணம் வராத நிலைமையும் இருக்கின்றது. எனவே அந்த மார்ஜினைப் பொறுத்த வரையிலே, ரிசர்வ் வங்கியிடம் பேசி they should not insist on the என்ற அளவிலே செய்வோமானால், அது விவசாயிகளுக்குப் பயன் உடையதாக இருக்கும். இந்த ஆண்டு கடன் தொகையைத் திருப்பிக் கட்டுவது சம்பந்தமாகவும் அரசு எவ்வளவு தூரம் விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கமுடியுமோ அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





(முற்பகல் 10-30)

இன்னொன்று, திரு. மாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது, குறிப்பான ஒரு ஆலோசனை சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மையைப் பொறுத்தவரையிலே, ஒரு போகமாக சாகுபடி செய்யலாம் என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். தஞ்சையிலே இந்த சம்பா, குறுவை சாகுபடி காவிரித் தண்ணீர் ஒழுங்கான முறையிலே, தேவையான சமயங்களிலே வந்தால்தான் ஒழுங்காக நடக்கும். ஆனால் கடந்த பல ஆண்டுகளாகப் பார்க்கின்றபோது, காவிரி நீர் சரியான நேரத்திலே கிடைக்காமல், காலம் தள்ளிகிடைத்ததனாலே, எப்போதுமே மழையிலே இந்தப் பயிர் அடிபட்டு தஞ்சை விவசாயிகளுக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே குறுவையை நிறுத்தி சம்பா போடலாமென்ற ஒரு எண்ணம் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதைப் பற்றிப் பத்திரிக்கையிலே வந்திருக்கின்றது. பத்திரிக்கைகளில் இரண்டு நாட்களுக்குமுன் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் பெரிய கட்டுரை ஒன்றை 'இந்து' பத்திரிகையிலே ஒரு போகமாகப் பயிரிடுவதிலேற்படும் பலன் குறித்து எழுதியிருக்கிறார்கள். ஒரு போகமாகப் பயிரிடுவதால் விளைச்சல் பாதிக்காது; கூடுதலாகக் கூட ஏற்படலாம் என்று எழுதியிருக்கிறார். ஆனால் அங்கே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், இப்போதுகூட தஞ்சை மாவட்டத்தினைப் பொறுத்தவரையிலே ஓர் ஆண்டில் 150, 200 நாட்களுக்கு மேல் வேலை இல்லை என்கிற ஒரு கருத்து நிலவி வருகிறது. அது உண்மையும் கூட. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்திலே, குறுவையை நிறுத்திவிட்டு, சம்பாவை மட்டும் போட்டால், விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்களா என்பதுதான் முக்கியமான பிரச்சினை. நானும் மற்றவர்களிடம் இதுகுறித்துப் பேசினேன். விவசாயிகளும். அதிகாரிகளும்கூட பேசிக்கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்கிறபோது. அதை ஆதரித்து இங்கே பேசினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. நல்லசிவனைப் போன்றவர்கள் அந்தத் திட்டத்தை ஆதரிப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அது ஆலோசனை செய்ய வேண்டிய ஒன்று என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 பிப்ரவரி 17

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயப் பெருமக்கள், நிலச்சுவான்தார்கள், விவசாயத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து, தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் செய்யும் முறையை மாற்ற முடியுமா என்று கருத்தரங்குமாதிரி நடத்தி, ஆலோசனை நடத்தினால் நலம் பயக்கும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

குத்தகைதாரர் பிரச்சினை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் சிரமமான பிரச்சினையாக இருக்கிறது. விவசாயம் நல்லமுறையிலே நடந்தால், தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், நாட்டிலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் பணி கொடுக்க முடியும். விவசாயத்தில் இருப்பவர்கள் எல்லாம் நகரத்திற்கு வந்தால், தொழில் கொடுப்பது என்பது இயலாத ஒன்று. கிராமங்களில் இருக்கிறவர்கள் விவசாயத் துறையில் 'இண்டென்சிவ் கல்ட்டிவேஷன்' என்ற முறையிலே செய்து, அவர்களுக்குப் பலன் கிடைக்கிற மாதிரி அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் யாருக்குமே ஆர்வம் இல்லாத நிலைமை இருக்கிறது. நிலச்சுவான்தார்களுக்கும் இல்லை, குத்தகைதாரர்களுக்கும் இல்லை. ஏனென்றால் கிட்டத்தட்ட 15, 20 ஆண்டு காலமாக, நான் உறுப்பினராக இந்த அவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலேயிருந்தே பார்க்கிறேன். குத்தகைதாரர்களுக்கு 'மாரடோரியம்' கொடுப்பதென்பது பழக்கத்திலே இருந்து வருகிறது. குத்தகையைக் கொடுக்கவேண்டாம் என்று அரசாங்கம் சொல்லிக்கொண்டு வருவது நல்லதுதான். நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இங்கே குத்தகைதாரர்கள் பணம் கொடுக்கக்கூடிய நிலையிலே இல்லை. ஆனால் அதே சமயத்தில் மேற்படி நிலங்களுக்குச் சொந்தக்காரர்களான நிலச்சுவான்தார்கள்மட்டும் 'செஸ்' வரி கட்ட வேண்டும் என்று சொன்னால், அதை அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தவிதமான வருமானமும் குத்தகைதாரர்களிடமிருந்து அவர்களுக்கு வராத நிலையில் அரசாங்கத்திற்கு நிலச்சுவான்தார்கள் மட்டும் வரி கட்டவேண்டுமென்று சொன்னால், எங்கிருந்து அவர்கள் கட்டுவார்கள் என்ற பிரச்சினை வருகிறது. 'மாரடோரியம்' கொடுத்து வருகிறோம் என்று சொன்னால், அவர்களே வரியையும் கட்டிவிடலாம் என்ற நிலைமை ஏற்படலாம். மாண்புமிகு அவை முன்னவர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் சொன்னதுபோல, ஏதாவது ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். தனிப்பட்ட நிலச்சுவான்தார்களாக இருந்தாலும் சரி, கோவில்களாக இருந்தாலும் சரி, முடிவு ஏற்பட்டாக வேண்டும்.



1984 பிப்ரவரி 17] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தஞ்சை பெரிய கோவிலைப் பார்த்தீர்களென்று சொன்னால், அங்கே மிகவும் அவல நிலை இருக்கிறது. கோவிலுக்கு இரவு நேரத்திலே குடும்பத்தை அழைத்துக்கொண்டுபோனால் பயப்படும் நிலைமை ஏற்படுகிறது. வெளிச்சம் இல்லை. காரணம் கேட்டால் வருமானம் இல்லை, குத்தகை வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால், தனிப்பட்டவர்களுக்கும் ஒன்றும் வரவில்லை, கடவுள்களுக்கும் ஒன்றும் வரவில்லை, கோவில்களும் பிழைக்க முடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. கோவில் நிலங்களைப் பொறுத்தவரையில், குத்தகைதாரர்களுக்கே கொடுத்துவிட சர். சி. பி. இராமசாமி ஐயர் வகுத்த தஸ்திக் அலவன்ஸ் மாதிரியோ. சுசீந்திரம் கோவிலில் உள்ளதுபோல் 'அன்னுவிடி' (annuvity) கொடுப்பது மாதிரியோ. . .

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்வதிலே ஒரு திருத்தம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தேவசம் போர்டை ஏற்படுத்தியது சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் என்று சொன்னார்கள். சுசீந்திரம் கோவிலுக்கு 'ஆன்யுடி' கொடுத்தது அவர்கள் காலத்தில் என்று சொன்னார்கள். 100, 150 ஆண்டுகளுக்கு முன்பே அரசு கோவில் நிலங்களை எடுத்துக்கொண்டு, அதை குத்தகைதாரர்களுக்குக் கொடுத்து, ஆண்டுக்காண்டு இவ்வளவு தொகை அந்தக் கோவிலுக்குக் கொடுப்பது என்று முடிவு செய்து, கோவிலுக்குக் கொடுத்தார்கள். இன்றைக்கு தஞ்சை பெரிய கோவிலை எடுத்துக்கொண்டு, அதை நடத்துவதற்கு 1 லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முடிவு செய்தார்கள் என்றால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஒரு லட்சம் ரூபாயின் மதிப்பு 1,500 ரூபாயாகத்தான் இருக்கும். மத்திய அரசின் பணக் கொள்கை காரணமாக, பண வீக்கம் காரணமாக ஒரு ரூபாயினுடைய வாங்கும் சக்தி இப்போது 17 ½ பைசா என்று சொல்லுகிறார்கள். வாங்கும் சக்தி இன்னும் குறையப் போகிறது என்று சொல்லுகிறார்கள். இன்ப்ளேஷன் ரேட் 15 சதவிகிதம் போய்க் கொண்டே இருக்குமென்று சொல்லுகிறார்கள். அதனால் வாங்கும் சக்தி ஒரு நேரத்தில் இல்லாமல் போகுமென்ற தகவல் வந்திருக்கிறது. திரு. பிலுமோடி அவர்கள் பார்லிமென்டில் 'எத்தனை ஆண்டுகள் போனால், வேலையில்லாமல் போகும்?' என்று கேட்டமாதிரி, தொடர்ந்து வாங்கும் சக்தி 50 பைசாவாகி, 17½ பைசாவாகி, கோவிலுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தைப் பொறுத்த வரையில், காஸ்ட் ஆஃப் லிவிங்கைப் பொறுத்து, அந்தப் பணத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வழி இருந்தால், கோவில்களைப் பொறுத்த வரையில், அது நல்ல முறையாக இருக்கும். நேற்றையதினம்

சொல்லுகிற நிலைமை இருக்கிறது. குத்தகையையும் கட்ட
வரியையும் கட்ட மாட்டேன், ஆனால் நான் நிலத்தை வைத்துக்கொண்டு
அனுபவித்துக்கொண்டிருப்பேன்" என்று சொல்கிற நிலை அவசியம் தவிர்க்
கப்பட வேண்டும். ஆலயங்கள் நல்முறையில் பாதுகாக்கப்பட வேண்டு
மென்றால், அதற்கு அடிப்படையாக நிலங்களிலிருந்து வர வேண்டிய வருவாய்
ஒழுங்காக வந்தாக வேண்டும். அதேநேரத்தில் அறநிலையைத் துறை
துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொல்லியதுபோல், மாண்புமிகு
அரசே குத்தகைதாராக இருந்து எடுத்து ஆண்டு தோறும் அந்தக் குத்தகைத்
தொகையையும் அரசே செலுத்துவதாக உறுதி அளித்துவிட்டால், ஆலயங்
களுக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. நாங்களே அரசிடத்தில் நிலங்
களைக் குத்தகைக்கு விட்டு விடுகிறோம் என்று அறநிலையத் துறையின் சார்
பில் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. குத்தகை எடுக்கிற விவசாயி
களுக்கு எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் பாதுகாப்பு அளிக்க வேண்டும்
என்பது எவ்வளவு தூரம் நியாயமோ அவ்வளவு தூரம் நியாயம் இந்த நிலங்
களை, இந்த நிலங்களின் வருவாயை நம்பியிருக்கின்ற ஆலயங்களுக்கும்
பொருந்தும். அந்த வகையில் ஆலயங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்
என்பதுதான் என் கருத்து.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இறுதியாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி
என் உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு வறட்சி துயர்
தணிப்பு நடவடிக்கைகளை மிக நல்ல முறையில் செய்திருக்கிறது. கிராமப்
புறங்களில் வறட்சி துயர் தணிப்புக்கு பாசனக் கிணறுகளை அதிகப்
படுத்தி தீர்வு கண்டது போல், நகர்ப் புறங்களிலும், குறிப்பாக சென்னை
நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு போர்க் கால அடிப்படையில் தீவிர முயற்சி
செய்து தீர்வு கண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்ல ஆசைப்
படுகிறேன். வறட்சி நிலை ஏற்படுகிறபோது, நம்முடைய அரசு அதைப்
பற்றி ஆய்வு செய்து கணக்கிட்டு, 114 கோடி ரூபாய் செலவாகும் என்று
முடிவு செய்கிறபோது, அதுகுறித்து மத்திய அரசிலிருந்து மறுபடியும் ஒரு
ஆய்வுக் குழு இங்கு வந்து பார்வையிட்டு 68 கோடி ரூபாய் அளவுக்குச் செல
வாகும் என்று அறிக்கை கொடுத்து, இறுதியாக நமக்கு 34 கோடி ரூபாய்
மத்திய அரசிலிருந்து வரும் என்கிற நிலை இருக்கிறது. நம்முடைய
மாநிலத்தில் வறட்சி என்கிற நிலை வந்த உடனே, மாநில அரசு அதிகாரிகள்
சென்று அதுபற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். மாநில அரசு செய்கிற அந்த
முடிவை மறுபடியும் மத்திய அரசு அதிகாரிகள் வந்து கண்காணித்து, இவ்
வளவு தேவைதானா என்று ஆராய்வது தேவைதானா? மாநில அரசுக்கு 50



கோடி ரூபாய் தேவைப்படும் என்கிற நிலை இருக்கும்போது, 100 கோடி ரூபாய் கேட்டால் என்ன செய்வது என்கிற சந்தேகம் மத்திய அரசுக்கு இருக்கிறது. இதைத் தவிர்க்க மேச்சிங் கிரான்ட் என்கிற முறையில் 100 கோடி ரூபாய் உண்மையிலேயே ஒரு அரசுக்குத் தேவைப்படுகிறது என்று சொன்னால், 50 கோடி ரூபாயை மாநில அரசும், 50 கோடி ரூபாயை மத்திய அரசும் செலவு செய்ய வேண்டுமென்கிற முறையில் ஒரு வழிமுறையைக் கொண்டு வந்தால், மிகவும் நன்றாக இருக்கும். அப்போது சந்தேகமும் அவர்களுக்கு வருவதற்கு வாய்ப்பில்லை. அப்படி வரும்போது, மாநில அரசு 100 கோடி ரூபாய் மத்திய அரசைக் கேட்கிறது என்று சொன்னால், கட்டாயமாக மாநில அரசு 50 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும். அவர்களுக்கும் மாநில அரசுக்கு 25 கோடி ரூபாய் தேவையிருக்க, 50 கோடி ரூபாய் கேட்கிறார்களோ என்று சந்தேகப்படுகின்ற நிலையும் வராது. அந்த வகையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இப்போது மாநில அரசு செய்கிற ஒரு முடிவு பற்றி மறுபடியும் மத்திய அரசிலிருந்து ஆய்வுக் குழு வந்து பார்வையிடுவது சரிதானா? இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு வெள்ள நிவாரணம் கேட்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். தொடர்ந்து மழை பெய்துகொண்டிருக்கிறது என்றால், அவர்கள் அதுபற்றி ஆய்வு செய்ய வரும்போது ஏற்கெனவே மாநில அரசு செய்த ஆய்வுடன் அவர்களின் ஆய்வும் ஒத்து வரும். அதே சமயத்தில் அவர்கள் வரும்போது, இங்கே மழை பெய்யவில்லை என்று சொன்னால், நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இது போல் இயற்கை உற்பாதங்கள், அதாவது வறட்சி, திடீர் வெள்ளம் போன்றவை ஏற்படும்போது, அதை சமாளிப்பதற்காக எந்தவிதமான நிதியும் மாநில அரசுகளோ, மத்திய அரசோ ஒதுக்குவது இல்லை. இதன் காரணமாக அவ்வப்போது இயற்கை உற்பாதங்கள் ஏற்படுகிறபோது, மத்திய அரசின் உதவியை நாம் அடிக்கடி எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே நான் இதற்காக என்ன யோசனை சொல்கிறேன் என்றால், "ரிவால்விங் பண்ட்," அதாவது வறட்சி, வெள்ள நிவாரண சுழல் நிதி என்ற பெயரால் ஒரு நிதியை, ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஒதுக்கிக் கொண்டு வந்தால், உற்பாதங்களைச் சமாளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தனிப்பட்ட கம்பெனிகளில் கூட, மிஷின்களை வைத்துப் பராமரிக்கும் போது, அதற்கு (டிப்ரஷியேஷன் வால்யூ) தேய்மான மதிப்பீடு என்று வருடா வருடம் ஒரு தொகை ஒதுக்குவார்கள். அதே மாதிரி மிஷினை மீண்டும் வாங்கும்போது, அப்போதுள்ள விலையேற்றத்திற்குத் தகுந்தவாறு இந்தப் பணத்தை அதில் எடுத்துக்கொள்ளலாம் என்பதற்காக வைத்திருப்பார்கள். இதை பாலன்ஸ் ஷீட்டிலும் காண்பிப்பார்கள். இதைப்போல மத்திய அரசு பட்ஜெட்டிலும், மாநில அரசுகளின் பட்ஜெட்டிலும் ஒரு தொகை ஒதுக்கலாம் என்று ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இதன் காரணமாக திடீர் உற்பாதங்கள் வரும்போது, திகைப்பு ஏற்படாமலும் இருக்கும். இந்த மாதிரி தொகையைச் செலவு செய்யும்போது, மாநில அரசை மத்திய அரசு கேள்வி கேட்கவும் வாய்ப்பு இருக்காது.

அடுத்ததாக, போக்குவரத்துக் கழகங்கள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலேயே எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், அத்தனை மாநிலங்களிலும் நமது மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் தனிச் சிறப்புப் பெற்றதாக இருப்பதைக் காண்கிறோம். டெல்லி, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பஸ் போக்குவரத்து அவ்வளவு நன்றாக இல்லை. பம்பாயில் 'பெஸ்ட்' கம்பெனி ஆங்கிலேயர் காலத்திலிருந்து சிறப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதை இப்போதும் அதே மாதிரி நிர்வகிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள், தமிழ் நாட்டு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைப் போல் சிறப்பாக எங்கும் இல்லை என்று சொல்வதைக் கேட்கிறோம். இதை வெளிமாநிலங்களுக்குப் போய்வந்தவர்களும் உணர்வார்கள்.

ஆனால் சில சமயங்களில் சில விஷயங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன. கும்பகோணத்தில் உள்ள சோழன் போக்குவரத்துக் கழகத் தில், கடந்த 10-15 ஆண்டுகளாக போக்குவரத்துக் கழகப் பணத்தை கோடிக் கணக்கில் கையாடல் செய்திருக்கிறார்கள் என்று இப்போது நமக்குத் தெரிய வருகிறது. எப்படி இது நடக்க முடிந்தது என்று தெரியவில்லை. அதற் கான ஆடிட் நடக்கவில்லையா, இண்டர்னல் ஆடிட் நடக்க வில்லையா, அக்கௌண்டண்ட் ஜெனரலுடைய ஆடிட் நடக்கவில்லையா என்றெல்லாம் தெரியவில்லை. இவ்வளவு இருந்தும் எப்படி இந்தக் கையாடல் நடந்திருக் கிறது என்று விசாரித்தால், இந்தப் போக்குவரத்துக் கழகங்களை அரசாங்கம் உடமையாக்குவதற்கு முன்பாக, எப்படி டி.வி.எஸ்., ராமன் & ராமன்,





எஸ்.ஆர்.வி.எஸ். கம்பெனிகள் கணக்கு வழக்குகளையும் நிர்வாகத்தையும் நடத்தி வந்தார்களோ அந்த முறையிலே அரசுடைமையாக்கப்பட்ட பின்பும் நடந்து வந்திருக்கிறது. ஆகவே ஒரு போக்குவரத்துக் கழகத்துக்கும் இன்னொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் ஒருமித்த நிர்வாக அமைப்போ, பைனான்சியல் அமைப்போ இல்லை என்று தெரிகிறது. இதற்காக நான் அரசுக்குச் சொல்வதெல்லாம், இந்தக் கம்பெனிகளைப் பொறுத்தவரையில், தனித்தனியாகவோ பொதுப்படையாகவோ ஒரு (பாலிசி எவால்வ்) கொள்கையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் இப்போது வந்திருக்கிறது.

இந்த ஆளுநர் உரையில், பல நல்ல கொள்கைகள் அறிவிக்கப்பட்டிருக் கின்றன. புதிய மாவட்டங்கள் உருவாக்குதல், நிர்வாகச் சீர்திருத்தம், அரசுப் பணியாளர்களுக்குப் பணிக்கொடை வழங்குதல், 1979-ம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் சிறப்பாக வழங்குவது, நான்காவது ஊதியக்குழு அமைப்பது, கட்டிடப் பணியாளர்களுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்குவது பற்றியெல்லாம் ஏராளமான நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டிருக் கின்றன. இவைகளைப் பாராட்டி, இந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துக்களைக் கூற அனுமதித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என் உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் முன்மொழிந்து பேசியதை அடுத்துப் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு உள்ளபடியே நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

ஆளுநர் உரையில், இந்த அரசு எடுத்திருக்கின்ற, எடுக்க இருக்கின்ற, பல் வேறு மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல பல திட்டங்கள் சொல்லப்பட்டி ருக்கின்றன. அதை வரிக்கு வரி ஆதரித்துப் பேசிக்கொண்டே இருந்தாலும், பல்

[திரு. ஜேப்பியார்] [1984 பிப்ரவரி 17

வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களில் நின்று அதற்கு ஆதரவாகவும், அதை விமர்சித்தும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற மின்சாரத் திட்டம் பற்றி, வறட்சியைப்பற்றி, வெள்ளத்தால் ஏற்பட்டிருக்கிற சேதங்களைப்பற்றி நாம் சொல்லிக்கொண்டே போனால், அதற்கு நேரம் கூட போதாது. அப்படி மணிக்கணக்கில் பேசலாம். நாள் எல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் இன்றைக்குள்ள சூழ்நிலையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நேரத்தில், அதை ஆதரிக்காமல் பேசுகின்றவர்கள் வெவ்வேறு கருத்துக்களைப் பேசுவதற்கு முனைந்திருக்கிறார்கள். சில பேர்கள்—மன்றத்திலே இல்லாதவர்கள்கூட—இந்த மன்றத்திலே சொல்லப்பட்ட பிரச்சினைகளை தங்களுக்குச் சார்புடையதாக்கிக் கொண்டு மக்கள் மத்தியிலே தவறான பிரச்சாரங்களை இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். வெய்யில் அடிக்கிற காலத்திலேதான் சில பேருக்கு கீழ்ப்பாக்கத்திற்குப் போக வேண்டிய அவசியம், சந்தர்ப்பம் வருவதுண்டு. ஆனால் இந்தக் கடுமையான மழைக் காலத்திலும் கூட அப்படிச் சில பேர் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அரசு கொண்டு வந்திருக்கிற இந்த நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகிறவன் நானாகத்தான் இருப்பேன் என்று சில பேர் சொல்வதைக் கேட்கிறபோது, ஒருவேளை மழைக் காலத்திலே கூட சில பேருக்குப் பைத்தியம் பிடிக்குமோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு ஒரு சகாப்தத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். மாவட்டச் சீர்திருத்தத்திற்காக பல்வேறு மாவட்டங்களைப் பிரிப்பதைப்பற்றி ஆளுநர் உரையில் தெளிவுபடுத்தியிருப்பதற்காக இப்படி ஒரு ஆட்சி நாட்டிற்கு நெடுங்காலம் தேவையென்று மக்கள் பாராட்டுகிற இந்த நேரத்திலேதான் "குளிர்கால பைத்தியக்காரர்கள்" நடுக்கத்திலே சிலவற்றை உளறிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு அரசியல் கட்சியில் அங்கம் வகிப்பவன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஏ. ஜே. தாஸ் தலைமை)

**திரு. பா. ரா. தாமஸ் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது குளிர்காலப் பைத்தியம் என்றார்கள். அப்படி வேறு வகையான பைத்தியங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** ஒருவேளை கோடை காலத்திலே வர வேண்டியது காலதாமதமாக இந்தக் குளிரிலே வந்திருக்கும்.



1984 பிப்ரவரி 17] [திரு. ஜேப்பியார்]

மாவட்டங்கள் பிரித்ததைக் கூட எடுத்துப் பேசலாம். இந்தியப் போரசும், மற்ற ஒரு கம்பெனியும் இணைந்து மகாத்மா காந்தி பற்றி ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட்டிருந்தார்கள். அதை மூன்று தடவை நான் பார்த்தேன். அந்தப் படத்தைப் பார்த்தபோது, ஒருவேளை நான் வரலாறு தவறாகப் படித்துவிட்டேனோ என்று நினைத்தேன். ஏனென்றால் நான் என்னுடைய இளமைக் காலங்களில் படித்த வரலாற்றுக்கும் இந்தப் படத்தில் வருவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே நான் படித்தது தவறா அல்லது படம் எடுத்தது தவறா என்ற முடிவுக்கு வரமுடியாமல் இருந்தேன். மகாத்மா, காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்படுகிறார்கள், அங்கே சென்று நிலைமையைப் பார்த்தவுடன் போராட்டத்திலே இறங்குகிறார்கள் என்பதை அந்தப் படத்திலே காட்டியிருக்கிறார்கள். இந்தப் போராட்ட உணர்வுக்கு வித்திட்டவர், துணையாக நின்றவர் வள்ளியம்மை என்பதுதான் நாம் படித்த வரலாறு. அந்தப் படத்திலே வள்ளியம்மை என்ற ஒரு பாத்திரம் வரவில்லையே. ஒருவேளை நாம் படித்திருப்பது தவறாக இருக்குமோ என்று எண்ணுகிறபோது, ஆளுநர் உரையிலே வள்ளியம்மைக்கு ஒரு மாவட்டம் அமைத்தபோதுதான், படித்த வரலாறு உண்மையான வரலாறு, படம் போலியானது என்று நான் தெரிந்து கொண்டேன். வள்ளியம்மைக்கு ஒரு மாவட்டம் வைக்கிறபோது, வள்ளியம்மை பெயரை ஒரு ஒன்றியத்திற்கு வைத்திருக்கலாம் என்று ஒருவர் சொல்கிறார். வெளியிலே இருந்து கோட்டையைப் பிடிப்பதாகத்தான் ஓட்டைப் பிடிப்பதற்கு சில பேர் போராட்டம் நடத்துகிறார்கள். வாள் ஏந்தி, வாகனத்தில் ஏறி, யானையில் ஏறி, ஒட்டகத்தில் ஏறி கோட்டையைப் பிடிப்பதற்குப் போவார்கள். வென்று வருவார்கள்; பிறகு கொடியை ஏற்றுவார்கள். சில பேர் கோட்டையை விடுவதற்குக் கூட ஊர்வலம் நடத்துகிற காலம் இப்போது வந்திருக்கிறது. கோட்டை பிடிக்கச் சென்றான் ஊர்வலமாக என்பது போய், கோட்டையை விடுகிறேன் என்பதற்குக் கூட ஊர்வலமாக வந்து கோட்டையை விட்டுச் சென்றார்கள். அவர்கள் வள்ளியம்மை பெயரை ஒரு ஒன்றியத்திற்கு வைத்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதற்கு என்ன பெரிய மாவட்டம் என்கிறார்கள். புரட்சித் தலைவரின் அரசு இந்த நாட்டிலே நின்று பேசுவதற்கு, எழுதுவதற்கு, உரிமைகளை உருவாக்குவதற்குப் போராடிய அந்தத் தியாக மனப்பான்மை உடையவர்களை எப்படி எண்ணுகிறார் என்பதற்கு இது ஒரு அடையாளம். நாடு எல்லாம் இன்றைக்கு கைத்தறியை ஆதரிப்போம், அதை அணிவோம், இந்த நாட்டிலுள்ள மக்களெல்லாம் தமிழை எப்படிப் பேச வேண்டும், எப்படி இலக்கியத்திலே ஈடுபட வேண்டும், எப்படிக் கலையிலே ஆர்வம் கொள்ள வேண்டும், எப்படி மக்களுடைய எண்ணங்களை நாட்டுக்குச் சொல்லி ஆட்சி செய்ய வேண்டும் என்று சொல்லி எப்படி போராட்டம் செய்தார்களோ, அது

போல இந்தக் கைத்தறிக்கும் புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் உருவாக்கி கினார்கள். அப்படிப்பட்ட கைத்தறி விற்பதற்காக ஒரு பிரம்மாண்டமான மாளிகை கட்டப்பட்டது. அரசு பெயரிலே எழுப்பப்பட்ட மாளிகைகளுக்கு தங்கள் பெயரையே சூட்டி அழகு பார்த்தார்கள் ஒரு காலத்திலே. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செலவிலே எழுப்பப்பட்ட கைத்தறி மாளிகைக்கு மகாத்மா காந்தியடிகளின் போராட்டத்திலே பங்கு கொண்ட வள்ளியம்மையின் பெயரைச் சூட்டினார்கள். வள்ளியம்மை அவர் களுடைய பெயர் காலமெல்லாம் இருக்கும்படி ஒரு மாவட்டத்தை அவர் பெயரில் உருவாக்கினார்களென்றால், ஒருவேளை இந்த அரசை அதற்காகப் பாராட்டினால், தங்களுடைய கட்சியிலே தங்களுக்குக் கெட்ட பெயர் வந்து விடுமோ என்று எண்ணினால் கூட, அதற்கு வியாக்கியானம் செய்யாமல் நடு நிலையோடு இருந்தால், நாம் உண்மையிலே சந்தோஷப்பட்டிருப்போம்.

ஒரு கட்சி தனது மாநாட்டிலே ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் போடுகிறது. அது பத்திரிகையிலேயும் வருகிறது. விபரம் தெரியாதவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தவறுகளைச் சொல்லலாமா? ராஜாஜிக்குப் பின்னாலே, அண்ணாவுக்குப் பின்னாலே. காமராஜருக்குப் பின்னாலே விவரம் தெரிந்தவர்கள் வாழுகிறார்கள். இந்த விவரமான காலத்திலே கூட ஒருவர் திண்டுக்கல்லிலே இருந்துகொண்டு இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும், அதற்கு திண்டுக்கல் தலை நகரமாக வேண்டும்." என்று சொல்கிறார். அது எப்படிப்பட்ட திருட்டு? இங்கே உள்ள சில பேர், நான் சொல்லித் தான் ஜீ. ஓ. வந்தது என்று சொல் வார்கள்.

7 ஆண்டுகளாக ஒரு நாட்டை ஆண்டுகொண்டிருந்த கட்சி, அரசிலே தீர் மானம் வருவதாகச் செய்தி வந்த உடனே, நான் சொல்கிறேன் "இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தாக வேண்டும். . . "

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கட்சியை யும் விமர்சனம் செய்வதற்கு உரிமையுண்டு; அதில் நான் குறுக்கிடவில்லை. அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அவர் ஒரு கட்சியை நேரிடையாகவும் சொல்லலாம்; சொன்னாலும் தப்பு ஒன்றும் இல்லை ஏனென்றால் அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள் பதில் சொல்வார்கள். ஒரு ஏழாண்டு ஆட்சி புரிந்த கட்சி. இப்படி திண்டு கல்லிலே போய் நின்றுகொண்டு, ஜி.ஓ. போடுவது தெரிந்துகொண்டு பே கிறார்கள் என்று சொல்வது தவறானது. அப்படி அவர்கள் அதை நிரூபிக்



முடியுமா? ஏனென்றால் பொறுப்பான ஒரு அவையிலிருந்து பொறுப்பான ஒரு கட்சியின் மீது பழியைச் சுமத்துகிறபோது, அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் ஒவ்வொரு கட்சியும் வெளியிலேயும், உள்ளேயும் பேசுவதற்கு உரிமை இருக்கின்றது. அவர் பேசியது "நாங்கள் அமுல்படுத்துவது என்று மனதில் நினைத்திருந் ததை அவர்கள் தெரிந்து சொன்னார்கள்" என்று ஒரு உள்நோக்கம் கற்பித் துச் சொல்வது, இன்றைய முறைக்கு நியாயமானதுதானா என்பதைப்பற்றி மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஜேப்பியார்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்மானம் போடுகிறபோது, ஒரு கட்சி இன்றைக்குத் தீர்மானம் போடுகிறதே என்பதை நான் ஒரு குறையாகச் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் இந்த மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று இன்றைக்கு நேற்றைக்கல்ல, பல்வேறு கட்சிகள் சட்ட மன்றம் நடக்கின்றபோது பல்வேறு நிலைகளில் கேட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் என்னுடைய வாதம் அதுவல்ல. சட்டமன்றம் கூடுகின்ற அந்த நேரத்திலே, இந்த ஆளுநர் உரையில் வரு கின்றது என்று தெரிந்து, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மாவட்டங் களையும் பற்றிச் சொல்லாமல், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, அந்த இடத் திலே நின்று சொல்கின்றபோது இப்படி வருகின்றது என்று ஏற்கெனவே தெரிந்து சொன்னார்கள் என்று சொல்வதிலே தவறு இல்லை. எப்படி பிரிக்கவேண்டுமென்று தீர்மானத்தைப் போடுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதோ அதுபோல இப்படி வரும் என்று ஏற்கெனவே தீர்மானம் போடு வதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று எனக்குத் தெரிகிறது. அண்ணா வினுடைய பெயரை திண்டுக்கல்லுக்கு வைத்தார்கள். அதைச் செங்கல் பட்டுக்கு வைக்கவேண்டும் என்று கூட சில பேர்கள் சொன்னார்கள். திண்டுக்கல் என்பதே வரலாற்றிலே மறக்கமுடியாத ஒரு இடம். விடுதலை பெற்று, அந்த விடுதலைக்கு உறுதிப்படுத்தப்பட்ட இடம். கொடுமைகள் நடந்த நேரத்திலே, கொடுமைகளிலே குன்றாகவும், கொடுங்கோன்மை அத்து மீறிப் போகிறது, எதேச்சதிகாரமாகப் போகின்றது, அதைத் தடைப் படுத்த வேண்டும், அதை நிறுத்த வேண்டும் என்ற முடிவு சொன்ன இடம் அது. அண்ணாவின் பெயராலே முடிவு செய்ய வேண்டும் என்ற நிலையை

யில் சொன்ன இடம். கொடுமைகள் அழிக்கப்பட ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ரத்தம் சிந்தி, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, நீதிமன்றங்களிலே நிறுத்தப்பட்டு, கொடுமைகள் பல இழைக்கப்பட்டு இருந்தோம். அந்த அண்ணாவின் பெயரைத் திண்டுக்கல்லுக்குக் கொடுத்திருக்கிறோம். அது நமக்கு ஒரு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த இடம். அந்தத் தலைநகரத்திற்கு அண்ணா மாவட்டம் என்று வந்ததிலே நான் பெருமையடைகிறேன். ஏனென்றால், அன்றைக்குக் கொடுமைக்குள்ளாகிய தொண்டர்களிலே நானும் ஒருவன். அன்றிருந்த ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதற்கு, அந்த நிலையை உருவாக்கியதற்கு, எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கச் செய்வதற்கு, அதை உறுதிப் படுத்துவதற்கு என்று இருந்த இடம் அதுதான். அதுதான் முதலிடம் என்று நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்கு அண்ணாவின் திருநாமம் பொறிக்கப்படுவது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று இந்த அவையிலே தலைவர் அவர்கள் மூலம் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா செங்கல்பட்டிலே பிறந்தார், அங்கே வைக்கவேண்டும் என்ற எண்ணம் அல்ல. எங்களுக்கு. சுதந்திரம் கிடைத்த இடம் அந்த இடம். அண்ணாவின் பெயராலே உருவாக்கிய, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்ட இடம், ஒத்துக்கொள்ளப்பட்ட இடம். அந்த இடத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசுக்கும், ஆளுநர் அவர்களுக்கும் நான் உண்மையிலேயே நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அண்ணாவை விரும்புகிற அத்தனை பேர்களும், அண்ணாவை ஒத்துக்கொள்கின்ற அத்தனை பேர்களும், அண்ணா தான் தலைவர் என்று ஒப்புக்கொள்கிற அத்தனை பேர்களும் இதை ஒத்துக் கொள்வார்கள் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது.

அதைப் போலவே, இன்றைக்கு மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது பெருந்தலைவர் காமராசர் பெயரை வைத்திருக்கின்றார்கள். அழகிய சின்னம் ஒன்றை இந்த அரசு உருவாக்கிக்கொடுத்திருக்கின்றது. காலம் இருக்கின்றவரை, நாடு இருக்கின்றவரை, எவராலும் அழிக்க முடியாத சின்னத்தை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிக் காட்டினார்கள். காமராசர் பல்கலைக் கழகம். எண்ணிப் பார்க்கிறேன். பல்கலைக் கழகப் பட்டம் பெறாத ஒருவருக்கு, பள்ளிக் கூடத்திலேயே நிரம்ப படிக்காத, பள்ளிக்குச் செல்லாத ஒருவருக்கு, பாமர மக்களுடைய உள்ளங்களை அறிந்தவருக்கு, அவர்கள் உள்ளங்களிலே குடியிருந்தவருக்கு, எங்கே பெருமைப் படுத்த முடியும் என்று பார்த்து பல்கலைக் கழகத்திற்கு காமராசர் பல்கலைக் கழகம்





என்று பெயர் வைத்திருக்கின்றார்கள். அந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய அரசுதான் இன்று அவர் பெயரிலே இந்த மாவட்டத்தையும் உருவாக்கி வைத்திருக்கின்றது. குறுகிய எண்ணங்கள் இருந்த நிலைமைகள் மாறி, அந்தக் குறுகிய எண்ணங்கள் உள்ளவர்கள் கருத்துக்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டார்கள். அந்த தேசிய உணர்வு இருந்திருக்கிறது. ஒரு தேசிய உணர்வு, ஒரு பரந்த உணர்வு கொண்ட அரசு இது. இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதல்ல, இவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதுதான் முக்கியமாகும் என்று எடுத்துக் கொண்டிருக்கிற ஒரு அரசு, இந்த அரசு. இந்த அரசை நடத்துகிற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன், எங்கே இருந்தாலும், நீங்கள் வாழ வேண்டும் என்று அண்ணா சொன்னதுபோல, எந்தக் கட்சியினராக இருந்தாலும், அவர்கள் நாட்டுக்காக என்ன செய்தார்கள் என்பதை மனத்தில் வைத்துத்தான், பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் பெயரிலே ஒரு மாவட்டம்; காமராஜர் ஆட்சிக் காலத்திலே அவரை எதிர்த்தார் முத்துராமலிங்கத்தேவர், அவர்கள் பெயரிலே ஒரு மாவட்டம் என்று அமைக்கப்படுகிறது. இப்படி தேசியப் பற்று, நாட்டு விடுதலைப் பற்று, இலக்கியப் பற்று என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்து அவருக்கு ஒரு மாவட்டம், இவருக்கும் ஒரு மாவட்டம் என்ற ஒரு பரந்த கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்கிறபோது நான் உள்ளபடியே எண்ணிப்பார்க்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கமும். திரு. ஆ. நல்லசிவனும் நல்லவேளை இங்கே இல்லை. இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொல்ல வேண்டிய கடமை. இருந்தாலும் சொல்கிறேன், இல்லாவிட்டாலும் சொல்கிறேன், சபைக்கு வந்தால் நல்லது, நான் தவறான கருத்தைச் சபைக்குத் தரவில்லை.

இந்த மாதம் 14 ஆம் தேதி சென்னையிலே தலைவர்கள் எல்லாம், நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், தொழிலாளர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக குத்தகை தங்களைத் தவிர 'வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள், பொது வேலைநிறுத்தம் என்று அறிவித்தார்கள். ஆனால் அன்றைக்கு இந்த மாமன்றத்தில் இரண்டு அவையிலும் ரஷ்ய குடியரசுத் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. சில பேர் சாவார்கள், சரித்திரம் வரும். சிலபேர் சிறைக்குச் செல்வார்கள். சிறைக்குச் சென்றதற்காக ஒருவன் தீக்குளிப்பான், ஒழுங்காகத் தீக்குளிப்பானோ அல்லது தீக்குளிக்க வைப்பார்களோ எனக்குத் தெரியாது. சிறைக்குச் சென்றாலும் 'ஏ' கிளாஸிலே நல்ல சாப்பாடெல்லாம் தந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டதற்காக சிலர் செத்தார்கள் என்று வரலாறெல்லாம்

வந்தது உண்டு. இவர்கள் அதைப்போல பொது வேலை நிறுத்தம் என்று சொல்லி, அவர்கள் கணக்குப்படி பல இலட்சக் கணக்கான தொண்டர்கள், தொழிலாளர்கள் எல்லாம் 'வேலைக்குப் போகாதே' என்று சொன்னார்கள். அவர்கள் எல்லாம் போக வில்லை. ஆகவே வேலைக்குப் போகாததால் அவர்களுக்குச் சம்பளம் இல்லை. ஆனால் அவர்களை வேலை செய்யாதே என்று சொன்னவர்கள். ஆண்ட்ரபோவ் அவர்களுடைய அந்த மறைவை யொட்டி, இந்த இரண்டு மாமன்றங்களும் அனுதாபத் தீர்மானம் போடவேண்டுமென்று தெரிந்திருந்த போது, இங்கே கலந்துகொண்டு அந்த அனுதாபத் தீர்மானத்திலே பேச வேண்டுமென்ற சூழ்நிலை வருகிறபோது வருகிறார்கள், பேசுகிறார்கள்,

* * * *

**திரு.ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஒன்றை 'உள்நோக்கமாக' வைத்துக்கொண்டு, இந்த அவையில் இங்கே ஒருவர் வந்து பேசுவதற்கு 'மோடிவ்' கற்பிப்பது, ஒரு அவையினுடைய உரிமையை மீறு கிற பிரச்சினை, * * இந்த அவைக்கே வருவதற்கும், பேசுவதற்கும் நோக்கம் கற்பிக்கப்படுவது, அனுமதிக்கப்படுமானால், பேசுவதற்கும் பேசுவதற்கு ஒவ்வொரு காரணம் சொல்லப்படும். ஒவ்வொருவர் பொது வேலை நிறுத்தம் அறிவித்திருப்பது, அவர்களது ஆனால் புரிமை. அந்த உரிமைப்படி அங்கே பொது வேலைநிறுத்தம் நடத்தப்படு பிறப் கிறது. அவர்கள் இந்த அவையிலே ஒரு பெரிய தலைவருக்கு மரியாதை செலுத்தப்படுவதானாலும் சரி, அல்லது எந்தக் காலத்திலானாலும் சரி, உறுப்பினர்கள் வருவதற்கும் உரிமை உண்டு. பேசுவதற்கும் உரிமை உண்டு என்று இருக்கிறபோது * * என்று உள்நோக்கம் கற்பிப்பது, ஒரு மூலாம் பூசி பேசுவதை நான் கண்டிக்கிறேன். அதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் நீக்க வேண்டும், இல்லை என்றால் உரிமைப் பிரச்சினை யாகக் கருதி, உரிமைப் பிரச்சினையை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு உள் நோக்கம் கற்பிக்கிற மாதிரி சொல்வது சரியல்ல. ஆனால் உறுப்பினர் அவர்கள் உள் நோக்கம் கற்பித்தது, அவர்கள் ஆந்திரபோவ் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்க வந்தார்கள் என்பதற்கா அல்லது வேறு நோக்கத்திற் காகச் சொன்னார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டன.





**திரு. ஜேப்பியார் :** என்னுடைய நோக்கமெல்லாம், சில பேர்களை வேலைக்குச் செல்லாதே என்று சொல்கிற உரிமை இருந்தாலும், அவர்களோ பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. நானே கூட்ட ஷைப் பார்த்து, நீங்கள் இந்தக் காரியத்திற்குப் போங்கள் என்றால் அங்கே நானும் போக வேண்டுமென்ற நியதி என்னுடைய மனத்திலே இருக்கிறது அதனால், சில பேர்களைப் போகச் சொல்லிவிட்டு, சில பேர்கள் போ யில்லை என்பதைத்தான் நான் சொன்னேன். வேறு எந்தக் களங்கத்தை யும் நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பின அவர்கள், எந்தக் களங்கமும் சொல்லவில்லை. எந்த உள் நோக்கமும் இல்லை என்று சொன்னதால், அதைப் பற்றிய பிரச்சினை இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சு அவைக் குறிப்பிலே இருக்கிறது. * * * அதைக் குறை சொல்ல யாருக் கும் 'ரைட்' இல்லை. ஆகவே ஒன்று, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள் அல்லது பிரிவிலேஜ் மோஷனாக 'அலவ்' செய்துவிட்டு, பின்னால் இதைப்பற்றி 'டிஸ்கஸ்' பண்ண அனுமதியுங்கள் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்து, இது பற்றி முடிவு செய்யலாம். அவர்கள் பேசியதைப் பார்த்த போது, * * * அவர்கள் பேசியிருக்கிறார்கள். வேறு ஏதாவது உள் நோக்கம் கற்பித்தீர்களா என்று கேட்டேன். 'இல்லை' என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் காரணத்தாலே அதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற கருத்தை நான் சொன்னேன். இருந்தாலும் அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் வலியுறுத்துவார்களானால் என்ன பேசியிருக்கிறார் என்று படித்துப் பார்த்து, முடிவெடுக்கலாம்.

**திரு. ஜேப்பியார் :** இன்று சிம்சன் பிரச்சினை, பின்னி கம்பெனி பிரச் சினை ஏற்பட்டிருக்கிறது. கடந்த 15, 20 நாட்களாக நாட்டிலே வேறு எந்தப் பிரச்சினையும் வராமல், இந்த இரண்டு பிரச்சினைகள் மட்டும் வருமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இவை இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் சனவரி மாதம் 25 ஆம் தேதி ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ஒரு கம்பெனியில் உற்பத்தி நடக்கு மானால், அதனுடைய உற்பத்திச் செலவு போக மீதிப் பணம் 30

* * * தலைவரின் ஆணைப்படி. நீக்கப்பட்டன.

[திரு. ஜேப்பியார்] [1984 பிப்ரவரி 17

கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது; அதிலே ஏறத்தாழ 7 கோடி
ரூபாய் அரசுக்கு வரியாக வருகிறது. மீதிப் பணம் தொழிற்சாலைக்குக்
கிடைக்கிறது. அந்த வருமானம் கடந்த 2 மாதங்களாக இல்லாமல் இருக்கிறது.
ஆனால், தொழிலாளர்கள் எல்லாம் சிந்தித்து இது பற்றிப் பேசி முடி
வெடுக்கலாம்; தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் சொல்லிவிட்டுப் போயி
ருக்கிறார்கள்; சுமார் 85 லிருந்து 100 ரூபாய்க்குள்ளே சம்பள உயர்வு போது
மென்றார்கள்; அதற்குப் பின்னாலே கொஞ்ச பேர், வேலையை விட்டு நீக்கிய
வர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். இதையெல்லாம்
சிந்தித்துச் செயல்படுங்கள் என்று முதல்வரவர்கள் அறிவிப்பு தந்தார்கள்.
இந்த அறிவிப்பை முதலமைச்சருடைய வேண்டுகோள் என்று எண்ணி, சிலர்
தொழிற்சாலைக்குப் போனார்கள். அது அப்படி இருந்து கொண்டிருக்கிறது.
என்னுடைய அனுபவம், ஒரு தொழிலாளி 1,000 ரூபாய் ஊதியம் பெறுவதாக
இருந்தால், இந்த 3 மாத காலத்தில் அவன் 3,000 ரூபாய் இழந்திருக்கக் கூடும்.
மாதம் 100 ரூபாய் சம்பளம் கூட்டிக் கொடுத்தால்கூட... தொழிற் பிரிவு
செட்டில்மென்ட் என்ற அந்த நியதிப்படி 3 ஆண்டுகளுக்கு 3,600 ரூபாய்
சம்பளம் அதிகமாகக் கிடைக்கும். ஏற்கெனவே 5 மாதங்களில் சிம்சன்
தொழிலாளி 3000 ரூபாயை இழந்தாகிவிட்டது. நான் தொழிற்சாலைகளில்
அனுபவம் பெற்றவன், சில தொழிற் சங்கங்களில் தலைவராக இருக்கிறவன்
என்ற முறையில் சொல்கிறேன், 12(3) செட்டில்மென்ட் போடுகிறபோது, 85
ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரைக்கும் சம்பளம் கூட்டிக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டு, அதை நிர்வாகம் ஒத்துக் கொண்டால், மாதாமாதம் சம்பளம்
கூடும். பி.எஃப். தொகை உயரும், கிராஜுவிட்டி நிறைய கிடைக்கும், இதெல்
லாம் தெரிந்திருக்கிறது. போனஸ் அவர்களுக்கு ஏறும். ஆனால் 3 மாதப்
போராட்டத்தில் 3 ஆயிரம் ரூபாயை தொழிலாளர்கள் இழந்தாகிவிட்டது.
12 (3) செட்டில்மென்ட் இன்றைக்கு ஏற்பட்டால்கூட... 100 ரூபாய் சம்பளம்
கூட்டித் தந்ததாக ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டால்கூட, 3 ஆயிரம் ரூபாய்
இழந்தது, இழந்ததுதான். இந்த ஆண்டு, 3 ஆண்டுகளுக்கு 12 (3) செட்டில்
மென்ட் போட்டால்கூட, எந்தவிதமான சம்பளமும் ஏறவில்லை என்ற
கருத்துத்தான் சட்டப்படி நியதிப்படி உண்டு. ஆனால் அதை வேறு முறையில்
வெளியிலே சொல்ல முடியும். இது தான் உண்மையும் கூட. இந்த எண்ணத்
தின் அடிப்படையில் தான் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் ஜனவரி 25 ஆம் தேதி பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது,
யாருக்கும் சாதக பாதகம் இல்லாதவாறு, முதலாளிக்கும், தொழிலாளிக்கும்
சாதக பாதகம் இல்லாதவாறு, ஒரு நாட்டினுடைய நலன் கருதி நடை
முறையில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மறுநாள் முதல்வர் அவர்கள்
முதலாளிகளுக்குத் துணை போய்விட்டார் என்று விமர்சனம் செய்ய ஆரம்



1984 பிப்ரவரி 17] [திரு. ஜேப்பியார்]

பித்து விட்டார்கள். எவ்வளவு பெரிய உண்மையை மறைத்து விமர்சனம்
செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். யார் மீதும்
தப்பு இல்லை என்று பொது நோக்கோடு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதைக் கூட விமர்சனம் செய்
கிறார்கள். இந்த நாட்டிலேயுள்ள 5 கோடி மக்களும் அவர்களை நம்பியிருக்
கிறார்கள். ஒரு முறை நம்பினார்கள். மறுமுறை உங்களை நம்பப் போவ
தில்லை என்று விமர்சித்தார்கள். ஆனால் மறுபடியும் அதே மக்கள் தான்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி
வைத்திருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே தெளிவாகவே சொல்லியிருக்
கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே தொடர்ந்து வறட்சி இருந்திருக்க வேண்டு
மென்று எண்ணுகிறார்கள். தண்ணீர் இல்லையென்று சொல்லி சில பேர்
பானையை உடைத்தார்கள். 'பானை இங்கே, தண்ணீர் எங்கே' என்று
கேட்டார்கள். இப்படி கேட்பதெல்லாம் சில பேருக்குக் கை வந்த கலை.
அதுபோல் முன்பு 'தாலி இங்கே, தங்கம் எங்கே' என்று கேட்டார்கள்.
இம்மாதிரி 'டையலக்' எழுதுவதெல்லாம் அவர்களுக்குக் கைவந்த கலை.
கிராமங்களில் 'பானை இங்கே, தண்ணீர் எங்கே' என்று சொன்னவுடன்
கிராம மக்கள் சரியான பதிலைக் கொடுத்தார்கள். 'மழை இல்லை. ஆகவே
தண்ணீர் இல்லை' என்று சொன்னார்கள். உடனே ஓடிவிட்டார்கள்.
இன்றைக்கு நாட்டை ஆளுகிற சரித்திர நாயகன் வேறு, அன்றைக்கு நாட்டை
ஆண்ட சரித்திர நாயகன் வேறு. இன்றைக்கு நாட்டை ஆளுகிற சரித்திர
நாயகன் மக்களிடத்திலிருந்து வந்தவர், மக்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்,
மக்களால் முழு மனதோடு ஒப்புக்கொள்ளப்பட்டவர். அவர்தான் நம்
முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். நான் சொல்வதெல்லாம்
"பொய்யையே அடிக்கடி சொல்லி பொய்யன் என்கிற பெயருக்கு ஆளாகா
தீர்கள்" என்பது தான். தண்ணீர் இல்லையென்று சொல்லி பானையைப்
போட்டு உடைத்தார்கள். லாரிகளில் தண்ணீர் வரும் இடங்களில் நின்று
கொண்டு நான்தான் தண்ணீர் கொடுத்தேன் என்று விளம்பரப்படுத்திக்
கொண்டார்கள். எல்லாக் கட்சிப் பிரமுகர்களும். அன்றைக்கு தண்ணீர்
வரும் லாரிகளுக்கு அருகில் போய் நின்று தங்களை விளம்பரப்படுத்துகிற
நிலை கூட ஏற்பட்டது. அந்த அடிப்படையில்தான் திண்டுக்கல்லிலும்
சம்பவம் நடைபெற்றது.

[1984 பிப்ரவரி 17

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மாதிரி நிகழ்ந்திருந்தாலும் நிகழ்ந்திருக்கலாம். சென்னையில் தண்ணீர் இல்லை, ஆகவே ஆந்திராவிலிருந்து கொண்டு வர வேண்டுமென்று எல்லாக் கட்சியினரும் பேசினார்கள். அதுகுறித்து பொறுப்பேற்று அரசு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தது. ஒரு கஷ்டம் நாட்டு மக்களுக்கு ஏற்படுகிறது என்றால், அதிலே எல்லாக் கட்சிகளுக்கும் பங்கு உண்டு. திண்டுக்கல் பற்றி திரும்பவும் சொல்வதால் சொல்கிறேன். ஒரு நிகழ்ச்சி நடைபெற்று பல மாதங்களுக்குப் பிறகு ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. ஆளுநர் உரைக்குப் பாதுகாப்பு செய்து தர வேண்டியது அவர்களுடைய கடமை. ஏதாவது முன்னதாகவே வெளியில் வந்தால், அது ஆட்சியிலுள்ளவர்களுடைய "வீக்னஸை"த்தான் காட்டும். ஆளுநர் உரையைப் பார்த்து விட்டுப் பேசுவது என்பதல்ல. எப்போதுமே நீங்கள் சொல்லி, நாங்கள் செய்கிறோம் என்கிற ஒரு பண்பை உருவாக்கிக் கொண்டால் நன்றாக இருக்கும்.

**திரு. ஜேப்பியார் :** ஆளுநர் உரையில் இன்னோர் நல்ல அம்சம் இருக்கிறது. அரசுப் பணியாளர்களுக்காக என்று எத்தனையோ சங்கங்கள் எத்தனையோ ஆண்டுகளாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் இங்கே அருமையாகப் பேசினார். எத்தனையோ கட்சிகள், எத்தனையோ சங்கங்கள் என்றெல்லாம் ரொம்ப அழகாகக் கூறி அவருடைய தனி முத்திரையை, அனுபவத்தைப்பற்றி இங்கே சொன்னார். ஆனால் இந்த அரசாலே அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் இருக்கின்றன, அங்கீகரிக்கப்படாத சங்கங்களும் இருக்கின்றன. ஆனால் எல்லாச் சங்கங்களுடைய ஒட்டுமொத்தமான கோரிக்கை ரூ. 10 ஆயிரம். நேற்றுகூட, உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது, 'தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும்' என்றார். இதை ஒரு பெரிய தத்துவமாகச் சொன்னார். இதை ஒவ்வொரு மதத்தவரும் ஒவ்வொரு விதமாக எடுத்துக் கொள்ளலாம். கிருஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள், கதவைத் தட்டினால், ஏசுநாதருடைய ஆலயங்கள் திறக்கப்படும் என்ற வகையிலே எடுத்துக் கொள்வார்கள். இன்னொரு சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்கள் பழைய காலத்திலே கோட்டையிலே உள்ள நவதானியங்கள் அடங்கிய கோட்டைக் கொத்தளங்களின் அறைகளைத் தட்டுங்கள், அவைகள் கிடைக்கும் என்ற அர்த்தத்தை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அரசு அலுவலர்களைப் பொறுத்தவரையில், இந்த அரசைக் கேளாமலேயே, கதவைத் தட்டாமலேயே இந்த பத்தாயிரம் ரூபாய் அறிவிப்பு கிடைத்திருக்கிறது. அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், எந்த அரசு வந்தாலும் தங்களுடைய எண்ணங்களைச் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு பதில் சொல்லா



[திரு. ஜேப்பியார்]

1984 பிப்ரவரி 17]

மல் காலம் கடத்தியே வந்த பெருமை சிலருக்கு உண்டு. அப்படிக் கேட்காமலேயே, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அள்ளிக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சிதான் என்பதை, வலியுறுத்திச் சொல்வதோடு, கேட்காமலேயே தரப்பட்ட மிகப் பெரிய போனஸ் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

பல்வேறு கோரிக்கைகளை, அவர்கள் முன்வைத்தார்கள். சில சங்கங்கள் இந்த அரசையும், முதலமைச்சரையும் பல்வேறு கோணங்களிலேயே விமரிசித்தார்கள். முதலமைச்சர் சிவப்பாக இருக்கிறாரா, என்ன சாப்பிடுவார், எப்படிப் படுப்பார் என்ற தனிப்பட்ட விஷயங்களைக் கூட விமர்சித்த சங்கங்கள் உண்டு. அதனால் அரசியல் லாபம் கிடைக்காதா என்று ஏங்கிய தலைவர்களும் உண்டு. ஆனால், இந்த அறிவிப்புகள் ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டதும், அப்படி விமர்சித்தவர்கள்தான் முதல் மாலையை மாண்புமிகு புரட்சித் தலைவருக்குப் போட்டார்கள். அந்த அளவுக்கு எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பவர்கள் மாலை போட வேண்டாம், அந்தக் கட்சித் தலைமை சந்தேகிக்கும். பெரிதாகப் பாராட்ட வேண்டாம், அது அவர்களுக்கு சங்கடத்தைத் தரும். ரகசியமாகக் கூட எதிரில் அமர்ந்திருக்கும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, நன்றி என்று சொல்லமுடியாமற் போனாலும். இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலாவது பாராட்டிப் பேசியிருக்கலாம். இந்த ரூ. 10 ஆயிரம் தொகை என்பது, சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்களுக்குப் பலனளிப்பதால், அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி நீடித்து இருக்க வேண்டும். அதற்காக இந்த அரசை அவர்கள் ஆதரிக்கவேண்டுமென்று கூட அல்ல, இந்த அரசு கொண்டுவருகிற மக்கள் நலத் திட்டங்களையும், அவர்கள் நிறைவேற்ற தங்களை முனைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, கேட்டார்கள், தந்தார்கள் என்று இல்லாமல், அவர்களின் மீது அக்கறை கொண்டிருக்கிறது இந்த அரசு, அதற்காக உதவி செய்திருக்கிறது என்பதற்காக இன்னும் நிறைய செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், இந்த உரையில் ஏராளமாக அறிவித்திருப்பதால் அதற்காக நான் பாராட்டைத் தெரிவித்து, இந்த வாய்ப்பளித்தத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

[Thirumathi Tara Cherian] [1984 பிப்ரவரி 17

In the Governor's Address special mention has been made about the ethnic violence in Sri Lanka and the exodus of thousands of people from that country to India. This is apart from the number of repatriates who have come to India under the 1974 Sirimavo-Sastri agreement. A number of people have come to India and they are being housed at Mandapam and other places. The Government have made it clear that the repatriates and refugees have come to our country.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இங்கே பேசுகிறபோது கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சொன்னார்கள் : * * என்ற இந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.*

THIRUMATHI TARA CHERIAN : The Government have allocated a considerable sum of money. The Hon. the Chief Minister has, from out of his own pocket, given a considerable amount. Unless we keep a check over the way in which it is being spent, there is no purpose. We are also grateful to the Hon. the Prime Minister for having taken steps to see that the problem is solved and the Tamils are once again made to live amicably with the Sinhalese in Sri Lanka. We have been told that the families of Kuttimani and Thangadurai have been given assistance. Except that we do not know what has been done by the Government for the thousands of people in Mandapam, I would like to get an answer from the Government on this matter. Out of the funds collected, has any other thing been done? I have gone to Mandapam and I have moved with the people there. Apart from the assistance given by the Central Government, has any other money been given by the Hon. the Chief Minister or the Tamil Nadu Government? I would like an answer to be given by the Hon. the Chief Minister or the Hon. the Leader of the House

* * * *தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டன.*



1984 பிப்ரவரி 17]

The Tamil Nadu Government have constituted a Committee to go into the question of child labour at Sivakasi and other places. I am glad the Hon. Minister in charge is present here. I am one of those people who would never say that we can, with any amount of legislation, ban child labour. Perhaps the child may be the main source, bread-winner of the family. No amount of legislation is going to achieve that. All that I want to know is this. What amount of protection will be given by the Government to those children? The Hon. Minister will have to reply to my question. Of course, we are against the commissioning of child labour. But I feel it is much better to give a job to the child and to afford protection than the child being allowed to go without a job. The father and the mother may not be able to go to the field for work and there may be nothing in the family for sustenance. Therefore, it is very necessary to see that child labour is allowed to go on.

*(மாற்றுத் தலைவர் திரு. ஏ. ஜே. தாஸ் தலைமை.)*

All that we need to ensure is that the education of those children is not deterred and that they are provided better amenities. There is an institution in Tiruchirappalli which is doing very good service. I once mentioned to the Hon. Minister about this institution. At that time, he told me that he would get in touch with that institution. But, nothing has been done. There are a lot of social workers who are doing wonderful work for the benefit of the labourers. I hope that the Hon. the Minister for Labour will remember that I made mention about this institution in Tiruchirappalli. It is a voluntary organisation which looks after the welfare of the labourers. In the evenings, they organise classes in gymnastics. They have been able to persuade the State Bank to organise a small banking service for these pepole so that they can put 50 paise or one rupee every day in a Savings Bank account. I do not even know the names of the members of the Committee set up to look after the welfare of the working children. I would like the Hon. the Minister for Labour to call for a meeting of the social workers who are already in the field, know their experience and make use of them. Here, it would not be out of place to say that the newspapers carry reports about child prostitution . . . . . . . . .

*மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர்கள் என்னைப்பார்க்க வேண்டுமென்று விரும்பினால், எந்த நேரத்திலும் பார்க்க தயாராக இருக்கிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்தால் நல்லது. நான் எந்த நேரத்திலும், மாலை 4 மணிக்கு மேல் பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.*

[Thirumathi Tara Cherian] [1984 பிப்ரவரி 17

திருமதி தாரா செரியன் : அதற்கு நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாலே அவர்களே யோசித்து ஏன் கமிட்டியிலே போடக்கூடாது? நன்றாகப் பணி செய்தவர்களை நீங்கள் போட்டியிருந்தால் நன்றாக இருக்கும். நான் இதற்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கதவைத் தட்டிச் சொல்ல வேண்டியதாக இருக்காது.

Government can make use of their services also.

Sir, in the newspapers, I saw an announcement by the Chief Secretary to Government to the effect that a sum of Rs. 30 crores was going to be disbursed as loans for self-employment. I do not know why this is being done when we are nearing the 31st March and how they are going to scrutinise the applications. I hope I will not be misunderstood if I say that we have done wonderful work in the Social Welfare Board in this field and we are able to ensure the repayment of instalments. I think it would not be out of place to mention what happened recently in Kerala. There, the officers were asked to organise a 'Loan Mela'. On such occasions, the officers quickly collect some pepole, get applications from them and disburse the loans. Sometimes the applications are scrutinised and sometimes they are not scrutinised. Naturally, the Bank Officers got annoyed on this and the Secretary-General of the All-India Confederation of Bank Officers has issued a statement saying, "Any haste in disbursing credit may result in the wrong people availing themselves of the loan. The present loan camp is nothing new". I am sorry I have to mention the name here. "It is only that Mr. Poojari now wanted the Banks to extend financial assistance to a bigger group within a short period. It appears that this idea of 'Loan Mela' in urban centres has been conceived by the officers and the Minister from the credit camps in rural areas. There is a lot of difference between the 'Loan Mela' and rural credit camp. Rural Credit camps are organised jointly by various States and the Central Government and the major burden in dispensing with this credit is undertaken by the Government agency. These camps are in the nature of education camps."

(முற்பகல் 11-40)

Therefore, Sir, my suggestion is this. I am no better than others. We must co-operate with the Bank officials. Whenever we give loan assistance to any group of people, it must be impressed that the same should be repaid. Let us not have political thinking in every



1984 பிப்ரவரி 17] [Thirumathi Tara Cherian]

assistance. Otherwise, one particular party alone will take credit for the work and we should see that all persons are benefited. I do hope consideration will be given to this suggestion.

I am sorry that sometimes wrong information is given and unnecessarily the name of the Minister and the name of the official are brought in for criticism. Therefore, one has got to be very careful in what we are doing.

One of the things in which I am very much interested is the condition of children who are subjected to child labour. A lot of things are being done for such children. I would like to suggest that the children who are in the orphanages may be treated on a par with the Scheduled Castes and Scheduled Tribes in the matter of concessions for education, employment, etc. They do not belong to any caste, as their parentage is not known to cite a caste. Institutions are finding it difficult to rehabilitate them. So far no Government in the country has given thought to this question. I request the Tamil Nadu Government to extend this concession to them so as to help the voluntary institutions in their efforts to rehabilitate the orphans and destitutes. Their condition is pitiable because, after their stay for some time in the Orphanages, etc., they are thrown into the world and they are not able to get admission into cottages and other educational institutions because they have no money or wherewithal. When so many concessions are given to so many persons these persons also should be classified as Scheduled Castes and Tribes. I hope It will get another opportunity when I can talk about this subject in greater detail.

During the Tiruchendur bye-election, I found in the newspapers as a bolt from the blue that one particular Christian community was ordered to be considered backward class. There are thousands of people in Christian community who deserve such treatment. If I am not mistaken. I can give them by name. They are Sudras, Parayas and there are various other persons who are not getting this concession once they become converts to Christianity. Why should this concession be extended to a particular Christian community alone? Can it not be extended to others also? I would like the Government or the Hon. the Leader of the House, who is present here, to explain to me in what connection this was done. Anybody, to whichever community he may belong, joining Christianity becomes a member of the forward community. How was this particular community given the concessions at that time? I request

**the Government to go into this question in detail and see that the** same justice done to others also. I would not take much of the **time of the House. I have got many points to make and I do not know where I am.**

This is one of the important questions in my mind. In this **world.** I am a woman who has celebrated Sastihaptapoorthi and **who has attained almost the age of going down the grave and I am** a mother. I have been watching the value of the morals going **down very much. Morality of the Nation and morality of the people has gone down and I am sorry to say this. I wonder whether this generation will be able to redeem it. The same conditions exist in the whole of the country. We are sorry to see** some of things done by the different political people and also **the activities of the children. One has got to be vigilant, particularly when the Government money is involved, and we should** see to the proper handling of it. Nothing can be done in the Government offices and at other places, unless the palm is greased. Everybody knows this. Today. you cannot get anything done in the world without greasing others' palms. This is happening in Delhi and this is happening everywhere. But, Sir, two wrongs would not make a right. So **many bad things are happening in the world and you and I would not like the future generation to grow in such a world. I wonder whether 'Normal Science' and 'Ethics' would again be taught as** subjects in the schools. If that is done. at least the children in the schools will be able to distinguish the right from the wrong. However good the motive may be, however much we may want to help the people, the means through which things are done have also got to be noble. Therefore, I hope that my suggestion will be accepted.

Regarding strikes and other labour problems, **I have always been feeling happy that,** compared to other States, **there has not been** much of labour trouble in our State. But, now, I think that the **labour** trouble is coming in slowly. We have got a very good and strong Minister for Labour and I hope he will take care of this **problem.** Different Labour Unions are there. But, sometimes, a **political** game also is played through these strikes and other things and this causes us much concern.



Sir, I now come to the subject 'Education'. I have a feeling that from the time elected Governments came to power, there has been a possibility for education sometimes becoming something like a foot-ball in the hands of the politicians. Now, we have brought the 10 plus 2 system of education. In the vocational stream, we are giving some vocational training to the students. But, we have not considered whether all those students who study in the vocational stream could be taken in for employment by private companies or whether all of them could start their own private industries after finishing the Higher Secondary Education. The Government themselves have not changed the norms for making recruitment to Government jobs. In the application forms for Government jobs, it is asked whether the candidate is a Degree holder. Only a Graduate Engineer is selected for a Government job and not a person who has passed a course in Polytechnic. Therefore, we have to consider how we are going to provide jobs for all these students who study in the vocational stream.

Sir, I am happy to find that the public undertakings of the State Government are facilitating the growth of industries. Some new units are being started and the paper manufacturing unit is one of them. I congratulate the Government on their launching new endeavours. But, at the same time, I hope I will not be misunderstood when I say that many units started in this country in the public sector are still in the red. Therefore, great care has to go into these projects at the planning level itself. There is a feeling among the industrialists in the private sector that they are not being consulted and that their advice is not taken in these matters The advice rendered by the bureaucrats alone will not help in these matters because there is a difference between our bureaucrats and the bureaucrats in other countries. When an industry is started in the public sector with an investment of Rs. 10 crores, besides considering how many employment opportunities will be generated, we have to see whether the working of the industry will yield good results. For this, we need the full co-operation of the private sector. I hope that the new units that the Government are going to start will meet with great success.

Sir, I do not think that our Governor had been in the Tourism Department at the Union Government level. But, I must say that under the able guidance of the Hon. the Leader of the House, the tourism industry in Tamil Nadu has come up very nicely compared to what it was some years ago. But, still there is a lot of potential and the tourism trade can work more successfully. If the tourism industry flourishes, most people will go into employment and more foreign exchange will come in. I hope that the Hon. Thiru Veerappan and other Ministers will be able to see that Tamil Nadu gets a more prominent place in the tourism map of our country. Previously, Tamil Nadu used to be neglected. I was once a Director in the Indian Airlines Corporation and I used to fight with Thiru J. R. D. Tata for better air services to Tamil Nadu. But, now things have changed. I only hope that we will be able to give a fillip to the tourism industry in Tamil Nadu so that, besides earning foreign exchange and providing employment opportunities, we may show to people elsewhere what Tamil Nadu is and what the culture of Tamil Nadu stands for.

Sir, without taking much time, I would like to say a few words about the Noon Meal Scheme. The Hon. Deputy Chairman also spoke about it. I have been in the High Power Committee for the implementation of this scheme. Even the bitterest enemy of the Chief Minister will never be against this scheme. There has been more attendance in the schools, the children have grown well and their physical condition also has become better. Because he went through difficult times during his childhood, the Hon. the Chief Minister has set a target and wants to see that as many children as possible are benefited by this scheme.

(முற்பகல் 11-50)

Before formulating any plans, he started the scheme. He thought about it and the scheme was begun, before making preparations. There were criticisms against the scheme. Any good scheme will have to face criticism. Our Hon. Deputy Chairman talked about it. So far as the pensioners are concerned, they cannot come to the school to get food. There is also a proposal to extend it so as to cover children up to 15 years of age. Before such extension, let us make an evaluation of the working of the scheme and consider ways and means of making it complete and fool-proof. The Noon Meal Scheme is very, very important. But before we extend the





scheme to others, we should see that it becomes a self-servicing scheme, that, we have good cooks and that there is no pilferage. It is necessary that we should be vigilant in seeing that the money is not taken away for purposes for which is is notified.

I think I will have more time to speak on some other occasion when I could refer to certain other things which I have missed to mention now. I thank you for the opportunity given and I also thank His Excellency the Governor for his Address to the Legislature.

*திரு. பா. அங்கமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே கண்ணியமிக்க சான்றோர்கள் நிறைந்துள்ள இந்த அவையிலே தொழில் கலைஞர்கள் சார்பில் உழைக்கும் வர்க்கமான ஐந்தொழிலாளர்களும் திருப்தி அடையக் கூடிய நிலையில் என்னை உறுப்பினராக்கிப் பெருமைப் படுத்திய என்னுடைய இதய தெய்வமான முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் திருபாத கமலங்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். சினிமா கலைத் தொழிலாளர்கள் சார்பிலும் என்னுடைய நன்றியைப் புரட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1984 ஆம் ஆண்டுத் துவக்கத்திலேயே வந்துள்ள ஆளுநர் உரை தமிழக மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய புத்தாண்டுப் பரிசாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சிகளின் போராட்டங்களைச் சமாளித்து வெற்றி கொள்வதைப் பார்க்கிறோம். தமிழகத்தில் உள்ள இன்றைய எதிர்க் கட்சி நாளுக்கு ஒரு போராட்டம் நடத்தியது. புரட்சித் தலைவரின் லட்சியப் பயணத்தில் தடைக் கற்களாக முளைத்த போராட்டங்கள் அவரது காலடிப்பட்டு படிக்கட்டுகளாக மாறிவிட்ட சாதனையைத் தமிழகம் கண்டது. எதிர்க் கட்சிகளை முனை முறியவைத்து நிற்கும்போது இயற்கை தன் போராட்டத்தை ஆரம்பித்தது. வறட்சியாக வந்தது. பிறகு வெள்ளமாக வந்தது. அவற்றையும் முறியடித்து மேலே சென்று நிமிர்ந்து நிற்கிறார் புரட்சித் தலைவர் அவர்கள். என்ன காரணம்? எப்படி முடிந்தது அவரால் ஐந்தரை கோடி மக்களின் இதய பலம் அவரது கரங்களிலே இணைந்திருப்பதுதான் காரணம். அவரை எதிர்க்கும் இயற்கையே தோல்வி கண்டு முடங்கிவிட்டது. நாட்டு நலனையே நினைத்து ஆட்சி செய்யும் நல்லவர்களிடம் இயற்கையே சீறி வந்தாலும் தோற்றுப் போகும் என்பதனை புரட்சித் தலைவர் ஆட்சியிலே தமிழகம் காண்கிறது.

[திரு. பா. அங்கமுத்து] [1984 பிப்ரவரி 17

உழைப்பவர் உலகம் புரட்சித் தலைவரின் இதயத்திலே இடம் பெற்றிருக்கிறது என்பதற்குத் சான்றாக இந்த அவையிலே நான் உரையாற்றிக் கொண்டிருக்கிறேன். நண்பர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மாசிலாமணி, கோலப்பா போன்றவர்களும் என் பக்கத்திலே அமருகின்ற வாய்ப்பு அதற்குச் சான்றாக விளங்குகிறது. உழைக்கும் வர்க்கத்தின் சார்பிலே இதயம் நிறைந்த நன்றியை எங்கள் புரட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் வரலாற்றில் பல ஆளுநர் உரையை இம்மாமன்றம் கண்டிருக்கிறது. ஆனால் வரலாற்று நாயகர்களின் பெயரை தமிழகத்தின் மாவட்டங்களுக்கு வைத்து பெருமைப்படுத்தும் காட்சியை இன்று தமிழகம் கண்டு வருகிறது. ஒரு வரலாற்று நாயகர்தான் இம்மாதிரி வரலாறுகளைச் சாதிக்க முடியும். எங்கள் புரட்சித் தலைவர் ஒரு வரலாற்று நாயகர் என்பதற்கு இந்த ஆளுநர் உரை சாட்சியம் கூறுகிறது.

உழைப்பவரே உயர்ந்தவர் என்ற தத்துவத்திற்கிணங்க உழைப்பவர்களுக்கே இந்த உலகம் சொந்தமாக வேண்டும் என்ற கொள்கை இந்த அரசின் கொள்கை என்பதை விட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டமும் தொழிற் கல்வி முறையை அமுல் படுத்தும் திட்டமும் வெளிப்படுத்துகிறது. உழைப்பவர்களை எந்த நாடு மதித்துப் போற்றுகிறதோ அந்த நாடுதான் முன்னேற்றப் பாதையில் செல்லும். இதை உணர்ந்து தொழிற் கல்வியைப் புகுத்தும் திட்டம் இந்த உரையில் கூறப்பட்டுள்ளது பெருமைக்குரியது.

கிராமப்புறத் தொழிலாளர்களுக்கும். கைவினைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறந்த திட்டத்தைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக கிராமத் தொழிலாளர்களாக உள்ள கொல்லர், சிற்பி, தச்சர், கன்னார், பொற்கொல்லர், கட்டிடத் தொழிலாளர்கள் மற்றும் உள்ள ஏனைய தொழிலாளர்கள் நல்வாழ்வு பெறுவார்கள். அந்த கிராமத் தொழிலாளர்கள் சார்பாக நம்முடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த கட்டிடத் தொழிலாளர்களுக்கு இது பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் சிற்பம் படைத்தவர்களுக்கும் தன் பெயரை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போன காலம் அன்று. ஆனால் இன்று கட்டிடத்தைக் கட்டும் தொழிலாளியைக் கொண்டே



1984 பிப்ரவரி 17] [திரு. பா. அங்கமுத்து]

கட்டிடத்தைத் திறக்க வேண்டுமென்று கூறியவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர். அவரது அடுத்த திட்டம் கட்டிடத் தொழிலாளர்களுக்கு உதவிப் பணம் அளிப்பது. கட்டிடத் தொழிலாளிகளை அரவணைத்துச் செல்லும் செவிலித்தாயாக தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் விளங்குகிறார். கட்டிடத்தைத் திறக்க வேண்டுமென்று கூறிய பொன்மனச் செம்மல் புரட்சித் இருப்புப் பத்தாயிரம் ரூபாய் வழங்கும் புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் எதிர்காலம் புரட்சித் தலைவரின் கரங்களிலே ஒளிமயமாகக் காட்சியளிக்கப் போகிறது என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல், எடுத்துக் காட்டுகின்ற இந்த ஆளுநர் உரையை மனமாரப் பாராட்டுகிறேன். உழைப்பவர்களின் வளமான எதிர்காலம் இதிலே இருக்கிறது. எளிய சமூகங்களின் ஏற்றம் இதிலே தெரிகிறது. அவர்களின் சார்பில் இதயம் நிறைந்த நன்றியை புரட்சித் தலைவருக்குக் காணிக்கையாக்குகிறேன்.

ஐயாவின் தொண்டனாக, அண்ணாவின் தம்பியாக இருந்து, புரட்சித் தலைவரை இதய தெய்வமாக ஏற்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனாகிய என்னை கண்ணியமிக்க சான்றோர்கள் நிறைந்துள்ள இந்த அவையிலே இணைத்து பெருமைப்படுத்திய இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கு என் நன்றியை மீண்டும் கூறிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். வாழ்க புரட்சித் தலைவர் அரசு வளர்க புரட்சித் தலைவரின் புகழ்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு, இந்த மன்றத்திற்குப் புதிதாக வந்திருக்கிற உறுப்பினர்களுக்கும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மேலவையின் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் அணியின் சார்பாக நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தில் சில கருத்துக்களைக் கூற அனுமதித்ததற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டதற்கு மாறாக சில முக்கியமான அறிவிப்புக்களை அறிவித்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒன்றிரண்டு அவற்றில் குறிப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னால், எல்லாரும் சொன்னதையே நானும் சொல்ல வேண்டும். மாவட்டங்களைப் புதிதாகப் பிரிக்கும் அறிவிப்பு, கட்டிடப் பணியாளர்களுக்கு நலநிதியாக அவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் உதவித் தொகை தருவது பற்றிய அறிவிப்பு, அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்போது, உதவித்தொகையாக ரூ. 10 ஆயிரம் தருவது, நடப்பாண்டில் ஊதியக்குழு அமைப்பது சம்பந்தமான அறிவிப்பு வரும் என்ற அறிவிப்பு போன்றவைகள் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க அம்சங்களாக இருக்கின்றன. இதற்காக எல்லோருடனும் சேர்ந்து நானும் எங்கள் அணியின் சார்பாக, ஆசிரியர்களின் சார்பாக, அலுவலர்கள் சார்பாக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் மாவட்டங்களைப் பிரிப்பதென்பது, ஏழையெளிய மக்களுக்கு, அரசாங்கத்தின் திட்டங்களுடைய பயன்கள் விரைவாகப் போய்ச் சேர வேண்டுமென்பதற்காகவும், நிர்வாகத்தை விரைவுபடுத்த வேண்டுமென்பதற்காகவும், நிர்வாகத்தை எளிமைப்படுத்த வேண்டுமென்பதற்காகவும் தான், இந்த மாவட்டங்களைப் பிரிக்கிறோமே தவிர, வேறு அம்சங்கள் இதில் முக்கியமானவை அல்ல என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த மாவட்டங்களைப் பிரிப்பதன் மூலம், விரைவாக நிர்வாகம் நடக்கும், ஏழையெளிய மக்களுக்கு அரசின் திட்டங்கள் முன்பிருந்த தாமதம் இல்லாமல், மிக அதிகமாக வேகத்தோடு சென்றடையும் என்பதை நாம் நிலைநாட்டினால்தான், மாவட்டங்களைப் பிரிப்பதன் இலட்சியத்தை அடைந்தோம் என்ற பெருமையைப் பெற முடியும். ஆகவே அந்த வகையில் இந்த மாவட்ட நிர்வாகங்களை எளிமைப்படுத்தி, ஏழையெளிய மக்களுக்கும், பாமர மக்களுக்கும் அரசு செய்யக்கூடிய நல்லவைகள் வேகத்துடன் விரைவாகச் சென்றடைவதற்கான திட்டங்களையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கட்டிடத் தொழிலாளர் நலநிதி அறிவிப்பு. இந்தக் கொள்கையை வரவேற்கிற சமயத்தில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களிடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் வரும்போது, அத்தகைய கோரிக்கைகளையும் அரசு ஆய்ந்து அனுதாபத்துடன் பரிசீலனை செய்து வருங்காலத்தில் நல்ல அறிவிப்புக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, ரூ. 10 ஆயிரம் உதவித் தொகை அளிக்கப்படுமென்ற அறிவிப்பைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்கள் பாதித் தொகையையும், அரசு மேற்கொண்டு பாதித் தொகையையும் சேர்த்துத் தருகிற அந்தத் திட்டத்தை, இந்த அரசு முதன் முதலாக அறிவித்ததற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் போது, அல்லது அதற்காக அரசு ஆணை வெளியிடும்போது, ஏதேனும் குறைபாடு இருந்தால், அப்படி ஆணை வெளி வந்த பிறகு பேசித் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால், ஆணை வெளியிடுவதற்கு முன்பே, அதுசம்பந்தமான நுணுக்கமான கருத்துக்களை பல்வேறு தரப்புச் சங்கங்களையும் அழைத்துப் பேசி, அதில் ஏற்கத்தக்க கருத்துக்களைச் செயல்படுத்துகின்ற வகையில், அரசு ஆணைகள் வெளியிடப் படுமானால், ஆணை வந்த பிறகு குறை சொல்வோர் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஆணை வெளியிடுவதற்கு முன்பு, பல விஷயங்களைக் கேட்காமலேயே, ஒரு தலைப்பட்சமாக, ஏதோ இந்தத் தமிழகத்தில் ஏகபோக தலைவராக இந்த ஏழரை லட்சம் அரசு ஊழியர்களுக்கும் நாம்தான் இருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அப்படி விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தலைவர்களை அழைத்துப் பேசி, ஒரு தலைப்பட்சமான கருத்துக்களைக் கேட்டு, ஆணை வெளியிட்டால், அதில் குற்றங் குறைகள் இருக்கலாம். ஆகவே அதைத் தவிர்க்கும் வகையில், அனைத்துச் சங்கங்களையும், அனைத்து தரப்பிலும் கலந்து அவர்களை அழைத்துப் பேசி, அரசு ஆணையை முழுமையானதாக வெளியிடவேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அது மட்டுமல்ல, அந்த அரசாணையில் எப்போதும் போல சந்தேகத்திற்குரிய இடம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக அரசு சலுகைகள் அறிவிக்கப்படும்போது, தனியார் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியவர்களுக்கும் அவைகளை விரிவுபடுத்தும் வகையில் ஒரு வாசகமும்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 பிப்ரவரி 17

சேர்த்திருக்கப்படும். இந்த முறை அப்படி வரவில்லை. இதைப்போலவே மூன்றாண்டுக்கு முன்பு விடுப்புப் பயணச் சலுகை கொடுத்தபோது, 'அரசு ஊழியர்களுக்கு' என்று சொல்லிவிட்டு நிறுத்தியதால், தனியார் பள்ளி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு இன்றுவரை அந்தச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. அதைப் பெருங்குறையாகவே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல இந்த அறிவிப்பு ஆகிவிடக்கூடாது. தனியார் பள்ளி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்கள் ஆகியவர்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் இந்த அறிவிப்பு குறித்த ஆணை வெளியிடப்பட வேண்டுமென்று இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நடப்பாண்டில் ஊதியக் குழு வருவது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நடப்பாண்டு என்றால் நிதியாண்டிலா அல்லது நடப்புக் காலண்டர் ஆண்டிலா என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. நடப்பு நிதியாண்டிற்குள் வரவேண்டுமென்பது என்னுடைய ஆசை. மார்ச் மாத இறுதிக்குள் இந்தப் பட்ஜெட் காலக் கூட்டத்தொடரிலேயே ஊதியக் குழு பற்றிய அறிவிப்பைத் திட்டவட்டமாக அரசு அறிவித்தால், பல குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். இந்த ஊதியக் குழுவைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே இருக்கின்ற மூன்று லட்சம் ஆசிரியர்கள் சார்பாக ஒரு கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறேன். மூன்று லட்சம் ஆசிரியர்களுக்கென்று ஒரு ஊதியக் குழுவும், ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களுக்கு என்று ஒரு ஊதியக் குழுவும், ஆக இரண்டு ஊதியக் குழுக்கள் அமைத்தால் தான், ஆசிரியர்களுக்கென்று இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை ஆராய்ந்து நியாயம் வழங்க முடியும். இந்த விஷயத்தில் மத்திய அரசினர்கூட நல்ல முன்னுதாரணத்தைக் காட்டியிருக்கிறார்கள். அதனால்தான் மத்திய அரசினர் ஆசிரியர்களுக்கென உள்ள பிரச்சினைகள் தனித்தன்மை வாய்ந்த பிரச்சினைகள் என்று கருதி, தனி அணியாகப் பிரித்து ஊதிய நிர்ணயம் செய்து இங்கேயுள்ள குறைபாடுகளைத் தவிர்த்திருக்கிறார்கள். அந்த நல்ல



1984 பிப்ரவரி 17] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

செயலை நாமும் பின்பற்ற வேண்டும். மொத்தமுள்ள ஏழரை இலட்சம் ஊழியர்களில் மூன்று இலட்சம் ஆசிரியர்கள் இருப்பதால், அவர்களுடைய தனித்தன்மை வாய்ந்த ஊதியப் பிரச்சினைகள் குறித்து ஆராய ஆசிரியர்களுக்கென தனி ஊதியக் குழுவை அமைக்க வேண்டுமென்று மூன்று இலட்சம் ஆசிரியர்கள் சார்பாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், ஊதியக் குழுவின் அறிக்கை வந்து அமுல்படுத்தும் வரை வழக்கமாகக் கொடுக்கக்கூடிய இடைக்கால நிவாரணத்தை வருகின்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே அறிவிக்க வேண்டுமென்று ஆசிரியர்கள், அலுவலர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலோடு இணைந்த கல்வித் திட்டத்தைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மகாத்மா காந்தி அடிகள் தன்னுடைய முக்கியப் பேச்சாகக் கூறிய ஆதாரக் கல்வித் திட்டத்தை செயற்படுத்த வேண்டுமென்ற ஆசையில் தொடங்கப்பட்டு, பல்வேறு குறைபாடுகளின் காரணமாக சரியான முறையில் செயல்படுத்தப்படாமல் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. ஆனால் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே பயின்று மாணவர்களுக்குத் தொழிலோடு இணைந்த கல்வித் திட்டத்தைத் தரவேண்டுமென்று உறுதியாக இருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆசிரியர்களாகிய நாங்கள் இதனால் பெருமைப்படுகிறோம். காரணம், எங்களிடம் படிக்கும் மாணவர்கள் வேலை இல்லாமல் சுற்றித் திரிவதால், அவர்கள் பல்வேறு சமுதாயத் தீமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தத் தொழிலோடு இணைந்த கல்வித் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். மத்திய அரசோடு வாதாடி போராடி இத்திட்டத்திற்காக அதிக நிதியுதவி பெற்று, வருகிற கல்வியாண்டு முதல் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்வித் திட்டத்தை அப்படிச் செயல்படுத்துவதற்கு முன்பாக எந்தெந்த சூழ்நிலையில் எந்தெந்த வகையிலே அமைக்கலாம் என்பது குறித்து ஆசிரியர்களுடைய அனுபவங்களையும், தொழில் துறையில் ஈடுபட்டிருக்கிற தொழில் நிபுணர்களின் கருத்துக்களையும் கேட்டுப் பெற்று அமைப்பதுதான் சரியான ஒரு கல்வித் திட்டமாக இருக்கும். தொழில் கல்வித் திட்டத்தைப்பற்றிச் சரியாகத் தெரியாதவர்களைக் கூப்பிட்டுக் கேட்பதைவிட, தெரிந்தவர்களைக் கூப்பிட்டு அறிய வேண்டும். வெறும் நிர்வாக

ரீதியாகவே எண்ணக் கூடியவர்கள், அணா, பைசாவாக சொல்லக் கூடியவர்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி இத்திட்டத்தை உருவாக்கினால், கடந்தகாலத்திலே கல்வித் திட்டத்திலே ஏற்பட்ட கோளாறுகள் மீண்டும் ஏற்படக்கூடும் என்பதை எச்சரிக்கையாக அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சத்துணவுத் திட்டத்தை நாங்கள் எல்லாம் தீவிரமாக ஆதரிக்கக்கூடியவர்கள். இந்த நாட்டிலே இந்த மாணவர்கள் பசிக் கொடுமையினால் அவதிப்படுகிற, வாடுகின்ற கொடுமையான காட்சியை, மற்றவரையும் விட நாங்கள் நன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, அந்தப் பசிக் கொடுமையைத் தீர்ப்பதற்கு இந்தத் திட்டம் உதவி செய்கிறது என்பது மட்டுமல்ல, மேலும் மேலும் மாணவர்கள் பள்ளிக்கூடங்களிலே சேருவதற்கு ஒரு தூண்டுதலாக இருக்கிறது. கல்வி வாய்ப்பு மாணவர்களுக்கு அதிக அளவில் கிடைக்கின்றது. அதற்கும் தூண்டுகோலாக இருக்கிறது. நாங்கள் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறோம். இந்தத் திட்டம் ஒருவேளைத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, வருகின்ற ஆண்டிலே நிதி ஆதாரத்தின் அடிப்படையில், இது இரண்டு வேளையாக, மூன்று வேளையாக வளர்ந்து, எல்லா மாணவர்களுக்கும், குறிப்பாக ஏழை மாணவர்களுக்கும் கட்டாயமாக மூன்று வேளை உணவும், கட்டாயக் கல்வியும், இலவசப் புத்தகங்களும், இலவசச் சீருடையும், படிப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதை நாங்கள் தீவிரமாக ஆதரிக்கக் கூடியவர்கள். அப்படிச் செய்தால்தான்—இன்று நாம் படுகின்ற அவதிகள் நம்மோடு போகட்டும்—வருங்கால சந்ததியாவது நல்லபடியாக இருக்கட்டும் என்ற நல்ல ஒரு கொள்கையை நாம் செயல்படுத்த முடியும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வருகின்ற ஆண்டுகளிலே உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற மாணவர்களுக்குக் கூட விரிவுபடுத்துவதாக பத்திரிகைகளிலே எல்லாம் செய்திகள் வந்தன. ஆனால், ஆளுநர் அவர்களுடைய உரையில் அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நினைக்கின்றேன். வருகின்ற ஆண்டுகளில் அப்படி விரிவுபடுத்தும் அந்தத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இந்தத் திட்டம் துவக்கப்பட்டபொழுது அதிலே, இதைச் செயல்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்ற ஊழியர்கள் காட்டிய நெறிமுறைகள், அந்த உணர்வு இப்பொழுது காட்டப்படவில்லை; குறைவாக இருக்கிறது. நானும் அவ்வப்போது பயணங்கள் செய்யும்போது, இந்தச் சத்துணவு மையங்களைச் சென்று பார்க்கிறேன். அப்போதிருந்த ஆர்வம், இதைச் செயல்படுத்துகின்றவர்களுக்கு இப்போது குறைந்துகொண்டு வருகிறது. மாறாக இதிலே ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் இதிலே சில லாபங்களை அடையலாமா என்று எதிர்பார்த்துக்





கொண்டி கள். சில தவறுகளைச் செய்கிறார்கள். இது அரசின் குற்றமல் டத்தைச் செயல்படுத்துகின்றவர்களுடைய குற்றம். இதைச் சரியான ில் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை என்பதுதான் என்னுடைய புகார். இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாக, திறமையாகச் செய்கின்றார்களா என்பதை கடுமையாக கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் வேண்டும். அது சமூக நலத் துறையிலே இருந்தாலும் சரி, கல்வித் துறையிலே இருந்தாலும் சரி, அப்படிக் கடுமையான ஏற்பாடுகள் இப்போது இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆதலால் இந்தக் கடுமையான நம்முடைய பிடிப்பு தளர்ந்து விட்டால், தவறு செய்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி, இன்று நாம் ஒரு குழந்தைக்குச் செலவழிக்கக்கூடிய தொகையில் கால் பகுதிகூட அந்தக் குழந்தைகளுக்குச் சென்று சேர முடியாத அவல நிலைமையை ஏற்படுத்திவிடும். ஆகவே இந்தத் தவறுகளை நிறுத்துவதற்கு கடுமையான கண்காணிப்புகள் வேண்டும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், உடனுக்குடன் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு பசி ஆற்றுவதற்கு கொடுக்கப்படும் அந்தத் திட்டத்திலே கூட, தங்களுக்கு என்ன ஆதாயம் என்று யாராவது சிந்திப்பார்களானால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய தண்டனை மிகக் கடுமையாக, நம்முடைய கற்பனைக்கு அப்பாற்பட்டதாகக் கூட இருக்கலாம் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே எங்களைப் பொறுத்த சில அறிவிப்புகள் சுட்டிக் காட்டப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இல்லை; எங்களுக்கு வருத்தம். ஒருவேளை பட்ஜெட் கூட்டத்தில் ஆசிரியர்களுக்கென்று சில அறிவிப்புகளை ஒதுக்கி வைத்திருந்தால், உண்மையிலேயே அதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆசிரியர்கள் எப்போதும் புதிய கோரிக்கைகளைக் கேட்பதில்லை. நிதிச் சுமை ஏற்படுத்தும் கோரிக்கைகளைச் சொல்லி அரசுக்கு சங்கடங்களை ஏற்படுத்துபவர்கள் அல்ல. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் வெளியிடப்பட்ட ஆணைகளில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. இவைகளைத் தான் ஆசிரியர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆதலால் இப்படி முரண்பாடுகளை—ஏற்றத் தாழ்வுகளை சரி செய்கின்ற வகையில் சிலபல ஆணைகள், சில பல அறிவிப்புகள் இதில்

ரீதியாகவே எண்ணக் கூடியவர்கள், அண்ணா, பைசாவாக சொல்லக் கூடியவர்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி இத்திட்டத்தை உருவாக்கினால், கடந்தகாலத்திலே கல்வித் திட்டத்திலே ஏற்பட்ட கோளாறுகள் மீண்டும் ஏற்படக்கூடும் என்பதை எச்சரிக்கையாக அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சத்துணவுத் திட்டத்தை நாங்கள் எல்லாம் தீவிரமாக ஆதரிக்கக்கூடியவர்கள். இந்த நாட்டிலே இந்த மாணவர்கள் பசிக் கொடுமையினால் அவதிப்படுகிற, வாடுகின்ற கொடுமையான காட்சியை, மற்ற எவரையும் விட நாங்கள் நன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, அந்தப் பசிக் கொடுமையைத் தீர்ப்பதற்கு இந்தத் திட்டம் உதவி செய்கிறது என்பது மட்டுமல்ல, மேலும் மேலும் மாணவர்கள் பள்ளிக்கூடங்களிலே சேருவதற்கு ஒரு தூண்டுதலாக இருக்கிறது. கல்வி வாய்ப்பு மாணவர்களுக்கு அதிக அளவில் கிடைக்கின்றது. அதற்குத் தூண்டுகோலாக இருக்கிறது. நாங்கள் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறோம். இந்தத் திட்டம் ஒருவேளைத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, வருகின்ற ஆண்டிலே நிதி ஆதாரத்தின் அடிப்படையில், இது இரண்டு வேளையாக, மூன்று வேளையாக வளர்ந்து, எல்லா மாணவர்களுக்கும், குறிப்பாக ஏழை மாணவர்களுக்கும் கட்டாயமாக மூன்று வேளை உணவும், கட்டாயக் கல்வியும், இலவசப் புத்தகங்களும், இலவசச் சீருடையும், படிப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதை நாங்கள் தீவிரமாக ஆதரிக்கக் கூடியவர்கள். அப்படிச் செய்தால்தான்—இன்று நாம் படிகின்ற அவதிகள் நம்மோடு போகட்டும்—வருங்கால சந்ததியாவது நல்லபடியாக இருக்கட்டும் என்ற நல்ல ஒரு கொள்கையை நாம் செயல்படுத்த முடியும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வருகின்ற ஆண்டுகளிலே உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற மாணவர்களுக்குக் கூட விரிவுபடுத்துவதாக பத்திரிகைகளிலே எல்லாம் செய்திகள் வந்தன. ஆனால், ஆளுநர் அவர்களுடைய உரையில் அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நினைக்கின்றேன். வருகின்ற ஆண்டுகளில் அப்படி விரிவுபடுத்தும் அந்தத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இந்தத் திட்டம் துவக்கப்பட்டபொழுது அதிலே, இதைச் செயல்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்ற ஊழியர்கள் காட்டிய நெறிமுறைகள், அந்த உணர்வு இப்பொழுது காட்டப்படவில்லை; குறைவாக இருக்கிறது. நானும் அவ்வப்போது பயணங்கள் செய்யும்போது, இந்தச் சத்துணவு மையங்களைச் சென்று பார்க்கிறேன். அப்போதிருந்த ஆர்வம், இதைச் செயல்படுத்துகின்றவர்களுக்கு இப்போது குறைந்துகொண்டு வருகிறது. மாறாக இதிலே ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் இதிலே சில லாபங்களை அடையலாமா என்று எதிர்பார்த்துக்





கொண்டிருக்கிறார்கள். சில தவறுகளைச் செய்கிறார்கள். இது அரசின் குற்றமல்ல. திட்டத்தைச் செயல்படுத்துகின்றவர்களுடைய குற்றம். இதைச் சரியான முறையில் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை என்பதுதான் என்னுடைய புகார். இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாக, திறமையாகச் செய்கின்றார்களா என்பதை கடுமையாக கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் வேண்டும். அது சமூக நலத் துறையிலே இருந்தாலும் சரி, கல்வித் துறையிலே இருந்தாலும் சரி, அப்படிக் கடுமையான ஏற்பாடுகள் இப்போது இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆதலால் இந்தக் கடுமையான நம்முடைய பிடிப்பு தளர்ந்து விட்டால், தவறு செய்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி, இன்று நாம் ஒரு குழந்தைக்குச் செலவழிக்கக்கூடிய தொகையில் கால் பகுதிகூட அந்தக் குழந்தைகளுக்குச் சென்று சேர முடியாத அவல நிலைமையை ஏற்படுத்திவிடும். ஆகவே இந்தத் தவறுகளை நிறுத்துவதற்கு கடுமையான கண்காணிப்புகள் வேண்டும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், உடனுக்குடன் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு பசி ஆற்றுவதற்கு கொடுக்கப்படும் அந்தத் திட்டத்திலே கூட, தங்களுக்கு என்ன ஆதாயம் என்று பார்ப்பது சிந்திப்பவர்களானால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய தண்டனை மிகக் கடுமையாக, நம்முடைய கற்பனைக்கு அப்பாற்பட்டதாகக் கூட இருக்கலாம் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே எங்களைப் பொறுத்த சில அறிவிப்புகள் சுட்டிக் காட்டப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இல்லை; எங்களுக்கு வருத்தம். ஒருவேளை பட்ஜெட் கூட்டத்தில் ஆசிரியர்களுக்கென்று சில அறிவிப்புகளை ஒதுக்கி வைத்திருந்தால், உண்மையிலேயே அதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆசிரியர்கள் எப்போதும் புதிய கோரிக்கைகளைக் கேட்பதில்லை. நிதிச் சுமை ஏற்படுத்தும் கோரிக்கைகளைச் சொல்லி அரசுக்கு சங்கடங்களை ஏற்படுத்துபவர்கள் அல்ல. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் வெளியிடப்பட்ட ஆணைகளில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. இவைகளைத் தான் ஆசிரியர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆதலால் இப்படி முரண்பாடுகளை—ஏற்றத் தாழ்வுகளை சரி செய்கின்ற வகையில் சிலபல ஆணைகள், சில பல அறிவிப்புகள் இதில்

(பிற்பகல் 12-10)

வருமென்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி வரவில்லை. அது எங்களுக்கு வருத்தத் தக்கதாக இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்போது, சுட்டிக் காட்டுவதன் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கான வாய்ப்புகளை இந்த அரசு ஏற்படுத்தித் தரும் என்று நான் நம்புகிறேன்.

இப்போது நான் ஒரு சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பதவி மேம்பாடு என்பதைப்பற்றி நம்முடைய கொள்கையிலே முரண்பாடு இருக்கிறது. Upgradation-ஐப் பொறுத்தவரையில் ஹையர் கிரேட் டீச்சர்ஸ் என்று சொல்லக்கூடிய இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் இவர்களுடைய பதவிகளை அறவே நாம் நீக்கிவிட்டு, இடைநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி மேம்பாடு செய்து வருகிறோம். ஆக Higher grade posts have been abolished. அதைப்போல, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பதவி நீக்கப்பட்டு எல்லோரும் முதல் நிலை தமிழாசிரியர்கள் பதவிகளாக்கப்பட்டன. இதனை நான் வரவேற்கிறேன். இந்த இரண்டு பதவிகளையும் நீக்கிவிட்டு, அதே நேரத்தில், இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், அவர்களில் பலர், ஆயிரக்கணக்கானவர்கள் பி.டி. பட்டம் பெற்றிருக்கின்றார்கள், புலவர் பட்டம் பெற்றிருக்கின்றார்கள். பி.லிட். பட்டம் பெற்றிருக்கின்றார்கள். இவர்கள் உயர் நிலைப் பள்ளிகளிலே பாடங்களைப் போதிப்பதற்கு தகுதி படைத்தவர்களாக தங்களுடைய கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரையில், இடைநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்கள் என்று மாற்றியதைப் போல, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாக உயர்த்தியதைப் போல, பி.டி., பட்டம் பெற்ற, பி.லிட்., பட்டம் பெற்ற, புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களை, சிறப்பு ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாகவும் தமிழ் ஆசிரியர்களாகவும் பதவி மேம்பாடு செய்ய வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சலுகைகளில் விடுபட்ட அல்லது மறந்துவிடப்பட்ட அல்லது முரண்பாடுள்ள ஒன்று இது என்பது ஒரு கோரிக்கை. இதை நாங்கள் பல ஆண்டுகளாகச் சுட்டிக்காட்டுகிறோம்.





இன்னொன்று. பயிற்சிக்கு உரிய காலத்திற்கு ஊதியம். Training qualification இருந்தால் additional increment என்று ஒரு அறிவிப்பைக் கொடுத்து, ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 1—6—1981 முதல் கொடுத்தோம். அதை நான் வரவேற்கிறேன். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செய்யாத ஒன்று. அது ஒரு பெரிய சலுகை. அந்தச் சலுகை இந்த மாநிலத்தில் அளிக்கப்பட்டிருக்கின்றது. அப்படிச் செய்தது பாராட்டிற்குரிய ஒன்று. அதைப் போலவே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இன்று உயர் நிலைப் பள்ளிகளிலே மேல் நிலைப் பள்ளிகளிலே இருக்கின்றார்கள். அதைப்போலவே பயிற்சி பெற்ற ஓவிய ஆசிரியர்கள், கலைக் கைத்தொழில் ஆசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைத் தமிழாசிரியர்கள், உடற் கல்வி இயக்குநர்கள் போன்ற பல்வேறு ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு பயிற்சிக் காலம் இருக்கிறது. அந்த டிரெயினிங் குவாலிபிகேஷன் இருப்பவர்களுக்கு கூடுதல் ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை. இது நீக்கப்பட வேண்டிய குறையாகும். இது புதிய கோரிக்கை அல்ல.

அதுபோலவே இன்னொன்று இருக்கிறது. நம் மூன்றாவது ஊதியக் குழுவில் இரண்டாம் நிலை உடற் கல்வி ஆசிரியர்களும், முதல் நிலை உடற் கல்வி ஆசிரியர்களும் ஒன்று என இரண்டையும் இணைத்தோம். ஒரே கிரேடு என்று இணைத்தோம். அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் அப்படி இணைக்கும்போது. அந்த முதல் நிலை உடற் கல்வி ஆசிரியர்களுக்கு இருக்கின்ற கூடுதல் கல்வித் தகுதியை. additional educational qualification- -ஐ மனதில் இருத்தி அவர்களுக்கு என்று தனியாக சிறப்பூதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே கேட்டு வருகிறோம். அது இன்னும் தரப்படவில்லை. இது புதிய கோரிக்கையல்ல, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சலுகையில் உள்ள ஒரு முரண்பாடு. இந்தக் குறை தீர வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை.

வேலை நாட்களைப் பொறுத்தவரையில், சொல்கிறேன். ஒரு அரசு ஊழியருக்கு, நான்-வெக்கேஷன் டிப்பார்ட்மெண்டில் உள்ள அரசு ஊழியருக்கு 33 நாட்களும் ஈட்டிய விடுப்பு கிடைக்கிறது. வெக்கேஷன் டிப்பார்ட்மெண்டிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு 3 நாட்கள்தான் ஈட்டிய விடுப்பு என்ற முரண்பாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினேன். ஆனால் அறிவிப்பு வந்தது என்னவென்றால், 3 நாட்கள் என்பது 10 நாட்கள் என்று ஆக்கப்பட்டது. ஆனால் வேலை நாட்கள் 20 நாட்களாகத் தேவையில்லாமல் உயர்த்தப்பட்டது. பலத்த அதிருப்திக்கு ஆளான அறிவிப்பு இது.

எங்களுடைய கோரிக்கையை அரசு கவனிக்கவில்லை. அரசு விதிமுறையின்படி எடுத்துக்கொண்டாலுங்கூட, 11 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு என்று தரப்பட வேண்டும். எங்களுடைய 200 நாட்கள் வேலை அடிப்படையிலே மொத்தத்திலே அரசு விடுமுறைகளை இணைத்து ஈட்டிய விடுப்பு கொடுக்க வேண்டுமென்றால், விதிமுறையின்படி ஈட்டிய விடுப்பு எங்களுக்கு 23 நாட்கள் தரவேண்டும். அதைச் செய்யாமல் புதிய தலைவலியை உருவாக்கியிருக்கின்றார்கள். விதி முறையையும் செயல்படுத்தாமல், இரண்டும் கெட்டான் நிலையில் அறிவிப்பு வந்திருக்கின்றது. அந்தச் சலுகை திருப்தியைக் கொடுக்காமல் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. இதையே நாங்கள் இரண்டு ஆண்டுகளாகச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். இது ஒரு முரண்பாடு.

அதைப்போலவே, மேல் நிலைப் பள்ளிகளில் எம்.பி.எட். கல்வித் தகுதி பெற்று உடற் கல்வி இயக்குநர்கள் இருக்கின்றார்கள். போஸ்ட் கிராஜுவேட் இருக்கின்றார்கள் ஸ்கேலில் ஆசிரியர்கள் Physical Education Directors with M.P.Ed. qualification are also first-graduate teachers இது புதிய கோரிக்கையல்ல. இது ஒரு முரண்பாடு. கல்லூரியைப் பொறுத்தவரையில், துணைப் பேராசிரியர்கள் பதவியும், உடற் கல்வி இயக்குநர்கள் பதவியும் ஒரே சமமாக ஆக்கப்பட்டு, ஒரே ஊதியம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாராட்டியிருக்கிறோம். ஆனால் மேல்நிலைக் கல்வியிலே முரண்பாடு இருக்கிறது. அதைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல புதிய மேல் நிலைப் பள்ளிகள் ஏராளமாக ஆரம்பித்திருக்கிறார்கள். எப்படி கல்விக்கண் தந்த காமராஜர் அவர்கள் ஆரம்பப் பள்ளிகளை மூலைமுடுக்குகளில் எல்லாம் நிறைய திறந்தார்களோ, அதைப்போல் மூலைமுடுக்குகளில் எல்லாம் மேல் நிலைப் பள்ளிகளைத் துவக்கினோம். அப்படி மேல் நிலைப் பள்ளிகளைத் துவக்கி, கல்லூரிக் கல்வியின் ஒரு பகுதி ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கும் வகையில் இந்த அரசு செய்திருப்பது மிகவும் உயர்ந்த காரியங்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் அப்படி மேல் நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்ட பிறகு, அந்தப் பள்ளிகளின் பணிச்சுமை அதிகரித்திருக்கிறது. ஆனால் ஒரு மேல் நிலைப் பள்ளிக்குக் கூட ஓர் உதவியாளர் பதவிகூட அனுமதிக்கப்படவில்லை. அதைப்போலவே, அங்கிருக்கிற அறிவியல் ஆய்வகம் ஒவ்வொரு பிரிவிற்கும் உடனாள் தரப்பட வேண்டுமென்று கேட்கிறோம். உடனாள் பதவி இல்லாவிட்டால் எப்படி



செய்முறைப் பயிற்சி நடக்கும்? இந்த உதவியாளர், உடனாள் பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படாவிட்டால், அங்கே எவ்வளவு குறைபாடுகள் ஏற்படும் என்பதை அரசு நிச்சயமாக உணரும். இவை நீண்டகாலக் கோரிக்கையாகும். பல இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் என்று பெயர்தானே தவிர, தேவையான பணியிடங்கள் கொடுப்பதில்லை. கேட்டால், அங்கீகாரம் என்பது வேறு, பணியிடங்கள் அனுமதிப்பது வேறு என்று கூறுகிறார்கள். அது முரண்பாடு. தேவையான பணியிடங்களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியப் பணியாக இருந்தாலும் சரி, ஆசிரியரல்லாதார் பணியாக இருந்தாலும் சரி, போதிய பணியிடங்கள் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அங்கீகாரமே கொடுக்கக் கூடாது. ஆதலால் அங்கீகாரம் கொடுத்து விட்டு, போதிய பணியிடங்கள், கொடுக்காமலிருப்பது எப்படி மாணவர்கள் நலன்களை பாதிக்குமென்பதை அரசு உணர்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே உள்ள பள்ளிகளில் பல பணியிடங்கள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாமலிருக்கின்றன. அதனையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலிகப் பணி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 14 ஆண்டுகளாக தற்காலிகப் பணியில் உள்ள ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் அரசு உயர் நிலைப் பள்ளி, அரசு மேல் நிலைப் பள்ளிகளிலே இருக்கிறார்கள். இதை அரசு நம்புமோ நம்பாதோ, ஆனால் உண்மை. 14 ஆண்டுகளாக இன்னமும் தற்காலிகப்பணியில் இருக்கிறார்கள். காரணம் என்ன? சர்வீஸ் கமிஷன் என்ற பூதத்தை இடையிலே வைத்துக்கொண்டு அதைக் காட்டி காட்டி காட்டி அது ஒரு அட்டானாமஸ் பாடி ( autonomous body )என்று காட்டி பயமுறுத்துகிறார்கள். அவர்கள் பணி வரன்முறை செய்வதற்கு இத்தனை ஆண்டுகள் ஆகின்றன. எதற்காக தேவையில்லாத சம்பிரதாயங்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்? சர்வீஸ் கமிஷன் மூலமாகப் பணி வரன்முறை செய்ய காலதாமதமாகிறது என்றால். அதில் இருக்கின்ற குறைபாடுகளை ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். இவர்கள் எல்லோரையுமே சர்வீஸ் கமிஷன் வரன்முறை செய்யும் என்பதை எடுத்துவிட்டு. அரசே ஒரு மாற்று ஏற்பாடு

செய்து, உடனுக்குடன் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இது பெரிய பிரச்சினையாக எழுந்து அரசுக்குத் தலைவலியை உண்டாக்கும்.

அதைப் போலவே ஒரு சில ஆசிரியர்களுக்கு மட்டும், பணியில் சேர்ந்த நாளிலிருந்தே பணி வரன்முறை செய்யப்பட்டு, ரெட்ராஸ்பெக்டிவ்வாக regularisation செய்யப்பட்டும், பலருக்கு 5 ஆண்டுகள் கழித்துத் தான், அல்லது 8 ஆண்டுகள் கழித்துத்தான் retrospective regularisation என்றும் பாகுபாடுகளை உருவாக்கினால், அது கண்கூடாக, தெளிவாக டிஸ்கிரிமினேஷனாக இருக்கிறது. ஆகவே எல்லோருக்கும் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ்வாக வரன்முறை செய்ய வேண்டுமென்று கொள்கை ரீதியாக ஒரு அறிவிப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் ஆளுநர் உரை விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, இந்த அறிவிப்பு வருமானால், மூன்று இலட்சம் ஆசிரியர்களும் மகிழ்ச்சியடைவார்கள். கொள்கை ரீதியான முடிவுதான். இதையெல்லாம் அரசு பார்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தொழில் ஆசிரியர்களும் அப்படித்தான். அவர்களில் நான்கு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் எடுத்துவிட்டு ஒரே பிரிவாக ஆக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. டிப்ளமா படித்த ஓவிய ஆசிரியர்களுக்கு அந்த டிப்ளமா கல்வித் தகுதிக்கு ஏற்ற பதவிகளை உருவாக்க வேண்டும். இதனாலே அரசுக்குக் கூடுதல் செலவு வரப்போவதில்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, ஒன்றைச் சொல்கிறேன். விடுப்புப் பயணச் சலுகை, வீடு கட்ட கடன் உதவி இவற்றை அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கியதற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அதேபோல் அரசு மானியத்தை முழுமையாகப் பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் இவற்றைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விடுப்புப் பயணச் சலுகை, வீடு கட்ட கடன் உதவி கொடுக்கப்படாதது, இவர்கள் மத்தியில் மிகப் பெரிய விரக்தியை உண்டாக்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(பிற்பகல் 12-20)

இன்று அநேகமாக தனியார் பள்ளிகளிலே இருக்கும் கல்வித் தரம் ரணம், இன்று அநேகமாக எல்லா அமைச்சர்களும், எல்லா அதிகாரிகளும் பேசி வருகிறார்கள். ற்றி எல்லா அமைச்சர்களும், எல்லா அதிகாரிகளும் தனியார் பள்ளிகள் பாடுப்படிப்பட்ட கல்வித் தரத்தின் மேம்பாட்டிற்காக தனியார் பள்ளிகள் பாடு டுகின்றன என்று ஒப்புக்கொண்ட பிறகு, அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு, ம்முடைய முழு மானியத்தை வாங்கிக் கொண்டு பணியாற்றும் ஆசிரியர் ளுக்கு நாம் உரிய நியாயத்தை வழங்க வேண்டும். எல்லாச் சலுகைகளும் யர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரிய எல்லாச் சலுகைகளும் தனியார், நகராவைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் டனடியாக அளிக்கப்படுமென்ற கொள்கை ரீதியான அறிவிப்பை மாண்புமிகு தல்வரவர்கள் தன்னுடைய பதிலுரையிலே கொடுத்தால், நாங்கள் மகிழ்ச்சி டைவோம். இதைச் சுட்டிக் காட்டக் காரணம், இதையெல்லாம் சொல்லி ரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இவைகள் புதிய கோரிக்கைகள் ல்லை. எனவே இந்தக் கோரிக்கைகள்பற்றி அரசு நல்ல முறையில் பரி லனை செய்து, இந்த விவாதத்திற்குப் பதில் தரும்போது, முதல்வரவர்கள் ல்ல அறிவிப்புகளை, மனம் மகிழ்ச்சியடையும் அளவுக்கு அறிவிப்புகளைத் ந்தால், நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

மேல்நிலைக் கல்வியில், தொழிற் கல்வி முக்கியமான கல்வியாக இருக் றது. எனவே அங்கே பணியாற்றும் பகுதி நேர தொழிலாசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலித்து, ஆதரவான அறிவிப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்பு ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். கல்விக் கொள்கை யில் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாகத் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி முதன் முதலில் அமைக்கப் பட்டபோது இருந்த உறுதியான கொள்கையில் இப்போது சில தடுமாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் வந்திருக்கிறது. அரசின் கொள்கையை ஆதரிப்பவர்கள் நாங்கள். அதில் சந்தேகமில்லை. ஆனால் எல்லாக் கொள்கைகளையும் ஆதரிக்க முடியாது. அன்று இருந்த உறுதியான அணுகு முறை இருக்கிறதா என்றால் அதில் சந்தேகம்தான்.

சென்ற ஆண்டு சென்னையில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்ட போது நமது அரசு லாரிகள் மூலம் குழாய்க் கிணறு பம்புகள் மூலம் சென்னை நகர மக்களுக்கு தண்ணீர் வழங்கி தண்ணீர்க் கஷ்டத்தை சிறப்பான முறையில் சமாளித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா தமிழர்களின் உதவிக்காக வசூலிக்கப்படும் நிதியைப் பெறவும், அவற்றை சீரான முறையில் வழிப்படுத்தவும், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றையும், மாவட்ட அளவிலான எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட குழுக்கள் தவிர, பெரும் தொழில் அதிபர்கள் அடங்கிய குழு ஒன்றையும் அரசு அமைத்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குட்டிமணி, தங்கதுரை ஆகிய இருவரின் குடும்பங்களுக்கும் விடும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 நிதி உதவியும் நமது அரசு கொடுத்து வருகிறது என்பதை அறியும்போது, இதுபோன்ற ஒரு உதவியை நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் செய்ய மனம் வராது என்பதைக் கூறிக் கொள்கிறேன். அவருடைய அந்த ஒரு மனம் தான் ஆதரவற்ற விதவைகளின் வேதனையை, துயரத்தை அறியும் தலைவனை இழந்த ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு இன்னல்கள், துன்பங்கள் வரும் என்ற நிலையை கணவனை இழந்துவிட்ட நிலையில் ஆதரவின்றி இருக்கும் ஒரு பெண்ணைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது. “நாம் என்ன செய்வோம்? என்ன செய்யப்போகிறோம்? நம் குழந்தைகளை எப்படி வளர்ப்பது? நம் எதிர்காலம் என்ன? என்று சிந்தனை செய்யக்கூட முடியாத நிலையில் இருக்கும் பெண்ணின் நிலையை ஏற்கெனவே கண்ட என்னால் உணர முடியும். கணவன் இறந்தவுடன் சொந்தம், பந்தம் யாவரும் எங்கே தனக்குச் சுமையாக வந்து விடுவார்களோ என்று பயந்து ஒதுங்கிப் போய்விடுவார்கள். இந்த நிலை ஒவ்வொரு விதவைப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடியது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு நேரத்தில், சொந்தக்காரர்களும், நண்பர்களும் உதவிடாத நேரத்தில், எனது அருமை அண்ணன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எனது குடும்பத்தை





தனது அபய கரத்தால், அன்புக்கரத்தால் காப்பாற்றி வருகிறார். அதே போல் குட்டிமணி, தங்கதுரை குடும்பங்களுக்கும் உதவியளித்து காப்பாற்றி வருகிறார். இன்னும் எத்தனையோ ஏழை விதவைப் பெண்களுக்கும் பல திட்டங்கள் மூலம் அவர்கள் நல்வாழ்வு காண வழி காட்டியிருக்கிறார். இதற்காக நான் எனது அண்ணன், மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாதம் தொட்டு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் உடல் நலத்தில் முன்னேற்றமும் ஏற்பட்டு, உயரமும், எடையும் அதிகரித்திருப்பதாக அறியும்போது, எதிர்காலத்தில் தமிழகத்தில் குழந்தைகள், பெரியவர்கள் ஆகும்போது, நல்ல அறிவும், ஆரோக்கியமும் உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தைச் செயலாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தாய்மார்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலைகொடுக்கும் திட்டம். இதில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஒருவருமே வேலைவாய்ப்பு பெறாதவர்களுக்கு மட்டும் முன்னுரிமை என்று அரசு அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும்.

புதிய சர்க்கரை ஆலை தொடங்க இருப்பது குறித்தும், “மதுரா சுகர்ஸ்” நிர்வாகத்தை அரசே, தன் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளப்போவது குறித்தும் என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்தும், கட்டிடப் பணியில் இறக்கும் தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரம் உதவித் தொகை வழங்குவது குறித்தும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 40 கோடி அளவில் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் வகையில், திருச்சி மாவட்டத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம் குறித்தும் பாராட்டிக்கொள்கிறேன்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பெரியோர்களின் பெயர்களை வைத்து, அவர்களின் பேரும், புகழும் என்றென்றும் நிலைத்திருக்கச் செய்த நம் அரசுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12-30)

***மாற்றுத் தலைவர் (திரு. ஏ. ஜே. தாஸ்):*** விவாதம் முடியும்வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

***திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது ஆளுநர் உரையில் வெளியிட்ட எல்லா அம்சங்களும் எனக்குப் பிடித்ததாக இருக்கின்றன. ஆளுநர் ஆற்றிய உரையில் ஏழையெளிய மக்களுக்கு நல்ல முன்னேற்றத்தைக் காண்பதற்காக அமைந்துள்ள திட்டங்களை நான் வரவேற்கிறேன். அந்த உரையில் 23 வது பாராவில், வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்ட இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள் என்று ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சிபற்றிச் சொல்கிறார். வறுமையை ஒழிப்பதாக வருகிற இந்த வாக்கியம், மேலும் நான் ஒரு நெசவாளி என்ற முறையில் எங்களுடைய சமுதாயத்திற்கு அரும்பெரும் ஆதாரவையும் திட்டத்தையும் நல்கி வருகிற இந்தப் புரட்சித் தலைவரின் ஆட்சியிலே எங்களுடைய நெசவாளர்கள் அடைந்துள்ள நன்மைகளை வரவேற்றுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், அண்மையில், "அராஜக ஊழல் நிறைந்த எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கண்டித்து அனைத்துக் கட்சி மக்கள் வழி நடைப் பிரச்சாரப் பயண விளக்கப் பொதுக்கூட்டம்" என்ற விளம்பரம் அச்சிட்டு வெளியிட்டு, அந்தத் துண்டு அறிக்கையில் எங்களுடைய சமுதாய மக்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டிருப்பதைக் கண்டித்தும், இந்தப் பிரச்சாரம் என்று 14 கட்சிகளைச் சேர்ந்த என்னுடைய அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய நண்பர்கள், இந்த நெசவாளி சமுதாயத்தைப் பாதுகாப்பதாக நினைத்து இந்த வாக்கியத்தை எழுதி மக்களிடத்தில் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த வாக்கியத்தை நித்தம் நித்தம் கேட்கிற அந்த நெசவாளி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இன்றைக்கு அந்தப் பிரச்சாரத்தைக் கேட்டு ஏமாளிகளாக மாட்டார்கள். காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி தமிழ் நாட்டில் வந்த பிறகு தான் எங்களுடைய நெசவாளி சமுதாயத்திற்குப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நெசவாளியை தொழிலாளியாகக் கருதாத வெள்ளைக்கார அரசும், அதற்குப் பின்னாலே வந்த காங்கிரஸ் ஆட்சியிலும் எங்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் கிடைக்க வில்லை என்பதை அழுத்தமாகச் சொல்லிக் கொள்வேன். காரணம், 1947-ல் சுதந்திரம் வந்த பிறகு, சுயதேவைப் பூர்த்தி என்று சொல்லி, அதுவரை எங்களது, நெசவுப் படைப்புகளை,



தேவைக்கு மேல் உள்ளவற்றை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்த துணிகளை இனிமேல் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்தார்கள். இங்கே உள்ளவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்தபின் தான் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவே முடியும் என்று சட்டம் கொண்டு வந்ததால், அந்தச் சட்டத்தை நேரு கொண்டுவந்ததன் காரணத்தால், ஏற்றுமதிக்குத் தடை விதித்தார்கள். அதன் காரணமாக நெசவாளர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் வந்து கைத்தறித் துணிகளை விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதன்காரணமாக நெசவாளிக்கு வேலை கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 1953 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டினை சென்னையிலே நடத்தினார்கள். அதிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அந்த மாநா' நடந்த நாளிலிருந்து ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகத் தோழனும் கைத்தறித் துணியை அணிய வேண்டும், மாலைக்குப் பதிலாக கைத்தறித் துணியைத்தான் போட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டது. அதே நோக்கில் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை வரும் சனவரி 4-ம் தேதி அன்று தலைவர்கள் முதல் கொண்டு தொண்டர்கள் வரை தோளில் சுமந்து சென்று விற்றோம். அண்ணா அவர்கள் ஓரிடத்திலே விற்றார்கள் என்றால் மற்றொரு இடத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் விற்றார்கள், இன்னொரு இடத்திலே திரு. கருணாநிதி அவர்கள் விற்றார்கள். டாக்டர் நாவலர் அவர்கள் விற்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக அணியில் அன்றைக்கிருந்த தொண்டர்கள் முதற்கொண்டு, தலைவர்கள் வரை, ஒவ்வொரு ஊர் ஊராகச் சென்று கைத்தறித் துணிகளை விற்றோம். அதைப்போலவே சனவரி மாதம் பொங்கல் திருவிழா அன்று பொதுமக்கள் கைத்தறித் துணியை அதிகம் வாங்க ஏற்பாடு செய்தோம். அதன் காரணமாக கிட்டத்தட்ட 16 இலட்சம் ரூபாய்க்கு கைத்தறித் துணி விற்கப்பட்டது. இதை நான் ஏற்கெனவே பலமுறை பேசியிருக்கிறேன் என்றாலும், இப்போது 14 கட்சித் தோழர்கள் ஒன்றுகூடி கண்ணீர் சிந்த முயல்கிறார்கள் என்பதால் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். 14 கட்சித் தோழர்களுக்கு நெசவாளர்களுக்கு உதவ வேண்டுமென்ற மனம் இருக்கிறதோ இல்லையோ, ஆனால் நெசவாளர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்,

[திரு. சி. இராமலிங்கம்] [1984 பிப்ரவரி 17

அறிஞர் அண்ணா அவர்கள் செய்த இந்த அரிய செயலைக் குறிப்பிட்டு அப்போது ராஜ்ய சபை உறுப்பினராக இருந்த திரு. புபேஷ் குப்தா அவர்கள் அன்றைக்கு பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைக் கேட்டார்கள். "பண்டித நேரு அவர்களே, தென்னாட்டில் திரு. அண்ணாதுரை என்பவர் அரிய செயலைச் செய்து வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டபோது, பண்டித நேரு அவர்கள் எழுந்து, "நான் அறிந்தேன், அதைப் பற்றி கூர்ந்து கவனித்தேன். திரு. அண்ணாதுரை செய்ததிலிருந்து கைத்தறி நெசவாளர்களை எப்படி வாழ வைக்க வேண்டும் என்ற படிப்பினை நான் பெற்றேன்" என்று பதில் சொல்லியிருக்கிறார். அந்தப் படிப்பினையின் காரணமாக கிட்டத்தட்ட 1953 ஆம் ஆண்டு சனவரி திங்களிலேயே 30 இலட்சம் ரூபாய்க்கு கைத்தறித் துணி விற்கப்பட்டது. அன்றைக்கு 30 இலட்சம் ரூபாய் என்றால், இப்போது எத்தனை கோடி ரூபாய் இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதன் பிறகு மீண்டும் 1954 ஆம் ஆண்டில் விற்றோம். அந்த ஆண்டிலேயே பண்டித நேரு அவர்கள் திரு. நித்தியானந்தா கானுங்கோ தலைமையில் ஒரு குழுவை நியமித்து, நெசவாளர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்பதுபற்றி ஆராய்ச்சி செய்தார்கள். அந்தக் குழு பரிசீலனை செய்து, நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவு எடுத்து, மில்களுக்கு செஸ் வரி போடப்பட்டு அந்த வரியைக் கொண்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இன்றைக்குள்ள நெசவாளர்கள் காலனிகள் எல்லாம் அந்த செஸ் நிதியிலிருந்து அமைக்கப்பட்டவைகள்தான். இனாமாகக் கொடுக்கவில்லை. கடனாக, தவணை முறையில் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கொடுக்கப்பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுக் காலனிகள் அமைக்கப்பட்டன. அன்றைக்கு ஒவ்வொரு நெசவாளருக்கும் ஆயிரம் ரூபாய் என்ற அளவில் கொடுக்கப்பட்டு, 100 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, இன்று பெரிய கூட்டுறவு ஸ்தாபனமாக விளங்குகிறது. அந்த கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பைத்தான் நான் ஏற்றிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் நெசவாளர்களுக்காக வாதாடுவதாக நினைத்துக்கொண்டு இப்படிப்பட்ட வாசகத்தை இதிலே சேர்த்திருக்கிறார்கள். அந்தப் பண்டித ஜவஹர்லால்



1984 பிப்ரவரி 17] [திரு. சி. இராமலிங்கம்]

(பிற்பகல் 12-40)

இவர்கள் காலத்தில் எங்களுக்கு உபகாரம் செய்ததுண்டா? இன்று இராணுவ மந்திரியாக உள்ள மாண்புமிகு திரு. வெங்கட்ராமன் அவர்கள் இங்கே இருந்த நேரத்திலேதான் சில நல்ல காரியங்கள் செய்தார்கள். அதன் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் 1953 ஆம் ஆண்டு இந்தத் தமிழகத்திலுடைய, சென்னை ராஜ்யம் என்று இருந்த சட்ட மன்றத்திலே அமரர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் கரை போட்ட வேஷ்டி சேலைகளைக் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று ஒருமனதாக அன்றைக்கு திரு. ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்றுக்கொண்டு, எந்தக் காரணத்தினாலோ அதை அமல்படுத்தவில்லை. எங்களுடைய தானைத் தலைவர் அண்ணா, எங்களையெல்லாம் வழிநடத்திச் சென்ற அவர்கள் முதலமைச்சராக வந்த நேரத்திலே, ஒருமனதாக, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டுவந்த அந்த தீர்மானத்தை, மத்தியிலே உள்ள மத்திய அரசு இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் தீர்மானத்தை அண்ணா அவர்கள் கொண்டுவந்தார்கள். அதன் பிறகு எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் இதைக் குறிப்பிடுவது ஏதோ இந்திய உபகண்டத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கெல்லாம் ஏதோ வாரி வழங்கியதைப் போல பலபேர் பேசுகிறார்கள். ஆனால் வாரி வழங்குகின்ற அந்தச் சூழ்நிலையிலே யாரார் வாழ்கிறார்கள் என்று ஏன் கணிக்கக்கூடாது? கணிக்கத் தவறிவிட்டார்கள் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். என்னுடைய தொழில், என்னுடைய, சமுதாயம் காலை 6 மணிக்கு அவன் தறிக்கு சென்றால் மாலை 6 மணி வரையில் உழைக்க வேண்டும். அவனுடைய நிலைமையைப் பற்றிப் பேசுவதற்கு இங்கே நாதி இல்லை என்பதற்காக இதைச் சொல்கிறேன். இங்கே ஆசிரியர்கள், பட்டதாரிகள் எல்லாம் பேசினார்கள். அவர்களுக்கு இருக்கிற குறைகளைத் தான் சொன்னார்கள். "கொடுத்தது போதாது; "இன்னும் கொடு" என்று தான் சொன்னார்கள், நாம் கொடுத்துப் பெற்று வாழ்கிறோமே இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்ற சிந்தனை இல்லாமல் அரசு கொடுக்கிற சலுகைகளை மேலும் மேலும் வேண்டுமென்கிறார்கள். அரசு எங்கே இருந்து கொண்டுவந்து இந்தப் பணத்தைக் கொடுக்கும் என்ற சிந்தனை இல்லாமல், உத்தியோகத்திலிருக்கிற ஆசிரியர் சமுதாயம் மட்டும் தான் வாழ வேண்டுமென்று ஒருதலைப் பட்சமாகப் பேசுகிறோமே, ஆனால் பள்ளிக்கு வருகின்ற பிள்ளைகளைப்பற்றி அந்த ஆசிரியர்கள் சிந்தித்ததுண்டா? அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் எப்படி வாழ்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள்? அவனுக்கு என்ன வருமானம்? அவன் தறிக்

காரனா? நிலமற்ற விவசாயியா? சிறு விவசாயியா? தச்சுத் தொழில் செய்பவனா? சலவைத் தொழில் செய்பவனா? இவர்களுடைய வருமானம் என்ன என்பதைப்பற்றிச் சிந்தித்ததுண்டா? ஒரு ஆசிரியருடைய கடமை கூர்ந்து, கவனித்து இந்த நாட்டு மக்கள் வாழ்வதற்கு அவன் ஒரு ஆசானாக இருப்பது தான். இந்த ஆட்சிக்கு வந்திருக்கிற அதிகாரிகளும் அதே போலத்தான். இன்றைக்கு இருக்கிற சமுதாய அமைப்பிலே அரசியல் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ. க்களும் முதலமைச்சராக வருபவர்களும் தானா இந்த நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டும்? ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், அவர்களுக்குக் கீழுள்ள அதிகாரிகள் இதைப்பற்றி நினைக்கக் கூடாதா? ஆசிரியர்கள் நினைக்கக்கூடாதா? உங்களுக்கு குறிக்கோள் சம்பளம் ஒன்றுதான்; சம்பள உயர்வு ஒன்றுதான்; ஏதாவது ஒரு குறி வைத்துக்கொண்டே இருக்க வேண்டும். இது தானா உங்கள் குறிக்கோள்? ஏன் அரசியல் வாதிகளுக்குத் தானா இந்த நாட்டிலே மழை பெய்கிறது? வெய்யில் காய்கிறது? பஞ்சம் வருகிறது? எங்களுக்கு வரவில்லையா?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமை)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தற்போது ஆசிரியராகப் பணிபுரிகிறார்களா, அல்லது வேலையிலிருந்து ஓய்வுபெற்று விட்டார்களா?

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேகம், விவேகம் தடைபடாமல் எனக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பெண் போகிறாள் என்றால் அவள் இடையிலே இருப்பது சேணியன் கை வேலை காதிலே ஒளிப்பது தட்டானின் கை வேலை. நான் இன்றைக்கு அழகாக வருகிறேனே—இது அமைச்சர் மிடுக்கு என்பார்கள். துணி வெளுப்பாக இருந்தால் வண்ணார தொழில் என்பார்கள்—இது அத்தனையும் சேர்ந்தால் தான் மனிதன். எங்களைப் பற்றி இங்கே எந்த எதிர்க்கட்சித் தலைவர்களாவது பேசினார்களா? எந்த ஆசிரியர்களாவது பேசினார்களா? நாங்கள் என்ன வயிராண்டிகளா?





**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் என்னைக் குறிப்பிட்டுக் கூப்பிடவில்லை என்று நம்புகிறேன். நான் எல்லாவற்றிலும் பேசுகிறேன். உறுப்பினர் அவர்கள் பிரச்சினையை முடித்துவிட்டு, அடுத்த பிரச்சினைக்குப் போகிறார்கள். அவர்களுக்கு இங்கே நேரம் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லாம் எந்தப் பிரச்சினைக்கும் எதிரானவர்கள் அல்ல. அவர்கள் ஜி.ஓ.க்களிலே இருப்பதை விளக்கி எடுத்துச் சொல்வதற்குள் நேரம் முடிந்தது. அவர்கள் ஆதரவாகத்தான் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரவர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்கின்றார்கள். அதுவும் வரவேற்கத்தக்கதுதான்.

**திரு. சி. இராமலிங்கம்:** நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் முன்னால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இடைமறித்து அவருடைய கருத்தைச் சொல்லி எங்களையும் ஆதரிப்பதாகச் சொல்லியதற்கு மிகவும் நன்றி. என்னுடைய அண்ணன் தம்பிகள், ஒன்றுவிட்ட உறவினர்கள் எல்லாம்கூட ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். என்னுடைய உறவினர்கள் எல்லாம்கூட அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கும்தான் சொல்கிறேன். நீங்கள் எல்லாம் படாம்போட்ட குதிரைகள். உங்களுக்குத் தெரிகிறது எல்லாம் நீங்கள் போகின்ற வழி தானே தவிர வேறல்ல. நாங்கள் படாம் அற்ற நிலையிலே இருக்கின்றோம். வீட்டுக்காரர்கள் நான்கு துணிகள் கொடுத்தால்தான் உழைக்க முடியும், வாழ முடியும் நான்கு பேர்கள் சவரம் செய்ய வந்தால்தான் வழி பிறக்கும். நான்கு பேர்கள் துணி எடுத்தால் தான் எங்கள் வயிறு பிழைக்கும். இன்னொரு சமுதாயம்கூட இங்கே இருக்கின்றது. நான்கு பேர் வேலை கொடுத்தால்தான் இந்த சமுதாயம் வாழும். நான்கு பேர்கள் வாங்கினால்தான், இந்த சமுதாயம் வாழும். ஆக இந்த சமுதாயத்தைப் பற்றி ஏன் நீங்கள் ஒரு ஜி.ஓ. கொண்டு வாருங்கள் என்று பேசக் கூடாது?

ஆக இந்த சமுதாயத்தைப்பற்றிப் பேசுகின்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் இங்கே கால்நடைப் பயணம் செய்கின்றார்கள் நான் வரவேற்கின்றேன். ஆனால் உண்மைக்குப் புறம்பாக கைத்தறி நெசவாளர்களைக் கண்ணீரில்

மிதக்கவிட்டிருப்பதைக் கண்டிக்கிறோம் என்றால், எங்கே மிதக்கிறோம்? மழை பெய்திருக்கிறது. என்னுடைய வீடு மிதக்கிறது. என்னுடைய மகன் வாசிதத்திலே கப்பல் விட்டுக்கொண்டிருக்கின்றான். மழை பெய்திருக்கின்றது, ஆனால் நாங்கள் மிதக்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்தியப்பேரரசு கைத்தறிக்கு நன்மைகள் செய்கிறேன் என்று சொல்கின்றது. அதைப் பற்றியும் நான் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும். அதற்குப் பிறகு வருகிறேன். எங்களுடைய மாநில அரசு, புரட்சித் தலைவருடைய அரசு, இந்த ஆட்சிக்கு வந்த பிறகு நெசவாளர்களுக்குச் செய்த நன்மைகளை இங்கே நான் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்ற முறையிலே சொல்கிறேன். பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வந்தார்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். லுங்கி கட்டியிருப்பீர்கள். 60-க்கு 40 சங்கு மார்க் லுங்கி என்று சொல்வேன். 1948-ல் அன்றைக்கு நான் தறி நெய்யும் போது, லுங்கிக்கு 4 அணா, எட்டு லுங்கிக்கு 10 ரூபாய் கிடைக்கும். இன்றைக்கு ஓரே லுங்கிக்கு புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே ரூ. 10.50 கூலி கிடைக்கிறது. ஆனால் இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் அதே லுங்கிக்கு ரூ. 4 கூலி. கடந்த ஆண்டு ரூ. 6 கூலி அதற்குப் பிறகு நம் புரட்சித் தலைவர் அன்பால், ஆதரவால் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நான் தலைவராக வந்த பிறகு, அந்தப் பொருளாதாரத்தைப் பற்றி அறிந்து, அந்த வர்க்கத்தினுடைய கூலியைப் பற்றி நான் ஆராய்ந்து, ஒரு நெசவாளருக்கு எவ்வளவுதான் கூலி வேண்டும் என்று நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். ஒரு லுங்கிக்கு ரூ. 10 குறைந்தபட்சக் கூலி கொடுத்தால்தான் அவன் வாழ முடியும். அவன் ஒரு நாளைக்கு 1½ அல்லது 2 லுங்கிதான் நெய்ய முடியும். அதைச் சொல்லி அந்தக் குறைந்த பட்சக் கூலியைக் கொண்டு வந்தது இந்த அரசுதான். ஆனால் அவர்களிடத்திலே தற்சமயம் சரக்குகள் தேங்கியிருக்கின்றன என்று சொல்லலாம். யாரும் வாங்கவில்லை என்று சொல்லலாம். எப்போதுமே எந்த நேரத்திலும் துணிகள் யாருமே வாங்குவதில்லை. பொங்கல், தீபாவளி என்று வரும்போதுதான் வாங்குகின்றார்கள். அந்த நெசவாளி நெய்திருக்கக்கூடிய துணிகள் பொங்கலுக்கு, தீபாவளிக்கு விற்கும். இப்போதுதான் தேங்கியிருக்கிறது. மத்திய சர்க்காருடைய சரியான கண்காணிப்பு இல்லாததனால்,





இன்றைக்கு கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது. மத்திய அரசு ஒரு பக்கம் மில்களுக்கு உதவுகிறது. அண்மையில் ஒரு 15 மில்களை எடுத்துக்கொண்டு ரூ. 150 கோடி கடனாகக் கொடுத்திருக்கிறது. இதற்கு முன்னாலே நலிந்த 200 மில்களை எடுத்துக்கொண்டு அதை 'நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்' என்று வைத்துக் கொண்டு அந்த மில் தொழிலாளர்களுக்கு கோடிக் கணக்கான பணத்தை, ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாயை இனாமாக, மான்யமாகத் தந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு பக்கம் மில்கள் அழிந்து வருகின்றன. இன்னொரு பக்கம் கைத்தறி நெசவாளர்களாகிய எங்களுக்கு பிரதமரின் 20 அம்சத்திட்டத்தின் பெயரால் எந்தவிதமான நன்மையும் இல்லை. காரணம் நெசவாளர்கள் வாழவேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு குறை இருந்தால் போதும், ஒரு தறியும் சாதாரணமாக ரூ. 200 இருந்தால் அதை வைத்துக்கொண்டு அவன் தறி நெய்வான். அதில் வரும் வருமானத்தைக் கொண்டு அவன் வாழ்க்கையை நடத்துவான். ஆனால் மத்திய அரசு 20 அம்சத் திட்டத்திலே நெசவாளர்களுக்கு உதவிப் பணம் கொடுக்கிறோம் என்றால் ஒரு துரும்புகூட கொடுக்கவில்லை என்பதை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும். எங்களுக்காகக் கடன் கொடுக்கின்றது. ரிசர்வ் வங்கி ஒரு கைத்தறி நெசவாளருக்கு இன்றைக்கு நூல் வாங்கி அவன் வேலை செய்வதற்கு ரூ. 2,500 கொடுக்கிறது. ஆனால் கைத்தறி நெசவாளியிடம் நேரடிக் கொடுப்பதில்லை. சுமார் 100 நெசவாளிகள் ஒன்று சேர்ந்து கொண்டு ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்து,

(பிற்பகல் 12-50)

அந்தச் சங்கத்தை ஒரு ரிஜிஸ்டிரார் முன் ரிஜிஸ்தர் செய்து. அவர் அங்கு கொடுத்த பிறகு, அந்த நூறு தறிக்காரர்களுக்குத் தேவையான மூலதனத்தை நம்முடைய செண்ட்ரல் பாங்கு கொடுத்து, கூட்டுறவு பாங்கு மூலமாக ரிசர்வ் பாங்கு கொடுத்து, அந்த பாங்கிலிருந்து ஆயிரம், இரண்டாயிரம், பத்தாயிரம் வாங்கி நூல் வாங்கி சரக்கு செய்து விற்றால் பணம் கட்ட வேண்டும். சரக்கு விற்காவிட்டாலும் வட்டி கட்ட வேண்டும். முன்பெல்லாம் 7 விழுக்காடு வட்டி. இப்போது 9 விழுக்காடு வட்டி கட்டுகிறோம். விற்காத சரக்கிற்கும் வட்டி. இதுவரை நெசவாளர்களுக்கு ஒரு பைசாகூட ரைட் ஆஃப் write off செய்தது கிடையாது. விவசாயிகளுக்கு 'ரைட் ஆஃப்' கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நெசவாளர்களுக்கு ஒரு பைசா கூட 'ரைட் ஆஃப்' செய்தது கிடையாது. எங்கள் நெசவாளர்கள் தறி நெய்ய நெய்யத்தான். அதிலிருந்து எங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கும் சம்பளம் தருகிறோம். எங்களுக்கு எந்தவித நன்மையும் கிடையாது என்பதை ஆணித்

தரமாகக் கூறிக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் எங்களுக்குச் சலுகை செய்யவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆனால் பத்திரிக்கையிலே ஆண்டு பட்ஜெட்டிலே 84 கோடி ரூபாய் நெசவாளர்களுக்காக ஒதுக்கினோம் என்று கூறினால், அது நிர்வாகச் செலவுக்காகத்தான். எந்தத் தனிப்பட்ட நெசவாளர்களுக்காவது போனதா என்றால் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையினுடைய நடவடிக்கைகள் ஒரு மணிக்கு முடிய இருக்கின்றன.

**திரு. சி. இராமலிங்கம் :** இங்கேயுள்ள எதிர்க் கட்சித் தலைவர்களிடத்திலே இதைச் சொல்வது என்னுடைய கடமை என்று கூற ஆசைப்படுகிறேன், பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு இன்றைக்கு ஜனதா புடவையை மில்களிடமிருந்து வாங்கியிருக்கிறது. அரசின் நடவடிக்கையைச் சொல்வது என்னுடைய கடமை. மத்திய அரசு எங்கள் சொசைட்டிகளிலிருந்து ரூ. 31.40க்கு புடவையை வாங்கி, அதைப் பொதுமக்களுக்கு 21 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் அதை நெய்பவர்களுக்கு எங்களுக்குக் கூலியாகக் கொடுப்பதோ 6½ ரூபாய்தான். உழைக்காதவனுக்கு பத்து ரூபாய் கூடுதலாகக் கொடுப்பது என்றால் என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் ஒரு துணி நூறு ரூபாய் என்றால், 20 விழுக்காடு தள்ளுபடியாக அரசாங்கம் வாங்குபவர்களுக்குக் கொடுக்கிறது. அந்தத் துணி விலையிலே 20 ரூபாய் குறைக்கப்படுகிறது. ஆனால் அதே துணியை நெய்தவனுக்கு பத்து ரூபாய் கூலி. இதுதான் அவர்கள் கொள்கை. மத்திய சர்க்கார் டெக்ஸ்டைல் பாலிசி சரியல்ல என்பதை ஆணித்தரமாக இந்திய பார்லிமெண்டிலே, பல முறை சொல்லியிருக்கிறோம். டெல்லியிலே கமிஷனரிடத்திலும் சொல்லியிருக்கிறேன், [illegible] அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகுதான், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கிட்டத்தட்ட 5 லட்சத்து 35 ஆயிரம் தறி என்று கணக்கு இருக்கிறது. அதில் கிட்டத்தட்ட 2 லட்சத்திற்கு மேற்பட்ட தறிகள் 3 லட்சத்து 60 ஆயிரம் தறிகள் என்று வந்திருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் சொசைட்டிகள் அதிகமாயிருக்கின்றன. 1978-ல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, 993 கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே



இருந்தன. அது படிப்படியாக அதிகமாகி 1979-80-ல் 1,052 ஆகவும் 1980-81-ல் 1,187 ஆகவும், அதன் பிறகு 1981-82-லே 1,312 ஆகவும், பிறகு 1982-83-ல் 1,496 ஆகவும் அதிகமாகியிருக்கிறோம். ஆனால் நெசவாளர்கள் அன்றைக்கு பிரைமரி சங்கங்களில் பெற்ற கடன் ரூ. 44 இலட்சம். ஆனால் இன்றைக்கு ரூ. 113 இலட்சம் பெற்றிருக்கின்றனர். இப்படிப் பார்க்கிறபோது இன்றைக்கு பிரைமரி சங்கங்கள் சிறந்த முறையில் சேவை செய்து, நெசவாளர்களுக்கு தேவையான பல சலுகைகளை செய்து வருகின்றன. இன்றைக்கு நெசவாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக இல்லை என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். அதைப்போல முன்பு கோ-ஆப்டெக்ஸ் கடைகளின் மூலம் விற்பனை 27 லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் இருந்தது. இன்றைக்குக் கிட்டத்தட்ட 628 கோடி ரூபாய் அளவுக்கு சரக்கு உற்பத்தியாகிறது. இன்றைக்கு கோ-ஆப்டெக்ஸ் மூலம் கிட்டத்தட்ட 79 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்கிறோம். உற்பத்தித் திறன் எங்களிடத்திலே அதிகமாக இருக்கிறது. கொள்முதல் திறன், வாங்கும் சக்தி மக்களிடத்திலே இருக்கிறதா என்றால், இருக்கிறது. ஆனால் மில்களுக்கும், எங்களுக்கும் இடையிலே விசைத் தறிகள், லைசன்ஸ் பெற்றும், பெறாமலும் இலட்சக் கணக்கில் ஓடுகின்றன. கைத்தறிக்கு என்று கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட ரகத்தைக்கூட விசைத் தறியில் போடுகிறார்கள். மத்திய அரசினர் இதைக் காணாமல் இருக்கிறார்கள். ஒரு பக்கம் மில் அழிக்கிறது; மற்றொரு பக்கம் கைத்தறி அழிகிறது. நாங்கள் நலியக் காரணம், மத்திய அரசு எந்தவிதச் சலுகையும் தராததுதான்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை 1 மணிக்கு முடிய இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் 5 நிமிடங்கள் பேசலாம்.

**திரு. சி. இராமலிங்கம் :** மத்திய அரசு எங்களுக்குத் தேவையான சலுகைகளைத் தந்தார்களா என்றால், இல்லை என்று சொல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். இன்றைக்கு 60, 40 ஆங்கி பற்றிச் சொன்னேன். எங்களுக்கு, கைத்தறியில் நெய்பவர்களுக்கு மீட்டருக்கு 5 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். விசைத் தறியில் நெய்பவர்களுக்கு 2½ ரூபாய் கொடுக்கிறார்கள். நாங்கள் 13½ ரூபாய்க்கு அதை விற்கிறோம். விசைத் தறிக்காரர்கள் 9½ ரூபாய்க்கு விற்கிறார்கள். பல முறை இதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வாங்குகிற மக்கள் குறைந்த விலையில் உள்ளதைத்தான் வாங்குவார்கள். இதற்காக மத்திய அரசிடம் போராடுகிறோம். அவர்கள் செவி சாய்க்கவில்லை. கடந்த மாதம் மத்திய அரசின்

[திரு. சி. இராமலிங்கம்] [1984 பிப்ரவரி 17

காமர்ஸ் மினிஸ்டர் கேரளாவுக்கு வந்தார். அங்கே அவர் ஒரு கருத்தைச்
சொல்லியிருக்கிறார். மத்திய அரசு கைத்தறிக்கு என்று சில ரகங்களை
ஒதுக்க சட்டம் கொண்டு வரப்போகிறது என்று சொல்லியிருக்கிறார். அந்தச்
சட்டம் வந்தால், புரட்சித் தலைவர் ஆட்சியில் கூலி நிர்ணயம் செய்தது போல்,
வேலை வாய்ப்பும் கிடைத்தது என்பதற்காக பன்மடங்கு மகிழ்ச்சி அதை ல
தோடு, கைத்தறி நெசவாளர்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்று எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று
சொல்லியிருக்கிறார்கள். எனவே சீக்கிரம் முடித்துக்கொள்ள நான் எந்த
விதத் தடையும் சொல்லாமல் முடித்துக்கொள்கிறேன்.

20 அம்சத் திட்டத்திலே கைத்தறி நெசவாளர்களுக்கு பல சலுகைகள்
என்று சொன்னார்கள். அது முறையாக வந்து சேரவில்லை. அந்தச்
சலுகைகளைத் தர வேண்டுமென்றுதான் இவ்வளவும் எடுத்துச் சொன்னேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே நலிந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்
திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம், இன்றைக்கு ஊரிடத்தில் 3
ஏக்கர் நிலம் இருக்கிறதென்றால். அங்கே நெசவாளர்களுக்கு, அரிசன
மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாமென்றால், இன்றைக்கு
நிலம் விற்கும் விலையில் அதை வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. அவை
அதிக விலைக்குப் போகின்றன. இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் இருக்
கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அவர்
களுக்குச் சொல்கிறேன், நெசவாளர்களாகிய நாங்கள் ஏற்கெனவே சொந்த
வீடுகளில் இருக்கிறோம். நாங்கள் கட்டியதல்ல. முன்னோர்கள் கட்டியது.
அவை உளுத்தும், இடிந்தும் போய், கிலைகமான நிலையில் இருக்கின்றன.
எனவே எங்கள் வீடுகளைப் புதுப்பிக்க வீட்டு வசதி வாரியமோ, குடிசை
மாற்று வாரியமோ கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்னும் ஒரு ஆசை. கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் சொசைட்டி
ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று யோசனை செய்ய வேண்டும். அதையும்
அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு, எங்களுக்கு என்று தனியாக சொசைட்டி
ஏற்பட, அவர்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 17] [திரு. சி. இராமலிங்கம்]

ஆளுநர் அவர்கள் உரையில் நீர்நிலைகளைத் திருத்தி அமைப்பது, குளங்
களை ஆழப்படுத்துவது என்பதற்காக நிறையப் பணத்தை ஒதுக்கியிருக்
கிறார்கள். இந்த நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மழை பெய்கிறது. ஏற்கெனவே
பெரியோர்கள் தாங்கல் என்றும், நீர் வரவுக்கால் என்றும், குளம் என்றும்,
ஏரி என்றும் வைத்தார்கள். அங்கெல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிப்பு
ஏற்பட்டுவிட்டது. வங்காளத்தில் உள்ள விவசாயிகள் என்ன நினைக்
கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ஒருவனுக்குப்
பெண் கொடுக்க வேண்டுமென்றால், எத்தனை குளம் இருக்கிறது, குட்டை
இருக்கிறது என்று கேட்கிறார்கள். ஒருவன் 5 குட்டைகள் வைத்திருந்தால்,
பணக்காரனாம். 1 குட்டை வைத்திருந்தால் ஓரளவுக்குப் பணம் உள்ளவன்.
ஏனென்றால் குட்டை வைத்திருந்தால் அவர்களால் மீன் வளர்க்க முடியும்.

(பிற்பகல் 1-00)

என்ன தான் பஞ்சம் வந்தாலும், காய்கறி வாங்காமலேயே அங்கிருந்து கிடைக்
கக் கூடிய மீனை விற்பனை செய்து அல்லது சாப்பிட்டு கஷ்டமில்லாமல் வாழ
முடியும். நம் நாட்டிலே கூட 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் மத்தி
யத்தில் ஒரு குளம் வெட்டலாம். சாதாரண மழை பெய்யும்போது குளம்
நிரம்பும். அதிகமாக மழை பெய்து வெள்ளம் அதிகமானால் ஏரிக்குள்
போகப் போகிறது. தேங்கிய நீரில் மீன் வளர்க்கலாம். தண்ணீரைப்
பயிர் விளைவிக்க பயன்படுத்தலாம். கிணறு தோண்டி கஷ்டப்படவும்
வேண்டாம். 2, 3 ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள் இதைச் செய்யலாம்.
இரண்டு வகையில் அவர்களுக்குப் பயனும் ஏற்படும். இந்த முறை வங்
காளம், திரிபுரா போன்ற இடங்களில் பின்பற்றப்படுகின்றது. அங்கே
சென்றிருந்தபோது இதுபற்றிக் கேட்டறிந்தேன். அதுபோல் நம்முடைய
தமிழ் நாட்டிலும் குளம், குட்டைகளை வெட்டி தேங்கிய நீரில் மீன் வளர்ப்ப
தோடு, குளத்திலுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி பயிரிட்டு அதன் மூலம்
உணவுப் பொருள் உற்பத்திக்கும் வழிவகை செய்ய வேண்டும். அந்த வகையில்
நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கை ஏற்பட அனைத்துத் தரப்பினரும்
ஒத்துழைக்க வேண்டும். நெசவாளர்களுக்கு மாநில மத்திய அரசுகள் இன்னும்
பல சலுகைகளைச் செய்ய வேண்டும். அரிசனங்களுக்குச் செய்கின்ற
அனைத்துச் சலுகைகளையும் நெசவாளர்களுக்கும் மத்திய அரசிடமிருந்து
தமிழக அரசு பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு
வாய்ப்பு நல்கிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி
தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சரியாக ஒரு மணிக்கு பேச்சை முடித்ததற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு எல்லோருடைய சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 20—2—1984 திங்கட்கிழமை காலை 9—30 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் மணி 1-01)

## அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படியான விதிகள், ஆணைகள்

76. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர ஆண்டு அறிக்கை-கணக்குகள் (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 612 ( ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

இல்லை.



## இணைப்பு

(255 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை ஒட்டியும் இந்திய அரசு தாராள ஓய்வூதிய விதியை தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் அளிக்க இந்திய அரசு செய்துள்ள முடிவைத் தொடர்ந்தும் சென்னை உயர் நீதி மன்றத்தின் கட்டளைப்படியும் தமிழ் நாடு அரசும் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு (அவர்கள் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும்) தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிக்க முடிவு செய்திருக்கிறது. இது தொடர்பாக விரிவான வழிமுறைகளை வகுக்கவும், 1-10-1979 அன்று உள்ளவாறு ஓய்வூதியம் பெற்றிருந்த மாநில அரசு ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்தை மாற்றிக் கணக்கிடுவதற்கான கணிப்புச் சுவடிகளை தயாரிக்கவும் அலுவலர் நிலையில் குழு ஒன்றை நிதித் துறையின் 18-1-1984 நாளிட்ட 30 ஆம் எண் அரசு ஆணையின் மூலம் அரசு அமைத்துள்ளது. ஓய்வூதியத் தொகையை மாற்றிக் கணக்கிடுவது என்பது அதிக காலம் பிடிக்கக் கூடிய கடினமான பணியாகும். ஏனெனில், தமிழ் நாடு அரசு அவ்வப்போது இருந்த ஓய்வூதிய அமைப்பை கவனித்து ஓய்வூதியம் தொடர்பான பழைய ஆணைகளை இது தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும். வழிமுறைகளையும், கணிப்புச் சுவடிகளையும் தயாரிக்கும் பணியை விரைந்து முடிக்க குழு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இதுபற்றி அரசு உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுத்து வருவதனால் இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு எதிர்க்கப்படுகிறது.

43883